ழ்வார் உபாதாநார்த்தமாக ஸஞ்சரித்தருளுகிற திருவீதிகள்தோறும் அபிமுகமாய்த்திரும்பியருள, இந்தவாஸ்சர்யத்தை நம்பியார்கண்டு, சில ப்ராஹ்மணர்க்குக்காட்டக் கண்டு அந்த க்ராமத்திலே யாகம்பண்ணுகிற பெரும் புலியூரடிகளுக்கு சில ப்ராஹ்மணர் யாகசாலையிலேசென்று "கண்டோங் கண்டோங்கண்டோம் கண்ணுக்கினியனகண்டோம்" என்றிவருடையப்ரபாவத்தைச்சொல்ல; தீக்ஷிதருமத்தைக்கேட்டு ஆழ்வாரெழுந்தருளியிருக்கிறவிடத்தேறவந்து "மெய்யடியார்கள்தம்மீட்டங்கண்டிடக்கூடுமேலதுகாணுங் கண்பயனாவதே" என்றுகொண்டு, தமக்கு (௬௫) "ஸுக்ஷேத்ரம்ஸுகாலாத்யஸ்ஸஜ்ஜநம்" (సుక్షేత్రంసుకాలాద్యస్సజ్జనం) என்றுசொல்லுகிறபடியே அதிகௌதுகத்துடன் யாகசாலைவாசலிலே சென்று இவருடைய சக்திபஞ்சமயமான விக்ரஹத்தைஸேவித்து "போதுமினெமதிடம்புகுதுக" என்கிறபடியேநம்முடைய யாகசாலைக்கெழுந்தருளவேணுமென்றுவிண்ணப்பஞ்செய்து, எழுந்தருளுவித்துக்கொண்டுபோய், ஆழ்வாருக்கு அக்ரபூஜைபண்ண, அதைக்கண்டு, அங்குள்ள அத்வர்யுதொடக்கமானசடங்கிகளடைய, இவனைக்கொண்டு புகுந்து யாகத்தையுபஹதியாக்கித்தென்று, தர்மபுத்ரன் இராஜஸூயயாகத்திலே க்ருஷ்ணனுக்கு அக்ரபூஜையைப்பண்ணினபோது சிசுபாலன்பஹுமுகமாக பருஷோக்திகளைப்பண்ணினாற்போலே இவர்களுமாழ்வாரை "பொறுப்பரியனகள்பேசி" க்ரோதிக்க, தீக்ஷிதரும் வ்யாகுலாந்தஃகரணராய் ஆழ்வாரைப் பார்த்து, "இவர்களேதேனும்பேசநான்கேட்கமாட்டேன்" என்றுவிண்ணப்பஞ்செய்ய, ஆழ்வாரும் தம்மை வெளியிடாதிருக்க வொண்ணாதென்று பார்த்து, (௬௬) "அஷ்டாங்கயோகநிஷ்டாநாம் ஹ்ருத்யோகநிரதாத்மநாம்-யோகிநாமதிகாரஸ்ய தேகஸ்மிந் ஹ்ருதயாம்புஜே" (అష్టాంగయోగనిష్ఠానాం హృద్యోగనిరతాత్మనాం - యోగినామధికారస్య దేకస్మిన్ హృదయాంబుజే) என்கிறபடியே தமக்கந்தர்யாமியாய் "அற்புதனனந்தசயநனை" ப்பார்த்து "அக்கரங்களக்கரங்களென்றுமாவதென்கொலோ-இக்குறும்பைநீக்கியென்னையீசனாக்கவல்லையேற் - சக்கரங்கொள்கையனேசடங்கர்வாயடங்கிட-வுட்கிடந்தவண்ணமே புறம்பொசிந்துகாட்டிடே" என்றெம்பெருமானுக்கு ஆழ்வார்விண்ணப்பஞ்செய்தருள "ஒண்சங்கதைவாளாழியானும்" "தம்மையேநாளும்வணங்கித்தொழுவார்க்குத்தம்மையேயொக்கவருள்செய்வர் ஆதலால்" என்கிறபடியே "அரவத்தமளியனோடு மழகிய பாற்கடலோடு மரவிந்தப்பாவையுந்தானுமாய் பெரியதிருவநந்தாழ்வான்மேலே "வடிவிணையில்லாமலர்மகள் மற்றைநிலமகள்பிடிக்கும்" படி கண்வளர்ந்தருளும்படியை அனைவருங்கண்டநுபவிக்கும்படி யாழ்வாருடைய திருமேனியிலே ப்ரத்யக்ஷமாக்கி ஆழ்வாருக்கு

ஸாரூப்யப்ரதாநம்பண்ணியருள, ஆழ்வாரும் ஸாரூப்யத்தைப்பெற்று எல்லாருங்காணலாம்படி யெழுந்தருளியிருக்க, முன்புகர்ஹித்தசடங்கிகளுடைய ஆழ்வாருடைய ஹ்ருதயத்தில் ப்ரகாசிக்கிற வெம்பெருமானுடைய திவ்ய மங்களவிக்ரஹத்தை அவர் உரஸ்ஸிலேஸேவித்து திருவடிகளிலேஸாதரமாக ஸாஷ்டாங்கப்ரணாமத்தைப்பண்ணி க்ஷமைகொண்டு ஆழ்வாரை ப்ரஹ்மரதம்பண்ணி யுபலாளித்து நக்ஷமாமிக்குலக்ஷ்யமாகாமல் “ திருமாலடியார்களைப் பூசிக்கநோற்று ,, க்ருதார்த்தரானார்கள். ததநந்தரம் அவர்களையும் பஹுப்ரகாரமாக ஜ்ஞாநப்ரதாநம்பண்ணியருளி, பஹுசா க்ருபைபண்ணியருளி வாழ்வித்து “ செழுமாமணிகள்சேருந்திருக்குடந்தையை ,, நோக்கி எழுந்தருளினார். அங்கே ஆராவமுதாழ்வாருடைய வேரார்கோலத்தையுங் கண்டு அவர்விஷயமாக நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழியையும் திருச்செவி சாத்தியருளி, அநந்தரம் தம்முடைய நிஜஸம்புடசதங்களைக்காவேரீபயப்ரவாஹத்திலேப்ரக்ஷேபிக்க, நிரவக்ரஹப்ரவாஹத்தாலே நிஜஸம்புடசதங்கள் நீயமாநங்களாயுள்ளளவில், நான்முகன்திருவந்தாதியும் திருச்சந்தவிருத்தமும் எதிர்த்துவர, அவற்றையு மெடுத்துக்கொண்டு ஆராவமுதாழ்வாருடைய ஏரார்கோலத்தை ஸேவித்து “ காவிரிகரைக்குடந்தையில் கிடந்தவாறெழுந்திருந்துபேசு ,, என்றாழ்வார் விண்ணப்பம்செய்ய, ஆராவமுதாழ்வாருமப்படியே உத்யோகிக்க, அந்த ஸௌலப்யகுணத்துக்குத் தோற்று “ வாழிகேசனே ,, என்று மங்களாசாஸநம்பண்ண, எம்பெருமானும் அப்படியே உத்தாநசாயியாயருள, அப்படியான விக்ரஹத்தை த்யாநம்பண்ணிக்கொண்டு யோகத்திலே இரண்டாயிரத்து முந்நூறுஸம்வத்ஸரமெழுந்தருளியிருந்து, இப்படி திருமேனியுடனே அந்நாஹாரவர்ஜிதராய் பலமூலங்களிலே கிஞ்சித் காதாசித்கமாக அமுதுசெய்தருளிக்கொண்டு மூவாயிரத்தெழுநூறு ஸம்வத்ஸரம் பகவதநுபவம் பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருந்து, அநுபவஜநித ப்ரீத்யதிசயத்தாலே நான்முகன்திருவந்தாதி, திருச்சந்தவிருத்தமென்கிற திவ்யப்ரபந்தங்களையு மருளிச்செய்து, “ ஆழ்பொருளைச் சிந்தாமற்கொண்மினீர்தேர்ந்து ,, என்றுப்ரமஸாத்விகராய் நாராயணைகபரரான முமுக்ஷுக்களுக்குத் தம் பரமக்ருபையாலே யுபகரித்தருளி லோகத்தை வாழ்வித்தருளினார்.

ஸ்ரீதிருமழிசையாழ்வார் திருவடிகளேசரணம்.

ஜீயர்திருவடிகளேசரணம்.

(௫)

ஸ்ரீகுலசேகராழ்வார் ப்ரபாவம்.

(௧௭) "கு⁴ஷ்யதே யத்ர நக³ரே ரங்க³யாத்ராதி³நே தி³நே - தமஹம் ஶிரஸா வந்தே³ ராஜாநம் குலஶேக²ரம்" (ఘుష్యతేయత్రనగరేరంగయా త్రాదినేదినే - తమహంశిరసావందే రాజానంకులశేఖరం) (௧௮) "கல்யப்³தே³ ஸுக²ஸம்க்²யயா வ்யபக³தே மாஸே ச மாகா⁴பி⁴தே⁴ - பக்ஷே சாபி பராஶ்ரவே ஸுரகு³ரௌ வாரே ச பக்ஷே ஶுசௌ - த்³வாத³ஶ்யாக்²யதிதௌ² புநர்வஸுபே⁴ ஶ்ரீத்யாக்²யயோகா³ந்விதே - த்ராதும் ந꞉ குலஶேக²ர꞉ க்ஷிதிபதி꞉ ஶ்ரீகௌஸ்துபா⁴த்மா(அ)ப⁴வத்" (కల్యబ్దేసుఖసంఖ్యయావ్యపగతేమాసేచమా ఘాభిధే - పక్షేచాపిపరాశ్రవేసురగురౌ ద్వారేచపక్షేశుచౌ - ద్వాదశ్యాఖ్యతిథౌ పునర్వసుభే శ్రీత్యాఖ్యయోగాన్వితే - త్రాతుంనఃకులశేఖరఃక్షితిపతి శ్శ్రీకౌస్తుభాత్మాభవత్) இவ்விடத்திலே அவதாரக்ரமம்பார்க்கில் நம்மாழ்வார் திருவவதாரவைபவம் சொல்லவாயிருக்க ஸ்ரீகுலசேகராழ்வார் திருவவதாரவைபவம் சொல்லுகிறது அவயவநிரூபணம்பண்ணியே அவயவியை நிரூபிக்கவேண்டுகையாலே. ஸ்ரீகுலசேகராழ்வார் கொல்லிநகரென்கிற திருப்படைவீட்டிலே, சேரன்குலசேகரராய்க்கொண்டு க்ஷத்ரியவர்ணத்திலே மாசிமாஸத்தில் புநர்பூசநக்ஷத்ரத்தில் ஸ்ரீகௌஸ்துபாம்சராய் வந்தவதரித்தருளினார். (௧௯) "தஸ்மாத³பூ⁴ச்சே²ரகுலப்ரதீ³ப ஶ்ரீகௌஸ்துபா⁴த்மா குலஶேக²ராக்²ய꞉ - மஹீபதிர்மாக⁴புநர்வஸூத்³யத்³த்³வாத³ஶ்யாம் ஹரே꞉ பூர்ணகடாக்ஷலக்ஷ்ய꞉" (తస్మాదభూచ్ఛేరకులప్రదీప శ్రీకౌస్తుభాత్మాకులశేఖరాఖ్యః - మహీపతిమాఘపునర్వసూద్యద్ద్వదనేహరేఃపూర్ణకటాక్షలక్ష్యః) "மாற்றலரைவீரங்கெடுத்த செங்கோற் கொல்லிகாவலன் வில்லவர்கோன்சேரன்குலசேகரன்முடிவேந்தர்சிகாமணி" என்றுசொல்லப்படுகிற இவர், ரதகஜ துரகபதாதியென்கிற சதுரங்கபலத்தையுடையராய், ப்ரதிபக்ஷங்களையெல்லாம் காந்திசீகராம்படி காடேறவோட்டி "கொல்லிகாவலன் கூடல்நாயகன்கோழிக்கோன்குலசேகரன்" என்றும், "கூரார்ந்தவேல்வலவன்கோழியர்கோன்கொடைக்குலசேகரன்" என்றுஞ்சொல்லுகிறபடியே தம்முடைய செங்கோலே செங்கோலாக சிறியத்தைப் பெரியது நலியாதபடி (௨௰) "கோ³ஸஹஸ்ரப்ரதா³தாரம்" (గోసహస్రప్రదాతారం) என்கிற பெருமாளைப்போலே ஸ்ரீகுலசேகரப்பெருமாளும் அத்யுதாரராய் ராஜ்யம் பண்ணிக்



கொண்டு ஸவிநயராய் நிற்க, தம்மை ஸ்வதந்த்ரராகவும், நியந்தாவாகவும், அபிமாநித்துக்கொண்டு இருக்கிற இவரை உபயவிபூதிநிர்வாஹகனாய், ஸர்வ நியந்தாவான ஸ்ரீமந்நாராயணன் தன் நிர்ஹேதுக பரம க்ருபையாலே இவர் ராஜஸதாமஸரஹிதராய் ஸத்வகுணப்ரசுரராம்படி கடாக்ஷித்து, இவர்க்குமயர் வறமதிநலமருளி, தம்முடைய ஸ்வரூபரூபகுண விபூதிகளையெல்லாம் விசத தமமாகத் தானே காட்டிக்கொடுக்க, அவற்றையெல்லாம் பகவத்பக்தி ரூபாபந்ந ஜ்ஞாநத்தை யுடையராய்க்கொண்டு இவ்வாழ்வார் கண்டவநந்தரம், ஸம்ஸாரிகளான இத்தேஹிகர் தேஹாத்மாபிமாநத்தைப் பண்ணி, (௧௦௧) "அக்ருத்யகரணாதாவப்யத்யந்தோத்படவ்ருத்திக: அர்த்தாநாமூர்த்வபூதோயமுத்தமஜநவதே" (అకృత్యకరణాదావప్యత్యన్తోత్భటవృత్తికః అర్థానామూర్ధ్వభూతోయముత్తమజనవతే) என்கிறபடியே, தேஹவஶ்யராய் தேஹபோகத்தை யநுபவித்து, பகவத்விமுகராய், தேஹாத்மாபிமாநிகளாய், சப்தாதிவிஷய ப்ரவணரானஇஸ்ஸம்ஸாரிகள் நடுவேதாமிருக்கிறவிருப்பும் உயிர்க்கழுவிலிருந்தாற்போலவும் "கொள்ளென்றுகிளர்ந்தெழுந்தபெருஞ்செல்வம்நெருப்பு" என்கிறபடியே யானைக்கழுத்திலே தாமிருந்து ராஜ்யம்பண்ணி ஸாக்ஷாத்ரூபமாக ராஜபோகத்தை யநுபவிக்கிற ராஜத்வமும் அல்லவென்றுதோற்றி, "எரிநீ யிற்சுடும்" என்கிறபடியே அக்நிகல்பமா யிருக்கையாலே, மிகவும் அஸஹ்யமாய், (௧௦௨) "பரித்யக்தா மயா லங்கா மித்ராணி ச தநாநி ச" (పరిత్యక్తామయాలఙ్కా మిత్రాణిచధనానిచ) என்றும், (௧௦௩) "த்யக்த்வா புத்ராம்ஶ்ச தாராம்ஶ்ச ராகவம் ஶரணம் கத:" (త్యక్త్వాపుత్రాంశ్చదారాంశ్చ రాఘవంశరణంగతః) என்றுஞ்சொல்லுகிறபடியே, ஸ்ரீவிபீஷணாழ்வான் ஸகலபோகங்களையும் ஸவாஸநமாக த்யஜித்து, ஸர்வலோக சரண்யரான பெருமாளை யாஶ்ரயித்தாற் போலே, இவரும், "இன்பமருஞ்செல்வமு மிவ்வரசும் யான்வேண்டேன்" என்று ப்ரதிகூலங்களான ப்ராக்ருதபோகங்களில் நசையற்று, "திருவரங்கப்பெருநகர்" என்னும், திருவரங்கத் தரவணையிற்பள்ளிகொள்ளும் "கடல் விளங்கு கருமேனியம்மான் றன்னைக் கண்ணாரக் கண்டுகக்குங் காதலையுடையராயும், "அற்றபத்தர்சுற்றிவாழுமந்தணீரரங்கத்திலே, தாமற்றபத்தராய்நித்யவாஸம் பண்ணி, "விண்ணுளாரிலும்சீரியர்" ஆய், "அணியரங்கன் திருமுற்றத்தடியார்" என்று, அந்யதா லக்ஷணமன்றிக்கே, அதுவே நிரூபகமாக வுடையரான சாதுகோஷ்டியாரான ஸ்ரீவைஷ்ணவர்களுடைய "இன்பமிகுபெருங்குழுவுகண் டியானு மிசைந்துடனே யென்றுகொலோ விருக்குநாளே" என்றுகொண்டு, கோயிலையும் அங்குள்ள ஸ்ரீவைஷ்ணவ

ஸமூஹத்தையும் கண்டநுபவிப்பதெப்போதோ, என்றும், (௧0௪) "ஸ்ரீரங்கயாத்ராஸ்ரீரங்கயியாஸாசைவநாரத - உத்தாரயதிஸம்ஸாரம் நித்யவாஸஸ்து கிம்புந:" (శ్రీరంగయాత్రా శ్రీరంగయియాసా చైవనారద - ఉత్తారయతి సంసారం నిత్యవాసస్తు కింపునః) என்றுஞ்சொல்லுகிறபடியே, ஸ்ரீரங்கயாத்ரையும் யியாஸையும் விடியா வெந்நரகைப்போக்கி வைகுந்தந் தரவற்றாயிருக்கிற அங்கே நித்யவாஸம்பண்ணில் சொல்லவேண்டாவிறே. என்கிற அர்த்தத்தை யறிந்தவராகையாலே ஸ்ரீரங்கயாத்ரையிலே ப்ரதிதிநம் ப்ரேமத்தையுடையராயும், (௧0௫) "த்ரைலோக்யவிச்ருதா புண்யா ஸ்வாமிபுஷ்கரிணீ சுபா - கங்காத்யாஸ்ஸகலாஸ்தீர்த்தாஸ்ஸமா விமலோதகா - தத்ர தேவர்ஷிகந்தர்வாஸ்ஸித்தாஸ்ச பரமர்ஷய: - வஸந்தி நியதாஹாரா வேங்கடாஹ்வயபூதரே" (త్రైలోక్యవిశ్రుతా పుణ్యా స్వామిపుష్కరిణీ శుభా - గంగాద్యాస్సకలాస్తీర్థాస్సమావిమలోదకా - తత్రదేవర్షిగంధర్వాః సిద్ధాశ్చ పరమర్షయః - వసన్తినియతాహారా వేంకటాహ్వయభూధరే) என்றும், "வேங்கடத்தைப்பதியாக வாழ்வீர்காள்" என்றும் சொல்லுகிறபடியே, கங்காதி ஸகலதீர்த்தாதிகமான ஸ்வாமிபுஷ்கரிணியையுடையதாய், பரமருஷிகள்தொடக்கமான மஹாத்மாக்களாலே நித்யவாஸம் பண்ணப்படாநிற்கிற திருவேங்கட மலையிலே, இவரும், ஸ்தாவர திர்யக் ஜந்மங்களை பரிக்ரஹித்து வாஸம் பண்ணவாசைப்பட்டு, இப்படி மற்றுமுண்டான திவ்ய தேசங்களெங்கும் எழுந்தருளி, அங்குள்ள எம்பெருமான்களையும் ஸேவித்து, அங்கே நித்யவாஸம் பண்ண வாசையை யுடையராயும், அஷ்டாதச புராணேதிஹாஸாதிகளை நிரீக்ஷித்து, தத்ஸாரபூதமான முகுந்தமாலையு மருளிச்செய்து, இப்படியிருக்கிற இவருக்குக் காலக்ஷேபமாவது (௧0௬) "வேதவேத்யே பரே பும்ஸி ஜாதே தசரதாத்மஜே - வேத: ப்ராசேதஸாதாஸீத் ஸாக்ஷாத்ராமாயணாத்மநா" (వేదవేద్యే పరే పుంసి జాతే దశరథాత్మజే - వేదః ప్రాచేతసాదాసీత్ సాక్షాద్రామాయణాత్మనా) என்கிறபடியே, வேதவேத்யனை பரமபுருஷன் தசரதாத்மஜனாய் வந்தவதரித்தவிடத்தில் போலே அந்த வேதங்கள்தாமும் ஸ்ரீவால்மீகிபகவான்முகேந இதிஹாஸோத்தமமான ஸ்ரீராமாயணமாய்க்கொண்டு ப்ரகாசித்ததாகையாலே அதுவே தமக்கு, "செவிக்கினிய செஞ்சொல்" ஆக, "இன்னமுதமதியோமே" என்று ச்ரவித்துக்கொண்டு போராநிற்க, (௧0௭) "சதுர்தசஸஹஸ்ராணி ரக்ஷஸாம் பீமகர்மணாம் - ஏகஸ்ச ராமோ தர்மாத்மா

கதம்யுத்தம்பவிஷ்யதி " (చతుర్దశసహస్రాణిరక్షసాంభీమకర్మణాం- ఏకశ్చరామో ధర్మాత్మా కథంయుద్ధంభవిష్యతి) என்கிற ஶ்லோகார்த்தத்தைக் கேட்டருளுகிற தறுவாயிலே, பெருமாளும், இளையபெருமாளை பிராட்டிக்குத் திருமேனிக் காவலாக நிறுத்தி, கர த்ரிசிர தூஷணுதிகளாகிற பதினாலாயிரம் துஷ்ட்ட ராக்ஷஸருடனே, தர்மாத்மாவானபெருமாளொருவரே யுத்தோந்முகராளுர்; எங்கு இளைக்கிறதோவென்று ருஷி வயிறுபிடிக்கிருனென்றுகேட்கையாலே, இவ்வாழ்வாரும் ப்ரேம பரவசராய்க்கொண்டு, " அவத்தங்கள் விளையுமென்றதிசங்கையாலே, "வாளும்வில்லுங்கொண்டு, பின்செல்வார்மற்றில்லை" என்றும், " உருவார்சக்கரம்சங்குசுமந்திங்கும்மோடொருபாடுழல்வானோரடியானுமுளன் " என்றுஞ் சொல்லுகிறபடியே, இவரும் சதுரங்கபலத்தோடே பெருமாளுக்குப் படைத்துணையாக வெழுந்தருளாநிற்க, இவருடைய அதிப்ரவ்ருத்தமான இந்த யாத்ரையைக்கண்டு, இத்தைத் தவிர்க்கைக்காக, மந்த்ரிகள் உபாயேந சிலரை யெதிரேவரவிட்டு, பெருமாள்; அந்தப் பதினாலாயிரம் துஷ்ட்டராக்ஷசர்களையும் தாமொருவருமே நிரஸித்து மீண்டெழுந்தருளும்போது, பிராட்டி (௧0அ) " தம் த்ருஷ்ட்வா ஶத்ருஹந்தாரம் மஹர்ஷீணாம் ஸுகாவஹம் - பபூவ ஹ்ருஷ்டா வைதேஹீ பர்த்தாரம் பரிஷஸ்வஜே " (తందృష్ట్వాశత్రుహన్తారం మహర్షీణాంసుఖావహం - బభూవహృష్టావైదేహీభర్తారంపరిషస్వజే) என்கிறபடியே, திருமேனியில் வ்ரணங்களெல்லாந் தீரும்படி, திருமுலைத்தடங்களாலே எதிர்கொண் டணைத்து, ஆஶ்வாஸிப்பித்த இந்த சோகநிவர்த்தகமான ஶ்லோகத்தையும் சொல்லுவிக்கையாலே, இவருமத்தைக்கேட்டு, ஸந்துஷ்டராய் மீண்டெழுந்தருளினவளவிலே, மந்த்ரிகள், நம்முடைய ராஜாவான இவர்க்கு ஸ்ரீவைஷ்ணவஸஹவாஸத்தாலே யித்தனைகலக்கங்களும் தேற்றங்களும் வந்தனவென்று, அவர்களுடையஸஹவாஸத்தைத் தவிர்ப்பிக்கவேணுமென்று, இவருடைய க்ருஹார்ச்சனை யெம்பெருமானுடைய திருவாபரணப் பெட்டியிலே, நவரத்ந சோபிதமாயிருப்பதொரு ஹாரத்தை யெடுத்து மறையவைத்து, இவருக்கந்தரங்கராய் உத்தேஶ்யரான ஸ்ரீவைஷ்ணவர்க ளெடுத்தார்க ளெடுத்தார்களென் றுரோபிக்க, அதுக்கவரும் " பரனன்பர்கொள்ளார் " என்று அவர்களுக்காகத்தாம் பாம்புக்குடத்திலே கையிட்டருளி ஜயிக்க, இத்தைக்கண்டு மந்த்ரிகள்; தாங்கள்செய்த அக்ருத்யத்தை விண்ணப்பஞ்செய்து, அந்த ஹாரத்தை யிவர் திருமுன்பே வைத்து, தண்டம் ஸமர்ப்பித்தார்கள். பின்பு ஆழ்வாருக்கும்; இவர்கள்நடுவே, ராஜ்யம்பண்ணியிருக்குமிருப்பு (௧0கூ) " நமஸாமிஷிநா

விமுக ஜநஸம்வாஸவைஶஸம் - வரம் ஹுதவஹஜ்வாலா பஞ்ஜ ராந்தர்வ்யவஸ்திதி:" (నశౌరిచిన్తావిముఖజనసంవాసవైశసం - వరంహుతవహజ్వాలా పంజరాన్తర్వ్యవస్థితిః) என்கிறபடியே பகவத்வைபவஞ் சொல்லப்பொறுதார்நடுவி லிருக்கு மிருப்பைக்காட்டில், அக்நிஜ்வாலா பஞ்சராந்தர்வ்யவஸ்த்திதி உத்க்ருஷ்டதமம், பகவத்பரராகையால் இவர்க்கு அக்நிஜ்வாலையிலே அகப்பட்டாற்போலே அதிதுஸ்ஸஹமா யிருக்கையாலே, தம்குமாரருக்கு ராஜ்யாபிஷேகம்பண்ணி, ராஜ்யபாரத்தை யவரிடத்திலேவைத்து, "ஆனதசெல்வத் தரம்பையர்கள்தற்சூழ வானாளுஞ்செல்வமுமண்ணரசும்யான்வேண்டேன்" என்றுகொண்டு, ஐஹிகாமுஷ்மிகதிவ்யமாநுஷபோகங்களில்நசையற்று, தமக அந்தரங்கரான ஸ்ரீவைஷ்ணவஸஹவாஸத்துடனே, "நல்லார்கள்வாழும்நளி ரரங்கத்தை நோக்கி யெழுந்தருளி, தகட்டிலழுத்தின மாணிக்கம்போலே: "உறங்குவான்போல் யோகுசெய்கிற "அணியரங்கத் தம்மானை நித்யதரித்ரன் நிதியைக்கண்டாற்போலே, கண்களாரக்கண்டு, வாயாரவாழ்த்தி அநுபவித்து, அவ்வநுபவஜநித ப்ரீத்யதிசயத்தாலே, பகவத்பாகவதவைபவத்தை யெல்லாருமறிந் துஜ்ஜீவிக்கைக்காக, பெருமாள் திருமொழியென்கிற திவ்யப்ரபந்தத்திலே, பகவத்பாகவத வைபவத்தையெல்லா மருளிச்செய்து, ஸஜ்ஜநங்களுக் குபகரித்தருளி, லோகத்தை வாழ்வித்தருளினார்.

ஸ்ரீகுலசேகராழ்வார் திருவடிகளேசரணம்.

ஜீயர்திருவடிகளேசரணம்.

---

(௬)

ஸ்ரீ பெரியாழ்வார் ப்ரபாவம்.

---

(௧௧௦) "தாதாநீகவ்ருதிஸமக ஸமவத்ராகம் விஷ்ணுசித்தா ஜ்யோதிஷே ஜாதமஜந- மத்ஸ்வவ்ருத்யாநுவர்த்தமாநவேதநாயே வேதாராஷிஷம்ராவயதிஸ்மநசோஸ்ததஸ்மே - ஜ்யேஷ்டேயசாவெஸவ சாநதாமெ ஜ்யேஷ்டாமத்ணேநாஜநிஹடநாய: - க்ருதத்ரயீராஜபம ராத்துநாத்ணா கடாக்ஷமக்ஷ்யம்கசோராவதேயத்ம:" (శాంకాఙ్క్షప్రతిఫలత్వాగవత్వ



ஸ்ரீ பெரியாழ்வார்.

త్వం విస్తీర్యహాణ్ణ్యకథకేన్ద్రజయాగజేన - గచ్ఛన్ప్రియాదుపగతేగరుడేననాథే ప్రేష్ఠాశ్వఘంర యతిస్మనమోస్తుతస్మై - జ్యేష్ఠేథమాసేపవమానతారే జ్యేష్ఠోగుణేనాజనిభట్టనాథః - కృతత్ర రూపగరుత్మదాత్మా కటాక్షలక్ష్యంకమహావతేర్యః) என்று திவ்யஸூரிசரிதையிலே சொல்லிற்றிறே. (ககக) “[illegible]” (తత్వాబ్దాపగమేకలౌయ పరేసంవత్సరే క్రోధనే చణ్డాంశౌమిధునంగతేహ్యానవమేపక్షేవళక్షేఽపిచ- స్వాత్యాంభాస్క వాసరే శుభతిథౌ వేకాదశీనామని శ్రీమానావిరభూదదభ్రమహిమా శ్రీవిష్ణుచిత్తోనఘః) பெரியாழ்வார் “வேதவாய்த்தொழிலார்கள் வாழ்வில்லிபுத்தூர்” என்கிறபடியே செய்தவேள்வியரான வையத்தேவர் நித்யவாஸம் பண்ணி வாழாநிற்கிற ஸ்ரீவில்லிபுத்தூரிலே, ஆனிமாஸத்திலே, திருச்சோதியிலே, ஸ்ரீகருத்மதம்ஸராய் அவதரித்தருளி, ப்ராஹ்மணோத்தமரான “வேயர்தங்கள்குலத்திலேயவதரித்து, விஷ்ணுசித்தனென்கிற திருநாமத்தையுடையராய், (ககஉ) “[illegible]” (ప్రహ్లాదోజన్మవైష్ణవః) என்னும்படி வடபெருங்கோயிலுடையானுடைய நிர்ஹேதுகக்ருபாகடாக்ஷத்தாலே, (ககங) “[illegible]” (ఆత్మదాస్యంహరేస్స్వామ్యం) என்கிறபடியே ஸஹஜபகவத்தாஸ்யத்தையுடையராய், (ககச) “[illegible]” (నాహం [illegible]ర్వతత్త్వకత్వం) என்கிறவசனத்தையநுஸரித்து, இனி நமக்கு பகவத்விஷயத்திலே கிஞ்சித்கரித்து ஸ்வரூபம் நிறம்பெறவேணுமென்றுபார்த்து, அது செய்யுமிடத்து “தனக்கேயாகவெனைக்கொள்ளுமீதே” என்கிறபடியே, அவனுகந்தவடிமைசெய்கையே நமக்குக் கர்த்தவ்யமென்றநுஸந்தித்து, அதறிகைக்கு அவதாரங்களை யாராய்ந்து பார்த்தவிடத்தில், ஸர்வேஶ்வரன் “மண்ணின்பாரம் நீக்குதற்காகவும் தர்மஸம்ஸ்தாபநார்த்தமாகவும் (ககரு) “[illegible]” (ఏషనారాయణశ్శ్రీమాన్ క్షీరార్ణవనికేతనః - నాగపర్యంకముత్సృజ్యహ్యాగతోమధురాంపురీం) என்றும், (ககசா) “[illegible]” (పుణ్యాద్వారవతీయత్రయత్రాస్తేమధుసూదనః- సాక్షాద్దేవఃపురాణోసౌ సహిధర్మస్సనాతనః) என்றும் ஸாதுபரித்ராணாதி த்ரயத்துக்காக, “திருவின்வடிவொக்குந்தேவகிபெறப்பிறந்து, “மைத்தடங்கண்ணி யசோ

தைவளர்க்க, வளர்ந்தருகிற "உருவுகரியவொளிமணிவண்ணனான க்ருஷ்ணன், "சூட்டுநன்மாலைகடுயனவேந்தி விண்ணோர்கணன்னி - நாட்டியங் தூபந்தரா நிற்கவே யங்கோர்மாயையினூ - லீட்டியவெண்ணெய்தொடு வுண்ணப்போந் தவனாகையாலே அந்தவாஸனை பின்னாட்டி, கம்ஸனுக்குப்பணிசெய்துபோந்த ஸ்ரீமாலாகாரர் திருமாளிகையிலே யெழுந்தருளிப் பூவிரக்க, அவரும்; (௧௭) " [illegible] " (ప్రసాదపరమౌనాథౌ మమగేహముపాగతౌ - ధన్యోహమర్చయిష్యామీ త్యాహమాల్యోపజీవనః) என்றுகந்து சூட்டினபடியைக்கண்டு, இவ்விஷயத்துக்குப் பூவிடுகையே யுகப்பென்றறுதியிட்டு, வடதளபடசாயியாயிருக்கிற வடபெருங்கோயிலுடையானுக்கு, "நாட்கமழ்பூம்பொழிலாகத் திருநந்தவநஞ்செய்து, திருமாலைகட்டிச் சாத்திப் போருகிற காலத்திலே, "பருப்பதத்துக் கயல்பொறித்த பாண்டியர்" குலத்தில், ஸ்ரீவல்லப தேவராஜனென்கிற ராஜா தார்மிகனாகையாலே, சிறியத்தைப் பெரியது நலியாதபடி கூடலென்கிற மதுரையிலேயிருந்து ராஜ்யம்பண்ணிக்கொண்டு போருகிறகாலத்திலே, ஒருநாள்ராத்ரியிலே, ராஜா நகரசோதநார்த்தமாக வருகிறவளவிலே, ஒருப்ராஹ்மணன் அங்கொரு திண்ணையிலேயிருக்கக்கண்டு, ராஜா அவனையெழுப்பி, நீயாரென்றுகேட்க, அவனும் நானொரு ப்ராஹ்மணன், கங்காஸ்நாநம்பண்ணி வருகிறேனென்ன, உனக்குப் போமதுண்டாகில் ஒரு க்ரந்தஞ்சொல்லிக்காணுயென்ன, அந்த ப்ராஹ்மணனும், (௧௮) " [illegible] " (వర్షార్థమష్టౌప్రయతేతమాసాన్ నిశార్థమర్థందివసంయతేత - వార్ధక్యహేతోర్వయసానవేనపరత్రహేతోరిహజన్మనాచ) என்கிற ஶ்லோகத்தைச்சொல்ல, ராஜாவுமித்தைக்கேட்டு, வ்யுத்பந்நனாகையாலே, த்ருஷ்டத்தில் நமக்கொருகுறைகளுமில்லையே; இனி அத்ருஷ்டயத்நம் பண்ணும்படி யென்னென்று வ்யாகுலாந்தஃகரணனாய், தனக்குப் புரோஹிதனான செல்வநம்பியைப் பார்த்து, புருஷார்த்தநிர்ணய பூர்வகமாக அத்ருஷ்டஸித்திக்கு விரகென்னென்ன, புரோஹிதனும், (௧௯) " [illegible] " (ధర్మజ్ఞసమయః ప్రమాణం) என்கையாலே வித்வாம்ஸர்களைத் திரட்டி, வேதாந்த ஸித்தமான பரதத்வநிர்ணயம்பண்ணுவித்து, அவ்வழியாலே பெறவேணுமென் றருளிச்செய்ய, ராஜாவும் அப்படியே யாகிறதென்று பஹுத்ரவ்யத்தை வித்யாஶுல்கமாக ஒருதோரணத்திலே கிழிச்சீலையிலே, கிழியாகக் கட்டுவித்து, ராஜ

யத்தில் வித்வான்களோ யாஹ்ரவாதம் பண்ணச்சொல்லுகிறவளவிலே, வடபெருங்கோயிலுடையான்; ஸம்ஸாரிகள், "பூண்டவத்தப்புறங்கிடந்துதொண்டுபட்டுப் பொய்ந்நூலை மெய்ந்நூலென்றென்றும் மாண்டவத்தம் போகாமே யிவ்வாழ்வாரை யிடுவித்து, லோகத்திலே வேதாந்தப்ரதிபாத்யமான பரத்வத்தை ப்ரகாசிப்பிக்கைக்காக, மெய்யடியாரான இவ்வாழ்வாருடைய ஸ்வப்நத்திலே யெழுந்தருளி, நீபோய்க் கிழியை யறுத்துக்கொண்டு வாருமென்றருளிச்செய்ய, அது வித்யாஶுல்கமாக நிர்மித்ததன்றோ? "நலங்களாய நற்கலைகள் நாவிலும் நவின்றிலாத நான் என்கையில் கொட்டுத் தழும்பைக் காட்டிக் கிழியையறுக்கலாமோவென்ன, அதுமக்கு பரமோ; நாமன்றோ வேதார்த்தப்ரதிபாதநத்துக்குக் கடவோமென் றாழ்வாரை நிர்ப்பந்தித்தருள, (௧௨௦) "ப்ராஹ்மே முஹூர்த்தே சோத்தாய" (బ్రాహ్మే ముహూర్తే చోత్థాయ) என்கிறபடியே, "சிற்றஞ்சிறுகாலே" எழுந்திருந்து, இதொரு ஸ்வப்நமிருந்தபடி யென்னென்று விஸ்மிதராய் விஶ்வஸித்து, பாண்டியனுடைய வித்வத் கோஷ்டியேற வெழுந்தருளினவளவிலே, செல்வநம்பியும் ராஜாவும் த்விஜகுலதிலகரான இவ்வாழ்வாரைக் கண்டு, அப்யுத்தாந ப்ரணாம பூர்வகமாக மிகவுமாதரிக்க, இத்தைக்கண்ட வித்வான்கள், இவர்க்கு வேதாப்யாஸம் மிகவுமில்லையென்னும் புத்தியாலே, ராஜாவை யதிக்ஷேபிக்க, அவ்வளவிலே, அபிமாநதுங்கனான செல்வநம்பி, ஆழ்வாரைத்தண்டனிட்டு, வேதாந்தப்ரதிபாத்யமான பரதத்வத்தைநிஶ்சயித்தருளிச்செய்யவேணுமென்று விஜ்ஞாபித்தவளவிலே, (௧௨௧) "ஹஸிதம் பாஷிதஞ்சைவ கதிர்யா யச்ச சேஷ்டிதம் - தத்ஸர்வம் தர்மவீர்யேண யதாவத் ஸம்ப்ரபஶ்யதி" (హసితం భాషితంచైవ గతిర్యా యచ్చ చేష్టితం - తత్సర్వం ధర్మవీర్యేణ యథావత్సంప్రపశ్యతి) என்று சொல்லுகிறபடியே, ஸ்ரீவால்மீகிபகவான் ப்ரஹ்மாவின்ப்ரஸாதத்தாலே ஸர்வார்த்தங்களையும் ஸாக்ஷாத்கரித்தாற்போலேயும், (௧௨௨) "ஶங்கப்ராந்தேந கோவிந்தஸ்தம் பஸ்பர்ஶ க்ருதாஞ்ஜலிம் - உத்தாநபாததநயம் த்விஜவர்யம் ஜகத்பதி: - தத: ப்ரஸந்நவதநஸ்தத்க்ஷணாந் ந்ருபநந்தந: - துஷ்டாவ ப்ரணதோ பூத்வா பூததாதாரமச்யுதம்" (శంఖప్రాంతేన గోవిందస్తం పస్పర్శ కృతాంజలిం - ఉత్తానపాదతనయమ్ మునివర్యం జగత్పతిః - తతః ప్రసన్నవదనస్తత్క్షణాన్నృపనందనః - తుష్టావ ప్రణతో భూత్వా భూతధాతారమచ్యుతమ్) என்கிறபடியே, ஸ்ரீபாஞ்சஜந்ய ஸ்பர்ஶத்தாலே ராஜகுமாரனான த்ருவன் ஸர்வஜ்ஞனானாற்போலேயும், இவ்வாழ்வாரும் வடபெருங்கோயிலுடையானுடைய நிர்ஹேதுக கடாக்ஷத்தாலே ஸகலவேதார்த்தங்களையும், ததுபப்ருஹ்மணங்களான புரா

ணேதிஹாஸங்களையும் ஸாக்ஷாத்கரித்து, (௧௨௩) "ஸமஸ்தஶப்தமூலத்வாதகாரஸ்ய ஸ்வபாவத:" (సమస్తశబ్దమూలత్వాదకారస్య స్వభావతః) என்னும், ஸமஸ்தசப்தமூலமாயிருந்துள்ள அகாரத்தை (௧௨௪) "அக்ஷராணாமகாரோஸ்மி" (అక్షరాణామకారోస్మి) என்று கீதோபநிஷதாசார்யன் தானேயருளிச்செய்கையாலும், (௧௨௫) "அகாரோ விஷ்ணுவாசக:" (అకారో విష్ణువాచకః) என்றகாரவாச்யனான ஸ்ரீமந்நாராயணனே ஸர்வஸ்மாத்பரனென்று பரதத்வ ஸித்தாந்தங்களான வாக்யங்களையும், (௧௨௬) "யதோ வா இமானி பூதானி ஜாயந்தே யேந ஜாதானி ஜீவந்தி யத்ப்ரயந்த்யபிஸம்விஶந்தி தத்விஜிஜ்ஞாஸஸ்வ தத்ப்ரஹ்மேதி" (యతో వా ఇమాని భూతాని జాయంతే యేన జాతాని జీవంతి యత్ప్రయంత్యభి సంవిశంతి తద్విజిజ్ఞాసస్వ తద్బ్రహ్మేతి) இத்யாதிவாக்யங்களையும், ஜகத்காரணத்வ முமுக்ஷூபாஸ்யத்வ மோக்ஷப்ரதத்வ ப்ரதிபாதகங்களான நாராயணாநுவாகாதி ச்ருதிகளாலும், (௧௨௭) "விஷ்ணோஸ்ஸகாஶாதுத்பூதம் ஜகத்தத்ரைவ ச ஸ்திதம் - ஸ்திதிஸம்யமகர்த்தாஸௌ ஜகதோஸ்ய ஜகச்ச ஸ:" (విష్ణోస్సకాశాదుద్భూతం జగత్తత్రైవ చ స్థితం - స్థితిసంయమకర్తాసౌ జగతోస్య జగచ్చ సః) என்றும், (௧௨௮) "நாராயணாத்பரோ தேவோ ந பூதோ ந பவிஷ்யதி - ஏதத்ரஹஸ்யம் வேதாநாம் புராணாநாஞ்ச ஸம்மதம் - ஸத்யம் ஸத்யம் புநஸ்ஸத்யம் உத்ருத்ய புஜமுச்யதே - வேதஶாஸ்த்ராத்பரம் நாஸ்தி ந தைவம் கேஶவாத்பரம்" (నారాయణాత్పరో దేవో న భూతో న భవిష్యతి - ఏతద్రహస్యం వేదానాం పురాణానాంచ సమ్మతం - సత్యం సత్యం పునస్సత్యం ఉద్ధృత్య భుజముచ్యతే - వేదశాస్త్రాత్పరం నాస్తి న దైవం కేశవాత్పరమ్) என்றுமித்யாதி ச்ருதிஸ்ம்ருதீதிஹாஸபுராணாதிவசந ஸஹஸ்ரங்களாலும் பஹுமுகமாக ப்ரதிபாதித்தருளிச்செய்கையாலும், வித்யாசுல்கமாகத் தோரணத்திலே கிழியாகக்கட்டிவைத்த தநம் இவர்முன்னேதானே தாழவளைய, ஆழ்வாரும் ப்ரீதியோடே "விளைந்துகிழியறுத்தான்" என்கிறபடியே அக்கிழியை அறுத்தருளினார். இத்தைக்கண்டு அதிக்ஷேபித்த வித்வாம்ஸருடன் அநுவர்த்தித்த ராஜாவுடன் வாசியறஸர்வரும் விஸ்மிதராய்க்கொண்டு இவர் திருவடிகளிலே தண்டம் ஸமர்ப்பித்து "வேதாந்தவிழுப்பொருளின் மேலிருந்தவிளக்கை விஷ்ணுசித்தன் விரித்தனன்" என்று மிகவும் ப்ரீதியுடனே, ஆழ்வாரை, யானைக்கழுத்தின்மேலே யேறியருளப்பண்ணி, அந்தவித்வான்கள் சத்ரசாமரதாலவ்ருந்தாதிகள் தரித்துஸேவிக்க, "வேதப்பயன்கொள்ளவல்லனை" மெய்ந்நாவன்வந்தானென்று விருதூதித் திருச்சின்னம் பரிமாற, "ஈண்டியசங்கமெடுத்தூத, ராஜா,

இவர்க்கு பட்டர்பிரானென்று திருநாமஞ்சார்த்தி, தானும் ஸபரிகரனாய் ஸேவித்துக்கொண்டு, நகரிவலமாகவருகிற மஹோத்ஸவத்தைக் காண்கைக்காக, புத்ரர்களை ப்ரஹ்மரதம்பண்ணும் ஸமயத்தில் மாதா பிதாக்கள் காண ஆதரித்துவருமாபோலே, ஸர்வேச்வரனும் தனக்கு நிருபகபூதையான பிராட்டிஸஹிதனாய்க்கொண்டு, “மஞ்சுயர்பொன்மலைமேலெழுந்தமாமுகில்” போன்ற வடிவுடன், பெரியதிருவடிமேலேகொண்டு, “திருச்சக்கரஞ்சங்கினொடும்” என்கிறபடியே திவ்யாயுததரனாய், “சீர்த்தபிரமன் சிவனிந்திரன் விண்ணவர்சூழ விளங்க வொருநாள்காணவாராய் விண்மீதே” என்கிற படியே ப்ரஹ்மருத்ராதிகளெல்லாராலும் ஸேவ்யமானனாய்க்கொண்டு, ஆகாசத்திலே திவ்யமங்களவிக்ரஹ விசிஷ்டனாய், நெருங்கிநிற்கிற இந்திரனோடு ஸந்நிஹிதனாக, இந்ததிவ்யமங்கள விக்ரஹத்தை ஸேவித்து, ஆழ்வார், ஸ்வஸம்ருத்தியைப் பார்த்திருமாந்திராதே, பகவத்ப்ரஸாதத்தாலே நிரவதிக பக்தியைப் பெற்றவராகையாலே, அவனுடைய ஸர்வஜ்ஞத்வ ஸர்வசக்த்வ ஸர்வரக்ஷகத்வாதிகளை யநுஸந்திப்பதற்குமுன்னே, முகப்பில், “நீலமுண்ட மின்னன்னமேனியிலுண்டான ஸௌந்தர்ய ஸௌகுமார்ய லாவண்ய யௌவநாதிகளைக்கண்டு, (கஉக) “அப்ராக்ருதம் ஸுரைர்வந்த்யமயுதார்க ஸமப்ரபம்” (అప్రాకృతం సురైర్వన్ద్యమయుతార్క సమప్రభం) என்றும், (கங0) “ஸ்வயைவ ப்ரபயா ராஜந் துஷ்ப்ரேக்ஷ்யம் தேவதாநவை:” (స్వయైవ ప్రభయా రాజన్ దుష్ప్రేక్ష్యం దేవదానవైః) என்றும், “சுடர்ச்சோதி” என்றுஞ் சொல்லப்பட்டிருப்பதாய், காலக்ருத பரிணாமமன்றிக்கே ஸதைகரூபமாய், நித்யஸித்தமாய், பஞ்சோபநிஷண்மயமான பரமபதத்திலே, (கஙக) “ஸதா பச்யந்தி ஸூரய:” (సదా పశ్యన్తి సూరయః) என்கிறபடியே, நித்யஸூரிகளாலே ஸதா தர்சநம் பண்ணப்படுகிற வஸ்து, காலக்ருத பரிணாமமாய், க்ஷணக்ஷரணஸ்வபாவமாய், பரமாத்ம ஸ்த்தாநமான பரமபதத்தைப் பற்ற நரகோபமமாய், அரக்கரசுரர்க்கு வாஸபூமியாய், துர்வித்வான்கள் துரபிஸந்திபண்ணும் ஸ்த்தலமாய், கலிஸாம்ராஜ்யம்பண்ணுகிற “இருடருமாஞாலமான இத்தேசத்திலேவந்து சக்ஷுர்விஷயமானதே; இவ்வஸ்துவுக்கென்னதீங்குவருகிறதோவென்னு மதிசங்கையாலே, யானைக்கழுத்தின்மேலேகிடக்கிற மணிகளைத் தாளமாகக்கொண்டு, இந்த ஸௌந்தர்யாதிகளுக்கு ஒருதீங்கும்வாராதே நித்யமாகச் செல்லவேணுமென்று தம் ஸ்வரூபதசையை மறந்து, ப்ரேமபரவசராய்க்கொண்டு மங்களாசாஸநம்பண்ணியருளி, இவ்விஷயத்துக்கு நாமொருவரும் மங்களாசாஸநம்பண்ணுகைபோராதென்று, தமக்

குத்தோள்நின்டியான ஐஶ்வர்ய கைவல்ய பகவச்சரணார்த்திகளையும் மங்களாசாஸநயோக்யராம்படி திருத்திச் சேர்த்துக்கொண்டு, பலவகையாலும் திருப்பல்லாண்டுபாடியருளினார். அநந்தரம், அந்தராஜாவையும்விசேஷகடாக்ஷம் செய்தருளி, அவனாலே ஸத்க்ருதராய், "வில்லிபுத்தூருறைவான்றன்பொன்னடிகாண்பதோராசையினால் மீண்டு ஸ்ரீவில்லிபுத்தூரிலே யெழுந்தருளி, தநத்தை (௧௩௨) "யத்யதிஷ்டதமம் தத்தேயம்" (యద్యదిష్టతమం తద్దేయం) என்கிறபடியே வடபெருங்கோயிலுடையான் திருமுன்னேவைத்து தண்டம் ஸமர்ப்பித்து, (௧௩௩) "ப்ராஞ்ஜலிம் பரிக்ருஹ்ய ப்ரஹ்ருஷ்டமநஸா ஸ்திதம்" (ప్రాంజలిం పరిగృహ్య ప్రహృష్టమనసా స్థితం) என்கிறபடியே தாம் முதலுபக்ரமித்தருளின "காரார்நறுந்துழாய்கைசெய்த கண்ணியும்செண்பகமல்லிகையோடு செங்கழுநீரிருவாட்சியுமான திருமாலைகட்டி, வடபெருங்கோயிலுடையானுக்கு நித்யமாகச்சாத்தி, ஸேவித்துக்கொண்டிருக்கிற இவ்வாழ்வார் தாம், அவதாரங்களை முன்னிட்டுக்கொண்டு, க்ருஷ்ணாவதாரத்தில், ஸ்ரீமாலாகாரர் திருமாளிகையிலே யெழுந்தருளி, பூவிரந்து சாத்தினானென்றிறே முந்துறத் திருநந்தவநஞ்செய்து திருமாலை ஸமர்ப்பிக்கத் தொடங்கிற்றும். ஸ்ரீமாலாகாரர் திருமாலைசாத்தின வநந்தரம் மல்லரோடு பொருது வெற்றிகொண்ட தோளுக்குப் பல்லாண்டு பாடுகையாலும், க்ருஷ்ணவ்ருத்தாந்தத்திலே ப்ரவணராய், "கண்ணன்கேசவநம்பிபிறந்தனில்" என்று க்ருஷ்ணன் அவதரித்தது முதலாக, "வென்றிசேர்பிள்ளைநல்விளையாட்டையும்" என்கிற அதிமாநுஷசேஷ்டிதமான க்ருஷ்ணவ்ருத்தாந்தத்தை யிவருமவனைப்போலே கோபஜந்மத்தை யாஸ்தாநம்பண்ணி யநுகரித்து, அவனுடைய ஸௌசீல்ய ஸௌலப்யாதிகுணங்களிலே ஆழங்கால்பட்டுக்குமிழ்நீருண்ணுமல் நன்றாகவநுபவித்து, அநுபவஜநித ப்ரீத்யதிசயத்தாலே, பெரியாழ்வார் திருமொழியென்கிற திவ்ய ப்ரபந்தத்தையு மருளிச்செய்து, (௧௩௪) "ஸ்திதே மநஸி ஸுஸ்வஸ்தே" (స్థితే మనసి సుస్వస్థే) என்கிறபடியே "சித்தம்நன்கொருங்கித்திருமால்மேல்சென்ற சிந்தையராய்க்கொண்டு, சயை போலப்பாடவல்ல ஸஜ்ஜநங்களுக் குபகரித்தருளி லோகத்தை வாழ்வித்தருளினார்.

ஸ்ரீபெரியாழ்வார்திருவடிகளேசரணம்.

ஜீயர்திருவடிகளேசரணம்.



(௭)

ஸ்ரீ ஆண்டாள்ப்ரபாவம்.

(௧௫) " நீளாதுங்கஸ்தநகிரிதடீஸுப்தமுத்போத்ய க்ருஷ்ணம் - பாரார்த்யம் ஸ்வம் ச்ருதிசதசிரஸ்ஸித்தமத்யாபயந்தீ - ஸ்வோச்சிஷ்டாயாம் ஸ்ரஜி நிகளிதம் யா பலாத்க்ருத்ய புங்க்தே - கோதா தஸ்யை நம இதமிதம் பூய ஏவாஸ்து பூய: " (నీళాతుఙ్గస్తనగిరితటీసుప్తముద్బోధ్య కృష్ణమ్ - పారార్థ్యమ్ స్వం శ్రుతిశతశిరస్సిద్ధమధ్యాపయన్తీ - స్వోచ్ఛిష్టాయాం స్రజినిగళితమ్ యాబలాత్కృత్య భుఙ్క్తే - గోదాతస్యైనమఇదమిదమ్ భూయ ఏవాస్తు భూయః) (௧௬) " தேவஸ்ய மஹிஷீம் திவ்யாமாதௌ கோதாமுபாஸ்மஹே - யந்மௌளிமாலிகாம் ப்ரீத்யா ஸ்வீகரோதி ஸ்வயம் ப்ரபு: " (దేవస్యమహిషీందివ్యామాదౌగోదాముపాస్మహే - యన్మౌళిమాలికాం ప్రీత్యా స్వీకరోతిస్వయంప్రభుః) (௧௭) ஸ விஷ்ணுசித்தஸ்துளஸீவநாவளிம் கநித்ரவஜ்ரேண நிகாதயந் கில - சுபே முஹூர்த்தேऽஸி ச மாஸி பால்குநே ப்ரதீததாரே துளஸீவநாந்தரே" (సవిష్ణుచిత్తస్తుళసీవనావలిం ఖనిత్రవజ్రేణనిఖాతయన్కిల - శుభే ముహూర్తేఽసిచమాసిఫాల్గునే ప్రతీతతారేతుళసీవనాన్తరే) (௧௮) " புவோ பவத்காஞ்சநபாலகந்யகாம் பூம்யம்சகாம் வீக்ஷ்ய விஸிஸ்மியே முதா " (భువోభవత్కాఞ్చనబాలకన్యకాం భూమ్యంశకాంవీక్ష్య విసిస్మియేముదా) என்று திவ்யஸூரி சரிதையிலே சொல்லிற்றிறே. (௧௯) " ஸித்தாநாம் சரதாம் கலாவபகமே வ்யக்தேந சாகேச்வர வா யாதே கர்கடகம் வியாऽபுஷ்பசி தேபக்ஷே ஹநி ஸ்ரீமதீ - நக்ஷத்ரேऽர்யமதைவதே ஸ்திரபுவோ வாரே சதுர்த்யாம் திதௌ கோதா ப்ராதுரபூதசிந்த்யமஹிமா ஸ்ரீவிஷ்ணுசித்தாத்மஜா " (సిద్ధానాంశరదాంకలావవగమేవ్యక్తేనశాకేశ్వర వా యాతేకర్కటకంవియాఽపుష్పచితేపక్షేహనిశ్రీమతీ - నక్షత్రేర్యమదైవతేస్థిరభువో వారేచతుర్థ్యాంతిథౌ గోదాప్రాదురభూదచిన్త్యమహిమా శ్రీవిష్ణుచిత్తాత్మజా) " அன்னவயற்புதுவையாண்டாளுடைய திருவவதாரக்ரமமிருக்கும்படி யெங்ஙனேயென்னில்.

(௨௦) " அயதே க்ருஷத: க்ஷேத்ரம் லாங்கலாதுத்திதா மயா - க்ஷேத்ரம் சோதயதா லப்தா நாம்நா ஸீதேதி விச்ருதா - பூதலாதுத்திதா ஸா து வ்யவர்த்தத மமாத்மஜா " (అయతేకృషతఃక్షేత్రంలాఙ్గలాదుత్థితామయా - క్షేత్రంశోధయతాలబ్ధానామ్నాసీతేతివిశ్రుతా - భూతలాదుత్థితాసాతువ్యవర్ధతమమాత్మజా) என்று

சொல்லுகிறபடியே, ஸ்ரீஜநகராஜன் யாகசாலைக்கு ஸ்தலமுழுது பண்ணுகிற்க, அந்த[illegible]டச்சாலையிலே பிராட்டி ப்ராதுர்ப்பவித்தருள, (௧௪௧) "ஸீதாலாங்கலபத்ததி:" (ஸீதாலாங்கலபத்ததி:) என்கிறதுதானே நிரூபகமாக, ஸீதையென்று திருநாமஞ்சார்த்தி யுவப்போடே ஸ்ரீஜநகராஜன், புத்ரியாக வளர்த்துக்கொண்டாற்போலே, மெய்யடியாரான விஷ்ணுசித்தர், தம் திருநந்தவநத்தில் திருத்துழாய்க்குக் கொத்தாநிற்க, அத்திருத்துழாய் மண்ணின்கீழே, திருவாடிப்பூரத்திலே, "பார்வண்ணமடமங்கை" என்கிற ஸ்ரீபூமிப்பிராட்டி ப்ராதுர்ப்பவித்தருள, "வில்லிபுதுவைநகர்நம்பி விஷ்ணுசித்தர்கண்டு, விஸ்மிதராய், "மின்னனைய நுண்ணிடையாளான இக்கந்நிகையைப் புத்ரியாக வெடுத்துக்கொண்டு, ப்ரீதியோடே. "சுரும்பார்குழற்கோதை" என்றுதிருநாமஞ்சார்த்தி, திருமகள்போல் வளர்த்துக்கொண்டு போருகிறகாலத்திலே, விஷ்ணுசித்தர், தங்கள்தேவரான வடபெருங்கோயி லுடையானுக்குச் சாத்தக் கட்டிவைத்ததிருமாலையை, ஆழ்வாரில்லாத அவஸரத்திலே, இப்பெண்பிள்ளை தான்சூடிக்கொண்டு, அவனுக்கு நேரொவ்வாதிருக்கிறேனோ? ஒத்திருக்கிறேனோ? என்று, காதாபூண்டு, கூறையுடுத்து, கைவளை குலுக்கி, கோவைச்செவ்வாய் திருத்தி, அவ்வொப்பனையழகைக்கண்ணாடியிலே கண்டு, இப்படிப் பலநாளும் பூர்வம்போலே பந்துபந்தாகச்சுருட்டிவைக்க, இத்தை ஆழ்வார் ஒருநாள்கண்டருளி, பெண்ணே! இப்படியே யெப்போதுஞ் செய்வதென்று மிகவும் கோபித்து, அந்தத்திருமாலையை அற்றைக்கு வடபெருங்கோயிலுடையானுக்குச் சாத்தாமலிருக்க, அன்று ராத்ரியிலே, ஆழ்வாருடைய ஸ்வப்நத்திலே எம்பெருமானெழுந்தருளி, இற்றைக்கு நமக்கு மாலைகொண்டுவாராதிருப்பானென்னென்ன, தம்புத்ரி கோதை குழலிலேமுடித்த அக்ருத்யத்தை விண்ணப்பஞ்செய்ய, எம்பெருமானும்; அப்போதுகாணும் வாஸநையாய் ப்ரியமாயிருப்பதென்றருளிச்செய்ய, ஆழ்வாரும், அன்றுமுதல் இவ்வாண்டாள் "பின்னைகொல்நிலமாமகள் கொல்திருமகள்கொல் பிறந்திட்டாள்" என்று விசேஷ ப்ரதிபத்திபண்ணிப் போருவர். தொடுத்ததுழாய்மலர்சூடிக்களைந்தன சூடுமித்தொண்ட"ரான ஆழ்வார்திருமகளார் தாம் "சூடிக்கொடுத்த சுடர்க்கொடி" என்று அதுவே நிரூபகமாகச் சூடிக்கொடுத்த நாய்ச்சியாராயிருப்பர்.

திருத்துழாய் பரிமளத்தோடே கூட முளைக்குமாபோலே, இந்நாய்ச்சியாரும் ஆஜந்மபால்ய யௌவநாவஸ்தைகள்தோறும் வளருகிற பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகளை யுடையளாய்க்கொண்டு, பகவத்விஷய ப்ராவண்ய முண்டான ஆழ்வார்களைக்காட்டில் அதிசயித்திருக்கும். புருஷனைப்புருஷன்

காமிக்குமதும், ஸ்த்ரீ ஸ்த்ரீயைக்காமிக்குமதும் மேட்டிமையுடையாயிருக்கும்; புருஷன் ஸ்த்ரீயைக்காமிக்குமதும், ஸ்த்ரீ புருஷனைக்காமிக்குமதும் பள்ளமையுடையாயிருக்கும்; ஆகையாலே அதிசயித்திருக்குமிறே. அந்த ப்ராவண்யமடியாக, "அவனைவிட்டகன்றுயிராற்றகில்லா" என்னும்நிலைகளையுடையளாய் (௧௪௨) "ஊஷு: காஶயதிஷ்டா: க்ருஷ்ணோத்ஸ்ருஷ்டா ஹதீதிவாவு" (ఊష్ణః కాంశయతిష్ఠా కృష్ణోత్సృష్టాః సహితిద్వావాపర) என்று க்ருஷ்ண விரஹத்தை ஸஹிக்கமாட்டாமல் கோபகந்நிகைகள் க்ருஷ்ணனை யநுகரித்து தரித்தாற்போலே, இவ்வாண்டாளும் மார்கழிநீராடி, நோன்புநோற்று, காமபஜநாதிகளைப் பண்ணியும் தரிப்போமென்று பார்த்து, சங்கத் தமிழ்மாலையாக நாய்ச்சியார்திருமொழி திருப்பாவை என்கிற திவ்யப்ரபந்தங்களையும் அருளிச்செய்து, ஜகத்துக்குபகரித்தருளி வாழுங்காலத்திலே, (௧௪௩) "பதிஸம்யோகஸுலபம் வயோத்ருஷ்ட்வா ச மே பிதா - சிந்தார்ணவகத: பாரம் நாஸஸாதாப்லவோயதா" (పతిసంయోగసులభం వయోదృష్ట్వా చ మే పితా - చిన్తార్ణవగతః పారం నాససాదాప్లవోయథా) என்கிறபடியே, ஸ்ரீஜநகராஜன், பிராட்டிபருவங்கண்டு சிந்தார்ணவகதனாற்போலே இவ்வாழ்வாரும் இந்நாய்ச்சியாருடைய விவாஹயோக்யபருவங் கண்டு சிந்தாவ்யாகுலாந்த:கரணராக, இவ்வாண்டாளும் மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேனென்ன, ஆழ்வாரும் பின்னை யெங்ஙனேயென்ன, இவரும், "மற்றொருவர்க் கென்னைப்பேசவொட்டேன் மாலிருஞ்சோலையெம்மாயவற்கல்லால்" என்கிறபடியே, அவன்முகத்தன்றி விழியேனென்ன; ஆழ்வாரும் நூற்றெட்டுத்திருப்பதியிலெம்பெருமான்களில் நீராருக்குவாழ்க்கைப்படுகிறீரென்ன; இவருமாழ்வாரைக்குறித்து, அவ்வவருடைய குணபதாநங்களைக் கீர்த்தித்தருளவேணுமென்ன, ஆழ்வாரும் வடபெருங்கோயிலுடையான் வைபவமடியாக பாண்டிமண்டலத்திலெம்பெருமான்கள் வைபவமும், மலைநாட்டுத்திருப்பதியிலெம்பெருமான்கள்வைபவமும், வடதிசைத்திருப்பதியிலெம்பெருமான்கள்வைபவமும், வடதிருவேங்கடவன்வைபவம்தொடங்கி தொண்டமண்டலத்திலெம்பெருமான்கள் வைபவமும், சோழமண்டலத்திலெம்பெருமான்கள் வைபவமும், அழகர்வைபவமும் எல்லாமருளிச்செய்ய, ஆண்டாளும் அதுகேட்டு, ஆநந்தாஸ்ருக்கள் துளிக்கப் புளகீக்ருத காத்ரையாய், இன்னரங்கத்தின்னமுதருடைய குழலழகு வாயழகு கண்ணழகுகளைக்கேட்டு, அதிவ்யாகுலையாய், மாலேறிமோஹித்து, "வந்தானோதிருவரங்கன்வாரானோவென்றென்றேவளையுஞ்சோரும்" என்கிறபடியே மனமுருகி, மலர்க்கண்கள்துளிக்க, அழகிய

மணவாளனையே காமித்து, மந்திரக்கோடியுடுத்து, மணமாலைசூட்டி, "மைத்துனன்நம்பிமதுசூதன்வந்து கைத்தலம்பற்றி மத்தளங்கொட்ட வரிசங்கம் நின்றூத முத்துடைத்தாமநிரைதாழ்ந்தபந்தற்கீழ்" பெருப்பெருத்தகல்யாணங்கள்செய்யக் கனாக்கண்டொளியரங்கத்துள்ளோங்குமொளியுளாரான வணியரங்கத்தம்மானுக்கே தீர்ந்தகாதலையுடையராக, அவ்வளவில் ஆழ்வாரும்; கோதைக்குத்தக்கவரன் கோயில்பிள்ளை, என்றுகருதி, இதுகூடும்படியெங்ஙனேயென்று சிந்தைகலங்கி வ்யாகுலாந்தஃகரணராய் கண்வளர்ந்தருள; திருவரங்கச்செல்வனார் ஆழ்வார் ஸ்வப்நத்திலே எழுந்தருளி, உம்புத்ரிகோதையைக்கொண்டு, அணியரங்கன்றிருமுற்றத் தேறவாரீர், நாமேதகுதியாகப்பாணிக்ரஹணம்பண்ணுகிறோமென்றருளிச்செய்ய; ஆழ்வாரும் உவந்து நிர்ப்பரராயிருக்கிறவளவிலே, திருவரங்கச்செல்வனார், நம் சத்ர சாமர தாலவ்ருந்தாதி ஸகலபரிஜந பரிச்சதங்களோடே ஆண்டாளை அழைத்துக்கொண்டுவாருங்கோள்; ஸ்ரீவில்லிபுத்தூரேறப் போங்கோளென்று பவளச்செவ்வாய்திறந்து அருளிச்செய்துவிட, அனைத்துப்பரிகரத்தாரும், ஸ்ரீவில்லிபுத்தூரேறச்சென்று, ஆழ்வாரைக் கண்டு, நம்பெருமாளருளப்பாடிட்டருளினபடியை விண்ணப்பஞ்செய்ய, ஆழ்வாரும் ப்ரீதராய் அத்யாஶ்சர்யப்பட்டு, வடபெருங்கோயிலுடையானுக்கு விண்ணப்பஞ்செய்து, அவருடைய அநுமதியுடனே ஆண்டாளை மணிப்பல்லக்கிலே எழுந்தருளுவித்துக்கொண்டு, அழகியமணவாளரல்லா தறியாத பாதிவ்ரத்யமுடைய ஆண்டாளை பிறர்கண்படாமல் தட்டுப்பாயிட்டு மூடிக்கொண்டு, அகிலவாத்யத்துடனே அனைவரும் ஸேவிக்க வெழுந்தருளப் பண்ணிக்கொண்டு, திருவரங்கன் றிருப்பதியே சென்றவாறே, ஆண்டாள்வந்தாள், சூடிக்கொடுத்தாள் வந்தாள், சுரும்பார்குழற்கோதைவந்தாள், திருப்பாவைபாடிய செல்விவந்தாள், தென்னரங்கந்தொழுந்தேசியள் வந்தாளென்று பலசின்னங்கள் பரிமாற எழுந்தருளுவித்துக்கொண்டுவந்து, அழகியமணவாளன் திருமண்டபத்தேசென்று தட்டுப்பாயைவாங்க, சூடிக்கொடுத்தநாய்ச்சியாரும்; அகிலருங் காணும்படி, உதறியுடுத்த பட்டுச்சேலையும், பருத்த செங்கழுநீர்மாலையும், திருநுதற் கஸ்தூரிநாமமும், காதளவோடிக் கயல்போல்மிளிருங் கடைக்கண் விழியும், கொடியேரிடையும், கோங்கொத்தகொங்கைகுலுங்க, சிலம்பார்க்க,சீரார்வளையொலிப்ப, அன்னமென்னடைகொண்டு, அழகியமணவாளன் திருமுன்னே சென்று, உள்ளேபுகுந்து, கண்களாரக்கண்டு, கேசவநம்பியைக் கால்பிடிப்பாளென்னும் பேர்பெற்று, நாகபர்யங்கத்தை மிதித்தேறி, "தீமுகத்துநாகணைமேற்சேருந்திருவரங்கரைச்சேர்ந்து, திருவரங்கன்றிருவடிவேனாடும்படி அங்



ஸ்ரீதொண்டரடிப்பொடியாழ்வார்.

கர்ப்பவித்தருள, இத்தைக்கண்டு ஆழ்வார் சிஷ்யரான வல்லபதேவனுள்ளிட்டார் அகிலரும் விஸ்மயப்பட, திருவரங்கச்செல்வனார் ஆழ்வாருக்கு அநுளப்பாடிட்டருளி, சுந்திரஸமுத்ரராஜனைப்போலே நீரும் நமக்கு ஸ்வசுரராய்விட்டீரென்று மிகவுமுவந்தருளி, இவருக்குத் தீர்த்தம் திருமாலை திருப்பரிவட்டத்துடனே ஸ்ரீசடகோபனும் ப்ரஸாதித்து, வில்லிபுத்தூருறைவான் பொன்னடிபூண்டு வாழுமென்று விடைகொடுத்தருள, ஆழ்வாரும் அதிப்ரீதிவிஷாதத்துடன் ஸ்ரீவில்லிபுத்தூர் சேரச்சென்று, பூர்வம்போலே வடபெருங்கோயிலுடையான் கைங்கர்யநிரதராய் வாழ்ந்துகொண் டெழுந்தருளி இருந்தார்.

ஸ்ரீஆண்டாள் திருவடிகளேசரணம்.

ஜீயர்திருவடிகளேசரணம்.

௮

ஸ்ரீதொண்டரடிப்பொடியாழ்வார் ப்ரபாவம்.

(௧௪௪) "𑌶𑍁𑌚𑌿𑌮𑌾𑌸𑌿 𑌪𑌾𑌣𑍍𑌡𑍍𑌯𑌭𑍁𑌵𑌿 𑌪𑍂𑌰𑍍𑌵𑌫𑌲𑍍𑌗𑍁𑌨𑍀𑌘𑌨𑌭𑍇 𑌨𑌵𑍀𑌨𑌤𑍁𑌲𑌸𑍀𑌵𑌨𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍 - 𑌉𑌦𑌿𑌤𑌾𑌮𑍁𑌦𑌾𑌰𑌗𑍁𑌣𑌰𑌙𑍍𑌗𑌨𑌾𑌯𑌕𑌪𑍍𑌰𑌿𑌯𑌵𑌲𑍍𑌲𑌭𑌾𑌂 𑌵𑌸𑍁𑌮𑌤𑍀𑌮𑍁𑌪𑌾𑌸𑍍𑌮𑌹𑍇" (శుచిమాసిపాణ్డ్యభువి పూర్వఫల్గునీఘనభే నవీనతులసీవనాన్తరాత్ - ఉదితాముదారగుణరఙ్గనాయకప్రియవల్లభాం వసుమతీముపాస్మహే) (௧௪௫) "𑌤𑌮𑍇𑌵𑌮𑌤𑍍𑌵𑌾 𑌪𑌰𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌂 𑌰𑌙𑍍𑌗𑍇𑌶𑌯𑌂 𑌰𑌾𑌜𑌵𑌦𑌰𑍍𑌹𑌣𑍀𑌯𑌂 - 𑌪𑍍𑌰𑌾𑌬𑍋𑌧𑌕𑍀𑌂 𑌯𑍋𑌽𑌕𑍃𑌤 𑌸𑍂𑌕𑍍𑌤𑌿𑌮𑌾𑌲𑌾𑌂 𑌭𑌕𑍍𑌤𑌾𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌰𑍇𑌣𑍁𑌂 𑌭𑌗𑌵𑌨𑍍𑌤𑌮𑍀𑌡𑍇" (తమేవమత్వా పరవాసుదేవం రఙ్గేశయం రాజవదర్హణీయం - ప్రాబోధకీంయోఽకృతసూక్తిమాలాం భక్తాఙ్ఘ్రిరేణుంభగవన్తమీడే) (௧௪௬) "𑌚𑍋𑌳𑌕𑍍𑌷𑌿𑌤𑍌 𑌧𑌨𑍁𑌷𑌿 𑌮𑌾𑌸𑌿 𑌮𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑌾𑌰𑍇 𑌯𑌃 𑌪𑍍𑌰𑌾𑌦𑍁𑌰𑌾𑌸 𑌮𑍁𑌰𑌜𑌿𑌦𑍍𑌵𑌨𑌮𑌾𑌲𑌿𑌕𑌾𑌂𑌶𑌃 - 𑌰𑌙𑍍𑌗𑍇𑌶𑌕𑍇𑌳𑌿𑌸𑌖𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌶𑌿𑌖𑌂 𑌦𑍍𑌵𑌿𑌜𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌭𑌕𑍍𑌤𑌾𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌰𑍇𑌣𑍁𑌮𑌨𑌘𑌾𑌤𑍍𑌮𑌗𑍁𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇" (చోళక్షితౌ ధనుషి మాసి మహేన్ద్రతారే యః ప్రాదురాస మురజిద్వనమాలికాంశః - రఙ్గేశకేళిసఖమూర్ధ్వశిఖం ద్విజేన్ద్రం భక్తాఙ్ఘ్రిరేణుమనఘాత్మగుణం ప్రపద్యే) (௧௪௭) "𑌤𑌤𑍍𑌰𑌾 [illegible] 𑌶𑍍𑌰𑍀

விப்ரநாராயணநாமதேயஃ ஶ்ரீரங்கபர்த்துர்வநமாலிகாம்ஶஃ" (తత్రోదభూద్భాగవతాన్వయే జ్యేష్ఠాహ్వయర్క్షే మాసిచ మార్గశీర్షే - శ్రీవిప్రనారాయణనామధేయః శ్రీరఙ్గభర్తుర్వనమాలికాంశః) என்று திவ்யஸூரிசரிதையிலே சொல்லிற்றிறே.

(கசஅ) "தேஹம் ஶ்ரீஶரதுத்தரே ப்ரபவநாம்ந்யப்தே கலௌ பாஸ்கரே சாபக்ராஹிணி பூமிஸூநுதிவஸே ஜ்யேஷ்டாபிதே ஶ்ரீமதி - பஹுளே க்ருஷ்ணசதுர்தஶீதிதியுதே பக்தாங்க்ரிரேணுஸ்ஸ்வயம் ரங்கேஶாங்க்ரிஸரோருஹைகஹ்ருதயஃ ப்ராபாவதாரம் புவி" (దేహం శ్రీశరదుత్తరే ప్రభవనామ్న్యబ్దే కలౌ భాస్కరే చాపగ్రాహిణి భూమిసూనుదివసే జ్యేష్ఠాభిధే శ్రీమతి - బహుళే కృష్ణచతుర్దశీతిథియుతే భక్తాఙ్ఘ్రిరేణుస్స్వయం రఙ్గేశాఙ్ఘ్రిసరోరుహైకహృదయః ప్రాపావతారం భువి) ஸ்ரீதொண்டரடிப்பொடியாழ்வார், திருமண்டங்குடியென்கிற க்ராமத்திலே (கசகூ) "மாஸாநாம் மார்கஶீர்ஷோऽஹம்" (మాసానాం మార్గశీర్షోహం) என்று எம்பெருமான்தானுகச்சொல்லப்பட்ட மார்கழிமாசத்தில், கேட்டைநக்ஷத்ரத்தில் ஸ்ரீவைஜயந்திவநமாலிகாம்ஸராய், ப்ராஹ்மணவர்ணத்திலேயவதரித்தருளினார். எம்பெருமானிவரைஜாயமாநகடாக்ஷத்தாலே அமலங்களாகவிழித்துக்கடாக்ஷித்தருள, அத்தாலே ஸம்யக்ஜ்ஞாந பக்திவைராக்யங்களையுடையரான இவர்க்கு விப்ரநாராயணரென்று திருநாமஞ்சார்த்தி, காலந்தப்பாமல் சௌளோபநயநாதிகளையும்பண்ணுவித்து, வேதசாஸ்த்ரம் முதலான அகில வித்யைகளையும் அதிகரிப்பிக்க. இவருமகிலவித்யாபாரங்கதராய், அதிவிரக்தராய் க்ருதோத்வாஹரான இவர் (கரு0) "மருத்வ்ருதாயாமத்யஸ்தம் சந்த்ரபுஷ்கரிணீதடே - ஶ்ரீரங்கமதுலம் க்ஷேத்ரம் ஶ்ரியா ஜுஷ்டம் ஶுபாஸ்பதம்" (మరుద్వృధాయామధ్యస్థం చన్ద్రపుష్కరిణీతటే - శ్రీరఙ్గమతులం క్షేత్రం శ్రియా జుష్టం శుభాస్పదమ్) என்கிறபடியே ஸத்ருஶாதிசயஹிதமாக ஶ்லாகிக்கப்படுகிற ஸ்ரீரங்க க்ஷேத்ரத்திலே புகுந்து, (கருக) "விமாநமத்யே து சதுஃப்ரதக்ஷிணம் சதுர்தஶம் தஸ்ய க்ருதப்ரணாமஃ - ததந்தரா விஶ்வவிதிர்ददர்ஶ தமிந்த்ரநீலாசலஸந்நிகாஶம் - ப்ரஸந்நவக்த்ரம் நளிநாயதேக்ஷணம் க்ருபாமயம் காந்திநிகேதரூபம்" (విమానమధ్యే తు చతుఃప్రదక్షిణం చతుర్దశం తస్య కృతప్రణామః - తదన్తరా విశ్వవిధిర్దదర్శ తమిన్ద్రనీలాచలసన్నికాశం - ప్రసన్నవక్త్రం నళినాయతేక్షణం కృపామయం కాన్తినికేతరూపమ్) என்கிறவிக்ரஹத்தை சதுராநநன் ஸேவித்தாற்போலே, சதுரரில் அக்ரகண்யரானஇவரும் "அரவரசப்பெருஞ்சோதியனந்தனென்னும் அணிவிளங்குமுயர்வெள்ளையணையின்மேலே பள்ளிகொள்ளும் பரவாஸுதேவரான அழகியமணவாளனைஸேவிக்க, இவர்விஷயவாசியறிந்து

வந்து பற்றுகிறதே பற்றாசாகப்பெரியபெருமாளும்தம்முடையக்ருபையாலே குழலழகர் வாயழகர் கண்ணழகரென்று சொல்லப்பட்டிருக்கிற (கரு௨) "பும்ஸாம் த்ருஷ்டி சித்தாபஹாரிணம்" (పుంసాం దృష్టిచిత్తాపహారిణమ్) என்ற தம்முடைய வடிவழகைக் காட்டி இவரைத்தம்பக்கலிலே நிரதிசய பக்தியுக்தராம்படிகடாக்ஷித்தருள; ஸ்ரீவிப்ரநாராயணரும் அபாரகாருணிகரான அரங்கருக்காட்செய்யவேணுமென்று துளபத்தொண்டிலேநிஷ்டராய் புண்டரீகமென்று புண்யக்ருத் என்று புண்யக்ருத்தாகச் சொல்லப்பட்ட ஸ்ரீபுண்டரீகரைப்போலேயும், (கரு௩) "தந்யோஹம்" (ధన్యోహం) என்று நன்மாலைகள்சாத்தி ஸந்துஷ்டரான ஸ்ரீமாலாகாரரைப்போலேயும், (கரு௪) "ஸதுநாகவரஶ்ரீமாந் நாராயணபராயண:" (సతునాగవరశ్శ్రీమాన్నారాయణపరాయణః) என்கிற கைங்கர்யஸ்ரீயை யுடையராகையாலே ஸ்ரீமானென்று சொல்லப்பட்ட ஸ்ரீகஜேந்த்ராழ்வானைப்போலேயும் "எண்பகர்பூவுங்கொணர்ந்தேன்" என்று அஷ்டவிதபுஷ்பமான "அலங்கலந்தொடையல்கொண்டடியிணைபணி"கிற பெரியாழ்வாரைப்போலேயும், இவரும்தம்மையே மாற்றந்தவிர்த்துத் திருவரங்கத்தே கிடந்த திருவுடையாள் மணவாளர்க்கு நித்யம் திருமாலைகட்டிச்சாத்தி திருநந்தவநஞ்செய்துகொண்டுபோருகிறகாலத்திலே, திருக்கரம்பனூரிலே திவ்யாங்கநாட்ஸநுடையான தேவதேவி யென்றொரு வேஸ்யை அதிசுந்தரமாய் வர்த்திக்கிறவள் ஒருக்கால் நிசுளாபுரேந்த்ரனை சோளராஜாவைஸேவித்துமீண்டுவருகிறபோது, ஸ்வஸகிகளோடேகூட மார்க்ககேதவ்யபநோதநார்த்தமாக ஸ்ரீவிப்ரநாராயணர்செய்கிறதிருநந்தவநத்திருச்சோலைநிழலிலே ஒருமரத்தடியிலேயிருந்து அத்திருச்சோலையில் ஸ்ரீயைச் சுற்றிச் சுழன்றுபார்க்க, பநஸாம்ரபாடல நாளிகேர நாரங்கஜம்பீரலிகுச கதலீகுரவிந்தவகுளாசோகபுந்நாக பூகீப்ரப்ருதி வ்ருக்ஷஷண்ட விடபாரூட சுகபிகசாரிகாதி சகுநைர்மதுரகூஜிதரஞ்ஜிதமாய், நிரந்தரவஸந்தமாய், மதுஸ்ரவகுஸுமாந்தராளத்திலே மஞ்ஜுகூஜந்மதுவ்ருதயுதமாய்,கேதகீமாலதீஜாதிமல்லிகாரவிந்த கல்ஹாரோந்திவர குரவகஜம்பூக (சம்பகாசோக) பந்தூரகந்தவாஹோபஸேவிதமாயிருக்கக்கண்டு, ஸ்வாக்ரஜையைக்குறித்து ; இப்பொழிலெழில் ஸுமநோஹரமாய் நந்தநவநத்தையும் சைத்ரரதத்தையும் பரிஹஸியாநின்றதீ யென்ன ; அவளும் ஸ்மேராநநாப்ஜையான தேவதேவியைக்குறித்து; ஸ்வப்ரஸூநப்ரகர்ஷத்தாலே நம்பெருமாள் திருமுடியை பூஷித்துவருமதாய் அவர் ம்ருகயாவிஹார ஸாந்நித்யஸமநம்பண்ணுமது அஸ்மதாதிகளுக்கும் அத்வகேதஹரணம் பண்ணுதொழியுமோ வென்று ப்ரியாலாபம்பண்ணிக்கொண்டு ஆராமலக்ஷ்மீவிநிஹிதேக்ஷணரானவர்கள் அங்கேவிப்ரநாருளிச்ஜனைக்கண்டார்கள்.

அவரும் வளர்ந்த கேசஶ்மஶ்ருக்களையுடையராய், ப்ரவ்ருத்தரோம ப்ரகர்ஷ ஶ்ரீராஜிதாங்கராய், பரிதௌததந்தவஸ்த்ரோர்த்வபுண்ட்ரங்களையுடையராய், தரிக்கப்பட்ட துளஸீபத்மாக்ஷமாலையும் த்வாதசோர்த்வபுண்ட்ரங்களையு முடையராய், திவ்யோத்யாநஸ்த்த தருகுல்ம லதாதிகளுக்கு ஆலவாலகரண ஜலஸேசனாதி கைங்கர்யநிரதராயிராநிற்க, அத்தையிவர்களிருவரும்விஸ்மயத் துடனாலோகித்துக்கொண்டிருக்க; அவரும் தம் கைங்கர்யாஸக்தசித்தராய் இவர்களை முகமெடுத்துப்பாராமல் திரஸ்கரித்திருக்க; அவ்வளவிலே தேவ தேவியும் ஸ்வாக்ரஜையைக் குறித்து, இவன் க்லீபனோ? உந்மத்தனோ? நாம் வந்து முன்னே நிற்க நிரீக்ஷியாதிருக்கிறானென்ன, ஸ்வாக்ரஜையும் அவளைக் குறித்து; இவர் க்லீபருமன்று உந்மத்தருமன்று ரங்கேச கைங் கர்யாஸக்த சித்தராய் மஹாவிரக்தரான இவர் த்வத்ரூப ஸம்பத்தியைக் காறி யுமிழ்ந் திருப்பர். இவரை உன் விப்ரம விலாஸ ஹாஸேக்ஷணாதிக ளாலே மோஹிப்பித்தாயாகில் நீயே வாரஸ்த்ரீமுக்யை; உனக்கு நான் ஆறுமாசம் தாஸியா யிருக்கிறேனென்ன; தேவதேவியும் ஸ்வாக்ரஜை யைக்குறித்து, இவரை நான் வசீகரியாவிட்டால் உனக்கு நான் ஆறுமாசம் வெள்ளாட்டியாவேனென்று ப்ரதிஜ்ஞை பண்ணி, ஸ்வஸகிகளோடே கூட ஸ்வாக்ரஜையையுமனுப்பி, ஸ்வாலங்காரத்தையும் கழற்றிக்கொடுத்து, ஸா த்விகவேஷயுக்தையாய் ஆழ்வார்திருவடிகளிலே தண்டம்ஸமர்ப்பித்துநிற்க; ஆழ்வாரு மிதுவென்ன பெண்ணே யென்றுகேட்க, இவளும்; வாரஸ்த்ரீ வசத்திலே பாபவசாத் பிறந்த என்னை என் தாயானவள் ஸர்வஜ்ஞயும் பஜித்து அர்த்தார்ஜ்ஜநம் பண்ணென்ன; அடியேன் பூர்வம் பாபங்களைப் பண்ணி இஜ்ஜந்மத்திலேபிறந்ததுமன்றியே இன்னம் பாபார்ஜ்ஜநம்பண்ணிப் படுகுழியிலே விழவேணுமோவென்று அர்த்தலுப்தையான அவளை பரித்ய ஜித்து ரங்கேசகைங்கர்யாஸக்தசித்தரான தேவர்திருவடிகளையாஶ்ரயித் துஜ்ஜீவிக்கிறேனென்று வந்தேன், ஆகிஞ்சந்யாநந்ய கதித்வமுடைய அடியேனை ஆராமரக்ஷணக்ருத்யே நியோகித்தால் தேவர் பெருமாளுக்குத்திருமாலைஸம ர்ப்பித்து மாதுகரம்பண்ணி யெழுந்தருளுந்தனையும் காத்திருக்கிறேனென் ன; அவருமிரங்கி யருளி, தம்முடைய திருவாராதநமான எம்பெருமானு க்கு பைக்ஷத்தை அமுதுசெய்யப்பண்ணி, தாமுமமுதுசெய்து, நிஜபுக்தசே ஷமுமிரங்கியருளினார். அதின் மற்றைநாள் அவளும் திருநந்தவநத்தில் தி ருத்துழாய்முதலான பூச்செடிகளுக்குக் குழிகட்டிச் சோதித்துக் கொத்தித் திருமஞ்சநம்பரிமாறிக்கொண் டிப்படியே ஆறுமாச மநுவர்த்தித்தாள். பின் னையுமொருநாள் குழியமண் சோதித்துத் திருமஞ்சநம் பரிமாறிக்கொண்டு

வாராநிற்கச்செய்தே வர்ஷாகாலமானவாறே பெருவர்ஷம் வர்ஷிக்க; ஸ்ரீவிப்ரநாராயணரும் பர்ணசாலையிலேசேர்ந்திருக்க; இவளுமிப்பாலே யிருந்து நனையாநிற்கக்கண்டு உள்ளேவாவென்றழைக்க; அவளுமுள்ளேபுகுந்தவளவிலே ஈரப்புடவையுடனே யிருக்கிறதைக்கண்டு தம்முடைய வுத்தரீயத்தையும் ப்ரஸாதிக்க, அவளுந் தரித்துக்கொண்டு ஆழ்வாரைப்பார்த்து திருவடிகளைப் பிடிக்கிறேனென்ன; ஆழ்வாருமநுகூலிக்க; அவளுந் திருவடிகளைப் பிடியாநிற்கச்செய்தே; ஸ்வாமீ! அடியேனுக்கு ஹிதமாயிருப்பதொரு வார்த்தை யருளிச்செய்யவேணுமென்று மந்தஸ்மிதஞ்செய்து அபாங்கவீக்ஷணம்பண்ண; அவரும் விகரித்து அவள் கையைப்பிடிக்க; அவளும் தம்மையானேனென்று அவரைக்காடாலிங்கநம்பண்ணிக்கொண்டு ரமித்து, ஒருக்காலும் காந்தாவிஷயாநபிஜ்ஞரான இவரை மநோபவாயோதக வைபவத்தாலே ஸ்வவிஷயே மக்நமநாவாக்கினாள். அதின்மற்றைநாள் ஸ்வக்ருஹத்திலின்றும் ஸ்வாபரணத்தையுமழைப்பித்துக்கொண்டுஸர்வாபரணபூஷிதையாய், இவரைத்தன்னுபிருப்யத்தாலே அவயவைகதேசத்திலே ஆழங்கால்படுத்தி மயக்கி, திருநந்தநவநத்திலே மல்லிகாலதாக்ருஹத்தையும் மாதவீகுஸுமோத்கர குஞ்ஜத்தையும் விசித்ர நிர்ப்பர மந்மதரஸோத்ஸவத்தையும் அநுபவிப்பித்து த்ருடாநுராகத்தாலே யொருவரையொருவர் ஒருக்ஷணமும் பிரியக்ஷமரன்றியேயிருந்தார்கள். ஸ்வஸம்பந்தத்தை ஸஹிப்பித்து, இவரை ஸ்வவசவர்த்தியாம்படிபண்ணி, தன்ஸகிகளும் தமக்கையுங்கண்டுஶ்லாகிக்க, தீர்ணப்ரதிஜ்ஞையாய் ஸ்வக்ருஹமேவந்து, இவருடையவர்ணாஶ்ரமதர்மங்களையுங் குலைத்து, காமுகவேஷயுக்தராம்படிபண்ணி, ப்ரக்ருதிபரவசராக்கி, அதிஸ்நிக்தைபோலே சிலகாலம் ரமியாநிற்க, இவரும் "சிலம்படியுருவில்கருநெடுங்கண்ணார் திறத்தனா யறத்தையேமறந்து" என்கிறபடியே மிகவும் விஷயப்ரவணராய், ஸ்வதர்மாநுஷ்டாந ஸந்த்யாஸாவித்ரியையுமறந்து, ஸ்த்ரீபோகமே காலக்ஷேபமாக வர்த்திக்கிற இவரை ஸர்வஸ்வாபஹாரம்பண்ணி சூந்யதநரானவாறே தானுமநுராகசூந்யையாய் தள்ளிவிட; இவரும் அவள் க்ருஹத்வாரிகிந்நராய் மூசிக்கொண்டுகிடக்க, அவ்வளவிலே பெருமாளும் பிராட்டியும் அவ்வீதியிலே ஸவிலாஸஸஞ்சாரம்பண்ணிக்கொண்டெழுந்தருளாநிற்க; அவ்வளவிலே பிராட்டி இவரைக்கண்டு மந்தஹாஸம்பண்ணி, பெருமாளுடனே வேஶ்யாக்ருஹத்வாரி மூசிக்கொண்டு கிடக்கிறாரொன்று கேட்க; பெருமாளும் பிராட்டியுடனே; நமக்குப் பூமாலைதரும் விப்ரநாராயணன் வேஶ்யாஸக்தனாய் அவளாலே அர்த்தலோபாந்நிராக்ருதனாய் தத்வாரிகிந்நனாய் மூசிக்கொண்டு கிடக்கிறானென் றருளிச்செய்ய; பிராட்டி

யும் பெருமாளுடனே நமக்கு அந்தரங்கரானவர் அங்ஙனே விஷயாஸக்தரானாலும் விஶ்வமோஹநஹேதுவான தேவரீர் மாயைக்கு அவிஷயமோ? அவரை விஷயாஸக்தியிலுண்டான பாபத்தை நிஶ்ஶேஷமாக நிவாரிப்பித்து தேவரீர் திருவடிகளுக்கு அந்தரங்கராம்படி கடாக்ஷித்தருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய; பெருமாளும் பிராட்டிவார்த்தைக்கிசைந்து, தம் பஞ்சபாத்ரத்திலே பருத்ததொரு தபநீயமான சுத்தோதக பாத்ரத்தை யெடுத்துக்கொண்டுவந்து, வேஶ்யாக்ருஹத்வாரி நின்று, தேவதேவி ? கவாடோத்காடநம்பண்ணென்ன; தேவதேவியும் ஆரென்றுகேட்க; நானழகியமணவாளதாஸன் விப்ரநாராயணன் அனுப்பவந்தேனென்ன; தேவதேவியும் சடக்கெனக்கதவைத்திறந்து என்னென்றுவினவ; பெருமாளும் ஸ்ரீவிப்ரநாராயணன் உனக்கிந்த ஸ்வர்ணபாத்ரத்தைத் தந்தானென்ன; அவளும் ப்ரஹ்ருஷ்டையாய் தபநீயபாத்ரத்தை வாங்கிக்கொண்டு அவரை உள்ளே வரச்சொல்லுமென்ன, அழகியமணவாளதாஸனும் விப்ரநாராயணரண்டையிலே சென்று தேவதேவியும் உம்மை யுள்ளே வரச்சொன்னாளென்ன; இவர் கர்ணாம்ருதமான வார்த்தையைக்கேட்டு ஸந்துஷ்டராய் உள்ளே புகுந்து அவளுடனே க்ரீடாரதிபரராக; அவ்வளவிலே பெருமாளுங் கோயிலிலேபோந்து உரகமெல்லடிமேல் சாய்ந்தருளினார். அவ்வளவிலே பொழுதுவிடிந்தவாறே திருக்காப்பை நீக்கினவளவிலே ஸந்நிதியிலிருந்த தபநீய சுத்தோதகபாத்ரத்தைக்காணாமல் கோயில்பரிகரத்தாரடையப் பயப்பட்டு, ராஜகர்த்தர்க்கறிவிக்க; நிசுளாபுரீந்த்ரனான ராஜாவுங்கேட்டு, நம்பியார் பரிசாரகர் எல்லாரையும் அபராததண்டம்வாங்க; அவ்வளவிலே தேவதேவியகத்து கட.சேடீ ஜலாஹரணார்த்தமாக வந்தவள்தன்னோடுஸம்பந்தமுடையானொருவனைப் பாதிக்கக்கண்டு, இதுவென்னென்றுகேட்க, தபநீயபாத்ரம் போனத்தை யவளுக்குச்சொல்ல; அவளுங்கேட்டு, ஸ்ரீவிப்ரநாராயணன் எங்கள் தேவதேவிக்கு ஒரு ஸ்வர்ணபாத்ரங் கொடுத்திருக்கிறான், அவர்கள் மெத்தைத்தலைக்கணையிலே பாத்ரமிருக்கிறதென்ன, அவனுங்கேட்டு ராஜகர்த்தருக்குச்சொல்ல; அவர்களும்வந்து இவர்களைப்பிடித்துக்கொண்டு அவள்க்ருஹத்தைச்சோதித்து வட்டிலையு மெடுத்துக்கொண்டுபோய் ராஜாவுக்குக்காட்ட; ராஜாவும் வேஶ்யையைக்குறித்து; பெருமாளுடைமையை நீ இப்படியபஹரிக்கலாமோவென்ன; நாயிந்தே; நான் பெருமாளதென்றறியேன், இவன் தன்வட்டிலென்ன தன்தூதன் அழகியமணவாளனென்பானொருவன்கையிலேவரவிட்டான் அறியாமல் வாங்கினேனென்ன; இவரும் நமக்கொருதூதனுமில்லை நான வட்டிலையுமறியேனென்ன; அவளுமுண்டென்ன; இவருமில்லையென்ன; இப்படி

உபயருடைய விவாதமுங்கேட்டு, ராஜாவும் அந்தவேஶ்யையை அபராதகன்னிடம்வாங்கி வட்டிலையும் பெருமாளுக்கு ஸமர்ப்பித்து இவரையும் ஸ்வர்ண ஸ்தேயோக்தம் பரீக்ஷித்து தண்டிக்கக் கடவோமென்று காவலிலேவைத்து ஸ்வக்ருஹமே போந்தான். அவ்வளவிலே பிராட்டியும் பெருமாளுடனே ஸ்ரீவிப்ரநாராயணரை யினி லீலைக்குவிஷயமாக்காதே இரக்கத்துக்கு விஷயமாக்கிக்கொள்ளவேணுமென்ன, பெருமாளும் ராஜாவின் ஸ்வப்நத்திலேயெழுந்தருளி ஸ்ரீவிப்ரநாராயணர்க்கு ப்ராரப்தகர்மமிங்கேகழிக்கைக்காக நாமே தபநீயபாத்ரத்தைக் கொடுத்துத் தண்டிப்பித்தோமித்தனையல்லது அவர் தண்ட்யரன்று, அவர் நிர்த்தோஷர், அந்தவேஶ்யை தநமும் நமக்குவேண்டா, அவரைவிட்டுப் பூர்வம்போலே திருமாலைகைங்கர்யத்திலேநிறுத்துமென்று நியமிக்க, சோளபூபதியும் விடிவுகாலத்திலே யெழுந்திருந்து நம்பெருமாள் தனக்கு ஸ்வப்நத்திலே நியமித்தருளினபடியைச் சொல்லி விஸ்மயப்பட்டு ஸ்ரீவிப்ரநாராயணரை யழைத்து அநேகமாகஸத்கரித்துத் தண்டனிட்டான். இவரும் தம் நிஹீநக்ருத்யத்தை நினைத்து அநுதபித்து, "விளைகுழல் மடவார்கலவியை யருவருத்தஞ்சினேயேல்" என்கிறபடியே விஷயாஸக்திருசியைக் காறியுமிழ்ந்து அசம்பாகமக ப்ராயஶ்சித்தார்த்தமாக (௧௫) "ஏதத்ஸமஸ்தபாபாநாம் ப்ராயஶ்சித்தம் மநீஷிபி:- நிர்ணீதம் பகவத்பக்தபாதோதகநிஷேவணம்" (ఏతత్సమస్తపాపానాం ప్రాయశ్చిత్తం మనీషిభిః- నిర్ణీతం భగవద్భక్త పాదోదకనిషేవణం) என்று சொல்லுகிறபடியே ஸர்வபாப ப்ராயஶ்சித்தமான பகவத்பாகவத ஸ்ரீபாததீர்த்தத்தையும் பிடித்து ஸ்வீகரித்துப் பூதராயருளினார்.

அநந்தர மிவருக்கு க்ராமகுலாதிகளால் வருமனர்த்தப் போன்றிக்கே நிலைநின்ற நிரூபகமான திருநாமமாவது (௧௬) "யஸ்ய மூர்த்நி ஸ்திதம் யாவத் வைஷ்ணவாங்க்ரிரஜஶ்ஶுபம் - கங்காதிஸர்வதீர்த்தாநி தாவத்திஷ்டந்த்யஸம்ஶய:" (యస్యమూర్ధ్ని స్థితంయావత్ వైష్ణవాఙ్ఘ్రిరజశ్శుభమ్ - గఙ్గాదిసర్వతీర్థాని తావత్తిష్ఠన్త్యసంశయః) என்றும் (௧௭) "நிரபேக்ஷம் முநிம் ஶாந்தம் நிர்வைரம் ஸமதர்ஶநம் - அநுவ்ரஜாம்யஹம் நித்யம் பூயேயேத்யங்க்ரிரேணுபி:" (నిరపేక్షం మునిం శాన్తం నిర్వైరం సమదర్శనం - అనువ్రజామ్యహం నిత్యం పూయేయేత్యఙ్ఘ్రిరేణుభిః) என்றும், "மாயன்றமரடிநீறுகொண்டணியமுயலில் மற்றில்லைகண்டீரிவ்வணங்குக்கே" என்றும், "பாதநூளிபடுதலாலிவ்வுலகம் பாக்யஞ்செய்ததே" என்றும், "தொண்டரடிப்பொடியாடநாம்பெறில் கங்கைநீர் குடைந்தாடும் வேட்கையென்னாவதே" என்றுமிவ்வர்த்தவிஷயமாக தத்வவி

த்துக்கள் பலராலும் உத்தேஶ்யதமமாக ஆதரிக்கப்பட்டிருக்கையாலே துள
வத்தொண்டிலே நிஷ்டராய்ப்போரும் ஸ்ரீவைஷ்ணவர்களுடைய, ஸ்ரீபாத
தூளியென்றே தமக்குஜ்ஜீவநகரமான நிலைநின்றதிருநாமத்தையுடையராயும்,
(௧௫௮) "ஹாவோநாந்யத்ர கச்சதி" (భావోనాన్యత్రగచ్ఛతి) என்றதிருவடியைப்
போலவும் (௧௫௯) "ஐஶ்வர்யஞ்சாபிலோகாநாங்காமயேநத்வயாவிநா"
(ఐశ్వర్యంచాపిలోకానాంకామయేనత్వయావినా) என்ற இளையபெருமாளைப் போல
வும், "மாயாப்பெருவிறலுலகம்மூன்றினொடு நல்வீடுபெறினுங் கொள்வதெ
ண்ணுமோதெள்ளியோர்குறிப்பே" என்ற நம்மாழ்வாரைப்போலவுமிவரும்
"இந்திரலோகமாளுமச்சுவைபெறினும்வேண்டேன்" என்றுதத்வயநிஷ்டமா
ன இதரபுருஷார்த்தங்களில் செல்லாத திருவுள்ளத்தையுடையராய், "என்
னைத்தீமனங்கெடுத்தாய்" "மருவித்தொழும்மனமேதந்தாய்" என்கிறபடியே
இவரும் "மாதரார்கயற்கண்ணென்னும் வலையுட்பட்டு அழுந்துவேனை போத
ரேயென்றுசொல்லிப்புந்தியிற்புகுந்து தன்பாலாதரம்பெருகவைத்தவழகன்"
என்றநுஸந்தித்து, க்ருதஜ்ஞராயும்அதுவுமன்றிக்கே "நாகத்தணைக்குடந்தை
வெஃகாத்திருவெவ்வுள்நாகத்தணையரங்கம் பேரன்பில்" என்றும், "கண்டியூ
ரரங்கம் மெய்யங்கச்சிபேர்மல்லை" என்றிப்படி பலவிடங்களிலும் மண்டித்தி
ரிகிற மற்றையாழ்வார்களைப்போலன்றிக்கே, "யாவரும்வந்தடிவணங்க அரங்
கநகர் துயின்ற" அழகியமணவாளனையல்லதறியாத பாதிவ்ரத்யத்தையுடை
யராக, அவ்வளவிலே நம்பெருமாளுமிவர்க்கு "மயர்வறமதிநலமருளி" தம்பர
த்வாதி பஞ்சப்ரகாரரூபமான விபூதிசேஷ்டிதங்களை யெல்லாம் நிஸ்ஸந்தே
ஹமாகக்கரதலாமலகமாக்கி, தெளியக்காட்டிக்கொடுக்க, இவருந் தெளிவுற்ற
சிந்தையராய் நிரவதிகபக்தியைப்பெற்று வர்த்திக்கும்படியை தேவதேவிக
ண்டு, இவரைப்போலே உஜ்ஜீவிக்கவேணுமென்றுநினைத்து, தன் ஸர்வஸ்வத்
தையும் நம்பெருமாளுக்கு ஸமர்ப்பித்து, பரமஸாத்விகையாய், ஸத்ஸங்கதி
ஸதாபஶ்யந்தியிலே வைக்குமென்னுமாபோலே நம்பெருமாள்கோயிலிலே
ஸம்மார்ஜந கைங்கர்யநிரதையா யுஜ்ஜீவித்தாள். இவ்வாழ்வாருக்கு பரபக்
தி பரஜ்ஞாந பரமபக்திகள் தலைமண்டையிட்டு (௧௬௦) "பிதாசபுத்ர
ஶ்சநாராயணஃ" (పితాపుత్రశ్చనారాయణః) என்றும், "தாயாய்த்தந்தையாய்
மக்களாய்மற்றுமாய்முற்றுமாய்" என்கிறபடியே ஸர்வவிதோத்தாரகபந்துவா
கப்பெரியபெருமாளைத்திருமந்த்ராநுஸந்தாநத்தாலே அநுஸந்தித்தருளி, அத
திருநாமோச்சாரணத்தால் தமக்குண்டான ராஜகுலமாஹாத்ம்யத்தாலே "தி
ருவடிதன்னாமம்மறந்தும்புறந்தொழாமாந்தரைதிறம்பேல்மின்கண்டீர்" என்று

யமன் பாசஹஸ்தனை ஸ்வபுருஷனைப் பார்த்து, கர்ணமூலத்திலே யுபதேசிக்கத்தக்கதாக "நமன்றமர்தலைகள்மீதே நாவலிட்டுழிதருகின்றோம்" என்று அம்மந்த்ரவைபவத்தைச் சொல்லி ஆநந்தித்து, யமாதிகள் தலையிலே யடியிட்டு, ஸ்ரீவைஷ்ணவர்களடியே முடியிட்டு, திருமாலைகட்டி திருமாலைசாத்த நினைத்துத் திருமாலைசொல்லுகிற இவர் ஸ்ரீசௌநகபகவான் வக்தாவாக ஸ்ரீசதாநந்தர் ஸ்ரோதாவாகத் திருநாமங்களைக் கேட்டாற்போலே பெரியபெருமாள் ஸ்ரோதாவாகத் தாம்வக்தாவாய்க்கொண்டு ப்ரகாசிப்பித்தருளி, (௧௯௧) "பூதாநி ககவர்க்கேண சவர்க்கேணேந்த்ரியாணி ச - டவர்க்கேண தவர்க்கேண ஜ்ஞாநகந்தாதயஸ்ததா - மந: பகாரேணைவோக்தம் பகாரேணத்வஹங்க்ருதி: - பகாரேண பகாரேண மஹாந் ப்ரக்ருதிருச்யதே" (భూతానిచకవర్గేణ చవర్గేణేంద్రియాణిచ - టవర్గేణతవర్గేణ జ్ఞానగంధాదయస్తథా- మనఃపకారేణైవోక్తం ఫకారేణత్వహంకృతిః - బకారేణభకారేణ మహాన్ప్రకృతిరుచ్యతే) என்றும், "பொங்கைம்புலனும்பொறியைந்தும் கர்மேந்த்ரிய மைம்பூத மிங்கிவ்வுயிரோப்ரக்ருதிமானாங்காரமனங்கள்" என்கிறபடியே, சதுர்விம்சதிதத்வாத்மகமான இச்சரீரத்திலாத்மபுத்தியை "புறஞ்சுவரோட்டைமாடம்" என்று நிவர்த்திப்பித்தும் (௧௯௨) "ஆத்மா து மகாரேண பஞ்சவிம்ச: ப்ரகீர்த்தித:" (ఆత్మాతుమకారేణ పంచవింశఃప్రకీర్తితః) என்று சொல்லுகிறபடியே இருபத்தைந்தா மக்ஷரமான மகாரவாச்யனாகையாலே ப்ரக்ருதே: பரனை ஆத்மஸ்வரூபத்தை யடியார்க்கென்று ஸ்வரூப நிர்த்தேசம்பண்ணியும், திருமந்த்ரநிஷ்டராய், "மெய்ம்மையே மிகவுணர்ந்து - கடைத்தலையிருந்து வாழும் சோம்பர்" பெரியபெருமாளுக்கு அபிமதரென்று அவர்கள் தமக்கு உத்தேச்யராகையாலே, "உன்னடியார்க்காட்படுத்தாய்" என்று தமக்குப் பெருமாளுண்டாக்கின ததீயசேஷத்வத்தை ப்ரார்த்தித்தருளியும் இப்படி இவ்வர்த்தங்களை அகிலருமறிந் துஜ்ஜீவிக்கும்படி திருமாலை திருப்பள்ளியெழுச்சி யென்கிற திவ்யப்ரபந்தங்களிலே விசதமமாகவருளிச்செய்து, பிற்பாடரு மிவற்றை யநுஸந்தித் துஜ்ஜீவிக்கைக்காக வுபகரித்து லோகத்தை வாழ்வித்தருளினார்.

ஸ்ரீதொண்டரடிப்பொடியாழ்வார்திருவடிகளேசரணம்.

ஜீயர்திருவடிகளேசரணம்.

(௬)

ஸ்ரீ திருப்பாணாழ்வார்ப்ரபாவம்.

(௧௩) " ஸ்ரீலோகஸாரங்கமஹாமுநீந்த்ர ஸ்கந்தாதிரூடம் கலயாமி நித்யம்-களங்கஹீநம் கமநீயபக்திம் கவீஶ்வரம் காயகஸார்வபௌமம் " (శ్రీలోకసారఙ్గమహామునీన్ద్ర స్కన్ధాధిరూఢం కలయామి నిత్యం - కళఙ్కహీనం కమనీయభక్తిం కవీశ్వరం గాయకసార్వభౌమం) (௧௪) " அத தத்ர ஸ ஶேஷே ந்த்ரி ஹேரமாரமணாக்ரஸ்திதலாஞ்சநாம்ஶஜ: - ஸமஜாயத பாணஸம்ஜ்ஞிகஸ்ஸுகவி: கார்த்திகமாஸி ரோஹிணே " (అథతత్రసశేన్త్రి హేరమారమణాగ్రస్థితలాంఛనాంశజః - సమజాయత పాణసంజ్ఞికస్సుకవిః కార్తికమాసి రైథభే) என்று திவ்யஸூரிசரிதையிலே சொல்லிற்றிறே.

(௧௫) " ஸ்ரீவேலாம்புநிமேகலேகலியுகே ஸம்வத்ஸரே துர்மதௌ - பாநௌ வ்ருஶ்சிகபாஜி பக்ஷமதிநே வாரே புதஸ்யோத்தமே - ரோஹிண்யா ஸஹிதே ஸதஸ்யுடுபதௌ க்ருஷ்ணத்விதீயே திதௌ - ஸஞ்ஜஜ்ஞே முநிவாஹநஶ்சரணயோர் யோகே நிசுளாபுரே " (శ్రీవేలాంబుని మేకలియుగే సంవత్సరే దుర్మతౌ - భానౌ వృశ్చికభాజిపక్ష్మదినే వారేబుధస్యోత్తమే రోహిణ్యాసహితే లసత్యుడుపతౌ కృష్ణద్వితీయే తిథౌ - సఞ్జజ్ఞే మునివాహనశ్చరణయోర్యోగే నిచుళాపురే) திருப்பாணாழ்வார் ; (௧௬) " காவேரீதோயமாஶ்ரித்ய வாதோ யத்ர ப்ரவர்த்ததே - தத்தேஶவாஸிநாம் முக்தி: கிமுதத்தீரவாஸிநாம் " (కావేరీతోయమాశ్రిత్య వాతోయత్రప్రవర్తతే - తద్దేశవాసినాం ముక్తిః కిముతత్తీరవాసినాం) என்று சொல்லுகிறபடியே தன்னுடைய ஸ்வப்ரவாஹ ஸ்பர்ஶ ஸம்பந்தத்தாலே முக்திதரவல்ல நீர்மையையுடைத்தான திருக்காவேரிக்கரையிலே நிசுளாபுரியென்று சொல்லப்பட்டிருப்பதாய், மாடகூடப்ராஸாதோபஶோபிதமான உறையூரிலே, சூர்யவம்ஶப்ரதீபனான சோளபூபதி தர்மேண ப்ருத்வீபரிபாலநம் பண்ணுநிற்கச்செய்தே, க்ஷீரார்ணவராஜனிடத்தே பிராட்டி ப்ராதுர்ப்பவித்தருளினாற்போலே நம்பெருமாளிடத்தே ஏகாக்ரசித்தனான தர்மவர்மாவின் வம்ஶத்திலே, சோளனுக்குக் கந்நிகையாய் நீளாம்ஶஜையான உறையூர் நாய்ச்சியார் திருவவதரித்தருள, சோளராஜாவும், ஸ்ரீஜநகராஜன் பிராட்டியை ப்ரீதியோடே பெற்றெடுத்துவளர்த்தாற்போலே, உவப்போடே வளர்க்க, வளர்ந்தருளுகிற நாய்ச்சியார், பாலக்ரீடையிலும் நம்



ஸ்ரீ திருப்பாணாழ்வார்

பெருமாளையல்லது வேறொரு விளையாட்டறியாதவளாய், சகிகளோடேகூட விஹரித்து வளர்ந்தவள் ஒருநாள் உத்யானத்திலே சகிகளோடேகூட ப்ராப்தயௌவனையானபின்பு லோலாவிலையாய் விஹரியாநிற்க, "வேட்டையாடிவருவானை விருந்தாவனத்தே கண்டோமே" என்கிறபடியே நம்பெருமாள் அங்கே ம்ருகயாவிஹாரபரராயெழுந்தருளக்கண்டு, மையலேறி, மோஹித்து, ஊரேவந்து, ஸ்வபிதாவான சோழராஜாவைக் குறித்து, நம்பெருமாளையல்லது வேறொரு புருஷற்கு வாழ்க்கைப்படேன்; என்னை அவருக்கே உதகம்பண்ணிக்கொடுமென்ன; சோழராஜாவும் சந்துஷ்டனாய், நம்பெருமாள் சந்நிதியிலேசென்று, அச்செய்தியை விண்ணப்பஞ்செய்ய; பெருமாளும் நாமே பாணிக்ரஹணம்பண்ணுகிறோம், நமக்கே உதகம்பண்ணிக்கொடுமென்று திருவுளம்பற்ற; ராஜாவும் சந்துஷ்டனாய், "துழலமெழப்பறைகொட்டி", "தோரணம்நாட்டி", அரங்கமாநகரையலங்கரித்து, பெரியப்ரீதியுடனே பெருப்பெருத்த கல்யாணம் செய்து நாய்ச்சியாரை உதகம்பண்ணிக்கொடுத்தான். பெருமாளும் ஜநகராஜன் திருமகளை உத்வாஹம்பண்ணினாற்போலே உவப்போடே திருமணம்புணர; ராஜாவும் பொன்னரிசி மூந்நூற்றறுபது பாரமும், அதுக்குத் தக்க முத்து மாணிக்கமயமான நவரத்னோபஹாரமும், நிரவதிக வஸ்த்ராபரணங்களும் கோகஜாஶ்வ தாஸீபூஷணங்களும் குறைவறக்கொடுத்து, ஸர்வத்திலும் பர்யாப்தி பிறவாமையாலே தன் ஸர்வஸ்வத்தையும் நம்பெருமாளுக்கே யாக்கி வாழுங்காலத்திலே, (உறந்தை) என்கிற உறையூரிலே, கார்த்திகைமாசத்தில் ரோஹிணீநக்ஷத்ரத்திலே பஞ்சமவர்ணத்திலே ப்ராஹ்மணவேள்விக் குறைமுடித்த பாகவதனைப்போலே ஸ்ரீவத்ஸாம்ஶரான திருப்பாணாழ்வார் அவதரித்தருளினார்.

(கஎ) "ஜாயமாநம் ஹி புருஷம் யம் பஶ்யேந் மதுஸூதந: - ஸாத்விகஸ்ஸ து விஜ்ஞேயஸ் ஸ வை மோக்ஷார்த்தசிந்தக:" (జాయమానం హి పురుషం యం పశ్యేన్మధుసూదనః - సాత్త్వికస్స తు విజ్ఞేయ స్స వై మోక్షార్థచిన్తకః) என்கிறபடியே நம்பெருமாள் இவர்க்கு ஜாயமாநகடாக்ஷத்தைப் பண்ணுகையாலே, கேவல ஸத்வகுண ப்ரசுரராய் மோக்ஷார்த்தியான இப்பாண்பெருமாள், தாம் "சேமமுடை நாரதனைப்போலவும், (கஅ) "நிஸ்தாரயாஸ்மாத் வைதேந கீதபலேந மாம் - ஏவமுக்த்வா து மாதங்கம் ராக்ஷஸஶ் ஶரணங்கத:" (నిస్తారయాస్మాద్వైతేనగీతఫలేనమాం - ఏవముక్త్వాతు మాతఙ్గం రాక్షసశ్శరణఙ్గతః) என்கிறபடியே சரணாகதனான ப்ராஹ்மராக்ஷஸ்ஸைக் குறித்து, (ககூ) "யந்யா பஸ்த்ரிம்ஶீதம் ஸம்ஸாரம் கௌஶிகம் ப்ரத்தம் - ததேநதஸ்ய ஸஹ்ய மோக்ஷயி

ஷ்யமபிதஸ்ய பந்தாஃ" (యస్యయాస్స్యమంగీతం స్వరాద్యైస్సుత్తమం - ఫలేనతస్యభద్ర త్రైలోక్యమప్యల్పకం) என்று கைசிகபுராணத்தில் யாகதோஷம் பரிஹரித்த பாகவதனைப்போலவும் பகவத்ஜ்ஞாநவித்யைக்கு சார்வபௌமராய், "பரமாத்மனைச்சூழ்ந்துநின்று" ஸாமகாநம்பண்ணும் நித்யஸூரிகளிலே யொருவர் வந்தவதரித்தாரோ வென்று சொல்லலாம்படியான திவ்யசரித்ரங்களையுடையரான இப்பாண்பெருமாள், ஸ்வஜாத்யநுஸந்தாநத்தாலே ஸ்வவர்ணருசிமான இரண்டாற்றுக்கும் நடுத்தாம்பிடியாமே தென்னாற்றின் தென்கரையிலே, திருமுகத்துறைக்கெதிரே, "தொழுமத்திசை யுற்றுநோக்கியே" என்கிறபடியே "திருவரங்கமேயான்திசையைநோக்கி, நாநின்று, "வலந்தாங்குசக்கரத்தண்ணல் மணிவண்ணற்காளென்றுள் கலந்து" கையும்வீணையுமாய்த் திருப்புகழ்கள்பலவும் பாடிக்கொண்டு, "சிந்திக்குந்திசைக்குந்தேறுங்கைகூப்பும்" என்கிறபடியே பெரியபெருமாளை அநவரதபாவனைபண்ணிப்போருகையாலே, (௱௭0) "ததோஹ்ருஷ்டமநாஃ" (తతోహృష్టమనాః) என்கிறபடியே பெரியபெருமாளும் இவர்பக்கல் உவந்த திருவுள்ளத்தராக, அவ்வளவிலே நாய்ச்சியாரும்பெருமாளுடனே நமக்கந்தரங்கரானபாண்பெருமாள் புறம்பேநிற்பதென்னென்று விண்ணப்பஞ்செய்ய, பெரியபெருமாளும் இவரைப்பலகால் அருளப்பாடிட்டுப்போகவிட்டவிடத்திலும், ஸ்வரூபத்தால் வந்தநைச்யத்தாலும் ஸ்வவர்ணத்தால்வந்தநைச்யத்தாலும்பிற்காலித்து, கடுநடையிட்டகல்கிற அளவிலே, பெரியபெருமாள், பின்னையுமிவர்பக்கலுள்ள க்ருபாதிசயத்தாலும், தன்னிரங்குச ஸ்வாதந்த்ர்யத்தாலும் ஸ்ரீலோகஸாரங்கமஹாமுநீந்த்ரரைப்பார்த்து, நமக்கந்தரங்கரான பாண்பெருமாளை நீர் நெகிழ நினைத்துப் போரவேண்டா; அவரை, உமது தோளிலேகொண்டு நம்பக்கலில் அழைத்துக்கொண்டு வரவேண்டுமென்று ஸ்வப்நமுகேந அருளிச்செய்ய, அவரும் விடிவோரை யெழுந்திருந்து, (௱௭௧) "அத்யமேஸபலம்ஜந்ம ஸுப்ரபாதாசமேநிஸா" (అద్యమే సఫలం జన్మ, సుప్రభాతా చ మేనిశా) என்கிறபடியே, இற்றைவிடிவு எனக்கு நல்விடிவாச்சுதென்று ஸ்வப்நத்தை நிரூபித்து, மிகவும் ஹ்ருஷ்டராய் "தோதவத்தித்தூமறையோருடன்திருமுகத்துறையிலே, "நாட்காலேநீராடி" அநுஷ்டாநம்பண்ணி, (௱௭௨) "ஸுதூரமபிகந்தவ்யம்யத்ரபாகவதஸ்திதஃ" (సుదూరమపిగన్తవ్యంయత్రభాగవతస్థితః) என்கையாலே, இவ்வாழ்வார் அதிதூரத்திலே நின்று, "யாழினிசைவண்டினங்களாளம்வைக்கு" மரங்கத்தைநோக்கி, நித்யமாக ஸேவித்து ஸ்தோத்ரம்பண்ணிக்கொண்டு நிற்கிறவிடத்தேற வெழுந்தருளி, இப்பாணாழ்வார் தி

ருவடிகளிலே தாளும் தடக்கையும் கூப்பிப்பணிந்து, தேவரீர் நம்பெருமாள் எழுந்தருளப்பண்ணுவித்துக்கொண்டு வரவேண்டுமென்று அடியேனை நியமித்தருளிற்றென்று விண்ணப்பஞ்செய்ய, ஆழ்வாரும் "குலந்தாங்கு சாதிகள் நாலிலுங்கீழிழிந்து" என்றும், "குலங்களாயவீரிரண்டிலொன்றிலும்பிறந்திலேன்" என்றும், "நீசனேன் நிறைவொன்றுமிலேன்" என்றும் சொல்லுகிறபடியே, இவர் நைச்யத்தை முன்னிட்டுப் பிரமாதித்து, "திருவரங்கப்பெருநகரை" நான் மிதிப்பேனோவென்ன, ஸ்ரீலோகசாரங்கமுனிகளும்; ஆகில்; அடியேனுடைய தோளின்மேலே எழுந்தருளும், பெருமாள் அருளப்பாடிட்டருளினபடியே எழுந்தருளுவித்துக்கொண்டு போவேனென்ன; ஆழ்வாரும், "செய்த்தலையெழுநாற்றுப்போலவன் செய்வனசெய்துகொள்ள" என்கிறபடியே, "அவன் செய்யும் சேமத்தையெண்ணித் தெளிவுற்று,, ந்யஸ்தபாராயிருக்க, ஸ்ரீலோகசாரங்க மஹாமுநீந்த்ரரும் ஆழ்வாரை; முக்தனைப்போருமவனை ஆதிவாஹிகர் எழுந்தருளுவித்துக்கொண்டு திருமாமணிமண்டபத்தேறப் போமாபோலே தமது திருத்தோளின்மேலேகொண்டு அழகியமணவாளன் திருமண்டபந் தன்னுடைய புகுத; பெரியபெருமாளும் தம்முடைய திவ்யமங்கள விக்ரஹத்தை, நித்யஸூரிகளுக்குக் காட்டுவாரைப்போலே இவருக்குக் காட்டிக்கொடுக்க, (௧௭௩) "[illegible]" (కిరీటకేయూరకిరణోజ్జ్వలం - ప్రలంబముక్తామణిహారభూషితం - ఉదారవక్షస్థలశోభికౌస్తుభం - శ్రియాచదేవ్యాభువ్యాభూషితోరువక్షసం - ప్రశస్తచామీకరచారువాససం - సుమేఖలంనూపురశోభితాఙ్ఘ్రికం - సువర్ణనీజాత మృణాళకోమలం - దధానమచ్ఛచ్ఛవియజ్ఞసూత్రకం - భుజోపధానప్రసృతాన్యహస్తం - నికుంచితోత్తానితపాదపంకజం - సుదీర్ఘమూర్ధ్వంనముపగ్రవేషం - భుజఙ్గతల్పేప్రశయానమీశ) என்று சொல்லுகிறபடியே, ப்ரஹ்மாதி ஸகல சேதநராலும் ஸேவ்யமானரான அழகிய மணவாளனை ஸேவிக்கப்புகுந்த ஆழ்வார்; மாதாவினுடைய சர்வாவயவங்களும் கிடக்கச்செய்தே, ஸ்தநந்தயப்ரஜை முலையிலே வாய்வைக்குமாபோலே சேஷியக்கல் சேஷபூதன் இழியுந்துறை திருவடிகளாகையாலே "அரங்கத்தம்மான் திரு

க்கமலபாதங்கள்வந்தென் கண்ணினுள்ளனவொக்கின்றவே" என்கிறபடியே சேஷித்வ போக்யத்வோபாயத்வங்கள் குறைவற்ற திருவடிகளாயிறே முதலில் பற்றிற்று ; "அரங்கத்தம்மான்பாதங்கள்" என்கையாலே சேஷித்வமும், "கமலபாதங்கள்" என்கையாலே போக்யத்வமும், "பாதங்கள்வந்து" என்கையாலே உபாயத்வமும் சொல்லிற்று ; இப்படியிருந்துள்ள திருவடித் தாமரைகள் முதலாகப் பெரியாழ்வாரும் "திருப்பாதகேசத்தை-விருப்பாலுரைத்தநுபவித்தாற்போலே, இவரும்; "இருளகற்றுமெறிகதிரோன்மண்டலத்தூடேற்றிவைத்தேணிவாங்கி யருள்கொடுத்திட்டடியவரை யாட்கொள்வானை" பெரியபெருமாளுடைய திவ்யமங்களவிக்ரஹத்தை, பாதாதிகேசாந்தமாக அநுபவித்து, அவ்வநுபவஜநிதப்ரீத்யதிசயத்தாலே, "அமலனாதிப்பிரான்" என்கிற திவ்யப்ரபந்தத்தை, பத்தும்பத்தாக, பிற்பாடரும் அவற்றை யநுஸந்தித்து உஜ்ஜீவிக்கத்தக்கதாக உபகரித்தருளி லோகத்தை வாழ்வித்தருளி மிகவும் உவப்போடேயிருக்க, பெரியபெருமாளும் ; வேர்சூடுமவர்கள் மண்பற்றுக்கழற்றுதாப்போலே அத்திருமேனியோடே அங்கீகரித்தருள ; ஆழ்வாரும் ; அகிலரும் காணும்படி "அணியரங்கன்" திருவடிகளிலே அந்தர்ப்பவித்தருளினார்.

ஸ்ரீதிருப்பாணாழ்வார்திருவடிகளேசரணம்.

ஜீயர்திருவடிகளேசரணம்.

(௰)

ஸ்ரீதிருமங்கையாழ்வார்ப்ரபாவம்.

(கஎச) "கலயாமி கலித்வம்ஸம் கவிம் லோகதிவாகரம் - யஸ்ய கோபிஃ ப்ரகாஶாபிராவித்யம் நிஹதந்தம: - பரகாலஹரிம் வந்தே ஹரிவாஹ ஸமாஶ்ரயம் - உத்த்ருத்ய கலிகண்டகம் ஸஹஸம் ஸேதுவிஹ்வலம் - நாதவ்ய ஸஹஸ்ர ஸமயோஸ்வாங்காஶ்ரித்வ ஜீவம் - பரகாலத்ரிமேத்ரம் கவிம்பவ ஸேத்யஸுதவந்தனம்" "ஸத்ஜாய தத்த்வபாதபத்ம வந்தேஹம் நீலநாம கம் - பத்ரபத்மேஷதகாமத்ருக்காம் ஸஜ்ஞம் பரிசேதகாதிக்ருத்தமம்



× திருமங்கையாழ்வார் ×

நி" (కలయామికలిధ్వంసంకవిలోకదివాకరం - యస్యగోభిః ప్రకాశాభి రావిద్యన్నిహతం తమః - పరకాలహరింవందే హరిపాదగుహాశయం - ఉన్నతప్రతికూలేభకుంభసంభేదవిభ్రమం - నాద ప్రసభసన్త్రి ప్రశైవశాక్యాదిదుద్విజవం - పరకాలమృగేన్ద్రంత్వాం ప్రపద్యేచ్యుతసన్నిధం" "సమజాయతతత్రశాబరప్రముఖః కశ్చననీలనామకః - పురుషోత్తమకార్ముకాంశజస్సుకృతే జాతికకృత్తికోడుని) என்று திவ்யஸூரிசரிதையிலே சொல்லிற்றிறே.

(௧௭௫) "ஸுதாநாமப்ஜாநாம் கலியுகபவாநாமபகமேந ஶேஷேணாஹ்நா நேஶேரடசரமே தைவதகுரோ: தினே தாரே வஹ்நேஶ்ஶரகிரணே பூர்ணிமஜுஷி க்ஷிதாவாவிர்பூத: கலிபுரஹே யுஷ்மந்மஹிமா" (సుధానామబ్జానాం కలియుగభవానామపగమేన శేషేణాహ్నా నేశేరటచరమే దైవతగురోః దినే తారే వహ్నేశ్శరకిరణే పూర్ణిమజుషి క్షితావావిర్భూతః కలిపురహే యుష్మన్మహిమా)

திருமங்கையாழ்வார்; திருவாலித் திருநகரிலே திருக்குறையலூரிலே, நளவருஷம், கார்த்திகைமாசம், க்ருத்திகாநக்ஷத்ரத்திலே, ஸ்ரீகார்முகாம்ஶராய், அவதரித்தருளினார். ம்லேச்சவம்ஶத்தில் அவதரிக்கையாலே, அவர்களும் இவர்க்கு நீலநிறத்தனென்று திருநாமம் சார்த்தினார்கள், "தெரியேன்பாலகனாய்" என்கிறபடியே, பால்யாவஸ்த்தாநந்தரம் ப்ராப்தயௌவநராய் "மாரனார்வரிவெஞ்சிலைக்காட்செய்து, "தெரிவைமாருருவமேமருவி" மிகவும் விஷயப்ரவணராய், ஸ்வகரத்ருதஶஸ்த்ரப்ரகாண்டராய், சோளபூபதியை சேவித்து யுத்தேபராக்ராந்தராய் ப்ரவீரராயிருக்கிற இவர்க்கு, ஸஹாயபூதராக, நீர்மேல்நடப்பான், நிழலொதுங்குவான், சாயைபிடிப்பான், தாளூதுவான்என்று நாலுமந்த்ரிகளும் ஆடல்மாவலவன் என்கிற குதிரைநம்பிரானும் "தமர்கட்கெளியானை., என்கிற யானைநம்பிரானுமாக இப்படியிருக்கிறஇவரை; அந்தராஜாவும் ஒருதேசாதிபதியும் சிலசேனாநாயகனுமாக்கிவைத்துப் போருகிறகாலத்திலே; திருவாலிநாட்டிலே நன்றாயிருப்பதொரு "தடத்தவிழ் தாமரைப்பொய்கையிலே., "சிலம்பார்க்கவந்துதெய்வமகளிர்களாடும்சீர்" என்கிறபடியே, சில அப்ஸரஸ்ஸுக்கள் வந்து நாளும் ஜலக்ரீடை பண்ணிப்போக, அவர்களிலே திருமாமகளும் ஒரு அப்ஸரஸ்ஸு வேஷத்தை தரித்துக்கொண்டு குமுதமலர் கொய்யப் புறப்படுகையாலே கூடவந்தவர்கள் இவளைவிட்டுப்போக, இவள் மாநுஷ்யமான சரீரத்தை பரிக்ரஹித்துத் தனித்துநிற்க, அவ்வளவிலே, திருநாங்கூரில் எம்பெருமானை சேவித்திருப்பானொரு பிஷக்வரனை பாகவதோத்தமன் அநுஷ்டாநார்த்தமாக வந்தவன், இப்பெண்பிள்ளையைக்கண்டு, நீ யார் ? தனித்திருப்பானென்னெ

ன்றுகேட்க, அவளும் ; கூடவந்த பெண்பிள்ளைகள் என்னைவிட்டுப்போனார்கள், என்னை இனி உம்மோடே கொண்டுபோமென்று தான்வந்த க்ரமத்தை அவர்க்குச்சொல்ல, அவரும் புத்ரஹீநராகையாலே மிகவுமுவந்து, நம்மூரே வாவென்று அழைத்துக்கொண்டுபோய், ஸ்வபத்நிகையிலே குமாரிவந்த வரத்தைச்சொல்லி, போஷிக்கும்படி காட்டிக்கொடுக்க, அவளும் வந்த்யையாகையாலே அதிசந்தோஷத்துடன் அங்கீகரித்து, இவள் குமுதமலர்கொண்டு நின்றதுவே நிரூபகமாக குமுதவல்லியாரென்று திருநாமஞ்சாத்தி, தங்களுக்கு ப்ரீதியாக வளர்த்துக்கொண்டு போருகிறகாலத்திலே, இவர்க்குச் சிலர்போய் இப்பெண்பிள்ளையினுடையரூபலாவண்யாதிகளை மிகவும் ச்லாகித்துச்சொல்ல, இவரும் அத்தைக்கேட்டு, "நின்றவாநில்லாநெஞ்சினராய், "அவர்தரும்கலவியேகருதியோடி, திருநகரியிலேசென்று, மருத்துவனை பாகவதனகத்திற்புகுந்து, அவனுடனே சம்பாஷணம் பண்ணிக்கொண்டிருக்கச்செய்தே, இப்பெண்பிள்ளை புறப்படக்கண்டு, விஸ்மயப்பட்டு, பாகவதபிஷக்வரரைக்குறித்து, ஸுராஸுரதோபமையான ஸுதை அநபத்யரான உமக்கு எங்ஙனே யுண்டாய்த்தென்றுகேட்க, அவரும் இவருடனே அப்பெண்ணின் வரத்தைச்சொல்லி, இப்பெண்ணினாலே அநபத்யதாஸுசம்தீர்ந்தேன் ; அஜ்ஞாதகுலகோத்ரையான இவளை யாருக்கு வாழ்க்கைப்படுத்துவேனென்று மிகவும் விவாஹோசிதவயஸ்ஸைக் கண்டு வ்யாகுலாந்தஃகரணனாகாநின்றேனென்ன, இவரும் இப்பெண்ணை பத்நியாக நமக்குத் தரவேணுமென்று வஸ்த்ரபூஷணாதி த்ரவ்யங்களில் சங்கோசமறக்கொடுத்து, மிகவுமநுவர்த்தித்து விரும்பிக்கேட்க, அவர்களும் அப்பெண்பிள்ளையை இவருக்குக் கொடுப்பதாக உத்யோகிக்க, அப்பெண்பிள்ளையும் (௧௭௬) "தாபஃ புண்ட்ரஸ்ததா நாம" (तापः पुण्ड्रस्तथा नाम) என்கிற திருவிலச்சினை திருநாமமுள்ளவர்க்கொழிய மற்றொருவற்கென்னைப் பேசவொட்டேன் என்று தன்னுடைய நெஞ்சில் அத்யவஸாயத்தைச்சொல்ல, இவரும் அவ்வசநத்தைக்கேட்டு; (௧௭௭) "ஸஹஸ்ரஶீர்ஷம்" (सहस्रशीर्षम्) என்கிறபடியே அதித்வரையோடே திருநறையூரிலே சென்று, "பொன்னியலுமாடக்கவாடங்கடந்துபுக்கு" என்கிறபடியே, நம்பி திருமுன்பே வந்து, (௧௭௮) "அம்ருதமந்தநக்லேஶபாஹுஸுதர்ஶநாங்கிதஃ" (अमृतमन्थनक्लेशबाहुसुदर्शनाङ्कितः) என்றும், "தீயிற்பொலிகின்றசெஞ்சுடராழிதிகழ்திருச்சக்கரத்தின் கோயிற்பொறியாலே யொற்றுண்டுநின்று" என்றும்சொல்லுகிறபடியே திருவிலச்சினையும் தரித்து, (௧௭௯) "ஸர்வேஷ்வப்யூர்த்வபுண்ட்ரேஷு

ஸத்வைஸ்வர்யப்ரதாயினி - ஸத்யஜ்ஞானவிஷயாசனம் ஸத்ய ஆத ஹஸ்தவதி" (సద్వైశ్వర్యస్య దాతార్యస్యార్ధ్యపుణ్యం దయాధావిని - యజ్ఞాస్సాంతరా శ్వాఃసాహ్యజ్ఞదత్వదశశ్లోకి) என்று சொல்லுகிறபடியே கேசவாதிநாமங்களையு முடையராய்வர, குமுதவல்லியாரும் ஆழ்வாரைப்பார்த்து, (சுலோ) "ஆரா டநாநாம்ஸர்வேஷாம் விஷ்ணோராராதநம்பரம் - தஸ்மாத்பரதரம் ப்ரோக்தம் ததீயாராதநம்ந்ருப" (ఆరాధనానాంసర్వేషాం విష్ణోరారాధనంపరం- తస్మాత్పరతరంప్రోక్తంతదీయారాధనంనృప) என்கையாலே ஒருஸம்வத்ஸரம் நித்யமாக ஆயிரத்தெட்டு ஸ்ரீவைஷ்ணவர்களை அமுதுசெய்வித்து அவர்களுடைய ஸ்ரீபாததீர்த்தமும் தளிகைப்ரஸாதமும் ஸ்வீகரித்து நிறைவேற்றுலொழிய, உம்மை நான் பர்த்தாவாக அங்கீகரிப்பதில்லையென்று ஒருநியமம்பண்ண, அவரும் அதுக்கிசைந்து ப்ராவண்யாதிசயத்தாலே ப்ரதிஜ்ஞைபண்ணிக்கொடுக்க, அதின்பின்பு குமுதவல்லியாரை நீலதிறத்தார்க்கு நாடும் ஊரும் அறிய நல்லதோர் கல்யாணஞ்செய்து, உதகபூர்வகமாக சமர்ப்பித்தார்கள்.

அநந்தரம் ஆழ்வாரும் அதிப்ரீதியுடனே திருமாலடியார்களைப் பூசிக்க நோற்க ஒருப்பட்டு, அதுக்குத்தம்முடைய தநத்தையிட்டுத் ததியாராதநம் பண்ணிக்கொண்டு போருகிறகாலத்திலே, பரகாலன் பகுதித்ரவ்யமெல்லாம் வ்ரயம்பண்ணித் ததியாராதநம் பண்ணுகிறானென்றுசோழராஜாவுக்குச்சொல்ல, அவனும் கேட்டுக் குபிதனாய் பகுதிக்கு இவர்பக்கல் தரவுவரக்காட்ட, இவரும் அந்தத்தரவுக்கு வந்த ராஜமநுஷ்யர்க்கு (சுலோ) "ஸத்யமேவநிசாமுக்திநமுக்தி மத்யாஹ்நஸாயாஹ்நயோ:- ஸ்வதாத்ரஜகத்யாம ஸந்தர்நைவாஸ்தி" (దద్యామేవనిశాముక్తిదినముక్తిమధ్యాహ్నసాయాహ్నయోః-స్వాదాత్రజగత్యామసర్నైవాస్తి) என்னுமாபோலே சில பர்யாயங்களைச் சொல்லக்கேட்டுச் சலித்து, ராஜமநுஷ்யர் பகுதித்ரவ்யம் தரவேணுமென்று நிர்ப்பந்திக்க, இவரும் குபிதராய் அவர்களைத்தள்ளிவிட, அவர்களும்போய் இவ் விசேஷத்தைச் சோழராஜாவுக்கு அறிவிக்க, அவனும் குபிதனாய், இவர் ஆஜ்ஞாபங்கம்பண்ணினதுக்கு மிகவும் சீறி, தன் சேநாதிபதியை யழைத்து, பரகாலனை இங்கே பிடித்துக்கொண்டுவாவென்று ஆஜ்ஞாபிக்க, அவனும் கஜ துரகபதாதியோடே சென்று இவரை வளைத்துப்பிடிக்கத்தேட, இவரும்துர காரூடராய் ஸ்வபலஸஹிதராய்வந்து, ஆலித்துக்கொண்டு அவன்படைமேலேவிழுந்து, கஜதுரகபதாதிகளைத் துண்டித்து, பராஜிதராக்கியோட்டிவிட; சேநாதிபதியும் காந்திசீகனாய் ஓடி, வந்த பராஜயத்தை ராஜாவுக்குஅறிவிக்க, சோழபூபனும் கேட்டு, கோபஸம்ரக்தலோசநனாய், அப்போதே தன் சது

ரங்கபலத்தோடே புறப்பட்டுவர, அவனுடைய சேநாசமுத்ரம் இவரைவளை ய, இவரும்பூர்வம்போலே த்ருடகரவாளபயங்கரஹஸ்தராய் ஆலித்துக்கொ ண்டுவந்து, இவன்சேநாசமுத்ரத்தை மந்தராத்ரிபோலே மதிக்க, ஸர்வரும் பராஜிதராய் ஓடிவந்து ராஜாவின்மேலேவிழ, ராஜாவும் அதிரௌத்ரத்துட னே, ஓடுகிறபலத்தை நிறுத்தி, ஜகதேகதநுர்த்தரனுன பெருமையோடே இ வரை ஸேநாசமுத்ர மத்யஸ்த்தராம்படி வளைய, இவரும் அதிவீரராய், ஸ்வ கரத்ருத சஸ்த்ரபலத்தாலே சேனையை மதியாமல் ஸம்ஹரிக்குமதுகண்டு, அதிசந்துஷ்டனாய், இவரை; நீர் ஒன்றுக்கும்பயப்படவேண்டா; உம்முடை ய ஶௌர்யவீர்யங்கண்டு மிகவும் சந்துஷ்டனானோம். நீர்செய்த அபகாரங்க ளையெல்லாம் மறந்தோம். அஞ்சாதே நம்மை நம்பிவருவதென்று தம் குரு தைவங்களைத்தொட்டு சபதம்பண்ணிக்கொடுக்க, இவரும் நம்பி அவனண் டையிலே சென்றவளவிலே, இவருடைய பராக்ரமத்தை மிகவும் ஶ்லாகித் து, நீர்செய்த த்ரோஹமெல்லாம் மறந்தோம், நம்பகுதி த்ரவ்யங்களைமாத் ரம் தரவேணுமென்று இவரைத் தன் மந்த்ரிவசமாக்கி ஊருக்கு மீண்டான். அந்தஸசிவனும் படைவீட்டிலே சென்று, இவரைப் பிடித்துக்கொண்டு வந் து, ஒருதேவதாலயத்திலே சிறைவைக்க, இப்படி அந்தக் கோயிலிலே மூன் றுநாள் அமுதுசெய்யாமல் உபவஸிதராயிருக்க, இப்படி உபவஸித்து ஆர்த்த ராயிருக்கிற இவர் ஸ்வப்நத்திலே பேரருளாளர் எழுந்தருளி, உமக்குப் பகு திக்குவேண்டிய த்ரவ்யம் தருகிறோம், காஞ்சீபுரத்தேற வாருமென்றருளிச் செய்ய, இவரும் நிஶ்சிதார்த்தராயிருக்க, பொழுது விடிந்தவளவிலே, கர தநம் தரவேணுமென்று வந்த அமாத்யனுடனே, காஞ்சீபுரத்தே ஆபத் தநமாகச் சிலதநம் சேமித்துக்கிடக்கிறது, அங்கே வந்தால் உங்கள்தநம் தருகிறோமென்ன, அவனும் ராஜாவுக்கு அறிவிக்க, அவன் அத்தையும் பா ர்ப்போம், ஜாகரூகராய்க் காவலிட்டுக்கொண்டு போதுங்கோள் என்று ஆஜ் ஞாபிக்க, இவரும் காவலுடனே காஞ்சீநகரியேறச்சென்று, நிக்ஷேபதநம் சோதித்துக் காணுமையாலே ஶ்ரமித்து மூடிக்கிடக்க, அவ்வளவிலே கருணா கரரான வரதராஜரும், அஞ்சாதே கொள்ளுமென்று, வேகவதீதீரத்திலே தந மிருக்கிறவிடம் அடையாளமாகக் காட்டியருள, இவரும் அங்கே தநம் கண் டெடுத்து, ந்ருபதநம்கொடுத்து, சேஷித்த தநத்தைத் ததீயாராதநார்த்தமா கவைத்துக்கொள்ள, அந்த அமாத்யனும் அந்தத் தநத்தை ந்ருபதிமுன்னே வைக்க, ராஜாவும் வரதராஜர் ப்ரஸந்நராய் த்ரவ்யம் தந்தபடிகேட்டு விஸ்மி தனாய், இவர் சாமாந்யர் அன்று; மஹாபாகவதரிறே? இது, த்ரௌபதிக்குப் புடவைசுரந்தாற்போலே யிருந்ததென்று, இந்தத் தநத்தை நம் கோசத்திலே

வைக்கவொண்ணாதென்று பார்த்து, ஆழ்வாரை யழைத்து, அபராதக்ஷாபணம்பண்ணிக்கொண்டு, பஹுமாநமாக பஹுமாநம்பண்ணிப் போகவிட்டு, இவர் உபவாசமிருந்த தோஷத்தை அந்த த்ரவ்யத்தை தேவப்ராஹ்மணசமர்ப்பணம்பண்ணித் தீர்த்துக்கொண்டான். இவரும் சேஷித்த த்ரவ்யங்கொண்டு ததீயாராதநம் நடத்தி, தநமெல்லாம் தீர்ந்து, கையில் ஒன்றுமில்லாமையாலே இவர் வழிபறித்தாகிலும் தநார்ஜ்ஜநம்பண்ணித் ததீயாராதநம் விச்சிந்நமாக நடத்தவேணுமென்று, வழிபறித்துத் தநங்கொண்டுவந்து, ததீயாராதநம் பக்திபுரஸ்ஸரமாக நடத்திக்கொண்டு போராநிற்க, ஸர்வேஶ்வரனும் வழிபறித்தும் ஸ்ரீவைஷ்ணவர்க்கு ஆகையாலே இவர் சரமபுருஷார்த்தத்திலே நிஷ்ட்டரானதுகண்டு, அந்த ஸுக்ருதமேபற்றாசாக இவரைவிசேஷகடாக்ஷம்பண்ணி அங்கீகரிக்கவேணுமென்று திருவுள்ளமாய், இவர் வழிபறிக்கைக்கு உசிதமான பரிகரத்தையுங்கூட்டிக்கொண்டு, திருமணங்கொல்லையில் திருவரசின்மேலே கொடிவைத்துப் பதுங்கியிருக்கிற வழியிலே, (௧௮௨) "ஸாக்ஷாந்நாராயணோ தேவ꞉ க்ருத்வா மர்த்யமயீம் தநும் - மக்நாநுத்தரதே லோகாந் காருண்யாச்சாஸ்த்ரபாணிநா" (సాక్షాన్నారాయణో దేవః కృత్వా మర్త్యమయీం తనుం - మగ్నానుద్ధరతే లోకాన్ కారుణ్యాచ్ఛాస్త్రపాణినా) என்றும் "பீதகவாடைப்பிரானார் பிரமகுருவாகிவந்து" என்றுஞ்சொல்லுகிறபடியே "வயலாலிமணவாளன் திருமணம் புணர்ந்துவருகிற மணவாளக்கோலமுந்தானுமாய், ப்ராஹ்மணவேஷத்தை பரிக்ரஹித்து, பத்நீஸஹிதனாய், சர்வாபரணபூஷிதனாய், பஹுத்ரவ்யங்கொண்டு, அநேகம் திரளோடுவந்து தோற்ற; இத்திரளைக்கண்டு ஆவித்துக்கொண்டு, ஸாயுதராய், ஸபரிகரராய், பெரியஆர்வாரம் பண்ணிக்கொண்டு, இவரை வளைந்து சூழ்ந்து, வஸ்த்ராபரணங்களையும் அபஹரித்துக்கொண்டு அறுகாழியையும் திருமுத்தாலே கடித்து வாங்க; எம்பெருமானும் இத்தைக்கண்டு, நம் கலியனோவென் றருளிச்செய்தார். பின்பு இவையித்தனையும் சுமைசுமையாகக் கட்டியெடுக்கப்பார்க்க, அவை பேர்க்கவும் போராதபடியாலே மணவாளனை பராஹ்மணனைப் பார்த்து, நீ மந்த்ரவாதம் பண்ணினாயென்று அதுக்க, அம்மந்த்ரத்தை உமக்குச்சொல்லுகிறோம் வாருமென்று கழுத்தை யணைக்க, இவரும் ஓமென்று சம்மதித்து ஹடாத்கரித்து வாள்வலியால் கேட்க, நீ யென் செவியின்வழி புகுந்து என்கிறபடியே செவிக்கினிய செஞ்சொல்லை செவிக்கின்பமாக ஆழ்வாருடைய வலத்திருச்செவியிலே, (௧௮௩) "ஓமித்யக்ரே வ்யாஹரேந்நம இதி பஶ்சாந்நாராயணாயேத்யுபரிஷ்டாத் ஸர்வம் ஜயம்",

(ఋచో యజూంషి సామాని తథైవాథర్వణాని చ - సర్వమష్టాక్షరాన్తస్థం యచ్చాన్యదపి వాఙ్మయం) என்றும், (௧௮௪) "𑌸𑌰𑍍𑌵𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌸𑌾𑌰𑌾𑌰𑍍𑌥𑌃 𑌸𑌂𑌸𑌾𑌰𑌾𑌰𑍍𑌣𑌵𑌤𑌾𑌰𑌕𑌃 - 𑌗𑌤𑌿𑌰𑌷𑍍𑌟𑌾𑌕𑍍𑌷𑌰𑍋 𑌨𑍃𑌣𑌾𑌮𑌪𑌨𑍁𑌰𑍍𑌭𑌵𑌕𑌾𑌂𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌂" (సర్వవేదాంతసారార్థః సంసారార్ణవతారకః - గతిరష్టాక్షరో నృణామపునర్భవకాంక్షిణాం) என்றும், (௧௮௫) "𑌐𑌹𑌲𑍌𑌕𑌿𑌕𑌮𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌂 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌾𑌦𑍍𑌯𑌂 𑌪𑌾𑌰𑌲𑍌𑌕𑌿𑌕𑌂 - 𑌕𑍈𑌵𑌲𑍍𑌯𑌂 𑌭𑌗𑌵𑌨𑍍𑌤𑌂 𑌚 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍋𑌯𑌂 𑌸𑌾𑌧𑌯𑌿𑌷𑍍𑌯𑌤𑌿" (ఐహలౌకికమైశ్వర్యం స్వర్గాద్యం పారలౌకికం - కైవల్యం భగవంతం చ మన్త్రోయం సాధయిష్యతి) என்றுஞ்சொல்லுகிறபடியே சகலவேதஸங்க்ரஹமுமாய், அநந்தக்லேஶபாஜநமான ஸம்ஸாரார்ணவத்தினின்றும் கரையேற்றவற்றாய், ஐஹிகாமுஷ்மிக ஐஶ்வர்யகைவல்யாபுநராவ்ருத்தி லக்ஷணரூப பரமபுருஷார்த்தம் முதலான அகிலார்த்தப்ரதமுமாய், (௧௮௬) "𑌓𑌮𑌿𑌤𑍍𑌯𑌗𑍍𑌰𑍇 𑌵𑍍𑌯𑌾𑌹𑌰𑍇𑌤𑍍 𑌨𑌮 𑌇𑌤𑌿 𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌾𑌯𑍇𑌤𑍍𑌯𑍁𑌪𑌰𑌿𑌷𑍍𑌟𑌾𑌤𑍍 𑌓𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌕𑌾𑌕𑍍𑌷𑌰𑌂 𑌨𑌮 𑌇𑌤𑌿 𑌦𑍍𑌵𑍇 𑌅𑌕𑍍𑌷𑌰𑍇 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌾𑌯𑍇𑌤𑌿 𑌪𑌞𑍍𑌚𑌾𑌕𑍍𑌷𑌰𑌾𑌣𑌿" (ఓమిత్యగ్రే వ్యాహరేత్ నమ ఇతి పశ్చాత్ నారాయణాయేత్యుపరిష్టాత్ ఓమిత్యేకాక్షరం నమ ఇతి ద్వే అక్షరే నారాయణాయేతి పంచాక్షరాణి) என்கிறபடியே, "அவன்பெயரெட்டெழுத்துமென்று எட்டுத்திருவக்ஷரமாய், உபநிஷத்தில் அப்படியே பதத்ரயாத்மகமாய், அவற்றாலே ஸ்வரூபோபாயபுருஷார்த்த ப்ரகாஶகமுமாய், மற்றை வ்யாபகத்வயம்போலன்றிக்கே இதிலே நாரசப்தமுண்டாகையாலே சப்தபூர்த்தியுமுடைத்தாய், "பேராளன்பேரோதும் பெரியோர்" என்கையாலே சிஷ்டபரிக்ரஹயுக்தமாய், (௧௮௭) "𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌪𑌰𑌮𑍋 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍋 𑌗𑍁𑌹𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌗𑍁𑌹𑍍𑌯𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌂 - 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌂 𑌚 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌮𑍂𑌲𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌃 𑌸𑌨𑌾𑌤𑌨𑌃" (మన్త్రాణాం పరమో మన్త్రో గుహ్యానాం గుహ్యముత్తమం - పవిత్రంచ పవిత్రాణాం మూలమన్త్రస్సనాతనః) என்கிறபடியே உத்க்ருஷ்டதமமாகச்சொல்லப்படுகிற மூலமந்த்ரமான பெரியதிருமந்த்ரத்தை நரநாராயணனாய்த்தனக்குத்தானே உபதேசித்துக்கொண்ட இழவுதீரக்கலியனுக்கு, கிழிச்சீரையோடே தநத்தைக்கொடுப்பாரைப்போலே, "பெற்றதாயினுமாயினசெய்யுநலந்தருஞ்சொல்லை நான் கண்டுகொண்டேன்" என்று தம்வாயாரச்சொல்லும்படி உபதேசித்தருள; அநந்தரம், (௧௮௮) "𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾 𑌸𑌹 𑌹𑍃𑌷𑍀𑌕𑍇𑌶𑍋 𑌦𑍇𑌵𑍍𑌯𑌾 𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑌰𑍂𑌪𑌯𑌾" (లక్ష్మ్యా సహ హృషీకేశో దేవ్యా కారుణ్యరూపయా) என்கிறபடியே க்ருபைதானொரு வடிவுகொண்டாற்போலே காருண்ய[illegible]யான ஸ்ரீஸஹாயனைக்கொண்டு, "காய்சினப்பறவையூர்ந்து பொன்மலையின் மீமிசைக்கார்முகில்போல்" என்றும், (௧௮௯) "𑌸𑍁𑌪𑌰𑍍𑌣𑌪𑍃𑌷𑍍𑌠[illegible]

𑌬𑌭𑍌𑌶𑍍𑌯𑌾𑌮𑌃𑌪𑍀𑌤𑌾𑌮𑍍𑌬𑌰𑍋 𑌹𑌰𑌿𑌃 - 𑌕𑌾𑌞𑍍𑌚𑌨𑌸𑍍𑌯𑌗𑌿𑌰𑍇𑌶𑍍𑌶𑍃𑌙𑍍𑌗𑍇 𑌸𑌤𑌟𑌿𑌤𑍍𑌤𑍋𑌯𑌦𑍋𑌯𑌥𑌾 " ("సుపర్ణపృష్ఠే ప్రబభౌ శ్యామః పీతాంబరో హరిః - కాంచనస్యగిరే శ్శృంగే సతటిత్తోయదోయథా) என்றுஞ்சொல்லுகிறபடியே ஸுவர்ணரூபியான பெரியதிருவடியை மேற்கொண்டு வந்து நீலமேகநிபமான அவ்வடிவை, "கநககிரிமீதிற்கார்முகில் படிந்துலாவுமாபோலே விளங்குகிற திவ்யமங்கள விக்ரஹசேவையை இவ்வாழ்வாருக்கு "மயர்வறமதிநலமருளி" ஸாக்ஷாத்கரிப்பித்தருள, இவ்வாழ்வாரும் தமக்கு நிர்ஹேதுகலப்தமான திருமந்த்ரத்தையும், அதுக்குள்ளீடான ஸ்ரீமந்நாராயணனுடைய ஸ்வரூபரூபகுணவிபூதி சேஷ்டிதங்களையும், "திருமாமகளாலருள்மாரி" என்னும்படி பெரியபிராட்டியாரருளாலே இவற்றையெல்லாம் இவர், "தக்கஞானக்கண்களாலே கண்டநுபவித்து, அநுபவஜநித ப்ரீத்யதிசயத்தாலே, பெரியதிருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறியதிருமடல், பெரியதிருமடல் என்கிற இவ்வாறு ப்ரபந்தங்களையும் ஸ்ரீ சடகோபவாங்மயமான த்ராமிடவேதசதுஷ்டயத்துக்கு ஷடங்கமாக, ஆசு, மதுரம், சித்ரம், விஸ்த்தாரம் என்கிற சதுர்வித கவிகளாலே யருளிச்செய்து, லோகத்துக்கு நாலுகவிப்பெருமாள் என்று ப்ரஸித்தமாம்படி உபகரித்தருளியும், முன்பு திருமொழி யருளிச்செய்துகொண்டு திவ்யதேசங்கள்தோறும் சேவித்துக்கொண் டெழுந்தருளாநிற்கச்செய்தே, சோழமண்டலத்திலே எழுந்தருளின அளவிலே, நாலுகவிப்பெருமாள் வந்தார், நங்கலியர்வந்தார், ஆலிநாடர்வந்தார், அருள்மாரிவந்தார், கொங்குமலர்க்குழலியர்கேள்வர்வந்தார், மங்கைவேந்தர்வந்தார், பரகாலர்வந்தார், பரவாதிமத்தகஜகண்டீரவர்வந்தார், என்று விருதூதிச்செல்லாநிற்க; அங்கே சம்பந்தன் சிஷ்யர்கள்வந்து, ஆழ்வாரை; எங்கள் சம்பந்தப்பெருமாள் இருக்கிறவிடத்திலே நீர் நாலுகவிப்பெருமாளென்று விருதூதிச்செல்லத் தகாதென்று தடுக்க, ஆழ்வாரும்; உங்கள் சம்பந்தப்பெருமாளுடனே தர்க்கிக்கக் கடவோமென்றருளிச்செய்ய; ஆகில் நம்மூரோ வாருமென்றழைத்துக்கொண்டுபோய் இவ்விசேஷத்தைச் சம்பந்தனுக்கு அறிவிக்க; அவனும் இவருடனேதர்க்கிக்கக்கடவோமென்றுவர; ஊரடையச்சைவராய், ஊரில் ஒருதிருமுற்றமின்றியே, ஸ்ரீவைஷ்ணவர்களுமின்றியே, வீரபாஷண்டபூயிஷ்டமாயிருக்கக்கண்டு, இவ்வாழ்வார்க்கு பகவத்விக்ரஹமின்றியே வாக்குக்கிளம்பாதிருக்க, இதுக்கு என்செய்யக்கடவோமென்று சிந்தித்திருக்கச்செய்தே, வைஷ்ணவியாயிருப்பாளொரு அம்மையாரைக்கண்டு இப்படியிருக்கிறது ஆகையால் உன் திருவாராதநமான எம்பெருமானை எனக்கு ஒருக்ஷணம் தரவேணுமெ

ன்றுகேட்டுக்கொள்ள, அவனும் ஆழ்வாருக்கு, தனக்காராதநமான வெண்ணையுண்டதாடாளனை எழுந்தருள்வித்துக்கொடுக்க; ஆழ்வாரும்; அவனையுங்கொண்டு சம்பந்தனிருந்தவிடத் தேறச்சென்றிருக்க, அவனும்; இவரைக்குறித்து, ஒருகவிசொல்ல, இவரும்; அத்தைக்கேட்டு அந்தக்கவியை தூஷிக்க; ஆகில் நீர் ஒருகவி சொல்லுமென்ன; ஆழ்வாரும் "ஒருகுறளாயிருநிலம்" என்கிற திருமொழியும், "பொருவில்வலம்புரியரக்கன்முடிகள்பத்தும்" என்கிறதிருமொழியும் அருளிச்செய்து, தம்பெருமையெல்லாந்தோற்ற, ஆலிநாடனருள்மாரியரட்டமுக்கியடையார்சீயங்கொங்குமலர்க்குழலியர்வேள்மங்கைவேந்தன்கொற்றவேற்பரகாலன்கலியன் சொன்னமுகத்தமிழ்மாலையென்ன, அவனும் இத்தைக்கேட்டு ப்ரத்யுத்தரம்சொல்லக்கவிசொல்ல க்ஷமமின்றியே, இப்படியுமொருவருண்டோவென்று ஆஶ்சர்யப்பட்டு, நாலுகவிப்பெருமாள் என்னும் விருது உமக்குச்செல்லும், விருதூதிக்கொண்டு செல்லீரென்று கும்பிட்டுப்போனான்.

அநந்தரம், (ககூ௰) "விமாநம் ப்ரணவாகாரம் வேதஶ்ருங்கம் மஹாத்புதம் - ஸ்ரீரங்கஶாயீ பகவாந் ப்ரணவார்த்தப்ரகாஶக:" (విమానం ప్రణవాకారం వేదశృంగం మహాద్భుతం - శ్రీరంగశాయీ భగవాన్ ప్రణవార్థ ప్రకాశకః) என்கிறபடியே, "மன்னுடையவிபீடணற்காய் மதிளிலங்கைத் திசைநோக்கி மலர்க்கண்வைத்த வென்னுடையதிருவரங்கர்க்கு விமாநம் பிரணவாகாரம்" என்று ப்ரணவாகாரமத்யஸ்தரான பெரியபெருமாளுக்கும், திருவரங்கச் செல்வனாரான அழகியமணவாளர்க்கும் விமாநமண்டப கோபுர ப்ராஸாத ப்ராகாராதிரூபமான கைங்கர்யங்கள் செய்தருளவேணுமென்று திருவுள்ளமாய், அதுக்குத் தம்முடைய பரிஜநங்களையழைத்து, நம்பெருமாளுக்குத் திருமதிள் முதலான கைங்கர்யம்பண்ணுவிக்கத் தநார்ஜ்ஜநம்பண்ணும் விரகென்னென்றுகேட்டருள, அவர்களும் நாகபட்டணத்திலே புலையறமாயிருப்பதொரு புத்தப்ரதிமை ஹிரண்மயஸ்வரூபமா யிருக்கும். அத்தைக்கொண்டுவந்து ஸிந்நபிந்நமாக்கி, "அறுப்பதேகருமங்கண்டாய்" என்று விண்ணப்பஞ்செய்ய, ஆழ்வாரும் அவர்கள் சொன்னபடியே நாகபட்டணத்திலேபோய், "ஈயத்தாலாகாதோ இரும்பினாலாகாதோ பூயத்தால்மிக்கதொரு பூதத்தாலாகாதோ தேயத்தேபித்தளைநற்செம்புகளாலாகாதோ மாயப்பொன்வேணுமோமதித்துன்னைப்பண்ணுகைக்கே" என்று தத்பிம்பம் ஊளையிடும்படி யபஹரித்துக்கொண்டுவந்து பங்கப்படுத்தி, திருமதிள்கைங்கர்யத்துக்கு அர்ஹமாம்படி சுட்டுரைத்து நன்பொன்னாக்கிக்கொண்டு கலப்படிக்கொக்க வொருதுலை

* நம்மாழ்வார் *

டுத்தி, தத்ரவ்யத்தையிட்டுத் திருமதிள்முதலாகச் சிகரபர்யந்தமாகப்பண்ணவேணுமென்று உபக்ரமித்து, திருமதிள் கட்டுவிக்கிற செவ்வியிலே, ஸ்ரீதொண்டரடிப்பொடியாழ்வார் பெரியபெருமாளுக்குத் திருமாலைகட்டுவிக்கிற ஸ்தலம் நேர்பட, அவ்விடத்தைத்தப்பி யொதுக்கத் திருமதிள்கட்டுவித்தருளப் பார்த்தருளி, திருவுள்ள முவந்தருளி, தமக்குத் திருமாலைகொய்கிற கையாய் வர்த்திக்கிறதுக்கு உபகரணமான ஆயுதத்துக்கு அருள்மாரியென்று இவருடைய திருநாமத்தையும் சார்த்தி, ப்ரீதராயருளினார். திருமங்கையாழ்வாரும் திருமதிள் திருமண்டபம் மற்றுமுண்டான கைங்கர்யங்களும்முதலாகச் சிகரபர்யந்தமாகப் பண்ணுவித்து க்ருதார்த்தரா யருளினார்.

ஸ்ரீதிருமங்கையாழ்வார்திருவடிகளேசரணம்.

ஜீயர்திருவடிகளேசரணம்.

(௰௧)

ஸ்ரீ நம்மாழ்வார் ப்ரபாவம்.

(௧௧௧) "ததஃகலியுகஸ்யாதௌவைஶாக்யாம்விஶ்வபாவநஃ-விஷ்ணுபக்திப்ரதிஷ்டார்தம்ஸேநேஶோவதரிஷ்யதி. ஸேநேஶகருணாலப்ததிவ்யமந்த்ரத்வயம்முதா - த்ராவிடாம்நாயவக்தாரம்ஶடகோபகுரும்பஜே. வகுளாபரணம்வந்தேஜகதாபரணம்முநிம் - யஶ்ஶ்ருதேருத்தரம்பாகம்சக்ரேத்ரவிடபாஷயா. ஶ்ரீவிஜ்ஞாநதிநோத்தரேஹரிகலௌவர்ஷேப்ரமாத்யாஸ்ததே - ஶாகேஶாலிவநாத்ரிஹாம்ஶவிதிதே ஶதேக்ஷவிரா வ்யாஹிதே - வைஶாகேஸிதபக்ஷஶீதகிரணேதச்ஶ்ரீவிஶாகோடுபே-க்ஷிதௌப்ராதுர்பபௌஶடகோபவிஷ்ணுஶரணோயோகீந்த்ரசூடாமணிஃ. ஶடாரிர்ஜாதம்ஶ்ரீஶடகோபமத்யம் - ஶ்ரீஶக்ரம்மயம்ஸேநாம்ஶம் ஶ்ரீவைஷ்ணவலக்ஷணம்." (తతఃకలియుగస్యాదౌవైశాఖ్యాంవిశ్వభావనః - విష్ణుభక్తిప్రతిష్ఠార్థం సేనేశోవతరిష్యతి. సేనేశకరుణాలబ్ధ దివ్యమంత్రద్వయంముదా - ద్రావిడామ్నాయవక్తారంశఠకోపగురుంభజే. వకుళాభరణంవందే జగదాభరణంమునిం - యశ్శ్రుతేరుత్తరంభాగంచక్రేద్రవిడభాషయా. శ్రీవిజ్ఞానదినోత్తరేహరికలౌవర్షేప్రమాథ్యాశ్చతే - యూనే

మాధవనామ్ని భాగ్యవటనే బుధే విశాఖాభిధే - లగ్నే శుద్ధచతుర్దశితిథియుతే శ్రీమత్కుళీరేపిచ-
క్షేత్రేం ప్రాదురభూత్ పరాంకుశకవిర్భాగ్యోదయోస్మాదృశాం. వకుళాలంకృతం శ్రీమచ్ఛఠకో
పపదద్వయం - అస్మత్కులధనంభోగ్య మస్తుమే మూర్ధ్ని భూషణం) ஆழ்வார்க ளெல்லா
ரையும் அவயவபூதராகவுடைய நம்மாழ்வார் திருவவதாரக்ரமம் எங்ஙனே
யென்னில் ;

(கக௨) "அஸ்தி பாண்ட்யேஷு தேஶேஷு காசிச்ச்ரீநகரீ ஶுபா-
தாம்ரபர்ணீ நதீதீரே ஸாக்ஷாத்த்ருஷ்டா ஹ்யதோக்ஷஜ:" (అస్తిపాండ్యేషు
దేశేషు కాచిచ్ఛ్రీనగరీశుభా - తామ్రపర్ణీనదీతీరే సాక్షాద్దృష్టా హ్యధోక్షజః) என்று சொ
ல்லுகிறபடியே "வண்டலம்புஞ்சோலை வழுதிவளநாட்டிலே" (கக௩)
"கங்கா ச யமுநா சைவ கோதா ச ஸரஸ்வதீ - நர்மதா ஸிந்து காவே
ரீ தாம்ரபர்ணீ ஸரித்வரா" (గంగా చ యమునా చైవ గోదా చ సరస్వతీ - నర్మదా సిం
ధు కావేరీ తామ్రపర్ణీ సరిద్వరా) என்று சொல்லுகிறபடியே கங்காதிஸகலநதிகளி
லும் உத்க்ருஷ்டதமமாகச் சொல்லப்பட்டிருப்பதான தாம்ரபர்ணியென்கிற
பொருநையாற்றின்கரையிலே, ஸ்ரீநகரியென்று ப்ரக்யாதமான "நல்லார்ந
வில்குருகூர்" நகர்க்கு நிர்வாஹகரான இவ்வாழ்வார்தாமே, "எந்தைதந்
தைதந்தைதந்தைக்கும்மூந்தை" என்றருளிச்செய்கையாலே, "ஏ
ழாட்காலும்" புறந்தொழாமே, "குடிகுடியாட்செய்யும்", "தொண்டக்கு
லத்திலேபிறந்து" "ஏழாட்காலும் பழிப்பிலராயிருப்பர் ; எங்ஙனே யென்
னில் ;

திருவழுதிவளநாடர் என்றொருவர் ; அவர்பிள்ளை, அறந்தாங்கியா
ர்; அவர்பிள்ளை சக்ரபாணியார்; அவர்பிள்ளை அச்யுதர்; அவர்பிள்ளை செந்
தாமரைக்கண்ணர்; அவர்பிள்ளை செங்கண்ணர்; அவர்பிள்ளை போர்க்காரியா
ர்; அவர்பிள்ளை காரியார்; அவர்பிள்ளை மாறன் ; இவர்கள் தாம் இக்ரமத்தி
லே சந்தானபரம்பரையாகக் குடியடியராய்ப் பழவடிமையாய் "வழிவழிவந்
தாட்செய்யும் தொண்டரான இத்திருவம்சத்திலே போர்க்காரியார் என்கிற
வர், உலகெல்லாம் வாழும்படி தம்முடைய புத்ரரான காரியாருக்கு விவா
ஹம்பண்ணுவிப்பதாகத்திருவண்பரிசாரத்திலே காரியாரைக்கொண்டுபோய்,
தமக்கு சமான சம்பந்தயோக்யராய் வைஷ்ணவசந்தாநிகரான திருவாழ்மார்
பர்திருமாளிகையிலே யெழுந்தருளி, அவரைப்பார்த்து, உம்முடைய புத்ரி
யான உடையநங்கையாரை நம்முடைய புத்ரரான காரியாருக்கு விவாஹம்
பண்ணித் தரவேணுமென்று தமரும் பிறரும் அறிய ப்ரசங்கித்துக்கேட்க ;
திருவாழ்மார்பரும் மிகவும் சந்துஷ்டராய்க்கொண்டு சம்மதித்து, கல்யா

ணங்கோடித்து, "மத்தளங்கொட்ட வரிசங்கம் நின்றூத முத்துடைத்தாம நிரைதாழ்ந்த பந்தற்கீழ்" என்கிறபடியே உபலாலித்து, பெரும்பெருத்த கல்யாணங்கள் செய்து உதகபூர்வகமாக உடையநங்கையாரைக் காரியாருக்கு ஸமர்ப்பிக்க; காரியாரும், "வெள்வளைக்கைபற்ற" என்கிறபடியே பாணிக்ரஹணம்பண்ணிக்கொண்டு, மற்றுமுண்டான க்ரியாவிசேஷங்களையும்செய்து, திருவண் பரிசாரத்தில் திருவாழ்மார்பரான எம்பெருமானையும் திருவடி தொழுது மீண்டு, பெரியவண்குருகூரிலே யெழுந்தருளாநிற்க; (௧௯௬) "பதாகாத்⁴வஜிநீம் ரம்யாம் தூர்யோத்³கு⁴ஷ்டநிநாதி³நீம் - ஸிக்தராஜபதா²ம் ரம்யாம் ப்ரகீர்ணகுஸுமோத்கராம் - பௌரை: ப்ரத்யுத்³க³தோ தூ³ரம் ஜந்யைஶ்ச பூர்வவாஸிபி⁴:" (పతాకాధ్వజనీంరమ్యాం తూర్యోద్ఘుష్టనినాదినీం - సిక్తరాజపథాంరమ్యాం ప్రకీర్ణకుసుమోత్కరాం - పౌరైః ప్రత్యుద్గతోదూరంజన్యైశ్చపూర్వవాసిభిః) என்று சொல்லுகிறபடியே, பெருமாள் ஸ்ரீமிதிலையிலேயெழுந்தருளி, "திக்குநிறைபுகழான்" ஆன ஸ்ரீஜநகராஜன் திருமகளைத் திருமணம் புணர்ந்து மீண்டெழுந்தருளும்போது, திருவயோத்யையில் ப்ராஹ்மணர்முதலான பௌரஜநங்கள் பட்டணத்தை யலங்கரித்து ஒப்பித்து மங்களவாத்யகோஷத்துடனே வந்து எதிர்கொண்டாற்போலே, "செம்பொன்மாடத்திருக்குருகூரிலுள்ளாரும்" "பூரணப்பொற்குடம்வைத்துப் புறமெங்கும் தோரணம்நாட்டித் துமுலமெழப் பறைகொட்டி உபலாலித்து எதிர்கொள்ள; "குன்றம்போல்மணிமாடம் நீடுதிருக்குருகூரதனுள்" புகுந்து, இல்லறம் என்று ஶ்லாக்யமாகச் சொல்லப்பட்டிருப்பதான க்ருஹஸ்தாஶ்ரமத்திலே நியதரான காரியார் சிலநாளைக்குப் பின்பு தம்முடைய பத்நியாரான உடையநங்கையாரை; திருக்குருகூரில் நின்றும், பிறந்தகமான திருவண்பரிசாரத்துக்கு அழைத்துக்கொண்டுபோய்மீண்டு வாராநிற்கச்செய்தே, "தென்கொள்சோலைத் திருக்குறுங்குடியிலேசென்று, "நம்பியைத் தென்குறுங்குடிநின்ற வச்செம்பொனே திகழும் திருமூர்த்தியையும் சேவித்து, அடியோங்களுக்கு ஒரு சந்தாநம் தந்தருளவேணுமென்று ப்ரார்த்திக்க; நம்பியும் நாமேவந்து பிறக்கிறோமென்று அர்ச்சகமுகேந வரப்ரதாநம்பண்ணியருள; அவ்வசநம் கேட்டருளி ப்ரீதராய் நிற்கச்செய்தே, நம்பியும், பூதந்தண்மாலைத் தண்டுழாயையும் க்ருபையுடனே ப்ரஸாதித்தருள; "தன்மன்னுநீள் கழல்மேல் தண்டுழாய்", "நமக்கன்றிநல்கான் என்று கொண்டு, துணையோடும் பிரியாதே ஸ்வீகரித்து, மிகவும் உவப்போடே தங்களுக்கு ஆவாஸஸ்தலமான "நல்லார்பலர்வாழ்குருகூ" ரிலே வந்து பு

குந்து நித்யவாசம்பண்ணிக்கொண்டு போகிற அளவிலே, உடையநங்கையார் கர்ப்பவதியாக; "திருமாலாலருளப்பட்ட சடகோபன் என்னலாம்படி எம்பெருமான் இவரிடத்திலே பாரெல்லாமுய்யும்படி சேனைமுதலியாரை நம்மாழ்வாராகக் கலியுகாதியிலே, கலிதிநம் நாலாயிரத்து முந்நூற்றிரண்டுநாள் சென்ற வர்த்தமாந பஹுதாந்யவருஷத்தில், வசந்தருதுவில், வைகாசிமாசம் சுக்லபக்ஷம் பௌர்ணமி கூடிய திருவைசாகநக்ஷத்ரத்தில், காவ்யவாஸர கர்க்கடக லக்நத்திலே, திவ்யயோக கரணங்களிலே, ஆதித்யராமதிவாகராச்யுத பாநுக்களுதயத்திலே, நீங்காத உள்ளிருள்நீங்கி, சோஷியாத பிறவிக்கடல் சோஷித்து, விகஸியாத போதிற்கமல மலரும்படி வகுளபூஷணபாஸ்கரோதயமுண்டாய்த்து உடையநங்கையாராகிற பூர்வசந்த்யையிலே.

(௧௱௫) "ராதேயக்ஷிதிநந்தநேஹநி வைசாகே காவ்யவாஸரே லக்நே கர்கடகே ஸூத தநயம் நாதநாயிகா" (రాధేకవిశేషే ... వాసరే - లగ్నే కర్కటకే సూత తనయం నాథనాయికా) என்று திவ்யசூரிசரிதையிலே சொல்லிற்றிறே. திருவநந்தாழ்வானும் வர்ஷாதப நிவாரணார்த்தமாய் இவர்க்குமுன்னே திருப்புளியாழ்வாராய் வந்தவதரித்தருளினார்.

(௰௨)

ஸ்ரீமதுரகவியாழ்வார்ப்ரபாவம்.

(௧௱௬) "பாண்ட்யக்ஷோணியாம் ப்ரதிதாவதாரம் சைத்ரஸ்ய சித்ராஸுஜநிஷ்டமேவம் - ஶடாரிஸூரேரபி ஸம்ஶ்ரிதாநாம் மதுரகவீந்த்ரம் ஶரணம் ப்ரபத்யே. யாதேஷம்வத்ஸரேஷு ஷட்ஸுஷஷ்டே ஸாகேஷ்வஷ்டாபஞ்சாஶதே சைத்ரே ஶுக்லஸ்ய பக்ஷஸ்ய சதுர்தஶ்யாம் ஶுக்ரே - சித்ராஜாதமுநீந்த்ரம் ஶ்ரீமதுரகவிநம் ப்ரபத்யே - ஶடாரிகாஸ்த்யாதிபக்தம் ... ஶ்ரீமதுரகவீந்த்ரம் ஶரணம் ப்ரபத்யே - ஶடாரிபாதாப்ஜ ... (పాణ్డ్యక్షోణ్యాం ప్రథితావతారం చైత్రస్య చిత్రోద్భవమాద్యసూరిం - శ్రీమన్ ... జంమధ



✳ மதுரகவியாழ்வார் ✳

రంకపీంద్రం శఠారిభక్తం శరణం ప్రపద్యే. యాతే సంవత్సరే ఘోషహసదగదజనే ద్వాపరస్యైశ్వ రాబ్దే - చైత్రే మాసే ద్విసప్తోత్తరదివసవరే శుభ్రపక్షే చరూచ్యే-చిత్రాఖ్యే భాగేవీర్యే గుణవతి చదినే ప్రాదురాసీచ్ఛఠారే - రన్తేవాసిద్విజేన్ద్రో మధురకవిరసౌమాద్యగుజ్జీవనాయ. హస్తస్థతాళద్వితయం ప్రపద్యే - శఠారివాగ్బ్ధిసముద్ధారకీరం-మాధుర్యసంశ్లిష్టకవిత్వయుక్తం - మహాత్వసంభావితబుద్ధితత్త్వం)

மதுரகவியாழ்வார்; செல்வம் மல்கியவண்கிடந்த திருக்கோளூரிலே (கஅஎ) "𑌚𑍈𑌤𑍍𑌰𑍇 𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑌯𑌂 𑌮𑌾𑌸𑌃 𑌪𑍁𑌣𑍍𑌯𑌃 𑌪𑍁𑌷𑍍𑌪𑌿𑌤𑌕𑌾𑌨𑌨𑌃" (చైత్రే శ్రీమానయమ్మాసః పుణ్యః పుష్పితకాననః) என்று ஸ்ரீமத்தாகச் சொல்லப்படுகிற சித்திரைமாசத்தில், சித்ராநக்ஷத்ரத்திலே, ஸ்ரீகுமுத கணேஶாம்ஶரான ஸ்ரீமதுரகவிகள் ஆதித்யோதயத்துக்கு அருணோதயம் முற்படுமாபோலே, வகுளபூஷண பாஸ்கரோதயத்துக்கு அருணோதயம்போலே முன்னே அவதரித்தருளினார். (கஅஅ) "𑌈𑌶𑍍𑌵𑌰𑍇 𑌕𑍁𑌮𑍁𑌦𑍋 𑌨𑌾𑌮𑍍𑌨𑌾 𑌕𑌵𑌿𑌰𑍍𑌮𑌧𑍁𑌰𑌸𑌂𑌜𑍍𑌞𑌕𑌃 - 𑌚𑍈𑌤𑍍𑌰𑌮𑌾𑌸𑍇 𑌶𑍁𑌭𑍇 𑌚𑌿𑌤𑍍𑌰𑌾𑌤𑌾𑌰𑌕𑌾𑌯𑌾𑌮𑌜𑌾𑌯𑌤" (ఈశ్వరే కుముదో నామ్నా కవిర్మధురసంజ్ఞకః - చైత్రమాసే శుభే చిత్రాతారకాయామజాయత) என்றிதுவும் திவ்யஸூரி சரிதையிலே சொல்லப்பட்டதிறே.

(கஅக) "𑌸𑌾𑌮𑌶𑌾𑌖𑌾𑌧𑍍𑌯𑌯𑌨𑌪𑍂𑌰𑍍𑌵𑌶𑌿𑌖𑌾𑌵𑌤𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌰𑍍𑌣𑍇" (సామశాఖాధ్యయనపూర్వశిఖావత్ బ్రహ్మవర్ణే) அவதரிக்கையாலே இவருக்குத்தத் தத்காலங்களிலே சௌளோபநயநாதிகளையும் செய்து, (உ00) "𑌅𑌙𑍍𑌗𑌾𑌨𑌿 𑌵𑍇𑌦𑌾𑌶𑍍𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑍋 𑌮𑍀𑌮𑌾𑌂𑌸𑌾 𑌨𑍍𑌯𑌾𑌯𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑌃 - 𑌪𑍁𑌰𑌾𑌣𑌂 𑌧𑌰𑍍𑌮𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌞𑍍𑌚 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌹𑍍𑌯𑍇𑌤𑌾𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌶" (అంగానివేదాశ్చత్వారోమీమాంసాన్యాయవిస్తరః-పురాణంధర్మశాస్త్రఞ్చవిద్యాహ్యేతాశ్చతుర్దశ) என்று சொல்லப்பட்ட சதுர்த்தசவித்யைகளையும் அதிகரிப்பித்தார்கள். அதீத வேதவேதாங்கருமாய் மஹாவிரக்தருமான இவர் (உ0க) "𑌅𑌯𑍋𑌧𑍍𑌯𑌾 𑌮𑌥𑍁𑌰𑌾 𑌮𑌾𑌯𑌾 𑌕𑌾𑌶𑍀 𑌕𑌾𑌞𑍍𑌚𑍀 𑌹𑍍𑌯𑌵𑌨𑍍𑌤𑌿𑌕𑌾 - 𑌪𑍁𑌰𑍀 𑌦𑍍𑌵𑌾𑌰𑌵𑌤𑍀 𑌚𑍈𑌵 𑌸𑌪𑍍𑌤𑍈𑌤𑍇 𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌦𑌾𑌯𑌕𑌾𑌃" (అయోధ్యామధురామాయాకాశీకాంచీహ్యవన్తికా - పురీద్వారవతీచైవసప్తైతేముక్తిదాయకాః) என்று முக்திப்ரதமாகச் சொல்லப்பட்ட திருவயோத்யை முதலான திவ்யதேசங்களைச் சேவிக்க வெழுந்தருளினார். இப்படி இவர்கள் முன்னாக அவதரித்தருளின ஆழ்வார், "முத்தனையமுறுவல்செய்துமூக்குறிஞ்சிமுலையுணாதேமௌனத்தோடே எழுந்தருளியிருக்கச்செய்தேயும் வாட்டமின்றிக்கே பரிபூர்ணராயிருக்கிற இந்த ஆஶ்சர்யத்தை; காரியாரும் இவரைப்பெற்ற வயிறுடையாளான உடையநங்கையாரும் கண்டு, "உன்மனத்தாலென்னினைந்திருந்

தாய்” என்கிறபடியே எம்பெருமான்பக்கலிலே ந்யஸ்த்தபரராய்க் கொண்டிருந்து, இவ்வாழ்வார் திருவவதரித்தருளின “பத்துநாளுங்கடந்த விரண்டாநாள்” (உ0உ) “ஶங்கதீர்த்தஸமீபே து தாம்ரபர்ண்யா தக்ஷிணே தடே - ஸுஸ்திரம் புண்டரீகாக்ஷம் ஶங்கசக்ரதரம் ஹரிம் - வரதாபயஹஸ்தஞ்ச ஶ்ரீபூமிஸஹிதம் ததா - நவநீரதநீலாபம் பீதவாஸஸமச்யுதம்” (శంఖతీర్థసమీపేతు తామ్రపర్ణ్యా దక్షిణే తటే - సుస్థిరం పుండరీకాక్షం శంఖచక్రధరం హరిం - వరదాభయహస్తంచ శ్రీభూమిసహితం తథా - నవనీరదనీలాభం పీతవాససమచ్యుతం) என்றுசொல்லுகிறபடியே திருச்சங்கணித்துறையை யுடைத்தான பொருநலாற்றின் தென்கரையிலே, திவ்யமங்கள விக்ரஹயுக்தனாய், சங்கசக்ரதரனாய், புண்டரீகாக்ஷனாய், வரதாபயஹஸ்தனாய், ஸ்ரீபூமிநீளாஸஹிதனாய்க்கொண்டு எழுந்தருளியிருக்கிற பொலிந்துநின்றபிரான்திருமுன்னேயெடுத்துக்கொண்டுபோய், அப்படிப்பட்டவிக்ரஹத்தைஸேவிக்கப்பண்ணி, இவருக்குமாறனென்று திருநாமம்சார்த்தி, திருப்புளியாழ்வாரடியிலே, “ஆணிப்பொன்னாற்செய்த வண்ணச்சிறுதொட்டிலிலே வளர்த்தி, இவரைபுத்ரப்ரதிபத்திபண்ணாமல், எங்கள்குடிக்கரசேயென்று விசேஷப்ரதிபத்திபண்ணி ஸேவித்துக்கொண்டுநிற்க; இவ்வாழ்வார் தாம், (உ0௩). “ஜ்ஞாநபூர்ணேந த்வந்திந்த்ரிணீமூலஸம்ஶ்ரய: - பால ஏவ ஷோடஶாப்தாத்து மூகபாவம் கமிஷ்யதி” (జ్ఞానఘనపూర్ణేన త్వం తింత్రిణీమూలసంశ్రయః - బాలఏవ షోడశాబ్దాత్తు మూకభావంగమిష్యతి) என்று சொல்லுகிறபடியே, திருப்புளியாழ்வாரடியிலே, பதினாறு திருநக்ஷத்ரமளவாக, “அவன்முகத்தன்றிவிழியேன்” என்று முகுளிதநயநருமாய், “ஆருக்குச் சொல்லுகேன்” என்று மௌநியுமாய் எழுந்தருளாநிற்க; இத்தை உடையநங்கையாரும் காரியாரும் கண்டு, இவர்; தம்மைப்போல் அதிகாரிகளைக்காணாமையால் லௌகிகரோடு வார்த்தை சொல்லாதிருக்கிறாரொன்றறியாதே, திருக்குறுங்குடி நம்பிக்கு நாம் செய்ததென்னென்று சிந்தைகலங்கியிருக்க, இப்ரபாவங்களை; திருவயோத்யை ஸேவிக்க எழுந்தருளின ஸ்ரீமதுரகவிகளும் கேட்டருளியிருக்கச்செய்தே, ராத்ரி ஜலஸங்காநிவ்ருத்யர்த்தமாகப் புறப்பட்டவர், தென்றிசையிலே, ஒரு அப்ராக்ருத திவ்ய தேஜஸ்ஸைக்கண்டு, இது என் என்று திகைத்து நின்று, ஏதேனும் க்ராம நகரங்கள் வேகிறதோ? காட்டுத்தீயோ? என்று தம்மிலேவிசாரித்து, அற்றைக்குக் கண்வளர்ந்தருளினார். பின்னையும் இரண்டு மூன்றுநாள் இப்படியேகண்டு, இது ப்ராக்ருததேஜஸ்ஸன்று, அப்ராக்ருத திவ்யதேஜஸ்ஸாயி

ருந்தது, இக்காரணத்தை நாம் பரீக்ஷிப்போமென்று பகலெல்லாம் கண்வளர்ந்தருளி, ராத்ரி அத்தேஜஸ்ஸே குறியாக அதித்வரையுடனே மீண்டெழுந்தருளி, புண்யக்ஷேத்ரங்கள்தோறும் சோதித்துக்கொண்டுவந்து, (உ0ச) “ஶ்ரீரங்க³மங்க³லக்ஷேத்ரம்” (శ్రీరఙ్గమఙ్గళక్షేత్రం) என்கிற திருவரங்கப் பெருநகரிலே சோதிக்க, அதுக்குமப்பாலே தென்திசையிலேயாயிருக்க; பின்னையும் பூர்வம்போலே த்வரித்தெழுந்தருளி, மாடமாளிகைசூழ்ந் தழகாய திருக்குருகூரிலே சென்று, அப்பால் பார்த்துக் காணாமையாலே இது இங்கேயாயிருக்குமென்று சோதித்து வந்து, திருப்புளியாழ்வாரடியிலே, (உ0௫) “பஞ்சஸப்ததிவர்ஷஸ்த²ம் ப்ரபத்³யமானோத்³விஷ்டசைதன்யம் - பரதத்த்வபோ³த⁴முத்³ரம் பரமாசார்யம் ப்ராங்முக²ம் வந்தே³” (పఞ్చసప్తతివర్షస్థం ప్రపద్యమానోద్విష్టచైతన్యం - పరతత్త్వబోధముద్రం పరమాచార్యం ప్రాఙ్ముఖం వన్దే) என்கிறபடியே, ஸஞ்ஜ்ஞாநகநபூர்ணராய், உறங்காப்புளி நிழல்தன்னிலே முகுளிதநயநராய், ஷோடஶவார்ஷிகராய், ஷோடஶகலாபூர்ணனான சந்த்ரனைப்போலே பத்மாஸநோபவிஷ்டராய், பரதத்வபோதமுத்ராயுக்தராய், பரமாசார்யரான ஶ்ரீபராங்குசனைப்பார்த்து, இவர்க்குச் சைதந்யமுண்டோ? செவிகேட்குமோ என்று பரீக்ஷிக்கைக்காக, ஒரு குண்டுக்கல்லை அவர் முன்னே திடுமென்றெடுத்துப்போட, இவரும் அதுகேட்டு, திடுக்கென்று திருக்கண்களை மலர விழித்துப்பார்த்தருள; ஶ்ரீமதுரகவிகளும் இவர்க்கு வாக்குண்டோ? இல்லையோவென்று அறியக்கடவோமென்று அவரைக்குறித்து; “செத்தத்தின்வயிற்றிலே சிறியதுபிறந்தால் எத்தைத்தின் றெங்கேகிடக்கும்” என்ன; “அத்தைத்தின்றங்கேகிடக்கும்” என்றாழ்வாரருளிச்செய்ய; ஶ்ரீமதுரகவிகளும் கேட்டருளி, இவர் ஸர்வஜ்ஞராயிருந்தார், இம்மஹாநுபாவரை நாம் அநுவர்த்தித்து உஜ்ஜீவிக்கவேணுமென்று நினைத்து, மிகவும் ஹ்ருஷ்டராய், ஆழ்வார் திருவடிகளிலே ஸாஷ்டாங்கப்ரணாமமாகத் தாளுந் தடக்கையுங்கூப்பி விழுந்து சேவித்து, “மேவினேனவன்பொன்னடிமெய்ம்மையே” என்று ஆஶ்ரயித்து, க்ருதார்த்தராய், (உ0௬) “கு³ருபாதா³ம்பு³ஜம் த்⁴யாயேத் கு³ரோர்நாம ஸதா³ ஜபேத்” (గురుపాదామ్బుజం ధ్యాయేత్ గురోర్నామ సదా జపేత్) என்கிறபடியே த்ரிவிதகரணங்களாலும், “தத்பாதாம்புஜத்யாநம், தந்நாமகீர்த்தநம், தத்கிங்கரவ்ருத்திகளாக ஆழ்வாரை ஸதாநுபவம்பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருக்கிற அளவிலே, (உ0௭) “ஆதி³தே³வோ ஜக³ந்நாதோ² வாஸுதே³வோ ஜக³த்பதி꞉ - சதுர்பு⁴ஜ꞉ ... ஸ்தி²த꞉” (ఆదిదేవో జగన్నాథో వాసుదేవో జగత్పతిః - చతుర్భుజశ్శ్వేతమణ్ణా

శ్రీపరమాత్మా ఇష్టః) என்று சொல்லுகிறபடியே சர்வகாரணபூதனுமாய், சர்வஸ்வாமியுமாய், சர்வநியந்தாவுமாய், நீலமேனியும் நான்குதோளும் உடையனாய், ஸ்ரீவைகுண்டத்திலே எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமந்நாராயணனானவன் ஆழ்வார்க்கு எதிர்விழி கொடுக்கவேணுமென்று திருவுள்ளமான அளவிலே, பெரியதிருவடியும் தம்முடைய பக்ஷபாதம் தோன்ற முன்னேவந்துநிற்க; (உ௦அ) " அயாமத்ந்மா-ஸ்ஸ்ரஸ்யா-ஸ்ரஷி-ந்த்ஹாஸிரிம்ஜலத ஸவா-ஸ்ரோஷஃ " (అయామంకరుణమ్మునృ సీతంమసాగిరింజలదధారారోహః) என்றும், " பொலிந்திருண்டகார்வானில்மின்னேபோற்றோன்றி - மலிந்ததிருவிருந்தமார்பன் - பொலிந்த - கருடன்மேற்கொண்டகரியான் " என்றும் சொல்லுகிறபடியே, கிரபாயினியான பிராட்டிஸந்நிஹிதனாய் பெரியதிருவடிமேற்கொண்டுவந்து தோன்றி, தன்னுடைய ஸ்வரூபரூபகுண விபூதிசேஷ்டிதங்களையெல்லாம் யுகபதேவ சாக்ஷாத்கரித்து அநுபவிக்கலாம்படி ஆழ்வார்க்கு " மயர்வறமதிநலமருள ; ஆழ்வாரும், " பொன்னிலாமேனிமரதகத்தின்பொங்கிளஞ்சோதி " என்கிறபடியே, எம்பெருமானுடைய திவ்யாத்மஸ்வரூபத்தையும், தத்ஸ்வரூபப்ரகாசகமான திவ்யமங்கள விக்ரஹத்தையும், ததாச்ரயமான திவ்யகுணங்களையும் அநுபவித்து, அவ்வநுபவஜநித ப்ரீதி உள்ளடங்காமல், (உ௦கூ) " ரிசோயஜூம்ஷிஸாமாநிததைவாதர்வணாநிச "
(ఋచోయజూంషిసామానితథైవాథర్వణానిచ) என்கிற வேதசதுஷ்டயத்தையும், இயற்பாவாக, திருவிருத்தம், திருவாசிரியம், பெரியதிருவந்தாதி என்கிற திவ்யப்ரபந்த த்ரயத்தாலே, ருக் யஜுஸ்ஸு அதர்வணம் என்கிற வேதத்ரயஸாரார்த்தத்தையும் அருளிச்செய்து, (உக௦) "வேதாநாம்ஸாமவேதோஸ்மி"
(వేదానాంసామవేదోస్మి) என்று கீதோபநிஷதாசார்யன் தானாகச்சொல்லப்பட்ட ஸாமவேதஸாரார்த்தத்தை சரமப்ரபந்தமான திருவாய்மொழியாலே யருளிச்செய்து, " மிக்கவேதியர்வேதத்தினுட்பொருள்நிற்கப் பாடியென்னெஞ்சுள்நிறுத்தினான் " என்கிறபடியே, " தேவுமற்றறியாத ஸ்ரீமதுரகவி ப்ரப்ருதிகளான ஸஜ்ஜநங்கள் திருவுள்ளத்திலே யறியக் கற்றுவல்லராம்படி ப்ரதிஷ்டிப்பித்து, " ஊரும்நாடுமுலகமும் தம்மைப்போ " லே யாக்கி, புஷ்பத்யாகபோகமண்டபம் தொடக்கமான திவ்யதேசங்கள் எம்பெருமான்களும் திருப்புளியாழ்வாரடியிலே எழுந்தருளி, இவ்வாழ்வார்க்குத் திருமுகப்ரதானம்பண்ணி, தாங்களும், "எம்பெருமானுளனாகவே" என்கிறபடியே ஸத்தைபெற்றுநிற்க; நித்யஸூரிகளும் ஸ்வேதத்வீபவாசிகளும் இவ்வாழ்வாரையும் வைபவத்தையும் காண்கைக்காக வந்துநிற்க; அவர்களையும்சேவித்து, " பொ

விகபொலிக " என்று மங்களாசாஸநம் பண்ணி, இப்படியிருந்துள்ள ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ருத்திக்கு மங்களங்களை ஆஶாஸித்து, அவர்கள் வைபவத்தையறிந்து அநுபவித்த தமக்கு " மாறுளதோவிம்மண்ணின்மிசையே " என்றும், " இனியாவர்நிகரகல்வானத்தே " என்றும், " யான்பெரியன்நீபெரியையென்பதனையாரறிவாரென்றெம்பெருமானோடே மார்தட்டியேறி " என்றும், இப்படி உபயவிபூதியிலும் தமக்கு ஸத்ருஶர் இல்லாத ப்ரபாவத்தையுடையராய், " உண்ணுஞ்சோறு பருகுநீர்தின்னும் வெற்றிலையுமெல்லாங்கண்ணன் " என்றும் பால்யாத்ப்ரப்ருதி பகவத்குணைகதாரகராயிருக்கிற இவ்வாழ்வார், (௨௧௧) " ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் ப்ராப்துஶ்ச ப்ரத்யகாத்மந: - ப்ராப்த்யுபாயம் பலம் ப்ராப்தேஸ் ததா ப்ராப்திவிரோதி ச " (ప్రాప్యస్యబ్రహ్మణోరూపంప్రాప్తుశ్చప్రత్యగాత్మనః - ప్రాప్త్యుపాయంఫలంప్రాప్తేస్తథా ప్రాప్తివిరోధిచ) என்று சகலவேதசாஸ்த்ரங்களிலும் சொல்லப்படுகிற அர்த்தபஞ்சகத்தையும், (௨௧௨) " த்வயாத் பரதரம் நாஸ்தி மந்த்ரம் வேதேஷ்வபி த்விஜ " (ద్వయాత్పరతరన్నాస్తిమన్త్రంవేదేష్వపిద్విజ) என்று மந்த்ரஶ்ரேஷ்டமாகச் சொல்லப்படுகிற சர்வவேதசாஸ்த்ர ஸாரபூத சரணாகதிமந்த்ரார்த்தத்தையும், சரமப்ரபந்தமான திருவாய்மொழியிலே ஸுவ்யக்தமாம்படி யருளிச்செய்து, (௨௧௩) " தர்ஶநம் பரபக்தி: ஸ்யாத் பரஜ்ஞாநம் து ஸங்கம: - புநர்விஶ்லேஷபீருத்வம் பரமா பக்திருச்யதே " (దర్శనంపరభక్తిస్స్యాత్పరజ్ఞానంతుసఙ్గమః- పునర్విశ్లేషభీరుత్వంపరమాభక్తిరుచ్యతే) என்கிறபடியே பரபக்திபரஜ்ஞாந பரமபக்திகளையுடையராய்க்கொண்டு, " தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலைகள் சொல்லி அவாவற்று வீடுபெற்றருளினார்.

(௨௧௪) " ஹஸ்தஸ்தாஶீத்விதயம் ப்ரபத்யே ஶௌரிவாக்வ்யாஸமுதாரகீர்த்திம் - மாதுர்யஸம்ஶ்லிஷ்டகவித்வயுக்தம் மஹத்வஸம்பாவிதபுத்திதத்வம் " (హస్తస్థాశీద్వితయంప్రపద్యేశౌరివాగ్వ్యాసముదారకీర్తిం - మాధుర్యసంశ్లిష్టకవిత్వయుక్తంమహత్వసంభావితబుద్ధితత్వం.)

அநந்தரம், திருமால்திருப்பேர்வல்லாரடிக்கண்ணிசூடிய மாறனென்கிற திருக்குருகூர்நகர்நம்பிக்கு ப்ரதமசிஷ்யரான ஸ்ரீமதுரகவிகள், ப்ரபந்நஜநகூடஸ்த்தரான ஸ்வாசார்யவைபவத்தை, கண்ணிநுண்சிறுத்தாம்பு என்கிற திவ்யப்ரபந்தத்திலேயருளிச்செய்து, சரமார்த்தமான பஞ்சமோபாயநிஷ்டரான முமுக்ஷுக்களுக்கு உபகரித்தருளி, அர்ச்சாவதார ரூபமான ஆழ்வார் விக்ரஹத்தையும் ஏறியருளப் பண்ணி, அவர்க்கு நித்யபக்ஷமாஸாயந ஸம்வத்ஸரோத்ஸவங்களையெல்லாம் தாழ்வறநடத்திக்கொண்டு, மஹோ

த்ஸவங்கண்டருளப்பண்ணி, வேதந்தமிழ்செய்த பெருமாள்வந்தார், திருவாய்மொழிப்பெருமாள்வந்தார், திருநகரிப்பெருமாள்வந்தார், திருவழுதிவளநாடர்வந்தார், திருக்குருகூர்நகர்நம்பிவந்தார், காரிமாறர்வந்தார், சடகோபர்வந்தார், பராங்குசர்வந்தார், என்று பலசின்னம்பரிமாற, அவ்வளவிலே, கம்பநாடன் சிஷ்யர்கள்வந்து, எங்கள் கம்பனோடு தர்க்கித்து, சங்கப்பலகையேறினாலொழிய, வேதந்தமிழ்செய்த பெருமாள் என்று விருதுபிடிக்கவொட்டோமென்று தடுக்க, ஸ்ரீமதுரகவிகளும், அதுந்யாயமாம், எங்கள் ஆழ்வார் எங்கும் எழுந்தருளார், அவர் திவ்யஸூக்திக்குச் சங்கப்பலகை யிடங்கொடுத்ததாகில் இவர்க்கு இடங்கொடுத்ததாமென்றுசொல்லி, ஒருசிறுமுறியிலே, "கண்ணன்கழலிணை" என்று எழுதி, திருச்சிறுமுறியைச் சங்கப்பலகையின்மேலே வைக்க, அக்காலத்திலே, தென்மதுரையிலே கம்பநாடனோடு சேர மூந்நூறுதமிழ்ப்புலவர் சங்கப்பலகையேறியிருக்க, அப்பலகை அவர்களெல்லாரையும் எடுத்துக்கவிழ்த்துப்போட்டு, ஆழ்வார் திவ்யஸூக்திச் சிறுமுறியொன்றையுமே தரித்துக்கொண்டுநிற்க; இதைக்கண்டு, கம்பநாடனும் பயப்பட்டு, "ஈயாடுவதோகருடற்கெதிரே யிரவிக்கெதிர் மின்மினியாடுவதோ, நாயாடுவதோவுறுவெம்புலிமுன் னரிகேசரிமுன் னடையாடுவதோ, பேயாடுவதோவெழிலூர்வசிமுன்பெருமாள்வகுளாபரணன்றருசொல், ஓராயிரமாமறையின்பொருளின்னொருசொற்பொருமோ வுலகிற்கவியே" என்று ஆழ்வார்விஷயமாகக் கவிசொல்லி, அபராதக்ஷாபணம் பண்ணிக்கொண்டான். பின்னையும் அங்குக்கிடந்த தமிழ்ப்புலவர், ப்ரத்யேகம் ப்ரத்யேகம் கவிசொல்லி, அபராதக்ஷாபணம் பண்ணிக்கொண்டார்கள். இப்படி, (உகரு) "மாதா பிதா யுவதயஸ்தநயா விபூதி:" (ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம்) என்று ஸ்வாசார்யரான ஸ்ரீபராங்குசருடைய வைபவத்தை, "ஊரும்நாடுமுலகமும்" எல்லாமறியும்படி ப்ரகாசிப்பித்துக்கொண்டு சிலகாலம் எழுந்தருளியிருந்து லோகத்தை வாழ்வித்தருளினார்.

செத்ததின்வயிற்றிலே சிறியதுபிறக்கையாவது, செத்தது என்று அசித்து - அதெங்ஙனேயென்னில், அப்ராணிமத்தாய் ஜடமாயிருக்கையாலே அசித்தைச் சொல்லுகிறது. அதின்வயிற்றிலே சிறியது பிறக்கையாவது, சரீரத்தோடே ஆத்மாவுக்குண்டான சம்பந்தத்தை. சிறியதாவது - அணுபரிமாணமா யிருக்கிற ஆத்மாவைச் சொல்லுகிறது. சரீரத்தோடே ஆத்மாவுக்கு சம்பந்தமுண்டானால், அதுக்கு போக்யமும் அசித்கதமா யிருக்கிற சுகதுக்கங்கள். அத்தைத் தின்று அங்கே கிடக்கையாவது, சரீரகதமாயிருக்கிற சுகதுக்காதிகளை புஜித்துக்கொண்டு சரீரத்தையே

ஆஶ்ரயித்துக்கொண்டிருக்கை. தத்வதர்ஶிகளாக இப்படி அவதரித்தருளின இவ்வாழ்வார்கள் அருளிச்செய்த திவ்யப்ரபந்தங்கள் முக்யதமமான ப்ரமாணங்களாயிருக்க, தேவதாந்தரவிஷயமாக, "தெய்வநான்முகக்கொழுமுளை யீன்று முக்கணீசனொடு தேவுபலனுதவி மூவுலகும் விளைவித்தவுந்தி ,, என்றும், "பூவினுன்முகனைப்படைத்ததேவன் ,, என்றும், "நான்முகனைமுழ்த்தநீருலகெல்லாம் படையென்று முதல்படைத்தாய் ,, என்றும், "நான்முகன்றன்னொடுதேவருலகோடுயிர்படைத்தான் ,, என்றும், "பிரமன்சிவனிந்திரனுதிக்கெல்லாம் நாபிக்கமலமுதற்கிழங்கு ,, என்றும், "பிரமனைத்தனுந்தியிலேதோற்றுவித்து ,, என்றும், "இருந்தண்கமலத் திருமலரினுள்ளே திரிந்த திசைமுகனைத்தந்தாய் ,, என்றும், "தன்னுந்திவாயன்று நான்முகனைப்பயந்தவாதிதேவன் ,, என்றும், "நான்முகனைநாராயணன்படைத்தான்,, என்றும், "உந்தியிற்றோற்றினாய்நான்முகனை ,, என்றும், "உந்தியெழுந்தவுருவமலர்தன்னிற்சந்தச்சதுமுகன்றன்னைப்படைத்தவன் ,, என்றும், "உந்திமேனான்முகனைப்படைத்தான் ,, என்றும் இப்படி இவ்வாழ்வார்களெல்லாரும் ப்ரஹ்மருத்ராதிகளை சர்வேஶ்வரன்தானே ஸ்ருஷ்டித்தா னென்றருளிச்செய்தும் ;

இங்ஙனன்றிக்கே, "உன்னிறை மலர்ப்பாதங்கள் சூடித்தொழுவார் ஒற்றைப்பிறையணிந்தானும் நான்முகனு மிந்திரனும் மற்றையமரு மெல்லாம் ,, என்றும், "கள்வாவெம்மையுமேழுலகும் நின்னுள்ளேதோற்றிய விறைவவென்று வெள்ளேறன்னான்முக னிந்திரன்வானவர் புள்ளூர்திகழல்பணிந்தேத்துவர் ,, என்றும், "நாடோறும்வானவர் தம்மை யாளுமவனும் நான்முகனும் சடைமுடியண்ணலும் செம்மையா லவன்பாதபங்கயம் சிந்தித்தேத்தித்திரிவர் ,, என்றும், "நுண்ணுணர்வினீலார் கண்டத்தம்மானும் நிறை நான்முகனுமிந்திரனும் சேலேய்கண்ணார் பலர்சூழவிரும்பும் திருவேங்கடத்தானே ,, என்றும், "அரனான்முகனேத்தும் செய்யநின்றிருப்பாதத்தையான் ,, என்றும், "மேவித்தொழும்பிரமன்சிவனிந்திரன் ,, என்றும், "நெற்றிபெற்றகண்ணன் விண்ணினாதனோடுபோதின்மே னற்றவத்தநாதனோடு மற்றுமுள்ளவானவர்க்கற்றபத்தியால்வணங்குபாதம் ,, என்றும், "நீறேறுசெஞ்சடைநீலகண்டனும் நான்முகனும் முறையால் சீரேறுவாசகம் செய்யநின்ற திருமால் ,, என்றும், "அவரிவரொன்றில்லையரவணையான்பாதம், எவர்வணங்கியேத்தாதாரெண்ணில் - பவரும், செழுங்கதிரோனொண்மலரோன்கண்ணுதலோவென்றே, தொழுந்தகையானொருந்தொடர்ந்து ,, என்றும், இப்படி

ப்ரஹ்மருத்ராதிதேவதைகள் எம்பெருமானைக் கிட்டி, ஸ்தோத்ரம் பண்ணி, தண்டனிட்டுத் திரிவார்கள் என்றருளிச்செய்தும்;

இங்ஙனன்றிக்கே, "கேழ்த்தசீரரன்முதலாக்கிளர்தெய்வமாய்க்கிளர்ந்து, சூழ்த்தமரர்துதித்தாலுன்றொல்புகழ்மாசூணாதே" என்றும், "நினைந்து நைந்துள்கரைந்துருகியிமையோர்பலருமுனிவரும் புனைந்தகண்ணிநீர்சாந்தம் புகையோடேந்திவணங்கினாலுன்பெருமைமாசூணாதோமாயோனே" என்றும் "மாசூணாவான் கோலத்தமரர்கோன் வழிப்பட்டால் மாசூணாவுன்பாதமலர்ச் சோதிமழுங்காதே" என்றும், "பிறையேறுசடையானுநான்முகனுமிந்திரனுமிறையாதலறிந்தேத்தவீற்றிருத்தலிதுவியப்பே" என்றும், இப்படிப்ரஹ்மருத்ராதிகள், ஸத்வகுணோத்தரரானபோது, எம்பெருமானைக்கிட்டி ஸேவித்து ஸ்தோத்ரம்பண்ணினால் எம்பெருமானுக்கவத்யாவஹமென்றருளிச்செய்தும்;

இங்ஙனன்றிக்கே, "நளிர்மதிச்சடையனென்கோ நான்முகக் கடவுளென்கோ" என்றும், "சிவனாயயனாய்" என்றும், "கடிகமழ்கொன்றைச்சடையன்" என்றும், "நான்முகக்கடவுள்" என்றும், "பூத்தண்டுழாய்முடியாய்புனைகொன்றையஞ்செஞ்சடையாய்வாய்த்தவென்னான்முகனே" என்றும், "என்திருமார்வன்றன்னையென்மலைமகள் கூறன்றன்னை என்று மென்னாமகளைய கம்பாற்கொண்ட நான்முகனை" என்றும், "மூனியேநான்முகனேமுக்கணப்பா" என்றும், "அவாவறச்சூழரியையயனையரனையலற்றியவாவற்று" என்றும் இப்படி இத்திவ்யப்ரபந்தங்களிலே ஆதிமத்யாவஸாநமாக ப்ரஹ்மருத்ராதிகளை ஸர்வேச்வரன்தானே ஸ்ருஷ்டித்தானென்றருளிச்செய்தும், ஆக இப்படி ஒருக்காலருளிச்செய்வது ஒருக்காலருளிச்செய்யா திருக்கையாலே இவற்றை முக்யதமமான ப்ரமாணமென்று விச்வஸிக்கலாயிருந்ததில்லை.

எங்ஙனேயென்னில், இவ்வாழ்வார்கள் தாங்கள்தங்களுக்குதேவதாந்தரவிஷய வைராக்யமுண்டென்றுதோற்ற, "ஓஒவுலகினதியல்வே, ஈன்றோளிருக்கமணைநீராட்டிப் படைத்திடந்துண் டுமிழ்ந்தளந்துதேர்ந்துலகளிக்கும் முதற்பெருங் கடவுணிற்பப் புடைப்பலவாநெறிதெய்வம்பேணுதல்தனாஅதுபுல்லறிவாண்மைபொருந்தக்காட்டி" என்றும், "மற்றுமோர்தெய்வமுளதென்றிருப்பாரோ டுற்றிலேன்" என்றும், "எம்பெருமானுண்டுமிழ்ந்தவெச்சிற்றேவர் அல்லாதார்தாமுளரே" என்றும், அதுவுமன்றிக்கே, "திடவிசும்பெரிவளிநீர்நிலமிவைமிசைப்படர்பொருண்முழுவதுமா யவையவைதொறும் உடன்மிசையுயிரெனக்கரந்தெங்கும் பரந்துளன் சுடர்மிகுசுருதியுளிவையுண்டசுரனே" என்றும், "போதின்மங்கை பூதலக்கிழத்திதேவியன்றியும்போதுதங்கு நான்முகனவன்மகன் மகன்சொலின்மாது தங்குகூறனேற

தூர்த்தியென்றுவேதநூலோதுகின்றதுண்மை,, என்றும், " நீர்த்தனுலகளந்த சேவடிமேற்பூந்தாமம் - சேர்த்தியவையேசிவன்முடிமேற்றான்கண்டு - பார்த்தன்றெளிந்தொழிந்த பைந்துழாயான்பெருமை - பேர்த்துமொருவராற்பேசக்கிடந்ததே ,, என்றும், " கபாலநன்மோக்கத்துக்கண்டுகொண்மின் ,, என்றும், " மார்க்கண்டேயனுங்கரியேகருத்தமனமொன்றும்வேண்டா கண்ணனல்லாற்றெய்வமில்லை ,, என்றும், " சத்தியங்காண்மினையாசிலையிறுவிலங்கை செற்றதேவனே தேவனாவான் ,, என்றும், இப்படி ப்ரமாணத்தாலும், ப்ரத்யக்ஷத்தாலும், சாக்ஷியாலும், (௨௧௫) " 𑌯𑌦𑍇𑌤𑌤𑍍𑌪𑌰𑌮𑌂𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑌵𑍇𑌦𑍇𑌷𑍁𑌪𑌠𑍍𑌯𑌤𑍇 - 𑌸𑌦𑍇𑌵𑌃𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌾𑌕𑍍𑌷𑌸𑍍𑌸𑍍𑌵𑌯𑌨𑍍𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌃𑌪𑍍𑌰𑌭𑍁𑌃 " (యదేతత్పరమంబ్రహ్మ లోకవేదేషుపఠ్యతే - సదేవఃపుణ్డరీకాక్షస్స్వయన్నారాయణఃప్రభుః) என்றுசொல்லப்படுகிற ஸ்ரீமந்நாராயணனே ஸர்வஸ்மாத்பரனென்று சாதித்தும், அதுவும்போதாமல், (௨௧௭) " 𑌪𑌰𑌃𑌪𑌰𑌾𑌣𑌾𑌂𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌯𑌸𑍍𑌯𑌤𑍁𑌷𑍍𑌟𑍋𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨𑌃- 𑌸𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌯𑌸𑍍𑌥𑌾𑌨𑌮𑍇𑌤𑌤𑍍𑌸𑌤𑍍𑌯𑌂𑌮𑌯𑍋𑌦𑌿𑌤𑌂 " (పరఃపరాణాంపురుషో యస్యతుష్టోజనార్దనః - సప్రాప్నోత్యక్షయస్థానమేతత్సత్యంమయోదితం) என்றும், (௨௧௮) " 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌸𑌮𑌂𑌨𑌭𑍂𑌤𑌂𑌨𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 - 𑌏𑌤𑍇𑌨𑌸𑌤𑍍𑌯𑌵𑌾𑌕𑍍𑌯𑍇𑌨𑌸𑌰𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑍍𑌸𑌾𑌧𑌯𑌾𑌮𑍍𑌯𑌹𑌂 " (నాస్తినారాయణసమంనభూతోనభవిష్యతి - ఏతేనసత్యవాక్యేనసర్వార్థాన్సాధయామ్యహం) என்றும், இப்படியே ருஷிகள் வாக்யங்களையும் அவற்றுக்கடியான ஶ்ருதிவாக்யங்களையுங் கொண்டு வித்வத்கோஷ்டியான ராஜஸ்தாநத்திலே பரதத்வநிர்ணயம்பண்ணி விரைந்து கிழியறுத்தும், இப்படி நிஶ்சயம்பண்ணின ஆழ்வார்கள் ஒருக்கால் அருளிச்செய்தது ஒருக்கால் அருளிச்செய்திலர்களென்னவொண்ணாது, ஆனால் இவற்றுக்குக் கருத்தென்னென்னில் ; அந்த தேவதாந்தரங்களினுடைய ஸ்வரூபஸ்வபாவங்களுக்கீடாக அருளிச்செய்தார்களித்தனை, எங்ஙனேயென்னில் ; இவர்கள் கர்மவஶ்யரில் ப்ரதாநராகையாலே, (௨௧௯) " 𑌯𑍁𑌗𑌕𑍋𑌟𑌿𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌣𑌿𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌮𑌾𑌰𑌾𑌧𑍍𑌯𑌪𑌦𑍍𑌮𑌭𑍂𑌃 - 𑌪𑍁𑌨𑌸𑍍𑌤𑍍𑌰𑍈𑌲𑍋𑌕𑍍𑌯𑌧𑌾𑌤𑍃𑌤𑍍𑌵𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌵𑌾𑌨𑌿𑌤𑌿𑌶𑍁𑌶𑍍𑌰𑍁𑌮𑌃 - 𑌮𑌹𑌾𑌦𑍇𑌵𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌮𑍇𑌧𑍇𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌾𑌹𑍁𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂𑌦𑍇𑌵𑌦𑍇𑌵𑍋𑌬𑌭𑍂𑌵 " (యుగకోటిసహస్రాణివిష్ణుమారాధ్యపద్మభూః - పునస్త్రైలోక్యధాతృత్వంప్రాప్తవానితిశుశ్రుమః - మహాదేవస్సర్వమేధేమహాత్మాహుత్వాత్మానందేవదేవోబభూవ) என்கிறபடியே, பூர்வஜந்மங்களிலே ப்ரஹ்மபதம் ருத்ரபதம் பெறுகைக்குத் தபஸ்ஸு பண்ணுகையாலே, அந்தத் தப:பலமாக எம்பெரு

மானாலே ஸ்ருஷ்டர்களானார்களென்றும், இவர்கள் எம்பெருமான்திருமேனியைப்பற்றி லப்தஸ்வரூபராயிராதபோது இவர்களுக்கு ஸத்தைகுலையுமென்றும், இவர்கள் ஸத்வோத்ரிக்தரானபோது பகவத் ஸ்தோத்ராதி சேவைகளுக்கு யோக்யராயிருப்பர்களென்றும், இவர்கள் ராஜஸதாமஸ ப்ரசுரரானபோது அஹங்காரத்தாலே பண்ணும் துர்மாநம் கனத்திருக்கையாலே இவர்கள் எம்பெருமானைக்கிட்டி ஸ்தோத்ரம்பண்ணி சேவிக்கை அவத்யாவஹமென்றும், இவர்களுடைய ஸ்வரூபஸ்த்திதி ப்ரவ்ருத்தினிவ்ருத்திகள் பகவததீநமாய் சரீரவச்சேஷமாயிருக்கையாலே, (௨௨௦) “ஏக ஏவ ஜகத்ஸ்வாமீ ஶக்திமாநச்யுத: ப்ரபு: - ததம்ஶா ஶக்திமந்தோந்யே ப்ரஹ்மேஶாநாதயோமரா:” (ఏకఏవజగత్స్వామీశక్తిమానచ్యుతః ప్రభుః తదంశాశ్శక్తిమన్తోన్యే బ్రహ్మేశానాదయోమరాః) என்கையாலும், அவன் தனக்கு சரீரமாக அருளிச்செய்கையாலே இத்திவ்ய ப்ரபந்தங்களை முக்க்யதமமான ப்ரமாணங்களென்னக் குறையில்லை. இவர்கள் ஸர்வேஶ்வரனுக்கு சரீரமானபடி யென்னென்னில்; (௨௨௧) “ஸ ஏவ ஸ்ருஜ்ய: ஸ ச ஸர்க்ககர்த்தா ஸ ஏவ பாத்யத்தி ச பால்யதே ச - ப்ரஹ்மாத்யவஸ்தாபிரஶேஷமூர்த்திர்விஷ்ணுர்வரிஷ்டோ வரதோ வரேண்ய:” (సఏవస్సృజ్యస్సచసర్గకర్తా సఏవపాత్యత్తిచపాల్యతేచ - బ్రహ్మాద్యవస్థాభిరశేషమూర్తిర్విష్ణుర్వరిష్ఠోవరదోవరేణ్యః) என்றும், (௨௨௨) “கல்பாந்தே ருத்ரரூபீ ஸ க்ரஸதே ஸகலம் ஜகத் - தமாத்யம் புருஷம் விஷ்ணும் ப்ரணதோஸ்மி ஜநார்த்தநம்” (కల్పాంతే రుద్రరూపీ సగ్రసతే సకలంజగత్ - తమాద్యంపురుషంవిష్ణుంప్రణతోస్మిజనార్దనం) என்றும், (௨௨௩) “ஸ்ருஷ்டிஸ்தித்யந்தகரணீம் ப்ரஹ்மவிஷ்ணுஶிவாத்மிகாம் - ஸ ஸம்ஜ்ஞாம் யாதி பகவாநேக ஏவ ஜநார்த்தந:” (సృష్టిస్థిత్యన్తకరణీంబ్రహ్మవిష్ణుశివాత్మికాం - ససంజ్ఞాంయాతిభగవానేకఏవజనార్దనః) என்றும், “தாமோதரனுருவாகியசிவற்குந்திசைமுகற்கும்”, என்றும், “அரனயனென வுலகழித்தமைத்துளனே”, என்றும் அருளிச்செய்தார்கள். இவர்கள் ஸர்வேஶ்வரனுக்கு சரீரபூதராக, அவன் தான் ஆத்மாவாகக் கூடும்படி எங்ஙனேயென்னில்; சரீரவாசிசப்தம் சரீரிபர்யந்தாபிதாநம்பண்ணக்கடவதிறே. ஒருசரீரியானவன், (௨௨௪) “ஸ்தூலோஹம் க்ருஶோஹம்” (స్థూలోహం కృశోహం) என்றுதானும்சொல்லி, நீ தடித்தாய் இளைத்தாயென்று சொல்லுமாபோலே இவர்களையும் ஸர்வேஶ்வரன் தானாகச்சொல்லக் குறையில்லை. “நீர்வானமண்ணெரிகாலாய் நின்றநேமியான்”, என்றும், “சூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்தமுடிவில்பெரும்பாழேயோ சூழ்ந்ததனிற்பெரியபர நன்மலர்ச்சோ

தியோ சூழ்ந்ததனிற்பெரியசுடர்ஞானவின்பமேயோ ,, என்றும், " தேவராய்நிற்குமத்தேவுமத்தேவரில் - மூவராய்நிற்குமுதுபுணர்ப்பும் - யாவராய் - நிற்கின்றதெல்லாம்நெடுமால் ,, என்றும், " முதலாவார்மூவரம்மூவருள்ளும் முதலாவான்மூரிநீர்வண்ணன் ,, என்றும் இத்யாதிகளாலே அவனையொழிந்த சகல சேதநாசேதநங்களும் அவனதாக அருளிச்செய்தார்கள். இப்படி யருளிச்செய்கைக்கடி, (உ௨௫) " யஸ்யாத்மாஶரீரம்யஸ்ய ப்ருதிவீஶரீரம் " (యస్యాత్మా శరీరం యస్య పృథివీ శరీరం) என்கிறபடியே ஸர்வேஶ்வரனுக்கு ஆத்மாவும் சரீரம், அசித்தும் சரீரம் என்று வேதத்திலே சொல்லுகையாலே, (உ௨௬) " விஶ்வரூபாத்யாயஜம் " (విశ్వరూపాధ్యాయజం) என்று அவன் தானும் அருளிச்செய்ததும், திருத்தேர்த்தட்டிலே அர்ஜ்ஜுநனுக்கு விஶ்வரூபத்தைக் காட்டுகையாலும் குறையில்லையிறே. (உ௨௭) " கஇதிப்ரஹ்மணோநாம ஈஶோஹம்ஸர்வதேஹிநாம் - ஆவாந்தவாங்கஸம்பூதௌ தஸ்மாத்கேஶவநாமவாந் " (కఇతిబ్రహ్మణోనామ ఈశోహం సర్వదేహినాం - ఆవాం తవాంగసంభూతౌ తస్మాత్ కేశవనామవాన్) என்று சொல்லுகிறபடியே நாராயணன் பக்கலிலே ப்ரஹ்மருத்ராதிகள் ஜாதராணர்கள் என்றும், இவர்கள் திருநாபீகமலத்தையும் தக்ஷிணபார்ஶ்வத்தையும் பற்றி லப்தஸ்வரூபரா யிருப்பர்கள் என்றும், (உ௨௮) " பாதேநகமலாபேந ப்ரஹ்மருத்ரார்ச்சிதேநச - பஸ்பர்ஶ புண்டரீகாக்ஷ பாததலமஸ்தகம் " (పాదేనకమలాభేన బ్రహ్మరుద్రార్చితేనచ - పస్పర్శ పుణ్డరీకాక్ష పాదతలమస్తకం) என்று இவர்கள் சேஷபூதராய் எம்பெருமானை அர்ச்சிப்பர்கள் என்றும், இவர்கள் ததநீநமான ஸத்தா ஸ்திதி ப்ரவ்ருத்திகளை யுடையராகையாலே எம்பெருமான் தானேயென்று ஶ்ருதிதிஹாஸ புராணங்களும்சொல்லிற்றின. (உ௨௯) "பரமாத்மாபரோயோஸௌ நாராயணஸமாஹ்வய: - தஸ்யைவ மாயிநீஶக்திர்வீததர்மசாரிணீ " (పరమాత్మాపరోయోసౌ నారాయణసమాహ్వయః - తస్యైవ మాయినీశక్తిర్వీతధర్మచారిణీ) என்று சொல்லுகிறபடியே எத்தனையேனும் பிரிவாற்றகில்லாத பிராட்டியாரோபாதி ப்ரஹ்மருத்ராதிகளும் இவன் திருமேனியிலே ஸர்வகாலமிருப்பார்களோவென்னில் ; ஆபத்காலத்திலே அவர்களுக்கும் எம்பெருமான் திருமேனியிலே யொதுங்க இடங்கொடுக்குமத்தனை யல்லது எப்போதும் இரார்கள். இத்தால் ஸர்வேஶ்வரனுக்கு மஹத்தான சிலகுணமாகையாலே ஆழ்வார்கள் எப்போதும் அத்தையே அருளிச்செய்து கொண்டு போருவர்கள். " தாளதாமரையானுனதுந்தியான் - வாள்கொ

ணீண்மழுவாளியுன்னுகத்தான் - ஆளராய்த்தொழுவாருமமரர்கள் - நாளு மென்புகழ்கோறுனசீலமே ,, என்றும், " அக்கும்புலியினதளுமுடையா ரவரொருவர்பக்க நிற்கின்றபண்பனூர் ,, என்னக்கடவதிறே.

கலகங்கவாளுல் அடைய வளைந்தானுக்குள்ளே இன்னசாதியென் னுமல் எல்லாருங் கூடியிருந்து, கலகந் தெளிந்தவாறே புறப்பட்டாலும் இவ்விடம் இன்னான்பற்று இவ்விடம் இன்னான்பற்று என்று சொல்லுமா போலே என்று நஞ்சீயருக்குப் பட்டர் அருளிச்செய்தாரிறே. கீழ் இவர் களுக்குச் சொன்ன வித்தனையும் நமக்கும் ஒக்கும் ஒக்கும் என்றருளிச் செய்தார்கள். எங்ஙனேயென்னில் ; " வாடாதமலரடிக்கீழ் வைக்கவேவ குக்கின்று ,, என்றும், " என்னையாக்கிக்கொண்டு ,, என்றும், "அந்நாள் நீதந்தவாக்கை ,, என்றும், இங்ஙனன்றிக்கே, " என்னைத் தன்பொன்ன டிக்கீழிருத்தி ,, என்றும், இவ்வளவுமன்றியே, "குலதொல்லடியேன்,, என்றும், " குடிகுடிவழிவந்தாட்செய்யும்தொண்டர் ,, என்றும், " அடி யோம்போற்றி ,, என்றும், இங்ஙனன்றிக்கே, " அருவினையேன்களவேழ் வெண்ணெய்தொடுவுண்டகள்வாவென்பன் ,, என்றும், " உயிர்வேறின்றி யொன்ருகவே ,, என்றும், இப்படி தமக்கொன்றும் பிறர்க்கொன்றுமா காமல் அருளிச்செய்தாரிறே.

இனி ; அவர்களோடு ஸமரோ இவ்வாழ்வார்க ளென்னில் ; அன் று ; கர்மத்தையிட்டு ஸ்ருஷ்டித்தானென்றது அவர்களை, ஸ்வேச்சையா லே அவதரிப்பித்தானென்றது இவர்களை. ஆபத்காலத்திலே ஆபந்நிவார ணார்த்தமாகக் காதாசித்கமாகத் திருமேனியிலே யிடங்கொடுத்து வைத் தானென்றது அவர்களை. இவர்களை நீக்கமில்லாவடியார் ,, என்னக்கட திறே. அவர்கள் ராஜஸ தாமஸ மிஸ்ரஸத்வம் தலையெடுத்தபோது பகவ த்விஷய ப்ரவ்ருத்தி கனத்திருக்கையாலே சேஷபூதரென்கிறது அவர்க ளை. இவர்கள் "முக்குணத்திரண்டவையகற்றி ஒன்றினிலொன்றுநின்று, நிலைநின்ற தொண்டரான, " அறந்திகழுமனத்தவர் ,, என்றுசொல்லுகி சுத்தஸத்வநிஷ்டரானகையாலே தெளிவுற்ற சிந்தையரான சேஷபூத ன்கிறது இவர்களை. அவர்கள் ஸத்வகுணங்குலைந்து ராஜஸதாமஸ ப்ரசு ரானபோது அஹங்கரித்து, (உ௬0) " கொயம்விஷ்ணு " (ஓ்யம்விஷ்ணு என்றும், " பரிவின்றிவாணனைக் காத்துமென்றன்று படையொடும் வ தெதிர்ந்த ,, என்றும், இப்படிபாசுபதாதிகளிலே ஈஸ்வரனோடே எதிரம்புகோக்கையாலே ஈஸ்வரனைக்கிட்ட அவத்யமென்றும், பகவத் ஷயாதிகாரத்துக்கு முன்புண்டான ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளிலே பெ

ல்லாங்குகளை யநுஸந்தித்தும், "பின்னுகன்தன்னோடெதிர்வனவனெனக் குநேரான்,, என்று தாமருளிச்செய்தாரிறே. ஆகையாலே ஸமர் என்ன வொண்ணாது. ஆனால், இவ்வாழ்வார்கள் உத்க்ருஷ்டஜந்மஜாதரன்றிக்கே நிக்ருஷ்டஜந்மஜாதரான இவர்களுடையபாஷாகாநரூபமாய், பௌருஷேயமாய், அநித்யமாயிருக்கிற இவற்றை; அபௌருஷேயமாய், நித்யமாய் நிர்த்தோஷப்ரமாணமான வேதத்தோடொக்க த்ருடதர ப்ரமாண மென்னும்படி யெங்ஙனேயென்னில்; இவர்கள் உத்க்ருஷ்டஜந்மத்திலே அவதரித்தால் உத்க்ருஷ்டஜந்ம ஜாதர்க்கொழிய அபக்ருஷ்ட ஜந்மஜாதர்க்கு ஈடேறவழியில்லையாகையாலும், ப்ரபத்திஸர்வாதிகாரமாகையாலும், இவர்கள் ஸம்ஸாரநிமக்நரை யுயர்த்தத் தாழவிழிந்தார்களிறே. (உ௩௧) "ஹரிகீர்த்திம் விநைவாந்யத் ப்ராஹ்மணேந நரோத்தம - பாஷாகாநந்தகாதவ்யம் தஸ்மாத்பாபம் த்வயாக்ருதம்" (హరికీర్తిం వినైవాన్యత్ బ్రాహ్మణేన నరోత్తమ - భాషాగానన్న గాతవ్యం తస్మాత్పాపం త్వయాకృతం) என்று சொல்லுகையாலே பகவந்நாமகீர்த்தநத்துக்கு பாஷாகாநரூப தோஷமில்லாமையாலும் வடமொழி மறையென்றது தென்மொழிமறையை நினைத்தாகையாலும், "செந்திறத்ததமிழோசைவடசொல்லாகி,, என்றும், "செந்தமிழும்வடகலையுந்திகழ்ந்தநாவர்,, என்றும், "ஆகஸ்த்யமுமநாதி,, என்றும், "பொய்யில்பாடல்,, என்றும், "பொய்ம்மொழியொன்றில்லாத மெய்ம்மையாளன்,, என்றும் சொல்லப்படுகிற ப்ரபத்வேஷிகளிஜித் வசநவஹித்தமிறே. ஆகையாலே பாஷாகாநரூபதோஷமேயில்லை.

இனி; புருஷபுத்திமூலமான தோஷத்துக்கு, "யானாய்த்தன்னைத்தான் பாடித்தென்னாவென்னுமென்னம்மான்,, என்று சொல்லுகிறபடியே இவ்வாழ்வார்கள் நாவிலிருந்து இன்கவிபாடும் பரமகவிகளாக நன்கு வந்து நன்றாக பரமசேதநனான பரவாசுதேவன்தானே பாடி ப்ரகாசிப்பித்ததாகையாலும், "அன்னமாயன்றங்கறநூலுரைத்த,, என்று சொல்லுகிறபடியே ஹம்ஸாவதாரமாய் ப்ரஹ்மாவுக்கு வேதத்தை யுபகரித்தாற்போலேயும், வ்யாஸனை உத்தேசித்து வேதத்தை விஸ்தரிப்பித்தாற்போலேயும் ப்ரகாசிப்பித்ததாகையாலே இப்ரபந்தங்களுக்குப் புருஷபுத்தி ஜநிததோஷமேயில்லை. ஸுப்தப்ரபுத்தரான சிஷ்யர்களை உபாத்யாயர் ஓதுவிக்குமாபோலேயும், ப்ரளயாவஸ்த்தையிலும் தம் திருவுள்ளத்திலேவைத்துக்கொண்டிருந்து, ஸ்ருஷ்டிகாலம் வந்தவாறே வேதத்தை ப்ரகாசிப்பித்தாற்போலே ப்ரகாசிப்பித்ததாகையாலே அநித்யதோஷ ப்ரஸங்கமேயில்லை. ஆகையாலே வேதத்துக்குண்டான ப்ராமாண்யம் இதுக்

கும் ஒக்குமிறே. (௨௬௨) "யோ வேதவர்ணேஷு தத்வர்ணபுத்திம் ஸாமாந்யதோ வைதததாதி மூர்க: - ஸயாதி கோராந் நரகாந் அஸங்க்யாந் யாவச்சந்த்ரதாரகாவேதி மஹாவநேஷு" (సో వేదవర్ణేషు తద్వర్ణబుద్ధిం సామాన్యతో వైదధాతి మూర్ఖః - సయాతి ఘోరాన్నరకానసంఖ్యాన్ పితాచతాపేతి మహావనేషు) என்றுசொல்லுகிறபடியே (௨௬௩) "த்ரைகுண்யவிஷயா வேதா:" (త్రైగుణ్యవిషయా వేదాః) என்று த்ரிகுணாத்மபுருஷர்களை விஷயீகரிக்கும் வேதத்துக்கிப்படியானல், "சழக்குநாக்கொடு புன்கவிசொன்ன வழக்கணை வர்ணங்களல்லாத சுத்த ஸத்வமயமான த்ரமிடோபநிஷத் ஸாரத்துக்குச் சொல்லவேண்டாவிறே. (௨௬௪) "அர்ச்சாவதாரோபாதாநவைஷ்ணவோத்பத்திசிந்தநம் - மாத்ருயோநிபரீக்ஷாயாஸ்துல்யமாஹுர்மநீஷிண:" (అర్చావతారోపాదానవైష్ణవోత్పత్తిచింతనం - మాతృయోనిపరీక్షాయాస్తుల్యమాహుర్మనీషిణః) என்கிற இத்தைவிட்டின்பப்பாக்களில் த்ரவ்யபாஷாநிரூபணஸமம் இன்பமாரியிலாராய்ச்சி என்றிறே இவ்வர்த்தத்தை ஆசார்யஹ்ருதயத்திலே அழகியமணவாளப்பெருமாள் நயினாரும் அருளிச்செய்தாரிறே. ஆகையால் அருளிச்செயலில் அப்ராமாண்யபுத்தி மாத்ருயோநி பரீக்ஷையோடொக்குமிறே. ஆனபின்பு இவையே முக்யதம ப்ரமாணங்களென்று நின்றது. ஆழ்வார்களுக்கு எம்பெருமான் ப்ரத்யக்ஷ ஸாக்ஷாத்காரமோ? ஜ்ஞாநஸாக்ஷாத்காரமோ வென்னில்; ஜ்ஞாநஸாக்ஷாத்கார மல்லது ப்ரத்யக்ஷஸாக்ஷாத்காரமேயில்லை. ஆகில், "கமலக்கண்ணனென்கண்ணினுளான் காண்பன்" என்றும், "நம்பியை நான் கண்டபின்" என்றும், "கண்ணுள்ளும் நீங்காவே" என்றும் சொல்லுகிறவை செய்யும்படி எங்ஙனேயென்னில்; அவையும்ப்ரத்யக்ஷஸமாநாகாரமான ஜ்ஞாநஸாக்ஷாத்காரமாகக்கடவது. "நள்ளிராவுநண்பகலுநானிருந்தோலமிட்டால், கள்ளமாயாவுன்னையென்கண்காணவந்தீயாயே" என்றும், "பக்கநோக்கிநின்றலந்தேன்பாவியேன்காண்கின்றிலேன்" என்றும் மற்றுமிப்படி பாட்டுக்கள்தோறும் பெரிய ஆர்த்தியோடேகூப்பிட்டும், "காணவந்தென்கண்முகப்பே" என்கிற பாட்டின்படியே ப்ரஹ்மருத்ராதிகளும் அகப்படக் கூப்பிட்டாலும் காணவொண்ணாதவஸ்துவை நடையழகு நிலையழகு கண்ணழகுகளை ப்ரத்யக்ஷமாக அநுபவிக்கவேணுமென்று கூப்பிடுகிற இதுக்கு ப்ரயோஜநமில்லையென்று நிராஸமாவது. பின்னையும் அவனை சாபல்யாதிசயத்தாலே, "அப்பனேயடலாழியானே" என்கிற பாட்டின்படியே ப்ரதம பரிஷ்வங்கமே தொடங்கிக் காணவேணுமென்று அபேக்ஷ்யமான

ஆத்மவஸ்து குருத்துவற்றாக வுலரும்படி பார்த்துக் கண்மறைந்து காணகிலேன் என்று ப்ரத்யக்ஷமாக, (உகரு) "நமாம்ஸசக்ஷுரபிவீக்ஷிதம்" (నమాంసచక్షురభివీక్షితం) என்று மாம்ஸசக்ஷுஸ்ஸுக்குக் காணவொண்ணாதென்று நிராஸராய் "தக்கஞானக்கண்களாலேகண்டுதழுவுவன்" என்று ப்ரத்யக்ஷஸமாந ஜ்ஞாந ஸாக்ஷாத்காரமொழிய, "கட்கண்ணாலேகாணவில்லை, என்று நிர்த்தாரிக்கையாலே கீழ் கண்டேன் என்று பலவிடங்களிலும் அருளிச்செய்ததும் ஜ்ஞாநஸாக்ஷாத்காரமாகக்கடவது. கண்டேன் என்றபத்தும் உட்கண்ணாலே என்று ஆசார்ய ஹ்ருதயத்திலே அழகியமணவாளப்பெருமாள் நயினாருமருளிச்செய்தாரிறே. ஆகையால் இவ்வர்த்தம் சுத்த ஸம்ப்ரதாயஸித்தம். உள்ளதனைக்காலம் ஏத்திற்றாகிலும் மாம்ஸசக்ஷுஸ்ஸுக்குக் காணவொண்ணாதென்னுமிடத்தை, "என்றேனுங்கட்கண்ணாற்காணாதவவ்வுரு" என்றும், ஜ்ஞாநசக்ஷுஸ்ஸாலே காணுமத்தனையென்னுமிடத்தை, "நெஞ்சென்னுமுட்கண்ணாற் காணவுணர்ந்து" என்று பிறர்க்குபதேசித்தாரிறே. "தீயெம்பெருமானீரெம்பெருமான்றிசையுமிருநிலனுமாயெம்பெருமானாகிநின்றாலடியோங் காணோமால்" என்றும், "முன்னைவண்ணம்பாலின்வண்ணமுழுதுநிலைநின்றவின்னவண்ணமென்றுகாட்டீர்" என்றும் அருளிச்செய்ததும், ஜ்ஞாநஸாக்ஷாத்காரமே உள்ளதென்னுமிடத்தை "சிறிதுந்திருமேனி யின்னவண்ணமென்று காட்டீர்" என்று மருளிச்செய்தாரிறே. திருமங்கையாழ்வாரும்.

முதலாழ்வார்களும்; "ஞானச்சுடர்விளக்கேற்றியிறே" "திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்" என்றும் அருளிச்செய்ததும். இனி; ப்ரத்யக்ஷமாக அநுபவிக்கலாவது அர்ச்சாவதாரம். ஆகையாலே அவதார விசேஷங்களாய் ஶ்ரேஷ்டதம ஜந்மஜாதராய் அகிலருமுஜ்ஜீவிக்கும்படி அநாதியான அகஸ்த்யபாஷாரூபமான த்ராவிடவேதப்ரபந்தங்களை, பெண்ணும் பேதையும் அநுபவிக்கும்படி உபகரித்தருளின ஆழ்வார்கள் பக்கலிலும் அருளிச் செயல்களிலும் விஶ்வாஸபாஹுள்ய முண்டானவர்கள் ஜீவந்முக்த ரென்கிறது, (உகங) "ந

[illegible]

ஸர்வபூதாநுகம்பீ விஷயஸுகவிரக்தோ ஜ்ஞாநத்ருப்தஃ ப்ரஶாந்தஃ நியதநியதாஹோ நைவ ஹ்ருஷ்டோ ந ருஷ்டஃ ப்ரவஸித இவ கேஹே வர்த்ததே யஸ்ஸ முக்தஃ" (నశబ్దశాస్త్రాభిరతస్య మోక్షో నచైవరమ్యావసథప్రియస్య ఏకాంతశీలస్య దృఢవ్రతస్య పంచేంద్రియప్రీతినివర్తకస్య - నభోజనాచ్ఛాదనతత్పరస్య నలోకవృత్తిగ్రహణేరతస్య. అధ్యాత్మవిద్యారతమానసస్య మోక్షోధ్రువోనిత్యమహింసకస్య. శమదమనియతాత్మా సర్వభూతానుకంపీ విషయసుఖవిరక్తోజ్ఞానతృప్తః ప్రశాన్తః అనియతనియతాన్నో నైవహృష్టోన రుష్టః ప్రవసితఇవగేహేవర్తతే యస్సముక్తః) என்கிறபடியே அஸச்சாஸ்த்ராபிருசியையும் லோகயாத்ரையையும் கைவிட்டு, ஏகாந்தசீலராய், ஸிரச்சேத பட்டாபிஷேக பர்யந்தமான மஹாபத் ஸம்பத்துக்கள் சம்பவித்தாலும் ஸ்வாசாரப்ரச்யுதி வாராதபடி த்ருடாத்யவஸாய யுக்தராய், இந்த்ரிய கிங்கரரன்றிக்கே விஷ்ணுகிங்கரராய், ஆத்மயாதாத்ம்யஜ்ஞாந பரிசீலந பரராய், பூதஹிம்ஸையைவிட்டு ஸமதமாத்யாத்ம குணங்களை யுடையராய், சர்வபூததயாபரராய், அர்த்தகாமங்களை அருவறுத்துவிட்டு, ஜ்ஞாநபூர்த்தியையுடையராய், பாஹ்யகரண சாந்தியுக்தராய், நியதாஹாரராய், அத்யுத்ருதருமன்றியே கோபிகளுமன்றியே பார்யாபுத்ராதிகள்பக்கல் ஆசாபாசரஹிதராய், ஆசார்யவிச்வாஸ முடையரானவர்கள் திருவாய்மொழியையறியக்கற்று வல்லாராழ்கடல் ஞாலத்துள்ளே ஸ்ரீவைஷ்ணவர்களென்கிறது. இவ்வாழ்வார்கள் தம் பரமக்ருபையாலே இத்திவ்ய ப்ரபந்தங்களை உய்பவர்க் குய்யும்வண்ணமாக அருளிச்செய்து லோகத்தை வாழ்வித்தருளி, தன்னுடைச்சோதிக் கெழுந்தருளினார்கள்.

ஸ்ரீமதுரகவியாழ்வார் திருவடிகளேசரணம்.

ஜீயர்திருவடிகளேசரணம்.

ஆழ்வார்களின் வைபவங்கள்

முற்றிற்று.

ஸ்ரீமாநாதமுனிகள்



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

(க)

ஸ்ரீமந்நாதமுநிகள்ப்ரபாவம்.

இவ்வாழ்வார்கள் பரம க்ருபையாலே, இத்திவ்யப்ரபந்தங்களை; உய்பவர்க் குய்யும்வண்ணமாக அருளிச்செய்து உபகரித்தருளி தன்னுடைச்சோதிக் கெழுந்தருளினபின்பு, நெடுங்காலம் கழிந்தவாறே, வீரநாராயணபுரத்திலே மன்னனாரை ஸேவித்து நித்யவாசம்பண்ணிக்கொண்டு அவர்திருவடிகளிலே ஸர்வவிதகைங்கர்யங்களையும் செய்துகொண்டுபோருகிற ஈஶ்வரபட்டாழ்வாரும், அவர் குமாரர் நாதமுநிகளும், அவர்குமாரர் ஈஶ்வரமுநிகளும் ஒருநாளளவிலே, மன்னனார் திருமுன்பே சென்று, தண்டன் ஸமர்ப்பித்து, தேவரீர்; (உநஎ) "பரித்ராணாய ஸாதூநாம் விநாஶாய ச துஷ்க்ருதாம் - தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே" (పరిత్రాణాయ సాధూనాం వినాశాయ చ దుష్కృతాం - ధర్మసంస్థాపనార్థాయ సంభవామి యుగే యుగే) என்கிற திருமுகப்படியே, துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலநார்த்தமாக அவதரித்து, விளையாடியருளின ஸ்ரீமதுரை, திருவாய்ப்பாடி, ஸ்ரீப்ருந்தாவநம், யமுநாதீரம், ஸ்ரீகோவர்த்தநகிரி, ஸ்ரீமத்வாரகை முதலாக, மற்றும் திருவயோத்யை, ஸ்ரீசாளக்ராமாத்ரி, ஸ்ரீபதரிகாஶ்ரமம், ஸ்ரீநைமிசாரண்யம், ஸ்ரீஸிம்ஹகிரிகளாதியாகிற வடதிசையிலுள்ள திவ்யதேசங்களெங்கும் திருவடிதொழுது வரவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய; மன்னனாரும் அப்படியே செய்யுங்கோளென்று அர்ச்சகமுகேந விடைகொடுத்தருள; இவர்களும் ஸகுடும்ப

மாகப் புறப்பட்டுப்போய், உத்தரதேசத்திலுண்டான "வடதிசைமதுரை சாளக்கிராமம் வைகுந்தந்துவரை யயோத்தியிடமுடைவதரி ,, முதலான திவ்யதேசங்களைத் திருவடிதொழுது, (உகூஅ) " [illegible] " (యమునాంచాతిగంభీరాం నానావర్తఝషాకులాం) என்று புராணரத்நமான ஸ்ரீவிஷ்ணுபுராணத்திற் சொல்லுகிறபடியே, அதிகம்பீரமாய், பலசுழிகளையுடைத்தாய்ப் பெருகாநிற்கிற யமுநாதீரத்திலே கோவர்த்தநபுரம் என்கிற க்ராமத்திலே, " தூயபெருநீர் யமுனைத்துறைவன் ,, என்கிற எம்பெருமானைத் திருவடிதொழுது, மிகவும் ப்ரீதராய், இவ்விடத்திலே நித்யவாசம்பண்ணக் கடவோமென்று நிஶ்சயித்திருந்து, அவர்திருவடிகளிலே ஸர்வவித கைங்கர்யங்களும் பண்ணிக்கொண்டு, ஸேவித்திருக்கிறகாலத்திலே, மன்னனாரும்; நம்முடைய வீரநாராயணபுரத்தேற வரவேணுமென்று நாதமுநிகளுக்கு ஸ்வப்நங் காட்டியருள; இதுவொரு ஆஶ்சர்யமிருந்தபடி யென்னென்று, இவர்களும் தங்களிலே விசாரித்து, இனி நமக்குச் செய்யவடுப்பதென்னென்று யமுனைத்துறைவர் திருமுன்னே நின்று, தண்டன் சமர்ப்பித்து, இச்செய்தியை விண்ணப்பஞ்செய்ய; அவரும் அர்ச்சகமுகேந அப்படியே செய்யுங்கோளென்று தீர்த்தப்ரஸாதமும் ப்ரஸாதித்து விடைகொடுத்தருளினார். இவர்களும் அங்குநின்றும்குடும்பஸஹிதமாகப்புறப்பட்டு, வாராணசிவழியாகவெழுந்தருளி, (உகூகூ) " [illegible] " (సప్తస్వపి చ లోకేషు దేవరాజే - నాస్తినాస్తిసమం క్షేత్రముత్తమం పురుషోత్తమం) என்று சதுர்த்தசபுவனங்களிலும் ஸ்வஸத்ருஶரஹிதமாகச் சொல்லப்படுகிற ஸ்ரீபுருஷோத்தமத்தேற வெழுந்தருளி, ஸ்ரீஜகந்நாதனையும் திருவடி தொழுது, அங்குநின்றும் புறப்பட்டு, ஸிம்ஹாத்ரியேற வெழுந்தருளி, ஸிம்ஹாகிரியப்பனையும் சேவித்து, அங்குநின்றும்போந்து, (உசா0) " [illegible] " (అహోవీర్యమహోశౌర్యమహో బాహుపరాక్రమం నారసింహం మహాదైవమహోబలమహోబలం) என்றுசொல்லப்பட்ட அஹோபிலநுஸிம்ஹத்தையும் திருவடிதொழுது, அங்குநின்றும் போந்து, " பரன்சென்றுசேர்திருவேங்கடமாமலை " என்கிற திருமலையாழ்வாரையும் சேவித்து (உசக) " [illegible]

ரிணீதீரே ரமயாஸஹமோததே " (మాయాదీపరమాస్య వ్యాఘ్రైకుణ్ఠముత్తమం - స్వామిపుష్కరిణీతీరే రమయాసహమోదతే) என்கிறபடியே 'ஜகந்நாடகஸூத்ரதாரியான ஸ்ரீவைகுண்டநாதன்; பரமபதத்தையும் உபேக்ஷித்து, இவ்விபூதியிலுள்ளாரை ரக்ஷிக்கையிலுள்ள நசையாலே திருக்கோனேரிக்கரையிலே, திருமகளுடனே சர்வசுலபனாயிருக்கிற திருவேங்கடத்தப்பனையும் திருவடிதொழுது, அவ்விடத்தே நித்யவாசம்பண்ணுவோமென்று பார்க்க; மன்னனார் திருவுள்ளமாகாமையாலே, அதிசீக்ரமாக அங்குநின்றும் புறப்பட்டு, கடிகாசலத்தேற வெழுந்தருளி, " கடிகைத்தடங்குன்றின்மிசையிருந்த அக்காரக்கனி யழகியசிங்கரையும்சேவித்து, அங்குநின்றும்போந்து, " புட்குழி யம்போரேற்றின் நயினாரையும்சேவித்து, பெரியவுடையாரையும் சேவித்து, அங்குநின்றும்போந்து, (௨௬௨) " நகரீணாஞ்சஸர்வாஸாம் புரீணாஞ்சகாஞ்சீ விஶிஷ்யதே - கிரீணாஞ்சாபிஸர்வேஷாம் ஶ்ரேஷ்டோ ஹஸ்திகிரிஸ்ததஃ - தேவதஸ்ய ப்ரதிமே புண்யகோட்யாக்யே விமானே ஹஸ்திஶைலாக்ரே ஸர்வபூதா நாமப்யபரித்ருஶ்யதே " (నగరీణాంచసర్వాసాం పురీణాంచకాంచీ విశిష్యతే - గిరీణాంచాపిసర్వేషాం శ్రేష్ఠోహస్తిగిరిస్తతః - దేవతస్య ప్రతిమేతిపుణ్యకోటివిమానే హస్తిశైలాగ్రే - సర్వభూతానామప్యపరిదృశ్యతే) என்று சொல்லுகிறபடியே, வேகவதியின் வடகரையிலே, உத்தமமான கச்சிமாநகரத்திலே, கிரிகளில் வைத்துக்கொண்டு ஶ்ரேஷ்டமான ஹஸ்திகிரியின்மேலே, புண்யகோட்யாக்யமான விமானமத்யத்திலே யெழுந்தருளிநின்று, ஸர்வசேதநராலும் ஸேவ்யமானராய் ஸர்வ பலப்ரதரான பேரருளாளனையும் சேவித்து, அவ்விடத்தில் மற்றுமுண்டான திருப்பதிகளையும் சேவித்து, அங்குநின்றும் போந்து, திருவயிந்திரபுரத்தில் தேவநாயகனையும் திருவடிதொழுது, அங்குநின்றுமெழுந்தருளி, திருக்கோவலூராழ்வார்கள் நயினாரையும் திருவடிதொழுது, அங்குநின்றும்போந்து, (௨௬௩) " ரங்கம்ரங்கமிதிப்ரூயாத் க்ஷுத்ப்ரஸ்கலநாதிஷு - விஷ்ணோர்லோகமவாப்நோதி ஸத்யஃபாபக்ஷயாந்நரஃ " (రఙ్గంరఙ్గమితిబ్రూయాత్ క్షుత్ప్రస్ఖలనాదిషు - విష్ణులోకమవాప్నోతిసద్యఃపాపక్షయాన్నరః) என்று சொல்லுகையாலே தும்மல்தொடக்கமான கலக்கங்கள்வந்தால், தத்தோஷநிவர்த்த்யர்த்தமாகத் திருவரங்கம்பெரியகோயில் என்றநுசந்தேயமாய், அதுவேபாபஹரமாய்மோக்ஷப்ரதமுமான திருவரங்கப்பெருநகரிலே யெழுந்தருளி, நம்பெருமாளையும் சேவித்து, அங்குநின்றுமெழுந்தருளி, திருக்குடந்தையில் ஆராவமுதாழ்வாரையும் சேவித்து, அங்குநின்றும் மீண்டுவீரநாராயணபுரத்து மன்னனார்கோயிலேறவெழுந்தருள; அங்குள்ளஸ்ரீவைஷ்ணவர்களெல்லாரும் எதிர்கொண்

டுவரப்புகுந்து, மன்னனாரைத்திருவடிதொழுது அதிப்ரீதராயிற்க; மன்ன
னாரும்திருவுள்ளம்போர உவந்தருளி, அங்குள்ள ஸ்ரீவைஷ்ணவரெல்லாரை
யும் அழைத்தருளி, நமக்குப்ரியமாயிருக்கு மிவர்களைப்போர ஆதரித்துக்கொ
ண்டு போருங்கோளென்றருளிச்செய்ய ; அவர்களும் அதுக்கிடாகத்திருமா
ளிகைகட்டிக்கொடுத்து, அமுதுபடிமுதல்மற்றும் திருமாளிகைக்குவேண்டு
மவையெல்லாம் " நாளும்பைங்கானமீதெல்லாமுனதேயாக ,, என்கிறபடியே
நடத்திக்கொண்டுபோருகிறகாலத்திலே, இவர்களும் மன்னனாருக்குத்திரும
தவனம்செய்து, திருமாலைகட்டிச்சாத்தி ; அமுதுபடி, சாத்துபடி, திருவிள
குமுதலானவைகளெல்லாம்குறைவறநடத்தி, வித்வத்கோஷ்டிகளும்சாஸ்த்
ப்ரவர்த்தநங்களும் எல்லாம்பண்ணிக்கொண்டிருக்கச்செய்தே, மேல்நாட்டி
ல் நின்றும் சில ஸ்ரீவைஷ்ணவர்கள் எழுந்தருளி, மன்னனாரைசேவித்து, அ
வர்திருமுன்னே " ஆராவமுது ,, என்கிறதிருவாய்மொழியை யநுசந்தித்
ருள ; அத்தை நாதமுநிகள்கேட்டருளி, அதிப்ரீதராய், அவர்களைப்பார்த்து
ஆயிரத்துள்இப்பத்தென்றிருந்தது, இப்ரபந்தம்உங்களுக்கு முற்றப்போமோ
வென்றுகேட்டருள ; அவர்களும்இப்பத்துப்பாட்டு மேவருவதென்று விண்
ணப்பஞ்செய்ய ; இவரும் உங்கள்நாட்டிலே ஸ்ரீகோசமுண்டோ ? பாட
போவாருமுண்டோ வென்று கேட்டருள ; எங்களுக் கிவ்வளவுபாடம் வ
வது, வேறொருவிடத்திலுமில்லையென்று அவர்கள் விண்ணப்பஞ்செய்ய
இவரும் அவர்களுக்கு மன்னனாருடைய தீர்த்தப்ரஸாதமும் ப்ரஸாதிப்பி
கருளி, நாதமுநிகளும் சடகோபன் அவதரித்தருளின திருக்குருகூர் ப்ரதே
சத்திலே யுண்டாகவேணுமென்று திருநகரிக்கெழுந்தருளி, ஆழ்வாரையு
பொலிந்துநின்ற பிரானையும் சேவித்து, அங்கே ஸ்ரீமதுரகவிகளுடைய சி
யரான ஸ்ரீபராங்குசதாஸரை ஸேவித்து, இவ்விடத்திலே திருவாய்மொ
யோதினவர்களுண்டோ ? ஸ்ரீகோசமுண்டோ என்றுகேட்டருள ; அவரு
திருவாய்மொழியும் மற்றுமுள்ள திவ்யப்ரபந்தங்களும் நெடுங்காலமுண்
ப்ரமுஷிதமாய்த்து, இப்போது எங்களாசார்யரான ஸ்ரீமதுரகவிகள் அடிே
னுக்கு ; கண்ணிநுண்சிறுத்தாம்பு என்கிற திவ்யப்ரபந்தத்தை ப்ரஸாதி
தருளி, இக்கண்ணிநுண் சிறுத்தாம்பை ஆழ்வார் திருமுன்பே ஏகாஸ
திலேயிருந்து, ஏகாக்ரசித்தராய், ஆழ்வார்திருவடிகளை த்யானித்துக்கொண்
நியமத்துடனே பன்னீராயிரமுரு அநுஸந்திக்க ஆழ்வார்ப்ரஸந்நராவரென்
அருளிச்செய்தாரென்ன ; நாதமுநிகளும் அந்த திவ்யப்ரபந்தத்தை அடிே
னுக்கு ப்ரஸாதித்தருளவேணுமென்று தண்டன் சமர்ப்பித்து விண்ணப்
செய்ய ; அவரும் இவருக்கு மிகவு முவப்புடனே அந்த திவ்யப்ரபந்தத்

ஓதுவித்தருள ; நாதமுநிகளும் ஓதி, திருப்புளியாழ்வாரடியிலே, ஆழ்வார் திருமுன்பே பன்னீராயிரமுரு கண்ணிநுண்சிறுத்தாம்பை நியமத்தோடே அநுஸந்திக்க ; (உசச) “ ஆஸ்திக்யாதிகுணஶ்ரீமாந் வைஷ்ணவஸ்ஸாது: - ஸம்ஶ்ரிதஸ்ஸம்ஶிஷ்யோ ஹ்யபிதீயதே ” (ఆస్తిక్యాదిగుణశ్శ్రీమాన్ వైష్ణవస్సాధు: - సంశ్రితస్తుర్యధీరష్ట్యష్యత్వభిధీయతే) என்று சொல்லப்படுகிற சிஷ்யலக்ஷணமான ஆஸ்திக்யாதிகுணங்களையுடையரான நாதமுநிகளுக்குப் பெரியபிராட்டியார் நியோகேந மிகவும் ப்ரஸந்நராயருளி, இந்நாதமுநிகளைக் குறித்து அசரீரிவாணி சொல்லுமாபோலே திருவாய்மலர்ந்து, ஏன்காணும் நம்மைக்குறித்து பஹுகாலமாய் உபாசியாநின்றீர் என்றுகேட்டருள ; நாதமுநிகளும் திருவாய்மொழி முதலான திவ்யப்ரபந்தங்களை அடியேனுக் கிரங்கியருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய ; ஆழ்வாரும் ப்ரீதியுடனே சர்வேஶ்வரன் தமக்கு “ மயர்வறமதிநல மருளினாற்போலே நாதமுநிகளுக்கு, (உசரு) “ திவ்யம் ததாமி தே சக்ஷு: ” (దివ్యం దదామి తే చక్షు:) என்கிறபடியே திவ்யஜ்ஞாநசக்ஷுஸ்ஸை ப்ரஸாதித்தருளி, ரஹஸ்யத்ரயார்த்தத்தையும் திருவாய்மொழிமுதலான மற்றுமுள்ள நாலாயிரப்ரபந்தங்களையும் அகிலதர்ஶந தாத்பர்யங்களையும் அஷ்டாங்கயோகரஹஸ்யத்தையும் ப்ரஸாதித்தருளினார். “ மிக்கவேதியர்வேதத்தினுட்பொருள் - நிற்கப்பாடியென்னெஞ்சு ணிறுத்தினான் ” என்றுசொல்லுகிறபடியே நாதமுநிகளும்க்ருதார்த்தராய், பொலிந்து நின்றபிரானையும் ஆழ்வாரையும் சேவித்திருக்கிற அளவிலே, மன்னனார் இப்ரபந்தங்களை நம்முடைய முன்னே ஒரு உருச்சொல்லவாருமென்று நாதமுநிகளுக்கு ஸ்வப்நமுகேந அருளிச்செய்ய ; இவரும் மற்றைநாள் பொலிந்துநின்றபிரானையும் ஆழ்வாரையும் சேவித்து நின்று, இச்செய்தியை விண்ணப்பஞ்செய்ய ; ஆழ்வாரும் அர்ச்சகமுகேந, ஆகில் ? நீர் வீரநாராயண புரத்தேறப்போய் இப்ரபந்தங்களை சமதமாத்யாத்மகுணங்களை யுடையரான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அறியக்கற்று வல்லராம்படி ஓதுவியுமென்று நியமித்து, தீர்த்தப்ரஸாதங்களையும் ப்ரஸாதித்து, விடைகொடுத் தருளினார். நாதமுநிகளும் மீண்டு வீரநாராயணபுரத்தேற வெழுந்தருளும்போது வழியிலுள்ள திருப்பதிகளையும் அந்தத் திருப்பதிவைபவமான திவ்ய ப்ரபந்தாநுஸந்தாநம்பண்ணிக்கொண்டு சேவித்துமீண்டு, வீரநாராயணபுரத்தேறவந்து புகுந்து, மன்னனாரைத் திருவடிதொழுது நின்று, தம்மை ஆழ்வார் விசேஷ கடாக்ஷம்பண்ணி திவ்ய ப்ரபந்தங்களையும் ப்ரஸாதித்தருளின செய்தியை மன்னனாருக்கு விண்ணப்பஞ் செய்ய ; மன்னனாரும் மிகவு முவப்புடனே இவருடன் உருவும் ஸ்வப்நமுகேந அருளிச்செய்து, சம்ஸாரிகளை யுஜ்ஜீவிப்

பிங்கைக்காக நாம் காணகளேபரங்களைக் கொடுத்தும், சாஸ்த்ரங்களைத் தந்தும், நாமேவந்து பிறந்தும் இவையித்தனையும் செய்தவிடத்திலும் கார்யகரமாயிற்றில்லை. பின்பு ஆழ்வார்களுடைய திவ்யப்ரபந்தமுகேந வாய்த்துத் திருக்கிற்று. இப்படிப்பட்ட ப்ரபந்தங்கள் ப்ரமுஷிதமாய்க் கிடக்க வொண்ணாதென்று பார்த்தருளி, இவரைக்கொண்டு இவற்றை ப்ரகாசிப்பிக்கவேணுமென்று நினைத்து, நீர் இவற்றை இயலு மிசையு மாக்குமென்று அர்ச்சகமுகேந நியமித்தருள ; நாதமுநிகளும் தம்முடைய மருமக்களான கீழையகத் தாழ்வாரையும் மேலையகத் தாழ்வாரையும் அழைத்தருளி, ஆழ்வார் தம்மை விசேஷகடாக்ஷம் பண்ணியருளின இத்திவ்யப்ரபந்தங்களை இயலுமிசையுமாக்கவேணும், அதுசெய்மிடத்து இன்கவிபாடும் பரமகவிகளாலே "செஞ்சொலாலெடுத்ததெய்வநன்மாலை"யானதிவ்யப்ரபந்தமாகையாலேஇத்தை திவ்யகாநத்திலே சேர்த்துப் பாடவேணுமென்று அவர்களையுங் கூட்டிக்கொண்டு, ஸ்ரீவேதவ்யாஸபகவான் வேதங்களை உதாத்தாநுதாத்த ஸ்வரித ப்ரசயயுக்தங்களாக வுச்சரிக்கலாம்படி பண்ணினாற்போலே நாதமுநிகளும் இத்திவ்யப்ரபந்தங்களை திவ்யகாநத்திலே யடைத்து, இயலுமிசையுமாக்கிப் பாடுவித்தருள ; இது லோகத்திலே ப்ரஸித்தமாயிற்று. அநந்தரம் அந்த ராஜ்யத்துக்கு ராஜாவான சோழன்வாசலிலே, கங்கைகொண்டசோழபுரத்தினின்றும் தேவகாநம் பாடுவாளொருத்தியும் மநுஷ்யகாநம்பாடுவாளொருத்தியுமாகிய இரண்டு வாரஸ்த்ரீகள் தங்களிலே வாதமாய்வந்து, ராஜசந்நிதியிலே வித்வான்களைத் திரட்டிப்பாட ; ராஜாவும் அங்குள்ளவித்வான்களும் மநுஷ்யகாநம்பண்ணுகிறவளைக்கொண்டாடி, அவளுக்கு ஆனையும் மாலையும் த்யாகமும் கொடுத்து, தேவகாநம்பாடுகிறவளை அநாதரித்துத் தள்ளிவிட ; அவளும், நான்பாடுகிறபாட்டும் காநமும் தேவதைகளறியு மித்தனையென்று தேவாலயங்கள்தோறும் புக்குப் பாடிக்கொண்டு வந்து, மன்னனார் கோயிலிலே அவர்முன்னேபாட ; நாதமுநிகளும் அதைக்கேட்டருளி, உகந்து கொண்டாடி, அவளுக்கு மன்னனாருடைய தீர்த்த ப்ரஸாதமும் திருப் பரிவட்டமும் ப்ரஸாதிப்பித்தருளினார். அவளும் இவரை தண்டனிட்டுப்போய் அந்த ராஜாவுடன், நான்பாடுகிற தேவகாநம் அறிவாரொருவர் வீரநாராயணபுரத்தில் மன்னனார்கோயிலிலே யிருக்கிறாரென்ன ; ராஜாவும் நாதமுநிகளை எழுந்தருளவேணுமென்று அழைத்துவரவிட ; இவரும் திருவாய்மொழிமுதலான திவ்யப்ரபந்தங்களை திவ்யகாநத்திலே யடைத்தோம், நாட்டார் இதின்வைபவமறியார்கள். இத்தை நாம் அறிவிக்கவேணுமென்று திருவுள்ளம்பற்றி ராஜகோஷ்டியேற வெழுந்தருள ; ராஜாவுமெழுந்திருந்து தண்

டன்ஸமர்ப்பித்து ஆசநமிட எழுந்தருளியிருந்து ஆசிர்வதிக்க, ராஜாவும் ஆதரத்துடனே இவள்பாடுகிற தேவகாநம் தேவரீர் அறிவீரோவென்றுகேட்க; இவரும் மநுஷ்யகாநம் பாடுகிறவளையும் தேவகாநம் பாடுகிறவளையும் இருவரையும் பாடச்சொல்லிக் கேட்டருளி, ராஜாவைக்குறித்து, இவள்பாடுகிற மநுஷ்யகாநம் உங்களுக்குத்தெரியும், இவள்பாடுகிற தேவகாநம் தேவர்களுக்குத்தெரியும் உங்களுக்குத் தெரியாதென்ன, ராஜாவும் தேவரீர் அறிவீரென்னுமிடம் நாங்களறியும்படி யெங்ஙனேயென்ன, நாற்பதுநாறு தாளத்தைச் சேரவொற்றச்சொல்லி, இது இத்தனையெடை, இது இத்தனையெடையென்று நாதமுநிகளருளிச்செய்ய; அவற்றை ராஜாவும் தனித்தனியே நிறுத்துச் சோதித்துப்பார்க்க; அவையெல்லாம் முந்திரியும் ஏறுமாற்குறையாமலிருந்தபடியைக்கண்டு போர ஆஶ்சர்யப்பட்டு, நாதமுநிகளுடைய ஸ்ரீபாதத்திலே தண்டனிட்டு, பஹுத்ரவ்யத்தை ஸமர்ப்பிக்கத்தேட; இவரும், சதுர்முக பசுபதி ஶதமகப்ரப்ருதி பதங்களை நிராகரித்திருக்கும் நிஸ்ப்ருஹராகையாலே நமக்கிவையொன்றும் வேண்டாவென்று ராஜாவை ஆசீர்வதித்து மீண்டு, வீரநாராயணபுரமே யெழுந்தருளி, மன்னனார் திருவடிகளில் கைங்கர்யைகநிரதராய் வாழ்ந்துகொண்டிருக்குங் காலத்திலே, இவர் ஸ்ரீபாதத்தில் ஆஶ்ரயித்து, (௨௪௬) "ஶரீரம் வஸு விஜ்ஞாநம் வாஸ꞉ கர்ம குணாநஸூந் - குர்வர்த்தம் தாரயேத்யஸ்து ஸ ஶிஷ்யோ நேதரஸ்ஸ்ம்ருத꞉" (శరీరం వసువిజ్ఞానం వాసః కర్మగుణానసూన్ - గుర్వర్థం ధారయేద్యస్తు స శిష్యో నేతరస్స్మృతః) என்று சொல்லப்படுகிற குணங்களையுடையரான உய்யக்கொண்டார், குருகைக்காவலப்பன், நம்பிகருணாகரதாஸர், ஏறுதிருவுடையார், திருக்கண்ண[illegible], வானமாமலைத்தெய்வநாயகன், உருப்பட்டூர் ஆச்சான் பிள்ளை, சோகத்தூராழ்வான், என்கிற எண்மர்க்கும், (௨௪௭) "அஹோ த்வயஸ்ய மாஹாத்ம்யம் அஹோ வீர்யம் அஹோ பலம் - மந்த்ரரத்நம் ஶுபகரம் வேதஸாரம் ஸநாதநம்" (అహో ద్వయస్య మాహాత్మ్య మహో వీర్య మహో బలం - మంత్రరత్నం శుభకరం వేదసారం సనాతనం) என்கிறபடியே மந்த்ரரத்நமென்று ஶ்லாகித்துச் சொல்லப்படுகிற த்வயார்த்தத்தையும் ப்ரஸாதித்து, திருவாய்மொழி முதலான திவ்யப்ரபந்தங்களையும் ஓதுவித்து, வேதசாஸ்த்ரங்களையும் அதிகரிப்பித்து, ரஹஸ்யத்ரயஸாரார்த்தமாய் சகலஜகத்காரணபூதனான ஸ்ரீபுருஷ நிர்ணயத்தையும் ந்யாஸதத்வத்தையும் அருளிச்செய்து, "கரியகோலத்திருவுரு"வை த்யாநித்துக்கொண்டு யோகத்திலே யெழுந்தருளியிருந்தார்.

ராஜா இவருடைய யோகவைபவங் கேட்டு, அங்கேறவந்து, மன்னனாரையும்சேவித்து, தானும் ஸ்த்ரீகளுமாகவந்து, இவர் யோகத்திலே எழுந்தருளியிருக்கும்படியைக் கண்டு, ஆஶ்சர்யப்பட்டு, மீண்டுபோகிற அளவிலே, இவர் "திருவுடைமன்னரைக்காணில்திருமாலைக்கண்டேனே" என்கிற படியே அவர்களை க்ருஷ்ணனும் கோபிமாருமாகநினைத்து, அவர்கள்பின்னே கங்கைகொண்ட சோழபுரத்தேற வெழுந்தருளாநிற்க, இதுகேட்டு, உய்யக்கொண்டார், குருகைக்காவலப்பன் உள்ளிட்ட முதலிகளடையப் பின்தொடர்ந்தெழுந்தருளி, கங்கைகொண்ட சோழபுரத்தேகண்டு, தேவரீர் இப்படி செய்யலாமோவென்று விண்ணப்பஞ்செய்ய, நாதமுநிகளும் அவர்களுடனே க்ருஷ்ணனும் பெண்களுமாக நினைத்து வந்தேனென்றருளிச்செய்து மீண்டெழுந்தருளினார். சிலநாள் கழிந்தவாறே, பின்னையுமொருக்கால் ராஜா வந்து மன்னனாரைசேவித்து மீண்டுபோகிறவன், தன் சாமந்தன் தலையிலே அடியிட்டு, யானைக்கழுத்திலேற, இத்தை நாதமுநிகள்கண்டு, ஸர்வேஶ்வரன் ப்ரஹ்மருத்ராதிகள்தலையிலே அடியிட்டு, பெரியதிருவடிமேற் கொள்ளும்படி யிதுவாகாதேயென்று மோஹித்தாரென்று ப்ரஸித்தமிறே. பின்னையும் சிறிதுகாலம் யோகத்திலே யெழுந்தருளி யிருந்து, குருகைக் காவலப்பனைப்பார்த்து, நீர் யோகரஹஸ்யத்தை அப்யஸியுமென்று அஷ்டாங்க யோகக்ரமத்தை அவருக்கு அருளிச்செய்தருளினார்.

உய்யக்கொண்டாரையும் பார்த்து, நீரும் யோகரஹஸ்யத்தை அப்யஸியுமென்ன; உய்யக்கொண்டாரும், பிணம்கிடக்க மணம்புணரலாமோ, இந்த சரீராவஸாநதசையிலே அநுபவிக்க வமையுமென்று விண்ணப்பஞ்செய்ய, ஆகில், நீர் சாஸ்த்ரத்தையும் திருவாய்மொழிமுதலான திவ்ய ப்ரபந்தங்களையும் ப்ரவர்த்திப்பியுமென் றருளிச்செய்து, தம்புத்ரராகிய ஈஶ்வரமுநிகளைப்பார்த்து, உமக்கொரு குமாரர் உண்டாகப்போகிறார், அவருக்கு யமுனைத் துறைவரென்று திருநாமம் சார்த்துமென்று அருளிச்செய்து, உய்யக்கொண்டாரையும் குருகைக் காவலப்பனையுங் குறித்து, உங்களுக்கு நாம்சொன்ன தர்ஶநதாத்பர்ய யோகரஹஸ்யார்த்தவிசேஷங்களை யமுனைத்துறைவர்க்குஉபதேசியுங்கோளென்று நியமித்தருளி, முன்புபோலே யோகத்திலே யெழுந்தருளியிருந்தார்.

அநந்தரம், அந்தராஜா ஸபரிகரனாய், வேட்டைக்குவந்து மீண்டு போகாநிற்கச்செய்தே, இவருடைய பெண்பிள்ளைகள் வந்து, ஐயா! நம் மகத்திலே ஒருகுரங்கும் இரண்டு வில்லிகளும் ஒரு பெண்பிள்ளையுமாக வந்து நாதமுநிகள் எங்கேயென்று தேடிப்போனார்கள் என்றவாறே, நாத

முனிகளும், (௨௪௮) “ 𑌅𑌗𑍍𑌰𑌤𑌃 𑌪𑍍𑌰𑌯𑌯𑍌 𑌰𑌾𑌮𑌃 𑌸𑍀𑌤𑌾 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌸𑍁𑌮𑌧𑍍𑌯𑌮𑌾 - 𑌪𑍃𑌷𑍍𑌠𑌤𑌸𑍍𑌤𑍁 𑌧𑌨𑍁𑌷𑍍𑌪𑌾𑌣𑌿𑌰𑍍𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑍋𑌽𑌨𑍁𑌜𑌗𑌾𑌮 𑌹 ” (అగ్రతఃప్రయయౌ రామస్సీతామధ్యేసుమధ్యమా - పృష్ఠతస్తుధనుష్పాణిర్లక్ష్మణోనుజగామహ) என்று சொல்லப்பட்ட பெருமாளும் பிராட்டியும் பின்சென்ற வில்லியான இளையபெருமாளும் ப்ரயோஜநாந்தர நிரபேக்ஷராகையாலே பெருமாளுகந்து ஸஹபோஜநயோக்யரான ஐந்த்ரவ்யாகரண பண்டிதனுமாக வடுக்குமென்று திருவுள்ளம்பற்றி, பின்தொடர்ந் தெழுந்தருளி, வழியில் எதிரே சந்தித்தவர்களை ; இப்படி போகிறவர்களைக் கண்டீர்களோவென்று கேட்டருள ; அவர்களும் போகிறார் போகிறார்களென்று சொல்ல ; கடுநடையிட்டு நெடுந்தூர மெழுந்தருளி, கங்கைகொண்ட சோழபுரத்தில் கீழ்வாசலளவாக வெழுந்தருளி, அங்குள்ளவர்களை இப்படி போகிறவர்களைக் கண்டீர்களோ வென்று கேட்டருள ; அவர்களுங் கண்டிலோமென்ன ; அவர்களுங் காணக்காணமறைந்திட, இவரும் ஏங்கி யடித்துக்கொண்டு விழுந்து மோஹித்து, அதுவே ஹேதுவாக (௨௪௯) “ 𑌪𑌰𑌂 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌂 𑌲𑍋𑌕𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑌨𑍍𑌦𑌸𑍁𑌖𑌾𑌵𑌹𑌂 - 𑌤𑌤𑍍𑌰 𑌸𑌂𑌵𑌾𑌹𑌿𑌨𑍀𑌂 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌂 𑌵𑌿𑌰𑌜𑌾𑌂 𑌵𑍇𑌦𑌸𑌂𑌭𑌵𑌾𑌂 - 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌹𑌿𑌰𑌣𑍍𑌮𑌯𑌾𑌸𑍍𑌤𑌤𑍍𑌰 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌵𑍇𑌦𑌮𑌯𑌾𑌃 𑌶𑍁𑌭𑌾𑌃 - 𑌅𑌪𑍍𑌰𑌾𑌕𑍃𑌤𑌮𑌯𑌾 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌃 𑌪𑍁𑌨𑌰𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌾𑌃 - 𑌏𑌕𑌾𑌨𑍍𑌤𑌿𑌨𑌸𑍍𑌸𑌦𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌧𑍍𑌯𑌾𑌯𑌿𑌨𑍋 𑌯𑍋𑌗𑌿𑌨𑍋 𑌹𑌿 𑌯𑍇 - 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌤𑌤𑍍𑌰 𑌪𑌰𑌂 𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌯𑌦𑍍𑌵𑍈 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌸𑍂𑌰𑌯𑌃 ” (పరంవైష్ణవంలోకం నిత్యానన్దసుఖావహం - తత్రసంవాహినీందివ్యాం విరజాంవేదసంభవాం - సర్వేహిరణ్మయాస్తత్ర సర్వేవేదమయాశ్శుభాః - అప్రాకృతమయానిత్యాః పునరావృత్తివర్జితాః - ఏకాన్తినస్సదాబ్రహ్మ ధ్యాయినోయోగినోహియే - తేషాన్తత్పరమంస్థానం యద్వైపశ్యన్తిసూరయః) என்று சொல்லுகிறபடியே, பின்னைகொடுக்கிலும் போகவொட்டாத “அடியார் நிலாகின்றவைகுந்த” மாநகரை ப்ராபித்தருளினார்.

கலந்து பிரிந்த பிராட்டி பத்துமாசம் பிரிந்திருந்தாள், இவர் கண்டுகந்து காண்பதற்குமுன்னே காணப்பெறாத விழவிருந்திக்கொண்டுபோகவெழுந்தருளினார். நாதமுனிகள் திருநக்ஷத்ரம், ஆநிமாசத்தில் அநுராதை. அவர் தனியன் (௨௫௦) “ 𑌵𑍍𑌯𑍋𑌮𑍍𑌨𑌃 𑌪𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍𑌸𑍍𑌵𑌵𑌿𑌧𑌂 𑌸𑌮𑍇𑌤𑍍𑌯 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾𑌨𑌿𑌯𑍋𑌗𑌾𑌤𑍍 𑌕𑍁𑌰𑍁𑌕𑌾𑌧𑌿𑌰𑌾𑌜𑌃 - 𑌸𑌮𑌸𑍍𑌤𑌰𑌤𑍍𑌨𑌦𑍍𑌵𑌯𑌮𑌾𑌹 𑌯𑌸𑍍𑌮𑍈 𑌨𑌾𑌥𑌾𑌯 𑌤𑌸𑍍𑌮𑍈 𑌮𑍁𑌨𑌯𑍇 𑌨𑌮𑍋𑌽𑌸𑍍𑌤𑍁. ” (వ్యోమ్నఃపరస్తాత్స్వవిధంసమేత్యలక్ష్మ్యానియోగాత్కురుకాధిరాజః సమస్తరత్నద్వయమాహయస్మైనాథాయతస్మైమునయేనమోస్తు.)

இச்செய்தியை உய்யக்கொண்டார், குருகைக்காவலப்பன், ஈஶ்வரமுநிகள்முதலானவெல்லாருங்கேட்டு வ்யாகுலப்பட்டு, அங்கேறப்போய் அவருடைய விமலசரம விக்ரஹத்தைச்சேவித்து, தங்கள் கண்ணிலும் நெஞ்சிலுந் தேக்கிகொண்டு ஶோகார்த்தராய்க்கிடந்து துடித்து, தங்களிலேதேறி தரித்து நின்று, சரமகைங்கர்யத்தை ஈஶ்வரமுநிகள் திருக்கையாலே ப்ரஹ்மமேதவிதிஸம்ஸ்காரமடங்கச்செய்வித்துபள்ளிபடுத்தருளினார்கள். பின்பு வீரநாராயணபுரத்தேற வெழுந்தருளி மற்றுஞ் செய்யவேண்டுங் க்ருத்யங்களெல்லாம் ஈஶ்வரமுநிகளைக்கொண்டு செய்வித்து, நாதமுநிகளெப்போதும் யோகத்திலே எழுந்தருளி யிருக்குமிடத்தருகே குருகைக் காவலப்பனும் யோகத்திலே யெழுந்தருளியிருந்தார்.

ஸ்ரீமந்நாதமுநிகள்திருவடிகளேசரணம்.

ஜீயர்திருவடிகளேசரணம்.

(௨)

ஸ்ரீ உய்யக்கொண்டார்ப்ரபாவம்.

அநந்தரம் உய்யக்கொண்டாரும், நாதமுநிகள் ஸ்ரீபாதத்திலே யாஶ்ரயித்த முதலிகளையுங் கூட்டிக்கொண்டு, தர்ஶநார்த்தங்களையும், திருவாய்மொழிமுதலான திவ்ய ப்ரபந்தங்களையு மருளிச்செய்துக்கொண் டிருக்குங் காலத்திலே, இவர்ஸ்ரீபாதத்திலே யாஶ்ரயித்த முதலிகள் மணக்கால்நம்பி, திருவல்லிக்கேணிப்பாண்பெருமாளரையர், சொட்டைப்பூசிச் செண்டலங்காரர், ஸ்ரீபுண்டரீகாக்ஷதாஸர், உலகுபெருமாள்நங்கை யென்கிற இவ்வைவர்கள்.

இவர்களில் மணக்கால்நம்பி பன்னிரண்டு ஸம்வத்ஸரம் ஸ்வாசார்யரான உய்யக்கொண்டார் திருவடிகளிலே (௨௫௧) "𑌅𑌹𑌂𑌸𑌰𑍍𑌵𑌂𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿" (అహంసర్వంకరిష్యామి) என்கிற இளையபெருமாளைப்போலே ஸர்வவித கைங்கர்யங்களும் பண்ணிக்கொண்டு போருகிறகாலத்திலே, உய்யக்கொண்டார் தேவிகளாகிய ஆண்டாள்திருநாட்டுக்கெழுந்தருள, திருமாளிகைகைங்கர்யமெல்லாம் தமக்கே பரமாய் நடத்திக்கொண்டு போகச்செய்கே. உய்

ஸ்ரீ உய்யக் கொண்டார்.

யக்கொண்டார் பெண்பிள்ளைகளிருவரையும் நீராடப்பண்ணி எழுந்தருளப்பண்ணிக்கொண்டுவரச்செய்தே, வழியிலே வாய்க்கால் சேறாயிருக்கக்கண்டு அவர்கள் திகைத்துநிற்க; தாம் படியாய்க்கிடந்து அவர்கள் தம் முதுகிலே அடியிட்டெழுந்தருள்வித்துக்கொண்டு போக, உய்யக்கொண்டாரும் இச்செய்தியைக்கேட்டருளி இவரிப்படி செய்வதேதென்றுபோர ப்ரீதராய், இவருத்தமாங்கத்தை திருவடித் தாமரைகளாலே யலங்கரித்து, பொன்னடிப்பூமுடிசூட்டி, உமக்கு நாம் செய்யவேண்டுவ தென்னென்று கேட்டருள, "உற்றேனுகந்துபணிசெய்துனபாதம் பெற்றேனீதேயின்னம்வேண்டுவதெந்தாய்" என்று தேவரீர் திருவடிகளில் சேவையே வேண்டுவதென்ன; உய்யக்கொண்டாருமுகந்து, உகப்பின்மிகுதியாலே (உருஉ) "அஜ்ஞாதநாமகஜ்ஞாநதத்த்வப்ரகாசகம்-ஸர்வவேதார்த்தவிஜ்ஞாநம்ஸர்வசாஸ்த்ரார்த்ததர்சநம். மாநஸம்வாசிகம்பாபம்காயிகஞ்சத்ரிதாத்மகம் - த்வயஸ்மரணமாத்ரேணநாசம்யாதிஸுநிச்சிதம்" (అజ్ఞాతజ్ఞానమాత్మతత్త్వప్రకాశకం-సర్వవేదార్థవిజ్ఞానం సర్వశాస్త్రార్థదర్శనం. మానసంవాచికంపాపం కాయికంచత్రిధాత్మకం-ద్వయస్మరణమాత్రేణనాశంయాతిసునిశ్చితం) "என்றுசொல்லுகிற வைபவமுடைய பரமார்த்தமான த்வயத்தையே மீளவும் ப்ரஸாதித்தருளினார்.

பின்பு சிலநாள் கழிந்தவாறே, உய்யக்கொண்டார் திருநாட்டுக்கெழுந்தருளுகிறபோது, இனி தர்சநப்ரவர்த்தகர் ஆர் ஆவாரென்று மணக்கால்நம்பி விண்ணப்பஞ்செய்ய; அவரும், இங்குள்ள முதலிகளையுங்கூட்டிக்கொண்டு நீரே தர்சநம் நிர்வஹிக்கக்கடவீர்; பின்பு ஈச்வரமுநிகள் திருவயிற்றிலே சொட்டைக்குலத்திலே ஸ்ரீமந்நாதமுநிகளுக்கு ஒரு திருப்பேரனாரவதரிப்பர், அவருக்கு யமுனைத்துறைவனென்று திருநாமஞ் சாத்துவித்து, தர்சநப்ரவர்த்தகராம்படி சகல ரஹஸ்யார்த்தவிசேஷங்களையு முபதேசியும்; அவர் தர்சநப்ரவர்த்தகராவர். இந்த கைங்கர்யத்தை நாதமுநிகள் தம் அந்திமதசையிலே அடியேனுக்கு நியமித்தெழுந்தருளினார், நானது செய்யப்பெற்றிலேன்; நீ ரவரை யநுவர்த்தித்தாகிலும் ரஹஸ்யார்த்தங்களை யுபதேசியுமென்று நியமித்தருளி, ஸ்ரீமந்நாதமுநிகள் திருவடிகளிலே த்யாநபரராய்க்கொண்டு, பத்மாஸநோபவிஷ்டராய், அணையிலே சாய்ந்தருளி, திருநாட்டுக்கெழுந்தருளினார். இத்தால் ஆசார்யாஜ்ஞாபரிபாலநம் அவச்யகரணீயமென்றபடி. உய்யக்கொண்டார் திருநக்ஷத்ரம், சித்திரையில் கார்த்திகை. அவர் தனியன் (உருங) "நம: பங்கஜநேத்ராய நாதஸ்ரீபாதபங்கஜே - ந்யஸ்த

𑌸𑌰𑍍𑌵𑌭𑌰𑌾𑌯𑌾𑌸𑍍𑌮𑌤𑍍𑌕𑍁𑌲𑌨𑌾𑌥𑌾𑌯𑌧𑍀𑌮𑌤𑍇 " (నమః పఙ్కజనేత్రాయ నాథశ్రీపాదపఙ్కజే - న్యస్తసర్వభరాయాస్మత్కులనాథాయధీమతే.)

ஸ்ரீஉய்யக்கொண்டார்திருவடிகளேசரணம்.

ஜீயர்திருவடிகளேசரணம்.

(ரு)

ஸ்ரீமணற்கால்நம்பிப்ரபாவம்.

உய்யக்கொண்டார் திருநாட்டுக் கெழுந்தருளினபடியைக் கண்டு, மணற்கால்நம்பி யுள்ளிட்ட முதலிகளெல்லாரும் மிகவும் சோகார்த்தராய், ஆசார்யவிச்லேஷாஸஹிஷ்ணுக்களாய் கோஷித்துக்கொண்டுவிழுந்து, போரக்லேசித்து, தங்களிலே தேறி நின்று, நம்பியும்; உய்யக்கொண்டாரை ப்ரஹ்மமேதத்தாலே ஸம்ஸ்கரித்து பள்ளிபடுத்து, மேலுஞ் செய்யவேண்டுங் க்ருத்யங்களெல்லாஞ் செய்தருளி, முதலிகளையுங் கூட்டிக்கொண்டு தர்சநம் நிர்வஹித்தருளாநிற்கச்செய்தே; பின்பு சிலகாலங் கழிந்தவாறே, ஈச்வரமுநிகளுக்கு ஒரு குமாரர் ஆடிமாசத்தில் உத்திராடத்திலே திருவவதரித்தருளினார்.

அதுகேட்டுஅதிஸந்துஷ்டராய், நம்பியும் அங்கேறவந்து, அவருக்கு (உருச) " 𑌜𑌾𑌤𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑌲𑌾𑌭𑍇𑌤𑍁 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌶𑍍𑌚𑌕𑍍𑌰𑌸𑍍𑌯𑌧𑌾𑌰𑌣𑌂- 𑌚𑍌𑌳𑍋𑌪𑌨𑌯𑌨𑍇𑌚𑌾𑌪𑌿 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌯𑌨𑍇𑌪𑌿𑌵𑌾 - 𑌵𑌿𑌧𑌿𑌨𑌾𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌶𑍍𑌚𑌕𑍍𑌰𑌧𑌾𑌰𑌯𑌿𑌤𑍍𑌵𑌾𑌦𑍍𑌵𑌿𑌜𑍋𑌤𑍍𑌤𑌮𑌃 " (జాతకర్మణ్యలాభేతువిష్ణోశ్చక్రస్యధారణం - చౌళోపనయనే చాపితస్మాదూర్ధ్వయనేపివా - విధినావైష్ణవశ్చక్రధారయిత్వాద్విజోత్తమః) என்கிறபடியே, ஈச்வரமுநிகளைக்கொண்டு ஜாதகர்மத்தைப் பண்ணுவித்து, " பத்துநாளுங்கடந்த விரண்டாநாள் " திருவிலச்சினை முதலாக நாமகரணத்தையும், (உருரு) " 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑍈𑌰𑍍𑌵𑍇𑌦𑌸𑍂𑌤𑍍𑌰𑍈𑌶𑍍𑌚 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌨𑍍𑌨𑌾𑌮𑌾𑌨𑌿𑌸𑌮𑍍𑌯𑌜𑌃- 𑌤𑌸𑍍𑌯𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌕𑌰𑍍𑌣𑍇𑌤𑍁 𑌜𑌪𑍇𑌦𑍍𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌾𑌕𑍍𑌷𑌰𑌂𑌦𑍍𑌵𑌯𑌂 - 𑌦𑌿𑌵𑍍𑌯𑌂 𑌵𑌿𑌧𑌿𑌕𑍃𑌤𑌂𑌜𑌪𑍍𑌤𑍍𑌵𑌾𑌷𑌡𑌕𑍍𑌷𑌰𑌂- 𑌨𑌾𑌮𑌕𑌰𑌣𑌾𑌤𑍍𑌤𑌤𑌃𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑍍𑌅𑌷𑍍𑌟𑌾𑌕𑍍𑌷𑌰𑌂𑌵𑌾𑌨𑌸𑌂 " (వైష్ణవైర్వసూత్రైశ్చకుర్యాత్ సమ్యజ్జనః సంశ్రితః - తస్యద



ఢీణకర్ణేతుజపేదష్టాక్షరంద్వయం - మూర్ధ్నిహస్తంవినిక్షిప్యజపేచ్చద్వాదశాక్షరం - నామ కుర్యాత్తతఃపశ్చాద్వైష్ణవంపాపనాశనం) என்கிறபடியே ஸ்ரீமந்நாதமுநிகள் நியமப்ரகாரத்திலே யமுனைத்துறைவரென்று திருநாமஞ் சாத்துவித்து நம்பியும் ப்ரீதராயருளினார்.

ஜீயர்திருவடிகளேசரணம்.

(௪)

ஸ்ரீ யமுனைத்துறைவர் ப்ரபாவம்.

பின்பு ஈஸ்வரமுநிகளும் அந்நப்ராஶன சௌளோபநயநாதிகளையும் தத்தத்காலங்களிலே செய்தருளி, அத்யயநம் பண்ணுவிக்கிற காலத்திலே, இவருக்கு மேதையிருக்கும்படி, ஸஹாத்யாயிகளைப்பார்த்து இவரிரண்டாஞ் சந்தை சொல்லும்போது, ஓகினவிடத்தையே ஓதுகிறீர்களென்று அருளிச் செய்து தவிர்ந்திருப்பர்; ஓதப்போகின்றால் ஓகினவிடத்தையே ஓதாநின்றார்களென்பர்; இப்படிக்கிவர் அங்கோபாங்கங்களோடே பதக்ரமஸஹிதமாக க்ரந்தத்ரய தந்த்ரத்ரயமும் அத்யயநம்பண்ணி திருக்கல்யாணமுஞ் செய்தருளினார்.

அநந்தரம் சிலநாளைக்குப் பின்பு ஈஸ்வரமுநிகளும் திருநாட்டுக்கெழுந்தருள; யமுனைத்துறைவரும் அவரை ப்ரஹ்மமேதத்தாலேஸம்ஸ்கரித்து பள்ளிபடுத்த பின்பு, செய்யவேண்டுங்க்ருத்யங்களெல்லாஞ்செய்தருளினார்

அநந்தரம் சிலநாளைக்குப்பின்பு, யமுனைத்துறைவரும் மஹாபாஷ்யபட்டருடனே சாஸ்த்ராப்யாஸம் பண்ணுங்காலத்திலே, அந்த ராஜ்யத்தின் ராஜாவின் புரோஹிதனாய், பெரியவித்வானான ஆக்கியாழ்வானுக்கு, அந்த தேசத்தில் வித்வான்களெல்லாரும் தம்பந்தமிறுத்துப் போருகையாலே மஹாபாஷ்யர்பக்கலிலும் தம்பந்தத்துக்குத்தரவுவந்தது; அத்தைப்பார்த்து மஹாபாஷ்யபட்டரும் முசித்துக்கிடக்க; யமுனைத்துறைவர் அவரை நீரிப்படி முசித்துக்கிடக்கிறதென்னென்று கேட்க; அவரும் இச்செய்தியை இவருக்குச்சொல்ல; அத்தைக் கேட்டருளி இவரும் வந்ததரவைக்கிழித்து விட்டார். ஆக்கியாழ்வானு மித்தைக்கேட்டு, வெறுங்கவியோ ? தந்த்ரபாரகனோ ! என்றுகேட்டுவரவிட்டான். அநந்தரம் யமுனைத்துறைவரும் (உருகூ

“ நவயம்கவயஸ்தத்ரகேவலம் நவயம்கேவலதந்த்ரபாரகாঃ - கவிதந்த்ர

திவாதிவாரண ப்ரகடாடோப விபாடந க்ஷமா:" (నవయం కవయస్తు కేవలం నవయం కేవలతన్త్రపారగాః - అపితు ప్రతివాదివారణ ప్రకటాటోపవిపాటనక్షమాః) என்று இஸ்லோகத்தையருளிச்செய்து எழுதிப்போகவிட்டருள; ஆக்கியாழ்வானும் அத்தை வாசித்துக்கொண்டு, இப்படிக்கொரு வித்வானுண்டோ? என்றாஸ்சர்யப்பட்டு இத்தை ராஜாவுக் கறிவிக்க; ராஜாவும் யமுனைத்துறைவனை சடக்கென வருவதென்று ஸ்வஹஸ்தம் வரவிட்டான். அந்த ராஜஹஸ்தத்தையுங் கிழித்துவிட்டார். இச்செய்தியை ராஜாவுக்கறிவிக்கக்கேட்டு, ஆகில்; அவர் ஸாமாந்யரல்லராயிருந்தரென்று, ராஜா இவருக்கு தண்டிகையும் சிவியாரையும் கொடுத்துவரவிட்டான். இவரும் தண்டிகையிலே ராஜாஸ்தாநத் தேற வெழுந்தருளி, (உருஎ) "ஆசைலாதத்ரிகந்யாசரணகிஸலயந்யாஸதந்யோபகண்டாத் ஆரக்ஷோநீதஸீதாமுககமலஸமுல்லாஸஹேதோஸ்ச ஸேதோ:, ஆசப்ராச்யப்ரதீச்யக்ஷிதிதரயுகளாதர்க்கசந்த்ராவதம்ஸாந் மீமாம்ஸாஸாஸ்த்ரயுக்மஸ்ரமவிமலமநா ம்ருக்யதாம் மாத்ருஸோந்ய:" (ఆశైలాదద్రికన్యాచరణకిసలయన్యాస ధన్యోపకణ్ఠాదారక్షోనీతసీతాముఖకమలసముల్లాస హేతోశ్చ సేతోః, ఆచప్రాచ్యప్రతీచ్యక్షితిధరయుగళాదర్కచన్ద్రావతంసాన్మీమాంసాశాస్త్రయుగ్మశ్రమవ్యదితమనా మృగ్యతాం మాదృశోన్యః) என்றிஸ்லோகத்தைச்சொல்லியெழுதி பத்ராவலம்பநம்பண்ணியருளினார்; ஆக்கியாழ்வானும் இத்தைக்கண்டு, மிகவுங் குபிதனாய், இவருடனே நான் தர்க்கிக்கக்கடவேனென்ன; ராஜாவும் யமுனைத் துறைவனைப்பார்த்து இவருடனே தர்க்கியுமென்ன; யமுனைத்துறைவரும் அவனைக்குறித்து; நானுமிவரும் தர்க்கித்தால் வெற்றியுந் தோல்வியும் உங்களுக்குத்தெரியாது, நாங்களிருவரும் தோற்றோமென்றுஞ்சொல்லுவதில்லை, ஆகையாலே ஜயாபஜயமறியும்படிக்கு மத்யஸ்த்தரானவித்வான்களை யழைப்பிக்கவேணுமென்ன; ராஜாவும் அப்படியாமென்று வித்வான்களையழைப்பித்துக்கொண்டு, மண்டபத்திலேதன் மஹிஷியையுங்கூட்டிக்கொண்டிருக்க; ராஜமஹிஷியும், ராஜாவுடன்யமுனைத்துறைவனைக்காட்டி, இவர்தோலார், தோற்றாராகில்; நான் நாய்க்கெரித்திடக் கடவேனென்ன; ராஜாவும் தன்மஹிஷியுடன்; ஆக்கியாழ்வான் தோற்றானாகில்; இவர்க்கு அர்த்தராஜ்யந் தரக்கடவேனென்ன; அவ்வளவிலே ஆக்கியாழ்வானும் யமுனைத்துறைவனைப்பார்த்து, லௌகிகங்களிலேநீர் அன்றென்றத்தை ஆமென்னக்கடவேன், ஆமென்றத்தை அன்றென்னக்கடவேன், வென்றவன் தோற்றவன் றலையிலே தாடனம்பண்ணக்கடவனென்ன; யமுனைத்துறைவரும் அவனைப்பார்த்து (உருஅ) "த்வந்மா

ாசுவாப்யா - ராஜாஸாவஹூளஃ - ராஜவத்நீவதிவ்ரதா" (త్వ[illegible]
[illegible] - రాజా సార్వభౌమః - రాజపత్నీ పతివ్రతా) என்றிப்படி லௌகிகத்திலே
றன்றுவார்த்தை யருளிச்செய்ய; ஆக்கியாழ்வானும் நிருத்தரனாயிருந்தான்;
ின்பு ஶாஸ்த்ரத்திலே புகுந்தவாறே உத்தமமம், மத்யமம். அதம மென்று
றன்று, இதில் மூன்றுவார்த்தையிலேயாதல், ஐந்துவார்த்தையிலேயாதல்,
ஏழுவார்த்தையிலேயாதல் ஜயித்தாயாகில்; உன்னது ஜயமென்று யமுனைத்
துறைவர் ப்ரதிஜ்ஞைபண்ணியருள, அவனும் மூன்றுவார்த்தையிலும், ஐந்து
வார்த்தையிலும், ஏழுவார்த்தையிலும் முழுக்கத்தோற்றான். வென்றவன்
தோற்றவன் தலையிலே தாடநம்பண்ணக்கடவனென்று முன்பே ப்ரதிஜ்ஞை
பண்ணினவிதுக்கு, நீ ராஜபுரோஹிதனுமாய், வயோவ்ருத்தனுமாகையாலே
ானதுசெய்யேனென்று யமுனைத்துறைவ ரருளிச்செய்ய, இத்தைக் கேட்
டிருந்த வித்வான்களெல்லாரும் சந்தோஷித்து, இவனை ப்ரஹ்மரதம்பண்ணிக்
கொண்டுவர, ராஜமஹிஷியும், என்னையாளவந்தாரோவென்று யமுனைத்துறை
வனை யெடுத்தணைத்துக்கொண்டு, தன் பர்த்தாவுடன் மணிமாட மாளிகைக்
குள்ளே புகுந்தாள்; ராஜாவும் இவர்க்குத் தன்னர்த்தராஜ்யமுங்கொடுத்து,
தேவிகளையுமழைப்பிக்க, ஆளவந்தாரும் பத்நீ ஸஹிதராய்க்கொண்டு ராஜ
போகத்திலே சுகமே யெழுந்தருளியிருந்தார்.

அநந்தரம், மணக்கால்நம்பியும் இதுகேட்டருளி கொண்டைக்கோல்
கொண்டுகூத்தாடியருளி, ஆளவந்தாரைக்காணவேணுமென்று பேராசையோ
டே அங்கேறவெழுந்தருளினார். அவ்விடம் ராஜபதமாய், கட்டுங்காவலுமா
யிருக்கையாலே, ஆளவந்தாரைக் காணப்போகாமல் திருமடைப்பள்ளியிலே
புகுந்து, இவர் தளிகைக்கு திருப்போனகம் சமைக்கிற ஸ்ரீவைஷ்ணவர்களைப்
பார்த்து, ஆளவந்தார் விரும்பி யமுதுசெய்யும் கறியமுதென்னென்றுகேட்
டருள, அவர்களும் தூதுளையென்று சொல்ல, நம்பியும் அன்றுமுதல் தூது
ளையிட்டு மடைப்பள்ளிக் காறுமாஸம் நடத்தியருளினார். இப்படி நடத்தின
விடத்திலும் ஒருவிசாரமற்றிருக்கையாலே, இவரும் முசித்து நாலுநாள்தவி
ர்ந்திருந்தார். ஆளவந்தாரும் அமுதுசெய்யும்போது நாலுநாளாக தூதுளை
யின்றிக்கே யிருப்பானென்னென்று தளிகைக்குச் செய்வாரைக்கேட்டருள;
அவர்களும் ஒரு வ்ருத்தப்ராஹ்மணர் ஆறுமாசமுண்டு நாடோறு நடத்திப்
போருகிறது, நாலுமூன்றுநாளுண்டு தவிர்ந்தாரொன்றுவிண்ணப்பஞ்செய்ய,
ஆளவந்தாருங் கேட்டருளி, விஸ்மயப்பட்டு, இனி அவர்வந்தவாறேநமக்கறி
வியுங்கோளென்று அருளிச்செய்ய; மற்றைநாள் நம்பியும் இன்னம் பார்ப்
போமென்று கறியமுதுகொண் டெழுந்தருளினவாறே, அவர்களும் ஆள

வந்தார்க்கறிவிக்க, அவரும் அழையுமென்றருளப்பாடிட்டவாறே, இவரையெழுந்தருளப்பண்ணுவித்துக்கொண்டு போய், அவர்களும் ஆளவந்தாரைக் காண்பிக்க, ஆளவந்தாரும் இவரைக்கண்டு ப்ரத்யுத்தாநாபிவாதந பூர்வகமாக ஆசநமிட்டு, நீர் இத்தனைநாள் நமக்கிந்தத்துதுளை கொண்டுவந்து இடுவதேதுக்காக ? உமக்கர்த்தம் வேணுமோ ? க்ஷேத்ரம்வேணுமோ? என்று மணக்கால்நம்பியைக் கேட்டருள, நம்பியும், இவைநமக்கொன்றும்வேண்டா, உங்கள் பூர்வர்கள் தேடினஅர்த்தம் என்கையிலேயிருக்கிறது. அவைகளிருக்கிறவிடமும் நானறிவேன், அதுகாட்டுமளவும், என்கையிலர்த்தம் கைக்கொண்டருளுந்தனையும், நித்யமாக நாம் உம்பக்கல் வந்துபோம்படி வாசல்தகையாமலிருக்க அப்பணையிடவேணுமென்றருளிச்செய்ய ; ஆளவந்தாரும்அப்படியே வாசல்தகையாதபடிகட்டளையிட, நம்பியும்அன்றுமுதல்கீதையின் செம்மைப்பொருள் தெரியும்படி கீதை பதினெட்டத்யாயமு மருளிச்செய்ய ; ஆளவந்தாரும் ஆரணசாரமான கீதையினுட்பொருள்கேட்டருளி, ஒருநாளைக்கொருநாளார்த்திபிறந்து, அவ்வஸ்துவை ஸாக்ஷாத்கரிக்கலா முபாயமில்லையோவென்று நம்பியைக்கேட்க, நம்பியும் ஸாக்ஷாத்கரிக்கலா முபாயமுண்டென்று ஏகாந்தத்திலே யெழுந்தருளியிருந்து, மெய்ம்மைப்பெருவார்த்தையான சரமச்லோகார்த்தத்தை ப்ரஸாதித்தருள, அத்தைக்கேட்டு ஆளவந்தாருக்கு, நெல்லுக்குப் பால்கட்டத் தலைவணங்குமாபோலே சரணாகதி நெஞ்சிலேபடப்பட, ஆநுகூல்யம் மிகுந்து, சரண்யவிஷய ப்ராவண்யாதிசயத்தாலே இஸ்ஸம்ஸாரத்தில் அருசிபிறந்தபடிகண்டு, அவரையுங் கூட்டிக்கொண்டு (௨௬௯) “ நசஜ்ஞாநஸ்ய ஸம்ஸ்ப்ருஷ்டம் நசைவ யமகோசரம் - தஸ்மாத்ரங்கம் மஹாபுண்யம் தேந ஸேவேத புத்திமாந் ” (నచజ్ఞానస్యసంసృ-చం నచైవయమగోచరం - తస్మాద్రఙ్గంమహాపుణ్యం తేనసేవేతబుధిమాన్) என்கிறபடியே ஜ்ஞாநாவாசகமுமாய், நமன்றமராலாராயப்பட்டறியாததுமாய், புண்யவர்த்தகமுமான திருவரங்கந்திருப்பதியே யழைத்துக்கொண்டுபோய், பெரியபெருமாளைத் திருவடிதொழப்பண்ணி, (௨௭௦) “ நிதிர்வ்யயః ” (నిధిరవ్యయః) என்கிறபடியே உங்கள் பூர்வர்கள் தேடிவைத்த மஹாநிதிகாணுமென்றுகாட்ட, ஆளவந்தாரும் பெரியபெருமாளுடைய “ முடிவில்லதோரெழில் நீலமேனி ” யையும் சேவித்து “ பழுதேபலபகலும் போயினவென்றஞ்சியழுதேனரவணைமேற்கண்டுதொழுதேன் ” என்கிறபடியே கிழிழந்தனாளுக்குக்கூப்பிட்டு, கண்ணுங்கண்ணீருமாய்அரங்கத்தம்மானையநுபவித்து, “பிறந்தார்பிறந்தெய்தும் பேரின்பமெல்லாந் துறந்தார்தொழுதாரத்தோள்” என்கி

றபடியேயும், (உகூக) " क्षेत्राणि मित्राणि धनानि नाथ पुत्राश्च दाराः पशवो गृहाणि - त्वत्पादपद्मप्रवणात्मवृत्तेर्भवन्ति सर्वे प्रतिकूलरूपाः " (క్షేత్రాణిమిత్రాణిధనానినాథపుత్రాశ్చదారాఃపశవో గృహాణి - త్వత్పాదపద్మప్రవణాత్మవృత్తేర్భవంతిసర్వేప్రతికూలరూపాః) என்கிற ப்ரதிகூலங்களெல்லாம் பரித்யஜித்து, (உகூஉ) " सर्वसङ्गान्परित्यज्य " (సర్వసంగాన్పరిత్యజ్య) என்னும்படியேயும் ஸர்வஸங்கபரித்யாக பூர்வகமாக ஆஸ்ரமப்ராப்தி பண்ணியருளி, " அண்டர்கோனணியரங்கனென்னமுதனைக்கண்டகண்கள்மற்றொன்றினைக்காணுவே " என்கிறபடியே, வேறொருவிஷயமறியாதே (உகூங) " परमात्मनि यो रक्तो विरक्तोऽपरमात्मनि " (పరమాత్మనియోరక్తోవిరక్తోఽపరమాత్మని) என்கிறபடியே அபரமாத்ம வைராக்யமுடையராய், பரமாத்மாஸக்தசித்தராய், பெரியபெருமாளைஸேவித்துக்கொண்டெழுந்தருளியிருக்கிறகாலத்திலே, இவர்ஸ்ரீபாதத்தில் ஆஸ்ரயித்தமுதலிகள் பெரியநம்பி, திருக்கோட்டியூர்நம்பி, பெரியதிருமலைநம்பி, மாறனேர்நம்பி, திருக்கச்சிநம்பி, ஆளவந்தாராழ்வான், திருமாலையாண்டான், வாநமாமலையாண்டான், தெய்வவாரியாண்டான், ஈசாண்டான், ஜீயராண்டான், திருக்குருகூரப்பன், திருமோகூரப்பன், திருமோகூர்நின்றான், தெய்வப்பெருமாள், வகுளாபரணசோமயாஜியார், திருக்குருகூர்தாஸர், திருமாலிருஞ்சோலைதாஸர், வடமதுரைப்பிறந்தான், ஆட்கொண்டியம்மங்கி, என்று இவ்விருபது முதலிகளும் ஆளவந்தார் ஸ்ரீபாதத்திலே ஆஸ்ரயித்தார்கள். இவர்களெல்லாரும் வித்வான்களுமாய், தர்ஸநப்ரவர்த்தகருமாயிருக்கிறகாலத்திலே, மணக்கால்நம்பி ஆளவந்தாரைப் பார்த்து இன்னமொரு ரஹஸ்யவிசேஷம் குருகைக்காவலப்பன் பக்கலிலேயுண்டு, அங்கேபோய்க் கேளுமென் றருளிச்செய்ய, ஆளவந்தாரும் அதுவேன் ? தேவரீருக்கு அந்தரஹஸ்ய மின்றிக்கேபோவானென்னென்ன, நம்பியும் உங்கள் திருப்பாட்டனார் நாதமுநிகள் எங்கள் ஆசார்யரானஉய்யக்கொண்டாருக்கு அந்தரஹஸ்யம் அருளிச்செய்யத்தேட, அவரும் பிணங்கிடக்க மணம்புணரலாமோ வென்று ஸரீராவஸாநதசையில் அநுபவிக்க வமையுமென்று விண்ணப்பஞ்செய்தார், ஆகையாலே அந்தரஹஸ்யவிசேஷம் இல்லையாய்த்தென்ன, ஆகிலும் அங்கேறப்போமென்று, கோயிலிலே யெழுந்தருளியிருந்து ஆளவந்தார் தர்ஸநந்நிர்வஹிக்கக்கண்டு, செய்தநிதுவாய்த்து.

ஸ்ரீமானாய், ஹர்ஷப்ரகர்ஷத்துடனே வாழ்கிற காலத்திலே, மணக்கால்நம்பி ஸ்ரீபாதத்திலே ஆஸ்ரயித்த முதலிகள் ஆளவந்தார், தெய்வத்துக்

கரசுநம்பி, கோமடத்துத்திருவெண்ணகரப்பன், திருவெவ்வுளூராவுடையார் பிள்ளை, வங்கிபுரத்தாய்ச்சி என்றிவரைவர். இவர்களுக்குத் தர்ஶநதாத் பர்யவிசேஷமும் அருளிச்செய்துகொண்டு சிலகாலம் எழுந்தருளியிருந்து தம் அந்திமதசையிலே ஆளவந்தாரைப்பார்த்து, நாதமுனிகளோடு உபயஸம் பந்தமுடையரான நீர் அவர்திருவடிகளே உமக்குப் ப்ராப்யமும் ப்ராபகமு மென்று அத்யவஸித்துக்கொண்டிரும், மேலும் உம்மைப்போலே யொரு தர்ஶநப்ரவர்த்தகரையும் உண்டாக்கியருளி கோயிலைவிடாதே நெடுங்காலம் எழுந்தருளியிருமென்று அருளிச்செய்து, உய்யக்கொண்டார் திருவடிகளை த்யானித்துக்கொண்டு திருநாட்டுக்கெழுந்தருளினார். இத்தால் ஆசார்ய பரமாசார்யர்களுடைய திவ்யாஜ்ஞாபரிபாலநம்பண்ணி உபயருடையவுகந்தி பத்தபடிகண்டு உகந்தார் இவரொருவருமேயிறே. மணற்கால்நம்பிதிருநக்ஷத்ரம் மாசியில்மகம். அவர்தனியன், (௨௯௪) "𑌅𑌯𑌤𑍍𑌨𑌤𑍋 𑌯𑌾𑌮𑍁𑌨𑌮𑌾𑌤𑍍𑌮𑌦𑌾𑌸𑌮𑌲𑌰𑍍𑌕𑌪𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌪𑌣𑌨𑌿𑌷𑍍𑌕𑍍𑌰𑌯𑍇𑌣 - 𑌯𑌃 𑌕𑍍𑌰𑍀𑌤𑌵𑌾𑌨𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌯𑍌𑌵𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌨𑌮𑌾𑌮𑌿 𑌤𑌂 𑌰𑌾𑌮𑌮𑌮𑍇𑌯𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂" (అయత్నతో యామునమాత్మదాసమళర్కపత్రార్పణనిష్క్రయేణ - యః క్రీతవానాస్థితయౌవరాజ్యం నమామితం రామమమేయసత్త్వం

மணற்கால்நம்பி திருநாட்டுக்கெழுந்தருளினபடி கண்டு ஆளவந்தாருள்ளிட்ட முதலிகள் எல்லாரும் மிகவு மவஸந்நராய் சோகித்து தங்களிலே தரித்து நிற்க, ஆளவந்தாரும் அவரை ப்ரஹ்மமேதத்தாலேஸம்ஸ்கரித்தருளி, செய்யவேண்டுங் க்ருத்யமெல்லாஞ் செய்தருளினார்.

ஸ்ரீமணற்கால்நம்பிதிருவடிகளேசரணம்.

ஜீயர்திருவடிகளேசரணம்.

அநந்தரம், ஆளவந்தாரும் முதலிகளும், அப்பன் யோகத்திலேயெழுந்தருளியிருக்குமிடத்தேற வெழுந்தருளி, இவரை ஸமாதிபங்கம் பண்ணவொண்ணாதென்று, தும்முதல், இருமுதல், அடியோசைப்படுதல்செய்யாதே, மௌநத்தோடே சுவர்ப்புறத்தே பின்னே தெரியாதேநிற்க, அப்பனுடைய யோகத்திலே யெழுந்தருளியிருக்கிறவர், பின்திரும்பிப்பார்த்தருளி, இங்கே சொட்டைக்குலத்திலாரேனும் வந்தாருண்டோ வென்று கேட்டருள, ஆளவந்தாரும் அடியேன் யமுனைத்துறைவன் விடைகொண்டிருக்கிறேன் என்றெழுந்தருளிவந்து, அப்பன் ஸ்ரீபாதத்திலே சேவித்திருந்து, அடியோங்கள் சுவர்ப்புறத்தே பின்னேதெரியாதபடிநிற்க, தேவரீரிங்ஙனருளிச்செய்கைக்கு

வேறதுவென்னென்று ஆளவந்தார்கேட்டருள, அப்பன் அருளிச்செய்தபடி!
அடியேனுந் தானுமாய் அநுபவியாநின்றால் பெரியபிராட்டியார் திருமுலைத்
தடத்தாலே நெருக்கி யணைத்தாலும் அவள்முகங்கூடப்பாராத ஸர்வேஶ்வ
ரன், என்தோள்களையமுக்கி நாலுமூன்றுதரம் சுவர்ப்புறத்து எட்டிப் பார்த்
தான், இப்படி இவன் பார்க்கும்போது, சொட்டைக்குலத்தில் உள்ளார்
ஆரேனும் வந்தாருண்டாக வேணுமென்று இருந்தேன்காணு மென்று அரு
ளிச்செய்தார். ஆளவந்தாரும் இத்தைக்கேட்டுப்போர வித்தராயருளி, அடி
யேனுக்கும் இந்த யோகரஹஸ்யக்ரமத்தை அருளிச்செய்யவேணுமென்று
அப்பன் ஸ்ரீபாதத்திலே தெண்டனிட்டுக்கொண்டு விழுந்துகிடக்க, அப்பனு
முகந்து, அப்படியே செய்கிறோமென்று முடிபிடித்தெடுத்து நம்முடைய
சரீராவஸாநத்திலே சொல்லுகிறோம், வருகிறபுஷ்யமாஸத்திலே, குருபுஷ்
யயோகத்திலே, அபிஜிந்முஹூர்த்தத்திலே, நமக்கு சரீராவஸாநமாயிருக்
கும், அதுக்குமுன்னாக உதவவேணுமென்று திருமுகமெழுதிக் கொடுத்தரு
ளினார். ஆளவந்தாருந் திருமுகத்தையுங் கொண்டு கோயிலேற வெழுந்
தருளினார்.

பின்பு பெருமாள் திருவத்யயநத்திருநாளிலே, திருவத்யயநங்கேட்
டருளும்போது ஆழ்வார்திருவரங்கப்பெருமாளரையர் "கெடுமிடர்" என்
கிற திருவாய்மொழியை அபிநயித்துப் பாடியருளுகிறவர் ஆளவந்தார் திரு
முகமண்டலத்தைப் பார்த்தருளி "நடமினோநமர்களுள்ளீர் நாமுமக்கறியச்
சொன்னோம்" என்று பலகாலும்பாடியருள, ஆளவந்தாரும் இத்தைக்கேட்
டருளி, ஆழ்வாருடைய தமரிலே அந்தர்ப்பூதமாம்போது திருவநந்தபுரம்
புக்கு ஸேவிக்கவேண்டி யிருந்ததென்று, அப்போதே திருவோலக்கத்தில்
நின்றுமெழுந்திருந்து, பெரியபெருமாளுக்கும்,பெருமாளுக்கும்தண்டஞ்சம
ர்ப்பித்து, அநுமதிகொண்டு,புறப்பட்டருளி, மடத்துக்குக்காவலாகத்தெய்
வவாரியாண்டானை வைத்து, திருவநந்தபுரத்துக்கெழுந்தருளி "படமுடைய
ரவின்பள்ளிபயின்றவநந்தபுரத்தம்மானை" யும் த்வாரத்ரயேண திருவடிதொ
ழுது, அங்கே யெழுந்தருளியிருந்தவளவிலே, ஸந்நிதியில் முதலிகளைப் பார்
த்து, குருகைக்காவலப்பன் நமக்கிட்டுத்தந்த திருமுகத்தைக்கொண்டுவாரு
ங்கோளென்று அருளிச்செய்ய, முதலிகளுங் கொண்டுவந்து ஸமர்ப்பிக்கப்
பார்த்தருளி, மாஸமும், திவஸமும், அன்றாயிருந்தபடியாலே ஒரு புஷ்பக
விமாநம்பெற்றிலோமே யென்றுபோர ஶோகார்த்தராய் மீண்டு எழுந்தரு
ளாநிற்க; தெய்வவாரியாண்டானுக்கு ஆளவந்தார் விஶ்லேஷம் பொறாமல்,
திருமேனிசோஷிக்க, இங்கிருந்தமுதலிகள் இவர்க்கு வைத்யர்கள் பலனை

யும் அழைத்துக்கொண்டு பார்ப்பித்தவிடத்தில், இவர்க்கு விஷயஸ்ப்ருஹை
யாக்கும், இப்படியாய்த்தென்ன ; உமக்கெந்தவிஷயஸ்ப்ருஹையாயிருக்கிற
தென்று முதலிகள்கேட்க, அவரும் அடியேனுக்கு ஆளவந்தார் விஷயமெ
ழிய வேறொருவிஷயமுண்டோ வென்று அருளிச்செய்ய ; ஆகில் இவனை
அங்கேறக் கொண்டுபோங்கோளென்று வைத்யர்கள் பலருஞ்சொல்ல, முத
லிகளும் இவரைக் கட்டணத்திலே கொண்டுபோக, ஒருநாளைக்கொருநாள்
திருமேனியிலே வாட்டந்தீர்ந்து, பின்புநடக்கவல்லராய், வருகிறவளவிலே
ஆளவந்தாரும், திருவநந்தபுரத்தில்நின்றும்மீண்டு,எழுந்தருளுகிறவழியிலே
காமனையாற்றின்கரையிலே, திருவநந்தபுரத்துக்கு அணித்தாக வழியிலே
விட்டு எழுந்தருளியிருக்க ; தெய்வவாரியாண்டானும், ஆளவந்தாரை சே
வித்து, அவர் ஸ்ரீபாதத்திலே தண்டம் சமர்ப்பித்துக்கொண்டு விழுந்து கிட
க்க ; ஆளவந்தாரும் இவரெழுந்திருக்கமாட்டாமல் கிடக்கிறபடியைக்கண்டு
பெருமாள் ஸ்வதந்த்ரருமாய், சூரருமாய் இருக்கையாலே ஸ்ரீபரதாழ்வானை
வைத்தவிடத்தேயிருந்தார் ; அடியேன் ஸ்வதந்த்ரனுமின்றிக்கே, சூரனுமின்
றிக்கேயிருக்கையாலேயிறே, நீர்வைத்தவிடத்தில் இராமல்வந்ததென்று அரு
ளிச்செய்ய ; இத்தைக்கேட்டு தெய்வவாரியாண்டானும், வந்து ஸ்வரூப
ஹாநி பட்டேன் என்று மிகவும் ஸத்தை குலைந்துகிடக்க ; இவர் எழுந்தி
ராதபடிகண்டு, என்னை ஸ்வதந்த்ரனுமாய், சூரனுமாக்கினொழிய எழு
திரோவென்று கிடக்கிறீரோ வென்று ஆளவந்தார் அருளிச்செய்ய, தெய்வ
வாரியாண்டானும் இவ்வார்த்தையைக் கேட்டு, வந்து ஸ்வரூபஹாநிபட்ட
வோபாதி, இதுவுமொரு ஸ்வரூபஹாநி யாயிற்றேவென்று பரபரவென்று
எழுந்திருந்துநிற்க ; ஸ்ரீபாதத்துமுதலிகளும், (உகரு) "ஜநாநுத்ஸ்ராவ்
வொஸ்ஜ்தள" ([illegible]) என்கிறஇளையபெருமாள்படி இவர்க்
குண்டாய்த்தென்ன ; ஆளவந்தாரும் இதொரு அதிகாரவிசேஷமிருந்தபடி
யென்தான் என்று போரவுகந்தருளி, மிகவும் மெலிந்தீரேயென்று முதுகு
தடவி அதிக்ருபாசித்தராய்,திருவநந்தபுரத்துத்திருக்கோபுரம் அதோதோன்
றுகிறது. அங்கேபோய், ஆயிரந்தலையுடைய அநந்தசயநனை ஸேவித்துவாரு
மென்று அருளிச்செய்ய, இவரும் என்னுடைய திருவநந்தபுரம் எதிரேவந்த
தென்று ஸ்வாசார்யரான ஆளவந்தாரைக்காட்டி யருளினார். இதுக்குக் கரு
த்து (உகக) "யெடூநவமாணாயஸ்ருத்ராஸவித்ராவுதீயதே -
தஸ்ருவெகணூமாஷ்பிஅாரகாஷ்வவனவஸ" ([illegible]
[illegible]) என்று "வில்லார்
மணிகொழிக்கும் வேங்கடப்பொற்குன்றமுதல் செல்லார்பொழில்சூழ் திரு

ப்பதிக-ளெல்லாம் - மருளாமிருளோட மத்தகத்துத்தந்தா னருளாலேவைத்தவ வர்" என்கிற இந்த அத்யவஸாயம் இவருக்கு உண்டானபடிகண்டு மிக வும் உகந்தருளினார். "நின்றவண்கீர்த்தியும்" என்றுதொடங்கி, "உன்னி ணைமலர்த்தாளென்றனக்குமது" என்றுநின்றார்களிறே. இவரையுங்கூட்டிக் கொண்டு, ஆளவந்தார் மீண்டு கோயிலேறவெழுந்தருளி, பெரியபெருமாளை யுஞ் சேவித்துக்கொண்டு, அங்கே தாமும் ஸ்ரீபாதத்தாமுதலிகளுமாக இரு ந்து, தர்ஶநம் நிர்வஹித்தருளுகிறபோது; இனிமேல் தர்ஶநப்ரவர்த்தகரா வார் ஆரொன்று, விசாரமுண்டாய் ஒருவரையுங்காணுதே முசித்து சிந்தித் திருக்கிற காலத்திலே:—

(இளையாழ்வார் அவதாரவைபவம்.)

ஆளவந்தார் ஸ்ரீபாதத்தில் ஆஶ்ரயித்தமுதலிகளில், பெரியதிருமலை நம்பி, "வேங்கடத்தைப்பதியாகவாழ்வீர்" என்கிறபடியே திருவேங்கட முடையானை "அடிக்கீழமர்ந்துபுகுந்து" சேவித்துக்கொண்டு எழுந்தருளி யிராநிற்க; அவர் உடன்பிறந்த பெண்பிள்ளைகள் ஸ்ரீபூமிபிராட்டியார் என் றும், பெரியபிராட்டியார் என்றும் பெயருடைய இருவரிலே, மூத்த ஸ்ரீபூமி பிராட்டியார், ஆஸுரிகேசவப்பெருமாளென்கிற ஸர்வக்ரதுதீக்ஷிதர்க்கு திரு மணம்புணர்ந்தாள். இளையஸ்ரீபெரியபிராட்டியார் மழலைமங்கலத்துக்கமலநயந பட்டர்க்கு வட்டமணிகுலத்திலே திருமணம்புணர்ந்தாள். அவர்களும் தந் தாம் புக்ககங்களிலே வாழுங்காலத்திலே, (உகூஎ) "அநந்த:ப்ரதமம் ரூபம் லக்ஷ்மணஶ்ச தத:பரம் - பலபத்ரஸ்த்ருதீயஸ்து கலௌகஶ்சித் பவிஷ்யதி" (అనన్తః ప్రథమం రూపం లక్ష్మణశ్చ తతః పరం - బలభద్రస్తృతీయస్తు కలౌ కశ్చిద్భవిష్యతి) என்கிற வசநத்தின்படியே, பெரிய திருவநந்தாழ்வானும், அகிலாத்மோஜ்ஜீவநார்த்தமாக தம் திருவவதாரத்துக்கு இடம்பார்த்து, ராமதிவாகராச்யுதபாநுக்கள்; கௌஸல்யை தேவகிகளுடைய கர்ப்பங் களை விரும்பினாப்போலே, ராமாநுஜதிவாகரராய், ஸ்ரீபெரும்பூதூரிலே ஸ்ரீ பூமிபிராட்டியார் கர்ப்பத்தை ப்ராபித்தருளி (உகூஅ) "ஶ்ரீமத்ரம்யஸ்ய ஸாக்ஷாந்நிகிலவிதநுவோ பூதபுர்யாமஜாதோ - ஶ்ரீமாந் ராமாநுஜார்யோ ஜாதவாந் கலௌ" (శ్రీమద్రమ్యస్య సాక్షాన్నిఖిలవిధతనువో భూతపుర్యామజాతో - శ్రీమాన్ రామానుజార్యో ...) என்கிறபடியே, கலிஸாம்ராஜ்யம்பண்ணும் "இருள் தருமாஞாலத்"திலே "கலியுங்கெடுங்கண்டுகொள்மின்" என்கிறபடியே, கலியினாள்நீங்கிப்பெரியக்ருதயுகம்பற்றி, "பேரின்பவெள்ளம்பெருகும்படியின்"

(௨௬௯) "தீல்யப்தா" (ధీల్యబ్ధా) என்கிற கணக்கின்படியே, சகவருஷம் தொளாயிரத்து முப்பத்தொன்பது சென்ற வர்த்தமாந பிங்களஸம்வத்ஸரத்தில் ஸ்ரீமத்தான சைத்ரமாஸத்தில் சுக்லபக்ஷத்தில், பஞ்சமிகுருவாரஸஹிதமான திருவாதிரைநக்ஷத்ரத்திலே சுபமுஹூர்த்தங்களிலே பாரெல்லாம் உய்யும்படி ப்ராதுர்ப்பவித்தருளினார். இவர்க்கு ஜாதகர்மமும் ஆஸூரி கேசவப்பெருமாள் செய்தருளினார்.

இச்செய்தியைத் திருமலைநம்பியும்கேட்டருளி, ஸ்ரீபெரும்பூதூரேறச் சென்று, ஸர்வக்ரதுகேசவசோமயாஜியாரைக்கண்டு, ஸத்கரித்து அவர் புத்ரனையும் முகவொளிதிகழக்கடாக்ஷித்தருளி, இவன் ஸர்வலக்ஷணஸம்பந்நன், ஸகலஶாஸ்த்ரங்களையும் அதிகரிக்குமாகையாலே, (௨௭௦) "லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்ந:" (లక్ష్మణో లక్ష్మీ సంపన్నః) என்கிற இளையபெருமாள் திருநாமத்துக்குத்தகுதியாயிருந்தானென்று பன்னிரண்டாந்திவஸத்திலே (௨௭௧) "தக்ஷிணஸ்து புஜம் பூர்வம் சக்ரேண ப்ரதப்த்ய வை | வாமம் ஸம்ப்ரதப்தேத் பஶ்சாச்சங்கேநைவ த்விஜோத்தம:" (దక్షిణస్తు భుజం పూర్వం చక్రేణ ప్రతప్య వై - వామం సంప్రతపేత్ పశ్చాచ్ఛంఖేనైవ ద్విజోత్తమః) என்று சொல்லுகிறபடியே இவர்க்கு நாமகரணத்திலே, திருவிலச்சினை முன்னாக இளையாழ்வாரென்று திருநாமம் சாத்துவித்தருளினார். பின்னையும் அந்நப்ராஶநசௌளோபநயநாதிகளையுந் தத்தத்காலங்களிலே ஶாஸ்த்ரோக்தப்ரகாரத்திலேசெய்து அங்கோபாங்கங்களோடேகூட பதக்ரமஸஹிதமான வேதாத்யயநத்தையும் பண்ணி, சதுர்த்தஶவித்யாபாரங்கதராய், ஷோடசகலாபூர்ணனான சந்த்ரனைப்போலே, ஷோடசகர்ம ஸம்ஸ்க்ருதராய், ஷோடசவார்ஷிகரானவாறே ஸர்வோபகாரக்ஷமமான க்ருஹஸ்தாஶ்ரமத்தை அங்கீகரித்தருளி, பெருமாள்கோயிலிலே திருப்புட்குழியிலே, யாதவப்ரகாசனென்பானொரு ஏகதண்டியான ஸந்யாஸி, பூர்வபக்ஷம் வேதாந்தம் வாசிப்பிக்கிறானென்று கேட்டருளி, இளையாழ்வாரும் அங்கேயெழுந்தருளி, அவன்பக்கல் ஶ்ரோதாக்களோடே தாமும் ஸஹஶ்ரோதாவாய், வேதாந்தம்வாசித்தருளாநிற்க, அவ்வளவிலே மழலைமங்கலத்துக்கமலநயநபட்டருக்கு ஒரு புத்ரன் அவர்பத்நி பெரியபிராட்டியாரிடத்திலே, க்ரோதநஸம்வத்ஸரத்தில், பௌர்ணமியும் சோமவாரமுங்கூடின புநர்பூச நக்ஷத்ரத்திலே அவதரித்தருள, ஜாதகர்மாநந்தரம், திருமலைநம்பியும் அங்கேற வெழுந்தருளி, கமலநயநபட்டரையுங்கண்டு ஸத்கரித்து, பெரியபிராட்டியார் புத்ரனையும் தம் தாமரைக்கண்களாலே நோக்கி, இவன் ஸதாத்மகுணங்களை யுடையனாய், ஸர்வ வித்யை

ளையும் அதிகரித்து வைதிகபக்ஷவாளும் என்று திருவுள்ளம் உகந்தருளி, கமலநயநபட்டரையுங்கொண்டு கோவிந்தனென்று திருநாமஞ் சாத்துவித்து நாமகரணம்பண்ணுவித்தருளினார். இவரும்சௌளோபநயநாதிஸம்ஸ்காரவிசிஷ்டருமாய் க்ருஹஸ்தாஶ்ரமப்ராப்தி பண்ணியருளி, ஸர்வஶாஸ்த்ரங்களையும் அப்யஸித்து, திருப்புட்குழியிலே யாதவப்ரகாசனுடனே இளையாழ்வார் வாசிக்கிறாரென்றுகேட்டு, பேராசையோடே அங்கேவந்து, தாமும்வேதாந்தம் வாசிக்கத்தொடங்கினார், யாதவப்ரகாசனும், (உஎஉ) "ஸத்யம்ஜ்ஞாநமநந்தம்ப்ரஹ்ம" (सत्यंज्ञानमनन्तंब्रह्म) என்கிறஶ்ருதிவாக்யத்துக்குக்கண்டத்வமுண்டத்வபூர்ணஶ்ருங்கத்வங்கள் ஒரு கோவ்யக்தியிலே கடிக்கும்போதிறேப்ரஹ்மத்துக்குஇந்தவிஶேஷணங்கூடுவதென்று அபார்த்தப்ரதிபாதநம் பண்ண, இளையாழ்வார் அத்தைநிஷேதித்து, "ஸத்ய" சப்தத்தாலே, க்ஷணிகவ்யாவ்ருத்தியையும், "ஜ்ஞாந" சப்தத்தாலே அசித்வ்யாவ்ருத்தியையும், "அநந்த" சப்தத்தாலே, சேதநவ்யாவ்ருத்தியையும்பண்ணி, சேதநாசேதநவிலக்ஷணமாய், நித்யமாயிருக்கும் ப்ரஹ்மமென்ன; அவனும் ஹூங்காரம்பண்ணினான். பின்பு ஒருநாள் இளையாழ்வார், யாதவப்ரகாசனுக்கு அப்யஞ்ஜநத்தொழில்செய்யாநிற்க, அவ்வளவிலே (உஎங) "தஸ்யயதாகப்யாஸம்புண்டரீகமேவமக்ஷிணீ" (तस्ययथाकप्यासंपुण्डरीकमेवमक्षिणी) என்கிறஶ்ருதிக்கு அவன் அநுசிதார்த்தஞ்சொல்ல, இவர்க்கு அதுகேட்டு சோகமுண்டாய், அந்தசோகாஶ்ரு அவன்தொடையிலேவிழ, அதுநெருப்புபட்டாப்போலே அவன்தொடையைச்சுட, அவனும்பதறி, இவர்முகம்பார்த்து, துக்கமாவானென்னென்ன; இவரும் (உஎச) "கம்பிபதீதிகபி:" (कंपिबतीतिकपिः) என்று சூர்யனாய், (உஎரு) "ஆஸஉபவேஶநே" (आसउपवेशने) என்று உபவேஶநமாஶ்ரயணமாய், சூர்யாஶ்ரயணத்தையுடைத்தானகமலம்போலே என்று இத்யாதிப்படியே, யோஜனையிருக்க, அயதார்த்தங்கேட்டவாறே யென்ன, யாதவப்ரகாசனும் அதுகேட்டுக் குபிதனாய், நான்சொன்னபடிகேட்கில் வாசித்திரும், அல்லாவிடில் விட்டுப்போமென்ன, இவரும் அப்படியே சிந்தை கலங்கித் தவிர்ந்திருக்க, அவனும் தன்னுடைய சிஷ்யர்களில் அநுகூலரை யழைத்து, ஏகாந்தத்திலே நீங்கள் நான்சொன்ன அர்த்தத்தை சம்மதித்திருக்க, இளையாழ்வார் ஒருவருமே எதிர்த்தட்டாக வர்த்தாநியாநின்றார், இவராலே நம்முடைய அத்வைதரீதிசிறுக்கும், இவன்முடியும்படி விரகென்னென்றுகேட்க, அவர்களும் பலபடி படும்வகைசொல்ல, அவனும் அவ்வோவர்த்தங்களுக்குப் பழிபாவமுண்டாம், அவைவாராமையும் நினைத்தபடிகூட

வும், மணிகர்ணிகையிலே ம்ருதியுண்டாக்குகையே என்னகவாயில் உள்ளதென்ன, அழகியதென்று, ஸர்வரு மைகமத்யம்பண்ணிக்கொண்டு, துர்யோதனன் தர்மபுத்ரர்விஷயத்திலே, ஜதுக்ருஹத்திலே விஶ்வாஸம்பண்ணினாப்போலே அந்தரங்கித்து, இளையாழ்வாரை அழைத்து, நீரில்லாவிடில் எங்களுக்கொரு சாயலாயிருந்தது, கோபியாமல் க்ரந்தத்தை அவிச்சிந்நமாக நடத்துமென்று நன்மையுரைத்து உள்ளிட்டுக்கொண்டு, ஒருநாள் கங்காயாத்ரையை உத்யோகித்து, புறப்பட்டுப்போம்போது, நின்றவிடங்களிலே இளையாழ்வாரும் கோவிந்தபட்டரும் கூட்டரவுபடாதபடி பண்ணிக்கொண்டு க்ஷாத்ரகோடி, கணிதசிஷ்யர்கள் ஶுஶ்ரூஷிக்க, வழிசெல்லாநிற்க, விந்த்யப்ரதேசத்திலே, ஒருபள்ளக்கரையிலே ஜலஸ்பர்ஶார்த்தமாக இளையாழ்வாரும் கோவிந்தபட்டரும் கூடிநின்றவாறே, கோவிந்தபட்டரும் அவிஜநமான சமயமறிந்து, இவர்களுடைய கங்காயாத்ர நிமித்தத்தை இளையாழ்வாருக்கு ஸூசிப்பித்து அகன்றுபோகச்சொல்லி, தாம் ஒருவரேபோந்தார்.

இளையாழ்வாரும் வ்யாகுலப்பட்டு அவ்வழியைவிட்டு, குறுக்கப்போய், ஒருமரத்தடியிலே நின்று பார்க்க, அவ்விடம் "வெம்பியெறிகானகமாய்" நிர்ஜலப்ரதேசமுமாய், ஶுஷ்ககண்டகாவ்ருதமாய் "பொருந்தார்கை வேல்நுதிபோல், பரற்பாயமெல்லடிகள் குருதிசோர, விரும்பாதகான்விரும்பிவெயிலுறைப்பவெம்பசிநோய்கூற" என்கிறபடியே உளன்று வெம்பரற்களையுடைத்தாய் தீக்ஷ்ணதாபகர ரவிகிரணங்களையுடைத்தான (உஎகூ) "விந்த்யாடவீஷு கோராஸு" (విన్ధ్యాటవీషు ఘోరాసు) என்றுசொல்லுகிற விந்த்யாடவியாகிற சிறந்தகாட்டிலேதனியேநின்று "ஆவாரார்துணை" என்று பக்கம்நோக்கிநின்று "வழிதிகைத்தலமருகின்றேன்" என்னும்படி திக்விப்ரமம்பிறந்து, "மதியெல்லாமுள்கலங்கி" அடியிடத் திமிர்த்துக்கொண்டு, திகைத்துநிற்க, ஸர்வேஶ்வரனும் (உஎஎ) "நாஹமாத்மாநமாஶாஸே மத்பக்தைஸ்ஸாதுபிர்விநா" (నాహమాత్మానమాశాసే మద్భక్తైస్సాధుభిర్వినా) என்றிருக்கும் அவனுகையாலே (உஎஅ) "ஸஹாயஸ்ஸர்வலோகேஶ:" (సహాయ స్సర్వలోకేశః) என்கிறபடியே வாளும் வில்லுங்கொண்டு "இடர்கெடவந்து" பத்நீஸஹிதனாய் ஒருவில்லியாய்வந்து முன்னே தோன்றினான்; இவரும் அவர்களைக்கண்டு கலக்கந்தீர்ந்து, உள்ளந்தேறி நின்று, நீங்கள் எங்கு நின்றும்வந்தீர்கோள், எங்கேறப்போகிறீர்கோள் என்றுகேட்க, அவர்களும் உத்தரதேசம் ஸித்தாஶ்ரமத்தில்நின்றும்வருகிறோம், ஸத்யவ்ரதக்ஷேத்ரதேசமேறப்போகிறோமென்ன, இவரும் நாம் உங்களுடனே புண்யகோடியேறவரு

வாளுக நினைத்திராநின்றேனென்ன, நல்லது வாருமென்று அவர்கள்முன்னடியிட, இவரும் அவர்கள்பின்னேசெல்ல, அவர்களும் ஸ்வாதீநமாகவழிநடத்த, விந்த்யம்பிற்காலித்து சந்த்யாகாலமானவளவிலே, காலோசிதமான கர்மாநுஷ்டாநங்களையுஞ் செய்து, உபவாசத்திலே, அவர்களுடனே, ஓரிடத்தே கண்புதைய, "முடியாவல்லிடவாய்" முன்னடிதோன்றாமல், காளராத்ரியாய், காடாந்தகார பூயிஷ்டமாய், நள்ளிருளானவாறே, ஒரு ராஜவ்ருக்ஷத்தடியிலேயிருந்தார்கள். அப்போது வ்யாதபத்நியும், நல்லதண்ணீர் மடுக்க வாசைப்பட; வ்யாதபுருஷனும் கிட்டவே பாநார்ஹமான கிணற்றிலே, மதுரநிர்மல சீதள சந்தயுதபாநீயம் வெடியக் காட்டுகிறேனென்ன; இளையாழ்வாரும் அதுகேட்டு, ஐயோ? பரமோபகாரிகளான இவர்களை லப்தமநோரதராக்கும்படிக்கு, இது நமக்கு அபிஜ்ஞதேசமாய்விட்டதே என்று நிர்விஷண்ணரா யிராநிற்க; "கனவிருளகன்று" "கீழ்வானம்வெள்ளென்ற" வாறே "கொழுமலரணவிக்கூர்ந்ததுகுணதிசைமாருதம்" வீச, "அரிஅரியென்றபேரரவங்கேட்டு" எழுந்திருந்து, சடக்கெனக்காலீநகர்மத்தைச்செய்து, வழிநடத்துமவர்களைத் தேடிக் காணாமல், ஸர்வதோதிக்குமாக நோக்கிக் கூப்பிட்டு, நாலடிதோன்றினவழியே நடந்துவர, "கதிரவன்குணதிசைச்சிகரம்வந்தணைய" ஜநபதங்கள் ஸ்பஷ்டங்களாகத் தோற்றக் கண்டு, நேற்று நின்றநிலைக்கு இப்படியுமொரு வெளிநாடு காணப்பெற்றதேயென்று பேரஆஸ்சர்யயுக்தராய் நோக்க; அங்கே ஒரு தோப்புங் கிணறுமாய், நாலிரண்டுபேருமாய்நிற்கக்கண்டு, இவரும் இது எத்தேசம், எவ்வூர், எந்தஸ்தலமென்று அவர்களைக்கேட்க; அவர்களும் இதென்ன ப்ராஹ்மணா? புண்யகோடிவிமாநம்முன்னேநிற்கத்தெரியாதோவென்ன; இவர் அதுகேட்டு ஸந்தோஷமத்யுந்மஸ்தகமாய், ராவணவதம் கேட்டிருந்த பிராட்டி ஸந்தோஷம்போலவும், (௨௭௧) 'த்ருஷ்டாஸீதா'' (దృష్టాసీతా) என்ற வார்த்தையைக் கேட்ட பெருமாள் ஸந்தோஷம்போலவும், மதுவநத்திற் புகுந்த திருவடி ஸந்தோஷம்போலவும், தத்க்ஷணத்திலே கர்த்தவ்யதாமூடராய், அவர்களைப் பிராட்டியும் பெருமாளுமாகநினைத்து, க்ருஷ்ணாவதாரஸௌஸீல்யமே நினைத்து, "எத்திறம்" என்ற ஆழ்வாரைப்போலே மோஹித்துக்கிடந்தார்.

பின்பு (௨௮௦) "ஸ்வைராஜ்யாஸிதஸ்வயம்" (స్వైరాజ్యాసితస్స్వయం) என்னும்படியே, தன்னிலே வ்யாமோஹந்தெளிந்தவாறே, (௨௮௧) "ஹேக்ருஷ்ண ஹேயாதவ ஹேஸகே" (హేకృష్ణ హేయాదవ హేసఖే) என்னும்படி கூடத்திரிந்த அர்ஜுநனை ப்ரமிப்பித்தாற்போலே, என்னையும் நீர்மையால் "நெஞ்சம்வஞ்சித்துப்புகுந்து உருக்காட்டாதேயொளிப்பதே" என்னுமாபோலே,

பலவகை சொல்லிப் புலம்பி, தம்மிலே உள்ளந்தேறி, ஆநந்தநிர்ப்பரராய், பெரிய ராஜமார்க்கத்தாலே சென்று, வையமாளிகையேறி, "தென்னத்தியூரர்கழலிணைக்கீழ்ப்பூண்ட வன்பாளன்" என்கிறபடியே திருப்பொலிந்த சேவடிகளை சேவித்து, விழுந்தெழுவது தொழுவதாய், ஆநந்தாச்ருக்கள் பனிப்ப, புளகீக்ருதகாத்ரராய், ஆநந்தித்து, அவன் அந்தர்த்தாநம்பண்ணினதற்கு அவன்கருத்தறிந்து, அச்சாலைக்கிணற்றிலே பேரருளாளர் திருவாராதநத்துக்கு உதவத்திருமஞ்சநங்கொண்டுவந்து ஸமர்ப்பித்துக்கொண்டு போராநின்றார்.

அங்கே யாதவப்ரகாசனும் திரளுமாக இவர்கள் வருமளவும்நிற்க, அவ்வளவிலே கோவிந்தபட்டர் வர, வந்தீரோ, இளையாழ்வார் எங்கே? என்றுகேட்க, அவரை நான் கண்டிலேனென்ன, அவனும் தன்சமீபவர்த்திகளைப்பார்க்கவிட, அவர்களும் பார்த்துத்தேடிக்காணாமையாலே, ஐயோ? காட்டிலே என்னதீங்குவந்ததோ! என்று, ஸர்வரும்துக்காகுலராய், முன்னே நடந்து, ப்ரயாணகதியிலேபோய், கங்காதீரத்தை யடைந்தார்கள். அங்கே போய் அவர்களெல்லாரும் கங்கையிலே மாகஸ்நாநம்பண்ணாநிற்க, ஒருநாள் கோவிந்தபட்டரும், அகமர்ஷணஸ்நாநம் பண்ணுகிறபோதிலே, ஒருலிங்கம் வந்துசேர, இதென்னென்று விஸ்மிதராய், யாதவப்ரகாசனுக்குக் காட்ட, அவனும் போர ப்ரீதனாய், நீர் தெய்வஜ்ஞராகையாலே கங்காஸ்நாநபலம் கைசேர்ந்தாற்போலே, கங்காதரனே கைபுகுந்தான் என்று யாதவப்ரகாசனும் இவரிடத்தே விசேஷப்ரதிபத்தியுக்தனாக, எல்லாரும் லிங்கம்கைசேர்ந்ததுவே நிரூபகமாக இவர்க்கு உள்ளங்கைகொணர்ந்தநயினாரென்று பேரிட்டு அழைக்கத்தொடங்கினார்கள். யாதவப்ரகாசனும், கங்காஸ்நாநம் பண்ணி மீண்டு, ஜகந்நாதம் அஹோபிலம் வழியாகவர, உள்ளங்கைகொணர்ந்த நயினாரும், இந்தலிங்கத்தை ஒரு உசிதஸ்தாநத்திலே ப்ரதிஷ்டிப்பித்து வருகிறேனென்ன, யாதவப்ரகாசனும் அப்படியே செய்யுமென்று இவரை மார்க்கமத்யே அனுப்பிவிட்டு, பெருமாள்கோயிலேறப் போந்தான்.

பின்பு உள்ளங்கைகொணர்ந்த நயினாரும், தன்ஜந்மபூமியான மழலைமங்கலத்திலே சென்று, அங்குள்ள விசேஷ வித்வந்மஹாராஜநங்களையும் திரட்டி, ஸ்வகரஸ்த்த லிங்கத்தை அங்கே ப்ரதிஷ்டிப்பித்து, தத்பக்தனாயிருக்கிறவளவிலே; காளஹஸ்திநாதன், இவர் இருப்புக்குவிரும்பி, நீர் நம்பக்கல் வந்திருக்கவேணுமென்று நயினாருக்கு ஸ்வப்நங்காட்டி, தன் ஸ்த்தாநத்தார் ஸ்வப்நத்திலும் உள்ளங்கைகொணர்ந்த நயினாரை அழைத்துக்கொண்டு வாருங்கோளென்று ப்ரேரேபிக்க; அப்படியே அநேகத்துக்கொத்தில் உள்ளா

ரும் மழலைமங்கலத்திலே வந்து, இவரைப்பலவகை பஹுமாநம் பண்ணி அழைத்துக்கொண்டுபோய், ஸ்த்தாநநிர்வாஹத்துக்குவேண்டின இலச்சினை மோதிரமுங் கொடுத்து, இவரைத்தங்களுக்கு முக்யராக்க, இவரும் தத்பக்தி யுக்தராய் அங்கே யிருந்தார்.

அநந்தரம், யாதவப்ரகாசனும், பெருமாள்கோயிலிலேவந்து, இளையாழ்வாரைக்கண்டு ஆஸ்சர்யப்பட்டு, மிகவுஞ் சந்தோஷித்து, விந்த்யப்ரதேசத்திலே உம்மைக்காணமையாலே அந்யதாசங்கைபண்ணி, கனக்க நிர்வேதப்பட்டிருந்தோம்; இவ்வளவும் உம்மைக் கண்டதேயென்ன, இவரும் வழிதப்பி உங்களைக்காணமல் அகன்றுபோய், வில்லிவ்யாஜேநபோந்தவ்ருத்தாந்தத்தை ஸவிஸ்தாரமாக விஸ்தரிக்க; அவனுங் கேட்டு, இவரண்டை லோகாதீதமாயிருந்ததென்று, உள்கலந்து ஸுப்ரீதனுய்ஸ்வகோஷ்டியிலே கூட்டிக்கொண்டு க்ரந்தத்தை நடத்தாநிற்க;—

அவ்வளவிலே, இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் பேரருளாளர் ஸந்நிதியில்நின்றும் நம்பெருமாளை சேவிக்கவெழுந்தருளி, நம்பெருமாளைத்திருவடி தொழுது, ஆளவந்தார் திருவடிகளிலே சேவித்து நிற்க; ஆளவந்தாரும் பெருமாள்கோயில் விசேஷங் கேட்டருளும்போது, ப்ராஸங்கிகமாகப்பெருமாள்கோயிலிலே யாதவப்ரகாச னென்பாரொரு ஏகதண்டசந்யாசிபக்கல் ஸ்ரீபெரும்பூதூர் இளையாழ்வார் என்றொருவர் வேதாந்தம் வாசியாநிற்க, (உ௮உ) "ஸத்யம்ஜ்ஞாநமநந்தம்ப்ரஹ்ம" (సత్యంజ్ఞానమనన్తంబ్రహ్మ) என்ற ஸ்ருதிவர, அவன் அதுக்கு வ்யாவ்ருத்திதோன்ற அர்த்தஞ்சொல்ல, இளையாழ்வாரும் குணயோகஞ் சொல்லலாயிருக்க, வ்யாவ்ருத்திசொல்லச்சேராதென்ன, அவனும் ஹுங்காரம்பண்ணினான்; பின்னையும் ஒருநாள் அவனுக்கு அப்யஞ்ஜநமிடும்போது, (உ௮௩) "தஸ்யயதாகப்யாஸம்புண்டரீகமேவமக்ஷிணீ" (తస్యయథాకప్యాసంపుణ్డరీకమేవమక్షిణీ) என்கிறதற்கு அநுசிதார்த்தஞ் சொல்லக்கேட்டு, க்லேசித்து சோகாஸ்ரு அவன்தொடையிலே விழ, அது பொறிப்பட்டாற்போலேயாக, அவனும் பதறி, இவர்முகம் பார்த்து, க்லேசஹேதுவேதென்ன, இவரும் ஸூர்யனைக்கண்டு அப்போதலர்ந்த கமலம்போலவிருக்கும் பரமபுருஷன் திருக்கண்கள் என்று இங்ஙனேயோஜனையிருக்க, அபார்த்தங் கேட்டவாறே என்ன; இந்தவ்ருத்தாந்தங்களை ஸவிஸ்தாரமாக விண்ணப்பஞ்செய்ய, ஆளவந்தாருங் கேட்டருளி, (உ௮௪) "அஸஞ்ஜநவாத்³ருஹிஸம்ஸக்திஹஸக்திகாயாதிவஹவ்யவாஹநா: - ஸதா³த்ரு வஸதோ³யஜிஸம்ஸக்திதத்³ரூவஸாஸ்ரவஸ்ரவணாம்" (అసంక

వాత్రహిమసంభవన్తి హస్తికాయామవహవ్యవాహాః - అతైవసన్తోయదసంభవన్తి తత్రైవ లాభస్సరసీరుహాణాం) என்கிறபடியே, இந்தளத்திலே தாமரைபூத்தாற்போலே, இவ்விபூதியிலே இப்படியும் ஒருமஹாநுபாவனுண்டாகப்பெற்றதேயென்று போரப்ரீதராய், முதலிகள் முகம்பார்த்தருளி, அப்பொழுதே அவனைக்காண வேணுமென்று, பேராசையோடே முதலிகளும் தாமுமாகப் புறப்பட்டு, நம்பெருமாளுக்கு விண்ணப்பஞ்செய்து, அவர் அநுக்ரஹங்கொண்டு எழுந்தருளி, பயணகதியிலே திருக்கோவலூர் வழியாகவந்து, ஆழ்வார்கள் நயினாரையுந் திருவடிதொழுது, (உஅ௫) "புரீணாமபி ஸர்வாஸாம் ச்ரேஷ்டா பாபஹரா ஹி ஸா - நாம்நா காஞ்சீதி விக்யாதா புரீஷு ஸவிசேஷத:" (పురీణామపిసర్వాసాం శ్రేష్ఠాపాపహరాహిసా - నామ్నాకాఞ్చీతివిఖ్యాతాపురీషుసవిశేషతః) என்று சொல்லப்படுகிற மாஹாத்ம்யத்தை யுடைத்தான பெருமாள்கோயிலேற வெழுந்தருள; அங்குள்ள ஸ்ரீவைஷ்ணவர்களும், வரந்தரும்பெருமாளரையரும், ஸ்ரீசடகோபரும், தீர்த்தப்ரஸாதங்களுங்கொண்டு, அதிஸம்ப்ரமத்துடனே எதிர்கொள்ளவெழுந்தருள, ஆளவந்தாரும் மிகவும் ஸந்துஷ்டராய், ஸாஷ்டாங்கப்ரணாமம்பண்ணி, தீர்த்தப்ரஸாதங்களும் ஸ்வீகரித்தருள, திருக்கச்சிநம்பியும் மிகவும் உகப்போடே திருவடிகளிலே அடைவுகெட விழுந்து சேவிக்க, ஆளவந்தாரும் அதிப்ரீதியுடனே அவரை முடிபிடித்தெடுத்து, ஸ்ரீகஜேந்த்ரதாஸரே! பேரருளாளர்க்கு அந்தரங்கத்திருவாலவட்டகைங்கர்யம் அவிச்சிந்நமாய் நடக்கிறதோவென்ன, அவரும்வாய் புதைத்து, தேவரீருடைய நிர்ஹேதுகக்ருபையாலே பேரருளாளர் கொண்டருளுகிறார் என்று விண்ணப்பஞ்செய்ய, பின்பு நம்பியையுங் கூட்டிக்கொண்டு, "உலகேத்துமாழியான் அத்தியூரான்" என்கிற அர்த்திதார்த்த பரிதாநதீக்ஷிதரான பேரருளாளரை சேவிப்பதாகப் புகுந்து, ப்ரதமம் பேரருளாளன் பெருந்தேவியாரை சேவித்து மீண்டு, ப்ரதக்ஷிணமாக எழுந்தருளாநிற்க, (உஅசு) "உத்க்ருஷ்டம் மஹாபாகம் வல்மீகம் மஹதோகிரே: - பூஜநீயஸ்ஸதத்ராஸ்தே சேஷ: பணப்ருதாம்வர:" (ఉత్కృష్టమహాభాగవల్మీకం మహతోగిరేః - పూజనీయశ్చతత్రాస్తే శేషఃఫణభృతాంవరః) என்று சொல்லுகிற திருப்புற்றின்சமீபத்திலே திருவநந்தாழ்வானையும் சேவித்து, அதுக்குக்கிழக்காக, கரிய மாணிக்கத்தாழ்வாரையும் சேவித்து ஆளவந்தாரும் முதலிகளும் எழுந்தருளியிருக்கிறவளவிலே, யாதவப்ரகாசனும் திரளுமாகப்பெரிய பெருமாளை சேவித்து, ப்ரதக்ஷிணம்பண்ணிக்கொண்டு வாராநிற்க, ஆளவந்தாரும் இவர்களிலே இளையாழ்வார் ஆர் என்று நம்பியைக்கேட்டருள, அவ

ரும் சிவந்து நெடியவலியவராய், (உ௮௭) "ஆயதாஶ்ச ஸுவ்ருத்தாஶ்ச பா ஹவ:" (ఆయతాశ్చ సువృత్తాశ్చ బాహవః) என்கிறபடியே ஆஜாநுபாஹுவாய் நடுவே வருகிறவனொன்று விண்ணப்பஞ்செய்ய, ஆளவந்தாரும் அவனை ஸந்தோஷத்தாலே ப்ரஸந்ந மதுர கம்பீரநயநங்களாலே, ப்ருயோப்ருயோசெவ்வரியோடப் பார்த்தருளி, ஆ முதல்வனிவனென்று விசேஷகடாக்ஷம் பண்ணியருளி, பெருமாளைநோக்கி (உ௮௮) "யஸ்ய ப்ரஸாதகலயா பதிரஶ் ஶ்ருணோதி பங்கு: ப்ரதாவதி ஜவேந ச வக்தி மூக:- அந்த: ப்ரபஶ்யதி ஸுதம் லபதே ச வந்த்யா தம் தேவமேவ வரதம் ஶரணம் கதோஸ்மி" (యస్య ప్రసాదకలయా బధిరశ్శృణోతి పంగుః ప్రధావతి జవేన చ వక్తి మూకః - అంధః ప్రపశ్యతి సుతం లభతే చ వంధ్యా తం దేవమేవ వరదం శరణం గతోస్మి) என்று தேவரீர் ஸகலபலப்ரதராகை யாலே "தாம்வேண்டுங்காமமே காட்டுங்கடிது" என்கிறபடியே, அவ்வவருடைய இஷ்டகார்யங்களைத்தந்தருளுகையாலே, அடியேனுக்கும் இளையாழ்வாராகிற மஹாநுபாவன், நம் தர்ஶநப்ரவர்த்தகராம்படி விசேஷகடாக்ஷஞ் செய்தருளவேணுமென்று சரணம்புகுந்தேனென்று விண்ணப்பஞ்செய்து, பின்பு ஹஸ்திகிரியின்மேலேயெழுந்தருளி, பேரருளாளனையுஞ்சேவித்து, தீர்த்தப்ரஸாதமும் ஸ்வீகரித்தருளி, திருக்கச்சிநம்பியையும் பேரருளாளர் கோயிலிலேநிறுத்தி, ஆளவந்தார் அப்போது இவர்க்கொரு நல்வார்த்தை சொல்ல அவசரங்காணுமையாலே, மீண்டு, தாமும் முதலிகளுமாகக் கோயிலுக்கெழுந்தருளினார்.

அநந்தரம், யாதவப்ரகாசனும் தம்பக்கல் ஶ்ரோதாக்களுடன் வேதார்த்த வ்யாக்யாநம்பண்ணிக்கொண்டு இருக்கச்செய்தே, அந்தராஜ்யத்தில் ராஜாவின் பெண்பிள்ளையை ப்ரஹ்மரக்ஷஸ்ஸு பிடிக்க, இவ்விடங்களிலே மந்த்ரவாதிகள் உண்டோவென்று ஆராய்ந்து, யாதவப்ரகாசன் பேர மந்த்ரவாதியாயிருக்குமென்று சிலர்சொல்லக் கேட்டு, ராஜாவும் அவனுக்கு இச்செய்தியை அறிவியுங்கோ ளென்று ஆள்போகவிட, ராஜமநுஷ்யர் வந்து, இவனுடன் ராஜாவின் பெண்பிள்ளையை ப்ரஹ்மரக்ஷஸ்ஸு பிடித்த தென்று ராஜா உமக்கு அறிவிக்கச் சொன்னுனென்றுசொல்ல, இவனும்; யாதவப்ரகாசன் உன்னைப் போகச்சொன்னுனென்று ப்ரஹ்மரக்ஷஸ்ஸுக்குச்சொல்லுங்கோளென்று வந்தவர்களுக்குச்சொல்லிப்போகவிட, அவர்களும்போய் யாதவப்ரகாசன் உன்னைப்போகச்சொன்னுனென்றுசொன்னவாறே, அவன்றன்னை அங்குநின்றும் போகச்சொன்னேனென்றுசொல்லுங்கோளென்று அந்த ப்ரஹ்மரக்ஷஸ்ஸுசொல்ல, ராஜாவின் மநுஷ்யர் இச்செய்தியை யாதவப்ரகாச

னுக்கறிவிக்க, அவனும் போரக்குபிதனாய், தானும் திரளுமாகப்போய், ராஜ கோஷ்ட்டியிலே மஹாமந்த்ரத்தை ஜபித்துக்கொண்டு, ப்ரஹ்மராக்ஷஸ்ஸின் அருகில் நின்று த்ருஷ்ட்டிபிடிக்க, அதுவும் முடக்கின காலைநீட்டி, வாடா! யாதவப்ரகாசா? நீ ஜபிக்கிற மந்த்ரம் நானறியேனோவென்று அந்தமந்த்ரத் தையுஞ்சொல்லி, நான் இந்த மந்த்ரத்துக்கும் உனக்கும் போவேனோ, நீ உன்ஜந்மம் அறியாய், என்ஜந்மமும் அறியாயென்ன, யாதவப்ரகாசனும், ஆகில்? நீ பிரானே, சர்வஜ்ஞனுமாயிருந்தாய், என்னுடையஜந்மமேது, உன் னுடைய ஜந்மமேதென்றுகேட்க, அதுவும், உன்னுடைய ஜந்மம் மதுராந்த கத்து ஏரிக்கரையிலே யிருப்பதொரு புற்றாய், அதிலே ஒரு உடும்பா யிருப் புதி, கோயில் பெருங்கூட்டம் திருமலைக்கெழுந்தருளும்போது அங்கே ஸ்ரீ வைஷ்ணவர்கள் நீராடி யமுதுசெய்கிற விடத்திலே சிந்தின ப்ரஸாதத்தை யும் தீர்த்தத்தையும் ஸ்வீகரித்தாய், அத்தாலே உனக்கிந்த வித்வஜ்ஜந்மம் உண்டாய்த்து. என்னுடையஜந்மம் ப்ராஹ்மணவர்ணத்திலேபிறந்து, யாகம் பண்ணி, அதிலே மந்த்ரலோப க்ரியாலோபங்கள் பிறந்து, அத்தாலே ப்ர ஹ்மராக்ஷஸ்ஸு ஆனேனென்று சொல்ல, ஆகில்! நீ யாருக்குப் போவுதியெ ன்ன, ரக்ஷஸ்ஸும் உன்பக்கலிலே வாசிக்கிறவர்களிலேயொருவர், நித்யசூரி களில் தலைவராயிருப்பர்காணென்ன; இவனும் அவர் ஆரென்றுகேட்க; அது வும் இவரென்றுஇளையாழ்வாரைக்காட்டி, அவரைத்தண்டனிட்டு, இவர்போக ச்சொன்னாராகில் போகிறேனென்ன; ஆகில்; இளையாழ்வீர், நீர் இத்தைப் போகச்சொல்லுமென்று அவன் சொல்ல; இவரும் நீ இவளைவிட்டுப்போ வென்ன; அதுவும் உன்திருவடித்தாமரைகளை என்தலைமேலே வைத்தாலொ ழியப்போகேன் என்ன; இவரும் உகந்து அப்படியே செய்தருள; அதுவும் ஸந்துஷ்டமாய் சிரித்துக் கும்பிட்டு எழுந்திருந்து, போகிறேனென்ன; இளை யாழ்வாரும், ஆகில், நீபோகிறதற்குஅடையாளங்காட்டிப்போவென்ன, அது வும், இவ்வரசிலே நானிருப்பேன்,இப்போது இவ்வரசைமுறித்துக்கொண்டு போகிறேனென்றுசொல்லி அவ்வரசை முறித்துக்கொண்டுபோய்த்து. யாத வப்ரகாசனும் இளையாழ்வாரை மிகவும் உபஸ்லாகித்து மீண்டு தன்னுடைய மடமே வந்து புகுந்தான்.

அநந்தரம் ஆளவந்தார் கோயிலிலே ஒருநாள் வ்யாக்யான ஸமயத்தி லே “இலிங்கத்திட்டபுராணத்தீரும்” என்கிறபாட்டு ப்ரஸ்துதமாக, அப் போது நமக்குப்பின்பு இத்தர்ஸநம் நிர்வஹித்து நடத்துவார் ஆரையுங் கா ணப்பெற்றிலோமென்கிற விசாரத்தாலே இளையாழ்வார்பக்கல் திருவுள்ள மாய், இப்போ இளையாழ்வாரை யாதவப்ராகாசனோடு உறவறுத்து, நம்பக்கல்

சேர்க்கும் விரகுண்டோவென்று அருளிச்செய்து, பின்னையும் பேரருளாள னைக்குறித்து, நம் ப்ரபத்தியை ஸபலமாக்கி யருளவேணுமென்று மீளவும் ப்ரார்த்தித்தருளினர்.

பின்பு யாதவப்ரகாசனும், மீளவும் ஒருநாள் க்ரந்தம் நடத்தாநிற்கச் செய்தே, (உஅகூ) "𑌸𑌰𑍍𑌵𑌂 𑌖𑌲𑍍𑌵𑌿𑌦𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌨𑍇𑌹 𑌨𑌾𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌕𑌿𑌞𑍍𑌚𑌨" (సర్వం ఖల్విదం బ్రహ్మ నేహ నానాస్తి కిఞ్చన) இத்யாதி வாக்யங்களை, அத்வைத பர மாய் யோஜித்து, ஜீவப்ரஹ்மணோரைக்யம் ப்ரதிபாதிக்க, இவரும் அத்தை நிராகரித்து, அவன்வாக்யங்களை விசிஷ்டாத்வைதபரமாக யோஜித்து, அர்த் தஞ்சொல்ல, அவனும் குபிதனாய், இன்றுதொடங்கி என்னிடம்வாசிக்கவே ண்டாம், உம்முடைய புத்திக்குத் தகுதியானவிடத்தே போய் க்ரந்தம்வாசி யுமென்று போகச்சொன்னான்.

இவரும் அதிப்ரீதியோடே மீண்டு, தம் திருமாளிகையிலே வந்து, திருத்தாயாருக்கு இச்செய்தியைச் சொல்ல, அவரும், வாரீர்பிள்ளாய், இது க்கு முன்பு நீர் படித்ததுபோரும், திருக்கச்சிநம்பி, பெருமாளைச் சேவித்து, பெருமாளுக்கு அந்தரங்கராயிருக்கிறார், நீர் அவரைச் சேவித்து அவர் அரு ளிச்செய்வதைச்செய்துகொண்டிருமென்று சொன்னார். அப்படியே இளை யாழ்வாரும், திருக்கச்சிநம்பியைச்சேவித்து க்ருதார்த்தராய் (உகூ0) "𑌆𑌜𑍍𑌞𑌾𑌪𑌯𑌤𑍁 𑌮𑌾𑌂 𑌭𑌵𑌾𑌨𑍍" (ఆజ్ఞాపయతు మాం భవాన) என்றாற்போலே அடியேன்செய்யும் கைங்கர்யத்தை நியமித்தருளிச்செய்யவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய, நம்பியும், முன்புபோலே பெருமாளுக்குச்சாலைக்கிணற்றுத்தண்ணீர் உகப்பா யிருக்கும், திருவாராதநகாலத்துக்கு உதவ ப்ரதிதிநம் ஒருகுடம் திருமஞ் சநங்கொண்டுவந்து ஸமர்ப்பியும் என்றருளிச்செய்ய, இளையாழ்வாரும் அப் படியே தப்பாமல், தம் கைங்கர்யம் செய்துகொண்டு சேவித்திராநிற்க,—

(ஸ்ரீயமுனைத்துறைவர் வைபவம்.)

அவ்வளவிலே ஸ்ரீயாளவந்தார் திருமேனியிலே நோவுசாத்தி யெழு ந்தருளியிருக்கச்செய்தே, திருவரங்கப் பெருமாளரையரைப்புருஷகாரமாக் கிக்கொண்டு, திருக்கோட்டியூர்நம்பியும், பெரியநம்பியும் ஆளவந்தார் ஸ்ரீபா தத்திலே தண்டனிட்டு, அடியோங்களுக்குத் தஞ்சமாயிருப்பதொருஅர்த் தம் ப்ரஸாதித்தருளவேணுமென்று விண்ணப்பஞ் செய்ய, ஆளவந்தாரும் முதலிகள் இருவரையும் திருவுள்ளம்பற்றி, உங்களுக்குத் தஞ்சமாயிருப்ப தொரு அர்த்தம் இது; கோயிலாழ்வாரே உங்களுக்கு உயிர்நிலை, உங்களுக்கு

த்தஞ்சமென்றுபுத்திபண்ணிப்போருங்கோளென்றும், பெரியபெருமாள்திருவடிகளின்கீழே வீணையுங் கையுமாய்ச் சேவித்திருக்கும் திருப்பாணாழ்வார் விக்ரஹத்தைப்பாதாதிகேசாந்தமாகச் சேவித்துக்கொண்டு போருங்கோள் என்று திருவுள்ளமாக, திருவரங்கப்பெருமாளரையர் முதலான முதலிகள் மூவரும் அப்படியே திருவுள்ளம்பற்றி யிருக்கிறவளவிலே, ஆளவந்தாரும் திருவரங்கப்பெருமாளரையர் முன்னான இம்முதலிகள் மூவரையுங்குறித்து, இதற்கு ப்ரமாணமாகத்திருவேங்கடமுடையான் உயிர்நிலை யறிந்து போரும் குறும்பறுத்தநம்பியையும், பேரருளாளப்பெருமாள் உயிர்நிலையறிந்து போரும் திருக்கச்சிநம்பியையும், பெரியபெருமாள் உயிர்நிலை யறிந்து போரும் திருப்பாணாழ்வாரையும், திருப்பாணாழ்வார் உயிர்நிலை யறிந்துபோரும் திருவரங்கப்பெருமாளரையரையுங் காட்டியருளி, ஆழ்வார் திருவரங்கப்பெருமாளரையரையும் பார்த்தருளி, நீர் பெரியபெருமாள் உயிர்நிலையறிந்து சேவித்துப் போருகிற விக்ரஹமே அடியேனுக்கு உபாயோபேயமென்று புத்திபண்ணிப் போருவனென்று அருளிச்செய்ய, திருவரங்கப்பெருமாளரையரும் ஆளவந்தார்ஸ்ரீபாதத்திலே தண்டம் சமர்ப்பித்து, தேவரீர் நித்யவிபூதியிலே சென்று, பரமபதநாதனைச்சேவித்து, இமையாதகண்ணராய்க்கொண்டு போரத்திருவுள்ளம்பற்றி யருளித்தோவென்று விண்ணப்பஞ்செய்ய, ஆளவந்தாரும்அவரைக்குறித்து, நீர் பாஸம்ருத்திக்கு உகந்து அத்யவஸித்திருமென்று அருளிச்செய்து, பின்னையும் ஆளவந்தார் இம்முதலிகள் மூவரையும் திருவுள்ளம்பற்றி, ஒருவன் ப்ரபந்நனானால் பகவததீநமான ஆத்மயாத்ரையிலும், கர்மாதீநமான தேஹயாத்ரையிலும் அந்வயம் உண்டென்று இருந்ததானால், ஆத்மஸமர்ப்பணங்குலைந்து நாஸ்திகனாய்விடும், ஆகையாலே த்ரிவிதகரணங்களிலும் உபயயாத்ரையிலும் அந்வயம் இல்லை, நாராயணனுக்கு நைரந்த்ர்யவேஷம் தம்பக்கல் பேற்றுக்கு (உகூக) “ 𑌨𑌮𑌃 ” (నమః) என்னுதவர்களை “ வானவர்நாட்டையும் நீகண்டுகொள் ” என்று அதொரு ஔதார்யவிசேஷமுண்டு. நாரங்களுக்கு நைரந்த்ர்யவேஷம் “ நாராயணனேநமக்கேபறைதருவான் ” என்கிறபடியே நிர்ப்பரராயிராதே, தம்பேற்றுக்கு த்வரித்திருக்கையும் ஸ்வரூபஹாநி. எம்பெருமானே ரக்ஷகனென்றிருக்கையும் ஸ்வரூபஹாநி, எம்பெருமான் ரக்ஷ்யனென்றிருக்கையும் ஸ்வரூபஹாநி, இப்படியிருந்தானாகில் அநந்யார்ஹ சேஷத்வத்துக்கும், ஸ்வஸ்வாமி ஸம்பந்தத்துக்கும்சேராதென்று அருளிச்செய்ய, மீளவும், இவர்கள், ஸ்ரீபாதத்திலே தண்டனிட்டு, அடியோங்களுக்குப்பற்றும் உபாயமேதென்றுகேட்க, ஆளவந்தாரும் நீங்கள் அடியேனை புத்திபண்ணிப்போருகை அடியேனுக்கு ஸ்வரூப

ஹாரி. "எம்பெருமானுன்தொழுவா ரெப்பொழுதுமென்மனத்தே யிருக்கின்றரோ" என்று, அதுவே உங்களுக்கு உபாயோபேயமென்று புத்திபண்ணிப்போருங்கோளென்று அருளிச்செய்ய, முதலிகளும் தம் திருவுள்ளத்திலே முசித்திருக்கிறவளவிலே, ஆளவந்தாரும் இவர்களைக்கண்டு நீங்கள் முசிக்கவேண்டா, உங்களுக்குத் திருமந்த்ரார்த்தம் போகமண்டபம், சரமஶ்லோகார்த்தம்புஷ்பமண்டபம், மந்த்ரரத்நார்த்தம்த்யாகமண்டபம்; இதற்கு ப்ரமாதாக்கள் திருப்பாணாழ்வார் முதலானோர்களென்று அருளிச்செய்தார். இத்தைத் திருவரங்கப்பெருமாளரையர் திருவுள்ளம்பற்றி, தேவரீர் அவதாரம் தீர்த்தம் ப்ரசாதித்துப்போனவளவில் க்ரிமி கீடாதிகளுக்கு ஒருதீவுவந்தால் செய்வதில்லையென்று அருளிச்செய்ய, ஆளவந்தாரும் அவ்வார்த்தையைக்கேட்டு ஹலாத்கரித்து ப்ரத்யுத்தரமருளிச்செய்யாமலிருக்க; இவ்வார்த்தையை முதலிகள் இருவரும் திருவுள்ளம்பற்றி, ஆளவந்தார் வ்யோகத்தில் நாம் ப்ராணத்யாகம் பண்ணக்கடவோமென்று நிஶ்சயித்திருக்கிறவளவிலே; பெரியபெருமாள்திருவோலக்கத்திலே இவ்விசேஷம்பிறக்க, பெரியபெருமாளும், திருவரங்கப்பெருமாளரையர் திருக்கோட்டியூர்நம்பி முதலாக அருளப்பாடிட்டு, ஆளவந்தார் வ்யோகத்திலே நீங்கள் அவிவேகம் பண்ணினீர்களாகில் நம்மாணையென்று ஆஜ்ஞாபித்து, திருவரங்கப்பெருமாள் திருக்கையிலே அவர்களைக் காட்டிக்கொடுத்தருள; அவரும், முதலிக ளிருவரையும் கையைப்பிடித்துக்கொண்டு, ஆளவந்தார் ஸ்ரீபாதத்திலே சென்று இவ்விசேஷத்தைவிண்ணப்பஞ்செய்ய, அவரும் இத்தைக்கேட்டு, நம்பேற்றுக்கு சஹியாதவர்கள் பெரியபெருமாள் இரண்டாற்றுக்குநடுவே திருவாராதநங் கண்டருள சஹியாதவர்கள் என்றருளிச்செய்து, நம்முடைய வ்யோகத்தில் அவிவேகம்பண்ணினீர்களாகில், உய்யக்கொண்டார் மணக்கால்நம்பி முதலான பெரியபெருமாள் உகந்த முதலிகள் நம் சடகோபன் திருவுள்ளத்தை மறுத்தவர்களாதிகோளென்று தம்முடைய திவ்யாஜ்ஞையிட; இவர்களும் திருவுள்ளத்திலே நொந்திருக்கிறவளவிலே, ஆளவந்தாரும் பகவத்பாகவதவிஷயங்களிலே தரமிடாதே, பாகவதவிஷயத்திலே பகவந்நோக்கானவனாய், பகவானை குருபரம்பராதியாக திருவடிவிளக்குமாபோலே பாகவதவிஷயத்திலும் தன்சத்தைமாண்டு ஆசார்யவிக்ரஹத்தை அநுஸந்தித்துத் தீர்த்தங்கொண்டுபோகையும்; அவர்களுக்குத் தீர்த்தங் கொடுக்குமிடத்தில் அர்த்தகாம பாரவசரன்றிக்கே, தாங்களும் நேரே ஆசார்யனை நோக்கி குருபரம்பரா பூர்வகமாக த்வயத்தை அநுசந்தித்துக் கொடுக்கையும் இவர்க்கு உபாதேயம்; ஜ்ஞாநாதிகவிஷயமுமாய், சமூஹமுமாய்ச் சென்றவளவிலே

இருவரும் அர்த்தகாமபரவசராய், ப்ராக்ருத சரீரத்திலே நோக்காய், சமூஹத்திற்சென்று, முதலிகளையிழந்து திருவுள்ளம்கன்றுமாகில், ஆசார்யனேயாகிலும் இவர்களுக்குத்தீர்த்தம் உபாதேயமன்று என்றருளிச்செய்ய; இம்முதலிகளும் அவ்வார்த்தையைத் திருவுள்ளம்பற்றியிருக்கிறவளவிலே, ஆளவந்தாரும் முதலிகளைப்பார்த்து உங்களுக்குச்சரமார்த்தம் பெரியபெருமாள் திருவடிகளிலே ஒரு கருமுகைமுகிழ் வெடிக்கவைக்கையும்; ஆசார்ய விஷயத்தில் ப்ரதமதசை மத்யமதசையென்று சரமதசையை யநுசந்தித்துப் போருகை உத்தாரகப்ரதிபத்தியென்று அருளிச்செய்து, திருவரங்கப்பெருமாளரையரை தண்டனிட்டு திருக்கோட்டியூர் நம்பியையும் பெரியநம்பியையும் அவர்கையிலே காட்டிக் கொடுக்க, திருவரங்கப்பெருமா ளரையரும் அவர்களைக் கைக்கொண்டு, நீங்கள் ஆசார்யவிஷயத்தில் அவிவேகம்பண்ணினீர்களாகில் உங்களுக்கு தேசவிசேஷமின்றிக்கே நித்யஸூரிகள்திரளிலும் புகுரப்பெறாதே யிழக்கிறீர் என்றருளிச்செய்ய, ஆளவந்தாரும் இத்தைக்கேட்டு, திருவுள்ளமுகந்து, உங்களுக்குத் திருவரங்கப்பெருமா ளரையருடைய விக்ரஹமே உபாயோபேயமென்று புத்திபண்ணிப் போருங்கோளென்று அருளிச்செய்ய; அவர்களும் அப்படியே புத்திபண்ணியிருந்தவளவிலே, ஆளவந்தார் திருமேனியில் நோவாறி, ஆரோக்யமுண்டாய், நீராடி, பெரியபெருமாளுக்கும் உத்ஸவமாய், பெரிய திருமஞ்சநங்கண்டருளி, உடுத்து, முடித்து, சாத்துப்படிசாத்தி, அங்குள்ள ஸ்ரீரங்கமாமறையோர் சேவிக்க, அமுதுசெய்தருளி, திருத் திரைநீக்கியிருக்கிறவளவிலே; ஆளவந்தார் திருவோலக்கத்தேற வெழுந்தருளி, க்ருதாஞ்சலிபுடராய் சேவித்து நிற்க, பெரியபெருமாளும், நினைவறிந்து, திருவரங்கப்பெருமாளரையரை அருளப்பாடிட்டருள, அவரும்சேவிக்குமடைவையொழிய "சூழ்விசும்பணிமுகில்" சேவிக்க, திருவோலக்கமடைய இதென்னென்று விஸ்மயப்பட! பெரியபெருமாள் நெற்றியில் மாலை நழுவிவிழ, நம்பியாரெடுத்து ப்ரசாதிக்கிறோமென்று இருக்கிறவளவிலே, திருவரங்கப்பெருமாளரையர் சடக்கெனவெடுத்து ஆளவந்தாருக்கு ப்ரசாதித்தருள; அவரும் திருவுள்ளமுகந்து நிற்க, அரையரும் உம்முடைய நினைவு சித்தித்ததென்ன, பெருமாளும் தீர்த்தப்ரசாதம் சடகோபன் ப்ரசாதித்து விடைகொடுத்தருள; ஆளவந்தாரும், மடத்தேறச்சென்று, திருவரங்கப்பெருமாளரையர், திருக்கோட்டியூர்நம்பி, பெரியநம்பி முதலான முதலிகளெல்லாரையும், தீர்த்தங்கொண்டு அமுதுசெய்யப்பண்ணி, தண்டனிட்டு சர்வாபராதங்களையும் பொறுத்தருளவேணுமென்று க்ஷமைகொண்டு எழுந்திராமல் நிற்க, திருவரங்கப்பெருமாளரைய

ரும் உமக்கொரு அபசாரமுண்டோவென்று முடிபிடித் தெடுக்க எழுந்திரு
ந்து, பின்பு அமுதுசெய்து, இவர்களுக்குப்பூர்வம்போலே நல்வார்த்தையரு
ளிச்செய்துகொண்டிராநிற்க; அவ்வளவிலே ஆளவந்தார் திருமேனியிலே
நோவுசாத்திற்றென்று கேட்டு, இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் பேரருளாளர்
சந்நிதியில் நின்றும் கோயிலேறச் சென்று, ஆளவந்தார் திருவடிகளிலே
சேவித்திருக்க; ஆளவந்தாரும் பெருமாள்கோயில் விசேஷம் கேட்டருளி,
இளையாழ்வார் செய்கிறதென்னென்று கேட்டருள? அவர்களும், இப்
போது இளையாழ்வார் யாதவப்ரகாசனிடத்தே சிற்றம் பிறந்து, அவனைத்
துறந்து, பேரருளாளர் பக்கல் ப்ரவணராய் நில்லாநின்றார், என்று விண்
ணப்பஞ்செய்ய; ஆளவந்தாரும் கேட்டருளி, உகந்து, பேரருளாளர் நம்மு
டைய ப்ரபத்தியை ஸபலமாக்கி யருளினார், என்று பெரியப்ரீதியோடே,
பேரருளாளன் பெருமையைப் பேசவல்லராய்க்கொண்டு, ஸ்தோத்ரத்தை
விண்ணப்பஞ்செய்து, ஸ்வாபிமாநாந்தர்ப்பூதரான பெரியநம்பி திருக்கையி
லே கொடுத்து, அவரைப்பார்த்து இளையாழ்வார் இப்போது யாதவப்ரகாச
னிடத்தே சேராதே, அவனைவிட்டு தேவப்பெருமாள்பக்கலிலே ப்ரவணரா
யிராநின்றாரென்று கேட்டோம்; இக்காலத்தில் நீர் அங்கேறப்போய் அவரை
நம்மோடொக்கச் சேர்க்கவேணுமென்று நியமித்தருள, அவரும் அப்படி
யே சடக்கெனப் புறப்பட்டுப் பெருமாள்கோயிலுக் கெழுந்தருளினார்.

அநந்தரம், ஆளவந்தார் பின்னையும் திருமேனியிலே நோவுசாத்தி,
மிகவுந் தளர்ந்து கண்வளர்ந்தருள; அங்குள்ள முதலிகளும் பெரியபெரு
மாள் திருவுள்ளம் ஏதோவென்று, தங்களிலே சிந்தித்திருக்கிறவளவிலே;
பேரருளாளப்பெருமாளுடைய "வையங்கண்ட வைகாசித்திருநாளில், அவ
ப்ருததிநத்தினன்று, ஆளவந்தாரும் நீராடி, பெரியபெருமாளைத் திருவடி
தொழச்சென்று, உத்தமசித்தி யமுதுசெய்து, திருத்திரைநீக்கினவளவிலே,
தண்டஞ்சமர்ப்பித்து, பாதாதி கேசாந்தமாகவும், கேசாதி பாதாந்தமாகவும்
சேவித்து, திருவடிக்கீழ் திருப்பாணாழ்வாரையும் அநுபவித்து, நம்பியார்
சடகோபன் ப்ரசாதிக்கப்பெற்று, தீர்த்தம் ப்ரசாதம் ப்ரசாதிக்கப்பெற்று,
திருப்பதியாரும் திருத்தளிகைப்ரசாதம் ப்ரசாதித்து விடைகொடுத்தருள,
ஆளவந்தாரும் ஸ்ரீபாதத்து முதலிகளுடன் மடமேசென்று, மீண்டு முதலி
களைத்தீர்த்தங்கொண்டு அமுதுசெய்தருளப் பண்ணி. முஹூர்த்த மிட்டு,
வைகாசிமாதம், ஆறுந்தேதி, ஸ்ரவணநக்ஷத்ரம், அபிஜிந்முஹூர்த்தத்திலே,
முதலிகள் சேஷமும் அங்கீகரித்து, ஆழ்வார்களை சரணம்புகுந்து, ஆசார்யர்
கள்,முதலிகள், ஸ்த்தாநத்தார் முதலாகஎல்லாரையும் அழைப்பித்து, க்ஷமை

கொண்டு வேண்டிக்கொள்ள ; அவர்களும் பெரியபெருமாளுக்கொரு அபராதம் உண்டாகிலன்றோ ? உமக்கு அபராதமுண்டாவதென்ன, திருவரங்கப் பெருமாளரையர் முதலான முதலிகளை அங்குள்ள முதலிகள்திருக்கையிலே காட்டிக்கொடுத்தருளி, ஸ்தாநத்தாரைப் பார்த்து பெரிய பெருமாளுடைய திருவாராதநம், திருமந்த்ரபுஷ்பம் காலாகாலத்திலே நடத்திக்கொண்டு போருங்கோள், ஆசார்யர்கள், முதலிகள், தேசாந்தரிகள் முதலானோரை வரவழைத்துக்கொண்டு போருங்கோளென்றுகாட்டிக்கொடுத்தருள, அவர்களும் அப்படியே ஆகிறதென்று அங்கீகரித்து, இது புதுமையாயிருந்ததென்று எல்லாரும் விடைகொடுத்துப்போக, அநந்தரம் மணக்கால்நம்பியை த்யாநித்துக்கொண்டு, பத்மாசநத்திலே யோகமாக எழுந்தருளியிருந்து, அவர் திருவடிகளைத் தம்முடைய நெஞ்சிலும், கண்ணிலும், திருமுடியிலும் வைத்துக்கொண்டு, அவர் திருவடிநிலைகளைத் தம்முன்னேவைத்துக்கொண்டு, "ப்ரஹ்மவல்லி," "ப்ருகுவல்லி," "புருஷஸூக்தம்," "அர்ச்சிராதி," "சூழ்விசும்பணிமுகில்" முதலாக முதலிகள் சேவிக்க, திருச்சங்குபணிமாற, சகல வாத்யங்களும் முழங்க, ப்ரஹ்மரந்த்ரத்தாலே, ஆளவந்தார் திருநாட்டுக்கெழுந்தருளினார்.

(ஸ்ரீயாளவந்தாரைத் திருப்பள்ளிபடுத்தியருளின, ப்ரஹ்மமேதஸம்ஸ்காரவிதி.)

திருவரங்கப் பெருமாளரையர் முதலாக எல்லாரும், வேரற்றமரம் போலே கோஷித்துக்கொண்டு விழுந்து சோகிக்க, அங்குள்ளார் இவர்களைத் தேற்றி, ஆளவந்தார் குமாரர், பிள்ளைக்கரசுநம்பியைக் குறித்து, இனிமுன்பு நடக்கும் க்ரமத்தைச் செய்தருளவேணுமென்ன ; தாசிகள்வந்து திருவாசல் திருவலகிட்டு, திருநீர்பரிமாறி.ஸ்தலசுத்திபண்ணி,திருக்காவணமிட்டுக் கோடித்து. தர்ப்பமாலைகட்டி, செங்கழுநீர்மாலைகட்டி, பலபட்டுகளாலும், ஸுப்ரசாமரங்களாலும், குச்சுக்கட்டி யலங்கரித்து,திருக்காவணத்தில் நாலு வாசலிலும் கதளித்தாறுநாட்டி, இளங்கமுகு கரும்புநாட்டி, பல பலங்கள் நாட்டி, நாலுவாசலிலும் கொடியாடைகட்டி, சித்ராதபத்ரங்களை வைத்து, பூர்வதக்ஷிண பஸ்சிமோத்தர சதுர்த்வாரங்களிலே பலாஸாஸ்வத்தகாதி ஔதும்பர தோரணங்கள் நாட்டி யலங்கரித்து, த்ரோணவ்ரீஹிசொரிந்து பரப்பி, நடுவே பூர்ணகும்பம்வைத்து, நாலுகோணங்களிலும், பூர்ணகும்பங்களைவைத்து, கேசவாதி நாமோச்சாரணம் பண்ணிக்கொண்டு, த்வாதச கலசங்களை ப்ராகாதியாக ஸ்தாபித்து,கலசங்களுக்கு,குஸ, தூர்வா, தர்ப்ப, விஷ்ணுகாந்திமுதலான புஷ்பாதிகளையிட்டு, குருபரம்பரா பூர்வகமாக த்வ

யாநுசந்தாநத்துடன், கும்பார்ச்சனை பண்ணி, த்வாதசநாமத்தாலே கலசஸ்தாபநம்பண்ணுவித்து, பின்பு பஞ்சாம்ருதஸ்நாநம்பண்ணுவித்து, ஈசாநயபாகத்தில் சங்கர்ஷண கும்பமொழிந்த நாலுகும்பங்களையுங் கொண்டு, ஸ்ரீபுருஷசூக்தத்தாலே திருமஞ்சநம்பண்ணுவித்து, ருதவிகள் தீர்த்தங்கொண்டு, சுருளமுது திருத்தி வேண்டிக்கொண்டு, அவர்களை வலம்வந்து, வாசல்முன்னில்கோமயக்ருதஸ்த்தலத்தின்மேலே த்ரோணவ்ரீஹிபரப்பி, உலூகலமுசலங்களை மந்த்ரபூதஸ்நாநம்பண்ணுவித்து, நவவஸ்த்ரவேஷ்டநம்பண்ணி, அவ்வுலூகலத்தை ஸ்தண்டிலோபரிக்ருத வ்ரீஹியின்மேலே வைத்து, அதிலேஹரித்ராநிக்ஷேபம்பண்ணி, சுத்தவஸ்த்ரசகலமாலாலங்க்ருதைகளாய், சங்ரமுத்ராமுத்ரிதைகளாய், வைஷ்ணவிகளான விஷ்ணுதாசிகள், திரிவிக்ரமன் திருவீதியை வலம்வந்து, திருவாசலில் ஸ்ரீவைஷ்ணவ சமூஹத்துக்குத் தண்டனிட்டு, ஸ்ரீவைஷ்ணவர் அநுஜ்ஞைகொண்டு நடுவேவந்து, நவவஸ்த்ரவேஷ்டித மேருதைவத்யமான அம்முசலத்தைக்கைக்கொண்டு, த்வாதசநாமோச்சாரணம்பண்ணி, திருச்சூர்ணமிடிக்க, திருவரங்கப்பெருமாளரையர் முதலானோர், ஸ்தண்டிலமத்யஸ்த்தமாய், நவகண்ட ப்ருதிவ்யாகாரமாக உல்லேகநம்பண்ணி, வ்ரீஹ்யுபரிஸ்த்தாபிதமாய்ப் பூமிதைவத்யமான உல்லேகநத்தில் அஷ்டதிக்குகளிலும் திவ்யசூர்ண, திவ்யதைல, திவ்யாநுலேபந, திவ்யமால்ய, திவ்யலாஜ, திவ்யதுக்த, திவ்யததி, திவ்யசுத்தஜல பூர்ணங்களாய், தர்ப்ப பவித்ராஸ்வத்த பத்ரபவித்ரிதங்களான கலசங்களை த்வயாநுசந்தாநத்துடன் ஸ்த்தாபித்து, பரமாகாசதைவத்யமான சூர்ப்பத்திலே, திவ்யநக்ஷத்ரதைவத்யமான நிஸ்க்ருஷ்நவலாஜத்தை நிறைத்து, பூர்வதிக்கிலே வைத்து, ஸ்ரீவைஷ்ணவர்களைத்தீர்த்தங்கொண்டு, ஸ்ரீபாததீர்த்தம் நிறைந்த கும்பத்தைமேற்கேவைத்து, ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு சமர்ப்பணீயமான திவ்யக்கிழியை வடவருகேவைத்து, பெருமாள் சாத்திக்களைந்து வரவிட்டருளின திருமாலை திருப்பரிவட்ட ப்ரசாதங்களையும் பொற்றளிகையிலே தென்னருகேவைத்து, ஆளவந்தாரைத் தண்டனிட்டு, விமலசரமவிக்ரஹத்தை நெஞ்சிலும் கண்ணிலும் தேக்கிக்கொண்டு, சூழவெழுந்தருளியிருந்து, திருப்பல்லாண்டு, கண்ணிநுண்சிறுத்தாம்பு, சூழ்விசும்பணிமுகில், திருவரங்கப்பெருமாளரையர் இசையுடன்இயலாக அநுசந்தித்து, திவ்ய ந்ருத்தகீதவாத்யத்துடன், திருவீதியிலே இயலாக திருவிருத்தத்தை யநுசந்தித்துக்கொண்டு வலம்வந்து, மடத்துவாசலிலே இயல்சாத்தி, திவ்யதைல திவ்யசூர்ணங்கள் சாத்தி, நீராட்டப்பண்ணி, பெருமாள் சாத்திக் களைந்து வரவிட்டருளினதிவ்யாநுலேபந திவ்யமால்ய திவ்யபீதாம்பரத்திருப்பரிவட்டத்தையும் ஆளவந்

தாருக்குச் சாத்தி அலங்கரித்து, ஆளவந்தார் திருமேனியிலே சாத்தினவைகளைக் ககதாய், தத்ப்ரசாதமாய்,சேஷித்த எண்ணெய்ப்ரசாதம்ஸ்ரீசூர்ணப்ரசாதங்களெல்லாம், திருவரங்கப்பெருமாளரையர் முதலானோர் ப்ரசாதப்பட்டு, அப்போதையிலிருப்பை நெஞ்சிலே ஸம்பாஷ்யமாகத் தேக்கிக்கொண்டு, ஸ்ரீபாதத்திலேவிழுந்து, திருவடிகளைத் திருக்கண்களிலும், திருமார்பிலும், திருமுடியிலும் தரித்து, அவர்ப்ரபத்தியை அநுசந்தித்து, திருமிடறுதழுதழுப்ப, திருமேனிகள்வாட, திருமுத்துதிர்த்து, திருமூக்கு வேர்பிடிக்க, ஆசார்யவிஶ்லேஷாஸஹிஷ்ணுக்களாய் ஆர்த்தராய் பரவசராய்க்கொண்டு சோகிக்க, அங்குள்ள முதலிகள்வந்து இவர்கள் திருக்கண்களைத் துடைத்து, ஆஶ்வாசிப்பித்துத்தேற்ற, மேன்மையிலே மெள்ளமெள்ள நடையிட்டுவந்து, தேறிநின்று, பீடயாநத்திலே ஆளவந்தாரை யேறியருளப்பண்ணி, அநுசந்தாநத்துடன்ஸ்ரீபாதந்தாங்கிக்கொண்டு,திருச்சங்கம்பணிமாற,ந்ருத்தகீதவாத்யங்கள் எங்கும் முழங்க, வேதபாராயணம்பண்ண, இயல் அருளிச்செயல் நடக்க, நடைபாவாடையிட்டு, கரும்பும் குடமும் ஏந்தி, பொரியும் புஷ்பபுஞ்சமும் எங்கும்சிதற, திருப்பதியில் சுமங்கலிகள் மங்களதீபமேந்திமுன்னேசெல்ல, இருபக்கமும் சாமரமிரட்ட, வெள்ளைவட்டமிட, தர்மநத்தில் ஆளவந்தார் திருநாட்டுக்கெழுந்தருளினார் என்று ஒற்றைச் சிந்நம்பணிமாற, திருவீதிகள்தோறும் வலம்வந்து, திருக்கரம்பன் துறையிலே எழுந்தருள்வித்துக்கொண்டுபோய், ஒழிந்த சங்கர்ஷணகும்ப பூர்ணஜலங்கொண்டு அநுசந்தாநத்துடன் திவ்யஸ்தலசுத்திபண்ணி, யதிஸம்ஸ்காரவித்யுக்தமானபடிகளடங்கச்செய்து, சுதித்துப் பள்ளிபடுக்கிறவளவிலே.—

அங்கே, பெரியநம்பி பயணகதியிலேபோய், பெருமாள் கோயிலுக்கெழுந்தருளி,இச்செய்தியைத்திருக்கச்சிநம்பிக்கருளிச்செய்து, அவர் புருஷகாரமாகப் பேரருளாளர் சந்நிதிக்குச்சென்று,அவர்முன்னே ஸ்தோத்ரத்தை அநுசந்தித்து, தீர்த்தப்ரசாதமும் ஸ்வீகரித்து, சந்நிதியில் நின்றும் புறப்பட்டு இளையாழ்வார் திருமஞ்சநங் கொண்டுவருகிற சாலைக்கிணற்று வழியிலே, ஆளவந்தார் ஸ்தோத்ரத்தை அநுசந்தித்துக்கொண்டு இராநிற்க, (௨௯௨) "ப்ரஹ்மா ஶிவஶ்ஶதமக: பரமஸ்வராடித்யேதேऽபி யஸ்ய மஹிமார்ணவவிப்ருஷஸ்தே" (బ్రహ్మాశివశ్శతమఖఃపరమస్వరాడిత్యేతేఽపియస్యమహిమార్ణవవిప్రుషస్తే) என்கிற ஶ்லோகத்தை இளையாழ்வார் கேட்டருளி, இது அருளிச்செய்ததாரென்று பெரியநம்பியைக்கேட்க, ஆளவந்தார் திவ்யசூக்தியென்று பெரியநம்பியருளிச்செய்ய, இவரும் அவரை அடியேன் சேவிக்கவேணுமென்ன, நம்பியும், ஆகில் என்கூடவாரீர் என்றருளிச்செய்ய, இவ

ரும் திருமஞ்சநத்தைப்பெருமாள் திருமுன்னே சமர்ப்பித்து, பெருமாளை சேவித்து விடைகொண்டு, திருக்கச்சிநம்பியையும் சேவித்து அவர்க்கு இச் செய்தியை விண்ணப்பஞ்செய்து, பெரியநம்பியுடனே கோயிலேற வெழுந் தருளி, கோயிலுக்கு ஆஸந்நமாக வெழுந்தருளாநிற்க, திருக்காம்பன் துறையிலே திரண்ட பெரியதிரளைக்கண்டு, இத்திரளேதென்று எதிரேவருகிற வர்களைக்கேட்க, அவர்களும் ஆளவந்தார் திருநாட்டுக் கெழுந்தருளினார் என்ன, இத்தைக்கேட்டு இவரும் ஏங்கி மோஹித்து விழுந்து சோகார்ணவ நிமக்நராய்க்கிடந்து துடிக்க, அவ்வளவிலே, இளையாழ்வாரும் மிகவும் (உகூரு) “ பஹுதாவிலலாபஹ ” (𑌬𑌹𑍁𑌧𑌾 𑌵𑌿𑌲𑌲𑌾𑌪 𑌹) என்னுமாபோலே, பலவகையாகப்புலம்பி அஸ்தமிதாந்யபாவராய் நிவர்த்தநோந்முகராய் கண் பனிசோராநிற்க, பெரியநம்பியும் “வாளேறுகாணத் தேளேறுமாயுமாபோ லே தன்னுடைய வ்யஸநத்தைமறந்து (உகூச) “ச்ரேயாம்ஸிபஹுவிக்நாநி பவந்திமஹதாமபி” (𑌶𑍍𑌰𑍇𑌯𑌾𑌂𑌸𑌿 𑌬𑌹𑍁𑌵𑌿𑌘𑍍𑌨𑌾𑌨𑌿 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌮𑌹𑌤𑌾𑌮𑌪𑌿) என்கிறபடியே ச்ரேயஸ்ஸுக்களுக்கு அநேகவிக்நங்கள் பெரியோர்களுக்கும் உண்டாம், ஆகையாலே நீர் சோகிக்கவேண்டாவென்று இளையாழ்வாரைத்தேற்றி, அவ ரைக் கையைப்பிடித்துக்கொண்டுபோய், ஆளவந்தாருடைய விமலசரமவிக்ர ஹத்தை சேவிக்கப்பண்ண; இளையாழ்வாரும் அவரைத்தண்டனிட்டு, இது ஒரு அலப்யலாபம் இருந்தபடி யென்னென்று விஸ்மிதராய், ஆபாதசூட மாக சேவிக்குமளவில், மூன்று திருவிரல்கள் மடங்கியிருக்க, இவரும் அது கண்டு, முன்னும் இவர்க்கிப்படியுண்டோவென்று முதலிகளைக்கேட்க, அவர் களும் இல்லை இப்போது கண்டதித்தனையென்ன, இளையாழ்வாரும் இவர் திருவுள்ளத்தில் ஏதேனும் ஒருகருத்துண்டாகவேணுமென்றுவிசாரித்தருளி, முதலிகளைப்பார்த்து, முன்பு வ்யாக்யாநசமயங்களிலே அபிமத சல்லாபங்க ளைக் கேட்டிருந்தவர்களுண்டோவென்ன, ஸ்ரீபாதத்து முதலிகளெல்லாரும் கூடவேறொன்று மறியோம், வ்யாசபராசரரிடத்திலே, உபகாரஸ்ம்ருதியும், நம்மாழ்வார் பக்கல் ப்ரேமாதிசயமும், விசிஷ்டாத்வைதபரமாக வ்யாசஸூத்ர த்தில் வ்யாக்யாநவாஞ்சையும் பலகாலும் அருளிச்செய்யக் கேட்டிருக்கையா யிருக்குமென்ன, இவரும் அகவாயிலெண்ணத்தி லேற்றமறிந்து, இச்சரீர மும் த்ருடமாய், இவ்வாசார்ய க்ருபையும் அடியேனிடத்தில் பரிபூர்ணமாய் இருக்குமாகில், சர்வேச்வரன் அடியேன் நினைத்தபடி கூட்டுவாராகில், இவ் விழவுமூன்றையும் தீர்க்கக்கடவேனென்ன, உடனே திருவிரல்கள் நிமிர, இத் தைக்கண்டு அகிலரும் ஆச்சர்யப்பட்டு இவ்வாசார்யக்ருபையும் உம்மிடத்தி லேயுண்டு, இவருடைய திவ்யசக்தியும் உம்மிலேகூடும், நீரோ இத்தர்சநத்

துக்கு நிர்வாஹகராவீரென்று சர்வரும் இவரை மங்களாசாஸநம் பண்ண, இளையாழ்வாரும் "என்கண்ணுள்ளும் நெஞ்சுள்ளும் நீங்காவே" என்னும் படியே அவ்விக்ரஹசேவையைக்கண்ணிலும் நெஞ்சிலுந்தேக்கிக்கொண்டு, நம்பெருமாள் நமக்குச் செய்தபடி யென்னென்று போரக்லேசித்து, அவ ப்ருதஸ்நாநஞ் செய்தருளி, பெரியநம்பியைத் தண்டனிட்டு, நம்பெருமாளை யும் திருவடிதொழாதே அவரை வெறுத்து மீண்டு பெருமாள் கோயிலேற வெழுந்தருளினர்.

ஆளவந்தார் தனியன், (உகூரு) "ஸ்ரீராமமிஶ்ரஸச்சிஷ்யம் வந்தே தத்த்வார்த்தகோவிதம்-வாதாவாப்தராஜ்யாத்யைர்விரக்தோ யாமுநோபவத்- யத்பதாம்போருஹ த்யாநவித்வஸ்தாஶேஷகல்மஷ: - வஸ்துதாமுபயாதோஹம் யாமுநேயம் நமாமிதம்." (శ్రీరామమిశ్రసచ్ఛిష్యంవన్దేతత్త్వార్థకోవిదం-వాదావవాప్తరాజ్యాద్యైర్విరక్తోయామునోభవత్ - యత్పదాంభోరుహధ్యానవిధ్వస్తాశేషకల్మషః - వస్తుతాముపయాతోహంయామునేయన్నమామితం.) (உகூசு) "ஸிம்ஹாஸநாம்ஶ பவமீஶ்வரஸோமநிஷ்டம் முக்தாமணிஸ்மித நாதமுநீந்த்ர பௌத்ரம்-ப்ரஜ்ஞாவிஶேஷஜலதிம் ப்ரதிவாதிதூலஜஞ்ஜாநிலம் ஹ்ருதயசிந்தய யாமுநார்யம்" (సింహాసనాంశభవమీశ్వరసోమనిష్ఠ ముక్తామణిస్మితనాథమునీన్ద్రపౌత్రం - ప్రజ్ఞావిశేషజలధింప్రతివాదితూలఝఞ్ఝానిలంహృదయచిన్తయయామునార్యం.) பின்னை யாளவந்தாரை நகித்து, திருப்பள்ளிபடுத்து, செய்யவேண்டும் க்ருத்யங் களெல்லாஞ் செய்தருளினார்கள்.

ஸ்ரீயமுனைத்துறைவர் திருவடிகளேசரணம்.

ஜீயர்திருவடிகளேசரணம்.

———:O:———

(*) ஸ்ரீ இளையாழ்வார்வைபவம்.

அநந்தரம், இளையாழ்வாரும் பயணகதியிலே, பெருமாள்கோயிலுக் கெழுந்தருளி, திருக்கச்சிநம்பி ஸ்ரீபாதத்திலே தண்டனிட்டு, இச்செய்தி யைவிண்ணப்பஞ்செய்ய, அவரும் போரக்லேசிக்க, இவரும் எண்ணினவா றுகாமையாலே அத்யந்தமவஸந்நராய் க்லேசிக்க, திருக்கச்சிநம்பியும் போர

(*) ஆசார்யர்கள் க்ரமத்தில் ஸ்ரீஇளையாழ்வாருக்கு, ஸ்ரீபெரியநம்பிகள் முற்பாடராகையால் - ரு - வது இலக்கம் போடாமல் நிறுத்தி, ஸ்ரீபெரியநம்பி கள் வைபவத்திற்கு - ரு - வதும் ஸ்ரீஇளையாழ்வார் தர்ஶநப்ரவர்த்தகராம்போது இவர்க்கு - சு - வது இலக்கமும் போடப்படுமென்றுணர்க.

ருளாளர் ஸர்வஜ்ஞருமாய், ஸர்வஶக்தருமா யன்றோ இருக்கிறார், உம்மு டைய நினைவின்படியே தலைக்கட்டி யருளுவர், அஞ்சவேண்டா வென்று தேற்றமிட்டு, பின்பு ஆளவந்தாருக்‌கு ஸ்ரீசூர்ணபரிபாலநஞ் செய்து பெருக் கத் திருவத்யயநம் நடத்தியருளினார்.

இளையாழ்வாரும் தைர்யாவலம்பியாய், பேரருளாளனை சேவித்து, பூர்வம்போலே திருமஞ்சந கைங்கர்யம் செய்துகொண்டிராநின்றார். பின்பு நம்பிபக்கல், இளையாழ்வாருக்குப்ரேமங் கநத்துவர, நம்பிக்கும் இவர்பக்கல் க்ருபை மிகுத்துவர, நம்பியுடைய அநுபவமெல்லாம் அறிந்து, அவர் ஸ்ரீபா தத்திலே ஆஶ்ரயிக்கவேணுமென்று வந்து தண்டன்சமர்ப்பித்து, இவ்வாத் மாவை தேவரீர் உஜ்ஜீவிப்பித்தருளவேணுமென்ன, நம்பியும் வாரீர் இளை யாழ்வாரே, பேரருளாளர் பொருளல்லாதவென்னைப் பொருளாக்கி யடிமை கொண்டது கண்டு நீர் விரும்பினீர், ஆகிலும் (௨௯௭) "கிஷப்ராபிஜாயந்தே யோநிஷ்வயோநிஷு-ப்ரத்யக்ஷிதாத்மநாதாநாம்நைஷாம்சிந்த்யங்குலாதிகம்" (క్షిప్రాభిజాయన్తే యోనిష్వయోనిషు - ప్రత్యక్షితాత్మనాథానాం నైషాం చిన్త్యం కులాదికం) என்கிறபடியே, ஆத்மகுணத்துக்குச் சேர்ந் திருந்துள்ள பரம வைதிக நிஷ்டையை யுடையராய்ச் செய்ய நினைத்தீர், ஆகிலும் வர்ணாஶ்ரமத்துக்கடுத்த வைதிகமர்யாதைக்குப் போந்திராதென்று விலக்கியருளினார்.

அதின்மற்றைநாள், இளையாழ்வாருக்கு திருக்கச்சிநம்பி யிடத்தில் ப்ரசாதப்ரதிபத்தி பிறந்து, ததங்வயபுத்யா, நம்பியைத்திருமாளிகையிலே யமுதுசெய்யவேணுமென்றுவிண்ணப்பஞ்செய்ய, நம்பியும் சம்மதித்தருள, இளையாழ்வாரும், அதிப்ரீதியோடே தந்திருமாளிகையிலேஎழுந்தருளி இச் செய்தியை தேவியாருடன் அருளிச்செய்து, தளிகைக்குப் பாங்காகப் பண்ணி நன்றாகஸவ்யஞ்சநாந்நம் செய்யென்றுநியமித்தருளி, தாமும்நீராடி நித்யகர்மாநுஷ்டாநங்களையும் செய்தருளி, திருமஞ்சன கைங்கர்யமும், சடக்கெனக்கொண்டுவந்து பேரருளாளர்க்குச்சமர்ப்பித்து, தம்முடைய க்ரு ஹார்ச்சனையானபேரருளாளனையும் அமுதுசெய்தருளப்பண்ணி, நம்பியை யழைக்க, தெற்குத் திருவீதியாலே நம்பி மடத்தைநோக்கி மேற்கே யெழு ந்தருளினார். அதற்கு முன்னே நம்பியும் மடத்திநின்றும் புறப்பட்டு பெரு மாளையும்சேவித்து, மற்றொருவீதியாலே இளையாழ்வார் திருமாளிகையிலே எழுந்தருளி, திருவாலவட்டகைங்கர்யத்துக்கு உதவப்போகவேணுமென்று சடக்கென அமுதுசெய்தருளி எழுந்தருளினார். அநந்தரம் இளையாழ்வார்

தேவிகளும் அவர் அமுதுசெய்தருளின தளிகையைக் கோலாலேதள்ளி, அவ்விடத்தை கோமயத்தாலே ஸ்தலசுத்திபண்ணித் தெளித்து, தாமும் நீராடி நிற்கிறவளவிலே, இளையாழ்வாரும் மடத்தேதேடிக்காணாமல், மீண்டெழுந்தருளி தேவிகள் நீராடினபடியைக் கண்டு, இதென்னென்று கேட்டருள, தேவிகளும் அந்த ஸ்ரீவைஷ்ணவரெழுந்தருளி அமுதுசெய்து திருவாலவட்டகைங்கர்யஞ் செய்தருளவேணுமென்று பெருமாளை சேவிக்க மீண்டு எழுந்தருளினார். அவர் சாத்தாதவரானகையாலே அவர் அமுதுசெய்ததளிகையைக் கோலாலேதள்ளிக் கோமயத்தாலே ஸ்தலசுத்திபண்ணினேன், அத்தாலே சரீரம் அலம்பவேண்டித்தென்ன, அவளைப்பார்த்து நீராடினதற்கு மிகவுங் கோபித்து தம்மபீஷ்டம் சித்தியாதபடியாலும் போர க்லேசித்து, இனிநமக்குச் செய்யவடுப்ப தென்னென்று "எண்ணாதனகளெண்ணும்" என்கிறபடியே தம் திருவுள்ளத்திலே விசாரித்தருளி, நம்பிமடத்தேறவெழுந்தருளி நம்பியுடனே சென்று, அடியேன் சில நினைவுகள் நினைத்திருந்தேன், அவையவையென்று தேவரீர் பெருமாளுக்கு விண்ணப்பஞ்செய்து, அவர் அருளிச்செய்தத்தை தேவரீர் அடியேனுக்கு அருளிச்செய்தருளவேணுமென்று இளையாழ்வார் விண்ணப்பஞ்செய்ய, நம்பியும் அன்றுராத்ரி பெருமாளையநுபவித்து, ஏகாந்தமானவளவிலே; நம்பி, நம்மூடன் சிலவார்த்தை சொல்லுவாரைப்போலே யிருந்தாய்? என்று பெருமாள் திருவுள்ளமாயருள, நம்பியும் பெருமாளுடனே இளையாழ்வார் சிலநினைவுகள் நினைந்திருந்தேன், அவையவையென்று தேவரீரைக் கேட்டுவந்து சொல்லவேணுமென்று மிகவும் ஆதரவாயிராநின்றார், அவற்றையருளிச்செய்யவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய; பெருமாளும், ஸஹஜதாஸ்யத்தை யுடையனாய், சந்தாநுவர்த்தநம் பண்ணியிருப்பா னொருத்தன், நாம் சாந்தீபனுடனே வித்யாப்யாஸம் பண்ணினாற்போலே, பலவிடங்களிலே சகல சாஸ்த்ரங்களையும் அவைகளை வேறுபட அறிந்திருப்பானொருத்தன், நம்மைக்கேட்கிறானித்தனை.—பரதத்வம் நாமே, பேதமேதர்சநம், உபாயமும் ப்ரபத்தியே, அந்திமஸ்ம்ருதியும் வேண்டா, சரீராவஸாநத்திலே மோக்ஷம், பெரியநம்பி திருவடிகளிலே யாச்ரயிப்பதென்று, இவ்வாறுவார்த்தையையும் போரருளாளர் திருவுள்ளமாயருள; நம்பியும் இவற்றைக்கேட்டுவந்து, வெடிவோனை இளையாழ்வானையழைத்து, இளையாழ்வீர்? பெருமாள் திருவுள்ளம் பற்றி யருளின வார்த்தைகளைக் கேளீர் என்று அவற்றை யருளிச்செய்து இவையோ உமக்குநினைவென்ன; ஆமென்று இளையாழ்வார் போர ப்ரீதராய் நம்பி ஸ்ரீபாதத்திலே தண்டன்சமர்ப்பிக்க; நம்பியும், இவர் நினைவும் பெருமாள் திருவுள்ளமும் ஒன்றாயிருந்ததென்று மிகவும் உகந்தருளினார்.

ஜீயர்திருவடிகளேசரணம்.

———:O:———



ஸ்ரீ பெரியநம்பி.

(௫)

ஸ்ரீபெரியநம்பிகள்ப்ரபாவம்.

———:o:———

அக்காலத்தில், கோயிலிலே ஆளவந்தார் ஸ்ரீபாதத்து முதலிகள் எல்லாரும் திரளாகவிருந்து, பெரியநம்பியுடனே இத்தர்ஶநத்துக்குக் கடவரார் என்ன, பெரியநம்பியும் முதலிகளைக்குறித்து ஆளவந்தார் முன்பு நினைவிட்டு விசேஷ கடாக்ஷம்பண்ணியருளினதும், திருவிரல்கள் நிமிர்ந்த வேற்றுமும் உங்கள் திருவுள்ளங்களிலே நிலையிடவில்லையோ, ஸர்வதா ஆளவந்தார் அபிமாநம் பொய்யாகக்கூடாதென்ன; முதலிகளெல்லாருங்கூட சம்மதித்து இன்னமும் இப்ரயத்நம் தேவரீர் எழுந்தருளி, இளையாழ்வாரை விசேஷகடாக்ஷம் செய்தருளி, நம்தர்ஶநப்ரவர்த்தகராம்படி திருத்தியழைத்துக்கொண்டு வரவேணுமென்று பெரியநம்பிக்கு விண்ணப்பஞ்செய்ய; நம்பியும் அப்போதே குடும்பசஹிதமாகப் புறப்பட்டு நம்பெருமாள் சந்நிதியிற்சென்று சேவித்து விண்ணப்பஞ்செய்து அவரநுமதிகொண்டு த்வரித்துப் புறப்பட்டு, பெருமாள்கோயிலுக் கெழுந்தருளா நிற்கச்செய்தே, மதுராந்தகத் தேரிகாத்த பெருமாள்கோயிலிலே அங்கே அவஸரித்து எழுந்தருளியிருந்தவளவிலே, இளையாழ்வாரும் தமக்குப்போருளாளர் திருக்கச்சிநம்பிமுகேந நியமித்தருளினபடியே பெரியநம்பி ஸ்ரீபாதத்திலே யாஶ்ரயிப்பதாகப் புறப்பட்டு, திருக்கச்சிநம்பியையும், தேவப்பெருமாளையும் சேவித்து, அவர்கள் அநுமதிகொண்டு கோயிலுக்கெழுந்தருளாநிற்க, ஸ்ரீமதுராந்தகம் வழியாகையாலே இவரும் அங்கே எழுந்தருளி, ஏரிகாத்தபெருமாளை சேவிப்பதாக வெழுந்தருள, ஏரிகாத்த பெருமாள்கோயிலிலே பெரியநம்பி யெழுந்தருளியிருக்க, இளையாழ்வாரும் தூரத்திலே கண்டு, அத்யாஶ்சர்யப்பட்டு எண்ணினபலம் எதிரேவந்து வாய்த்தது, நம்பிநமக்கெதிரே அருளிச்செய்ய வந்தபடி கண்டாயே நெஞ்சே யென்று நிர்ப்பராநந்த பாஷ்பங்களையுடையராய், பெரியநம்பிதிருவடிகளிலே ஹர்ஷ சம்ப்ரமத்துடனே தண்டன் சமர்ப்பித்து நிற்க, நம்பியும் தம் அபிலாஷை அதிசீக்ரமாய் எதிரேவந்து சித்திக்கக் கண்டு, ஆநந்த நிர்ப்பரராய் இளையாழ்வாரை வாரியெடுத்தணைத்துக்கொள்ள, இளையாழ்வாரும் அடியேனுக்கு இப்போதே தேவரீர் ஹிதோபதேசம் செய்தருளி ரக்ஷித்தருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய, நம்பியும் (உகூஅ) “ஸ்வஸ்திஹஸ்திகிரிமஸ்தசேகர: ஸந்தநோது மயி ஸந்ததம் ஹரி: நிஸ்ஸமாப்யதிகமப்யதத்த யோ தேவமௌபநிஷதம் ஸமீஹிதம்

𑌣𑍍𑌯𑌕𑍋𑌟𑍀𑌤𑌿𑌵𑌿𑌖𑍍𑌯𑌾𑌤𑌂 𑌵𑌿𑌮𑌾𑌨𑌂 𑌪𑍁𑌣𑍍𑌯𑌵𑌰𑍍𑌧𑌨𑌂 " (అస్తిహస్తిగిరిర్నామ క్షేత్రశైలవరో మహాన్ - విధాత్రాఽభ్యర్చితో విష్ణుస్తస్య శైలస్య మూర్ధని - పుణ్యకోటీతి విఖ్యాతం విమానం పుణ్యవర్ధనం) என்று சொல்லப்படுகிற ஹஸ்திகிரியிலே புண்யகோடி விமானமத்யத்திலே, ப்ரஹ்மாதி சகல சேதநராலும் சேவ்யமாநரான பேரருளாளர் சந்நிதியிலே செய்கிறோமென்று அருளிச்செய்ய; இளையாழ்வாரும் காலக்ஷேபம்பண்ணவொண்ணாமைக்கு ஆளவந்தார் பக்கல் கண்டது, அமையாதோ, மின்னின்னிலையில்லாத அடியேனுடைய இச்சரீரம் இருக்கிறபோதே க்ருபைபண்ணியருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்து திருவடிகளிலே விழுந்துகிடக்க; பெரியநம்பியும், முடிபிடித்தெடுத்து, இவருடைய ஆர்த்தியிருந்தபடியென்னென்று மிகவும் உகந்த திருவுள்ளத்தராய் இளையாழ்வாரைக் கையைப்பிடித்து அழைத்துக்கொண்டுபோய், ஏரிகாத்த பெருமாள்கோயில், திருமகிழடியிலே எழுந்தருளியிருந்து, (௨௯௯) " 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑌰𑍍𑌥𑌂 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌦𑍀𑌕𑍍𑌷𑌾𑌵𑌿𑌧𑍌 𑌤𑌥𑌾 - 𑌚𑌕𑍍𑌰𑌸𑍍𑌯 𑌧𑌾𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍈𑌃 𑌪𑌞𑍍𑌚𑌾𑌯𑍁𑌧𑌾𑌨𑌿 𑌵𑌾" (మంత్రసంస్కారసిద్ధ్యర్థం మంత్రదీక్షావిధౌ తథా - చక్రస్య ధారణం ప్రోక్తం మంత్రైః పఞ్చాయుధాని వా). (௩௦௦) " 𑌚𑌕𑍍𑌰𑌾𑌦𑌿𑌧𑌾𑌰𑌣𑌂 𑌪𑍁𑌂𑌸𑌾𑌂 𑌪𑌰𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌵𑍇𑌦𑌨𑌂 - 𑌪𑌤𑌿𑌵𑍍𑌰𑌤𑌾𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌂 𑌹𑌿 𑌵𑌲𑌯𑌾𑌦𑌿𑌵𑌿𑌭𑍂𑌷𑌣𑌂 " (చక్రాదిధారణం పుంసాం పరసంబంధవేదనం - పతివ్రతానిమిత్తం హి వలయాదివిభూషణం) என்று சொல்லுகிறபடியே திருவிலச்சினை ப்ரசாதித்து, (௩௦௧) " 𑌨𑌿𑌵𑍇𑌶𑍍𑌯 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌵𑌿𑌨𑍀𑌤𑌾𑌞𑍍𑌜𑌲𑌿𑌸𑌂𑌯𑍁𑌤𑌂 - 𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌨𑌿 𑌹𑌸𑍍𑌤𑌂 𑌵𑌿𑌨𑌿𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌯 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 - 𑌸𑌵𑍍𑌯𑌂 𑌤𑍁 𑌹𑍃𑌦𑌿 𑌵𑌿𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 𑌕𑍃𑌪𑌯𑌾 𑌵𑍀𑌕𑍍𑌷𑌯𑍇𑌦𑍍𑌗𑍁𑌰𑍁𑌃 - 𑌸𑍍𑌵𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌂 𑌹𑍃𑌦𑌯𑍇 𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑌾 𑌜𑌪𑍍𑌤𑍍𑌵𑌾 𑌗𑍁𑌰𑍁𑌪𑌰𑌮𑍍𑌪𑌰𑌾𑌂 - 𑌏𑌵𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯 𑌦𑍇𑌵𑍇𑌶𑌮𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌃 𑌕𑍃𑌪𑌯𑌾 𑌸𑍍𑌵𑌯𑌂 - 𑌅𑌧𑍍𑌯𑌾𑌪𑌯𑍇𑌨𑍍𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌰𑌤𑍍𑌨𑌂 𑌸𑌰𑍍𑌷𑌿𑌚𑍍𑌛𑌨𑍍𑌦𑍋𑌽𑌧𑌿𑌦𑍈𑌵𑌤𑌂" (నివేశ్య దక్షిణే పార్శ్వే వినీతాంజలిసంయుతం - మూర్ధ్ని హస్తం వినిక్షిప్య దక్షిణం జ్ఞానదక్షిణం - సవ్యం తు హృది విన్యస్య కృపయా వీక్షయేద్గురుః - స్వాచార్యం హృదయే ధ్యాత్వా జప్త్వా గురుపరంపరాం - ఏవం ప్రపద్య దేవేశమాచార్యః కృపయా స్వయం - అధ్యాపయేన్మంత్రరత్నం సర్షిచ్ఛందోఽధిదైవతం) என்று சொல்லுகிற க்ரமத்திலே, பெரியநம்பியும் ஸவிநயரான இளையாழ்வாரைத் தம்முடைய வலப்புறத்திலே வைத்து, தம் திருக்கைகளாலே இவர் சிரஸ்ஸை ஸ்பர்ஶித்துக்கொண்டு, சதாசார்யரான ஆளவந்தார் திருவடிகளை ஸ்மரித்துக்கொண்டு, குருபரம்பராபூர்வகமாக மந்த்ரரத்நமான த்வயத்தை சாங்கோபாங்கமாக இளையாழ்வாருடைய வலத்திருச்செவியிலே உபதேசித்தருளி,

பெருமாள், நாட்டுக்காக ஸ்ரீபரதாழ்வான் தலையிலே திருவடிநிலைகளை வைத்துக் காட்டுக்கெழுந்தருளினாற்போலே, ஆளவந்தாரும் உமக்காகத் தம்முடைய திருவடித்தாமரைகளை என்றலைமேலே வைத்து, திருநாட்டுக் கெழுந்தருளினாரென்றிருங்கிடீர் என்று பெரியநம்பி இளையாழ்வாருக் கருளிச்செய்தருளினார். ஆளவந்தாருக்குக் கரணபூதரிறே பெரியநம்பி, இளையாழ்வார்க்கு நேரே ஆசார்யர் யமுனைத்துறைவரேயாம்; ஆகையாலேயிறே "எந்தெட்கிறைவன் யமுனைத்துறைவனிணையடி யாங்கதிபெற்றுடையவிராமாநுசன்" என்று பிள்ளையமுதனார் அருளிச்செய்ததும்.

இளையாழ்வாரும், ப்ரமாணமேது, ப்ரமேயமேது, ப்ரமாதாக்களாரென்று, பெரியநம்பியைக் கேட்க, அவரும் "மாதவன்பேர்சொல்லுவதேயோகத்தின்சுருக்கு" என்கிறபடியே ப்ரமாணமும் த்வயமே, ப்ரமேயத்தால் ப்ரதிபாத்யனாய், ஸ்ரீஹஸ்திகிரியின்மேலே கையுந் திருவாழியுமாய் நிற்கிற பெருமாளே ப்ரமாதா, நீர்தாம் இந்தப்ரமாணத்திலே, ப்ரமேயத்தை யநுபவிக்க வாருமென்று அருளிச்செய்து, அதின்மற்றைநாள் புறப்பட்டு ஏரிகாத்த பெருமாளைத் திருவடி தொழுது, (கூ0உ) "ஸர்வலோகைகரஞ்ஜநः" (సర్వలోకైకరంజనః) என்னுமாபோலே தேவரீர் திருநாமத்துக்குத் தகுதியாக இத்தர்சநத்தையும் பிந்தடாகமாகாதபடி செய்தருளிற்றேயென்று மங்களாசாஸநம் பண்ணியருளி, பெருமாள் கோயிலேற வெழுந்தருள, திருக்கச்சிநம்பியும் எதிரேவந்து பெரியநம்பியை சேவிக்க, அவரையுங் க்ருபைபண்ணி அவர்புருஷகாரமாக "உலகேத்துமாழியானத்தியூரா" னை பேரருளாளனையுஞ் சேவித்து நாதமுநிகள் உய்யக்கொண்டார்க்கு அருளிச்செய்தபடியை, உய்யக்கொண்டார் நியோகாத் மணக்கால்நம்பி ஆளவந்தார்க்கு பச்சையிட்டு உபதேசித்து கோயிலிலே கொண்டுபோய் பெரியபெருமாளை சாக்ஷாத்கரித்து அநுபவித்தாற்போலே, பெரியநம்பியும் ஆளவந்தார் நியோகாத், பலகாலதட்டி யுபதேசித்து பேரருளாளப்பெருமாளை சாக்ஷாத்கரித்து அநுபவிப்பித்தருளினார்.

அநந்தரம், இளையாழ்வார் திருமாளிகையிலே யெழுந்தருள, அவர் திருமாளிகையில் மேல்பாதியிலே பெரியநம்பி குடும்பசஹிதமாக எழுந்தருளியிருக்கத்தக்க இடம் சமர்ப்பித்து, தளிகைக்கு வேண்டும் பதார்த்தங்களும் சமர்ப்பிக்க; நம்பியும் அங்கே ஆறுமாசம் எழுந்தருளியிருந்து இளையாழ்வாருக்கு த்ராவிடவேத ப்ரபந்தங்களையும், தர்சநவிசேஷ ரஹஸ்யங்களையும் ப்ரசாதிக்க, இளையாழ்வாரும் ப்ரீதியுடனே "செவிக்கினிய செஞ்சொல் கேட்டு க்ருதார்த்தரா யிருக்குங் காலத்திலே, ஒருநாள் திருமஞ்சநமுறை

யிலே எண்ணெய்க்காப்புச் சாத்தவந்த ஸ்ரீவைஷ்ணவர் க்ஷாத்து நலியா நின்றதென்றவாறே, இளையாழ்வாருந் தம்தேவிகளை யழைத்து, ஸ்ரீவைஷ்ணவர் விடாய்த்து இருக்கிறார், பர்யுஷிதாந்ந மில்லையோ வென்ன, தேவிகளும் அல்பமாகிலுமில்லையென்ன. இவரும் தேவிகளை ஒருகார்யத்திலே ஏவிவிட்டு உள்ளே புகுந்து சோதித்தருள, பாத்ரத்திலே பழைய ப்ரசாதங் கண்டு எடுத்து தேவியாரையழைத்து ஸ்ரீவைஷ்ணவர் இளைத்திருக்க இப்படிசெய்தாய்; "இடும்பையாலடர்ப்புண்டிடுமினோ துற்றென்றிரந்தவர்க்கில்லையேயென்று, நெடுஞ்சொலால் மறுத்தநீசை" இறே நீ யென்று கநக்கக் கோபித்துவிட்டார். பின்னையும் ஒருநாள் கிணற்றின்கரையிலே இளையாழ்வார் தேவிகளுக்கும், பெரியநம்பி தேவிகளுக்கும் ஒருதோண்டி வ்யாஜேந சண்டையானவளவிலே, இத்தைப்பெரியநம்பி கேட்டருளி, தம்முடையதேவிகளை மிகவுங் கோபித்து, இளையாழ்வாருக்கும் அறிவியாதே தேவிகளையும் அழைத்துக்கொண்டு மீண்டு கோயிலுக்கெழுந்தருளினார். இளையாழ்வாரும் அநுஷ்டாநம்பண்ணி யெழுந்தருளி, பெரியநம்பியை சேவிக்கப்பெறாமல் திருமாளிகையில் வர்த்திக்கிறவர்களை பெரியநம்பி யெங்கே யென்று கேட்டருள, மீண்டு கோயிலுக் கெழுந்தருளினாரென்று அவர்கள் விண்ணப்பஞ் செய்ய; இவரும் அதுவென்ன; அவர் அருளிச்செய்யாமல் எழுந்தருளுகைக்கு ஹேதுவென்னென்ன? ஒருதோண்டியடியாக மதநியாருக்கும் மதநியாருக்கும் சண்டையானவாறே தம்தேவிகளைக் கோபித்து, பாகவதாபசாரத்துக்கிரயித்து அப்போதே கோயிலேற வெழுந்தருளினா ரென்றார்கள்.

ஜீயர்திருவடிகளேசரணம்.

(சா)

ஸ்ரீ இளையாழ்வார்ப்ரபாவம்.

அத்தைக்கேட்டு இளையாழ்வாரும் திருவுள்ளம்கலங்கி, தேவிகளைப் பார்த்து அதிகுபிதராய் (௯0௯) "ஜோஷணாஶாகஶ்ஶியஃ" (ఠ్హాజా మాకర స్త్రీయః) என்னும்படியே ஸ்பஷ்டமாக்கினாய். முன்பே திருக்கச்சிநம்பி விஷயமாகவும், ஸ்ரீவைஷ்ணவர் விஷயமாகவும் பாகவதாபசாரப்பட்டாய், இப்போதும் பெரியநம்பி தேவிகளுடனே பிணங்கி அஸஹ்யாபசாரப்பட்டாய்; இப்படி செய்கிற நீ இப்போதே புறப்பட்டுப் போவென்று,

ததநுபந்தியான தநங்களையுங் கொடுத்துப்பயணமாக்கி, பிறந்தகமே போக விட்டு, இல்லறமில்லேல் துறவென்கிறபடியே அதிதி சத்கார யோக்யை யன்றிக்கே ப்ரதிகூலையான பார்யையை ஸவாஸநமாக த்யஜித்து, சந்யஸிக்கக் கடவேனென்கையாலே, இளையாழ்வாரும் நமக்கு இஸ்ஸம்ஸாரம் த்யாஜ்ய மென்று அத்யவஸித்து (௧௦௪) "அநந்தஸரஸி ஸ்நாத்வா விமாநச்சாயயாச்ரிதே - விமுக்தஸ்ஸர்வபாபேப்யோ விஷ்ணுலோகம் ஸ கச்சதி" (అనంతసరసిస్నాత్వా విమానచ్ఛాయయాశ్రితే - విముక్తస్సర్వపాపేభ్యో విష్ణులోకం స గచ్ఛతి) என்னும் மாஹாத்ம்யமுடைய திருவநந்தஸரஸ்ஸுக்கெழுந்தருளி (௧௦௫) "ஸம்யக்ஜ்ஞாநாஹ்வயே தீர்த்தே விகாஹ்யாகதகல்பிஷ: - நிரஸ்தேதரபோகாச்ச வரதம் சரணம் கத:" (సమ్యక్ జ్ఞానాహ్వయే తీర్థే విగాహ్యాగతకల్బిషః - నిరస్తేతరభోగాశ్శ వరదం శరణం గతః) என்கிறபடியே திருவநந்த ஸரஸ்ஸிலே நீராடி, (௧௦௬) "யதோக்தகாரிணம் த்ருஷ்ட்வா பகவந்தம் வா தேந ஸ்வீக்ருத்ய ஸந்ந்யாஸாச்ரமமாச்ரயிஷ்யாமி" (యథోక్తకారిణం భక్తుం భగవంతం వా గుణ్యోన్నతం గీకృత్య సన్న్యాసాశ్రమమాశ్రయిష్యామి) என்கிறபடியே ஸந்யஸிக்க ஸங்கல்பித்துக் கொண்டு "தொழுதெழுதொண்டர்கள் தமக்குப்பிணியொழித்தமரர் பெருவிசும்பருளும்பேரருளாளர்" சந்நிதியிலே எழுந்தருளி ஸேவித்து "தாயேதந்தையென்றுந் தாரமேகிளைமக்களென்றும் நோயேபட்டொழிந்தேன்" என்கிறபடியே பகவத்பாகவதாசார்யாநுவர்த்தநத்துக்கு விலக்கடியான இஸ்ஸம்ஸாரபந்தம் வேண்டுவதில்லை, அடியேனுக்கு தேவரீர்திருவடித்தாமரைகளில் சேவையே வேண்டுவதாகையாலே, (௧௦௭) "த்ரிதண்டம் வைஷ்ணவம் லிங்கம் விப்ராணாம் முக்திஸாதநம் - நிர்வாணம் ஸர்வதர்மாணாம் இதி வேதாநுசாஸநம்" (త్రిదండం వైష్ణవం లింగం విప్రాణాం ముక్తిసాధనం - నిర్వాణం సర్వధర్మాణామితి వేదానుశాసనం) என்று இப்படிசொல்லப்பட்ட த்ரிதண்டகாஷாயவஸ்த்ரங்களை தேவரீர் அடியேனுக்கு ப்ரஸாதித்தருளவேணுமென்று இளையாழ்வார் பேரருளாளரை ஆசார்யத்வேந அங்கீகரித்து விண்ணப்பஞ்செய்ய; தேவப்பெருமாளும் திருவுள்ளம் உகந்தருளி, (௧௦௮) "த்ரிதண்டமுபவீதம் ச வாஸ: கௌபீநவேஷ்டநம் - சிக்யம் பவித்ரமித்யேதத் பிப்ருயாத்யாவதாயுஷம்" (త్రిదండముపవీతం చ వాసః కౌపీనవేష్టనం - శిక్యం పవిత్రమిత్యేతత్ బిభృయాద్యావదాయుషం) என்று சொல்லுகிறபடியே த்ரிதண்டகாஷாயாதிகளை நீருள்ளதனையுந் தரிக்கக்கடவீரென்று அர்ச்சகமுகேந நியமித்து ப்ரஸாதித்தருளி, இராமாநுஜமுநியென்று திருநாமஞ்சாத்தியருளி, நம் ராமாநுஜனை மடத்திலேவைத்து வாருமென்று திருக்கச்சிநம்பிக்கு அருளிச்செய்தருள, அவரும்

அப்படியே உபலாளித்துக் கொண்டுபோய், மடத்திலே வைத்து எழுந்தருளினார்.

பின்பு ராமாநுஜரும் ஆஸ்ரமதர்மங்களையும் குறைவற நடத்திக்கொண்டு, நமக்கு ஆளவந்தார் விசேஷகடாக்ஷம்பண்ணினதற்கு ஈடாக, விரோதிகளும் கழிந்து ஆநுகூல்யமும் கூடாநின்றதே; ஆளவந்தார் திருவுள்ளக்கருத்து நிறைவேறும்படிக்கு நமக்கொரு ஸஹாயம் உண்டாகவேணுமென்று விசாரமுண்டாய், ததநுரோதேந கோவிந்தபட்டரை நினைத்து, அவன் நமக்கு ஹிதப்ரவர்த்தகன், ஸர்வவிஷயவிரக்தன், சாஸ்த்ரவைதக்த்யமுள்ளவன், இனி அவனை நம்மோடொக்கச் சேர்ப்பாருண்டாகில் நல்லது. இப்போதவன் தேவதாந்தரபரனாயிராநின்றான், அவ்வுள்ளங்கைக்கொணர்ந்த இடத்தைச் சுருள்நாற்றமெழுப்பி (௩௦௯) "ஸர்வகந்த: ஸர்வரஸ:" (సర్వగంధస్సర్వరసః) என்னுமவனுடைய ஸௌகந்த்யத்தைக்காட்டி மீட்கும் விரகர் ஆரோவென்றுநினைவிட; விசேஷாத்மகுணங்களையுடையராய், வேதவேதாந்த விதக்ரேசரராய், வகுளாபரணப்ரபந்த முகுளாமோதிதசித்தராய், "நிலதமூலகுக்காய் நின்ற திருவேங்கடத்தெம்பெருமானை" அநவரதபாவனைபண்ணி, பிரியாவடிமை செய்யாநின்றுள்ள தேசிகாக்ரேசரரான பெரிய திருமலைநம்பியே கடவரென்று நிஸ்சயித்து, ஒரு அநுகூலஸ்ரீவைஷ்ணவனை அவர் சந்நிதிக்குப் போகச்சொல்லி, தேவருடைய மருமகனை வட்டமணி கோவிந்தபட்டர் அடியேனுடன் ஸஹாத்யாயியாய் அநுகூலித்து இருந்தவன், துர்வாசநாதிசயத்தாலே அந்யபரனாய் காளஹஸ்தியாகிற கடுங்காட்டிலே நில்லாநின்றான்; தேவரீர் அடியேனுக்காக அவனிடத்தே நிர்ஹேதுகக்ருபைபண்ணி, திருவடிகளுக்கு அவனை ஆட்கொண்டருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்துவிட்டார்.

அநந்தரம் இவரிப்படி ஆஸ்ரமப்ராப்தி பண்ணியருளின செய்தியை கந்தாடை முதலியாண்டானும், ஹாரிதகுலதிலகரான திருமருமார்பனென்கிற திருநாமத்தையுடைய கூரத்தாழ்வானுங் கேட்டருளி, அதிப்ரீதியோடே பெருமாள் கோயிலுக்கெழுந்தருளி, ராமாநுஜனை சேவித்து, அடியோங்களுக்கு பஞ்சஸம்ஸ்காரங்களை ப்ரசாதித்தருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய, ராமாநுஜனும் திருவுள்ளம் உகந்தருளி, அவர்கள் ப்ரார்த்தித்தபடியேசெய்தருள, அவர்களும் பஞ்சஸம்ஸ்காரங்களையும் லபித்து க்ருதார்த்தர்களாய் (௩௧௦) "அதீத்ய மந்த்ரமாசார்யம் பூஜயேத்பக்திதோ த்விஜ: - ஆசார்யாதீநவ்ருத்திஸ்ஸ்யாத் யாவஜ்ஜீவம் ஸதாசுசி:" (అధీత్యమంత్రమాచార్యం పూజయేద్భక్తితో ద్విజః - ఆచార్యాధీనవృత్తిస్స్యాద్యావజ్జీవం సదాశుచిః) என்கிறபடியே ஸ்வா

சார்யரான ராமாநுஜனை யொருக்காலும் பிரியாமல் தத்கைங்கர்யைகரஸராய் சேவித்திருந்தார்கள்.

பின்பு யாதவப்ரகாசனுடைய மாதாவுக்குப் பலகாலும் பேரருளா ளர் சேவைநடவாநிற்க, திருக்கச்சிநம்பி பார்வை நடவாநிற்க, ராமாநுஜனி த்தே ப்ரேமசம்பாஷணம் நடவாநிற்க, அதுவே நிதாநமாக அவளுக்கும் ந் தர்ஶநத்திலே ஊற்றம்பிறந்து; இத்தர்ஶநத்திலே நம் யாதவனும் இறங் குலோவென்று நினைத்து, வையமாளிகைப்படி யேறுநிற்க, நல்லது நல்லது ன்று கிம்வதந்தியுண்டாக, அதுகேட்டு சந்தோஷத்துடனே யாதவப்ரகா ன் பக்கல்சென்று இச்செய்தியைச் சொல்லி, ஸ்வபுத்ரனை யாதவப்ரகா னைக்குறித்து நீயும் ராமாநுஜனைப்போலே சிகாயஜ்ஞோபவீத பூர்வகமாக ரிதண்டத்தை தரியாயென்ன, யாதவப்ரகாசனும் ஸ்வாபிமாநத்தாலே ர்த்தஞ்சொல்லுகையொழிந்து, பாரமார்த்திகதயா ஸ்வாபிமதார்த்தத்தில் அருசிதோன்றாநிற்கையாலும், இளையாழ்வார் அந்நாள்களிலே ப்ரதியோகித் வேந சொன்ன அர்த்தங்கள்நெஞ்சிலே புண்பட்டு நிற்கையாலும், அவர் மா ஹாத்ம்யங்களை ப்ரஹ்மராக்ஷஸ்ஸு சொல்லியிருக்கையாலும், சங்காயாத்ரை யில் வ்யாதரூபேண வந்த ராமஸாக்ஷாத்கார சஹாயத்தாலும், மாத்ருவாக் யத்தாலும்சம்மதித்து, ஸ்வமாதாவுடனே; த்ரிதண்டதாரணம்பண்ணுமிடத் தில், நான் சிகாயஜ்ஞோபவீத த்யாகம்பண்ணுகையாலே அதுக்கு ப்ராயஶ் சித்தமாக பூப்ரதக்ஷிணம்பண்ணவேண்டி யிருந்தது, அது வயோவ்ருத்த னை என்னால் செய்யக்கூடாது, இனி அசக்தனை நான் செய்யவடுப்ப தன்றென்று சொல்லிமுசித்துக்கிடக்க, அவ்விரவிலே பேரருளாளர்அவன் ஸ்வப்நத்திலே எழுந்தருளி, நம்மிராமாநுஜனையே யொரு ப்ரதக்ஷிணம் பண்ணி, அவர் தர, த்ரிதண்டகாஷாயாதிகளை தரித்து சந்யஸியாயென்ன, யாதவனும் அத்தை விஶ்வஸியாமல், திருக்கச்சிநம்பியுடனே நானொரு நி னைவு நினைத்திராநின்றேன், அத்தைப்பேரருளாளர்க்குவிண்ணப்பஞ்செய்து அவர் திருவுள்ளமானபடியை எனக்கு அருளிச்செய்யவேணுமென்ன, நம் பியும் அன்றுராத்ரி பெருமாளைசேவித்துவிடைகொள்ளுகிறவளவிலே, யாத வப்ரகாசன் ஒரு நினைவு நினைத்திருந்தேனென்றான் என்று விண்ணப்பஞ் செய்ய, பெருமாளும்; அவள்தாய் இராமாநுஜனைப்போலே நீயும் த்ரிதண் டத்திலே சந்யஸியாயென்ன, தான் பூப்ரதக்ஷிணம் பண்ணவேணுமென்று முசித்துக்கிடந்தான், நான் நம்மிராமாநுஜனை யொருப்ரதக்ஷிணம் பண்ணி சந்யஸியாயென்று சொன்னோம். நாம் ஸ்வப்நமுகேந சொன்னவார்த்தை யை விஶ்வஸியாமல், உம்மை யிடுவித்துக் கேட்கிறானித்தனை யென்று

அருளிச்செய்ய, நம்பியும் வெடிவோனை இச்செய்தியை யாதவப்ரகாசனுக் கருளிச்செய்ய, அவரும் விஸ்வஸித்து வந்து ராமானுஜன் திருவடிகளிலே தண்டன் சமர்ப்பித்து, அடியேனுக்கு த்ரிதண்டதாரணம்பண்ணுவித்தருள வேணுமென்ன, இவரும் அவருடைய உசித நிர்வேதங்கண்டு, அதுசெய்யு மிடத்து ப்ராயஸ்சித்தாபேக்ஷையுண்டென்ன, அவரும் பகவதுக்திப்ரகா ரத்தைவிண்ணப்பஞ்செய்து, அவர்தன்னையே வலம்வந்து ஸவிநயனாய்நிற்க, அவ்வளவிலே ஆழ்வானும் ஆண்டானும் பகவதாநுகூல்யமும் இவருடைய நினைவும் இருந்தபடி யென்னென்று விஸ்மிதராய் (௫௧௧) "த்வேஷாச்ச ஜ்ஞாதய:" (ద్వేషాచ్చ జ్ఞాతయః) என்கிறபடியே தேவர்க்குப் பண்ணுகின்ற த்வேஷந்தானே இவர்க்கு உஜ்ஜீவந ஹேதுவாய்த்தென்று சொல்லி ஆஸ்சர் யப்பட்டு (௫௧௨) "அஸ்மாபிஸ்துஷ்டோऽபவத்" (అస్మాభిస్తుష్టోఽభవత్) என் றுவிண்ணப்பஞ்செய்ய, ராமானுஜனும் போர வுகந்தருளி, சாஸ்த்ரோக்த ப்ரகாரேண ப்ராயஸ்சித்தபூர்வகமாக சௌளோபநயநாதிகளையும் பண்ணு வித்து, த்ரிதண்டகாஷாயாதிகளையும் ப்ரசாதித்து, ஸ்ரீகோவிந்தஜீயர் என்று திருநாமம் ப்ரசாதித்து, மிகவுங் க்ருபைபண்ணி யருளினர். இப்படி பஞ்ச ஸம்ஸ்காரயுக்தராக்கி, குருபரம்பரா பூர்வகமாக மந்த்ர ரத்நார்த்தத்தையும் ப்ரசாதித்தருளி, சாஸ்த்ரங்களிலே இதரேதரவசந வையர்த்த்யம்பிறவாதபடி யதிதர்மஸமுச்சயம் என்கிற ப்ரபந்தத்தைப்பண்ணுமென்ன, ஸ்ரீகோவிந்த ஜீயரும் (௫௧௩) "அதிக த்ரிதண்டதாரணம் ப்ரயோக முக்ய கர்ம ... ஆசார த்ரய ... ப்ராயஸ்சித்தானி ஸம்ஸ்கார இத்யேகாதஸ பர்வக:" (అధిక త్రిదండధారణం ప్రయోగముఖ్యకర్మ ... ఆచారత్రయ ... ప్రాయశ్చిత్తాని సంస్కార ఇత్యేకాదశపర్వకః) என்று ஏவம்ப்ரகாரேண சங்க்ரஹ ப்ரபந்தத்தைச் செய்து சந்நிதாநத்திலேவைத்து தண்டன் சமர்ப்பிக்க, ராமானுஜனும் ஆத்யந்தமாக திருக்கண்சாத்தி சந்தோ ஷித்தருள, இவரும் ஆசார்யபாதந்த்ரராய் சிலகாலம் எழுந்தருளியிருந்து அசிரேண பரமபதத்தை ப்ராபித்தருளினர்.

அநந்தரம், ராமானுஜனும் கூரத்தாழ்வானுக்கும் முதலியாண்டானுக் கும் மீமாம்ஸாசாஸ்த்ரயுக்ம ஸ்ரமம்பண்ணுவித்துக்கொண்டு இராநிற்க; இவ ருடைய ஆஸ்ரமப்ராப்திமுதலான இச்செய்திகளைக்கோயிலிலே ஆளவந்தார் ஸ்ரீபாதத்து முதலிகளெல்லாருங்கேட்டு, போரவுகந்து, தங்களிலே விசாரித் துக்கொண்டு, நம்பெருமாள் சந்நிதியிலே சென்று, இளையாழ்வாரை தேவரீர் சந்நிதியிலே நித்யவாசம்பண்ணும்படி இங்கே யழைப்பித்துக்கொண் டருள

வேணுமென்று விண்ணப்பஞ்செய்ய ; பெரியபெருமாளும் பேரருளாளர்க்கு அப்போதே திருமுகம்போகவிட்டருள ; பேரருளாளருங் கேட்டருளி, தந் தாம் அபிமாநத்தைப் புறம்போகவிடிலன்றோ ? நாம் நம்மிராமாநுஜனை விடு வதென்று அருளிச்செய்துவிட ; இச்செய்தியைப் பெரியநம்பிமுதலானமுத லிகள் எல்லாருங்கேட்டு இனிச்செய்யவடுப்ப தென்னென்று தங்களிலே விசாரித்தருளி, தேவப்பெருமாள் பரமோதாரராயிருப்பர் பாட்டுக்குப்போர நல்லராயிருப்பரென்று, ஆழ்வார் திருவரங்கப்பெருமாளரையரைக்குறித்து, (௫௧௪) "புண்யவ்ருத்தே புரே பூர்வே க்ஷேத்ரே ஸத்யவ்ரதாஹ்வயே - அஸ்தி காஞ்சீதி விக்யாதா புரீ புண்யவிவர்த்தநீ" (పుణ్యవృత్తే పురే పూర్వే క్షేత్రే సత్యవ్రతాహ్వయే - అస్తి కాఞ్చీతి విఖ్యాతా పురీ పుణ్యవివర్ధనీ) என்றிப்படி புண்யவர்த்தகமாகச் சொல்லப்பட்ட காஞ்சீமஹாநகரியிலே தேவரீர் எழுந்தருளி, புண்யகோடிவிமாந மத்யஸ்த்தராய், அகிலர்க்கும் அகிலாபேக்ஷிதப்ரதராயிருக்கிற பேரருளாளரைப்பாடி யுகப்பித்து, நமக்கு ராமாநுஜனைத்தரவேணுமென்று கேட்டு வாங்கி யழைத்துக்கொண் டெழுந்தருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்தார்கள். அவரும் அப்பொழுதே புறப்பட்டு நம்பெருமாளுக்கு விண்ணப்பஞ்செய்து, பெருமாள் கோயிலைநோக்கி எழுந்தருளினார். இவர் இப்படியெழுந்தருளுகிற செய்தியைக்கேட்டு, ஸ்வஜநமானவரந்தரும் பெருமாளரையர் எதிரேபோய், தம் திருமாளிகையிலே எழுந்தருளவைத்துக் கொண்டு, சத்கரித்து அமுதுசெய்விக்க, இவரும் அதிப்ரீதராய்க்கொண்டு எழுந்தருளியிருக்க ; அதின்மற்றைநாள் வைடிவோரை பேரருளாளர் வையமாளிகையிலே "கச்சிக்குவாய்த்தான்" என்கிற திருமண்டபத்திலே ஏறியருளி, அனைத்துக்கொத்திலுள்ள பரிகரமும் சேவித்திராநிற்க, திருக்கச்சிநம்பியும் திருவாலவட்டம்பரிமாற, அவரருகே ராமாநுஜனும் அவரருளிச்செய்த வரதராஜாஷ்டகத்தை அநுசந்தித்துக்கொண்டு சேவித்துநிற்கச்செய்தே ; திருவரங்கப்பெருமாளரையர் எழுந்தருளின செய்தியைத்திருக்கச்சி நம்பிகேட்டருளி எதிர்கொண்டு அரையரைச்சேவிக்க, அவருங் க்ருபைபண்ணி அந்யோந்யம் குஶலப்ரஶ்நம் கேட்டிருக்கச்செய்தே, அரையரும் நம்பியுடனே பேரருளாளரைச்சேவிக்கவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய, நம்பியும் பெருமாளுடைய திருவோலக்கமே அழைத்துக்கொண்டுபோக, அரையரும் வரதராஜனைச்சேவித்து. (௫௧௫) "கதா புந: ஶங்கரதாங்ககல்பகத்வஜாரவிந்தாங்குஶவஜ்ரலாஞ்சநம் - த்ரிவிக்ரம த்வச்சரணாம்புஜத்வயம் மதீயமூர்த்தாநமலங்கரிஷ்யதி" (కదాపునశ్శంఖరథాంగకల్పక ధ్వజారవిందాంకుశవజ్ర

லாంఛనం - త్రివిక్రమత్వచ్చరణాంబుజద్వయంమదీయమూర్ధ్నానమలంకరిష్యతి) என்று அநு சந்தித்துக்கொண்டு தண்டன் சமர்ப்பித்து நிற்க, பெருமாளும் தீர்த்த ப்ர சாதங்களையும் ஸ்ரீசடகோபனையும் ப்ரசாதித்தருள, இவரும் "திருப்பொலி ந்தசேவடி யென்சென்னியின்மேல் பொறித்தாய்" என்று ப்ரீதராய்நிற்கிற வளவிலே, பெருமாளும் இவனை யருளப்பாடிட்டருள, திருவரங்கப்பெரு மாளரையரும் பக்திபுரஸ்ஸரமாக "என்னெஞ்சமேயான்" என்றுதொட ங்கி "உலகேத்துமாழியானத்தியூரான்" என்றும், "பிணியவிழ்தாமனை மொட்டலர்த்தும்பேரருளாளர்" என்றும், "கொழுந்தொண்டர்கள் தமக்குப்பிணியொழித்தமரர் பெருவிசும்பருளும் பேரருளாளனெம்பெருமா ன்" என்றும், இப்படி ஆழ்வார் திவ்யசூக்தியான "பாலேய்தமிழர்,, "பண் ணார்பாடலின்கவிகளை, தேவகானத்திலே இயலுமிசையுமாக நாடகத்துடனே பாட; "தென்றுவென்னுமென்னம்மான்" என்கிறபடியேபேரருளாளரும்போ ரவுகந்தருளி, தாம் சாத்தியிருந்த திருமுத்தின்தாழ்வடம், திருப்பரிவட்டம், சத்ரசாமராதி மற்றுமுண்டான வரிசைகள் எல்லாம் ப்ரசாதித்தருள, இவ ரும், நாயிந்தே, அடியேனுக்கு இவையொன்றிலும் அபேக்ஷையில்லை, தேவ ரீர் அர்த்திதார்த்த பரிதான தீக்ஷிதராகையாலே அடியேன் அர்த்தித்ததைத் தந்தருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்து, பின்னையுங் கநக்கப்பாடியரு ளினர். அத்தைக்கேட்டருளி, பெருமாளும் அதிப்ரீதராயருளி, நீர் வேண்டி னத்தைத்தருகிறோம், அத்தைச் சொல்லிக்காணீரென்ன, அரையரும் ராமா நுஜனைக்காட்டி, இவனை அடியேனுக்குத் தந்தருளவேணுமென்று விண்ணப் பஞ்செய்ய, பெருமாளும் அப்போதே யறியப்பெற்றிலோமே, இவனையொ ழிய நீர் வேண்டினதெல்லாந்தருகிறோம் அத்தைக்கேளீரொன்றருளிச்செய்ய, அரையரும் (௩௪௧) "ராமோ த்விர் நாபிபாஷதே" (రామోద్విర్నాభిభా షతే) என்கிற தேவர் இரண்டுவார்த்தை யருளிச்செய்யலாமோவென்று விஜ் ஞாபிக்க, பெருமாளும் இன்றைப்புடன்தந்தோம் கொண்டுபோகலாகாதோ வென்று அருளிச்செய்ய, திருவரங்கப் பெருமாளரையரும் உடையவரைக் கையைப்பற்றிவாருமென்ன, உடையவரும் பேரருளாளர்க்குத் தண்டன் சமர்ப்பித்து, திருவரங்கப்பெருமாளரையருடனே கோயிலுக்கெழுந்தருளப் புறப்பட, பெருமாளும் இவர்க்கு விடைகொடுத்தருளினர். பின்பு உடைய வரும்; கூரத்தாழ்வானையும்முதலியாண்டானையும்பார்த்தருளி, மடமேபோய் நம்முடைய திருவாராதநமான பேரருளாளரையும், மற்றும் உண்டான சம் பந்தங்களையும் கொண்டுவாருங்கோள் என்று அருளிச்செய்து, மடம்புகுரா மல் கோயிலுக்கெழுந்தருளினர். அவர்களும் அப்படியே எழுந்தருளவைத்

துக்கொண்டு கூடினவளவிலே, திருக்கச்சிநம்பியும் அவர்களை வழிவிட்டு மீண்டு எழுந்தருளினார்.

உடையவரும் (நகள) "யசுமகாநநமொயாதிநாகநாவ்ருயொமதிம்" ([illegible]) என்று சொல்லுகிற பெருமையையுடைய ஸ்ரீரங்கதாமமாகிற திருவரங்கத் திருப்பதியைநோக்கிப் பயணகதியிலே எழுந்தருளி, வடவாற்றிலே நீராடி, கேசவாதி த்வாதசோர்த்வபுண்ட்ரங்களையுந் தரித்திருந்தவளவிலே, இவர் எழுந்தருளினசெய்தியை ஆளவந்தார் ஸ்ரீபாதத்தில் பெரியநம்பி முதலான முதலிகளும் ஜீயர்களும் ஏகாங்கிகளும் ஸ்ரீவைஷ்ணவர்களும் கேட்டருளி, பெருமாளுக்கு விண்ணப்பஞ்செய்ய, பெருமாளும் சேனைமுதலியாருக்கு அருளப்பாடிட்டருளி, நம்மிராமாநுஜனை எதிரேற்றிக்கொண்டு வாருமென்று திருவுள்ளமாயருள, சேனைமுதலியாரும் பெரியநம்பியுள்ளிட்ட முதலிகள் ஜீயர்கள் ஸ்ரீவைஷ்ணவர்களுடனே பெருமாள் பரிகரமான அனைத்துக்கொத்தில் அவர்களும் சேவிக்க, அகில ந்ருத்தகீத வாத்யத்துடன் முக்தராய்ப் போருமவர்களை நித்யஸூரிகள்விரஜைக்கக்கரையளவாகவந்து எதிர்கொள்ளுமாபோலே, திருக்காவேரி வடவாற்றின் கரையளவாக வந்தெதிர்கொள்ள; ராமாநுஜரும் சேனைமுதலியாரையும் பெரியநம்பி முதலானாரையும்சேவித்து, அவர்களைப் பின்சென்று கொண்டுபோய் "கொடியணிநெடுமதிட் கோபுரங்குறுகினர்" என்கிறபடியே திட்கொடிமதிளையும் தாமோதரன் திருக்கோபுரத்தையுங் கிட்டி, சாஷ்டாங்கப்ரணாமம்பண்ணி, திருமாலை தந்த பெருமாள் திருவீதி முன்றாகப்புகுந்து, ப்ரதக்ஷிணமாக வெழுந்தருளி, த்ரிவிக்ரமன் திருவீதியையும் ப்ரதக்ஷிணம்பண்ணி, எழுந்தருளிப்புகுந்து, பெரியபலிபீடத்தடியிலேசென்று, தண்டன்சமர்ப்பித்து, சேனாக்ரமத்திலே ஆளரியையுந் திருவடிதொழுது, ஸ்ரீரங்கநாயகியாரையுஞ் சேவித்து, ஸ்ரீசந்த்ரபுஷ்கரிணியிலே தீர்த்தஸ்வீகாரமும் பண்ணியருளி, ஸ்ரீகோபுரங்கள் நயினாரையுஞ் சேவித்துப்புகுந்து "கடைத்தலை யிருந்துவாழும் சோம்பர்" ஆன நம்மாழ்வார் முதலான ஆழ்வார்களையுஞ் சேவித்து, மற்றுஞ் சுற்றுள்ள எம்பெருமான்களையும் சேவித்து "அணியனார்செம்பொனாய அருவரையனையகோயில்" ஆகிற அணியரங்கந்திருமுற்றத்தேபுகுந்து, தண்டன்சமர்ப்பித்து, உள்ளே சென்று ப்ரதக்ஷிணமாக வெழுந்தருளி, ப்ரணவாகாரமான ஸ்ரீதிவ்யவிமானத்தையும் சேவித்து, சேனைமுதலியாரையுந் திருவடிதொழுது, அழகிய மணவாளன் திருமண்டபத்தேற எழுந்தருளினவளவிலே "வந்தவரெதிர்கொள்ளமாமணிமண்டபத்து" என்கிறபடியே முக்தரைப் போருமவனை

ஸ்ரீவைகுண்டநாதன் எதிர்கொள்ளுமாபோலே, நம்பெருமாள் திருக்கைத் தலத்திலே எழுந்தருளிப் புறப்பட்டு, அழகியமணவாளன் திருமண்டபத்தளவாக எழுந்தருளி எதிர்கொண்டு உள்ளேபுகுந்தருள ; உடையவரும் விழுவதெழுவது தொழுவதாக சேவித்து, திருப்பள்ளியறையிலே புகுந்து, "அரங்கந்தன்னிடை" "பாம்பணைப்பள்ளிகொள்ளும்" கடல்விளங்குகருமேனியம்மான்றன்னைக்கண்ணாரக்கண்டுகந்து, மணத்தூணைபற்றிநின்று, வாயாரவாழ்த்தி ., ப்ரேமபரவசராய், அமலனாதிப்பிரானிற்படியே பாதாதிகேசாந்தமாக " கண்டகண்கள்மற் றொன்றினைக்காணாவே ., என்னும்படி பெரிய பெருமாளை யநுபவித்து, திருப்பல்லாண்டையும் அநுசந்தித்து, (௩௧௮) " நமோ நமோ வாங்மநஸாதிபூமயே - நமோ நமோ வாங்மநஸைகபூமயே - நமோ நமோ நந்தமஹாவிபூதயே - நமோ நமோ நந்ததயைகஸிந்தவே - நதர்மநிஷ்டோஸ்மி நசாத்மவேதீ நபக்திமாம்ஸ்த்வச்சரணாரவிந்தே - அகிஞ்சநோநந்யகதிஶ்ஶரண்ய த்வத்பாதமூலம் ஶரணம் ப்ரபத்யே," (నమోనమోవాఙ్మనసాతిభూమయే - నమోనమోవాఙ్మనసైకభూమయే - నమోనమోనన్తమహావిభూతయే - నమోనమోనన్తదయైకసిన్ధవే - నధర్మనిష్ఠోస్మి నచాత్మవేదీ నభక్తిమాంస్త్వచ్చరణారవిన్దే - అకిఞ్చనోనన్యగతిశ్శరణ్యత్వత్పాదమూలంశరణంప్రపద్యే,) என்றுதம் பரமாசார்யரான ஸ்ரீஆளவந்தார் திவ்யஸூக்தியையும் அநுசந்தித்து, சேவித்துநிற்க, பெரியபெருமாளும் ராமாநுஜனை மிகவும் க்ருபைபண்ணியருளி, தீர்த்தப்ரசாதங்களும் ப்ரசாதித்து, "நின்செம்மாபாதபற்புத்தலைசேர்த்து" என்கிறபடியே "திருக்கமலபாதமான" தேனேமலரும்துயராறுசுடரடிகளாலே, இவருடைய உத்தமாங்கத்தை யலங்கரிக்க ; இவருந் தாளிணைக்கீழ் வாழ்ச்சியைப்பெற்று, நிரதிசயாநந்த நிர்ப்பரராய் சேவித்துக்கொண்டுநின்றருள, பெரியபெருமாள் உடையவரைத் தம் தாமரைக்கண்களாலே நோக்கி, சோதிவாய்திறந்து, "பொங்கோதஞ்சூழ்ந்தபுவனியும்விண்ணுலகும்" என்கிறஉபய விபூதி யைச்வர்யத்தையும் உமக்கும் உம்முடையார்க்குந் தந்தோம், நம்முடையவீட்டில் கார்யத்தையெல்லாம் ஆராய்ந்துநடத்துமென்றுதிருவுள்ளமாயருள ; உடையவரும் தீர்த்தப்ரசாதமும், "சூடிக்களைந்த தண்டுழாய் விரைநாறு கண்ணித்திருமாலைப்ரசாதமும், "பொலிந்துநின்றபொன்னங்கழலான ஸ்ரீசடகோபனையும் "வானவர்நாட்டையும் நீ கண்டுகொள்" என்கிற உபயவிபூத்யைச்வர்யத்தையும் கரதலாமலகமாக ப்ரசாதிக்கப்பெற்று, பெரியநம்பி திருமுகமண்டலத்தைப் பார்த்தருளி, "பெரியார்க்காட்பட்டக்கால் பெறுதபயன்பெறுமாறு" என்று தேவரீர் திருவடிகள் சம்பந்தத்தையிட்டுப்

பெருமாள் இப்படி அடியேனை வாழ்வித்தருளினார் என்று விண்ணப்பஞ் செய்ய; பெரியநம்பியும் “கலியுங்கெடுங்கண்டுகொண்மின்” என்று ஆழ்வார் அருளிச்செய்த பவிஷ்ய தார்த்தம் ப்ரஸித்தமாச்சுதென்று அருளிச்செய்து, பெருமாள் நியமித்தருளின கார்யம் செய்தருளலாகாதோவென்ன; உடையவரும், பெரியதிருமண்டபத்தேஎல்லாருடனே எழுந்தருளியிருந்து, “எண்ணுதனகளெண்ணும்நன்முனிவர்” என்கிறபடியே, கோயிலில் உள்ள நிறைவுகுறைவெல்லாம் ஆராய்ந்தருளவேணுமென்று உடையவருக்கு எல்லாரும் அருளிச்செய்தார்கள். உடையவரும் அங்கே யெழுந்தருளியிருந்து கருவூலங்கள் எல்லாம் ஆராய்ந்து, அமுதுபடி, சாத்துப்படி, திருமாலை, திருவிளக்குகளெல்லாம் ஆராய்ந்து நடத்தியருளி, மற்றுந் திருவாராதநத்துக்கு வேண்டினவையெல்லாங் குறைவற நடத்தியருளி, கோயிலிலொத்துக்கொத்தில வர்களுடைய ஏற்றத்தாழ்வுகளும் ஆராய்ந்தருளி, திருமதில்கள் முதலானவிடங்களில் திருப்பணிகளும் நடத்தியருளி, “வண்டினமுராலும், மயிலினமாலும், கொண்டல்மீதணவும், குயிலினங்கூவும், கடியார்பொழில்” களில் திருச்சண்பகந் தொடக்கமானதிவ்யமானபூமரங்களும், திருநந்தவநங்களும் ஆராய்ந்தருளி, மற்றுமுண்டான திருவிளையாட்டுச்சிமைகளும் எல்லாம் ஆராய்ந்துகொண்டு போருகிற வளவிலே; அகளங்கநாட்டாழ்வானையுஞ் சிஷ்யனாக்கிக் கொண்டருளி, கோயிலுக்கு மேற்சாவலாக வைத்தருளி, “திங்களுந்நாளும்விழாவறாத” என்கிறபடியே நித்யோத்ஸவ, பக்ஷோத்ஸவ, மாஸோத்ஸவ, ஸம்வத்ஸரோத்ஸவ, மஹோத்ஸவங்களெல்லாம் தாழ்வற நடத்திக்கொண்டு போருகிறகாலத்திலே.—

முன்பு திருமலைநம்பிசந்நிதிக்குப் போகவிட்டிருந்த ஸ்ரீவைஷ்ணவர் ஹர்ஷப்ரகர்ஷத்துடனே எழுந்தருளி உடையவர் திருவடிகளிலேசேவிக்க, ராமாநுஜனும் அவர்களுடைய முகவிகாஸங்கண்டு, கார்யசித்தியை நிஸ்சயித்து ப்ரீதியுடனே தத்வ்ருத்தாந்தத்தை விவரியுமென்ன; ஸ்ரீவைஷ்ணவரும்; தேவரீர் விடை ப்ரசாதித்தருளினபின்பு க்ரமத்திலேபோய், திருமலையேறி, திருமலைநம்பியைச்சேவித்து, தேவரீர் நியமநப்படியே விண்ணப்பஞ்செய்தேன், நம்பியுங் கேட்டருளி இது நாமே செய்யக்கடவதாயிருக்க, நம்மிராமாநுஜனும் “எண்ணம்புகுந்து தித்திக்குமமுதாக,, ப் பெற்றதேயென்று, தேவர் ஆநுகூல்யத்துக்கு உகந்த திருவுள்ளத்தராய், தத்க்ஷணமே ஸ்ரீபாதத்துமுதலிகளுடன் அடியேனையுங் கூட்டிக்கொண்டு காளஹஸ்திப்ரதேசத்தில் அக்குளக்கரையில் ஒரு மரத்தடியிலே யெழுந்தருளி யிருக்க, அங்கே உள்ளங்கைக்கொணர்ந்த நயினரும் ருத்ராபிஷேகார்த்தமாக குடந்

கொண்டு, ருத்ரபரமான பாட்டுக்களையுங் கதறிக்கொண்டுவரக்கண்டு, நம்பியும் “கொன்றைச்சடைமுடியானைக் குளிரநீராட்டினு லென்னுனக்குண்டாம்பயன்” என்று அருளிச்செய்ய, நயினாரும் இப்பாசுரங்கேட்டு நம்பியையும் ஸ்மயமாநமுகனாய் ஏறப் பாராநின்றுகொண்டு போனான்; இவரும் அவன் செய்யுஞ் சேமத்தை யெண்ணித்தெளிவுற்ற சிந்தையராய், அவ்வளவிலே மீண்டு திருமலையிலேபோய் வ்யாக்யாநித் தெழுந்தருளி யிருந்தார். பின்பு ஒருநாள்; முன்புபோலே அக்குளக்கரையிலே வடவ்ருக்ஷச்சாயையிலே யெழுந்தருளியிருக்க, அங்கே நயினாரும் அபிஷேக ஜலாஹரணார்த்தமாகக் குடமெடுத்துவருமதுகண்டு, நம்பியும் அப்போதொரு சிந்தைசெய்து “எம்மனஞ்சூழவருவானாய் உறங்குவான்போல் யோகுசெய்வானானே யுணர்வைப்பெறவூர்ந்தவனுறங்குகிறானோ” என்று தம் பரமாசார்யர் திவ்யசூக்தியிலே (௩௱௧௧) “ஸாஹாவிகாநவயிகாதிஶயேஶத்வம்” ([illegible]) என்கிற ஶ்லோகத்தை ஒருவோலைப்புறத்திலேஎழுதி அவன்வருகிறவழியிலே போகடுவித்திருக்க; அவனும் அவ்வழியில்வந்து, ஓலையைக்கண்டெடுத்து வாசித்துக்கொண்டு கட்கப்புகட்டு, ஜலத்தை யாஹரித்துக்கொண்டு மீண்டுபோகிறவன், முதலெறிந்தவிடத்தைத்தேடி எடுத்துக்கொண்டு, ஜலத்தையு மிறக்கி, மீண்டு குடமெடுத்துக்கொண்டு வருகிறவன், எங்களைக்கண்டு (௩௱௨௰) “ஶ்லோகஶ்ஶ்லோகத்வமாகத:” ([illegible]) என்று ஸ்ரீவால்மீகிபகவான் அர்த்தசிந்தனை பண்ணினாற்போலே இவனும் ஶ்லோகார்த்த பர்யாலோசனைபண்ணி நின்றுகொண்டு, கிட்டவந்து நின்று, உங்கள்கையில் நழுவினபொருள் இதுவோவென்ன, நம்பியும் வேறு சிலர் பொருள்நழுவுமொழிய நழுவும்பொருள் எங்களதல்லவென்ன, அவனும் அது கிடக்கிடீர், நீங்கள் எல்லாரும் ஓரிடத்திலே நடக்கிற தென்னென்ன, நம்பியும் மார்க்கம் கலக்கமற்றிருக்கையாலேயென்ன, அவனும் சேவலருக்கு மார்க்கங்கள் உண்டோவென்ன, இவரும் பொருள்கையுண்டாய்ச் செல்லுமவனுக்கு அடிப்ப திதுவன்றோவென்ன, அவனும் இப்போது நீங்கள் உற்றுணைவிடவந்தீர்களோவென்ன, இவரும் அதல்ல கறவைகள் சொள்ளவந்தோமென்ன, அநுஷ்டாதாக்களுக்கு பசுபாததூளி பவித்ரமன்றோவென்ன, இவரும் அது இடமறிந்து சேர்படில் நல்லதென்ன, அவனும் குறுக்குநெடுக்காகில்பேதமென்னென்ன, செவ்வையிருக்க திர்யக்காகையேபேதமென்ன, அவனும்இதுபுதுவார்த்தைக்கட்டுகளோவென்ன, இவரும்பழவார்த்தைக்கட்டுகளும் இப்படியேயென்ன, அவனும் இதிலே பூர்வவிசாரம்வேண்டாவோவென்ன, நம்பியும் பரத்வத்திலேகாண் விசாரமிருப்பதென்ன, நயி

ரும் திருக்கரணைப் நம்பியையும் ஏறப்பாராநின்றுகொண்டு யதாஸ்தாநமேபோம்போது தலைதுலுக்கும்படி யடைவுகெடக் காணலாம்படிபோனுன். நம்பியும் அதுகண்டு (கஉக) "ப்ரஸாதமநுகச்சதி" (ప్రసాదమనుగచ్ఛతి) என்னுமாபோலே நெஞ்சு முருகாநின்றதே. அவனோ இனி யாவனோ என்றநுசந்தித்து, சாத்யகோடியிலேயிட்டு முதலிகளுடன் சல்லாபித்துக்கொண்டு திருமலையே மீண்டெழுந்தருளினுர். என்றவாறே உடையவரும் மிகவும் ஆநந்தித்து, கூரத்தாழ்வானையும் முதலியாண்டானையும் இருக்க முதலிகளையும் பார்த்தருளி, கேட்டீர்களோ கோவிந்தனுக்கு ஆளவந்தார் திவ்யசூக்தி நெஞ்சிலுற்று அதற்கு வாங்மாத்ரத்தாலே வைதண்டிகச்சாயையைக் காட்ட, அதற்கு நம்பியும் சாயாமாத்ரத்தாலே ஸூத்ரங்களை வாக்சாதுர்யங்களாலே ரசிக்க, கோவிந்தனும் சாஸ்த்ரவித்தநுகையாலே நம்பியுடைய ஸ்ரீசூக்திவைஶாரத்ய க்ரமத்திலே யீடுபட்டு திருத்தாணுனிறே; எங்ஙனேயென்னில (கஉஉ) "கூடஸ்தோக்ஷர உச்யதே" (కూటస్థోక్షర ఉచ్యతే) "அமரர்களாதிமுதல்வன்" (கஉங) "தேஹிநாமவதாரண:" (దేహినామవతారణః) "நெறிவாசல்தானேயாய்நின்றுன்," (கஉச) "க்ஷேத்ரஜ்ஞாநாம் வேத்தா தத்த்வத:," (క్షేత్రజ్ఞానాం వేత్తా తత్త్వతః) "யானேநீயென்னுடைமையும்நீயே," (கஉரு) "ஜ்ஞாநேந ஹீந: பஶுபி: ஸமாந:" (జ్ఞానేనహీనః పశుభిస్సమానః) "என்னினைந்துபோக்குவரிப்போது," (கஉசு) "யே பாலலாடபலகே லஸதூர்த்வபுண்ட்ரா:" (యేఫాలలాటఫలకే లసదూర్ధ్వపుండ్రాః) "தவளப்பொடிகொண்டுநீரிட்டிடுமின்" (கஉஎ) "ஊர்த்வபுண்ட்ரம் த்விஜாதீநாம்" (ఊర్ధ్వపుండ్రం ద్విజాతీనాం) "நீறுசெவ்வேயிடக்காணில்," (கஉஅ) "வேதமூலப்ரமாணாத்" (వేదమూలప్రమాణాత్) "மிக்கவேதியர்" 'நால்வேதம்" (கஉகூ) "ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத் - தர்மே ஸர்வம் ப்ரதிஷ்டிதம் - அவித்யயா ம்ருத்யும் தீர்த்வா வித்யயாம்ருதமஶ்நுதே - ப்ரணவோ தநு: ஶரோ ஹ்யாத்மா ப்ரஹ்ம தல்லக்ஷ்யமுச்யதே - அப்ரமத்தேந வேத்தவ்யம் ஶரவத் தத்வயோகவித் - நாராயணாத் ப்ரஹ்மா ஜாயதே நாராயணாத் ருத்ரோ ஜாயதே" (సదేవసోమ్యేదమగ్రఆసీత్ - ధర్మేసర్వంప్రతిష్ఠితం - అవిద్యయామృత్యుంతీర్త్వావిద్యయామృతమశ్నుతే - ప్రణవోధనుశ్శరోహ్యాత్మా బ్రహ్మతల్లక్ష్యముచ్యతే - అప్రమత్తేనబోద్ధవ్యంశరవత్ తత్వయోగవిత్ - నారాయణాత్ బ్రహ్మాజాయతే నారాయణాత్ రుద్రోజాయతే) என்றிப்படிப்பட்ட ஶ்ருதிஸ்ம்ருதிதிஹாஸபுராணுதிகளிலே ப்ரதிபாதிக்கிற அர்த்தங்களையெல்லாம் தத்காலத்திலே மநசாணது அவகாஹிக்க, கோவிந்தனும் திரு

த்ரனுய், டோலாயமாநசித்தனுய்ப்போகையாலும், இவரும் அவன் சாத்ய கோடியிலே யேறிட்டுத் திரும்பி யருளுகையாலும், நம்பிக்கவனுடன் ஓடின சாமர்த்ய மிருந்தபடி யென்னென்று விஸ்மிதராய் ஸ்ரீவைஷ்ணவனை யுபலாலித்தருளினபின்பு பின்னையென்னென்றுகேட்டருள, அவரும் (கூகூ0) "யம்யம்பஶ்யதிசக்ஷுஷா - ஸ்தாவராண்யபிமுச்யந்தே கிம்புநர்பாந்தவாஜநா:" (యంయంపశ్యతిచక్షుషా - స్థావరాణ్యపిముచ్యన్తే కింపునర్బాంధవాజనాః) என்று சொல்லுகிறபடியே தேவரீருடைய உபய விதசம்பந்தம் பழுதுபோமோ! மூன்றும்கூறியில் கார்யசித்தியைக் கேட்டருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்தார், எங்ஙனேயென்னில், திருமலைநம்பியும் திருமலைச்சிந்தாமணியையுந் திருவடிதொழுது புறப்பட்டு, காளஹஸ்திஎல்லைநிலத்தோப்பிலே யெழுந்தருளி யிருந்து, ஸ்ரீபாதத்து முதலிகளுக்குத்திருவாய்மொழி வ்யாக்யாநம் ப்ரசாதித்தருளாநிற்க, நயினுரும் புஷ்பாஹரணம் பண்ணுநின்றுகொண்டு ஒரு பாதிரிமரமேறியிருக்க, அவ்வளவிலே "திண்ணன் வீடு," என்கிற திருவாய்மொழிக்கு அர்த்தம் அருளிச்செய்யாநிற்க, நயினுரும் மூன்றுபாட்டளவும் பூப்பறிக்கை தவிர்ந்துகேட்டு, நாலாம்பாட்டிலே "எம்பெருமானுக்கல்லால் பூவும்பூசனையுந்தகுமே" என்றுவர, நயினுரும் அம்மரத்தில் நின்றும் திடுக்கெனக்குதித்து, கையில் அப்பூம்படலிகையையுஞ் சுழற்றி யெறிந்து, தரித்திருந்த ருத்ராக்ஷத்தையும் அலங்கலழியவாங்கி வீசிப்போகவிட்டு, தகாது தகாதென்று நம்பி திருவடிகளிலே அடைவுகெட வந்து விழுந்து கிடந்து (கூகூக) "அஜ்ஞாசாரஹீநஶ்ச மலிநோ து:கஸாகரே நிமக்ந:" (అజ్ఞాచారహీనశ్చ మలినో దుఃఖసాగరే నిమగ్నః) என்றும் "நீசனேனிறையொன்றுமிலேன்" என்றும் சொல்லுகிறபடியே தம்வர்த்தமாநத்தைச்சொல்லி அநிவிண்ணராகிறுர், எங்ஙனேயென்னில், உபயவிபூதிநிர்வாஹத்துக்கும் முடிசூடினவ னிருக்க, விரிதலையாண்டியை விரும்பினேனேயென்றும், புதுக்கணிப்புடைய புண்டரீகாக்ஷனிருக்க, புகைக்கண்ணனைப்பூசித்தேனேயென்றும், கடல்மண்ணுண்ட கண்டனிருக்க, கறைக்கண்டனைக்காமித்தேனே யென்றும், கல்லெடுத்துக் கன்மாரிகாத்த கற்பகமிருக்க, கையார் கபாலியைக்கண்டு வணங்கினேனே யென்றும், திருவிருந்த மார்பனிருக்க, திருவில்லாத்தேவனைத் தொழுதேனே யென்றும், பீதகவாடைப்பிரானிருக்க, புலியுரியுடையானைப் பின்றொடர்ந்தேனே யென்றும், சதிரானகங்கையடியானிருக்க, கழிவாய்ச்சுடுகாடுகாவலனைச்சுற்றி வலம்வந்தேனேயென்றும், பெருமலராகிற பெருந்துழாய்வநமிருக்க, பெருங்கையா

ற்குடமெடுத்துப்பேய்ச்சுரைக்கு நீர்வார்த்தேனே யென்றும், இப்படி பல
வகையாலும் புலம்பி இவ்வாத்மாவை உஜ்ஜீவிப்பிக்கவேணுமென்று கண்ட
னிட்டுக்கொண்டு எழுந்திராமலிருக்க, நம்பியும் முதலிகள் முகம்பார்த்து,
சுத்தியாக முண்டாயிருந்தது, ஆளவந்தார் க்ருபை பண்ணும்படிக்குக்
குறை யில்லை யென்றருளிச்செய்து, இவரையும்முடிபிடித்தெடுத்து, உடம்
பைத் தடவி, பலபடி சாந்த்வநம்பண்ணி (௯௯௨) "ஸுவிபேத்ருவசக்ஷ-
ஹ்ருந்நப்" (ఆపస్తంబసూత్రం)என்கிறபடியே குளிரநோக்கி விஸ்ரம்பகதைகம்
நடவாநிற்க ; இச்செய்தியை யடையக்கேட்டு, தந்ஸ்த்தாநத்தார் அனைவ
ரும்வந்து, நம்பியுடனே; எங்கள் ஸ்த்தாநத்துக்குக்கடவரான இவரை நீங்
கள் எங்ஙனே அம்மான் பொடியிடவடுக்குமோவென்ன ; நம்பியும் அம்
மான் பொடிக்கிடுபட்ட இவரையே கேட்டுக்கொள்ளுங்கோள் ? எங்கள்
அந்யாத்ருஶம் ; அசல்வழி வருகிறோமல்லோமென்ன ; அவர்களும் ; நயி
னாரே வாருமென்றுகையைப்பிடிக்க, உதறி நம்மைகையைப்பிடிக்கக்கூடுமோ
வென்று கருவூலத்தில் அத்திறவுகோல் இலச்சினை யோதிரம் எல்லாத்
தையும்பொகட்டு, இவரும்; உங்களுக்கும் எனக்கும் பிணையில்லையென்று
கைதட்டி முகந்திருப்பிநிற்க ; அவர்களும் நிராஶராய் நம்பியுடனே ; நாங்
கள் இச்செய்திகளையெல்லாம் இன்றே கேட்டோம் ; நங்கள்பிரான் வழி
வருவானே யென்று உங்களுடனே சண்டைக்கு நிற்பதாக எண்ணியி
ருந்தோம். எங்கள் காளஹஸ்தியுடையாரும் எங்கள் கனவிலே (௯௯௩)
"பௌஷ்ணவௌஜவாவதாரமெகஸ்ய யீயமெஜவ்ராவிமொவாதஃ" (షణ్ణవోద్ధ
చార్వాక నిర్ధూమ్యయవిలంబితః) என்கிறபடியே வேதபாஹ்யரான பௌத்
தாதிகளாலே வேதசாஸ்த்ரங்கள் ப்ரமுஷிதங்களாகாநிற்க, (௯௯௪) "த்ரை
கூஷ்யாரிணாவதாரம் விஷ்ணு நாஸ்திகாத்ரயீ" (త్రిదండధారిణా పూర్వం విష్ణు
నా రక్షితా త్రయీ) என்று சொல்லுகிறபடியே நாஸ்திக நிரஸநார்த்தமாக த்ரி
தண்டசந்யாஸியான தத்தாத்ரேயரைப் போலே, சேஷசேஷாசநாநந்த
வைநதேயாம்ஶங்களாய், யமுனைத்துறைவர், இளையாழ்வார், கோவிந்தபட்
டராகவும் இவர்கள் சேர்த்திக்கு சங்கசக்ராம்ஶங்கள் முதலியாண்டான்
கூரத்தாழ்வானாகவும், மற்றுமுள்ள விஷ்ணுபாரிஷதங்களும் இப்படியே
வந்தவதரித்தார்கள். இது நமக்கு ப்ரியமாகையாலே கோவிந்தபட்டரு
க்கு முன்பு காசிவாசாபேக்ஷை யிருக்கையாலே அந்த புத்தியைத்தவிர்க்
கைக்காக நாமே உள்ளங்கைக்கொணர்ந்தவ்யாஜமிட்டு அழைத்துவைத்து
க்கொண்ட தொழிய மற்றில்லை, ஆகையால் அவர்கள் ஸ்வேச்சாசாரிகள்
என்று சொன்னானென்று மீண்டு போனார்கள்.

பின்பு நம்பியும் இவரைக்கூட்டிக்கொண்டு, திருப்பு[..]ம்பறவெழுந்தருளி, தத்க்ஷணமேவ பநாதிகளையுஞ்செய்வித்து, (௩௩௫) "ஸம்ஸ்காராஃ பஞ்ச கர்த்தவ்யாஃ" (సంస్కారాః పంచకర్తవ్యాః) என்று நெடுமாலருளி [..]மீபத்துக்குளக்கரையிலே பஞ்சசம்ஸ்காரங்களையும் ப்ரசாதித்தருளி, 'திருப்பல்லாண்டு முன்னாக ஆழ்வார்களுடைய திவ்யப்ரபந்தங்களையும் [..]துவித்து, அர்த்தபஞ்சகஜ்ஞாநத்தையும்உண்டாக்கி, விசேஷித்து க்ரு[..]பண்ணியருளினார். இருவரும் "தேவுமற்றறியாதே ஆசார்யபதைகநி[..]ராய் (௩௩௬) "அஹம் ஸர்வம் கரிஷ்யாமி" (అహం సర్వం కరిష్యామి) என்றிருக்குமவரைப்போலே "ஒழிவில்காலப்படியே, அவர்திருவடிகளிலே, சிந்தையாலும் சொல்லாலும் செய்கையாலும் சர்வவிதகைங்கர்யங்களும் செய்து கொண்டிராநின்றார். இந்நாள் சேவித்திருந்து விடைகொண்டேனென்று விண்ணப்பஞ்செய்ய ; உடையவரும் அந்த ஸ்ரீவைஷ்ணவரை மிகவும் க்ருபைசெய்தருளினார்.

பெரியநம்பி ஸ்ரீபாதத்திலே ஆச்ரயித்தமுதலிகள் ; இளையாழ்வார், மலைகுனியநின்றபெருமாள், பிள்ளைதிருக்குலமுடையார், பட்டாரியரில் சடகோபதாசர் என்று நாலுமுதலிகள். அநந்தரம் ராமாநுஜனும் பெரிய நம்பி திருமாளிகைக் கெழுந்தருளி, அவர் திருவடிகளிலே தானுந் தடக்கையுங்கூப்பி தண்டன்சமர்ப்பித்து, ஆளவந்தார் ஸ்ரீபாதத்திலே சேவியாத இழவுதீர தேவரீர் திருவடிகளிலே ஆச்ரயிக்கப்பெற்றேன் ; தேவரீர் திருவுள்ளத்திலுண்டான அர்த்தவிசேஷங்களை அடியேனுக்கு ப்ரசாதித்தருளவேணு மென்று விண்ணப்பஞ் செய்ய ; நம்பியும் அப்படியே செய்கிறோம் என்று, (௩௩௭) "அஹோ த்வயஸ்ய மாஹாத்ம்யமஹோ வீர்யமஹோ பலம் - மந்த்ரரத்நம் சுபகரம் வேதஸாரம் ஸநாதநம் - ஸர்வபாபக்ஷயகரம் ஸர்வபுண்யவிவர்த்தநம் - ஸ்ரீகரம் லோகவச்யஞ்ச நித்யம் ஸம்ஸாரதாரணம்" (అహో ద్వయస్య మాహాత్మ్యమహో వీర్యమహో బలం - మన్త్రరత్నం శుభకరం వేదసారం సనాతనం - సర్వపాపక్షయకరం సర్వపుణ్యవివర్ధనం - శ్రీకరం లోకవశ్యంచ నిత్యంసంసారతారణం) என்கிறபடியே பாபஹரமுமாய், புண்யவர்த்தகமுமாய், சம்ஸாரபந்தத்தை யறுக்கவற்றாக மிகவும் ச்லாகிக்கப்பட்டு வேதசாரதமமாய், மாங்கல்யகர மந்த்ரரத்நமாகிற த்வயார்த்தத்தை ப்ரசாதித்தருளி, இன்னமும் சில அர்த்தவிசேஷங்களுண்டு, அவற்றை ஆளவந்தார் அபிமாநாந்தர்ப்பூதரான திருக்கோட்டியூர்நம்பி ஸ்ரீபாதத்திலேசென்று கேளுமென்றருளிச்செய்ய ; ராமாநுஜனும் அங்கேற வெழுந்

தருளி, திருக்கோட்டியூர் வாசிகளான "மாற்றிலிசோரிட்டுத் தேசவார்த்தைபடைக்கும்" அவர்களை நம்பி திருமாளிகை எங்கேயென்று கேட்டருள, அவர்களும் அப்பாலே தோன்றுகிற கூறையென்று காட்ட; அவ்விடங்தொடங்கி நம்பி திருமாளிகையளவும், தண்டனிட்டுக்கொண்டு எழுந்தருள, அப்போது அவ்வூரில் "குற்றமின்றிக்குணம்பெருக்கிக்குருக்களுக்கநுகூல" ரான சத்துக்கள் நம்பிப்ரபாவம் அறிந்தார்கள்; உடையவரும் நம்பி ஸ்ரீபாதத்திலே சென்று சாஷ்டாங்கப்ரணாமம் பண்ணி, தேவரீர் அடியேனுக்கு ரஹஸ்யார்த்த விசேஷங்களையெல்லாம் ப்ரசாதித்தருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய; அவரும் இவருடைய அத்யவசாய பாஹுள்யம் அறியவேணுமென்று "ஆருக்கென்சொல்லுகேன்" என்று முகங்கொடாமல் எழுந்தருளி யிருக்க; மீண்டு கோயிலேற வெழுந்தருளினார்.

பின்பு நம்பியுந்திருநாள்சேவிக்கவெழுந்தருளி, தம்மூரே திரும்பி எழுந்தருளுகிறவரை நம்பெருமாள் அருளப்பாடிட்டு, திருமாலை திருப்பரிவட்டம், தீர்த்த சடகோபனும் ப்ரசாதித்து நம்மிராமாநுஜனுக்கு ரஹஸ்யார்த்தவிசேஷம் உபதேசியுமென்றுஅர்ச்சகமுகேந நியமித்தருள; நம்பியும் (௩௩௮) "நாஸம்வத்ஸரவாஸிநே ப்ரப்ரூயாத்" (నాసంవత్సరవాసినే ప్రబ్రూయాత్)என்றும்,(௩௩௯)"இதந்தே நாதபஸ்காய" (ఇదం తే నాతపస్కాయ) என்றுதொடங்கி (௩௪0) "நசாஸுஸ்ரூஷவே வாச்யம்" (న చాశుశ్రూషవే వాచ్యం) என்று தேவரீர் நியமித்தருளித்தேயென்று விண்ணப்பஞ்செய்ய, பெருமாளும் அப்படியன்று (௩௪௧) "ஸரீரம் வஸு விஜ்ஞாநம்" (శరీరం వసువిజ్ఞానం) என்றுதொடங்கிச்சொல்லப்பட்ட சிஷ்யலக்ஷணபூர்த்தியுள்ளது உடையவருக்குச்சொல்லக்குறையில்லை என்றருளிச்செய்ய,நம்பியும்உடையவரைக்குறித்து ஊரேற வாருமென்று அருளிச்செய்து எழுந்தருளினார். பின்னை ராமாநுஜனும் திருக்கோட்டியூர்நம்பிசந்நிதிக்குச்செல்ல, அவரும் இற்றைக்குப்போய்வாருமென்ன, இவரும் கோயிலேற மீண்டெழுந்தருளினார். இப்படி பலகாலும் பதினெட்டுப்ப்ரகார மெழுந்தருளி ஸ்ரீபாதத்தில் சேவித்து நின்றவளவிலும் நம்பியும் இவருடைய த்ருடாத்யவசாய பரீக்ஷார்த்தமாக வொன்றும் அருளிச்செய்யாம லிருக்க, ராமாநுஜனும்; பெரிய ஆர்த்தியோடே மீண்டு, இணைமலர்க்கண்ணீர் ததும்பக் கோயிலேற வெழுந்தருளியிருந்தார். அவ்வளவிலே திருக்கோட்டியூர்நம்பி சிஷ்யரான ஒரு ஸ்ரீவைஷ்ணவர்வந்து நம்பெருமாளைச்சேவித்து, மீண்டு எழு

ந்தருளுகிறவர், உடையவர் ஸ்ரீபாதத்திலே சேவித்துநிற்க, அவருடனே தம்முடைய ஆர்த்தியெல்லாந்தோன்ற "பூந்துழாய்முடியார்க்குத்தகவல்ல, பொன்னாழிக்கையார்க்குத்தகவல்ல" என்று விண்ணப்பஞ்செய்து போகவிட்டருள; அந்த ஸ்ரீவைஷ்ணவரும் நம்பிதிருவடிகளிலேசென்று தண்டனிட்டு இச்செய்தியை விண்ணப்பஞ்செய்ய; நம்பியும் இத்தனை ஆர்த்தியுண்டாவதேயென்று உகந்தருளி, தண்டும் பவித்ரமுமாக தாம் ஒருவரோ வருவதென்று அவரையே மீண்டு ராமாநுஜன்பக்கல் போகவிட்டருள, ஸ்ரீவைஷ்ணவரும் உடையவர் திருவடியேறச்சென்று தண்டனிட்டு நம்பியருளிச்செய்ததை விண்ணப்பஞ்செய்ய, உடையவருங் கேட்டருளி, மிகவும் உகப்போடே அவரைதண்டனிட்டு, கூரத்தாழ்வானையும் முதலியாண்டானையுங் கூட்டிக்கொண்டு; அதி த்வரையோடே திருக்கோட்டியூரே சென்று, நம்பி திருவடிகளிலே தண்டன் சமர்ப்பித்துநிற்க, நம்பியும் உடையவரைப்பார்த்து உம்மை யொருவரையுமன்றோ வரச்சொன்னோம், இவர்களைக் கொண்டுவருவானென்னென்று கேட்டருள; உடையவரும்; தேவரீர் தண்டும் பவித்ரமுமாகவன்றோ வரச்சொல்லி யருளிற்று, இவர்களைத் தண்டும் பவித்ரமுமென்றே கூட்டிக்கொண்டு வந்தேனென்று விண்ணப்பஞ்செய்ய; நம்பியும் தண்டுஆர்? பவித்ரம்ஆர்? என்றுகேட்டருள;உடையவரும் முதலியாண்டானைக்காட்டி இவர் த்ரிதண்டம், கூரத்தாழ்வானைக் காட்டி இவர் பவித்ரம் என்று அருளிச்செய்ய; நம்பியும்; ஆகில் இவ்வர்த்தத்தை இவர்களுக்கொழிய மற்றொருவர்க்கும் சொல்லாதே கொள்ளும் என்று நியமித்தருளி, தம் பரமக்ருபையாலே (௯௪௨) "𑌪𑍍𑌰𑌣𑌵𑌾𑌦𑍍𑌯𑌂 𑌨𑌮𑍋𑌮𑌧𑍍𑌯𑌂 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌪𑌦𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑌮𑍍 - 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌮𑌷𑍍𑌟𑌾𑌕𑍍𑌷𑌰𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌕𑌰𑌂 𑌸𑌦𑌾 - 𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑍂𑌣𑌾𑌂 𑌸𑌦𑌾 𑌜𑌪𑍍𑌯𑌂 𑌭𑍁𑌕𑍍𑌤𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌫𑌲𑌪𑍍𑌰𑌦𑌮𑍍 - 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌾𑌨𑌾𑌂 𑌸𑌦𑌾 𑌜𑌪𑍍𑌯𑌂 𑌭𑌕𑍍𑌤𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌧𑌨𑌮𑍍" (ప్రణవాద్యంనమోమధ్యం నారాయణపదాన్తిమం - మన్త్రమష్టాక్షరంవిద్యాత్ సర్వసిద్ధికరంసదా - ముముక్షూణాంసదాజప్యంభుక్తిముక్తిఫలప్రదం - వైష్ణవానాంసదాజప్యంభక్తిజ్ఞానప్రవర్ధనం) என்கிறபடியே எட்டுத்திருவக்ஷரமாய், பதத்ரயாத்மகமாய், ஜ்ஞாநபக்திவைராக்ய ஜநகமாகையாலே முமுக்ஷுக்களான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு நாத்தழும்பெழுசதாநுசந்தேயமான "நலந்தரும்சொல்" என்கிற பெரிய திருமந்த்ரார்த்தத்தை ப்ரசாதித்தருளினார். ராமாநுஜனும் க்ருதார்த்தராய், அதின்மற்றைநாள் அவ்வூரில் எம்பெருமானை தெற்காழ்வான் திருவோலக்கத்திலே அநேகம் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அப்பரம ரஹஸ்யார்த்தத்தை யருளிச்செய்தருளினார்.

இச்செய்தியை நம்பி கேட்டருளி, உடையவரை அழைத்து, இந்தப் பரமரஹஸ்யார்த்தத்தை வேறொருவர்க்குஞ் சொல்லாதே யென்றன்றோ நாம் உமக்குச்சொன்னோம், இத்தை மறுத்து நீர் அநேகம் ஸ்ரீவைஷ்ணவர்களுக்குச் சொன்னீரென்று கேட்டோம் என்றுகேட்டருள; உடையவரும்; உள்ளது, தேவரீர் திருவடிகளை முன்னிட்டுக்கொண்டு சொன்னேனென்று விண்ணப்பஞ்செய்ய; நம்பியும், ஒருவர்க்குஞ் சொல்லவேண்டாவென்று நியமித்தன்றோ சொன்னோம், அத்தை மறுத்துச் சொன்ன உமக்குப் பலமேதென்று கேட்டருள, உடையவரும் ஆசார்யநியமநத்தை மறுத்த எனக்குநரகமேபலமென்று அருளிச்செய்ய, இத்தையறிந்திருந்தும் சொல்லுவானேனென்று கேட்டருள; ராமாநுஜனும், அடியேன் ஒருவனன்றோ நரகம் புகுவது, தேவரீர் திருவடிகளை முன்னிட்டுக்கொண்டு சொல்லுகையாலே இவ்வாத்மகோடிகளெல்லாம் தேவரீர் திருவடி சம்பந்தத்தாலே உஜ்ஜீவிப்பர்களென்று சொன்னேனென்று விண்ணப்பஞ்செய்ய, நம்பியும் இந்தப்பரஸம்ருத்தி நமக்குக்கூடிற்றில்லையென்று, இவர் பரஸம்ருத்திக்குப்போர உகந்தருளி, எம்பெருமானாரே ? வாருமென்று எடுத்தணைத்துக்கொண்டு, அவரோ நீரென்றருளிச்செய்து, இதுவரையில், இத்தர்ஶநம் பரமவைதிகஸித்தாந்தமென்றிருந்தது, இன்றுமுதல்எம்பெருமானார் தர்ஶநம்என்னுங்கோளென்று எல்லார்க்கும் அருளிச்செய்து, அந்த உகப்பின் மிகுதியாலே, வாரீர் எம்பெருமானாரே ! இன்னமொரு சரமரஹஸ்யார்த்த விசேஷஞ் சொல்லுவதாக இராநின்றோம், இவ்வளவிலே நீர் த்ருப்தராய் இராநின்றீர், உம்முடைய அத்யவசாயத்தைச் சொல்லிக் காணீரென்ன ; எம்பெருமானாரும் தேவரீர் அருளிச்செய்த அர்த்தத்துக்கு மேலே ஒரு அர்த்தம் உண்டென்றிருந்தேனாகில் அவிஶ்வாஸியாவேன்; கேளாதிருந்தேனாகில் அருளிச்செய்த அர்த்தம் நெஞ்சில் பட்டதில்லையாமென்று, இப்படி விண்ணப்பஞ் செய்யும் விரகறியாமல் ஶ்ரோதவ்யஸாபேக்ஷனாய் வ்யாகுலாந்தஃகரணனாய் இராநின்றேன் என்று விண்ணப்பஞ்செய்ய, நம்பியும்; இப்போது போய் ஏகாந்தமாய் நீர் ஒருவருமே வாருமென்று அருளிச்செய்ய, இவரும் கோயிலேற எழுந்தருளினார்.

பின்பு, எம்பெருமானார் ஒருவரே நம்பி ஸ்ரீபாதத்தேறச்சென்று தண்டன் சமர்ப்பித்துநிற்க, நம்பியும் இவர் திருக்கையைப் பிடித்துக்கொண்டு போய், ஏகாந்தமாக மேல்தளத்திலே ஏறி, படிக்கதவை விழவிட்டெழுந்தருளியிருந்து, ஒருவர்க்குஞ்சொல்லாதபடி திருவடிகளைத்தொடுவித்து, குளறவுகொண்டு, தம்முடைய நிர்ஹேதுக க்ருபையாலே (௯௪௯) ஸவ—ம—

ஹ்யதமம் பூய: ஶ்ருணு மே பரமம் வச: - இஷ்டோஸி மே த்ருடமிதி ததோ வக்ஷ்யாமி தே ஹிதம்" (సర్వగుహ్యతమం భూయః శృణు మే పరమం వచః - ఇష్టోసి మే దృఢమితి తతో వక్ష్యామి తే హితం) என்று கீதாசார்யன் அருளிச்செய்தாற்போலே, நம்பியும்; ஸர்வகுஹ்யதமமாய் பரமரஹஸ்யமான சரமஶ்லோகத்தையும் அருளிச்செய்து, அத்தால் ப்ரதிபாதிக்கப்படுகிற இதரோபாய த்யாகபூர்வகமான ஸித்தோபாயவைலக்ஷண்யத்தையும் ப்ரகாஶித்து, இந்தப் பரமரஹஸ்யார்த்தத்தை (௩௪௪) "இதம் தே நாதபஸ்காய நாபக்தாய கதாசந - நசாஶுஶ்ரூஷவே வாச்யம் நசமாம் யோப்யஸூயதி" (ఇదం తే నాతపస్కాయ నాభక్తాయ కదాచన - న చాశుశ్రూషవే వాచ్యం న చ మాం యోభ్యసూయతి) என்று சொல்லுகிறபடியே பகவத்விமுகர் முதலான நாஸ்திகர் செவிபடாதபடி பேணிக்கொண்டுபோரு மென்று நியமித்தருள; இவரும் அடியேன் அப்படிப்பட்டபேருக்குச்சொல்லக்கடவேனல்லன், பகவத்ப்ரவணரான கூரத்தாழ்வான் ஒருவர்க்கும்சொல்லாதிருக்கவொண்ணாதே என்று விண்ணப்பஞ்செய்ய, நம்பியும்; இவ்வர்த்தங்கேட்க அதிகாரமுண்டேயாகிலும் (௩௪௫) "ஸம்வத்ஸரம் ததர்த்தம் வா மாஸத்ரயமதாபி வா - பரீக்ஷ்ய விவிதோபாயை: க்ருபயா நிஸ்ப்ருஹோ வதேத்" (సంవత్సరం తదర్ధం వా మాసత్రయమథాపి వా - పరీక్ష్య వివిధోపాయైః కృపయా నిఃస్పృహో వదేత్) என்கிறபடியே பஹுப்ரகாரத்தாலும் அவருடைய அத்யவஸாயத்தை யறிந்து ஒருஸம்வத்ஸரம் ஶுஶ்ரூஷைகொண்டு சொல்லுமென்று நியமித்தருளினார்.

எம்பெருமானாரும்; "மாயனன்றோதிய வாக்கதனைக் கற்று; யதார்த்த ஜ்ஞாநமுடையராய், அர்ஜுநன் ஷட்கத்ரயத்தாலும் எடுப்புஞ் சாய்ப்புமாய்ப் போந்து, இவ்வர்த்தங்கேட்டு தரித்தாற்போலன்றிக்கே "மெய்ப்பெருவார்த்தை விஷ்ணுசித்தர் கேட்டிருப்பார்." என்கிறபடியே நிர்ப்பரராய், நிர்ப்பரத்வாநுஸந்தாநத்தாலே வந்த ப்ரீத்யுத்ருதியால் உண்டான ராஜகுல மாஹாத்ம்யத்தோடே புறப்பட்டுக் கோயிலிலே யெழுந்தருளினார்.

அநந்தரம் கூரத்தாழ்வானும்; எம்பெருமானார் ஸ்ரீபாதத்திலே தண்டனிட்டு நிற்க, அவரைப் பார்த்தருளி, ஆளவந்தார் நம்மை விசேஷகடாக்ஷம்பண்ணி பேரருளாளரை நோக்கி ப்ரபத்திபண்ணி யருளினது ஸபலமாம்படி நம்பி நம்மை வாழ்வித்தருளினார் கண்டீரோவென் றருளிச்செய்து, உடையவரும் ஆழ்வானைக்குறித்து; உமக்கு, முட்பட ஒருசம்வத்ஸரம் ஶுஶ்ரூஷைகொண்டு அத்யவஸாயபாஹுள்யத்தை யறிந்துசொல்லென்று நியமித்தருளினாரென்ன; ஆழ்வானும்; ஒருசம்வத்ஸரம் இச்சரீரத்திற்கு நிலையுண்டோ! இல்லையோவென்று வ்யாகுலாந்த:கரணராய் விசாரித்தருளி மெற்று

லல்லது தரியாத பேராசையாலே ஸம்வத்ஸர பரிக்ருஷாஸமம் ஆசார்யன் திருமாளிகைவாசலிலே மாஸோபவாசம் பண்ணவென்று ஶாஸ்த்ரம் உண்டாகையாலே அப்படிசெய்ய, உடையவரும் இரங்கி ப்ரசாதித்தருளினார்.

முதலியாண்டானும் எம்பெருமானார் திருவடிகளிலே தண்டன் சமர்ப்பித்து, அடியேனுக்கும் இவ்வர்த்தம் ப்ரசாதித்து அருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய; உடையவரும், ஆழ்வான் ஒருவனுக்குமே நம்பி ஸ்ரீபாதத்திலே விண்ணப்பஞ் செய்துகொண்டது, நீர் நம்பி ஸ்ரீபாதத் தேறப் போய்க் கேளுமென்று அருளிச்செய்ய; முதலியாண்டானும், திருக்கோட்டியூர் ஏறவெழுந்தருளி, நம்பி ஸ்ரீபாதத்திலே தண்டன் சமர்ப்பித்துக்கொண்டு ஆறுமாசம் நின்றவிடத்திலும் அவர் முகங்கொடாமலிருக்க, பின்பு ஆண்டானும் நம்பி திருவடிகளிலே சேவித்து நிற்க; அவரும் ராமாநுஜ பரிக்ருஹீதனைப்போலே யிருந்தாய் என்ன, அடியேன் தாஶரதி யென்ன, ஆகில் என்னென்று கேட்டருள; இவரும் சரமாஹஸ்யார்த்தம் அடியேனுக்கும் ப்ரசாதித் தருளவேணுமென்ற விண்ணப்பஞ்செய்ய; நம்பியும் (ஙசகு) "வித்யாமதோ தநமத ஸ்த்ருதீயோऽபிஜநோ மத: - ஏதே மதா வலிப்தாநாமேத ஏவ ஸதாம் தமா:" (విద్యామదో ధనమద స్తృతీయోఽభిజనో మదః - ఏతేమదా వలిప్తానామేతఏవ సతాందమాః) என்கிற இம்மூன்று குறும்பும்போனால், எம்பெருமானார் தாமே க்ருபைபண்ணி ப்ரசாதித்தருளுவர், அஞ்சாதே போமென்று தம் திருவடித் தாமரைகளை இவர் உத்தமாங்கத்தை பூஷிக்கும்படி ப்ரசாதித்து விடைகொடுத்தருளினார். முதலியாண்டானும், சமதமாத்யாத்மகுணங்களை மிகவுமுடையராய், கோயிலுக்கெழுந்தருளி, உடையவர் ஸ்ரீபாதத்தில் தண்டன்சமர்ப்பித்து, தம்முடைய ஆர்த்தியெல்லாந் தோன்ற, நம்பி யருளிச்செய்தபடியை விண்ணப்பஞ்செய்து சவிநயராய் நிற்க, உடையவரும் தம் சந்நிதி முதலிகளைப்பார்த்தருளி, ஆண்டான் நம்பிசந்நிதியில் ஸ்வரூபசிக்ஷை பெற்றுவந்த வேஷமிருந்தபடி பாருங்கோள் என்று அருளிச்செய்து, மிகவும் உகப்போடே ஆண்டானுக்கும் சர்வகுஹ்யதமமான சரமஶ்லோகார்த்தத்தை உபதேசித்தருளி, அதி சந்துஷ்டராய் இப்போதன்றோ நமக்குத் தண்டும் பவித்ரமும் கைப்புகுந்ததென்று அருளிச்செய்தருளினார்.

அநந்தரம், சிலநாள்களுக்குப் பின்பு, திருக்கோட்டியூர்நம்பி, கோயிலுக்கெழுந்தருளி, நம்பெருமாளை சேவித்து, புறப்பட்டு, திருமாலையாண்டானையும் அழைத்துக்கொண்டு எம்பெருமானார் மடமே யெழுந்தருளினவற்றே, உடையவரும் நம்பி ஸ்ரீபாதத்திலே சேவித்துநிற்க, அவரைக் கடா

கூறித்து, நீர் திருமாலையாண்டான் பக்கலிலே திருவாய்மொழிக்கர்த்தங்கேளு மென்று உடையவரைத்திருமாலையாண்டான் திருக்கையிலே காட்டிக்கொடுத் தருளி, தாம் மீண்டு திருக்கோட்டியூரேற வெழுந்தருளினார்.

திருமாலையாண்டானும், நம்பி யருளிச்செய்தருளினாற்போலே திரு [illegible]த்தொடங்கி நடவாநிற்க, ஆளவந்தார் அருளிச்செய்தபடி ஆண் டான் [illegible]றித்தமொழிய, பாட்டுக்கள்தோறும் சில அர்த்த விசேஷங்களை ப்ரதிபாதித்து உடையவர் அருளிச்செய்ய ; இது ஆளவந்தார் அருளிச்செய் யக் கேட்டறியோம் என்று ஆண்டான் அருளிச்செய்தருளி ; "அறியாக் காலத்துள்" என்கிறபாட்டுக்கு, அறிவுநடையாடாத தசையிலே சம்பந்த ஜ்ஞாநத்தைப் பிறப்பித்து, பிறந்த ஜ்ஞாநத்தை யழிக்கக்கடவதான தேஹ சம்பந்தத்தோடே பின்னையும் வைத்தாய் என்கிற இழவாலே அருளிச்செய் கிறார் என்று திருமாலையாண்டான் அருளிச்செய்ய, உடையவரும் கேட்ட ருளி, முன்னில் பாட்டுகளும், பின்னிற் பாட்டுகளும் பெரிய ப்ரீதியோடே நடவாநிற்க, நடுவே அப்ரீதிதோன்றச்சொல்லுவது சேராதாகையாலே இங் ஙனேயாமித்தனை:— "அறியாமாமாயத்தடியேனை - அறியாக்காலத்துள்ளே- அடிமைக்கணன்புசெய்வித்து வைத்தாயால்" என்று அருளிச்செய்கிறார் எ ன்று இத்தையும் ஒரு உபகாரஸ்ம்ருதிபரமாக்கி அருளிச்செய்தவாறே, இது விஶ்வாமித்ர ஸ்ருஷ்டி, ஆளவந்தார் அருளிச்செய்யக் கேட்டறியோமென்று திருவாய்மொழிக் கருளிச்செய்கை தவிர்ந்தார். இத்தைத் திருக்கோட்டியூர் நம்பி கேட்டருளி, கோயிலிலே திருமாலையாண்டான் பக்கல் எழுந்தருளி, திருவாய்மொழி நடக்கிறதோவென்று கேட்டருள, ஆண்டானும் அடியேன் ஆளவந்தார் பக்கல் கேட்ட அர்த்தமொழிய இவர் வேறே சில அர்த்தங்களை ஸ்வகல்பிதமாகச் சொல்லுகையாலே தவிர்ந்தேன் என்ன, நம்பியும் அவர் சொன்ன அர்த்தம் ஏதென்ன, ஆண்டானும்; "அறியாக்காலத்துள்ளே" என்கிறபாட்டுக்கு உபகாரஸ்ம்ருதியாகவேணுமென்கிறார் என்ன, அவ்வர்த் தமும் ஆளவந்தார் அருளிச்செய்ய நாம் கேட்டிருக்கோமென்று நம்பி அரு ளிச்செய்து, சாந்தீபன்பக்கலிலே க்ருஷ்ணன் வேதாத்யயநம் பண்ணினாற் போலேகாணும் உம்முடைய பக்கலிலே எம்பெருமானார் திருவாய்மொழி கேட்கிறதும், ஆளவந்தார் திருவுள்ளத்திலுள்ள அர்த்தமொழிய இவர்க்கு வேறே ப்ரகாசியாதுஎன்றிரும், இவர்க்கு நீர் அஜ்ஞாதஜ்ஞாபநம் பண்ணுகி றோமென்றிராதே கொள்ளுமென்று அருளிச்செய்து, நம்பி, திருமாலையாண் டானையும் பெரிய நம்பியையுங் கூட்டிக்கொண்டு எம்பெருமானார் மடமே யெழுந்தருளினார். உடையவரும் அதிப்ரீதியுடனே தாளுந் தடக்கையுங்

கூப்பி இவர்கள் திருவடிகளிலே சேவித்துநிற்க, திருவாய்மொழிவிட்ட தறுவாய்தொடங்கி நீரே பலகாலம் அநுவர்த்தித்தேயாகிலும் ப்ரபந்தத்தைத் தலைக்கட்டுமென்று ஆண்டானுக் கருளிச்செய்தார்கள். பின்னையுந் திருவாய்மொழிதொடங்கி நடவாநிற்கச்செய்தே, மீண்டும் ஒரு அர்த்த ப்ரஸ்தாபத்திலே ஆண்டான் ப்ரதிபாதித்த அர்த்தங்கேட்டு, ஆளவந்தார் இப்படி அருளிச்செய்யார் என்று உடையவர் விண்ணப்பஞ்செய்ய, ஆண்டானும் நீர் ஆளவந்தாரைக் கண்ணாலும் காணாதிருக்க, இப்படி யருளிச்செய்யார் என்கைக்கு நிதாநம் ஏதென்று கேட்டருள, உடையவரும் நான் ஆளவந்தார்க்கு ஏகலவ்யனன்றோ வென்று விண்ணப்பஞ்செய்ய, ஆண்டானும், திருக்கோட்டியூர்நம்பி நமக்குரைத்தது தோற்றிற்று, இதுவும் ஒருதிருவவதாரம், ஆளவந்தார் பக்கல் கேளாத அர்த்தமெல்லாம் இங்கே கேட்டோம் என்று இவரைத் தண்டனிட் டருளினார். பின்பு எம்பெருமானார் திருவாய்மொழி சாத்தி போர ப்ரீதராயிருக்க, அவரையும் பார்த்து, பெரியநம்பியும் ஆழ்வார் திருவரங்கப்பெருமாளரையர் பக்கலிலே இன்னமொரு அர்த்தவிசேஷமுண்டு, அத்தை அவர்பக்கலிலேகேளுமென்று அருளிச்செய்தருள, உடையவரும், அது லபிக்கைக்காக அன்றுமுதல் ஆறுமாதம் அவருக்கு உகப்பாகப்பாலமுதுகாய்ச்சி சமர்ப்பித்தும், திருவத்யயந காலங்களிலே அரையர் திருமேனிக்கு அநுரூபமாக மஞ்சட்காப்பு அரைத்து சமர்ப்பித்தும் அநுவர்த்தித்துப் போருங்காலத்திலே, ஒருநாள் மஞ்சட்காப்பரைத்து நீராட்டப் பண்ணுகிறகாலத்திலே, அவர் திருமேனிக்கு அநுகுணமல்லாமல் இருக்கிறபடியை அவர் திருமுகமண்டல விகாரத்திலே கண்டு, மஞ்சட்பாத்ரத்தைக் கடக்கவைத்து, வேறே பாங்காக மஞ்சட்காப்பரைத்துசாத்தி நீராட்டப்பண்ணியருள, திருவரங்கப் பெருமாளரையரும் அத்தைக்கண்டு, மிகவுந் திருவுள்ளமுகந்தருளி, உடையவரைக்குறித்து, என்னுடைய ஸர்வஸ்வத்தையுங் கொள்ளைகொள்ளவோ நீர் இப்படி செய்ததெ[illegible]செய்து, வாரீர் எம்பெருமானாரே, உமக்கொரு சரமபுருஷார்த்த[illegible] கேளீரென்று, தேவுமற்றறியாத ஸ்ரீமதுரகவிகளைப்போலே நீரும் (கூசள) "குருரேவ பரம் ப்ரஹ்ம குருரேவ பரந்தநம் - குருரேவ பரங்காமோ குருரேவ பராயணம் - குருரேவ பராவித்யா குருரேவ பராகதி: - யஸ்மாத்ததுபதேஷ்டாஸௌ தஸ்மாத்குருதரோ குரு:" (గురురేవ పరంబ్రహ్మ గురురేవ పరంధనం - గురురేవ పరంకామో గురురేవ పరాయణం- గురురేవ పరావిద్యా గురురేవ పరాగతిః - యస్మాత్తదుపదేష్టాసౌ తస్మాద్గురుతరో గురుః) என்றுசொல்லுகிறபடியே, தீமனங்கெடுத்தும், மருவித்தொழுமனமே தந்தும்,

அறியாதனவறிவித்த, ஆசார்யனே உபாயோபேயமென்று விஸ்வஸித்து, (ருசஅ) "ஆசார்யஸ்ஸ ஹரிஸ்ஸாக்ஷாச்சரரூபீ ந ஸம்ஸய:" (ఆచార్యస్స హరిస్సాక్షాచ్చరరూపీ న సంశయః) என்றும், "பீதகவாடைப்பிரானார் பிரமகுருவாகிவந்து" என்றும் சொல்லுகிறபடியே, உறங்கும்பெருமாள்தானேஉலாவும் பெருமாளாய்வந்தார் என்றிருமென்று பஞ்சமோபாய நிஷ்டையான சரம பதார்த்த விசேஷத்தை ப்ரசாதித்தருளினார்.

பெரியநம்பி ஸ்ரீபாதத்திலே ஆஸ்ரயித்தபோதே, ஸ்வரூபஸித்தி யுண்டாயிருக்க, இவர், பலர் ஸ்ரீபாதத்திலும் உபதேசங்கேட்கைக் கடியென், அவர்கள் தாமே மேல்விழுந்து அர்த்தங்களை உபதேசிக்கைக்கடியென், என்னில், ஒருராஜா ஸ்வகுமாரார்த்தமாக பலமந்த்ரிகளிடத்தே நிதிகளைவைத்து, குமாரன் ப்ராபுத்தனானவாறே கொடுக்கச்சொல்லிப் போமாபோலே, ஆளவந்தாரும் இவர்களிடங்களிலே ஓரோ அர்த்தவிசேஷங்களை உபதேசித்து வைக்கையாலே, ஆளவந்தார் ஸ்ரீபாதத்திலே சேவித்து அவ்வர்த்தங்களைப் பெறாத இழவுதீர, இவர்கள்பக்கல் இவ்வர்த்தங்களைப் பெற்று இழவுதீர்ந்தாரித்தனை. இனி இவ்வாசார்யர்களும் ஆளவந்தார் ஆமுதல்வனென்று கடாக்ஷித்து, இளையாழ்வாருக்கு, நாம் உங்களுக்குச் சொல்லும் பரமரஹஸ்யத்தைச் சொல்லுங்கோளென்று நியமித்தருளுகையாலும், சிஷ்யனாகிலுமாம், ஆசார்யனாகிலுமாம், விலக்ஷணசம்பந்தமே வேண்டுவதென்று மேல்விழுந்து உபதேசித்தார்கள். ஆகையாலே முன்புள்ள ஆசார்யர்கள் இவர்க்கு ஆசார்யர்களாய் வீறுபெற்றார்கள். பின்புள்ளவர்கள் இவர்க்கு சிஷ்யர்களாய் ஸ்வரூபம் பெற்றார்கள். ஒரு ஹாரத்தின் நடுவே மாணிக்கங் கிடந்து, அந்த ஹாரத்தை சோபிதமாக்குமாபோலே, இடையே ராமாநுஜமுநியாய் விளங்குகின்றாரிறே.

உடையவர், கத்யத்ரயமும் நித்யதிருவாராதநப்படியும் அருளிச்செய்து, பரப்ரஹ்மம் ஸ்ரீமந்நாராயணன் என்று அறுதியிட்டு, தர்ஸநப்ரவர்த்தநம் பண்ணிக்கொண்டு போருகிறகாலத்திலே, எம்பெருமானார் ஏழகம்மாதுகரம்பண்ணி அமுதுசெய்தருளுகிற காலத்திலே, ஸ்த்தாநத்துறையை நெருக்கிக்கொண்டுபோர, அவர்களிலே ஒருவர் இவர் மாதுகரம் பண்ணுகிறவிடத்திலேவிஷமிஸ்ராந்நத்தைப் ப்ரயோகிக்கும்படி நியமித்துவைக்க, அந்த க்ருஹஸ்தரும், ஸ்வஸ்த்ரீயை ப்ரேரிக்க, அவளுங்கூடாதென்ன, அவனும் நிர்ப்பந்திக்க, அவளும் விஷமிஸ்ராந்நத்தை மடித்து ஸமர்ப்பித்து தண்டனிட்டுப்போக, அவரும் இதென்னென்று திகைத்து, பாவமறிந்து, ஸகராந்நத்தை ஸாகரகாமிநியான திருக்காவேரியிலே கரைத்துவிட்டு உபவாஸிதராயிருக்க,

இச்செய்தியை திருக்கோட்டியூர்நம்பி கேட்டருளி, கோயிலுக்கெழுந்தருளாநிற்கச்செய்தே, மத்யாஹ்நகாலத்திலேதிருக்காவேரியிலே எழுந்தருளாநிற்க, உடையவரும் முதலிகளுமாக வெழுந்தருளி, நம்பி ஸ்ரீபாதத்திலே தண்டனிட்டுக்கொண்டு கிடக்க, நம்பியும், அவரை யெழுந்திருக்கச் சொல்லாமலிருக்க, கிடாம்பியாச்சானும் இதென்ன சிஷ்யாசார்ய க்ரமந்தான் ? கருமுகை மாலையை வெய்யிலிலே போகடுவார்களோ என்று பரிந்தெடுக்க, நம்பியும், உம்மைக்காணும்தேடுகிறோம்,இன்றுமுதல் இவர்தளிகைக்குப்பண்ணி, ஏகமாத்ரகரமாக ப்ரசாதியுமென்று நியமித்தருளி, திருமேனிக்குப் பரிவர் நீர் என்று நியமித்தருளினார். கிடாம்பியாச்சானும் அப்படியே பண்ணிக்கொண்டெழுந்தருளியிருந்தார்.

பின்பு, யஜ்ஞமூர்த்தியென்று ஒரு ப்ராஹ்மணன், கங்காஸ்நாநத்துக்குப்போய், அங்கே ஸ்நாநம்பண்ணி, அங்குள்ள வித்வான்களையுந் தர்க்கித்து ஜயித்து, அங்கே மாயாவாத சந்யாஸத்தையும் பரிக்ரஹித்து, வித்யையாலும், சிஷ்யசம்பத்தாலும் மிகுத்தவனாயிராநிற்க, அவனும் அங்கே உடையவருடைய வைபவத்தைக்கேட்டு, நாம் அங்கேறப்போய் அவருடனே தர்க்கிக்கவேணுமென்று அநேக சாஸ்த்ரங்களையும் எழுதிக்கொண்டு, க்ரந்தங்களையும் சுமை சுமையாகக் கட்டி யெடுப்பித்துக் கொண்டு, தன் வித்யாகர்வமெல்லாந்தோற்ற, பெரியமதிப்புடனே, அதித்வரையிலே கோயிலேறவந்து உடையவரைப்பார்த்து, என்னுடன் தர்க்கிக்கவேணுமென்ன, இவரும் அப்படியே செய்கிறோம் நீ தோற்றால் என்செய்கிறாயென்ன, அவனும் நான் தோற்றேனாகில் உம்முடைய பாதரக்ஷையை சுமந்து, உம்முடைய பேரையுமிட்டுக்கொண்டு, உம்முடைய சித்தாந்தத்திலே புகுரக்கடவேனென்ன, உடையவரும், நாம் தோற்றோமாகில் க்ரந்த ஸந்யாஸம்பண்ணி, தோற்றேன் என்கிறேன் இத்தனையென்ன, அவனும் சம்மதித்து, இப்படி அந்யோந்யம் ப்ரதிஜ்ஞைபண்ணிக்கொண்டு, பதினெட்டுநாள் அவதியுமிட்டு நிஶ்சயித்து, இருவரும் ஒருவர்க்கொருவர் தோலாமல் மத்தகஜங்கள் பொருமாபோலே தர்க்கிக்க, இப்படி பதினேழுநாள் ஒருவர்க்கொருவர் தோலாமல் தர்க்கித்து, அவனை ஜயிக்கப்போகாதபடியாலே, பதினேழாநாள் அவனுடைய யுக்திப்ரபலமாக, இவரும் இதுக்குமேல் ஒன்றுந் தோன்றாதபடிநிற்க, அவ்வளவிலே அவனும் தன்வெற்றிதோற்றவெழுந்திருந்து,அற்றைக்கனுப்பிப்போக, ராமாநுஜரும், வ்யாகுலாந்தஃகரணராய், மடமே எழுந்தருளி, தம் திருவாராதநமான பேரருளாளரையுந் திருவடிவிளக்கி, அமுதுசெய்யப்பண்ணி, பெருமாளுடன் வெறுத்து, பெருமாளே இத்தனைகாலம் ஆழ்வார்தொடங்கி ஆள

வந்தார் அளவாக, ஓரான்வழியாய் சுப்ரதிஷ்ட்டிதமாய் வந்த இத்தர்சநம்
அடியேனைத்தோற்றித் தோற்கக்கடவதோ, இந்நாள் தேவரீர் ஸ்வரூபரூப
குணவிபூதிகளை சத்யமென்று ப்ரமாணத்தை நடத்திக்கொண்டு போந்தீர்,
இப்போது இவன் ஒரு ம்ருஷாவாதியைக் கொண்டுவந்து என்னுடைய கா
லத்திலே எல்லா ப்ரமாணங்களையும் அழித்துப்புகட்டு லீலைகொண்டாடத்
திருவுள்ளமாகில் அப்படியே செய்தருளவென்று விண்ணப்பஞ் செய்து,
தாமும் அமுதுசெய்யாமல் கண்வளர்ந்தருள, பேரருளாளரும் இவர் ஸ்வப்
நத்திலேயெழுந்தருளி, இளையாழ்வீர் ? நீர்முசிப்பானேன், உமக்கு, சமர்த்த
னாயிருப்பா னொரு சிஷ்யனை யுண்டாக்கித் தந்தோங்காணும், உம்முடைய
பரமாசார்யரான ஆளவந்தார் அருளிச்செய்த மாயாவாத கண்டநத்தைச்
சொல்லி, அவனை ஜயியும் என்றருளிச்செய்தருள, உடையவரும் வெடிவோ
னை திருநாமோச்சாரணம் பண்ணி எழுந்திருந்து, திருக்கண்களை விழித்து
இதொரு ஸ்வப்நமிருந்தபடி யென்னென்று மிகவுந்திருவுள்ளமுகந்து, ஸ்வ
ப்நத்தில் அருளிச்செய்த யுக்தியை திருவுள்ளத்திலேகொண்டு எழுந்தருளி
யிருந்து, சந்தோஷத்துடன் நித்யகர்மாநுஷ்ட்டாநஞ் செய்தருளி, தந்திரு
வாராதநமான பேரருளாளனையுஞ் சேவித்துப் புறப்பட்டு, ப்ரசந்ந கம்பீ
ராய்க்கொண்டு தர்க்ககோஷ்ட்டியிலே யெழுந்தருள, அவனும், உடையவர்
எழுந்தருளுகிற காம்பீர்யத்தையும் சந்தோஷத்தையுங்கண்டு, திடுக்கென்று
பாவஜ்ஞாந வித்வானாகையாலே, இவர் நேற்று எழுந்தருளும்போது இங்கு
நின்றும் சோம்பிக்கொண்டுபோனார், இப்போது மத்தகஜம்போலே இங்கே
வாராநின்றார், ஆகையாலே இது மாநுஷமன்று, அதிமாநுஷ சேஷ்டிதமா
யிராநின்றதென்று நிஶ்சயித்து, சடக்கென எழுந்திருந்து எதிரே சென்று,
உடையவர் திருவடிகளிலே சேவித்து, தேவர்க்குத் தோற்றேனென்று ஸ்ரீபா
தரக்ஷைகளையும் எடுத்துக்கொண்டு, அடியேனை இரங்கி யருளவேணுமெ
ன்ன, உடையவரும், இதென்னென்று திகைத்து, தர்க்கிக்கலாகாதோவென்
ன, அவனும் உடையவரைக்குறித்து, தேவர்க்குப் பெரியபெருமாள் ப்ரத்ய
க்ஷமானபின்பு, தேவரென்ன, பெரியபெருமாளென்ன, பேதமில்லையென்று
அறிந்தேன், இனி அடியேன் தேவர் சந்நிதியில் வாய்திறந்து ஒருவார்த்தை
சொல்ல ப்ராப்தியில்லையென்ன, உடையவரும் உகந்தருளி, ஆகிலும், நீர்
சொன்ன மாயாவாத கண்டநத்திலும், ப்ரஹ்மம் நிர்க்குணமென்கையாலே
அந்த ப்ரஹ்மத்திற்கு, சத்யத்வாதி குணயோகங்களைச் சொல்லுகிற வேத
வாக்யங்கள் அப்ரமாணமாய்விடும், அவித்யாதிரோஹிதமானப்ரஹ்மத்திற்கு
குணயோக முண்டாகையாலே ஸகுணஶ்ருதியில் விரோதம் இல்லையென்றீ

ாகில் அது கூடாது, எங்ஙனேயென்னில் (௱௪௯) "ஜ்ஞாநரூபம் பரம் ப்ரஹ்ம தந்நிவர்த்யம் ம்ருஷாத்மகம் - அஜ்ஞாநஞ்சேத் திரஸ்குர்யாத் க: ப்ரபுஸ் தந்நிவர்த்தநே" (జ్ఞానరూపం పరంబ్రహ్మ తన్నివర్త్యంమృషాత్మకం- అజ్ఞానంచేత్తిరస్కుర్యాత్ కఃప్రభుస్తన్నివర్తతే) என்கிறபடியே ஜ்ஞாநரூபமா யிருக்குள்ள பரப்ரஹ்மத்தை அஜ்ஞாநரூபமான அவித்யை மறைத்ததாகில் அந்த அவித்யைக்கு நாசமில்லையாகையாலே அது நித்யமாய்விடும், அப்படியாகி லென்னென்னில், அவித்யை என்றும், ப்ரஹ்மம் என்றும் இரண்டுவஸ்து உண்டாகையாலே, அத்வைதமென்கிற மஹாகஜம் த்வைதமாகிற ஆழங்காலிலே அமிழ்ந்தது, இத்யாதி யுக்திகளை யருளிச்செய்ய, அவனும் இசைந்து, இவர்க்குத் தோற்று, ஏகதண்டத்தை முறித் தெறிந்துவிட்டு, எம்பெருமானார் திருவடிகளிலே சாஷ்டாங்க ப்ரணாமம் பண்ணிக்கொண்டுகிடக்க, எம்பெருமானாரும், தம் திருவடிமலர்களாலே அவன்முடியை சோபிதமாக்கி, எடுத்தணைத்துக்கொண்டு மிகவும் க்ருபைசெய்தருள, அவனும் அடியேனுக்கு த்ரிதண்டகாஷாயாதிகளை ப்ரசாதித்து அருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய, உடையவரும் அப்படியே செய்கிறோமென்று திருவுள்ளம்பற்றி, முன்பு சிகாயஜ்ஞோபவீத த்யாகம்பண்ணினதாகையாலே அதற்கு ப்ராயச்சித்தம்பண்ணவேணுமென்று (௱௫௦) "ஹீநோ யஜ்ஞோபவீதேந யதி ஸ்யாத் த்யாநதீக்ஷக: - தஸ்ய க்ரியா நிஷ்பலாஸ்ஸ்யு: ப்ராயச்சித்தம் விதீயதே - காயத்ரீஸஹிதாமேவ ப்ராஜாபத்யாந் ஸமாசரேத் - புநஸ்ஸம்ஸ்காரமாஹ்ருத்ய தார்யம் யஜ்ஞோபவீதகம்" (హీనోయజ్ఞోపవీతేన యదిస్యాద్ధ్యానదీక్షకః- తస్యక్రియానిష్ఫలాస్స్యుః ప్రాయశ్చిత్తంవిధీయతే - గాయత్రీసహితామేవ ప్రాజాపత్యాన్ సమాచరేత్ - పునస్సంస్కారమాహృత్యధార్యంయజ్ఞోపవీతకం) என்கிறபடியே சாஸ்த்ரோக்த ப்ரக்ரியையாலே ப்ராயச்சித்தமும் பண்ணிவைத்து, சிகாயஜ்ஞோபவீதங்களையுந் தரிப்பித்து (௱௫௧) "ப்ரதார்யம் தாபஸம்ஸ்காரம் வைஷ்ணவம் முநிபிஸ் ஸ்ம்ருதம் - ஸர்வாச்ரமோபபந்நாநாம் ஸ்த்ரீசூத்ராணாம் த்விஜோத்தம" (ప్రధార్యంతాపసంస్కారం వైష్ణవంమునిభిస్స్మృతం- సర్వాశ్రమోపపన్నానాం స్త్రీశూద్రాణాంద్విజోత్తమ) என்கிறபடியே த்ரிதண்டகாஷாயாதிகளை நீர் உள்ளதனையுந் தரியுமென்று ப்ரசாதித்தருள, அந்த உகப்பின் மிகுதியாலே, பேரருளாளர் தமக்கு ஸ்வப்நமுகேந அருளிச்செய்தருளின உபகாரத்திற்கு இவர் தமக்கு ஜ்ஞாநபுத்ரராகையாலே அருளாளப்பெருமாளெம்பெருமானார் என்று திருநாமஞ்சாற்றி யருளினார்.

அநந்தரம், அவரையும் அழைத்துக்கொண்டுபோய், நம்பெருமாளையுஞ் சேவிக்கப்பண்ணி, தீர்த்தப்ரஸாதமும், ஸ்ரீசடகோபனும் ப்ரஸாதிப்பித்து, புறப்பட்டு மடமேபோய், தம்திருவாராதநமான பேரருளாளரை சேவிக்கப்பண்ணிவைத்து, இவர்காணும் உம்மை நம்பக்கல் சேர்த்தருளினவரென்று அருளிச்செய்து, அவரை திருவாராதநம்பண்ணி அமுதுசெய்வித்து, தாமும் அமுதுசெய்து, இவர்க்குத் தளிகை ப்ரஸாதமும் ப்ரஸாதித்தருள, அவரும் அமுதுசெய்து, ஸஹ்ருதயராய் வாழ்ந்துகொண் டிருக்குங்காலத்திலே, உடையவர் இவரைப்பார்த்து, வாரீர், அருளாளப்பெருமாளெம்பெருமானாரே, ஆழ்வார்கள் அருளிச்செய்த திவ்ய ப்ரபந்தங்களை ஓதீரென்று அருளிச்செய்து, திருப்பல்லாண்டு தொடங்கி நாலாயிரமும் ஓதுவித்து, வேண்டும் தத்வஸிக்ஷைகளையும் ப்ரஸாதித்தருளினார்.

அநந்தரம், உடையவர், ஆழ்வான் ஆண்டான் அருளாளப்பெருமானெம்பெருமானாரையுங் க்ருபை பண்ணிக்கொண்டு, வித்வத்கோஷ்டியாக நடக்குங்காலத்திலே ஆசார்யர்களெல்லாரும் வந்து உடையவர் திருவடிகளிலேஆஶ்ரயிக்க, இத்தைக்கேட்டுஅநந்தாழ்வானும், எச்சானும், தொண்டனூர் நம்பியும், மருதூர்நம்பியும், உடையவர் திருவடிகளிலே ஆஶ்ரயிக்கவேணுமென்று எழுந்தருளினார்கள், அவர்களை, அருளாளப்பெருமானெம்பெருமானார் ஸ்ரீபாதத்திலே ஆஶ்ரயிப்பித்தருளினார். அவரும் பீதராய், அவர்களைக்குறித்து, உடையவர் குருவியின்கழுத்திலேபனங்காயைக்கட்டினாற்போலே செய்தார். நீங்கள் எம்பெருமானார் திருவடிகளே தஞ்சமென்றிருங்கோளென்று அருளிச்செய்தருளினார்.

பின்பு, அமர்சுவையாயிரமான திருவாய்மொழிக்கு அர்த்தமருளிச்செய்துகொண்டு திவ்யகோஷ்டியாக எழுந்தருளி யிருக்கிறவளவிலே, “ஒழிவில்காலமெல்லாமுடனாய்மன்னி” என்கிற திருவாய்மொழிநடவாநிற்க “சிந்துபூமகிழுந்திருவேங்கடம்” என்கிறவிடத்திற்கு அர்த்த மருளிச்செய்கிறவர், முதலிகளை முகம்பார்த்தருளி, புஷ்பமண்டபமான பெரிய திருமலையிலே, திருவேங்கடமுடையானுக்கு உகப்பாகத்திருநந்தவநஞ்செய்து, திருமாலைசாத்துவார் உண்டோவென் றருளிச்செய்தருள, அவ்வளவிலே அநந்தாழ்வான் எழுந்திருந்து, அடியேன் விடைகொள்ளுகிறே னென்று விண்ணப்பஞ்செய்து தண்டன் சமர்ப்பித்து, திருமலைக்கெழுந்தருளி, திருவேங்கடமுடையானையுந் திருவடிதொழுது, திருநந்தவநஞ்செய்து, அத்திருநந்தவநத்திற்கு ராமாநுஜனென்று திருநாமம் சார்த்தி, திருமாலைகட்டி திருவேங்கடமுடையானுக்கு சமர்ப்பித்துக்கொண்டு எழுந்தருளி யிருக்கிறப

டியை, உடையவருங்கேட்டு உகந்தருளி, திருவாய்மொழிப்ரபந்தார்த்தத்தை திவ்ரமாகச்சாத்தியருளினார். பின்பு, உடையவரும் நம்பெருமாளைச்சேவித்து, அடியேன் பேரருளாளரையும், திருவேங்கடமுடையானையுந் திருவடிதொழுதுமீண்டுவிடைகொள்ளுகிறேனென்று விண்ணப்பஞ்செய்ய; போய், சடுக வருவதென்று திருவுள்ளமாயருள; உடையவரும், முதலிகளுடன் புறப்பட்டு, திருக்கோவலூராழ்வார்கள் நகரையுஞ்சேவித்து, பெருமாள்கோயிலேற வெழுந்தருளி, திருக்கச்சிநம்பி மடமேசென்று, (௩௫௨) "𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍍𑌕𑌾𑌞𑍍𑌚𑍀𑌮𑍁𑌨𑌿𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌕𑌮𑌲𑌾𑌪𑌤𑌿𑌨𑌨𑍍𑌦𑌨𑌂-𑌵𑌰𑌦𑌾𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌸𑌦𑌾𑌸𑌙𑍍𑌗 𑌰𑌸𑌾𑌯𑌨𑌪𑌰𑌾𑌯𑌣𑌂" (శ్రీమత్కాంచీమునిం వన్దే కమలాపతినన్దనం-వరదాంఘ్రిసదాసంగ రసాయనపరాయణం) என்று விண்ணப்பஞ் செய்துகொண்டு, நம்பி திருவடிகளிலே தண்டஞ் சமர்ப்பித்துக்கொண்டு நிற்க, அவருங் க்ருபைபண்ணியருள; அவருடனேகூடவெழுந்தருளி, அவர் புருஷகாரமாக ஸ்ரீகோபுரராஜனையுஞ்சேவித்து, ஆனைகாத்த பெருமாளையுஞ் சேவித்து, புகுந்து (௩௫௩) "𑌮𑌹𑌾𑌵𑌰𑌾𑌹𑌂 𑌦𑍇𑌵𑍇𑌶𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌕𑌾𑌮𑍌𑌰𑌸𑌾𑌤𑌲𑌾𑌤𑍍, 𑌨𑌿𑌤𑍍𑌯𑌯𑌾𑌯𑌤𑍍𑌰 𑌭𑌗𑌵𑌾𑌨𑌨𑌨𑍍𑌤𑌃 𑌪𑌨𑍍𑌨𑌗𑍇𑌶𑍍𑌵𑌰𑌃, 𑌤𑍀𑌰𑍍𑌥𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌮𑌹𑌾𑌪𑍁𑌣𑍍𑌯𑍇 𑌸𑌿𑌦𑍍𑌧𑌸𑌙𑍍𑌘𑌨𑌿𑌷𑍇𑌵𑌿𑌤𑍇, 𑌸𑍍𑌨𑌾𑌤𑍍𑌵𑌾 𑌤𑌾𑌨𑌿𑌤𑍀𑌰𑍍𑌥𑌾𑌨𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌮𑍁𑌨𑌿𑌭𑌿𑌸𑍍𑌤𑌦𑌾" (మహావరాహం దేవేశం దృష్ట్వా కామౌరసాంతలాత్. నిత్యయాయత్రభగవాననన్తః, పన్నగేశ్వరః, తీర్థేఽస్మిన్మహాపుణ్యే సిద్ధసంఘనిషేవితే, స్నాత్వా తానితీర్థాని సర్వాణిమునిభిస్తదా) என்று சொல்லப்பட்ட மஹாத்ம்யத்தையுடைய திருவனந்த ஸரஸ்ஸிலேநீராடி, கேசவாதி திருநாமங்களையுஞ் சாத்தியருளி "எயிறிடை வையமுற்று மேனத்துருவாயிடந்த ஞானப்பிரானையும்" சேவித்து, ப்ரதக்ஷிணமாக வெழுந்தருளி ஆழ்வார்களையுஞ் சேவித்து, ஸ்ரீபலிபீடத்தையுந் தண்டனிட்டு, ஜய விஜயர்களையும் சேவித்து, ப்ரதக்ஷிணமாக வெழுந்தருளி, திருவனந்தாழ்வானையுஞ் சேவித்து, திருப்புற்றுத்திருக்கழலடியிலேயும் தண்டனிட்டு, அதற்குக்கிழக்காகத் தம்மை விசேஷ கடாக்ஷம் செய்தருளின யமுனைத் துறைவர் திருமுற்றத்திலே (௩௫௪) "𑌨𑌮𑍋𑌨𑌮𑍋 𑌯𑌾𑌮𑍁𑌨𑌾𑌯 𑌯𑌾𑌮𑍁𑌨𑌾𑌯 𑌨𑌮𑍋𑌨𑌮𑌃" (నమోనమో యామునాయయామునాయ నమోనమః) என்று அநுசந்தித்து தண்டஞ் சமர்ப்பித்து, கரியமாணிக்கத் தெம்பெருமானையுந் திருவடிதொழுது, ஸ்ரீபுண்யகோடி விமாநத்தையுஞ் சேவித்து, திருமடைப்பள்ளியையுஞ் சேவித்து, பேரருளாளன் பெருந்தேவியாரையுஞ் சேவித்து, உள்ளே புகுந்து, (௩௫௫) "𑌆𑌕𑌾𑌰𑌤𑍍𑌰𑌯𑌸𑌮𑍍𑌪𑌨𑍍𑌨𑌾𑌮𑌰𑌵𑌿𑌨𑍍𑌦𑌨𑌿𑌵𑌾𑌸𑌿𑌨𑍀𑌂 𑌅𑌶𑍇𑌷𑌜𑌗𑌦𑍀𑌶𑌿𑌤𑍍𑌰𑍀𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌵𑌰𑌦𑌵𑌲𑍍𑌲𑌭𑌾𑌂" (ఆకారత్రయసంపన్నా మరవిన్దనివాసినీం, అశేషజగదీ

ஸ்ரீம் வந்தேவரவரமுநிம்) என்று அநுஸந்தித்து, தீர்த்த ப்ரசாதமும் ஸ்வீகரித்து, புறப்பட்டு, ப்ரதக்ஷிணமாக வெழுந்தருளி, திருவயிந்தை திருமண்டபத்திலே திருவாழியாழ்வானையுஞ் சேவித்து, பெரிய திருவடியையுஞ் சேவித்து, செண்டலங்காரர்தன்னையாரும் சேனாநாதன் கழல்வணங்கி, எழுந்தருளி, (௩௬௯) "கமலாஸஹித கிரிராஜாய ஸ்ரீஹஸ்திகிரியே நம:" ([illegible] ஸ்ரீஹஸ்திகிரிஸேவநம்) என்று தண்டஞ்சமர்ப்பித்து, வையாளிகையிலே யேறி, சேனாச்ரமத்திலே நம்பியை முன்னிட்டுக்கொண்டு உள்ளே புகுந்து, "உலகேத்தும் மாழியானைத் திருமாலை பேரருளாளனையுஞ் சேவித்துநின்று, திருப்பல்லாண்டையும், ஸ்ரீவரதராஜாஷ்டகத்தையும் அநுசந்தித்து, "தென்னத்தியூரர் கழலிணைக் கீழ்ப்பூண்டவன்பாளனாய்" நிற்க, திருக்கச்சிநம்பியும், இவர்க்குத் தீர்த்தப்ரசாதமும், "நாயாறுகடையாள ஸ்ரீசடகோபனையும்ப்ரசாதிப்பித்தருள, ஸ்வீகரித்து க்ருதார்த்தராய்ப்புறப்பட்டு, திருக்கச்சிநம்பியுடனே அடியேன் பெரிய திருமலைக்கு விடைகொள்ளுகிறே னென்று விண்ணப்பஞ்செய்ய, அவரும் "சென்று வணங்குமினோ சேணுயர் வேங்கடத்தை" என்றருளிச்செய்து, விடைகொடுத் தருளினார்.

உடையவரும், அதிப்ரீதியோடே திருப்பதிக் கெழுந்தருளு மளவிலே, மார்க்கமத்ய "வழிதிகைத்தலமருகின்றேன்" என்கிறபடியே, வழிதப்பித் திகைத்து நிற்க, முதலிகளும் அங்கே ஒரு ஏற்ற மிறைப்பானைக்கண்டு, திருமலைக்கு வழியெங்கேயென்று கேட்டவளவில், அவனும் செவ்வையான நல்வழியைக் காட்ட, உடையவரும் இதொரு அமானவன் புருஷகார மிருந்தபடியென்றென்று அவனை தண்டனிட, முதலிகளும் இப்பரமாஸ்திகத்வத்தைக்கண்டு களித்து அவர்களும் தண்டனிட, இவரும் முன்னடந்து எழுந்தருளி, திருமலையாழ்வாரையும், திருத்தாழ்வரையிலே எழுந்தருளியிருக்கிற ஸ்ரீபராங்குசபரகால ப்ரப்ருதியான ஆழ்வார் பதின்மரையும் சேவித்து, திருப்பதியிலே எழுந்தருளியிருந்து, விட்டல் தேவனையுஞ் சிஷ்யனாக்கிக் கொண்டு, திருப்பதியிலே ஸ்வசிஷ்யர்கள் முப்பது திருநாமத்துக்குக்குடியேற்றி, இளமண்டியத்தையும் கைப்பற்றாக விடுவித்து அங்கே எழுந்தருளியிருக்க; இச்செய்தியை அநந்தாழ்வான் தொடக்கமான ஸ்ரீவைஷ்ணவர்கள் கேட்டருளி, திருமலையினின்று மிறங்கிவந்து, எம்பெருமானாரைச்சேவித்து, தேவரீர் அப்பனைச்சேவிக்க எழுந்தருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய; உடையவரும் ஆழ்வார்கள் திருமலை மிதியாமலிருக்க, நாமேறக் கடவோ

மல்லோம். இங்ஙனே திருத்தாழ்வரையிலே எழுந்தருளியிருக்கிற ஆழ்வார்
களைச் சேவித்திருக்கிறோமென்றருளிச்செய்ய; அநந்தாழ்வானும், தேவரீர்
எழுகபோது அடியோங்க ளொருவரும் எதிரேவப்பெற்றிலோம், இங்குள்ளவர்
ஒருவரு மேறவில்லையென்றும் விண்ணப்பஞ்செய்ய; உடையவரும், அப்
படியே செய்கிறோமென்று தந்தநுஜ்ஞையாகத் திருமலையைச் சேவித்துக்கொ
ண்டு எழுந்தருளி, அடிப்புளியாழ்வாரடியிலே, திருமலையாழ்வாரைச் சேவி
த்து, தம், (கருஎ) “ [illegible] ”, ([illegible])
என்கிறபடியே ஸ்ரீ வைகுண்டநாதன் [illegible] பரமபீடத்
திலே அடியிட் டேறுமாபோலே ப்ரவேசம் பண்ணியெழுந்தருளி, திரு
வேங்கடமுடையான் அருளப்பாடிடத் திருமலை யேறி, “ செய்யார் [illegible]
வளையும்” “பன்மணிநிரைதி பொருநறும் [illegible]” “அன்ன
னைய பொற்குவடுகளையும்” [illegible]
கானமும், வானரமும். வேடுமுடை வேங்கடத்தைக் கண்டு [illegible]
டு, திருப்பரியட்டப்பாறை வாசலிலே எழுந்தருளாநிற்க; திருவேங்கட
முடையான், தீர்த்த ப்ரசாதங்கொண்டு பெரிய திருமலை நம்பி எதிரே எழுந்
தருளிப்ரசாதிக்க; உடையவரும், நம்பி திருவடிகளிலே [illegible]
ணாமம்பண்ணி, தீர்த்தப்ரசாதமும் ஸ்வீகரித்தருளி, தேவரீர் எழுந்தருளவே
ணுமோ? ஒரு சிறியவர்கள் இல்லையோவென்று விண்ணப்பஞ்செய்ய; நம்
பியும், நாலு திருவீதியும் ஆராய்ந்து பார்த்த விடத்திலும், என்னிற்காட்டில்
சிறியவர்களைக் கண்டிலேனென்று அருளிச்செய்தருளினார். இத்தை உடைய
வரும், முதலிகளுங் கேட்டருளி, அத்யாச்சர்யப்பட்டு, கல்லேறி வாசலிலே
எழுந்தருளாநிற்க; ஜீயர்கள், ஏகாங்கிகள், ஸ்ரீவைஷ்ணவர்கள், திருப்பதியி
லுள்ள ஸ்தானத்தார். ஸ்ரீபாதந்தாங்குவார் முதலான அனைத்துக் கொத்தி
லுள்ளவர்களும், எதிர்கொண்டு சத்கரிக்க; உடையவரும், முதலிகளுமாக
எழுந்தருளி, வைகுந்தன் திருவாசலிலே தண்டன் சமர்ப்பித்து, திருக்கோ
னேரியிலே நீராடி, கேசவாதி திருநாமங்களையுஞ் சாத்தியருளி, நாலு வீதி
யையும் ப்ரதக்ஷிணமாக வெழுந்தருளி, “ சிந்தாமணிகள் பகரல்லைப் பகல்
செய்து ” என்கிறபடியே கனகரத்நத்யுதிரஞ்சிதமான மாடகூடப்ரா
சாத தோரண கோபுர ப்ராகாரங்களையும் அநுபவித்து, அங்கே தம் கைங்
கர்யமான, ராமாநுஜனென்கிற திருநந்தவனத்திலே எழுந்தருளி, திருக்கண்
சாத்தி, உகந்தருளி, அநந்தாழ்வானையும் பார்த்து, அணைத்துக்கொண்டு
“ வளர்த்ததனால் பயன் பெற்றேன் ” என்று மிகவுங் க்ருபைபண்ணியருளி,
மற்றும் அங்குண்டான “தேனேய் பொழில்” என்றும், “விரையார்பொழில்”

என்றும், "கோற்றேன் பாய்ந்தொழுகும்குளிர்சோலை" என்றும் சொல்லுகிற மொய்த்த சோலைகளையும், சோலைக் கலங்காரமான "செண்பகமாய் நிற்கும் திரு வுடைய செண்பகஞ்சேரும் திருமகிழ் பாடலும், சுரபுன்னை, புன்னாக முதலான, மதுஸ்ரவ, குஸுமப்ரசர்ஷத்தையுடைய திருப்பூமரங்களையும், எழிலெலுமிச்சை, செவ்வந்தி, இருவாட்சி, மல்லிகை, முல்லைதொடக்கமான கொடிமலரழகையும், "மொய்பூந்தடந்தாழ்வரையும்" என்று சொல்லுகிற செந்நீமலரும், "சேருர்சுனைகளில், மத்தப்ரமரநாதித மநோஹாரி செந்தாமரை ஸ்ரீயையும், திருவேங்கடத் தெண்ணீர்ச்சுனைகளில், "மீனாய்ப் பிறக்கும் விதியுடையாரையும்," கோனேரி வாழுங் குருகுசொகரு நாரை முதலான பக்ஷிசங்கங்களையும், வ்ருக்ஷசாகாருடபிககூஜித காகளீநாதங்களையும், கொண்டலதிரத் தோகைவிரித்து நடமாடுகிற மயூரகேகாரவத்தையும், வண்டினங்கள் தென்றெதெனவென்றுபண்பாடுகிற பாடலையுங்கண்டு கேட்டு ஆநந்தித்து, நிலங்கோட்டிடைக்கொண்ட ஞானப்பிரானையுஞ் சேவித்து, "அவாவறச்சூழ்ந்தான் திருவாசலிலேதண்டனிட்டு," அடியாரும்வானவரும் அரம்பையரும் கடந்தியங்கும், குலசேகரன்படி முதலான திருப்படிகளையுங் கடந்து, உள்ளே புகுந்து, அத்தாணிப்புளியையுஞ் சேவித்து, ஸ்ரீபலி பீடத்தடியிலேதண்டனிட்டு, யமுனைத்துறைவர் என்கிற திருப்பூமண்டபத்தையும் சேவித்து, ப்ரதக்ஷிணமாக வெழுந்தருளி (௩௫௮) "தநுர்மாஸே ஸிதே பக்ஷே த்வாதஶ்யாமருணோதயே, அயாந்தி ஸர்வதீர்த்தாநி ஸ்வாமிபுஷ்கரிணீஜலே" (ధనుర్మాసే సితే పక్షే ద్వాదశ్యామరుణోదయే, అయాన్తి సర్వతీర్థాని స్వామి పుష్కరిణీజలే) என்று சொல்லப்படுகிற மஹாத்ம்யத்தையுடைத்தான, ஸ்வாமி புஷ்கரிணியிலே தீர்த்தஸ்வீகாரமுஞ் செய்து, செண்பகத் திருவாசலுக்குள்ளே புகுந்து தண்டஞ் சமர்ப்பித்து, திருமடப்பள்ளி, யாகசாலை, திருமாமணி மண்டபத்தையுஞ் சேவித்து, சேனை முதலியாரையுஞ் சேவித்து, வேங்கடத்தரியையுந் திருவடி தொழுது, உந்நத நிலயமென்னும், ஸ்ரீதிவ்ய விமாநத்தையுங் கண்ணாலே பருகுவாரைப்போலே அநுபவித்து, உள்ளே எழுந்தருளி, "திலதமுலகுக்காய் நின்ற" தண்ணார் வேங்கட விண்ணோர் வெற்பன்" ஆன, "எண்ணம் புகுந்து தித்திக்கும்" செந்தாமரைக் கண் செங்கனிவாய்" நாற்றோளமுதையும், "செங்கமலக் கழற்படியையும்," "சீதக்கடலென்கிற திருமொழிப்படியையும், மணிநூபுராதி கிரீடாந்தஸர்வ திவ்யாபரண, திவ்யமால்யாம்பர, திவ்யாங்கராக சோபிதமான அவ்வடிவழகை பாதாதி கேசாந்தமாக அநுபவித்து, "அலர்மேல்மங்கையுறைமார்பா," "புகலொன்றில்லா வடியேனுன்னடிக்கீழமர்ந்துபுகுந்தேன்" என்று பூவார்

கழல்களைக் கிட்டி, அடிக்கீழமர்ந்து புகுந்து, க்ருதாஞ்சலிபுடராய் அநுபவித்துநிற்க; இவர்க்குத் தீர்த்தப்ரசாதமும் ப்ரசாதிக்க, ஸ்வீகரித்து, க்ருதார்த்தராயருளி, இது பூலோக வைகுண்டமாயிருந்ததென்று ஆஶ்சர்யப்பட்டு, திருமஞ்சநகாலமும் சேவித்தருளி, அழகப்பிரானாருடைய ஸ்ரீமஹாபலி திருநாளையுஞ் சேவித்தருளி, "விண்ணோர்வெற்பனையாலே," "நிகரி லமரர் முனிக்கணங்கள்" என்றருளிச்செய்த நித்யஸூரிகளன்றோ இங்கு வர்த்திப்பார், நாம்இங்கே வர்த்திக்கவொண்ணாதென்று அப்போதே திருமலையினின்றும்இறங்கவேணுமென்று உத்யோகிக்க, பெரியதிருமலைநம்பியும் திவ்யதேசத்திலேமூன்றுநாள் இருக்கவேணுங்காணுமென்றருளிச்செய்தருள; உடையவரும் சம்மதித்து, மூன்றுநாளும் அமுதுசெய்யாமல், "அப்பொழுதைக்கப்பொழுதென்னாராவமுதமான அப்பனை அநுபவித்து, அதுவே தாரகமாக எழுந்தருளியிருந்து, இப்படியே மூன்றுநாள் சென்றவாறே, நம்பியுடன் அப்பன் சந்நிதிக்குச்சென்று, திருப்பல்லாண்டை யநுசந்தித்து, ஆஸேவித்து நிற்க; அப்பனும் மிகவும் உகப்புடனே இவர்க்குத் தீர்த்த ப்ரசாதமும்ப்ரசாதித்து, தம் "பூவார்கழல்களை சிரோபூஷணமாக்கி," இவ்வுடையவரைக்குறித்து; உமக்கும் உம்முடையார்க்கும், உபயவிபூதி யைஶ்வர்யமும் தந்தோமென்று தெற்குவீட்டிலே சொன்னோமென்று, திருப்பவளச் சோதி வாய்திறந்து அருளிச்செய்தருள, உடையவரும் மஹாப்ரசாதமென்றங்கீகரித்துநிற்க, அப்பனும் விடைகொடுத்தருள, நம்பியுடன் புறப்பட்டு அப்பொழுதே யிறங்கியருளி, திருப்பதியிலே பெரியதிருமலைநம்பி திருமாளிகை யேறச்சென்று, அங்கே அமுதுசெய்து, அவர் சந்நிதியிலே இதிஹாஸஶ்ரேஷ்டமான ஸ்ரீராமாயணத்திற்கு அர்த்தங்கேட்டுக்கொண்டு ஒரு ஸம்வத்ஸரம் எழுந்தருளியிருக்குங்காலத்திலே; ஸ்ரீகோவிந்தப் பெருமாள் திருமலைநம்பி திருமாளிகையில் சர்வவிதகைங்கர்யங்களும் பண்ணியிருக்கும்படி கண்டு, உடையவர் ப்ரீதராயிருக்கிறவளவிலே, ஒருநாள் நம்பிக்குத் திருப்படுக்கைபடுக்க முந்துறத்தாமதிலே கண்வளர்ந்துபார்க்க, இத்தை எம்பெருமானார் ஒருநாள்கண்டருளி, இதொருபரிமாற்றமிருந்த பொல்லாங்கென்னென்று அத்தைப் பெரியதிருமலைநம்பிக்கு விண்ணப்பஞ்செய்ய; நம்பியும்அவரையழைத்து, கோவிந்தப்பெருமாளே! நீர்நமக்குப் படுத்தபடுக்கையிலேபடுத்துக்கொண்டதொன்றுகேட்டோம்; இப்படி செய்யலாமோ? இதற்குப்பலமென்னென்றுகேட்டருள; ஸ்ரீகோவிந்தப்பெருமாளும், நமக்கு நரகமேபலமென்ன, நம்பியும், இப்படி அறிந்திருந்துசெய்வானேனென்ன; இவரும், தேவர் திருமேனியில் ஒன்று உறுத்தல், ஊர்தல், கடித்தல் செய்யாமல் கண்வளர்ந்தருளப்பெற்றால்அடியேனுக்குநரகமேயமையுமென்றுவிண்ணப்பஞ்செய்ய;

றிக்கை உடையவர் கேட்டருளி, இதொருப்ரதிபத்தி விசேஷமிருந்தபடி என்னென்று உகந்தருளினார். ஒருநாள் நம்பியுடைய திருநந்தவனத்தை நோக்கிக்கொண்டு உடையவர் எழுந்தருளாநிற்க, ஓரிடத்திலே கோவிந்தப் பெருமாள் ஒரு பாம்பின்வாயிலே கையிட்டு மீளவும் நீராடிக் கைங்கர்யத்திலே போர; இதுகண்டு உடையவரும், கோவிந்தப் பெருமாளே, என்செய்யாநின்றீரென்று கேட்க; அவரும் பாம்புநாக்கை நீட்டிக்கொண்டு நோவுபடும்படி கண்டு அதன் நாக்கிலே முள்ளிருக்க வாங்கினேனென்று விண்ணப்பஞ்செய்ய. உடையவரும், இவருடைய பூத தயையிருந்தபடி என்றுமென்று உகந்தருளினார்.

அநந்தரம், எம்பெருமானாரும், ஸ்ரீராமாயணம் சாத்தினவாறே, பெரிய திருமலைநம்பி ஸ்ரீபாதத்திலே தண்டஞ் சமர்ப்பித்து, அடியேன் திருவரங்கப் பெருநகரை நோக்கி விடை கொள்ளுகிறேனென்று விண்ணப்பஞ்செய்ய, நம்பியும் இத்தனைநாளமெழுந்தருளின உமக்கு நாம் ஒன்றும் தரப்பெற்றிலோமேயென்ன; இவரும் அப்படி தந்தருளத் திருவுள்ளமுண்டாகில், இவரை "சார்ந்த விருவல்வினைகளும் சரித்துமாயப்பற்றறுத்துத் தீர்ந்துதன்பால் மனம் வைக்கத் திருத்தி" என்கிறபடியே, இவருடைய துர்வாஸநாச் சேதநத்தைப் பண்ணி, "பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கு மழுக்குடம்பு மிந்நின்ற நீர்மையினியா முறாமை," என்னும்படி பண்ணியருளி "உடன்கூடுவ தென்றுகொலோ" என்றிருந்த அடியேன் நினைவைத்தலைக்கட்டியருளித்தே, அடியேனுக்கு இந்த ஸ்ரீகோவிந்தப் பெருமாளைத் தந்தருள வேணுமென்று விண்ணப்பஞ்செய்ய; பெரிய திருமலைநம்பியும் அவரையழைத்து, வாரீர் கோவிந்தப் பெருமாளே! எம்பெருமானாரை நம்மைக் கண்டாற்போலே சேவித்திருமென்று உதகதாரா பூர்வகமாகக் கொடுத்தருளினார். அவரையுங்கூட்டிக்கொண்டு, உடையவர் நம்பிக்கு தண்டஞ் சமர்ப்பித்துப் புறப்பட்டு, "வண்டுவளங்கிளரும் நீள்சோலை வண்பூங் கடிகையிலே சென்று, கடிகாசலமேறி, "மிக்கார் வேதவிமலர் விழுங்குமக் காரக்கனியை" யுங்கண்டு களித்துச்சேவித்து, அங்கு நின்றும் புறப்பட்டு, திருப்புட்குழியிலே எழுந்தருளி, க்ருத்ரபுஷ்கரிணியிலே தீர்த்தம் ஸ்வீகரித்து, பெரிய உடையாரையுந் திருவடிதொழுது, சண்ட ப்ரசண்டர்களையும் சரணமடைந்து, உள்ளேபுகுந்து, மரகதவல்லியாரையும், திருவநந்தாழ்வானையுஞ் சேவித்து, மற்றுஞ் சேவாக்ரமந் தப்பாமல் சேவித்து, ப்ரதக்ஷிணமாக வெழுந்தருளிப் புகுந்து, சேனை முதலியாரையுந் திருவடி தொழுது "பொன்முடியம் போரேற்றையெம்மானை நாற்றடந்தோள் தன்முடிவொன்

நில்லாத கண்டுழாய் மாலையனை" யுஞ் சேவித்துநின்று, (கஉக) "ஸ்ரீவத்ஸவக்ஷ நித்யஶ்ரீ ஶோபித, நமஸ்தே ஜகதாதார ஶங்கசக்ரகதாதர, வாஸுதேவ ஹ்ருஷீகேஶ ஸ்ரீயாதவஜநார்தந தாநவாரே ஜகந்நாத ஶார்ங்கபாணே நமோஸ்துதே" (శ్రీవత్సవక్షః నిత్యశ్రీ శోభిత, నమస్తే జగదాధార శంఖచక్రగదాధర, వాసుదేవ హృషీకేశ శ్రీయాదవజనార్దన దానవారే జగన్నాథ శార్ఙ్గపాణే నమోస్తుతే) என்று அநுஸந்தித்துநிற்க, தீர்த்த ப்ரஸாதமும் ப்ரஸாதிக்கஸ்வீகரித்து தண்டனிட்டுப்புறப்பட்டு, ஸ்ரீவேங்கடமுதலான அங்கிருந்துள்ளதிருப்பதிகளையுஞ் சேவித்துமீண்டு, திருக்கச்சிநம்பி ஸந்நிதியிலே எழுந்தருளினார்.

"அவனைவிட்டகன்றுயிர் ஆற்றகில்லா" என்றபடியாலே, ஸ்ரீகோவிந்தப்பெருமாள் திருமேனியில் வைவர்ண்யம் பிறந்து, முகப்புருவினை இருப்பைக்கண்டு, உடையவரும், இவருக்கு அவ்வாயில் எண்ணமறிந்து, கோவிந்தப்பெருமாளே! நம்பியைசேவித்து வாருமென்று இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்களையுங் கூட்டி யனுப்பி, திருக்கச்சிநம்பியுடன் பேரருளாளனைச் சேவித்திருந்தார். இவரும் திருப்பதியிலே எழுந்தருளி, நம்பி திருமாளிகை வாசலிலேநிற்க, அங்குள்ளார் அவரைக்கண்டு உள்ளேசென்று பெரியதிருமலைநம்பிக்கு விண்ணப்பஞ்செய்ய; நம்பியும், திருவுள்ளங்கலங்கி, பித்தனைப் போகச் சொல்லுங்கோளென்ன; தேவிகளும், இத்தனைதூரம் இளைத்து வந்தவரை யழைத்து, சேவையும், ஸ்ரீபாததீர்த்தமும், தளிகை ப்ரஸாதமும் ப்ரஸாதிக்க வேண்டாவோவென்று விண்ணப்பஞ்செய்ய; நம்பியும், விற்றபசுவுக்குப்புல்லிடுவாருண்டோ, கைங்கர்யத்தையே ப்ரகாஶிப்பித்து முகங்கொடாமல் தள்ளிவிட; கோவிந்தப்பெருமாளும், அங்கு நிராசராய், திருவாசலிலேதண்டஞ்சமர்ப்பித்து. ஸ்ரீவைஷ்ணவர்களுடனே மீண்டு உடையவரைச் சேவித்துநிற்க; ஸ்ரீவைஷ்ணவர்கள் இந்த வ்ருத்தாந்தத்தை விண்ணப்பஞ்செய்யக் கேட்டருளி, நம்பியுடைய ஸர்வஜ்ஞதையை ஶ்லாகித்து, கோவிந்தப்பெருமாளையும் பிறகாலியாதபடி, தம்ஸௌலப்ய ஸௌஶீல்யாதி குணங்களாலே ஆழங்கால் படுத்திக்கொண்டு, திருக்கச்சிநம்பிக்கு தண்டஞ் சமர்ப்பித்து நிற்க, பெருமாளும் சோதிவாய்திறந்து, நம்வடக்குமலைக்குப் போய் வந்தீரோவென்று வினவி யருளி, தீர்த்த ப்ரஸாதமும் ஸ்ரீசடகோபனும் ப்ரஸாதிக்க, ஸ்வீகரித்துப்புறப்பட்டு மடமேயெழுந்தருளி, ஸ்வாமிமாருந்தாய் பூதரான முதலிகளையுங் க்ருபைபண்ணி எழுந்தருளி யிருந்தார்.

ஸ்ரீகோவிந்தப் பெருமாளுக்கு, எம்பெருமானார்கோஷ்டியில் அநுபவமும், அவர் விக்ரஹாநுபவமும், அவர் சல்லாபங்களும், அவர் திருவடிகளிலே கைங்கர்யங்களுமே காலக்ஷேபமாய், நித்ராலஸ்யங்களு மின்றிக்கே, ப்ரத்யஹம் நடவாநிற்க; ஒருநாள் உடையவரும், முதலிகளும் பெரிய திருவோலக்கமாக எழுந்தருளியிருக்க; முதலிக ளெல்லோரும் கோவிந்தப்பெருமாளுடைய ஜ்ஞாநபக்தி வைராக்யங்களையும், ஸ்வாசார்யபதை கநிஷ்டதையையும் சொல்லித் தலைதுலுக்கிக்கொண்டாட, ஸ்ரீகோவிந்தப்பெருமாள், தாமும், அது வொக்கு மொக்குமென்று அவர்களைக் காட்டில் மிகவும் தம்மைத் தாமே, ஶ்லாகித்துக்கொள்ள; உடையவரும், அதுகண்டு இவரைக் குறித்து, எல்லாரும் உம்மை ஶ்லாகித்தால் நீர் நைச்யாநுசந்தாநம் பண்ணவேண்டியிருக்க, அது செய்யாதே நீர் தாமே உம்மை ஸ்துதித்துக்கொள்ளாநின்றீர், இப்படி செய்யு மது ஸ்வரூபத்திற்குச் சேருமோவென் றருளிச்செய்ய; ஸ்ரீகோவிந்தப்பெருமாள், உடையவரைப்பார்த்து, அய்யோ! முதலிகாள்? அடியேனைக் கொண்டாடில், காளஹஸ்தியில் கையுங்குடமும் கழுத்தில் இலிங்கைக்கொட்டை வடமுமாய்க்கொண்டு, எளிவரவுபட்டு நின்ற வன்னிலையைக் கொண்டாடு மத்தனையன்றோ? அடியேனுக் குள்ளது; இப்படி யான பின்பு "பீதகவாடைப் பிரானார் பிரமகுருவாகிவந்து" என்கிறபடியே, தேவரீர் இவ்வாத்மாவை எடுக்கைக்காகவே ஒருதிருவவதாரம் பண்ணிச் செய்தருளின க்ருஷிபரம்பரைகளை நம்முதலிகள் எல்லாரையும் போலன்றிக்கே நித்ய சம்சாரிகளிலும் கடைகெட்டுக் கிடந்த அடியேன் காலதத்வ முள்ளதனையும் "எனக்கினியார்நிகர் நீணிலத்தே" என்றும், "இனியாவர் நிகரகல்வானத்தே" என்றும், நெஞ்சமே நல்லைநல்லை" என்றும் சொல்லுகிறபடியே அடியேனை ஶ்லாகித்துக்கொள்ள ப்ராப்தி யுண்டாகையாலே, அடியோங்களெல்லோரும் தேவரீராலே இவ்வாத்மாவுக்குண்டான நன்மைகளை ஶ்லாகித்தால் தேவரீரைக் கொண்டாடிற்று மித்தனையென்று விண்ணப்பஞ்செய்ய, எம்பெருமானாரும், ஸ்ரீ கோவிந்தப்பெருமாளை நல்லீர் நல்லீரென்று போர உகந்தருளி, உம்முடைய அழகிய நெஞ்சாலே நம்மை யணைத்துக்கொள்ளீர், நமக்கும் உண்டாம்படி என்று வாரி யணைத் தெடுத்துக்கொண்டருளினார்.

ஒருநாள் எம்பெருமானார் அடியாள் வாசலிலே, கால்ய கர்மங்களையு மிழந்து, ஸ்ரீ கோவிந்தப் பெருமாள் நிற்கக்கண்டு, ஒரு ஸ்ரீ வைஷ்ணவர் உடையவர்கோஷ்டியிலே அத்தைவெளிப்படுத்த, உடையவரும், கோவிந்தப்

பெருமாளே ; நீர் அங்கே நிற்பானேனென்ன ; இவரும், தேவரீர் தாலாட்டு மதுராலாபமாய், இசையேறி செவிக்கினிய செஞ்சொல்லாயிருக்க, தேவரீர் குறையுடையவரும் முன்னடிவளையக்கட்ட, போக்கடியற்று, நின்றேனென்று விண்ணப்பஞ்செய்ய; ஸ்ரீவைஷ்ணவரும், தாலாட்டு நடந்தது உள்ளதென்ன; உடையவரும், இவர் ப்ராவண்யம் இருந்தபடியென்னென்று உகந்தருளினார்.

பின்பு, இவர்க்கு இருளும் ஏகாந்தமும் நின்று மிக்க, த்ரிவிதகரணத்தாலும் "இராமாநுசன்மிக்க சீலமல்லால் உள்ளாதென்னெஞ்சு" என்கிற படியே, இராமாநுசன் மெய்யில் பிறங்கிய சீரும் அவர் குணானுபவமுமே காலக்ஷேபமாகச்செல்லாநிற்க; ஸ்ரீகோவிந்தப்பெருமாள் திருத்தாயார் வந்து, கோவிந்தப்பெருமாளே உம்முடையதேவிகள் பக்குவமானளென்ன ! இவரும் ஆகில், நீர், அம்மா? இருட்டும், தனியுமாயிருக்கும் அவகாசம்பார்த்து அவளை வரக்காட்டுமென்ன; அவரும்பலநாள் அவகாசம்பார்த்து ஒருநாளும் அவகாசம்காணாதே, உடையவர்க்கு விண்ணப்பஞ்செய்ய; உடையவரும், இவரை யழைத்து, கோவிந்தப்பெருமாளே ஒருருதுகாலத்திலே நம்மானை. நீர்போமென்று அருளிச்செய்து போகவிட்டருள; கோவிந்தப்பெருமாளும் தேவிகளுக்கு இராமுட்ட அந்தர்யாமியை அநுபவித்து தத்துவசேஷ்டிதங்களைக் கீர்த்தித்தருளிப்போகவிட; இவர்திருத்தாயார் வெடிலோவைவந்து இங்ஙனிப் படி செய்யலாமோவென்ன ; இவரும் அந்தர்யாமிப்ரகாசித்திருக்க, அறிச் சாட்டங் கூடுமோவென்றருளினார். இச்செய்தியை இவருடன் அனுவர்த்திருந்தமுதலிகள் எம்பெருமானாருடனே விண்ணப்பஞ்செய்ய, ஸ்ரீகோவிந்தப் பெருமாளும் திருவடிகளிலே சேர்ந்துநின்றவளவிலே ; எம்பெருமானாரும், இராமுட்ட என்செய்தீரென்று மந்தஸ்மிதம்செய்து கேட்டருள ; கோவிந்தப்பெருமாளும், அந்தர்யாமிப்ரகாசிக்கையாலே இதுக்கு ஏகாந்தம்கண்டிலே னென்று விண்ணப்பஞ்செய்தார், உடையவரும், வாரீர் கோவிந்தப் பெருமாளே, உமக்குவிஷயாந்தர விரக்தியித்தனையுண்டாகில் (கூகா0) "அநாச்ரமீ நதிஷ்டேத்" (అనాశ్రమీనతిష్ఠేత్) என்கிற சாஸ்த்ரவசனம் நீரறியீரோ வென்ன ; இவரும், அப்படியே அடியேனுக்கு சந்யாஸாச்ரமம்ப்ர சாதித் தருள வேணுமென்று விண்ணப்பஞ்செய்ய ; உடையவரும் த்ரிதண்டகா ஷாயாதிகளை ப்ரசாதித்து, தம்திருநாமத்தையே ப்ரசாதித்தருள; இவரும், ஸ்ரீபாதச் சாயாபந்நனாயிருக்கு மவனுக்குப் பொறுக்கும்படி ப்ரசாதித் தருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்து, திருவடிகளிலே தண்டனிட்டுக் கொண்டுகிடக்க ; உடையவரும், திருநாமத்தை ப்ரத்யாஹரித்து, ஆத்யந்த க்ருஹணம்பண்ணி எம்பாரென்று திருநாமஞ்சாத்தி முடிபிடித்தெடுத்து க்ருபை செய்தருளினார்.

அநந்தரம், தேசாந்தரத்தில் நின்றும் இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் கோயிலுக்கெழுந்தருளி திருவீதியிலேநின்று, அவர்கள் சிலரைப்பார்த்து, எம்பெருமானார் மடமேதென்றுகேட்க; அவர்களும் எந்தஎம்பெருமானார் மடமென்ன ? புதுக்க எழுந்தருளின ஸ்ரீவைஷ்ணவர்கள் நெஞ்சுநைந்து, நீங்கள் இரண்டுசொல்லுவானேன், நம்தர்சநத்துக்கு இரண்டு எம்பெருமானார் உண்டோவென்ன ; அவர்களும்உண்டு, அருளாளப்பெருமா னெம்பெருமானாரும் எழுந்தருளியிருக்கிறா ராகையாலே சொன்னோமென்ன; நாங்கள் அவரைஅறியோம், உடையவர்மடத்தைக்கேட்டோமென்ன; ஆனால் ராமாநுசன்மடம் இதென்று அவர்கள்காட்ட, அந்த ஸ்ரீவைஷ்ணவர்களும் உடையவர் மடமேசென்று புக்கார்கள்.

இப்ரசங்கமெல்லாத்தையும் யாத்ருச்சிகமாக அருளாளப்பெருமா னெம்பெருமானார் கேட்டுக்கொண்டிருந்து, அய்யோ, நாம், உடையவரைப் பிரிந்து ஸ்தலாந்தரத்திலே யிருக்கையாலே லோகத்தார் நம்மையெம்பெருமானாருக்கு எதிர்த்தட்டாகச்சொன்னார்கள். ஆகையாலே நாம் அநர்த்தப்பட்டோம் என்று மஹாவ்யாகுலப்பட்டு, அப்போதே தம்முடைய மடத்தையும் இடித்துப் பிடுங்கிப்போட்டுவந்து, உடையவர் திருவடிகளைக் கட்டிக்கொண்டு, அநாதிகாலம், இவ்வாத்மா தேவரீர் திருவடிகளை யகன்று அநர்த்தப்பட்டுப்போந்ததுபோராமல், இப்போதும் அகற்றிவிடத் திருவுள்ளமாய் விட்டதோஎன்று மிகவும்சோகிக்க; உடையவரும் இதற்குக்காரண மென்னென்ன; அவரும், இங்குப்பிறந்த வ்ருத்தாந்தத்தை விண்ணப்பஞ்செய்ய உடையவரும், அச்செய்திகளைஅடையக்கேட்டு, ஆனால்இனிஉமக்குநாம்செய்யவேண்டுவதென்னென்ன; அருளாளப்பெருமா னெம்பெருமானாரும், அடியேனை இன்றுதொடங்கி எழுநாளும் அடியாரும்போலே, "நின்றனிணைக்கீழ் வாழ்ச்சியான் சேரும்வகையருளாய்" என்கிறபடியே, தேவரீர்திருவடிகளின் கீழே வைத்துக்கொண்டு நித்யகைங்கர்யங் கொண்டருள வேணுமென்று விண்ணப்பஞ்செய்ய; உடையவரும், ஆனால் இனியிங்ஙனே வாருமென்று அவரைத்தம்சந்நிதியிலே அரைக்ஷணமும்பிரியாமல் வைத்துக்கொண்டு, அகிலார்த்தங்களையும் ப்ரசாதித்தருள, அவரும் க்ருதார்த்தராய் உடையவரை யொழிய வேறொருதெய்வ மறியாதவராகையாலே, சகலவேதாந்த சாரார்த்தங்களைப்பெண்ணுக்கும் பேதைக்கும்சுலபமாகக்கற்று உஜ்ஜீவிக்கலாம்படி ஜ்ஞாநசாரம் ப்ரமேயசாரம்என்கிற திவ்யப்ரபந்தங்களையு மிட்டருளி, அதிலேஸச்சிஷ்ய னென்பானுக்கு, சதாசார்யனே பரதேவதை, அவன்திருவடிகளிலே கைங்கர்யமே பரமப்ராப்யம், அவன்றான் பகவதவதார விசேஷமென்னுமத்தை அருளிச்செய்தருளினார்.

அநந்தரம், கூரத்தாழ்வானையும், முதலியாண்டானையும், அருளாளப் பெருமா ளெம்பெருமானாரையும், இன்னமுள்ள முதலிகளையுங் கூட்டிக் கொண்டு எழுந்தருளியிருந்து "இலிங்கத்திட்ட புராணத்தீரும் சமணரும் சாக்கியரும்மலிந்து வாதுசெய்வீர்களும்" என்றருளிச்செய்து ; இடங்கொள் சமயத்தை யெல்லாமெடுத்துக்களைகைக்காகவும், தத்வமஸீத்யாதி வாக்ய ஜந்யஜ்ஞாநமே மோக்ஷ சாதநமென் றிருக்கிற குத்ருஷ்டிகளையும், ஜ்ஞாநகர்ம சமுச்சயமே மோக்ஷ சாதநமென்றிருக்கிற குத்ருஷ்டிகளையும், நிரசித்து, வேதகர்மாங்கமாய், வேதநத்யாநோபாஸநாதி சப்தவாச்யமாய், பக்திரூபாபந்நமான உபாஸநாத்மக ஜ்ஞாநமே வேதாந்த ப்ரதிபாத்யமான மோக்ஷசாதந மென்கைக்காகவும், நாம் வேதாந்தம் நடத்த வேணுமென்றருளிச்செய்ய; அப்படியே செய்தருளவென்று, முதலிகள் விண்ணப்பஞ் செய்ய. உடையவரும், ஆழ்வானைப்பார்த்து, நான்சொன்ன பாஷ்யவாக்யம் உம்திருவுள்ளத்திற்கு ஒத்திருந்தாலொழிய, நீர்திருவெழுத்துச்சாத்தவேண்டாமென்றுநியமித்தருள; ஆழ்வானும் அப்படியேதிருவெழுத்துச்சாத்திவருமளவில், ஆத்மாவுக்கு சேஷத்வவிதுரமான ஜ்ஞாத்ருத்வப்ரதி பாதித்து ஒருவாக்ய மருளிச்செய்தருள ; ஜீவாத்மாவுக்கு பகவச் சேஷத்வ விதுரமான ஜ்ஞாத்ருத்வத்தோடு தேஹாத்மாபிமாநத்தோடு ஒரு வாசியில்லாமையாலேஆழ்வானும் திருவெழுத்துச்சாத்தாமலிருக்க; உடையவரும், அத்தை நிரூபித்துப்பாராமல், எழுதுமென்ன, இவரும் எழுதாதிருக்க; அதுகண்டு குபிதராய், ஆகில்நீயே பாஷ்யஞ்செய்யென்று, அருளிச்செய்கைதவிர்ந்து, உதைத்து, ஆழ்வானைப்போகவிட ; ஆழ்வானை, முதலிகள், ஆசார்யர்கோபித்துவிட்டாரோ, இப்போது நீர் என்னினைக் கிருக்கிறீரென்றுகேட்க. ஆழ்வானும், உடைமைஉடையவன் இட்டவழக்காயிருக்கும்; அடியேனுக்கு இதில்அந்வயமில்லையென்றருளினார். பின்பு, உடையவரும், வாக்யார்த்தத்தை நன்றாக ஆலோசித்துக்கொண்டு, ஆழ்வானையழைத்து, சோபித்ததற்கு அநு... த்பித்து, பகவச் சேஷத்வத்தோடே கூடின ஜ்ஞாத்ருத்வம்ப்ரதிபாதித்... வாக்யமருளிச்செய்தருள. ஆழ்வானும் அதிசீக்ரமாகத்திருவெழுத்துச்சாத்த, இப்படி ஸ்ரீபாஷ்யம், வேதாந்ததீபம்! வேதாந்தசாரம், வேதார்த்தசங்க்ரஹம், கீதாபாஷ்யம், இவற்றை யருளிச்செய்து, ஆளவந்தாருடைய ப்ரதமமான இழவைத் தீர்த்தருளினார்.

உடையவரை, முதலிகளெல்லாரும் தண்டனிட்டு, தேவரீர் இதரசமய நிராகரணபூர்வகமாகதர்மஸம்ஸ்தாபனம்பண்ணியருளித்து ; இனிஇதில்நன்றாகிட்டி தேசமெங்குந்திரிந்து, திக்விஜயம்பண்ணி அங்குள்ள திவ்ய

தேசங்களையும் சேவித்து எழுந்தருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய; உடையவரும், முதலிகளுமாக நம்பெருமாள் திருமுன்பேசென்று, தண்டஞ் சமர்ப்பித்து, இச்செய்தியைவிண்ணப்பஞ்செய்ய, பெருமாளும் அப்படியே செய்யீரென்று திருவுள்ளமாக; அங்குநின்றும்புறப்பட்டருளி, சோழமண் டலத்திலே யெழுந்தருளி, திருக்குடந்தை முதலான திருப்பதிகளையுஞ் சேவித்து, அங்குண்டான இதரசித்தாந்தவித்வான்களையுந்தர்க்கித்து ஜயித்து, அங்கிருந்து, தெற்கேபுறப்பட்டு "வளரிளம்பொழில் சூழ்மாலிருஞ்சோலை" முதலான திருப்பதிகளையுஞ் சேவித்து ; பாண்டிமண்டலத்தி லுண்டான பரவாதிவித்வான்களையுஞ் ஜயித்து, திருப்புல்லாணியையுஞ்சேவித்து, சேது தர்ஶனம்பண்ணி, திருநகரியேறச்சென்று, அங்கே நம்மாழ்வாரை, கண்ணி நுண்சிறுத்தாம்பை அநுசந்தித்துசேவித்துநிற்க; ஆழ்வாரும், மிகவும்க்ருபை பண்ணியருளி, தம்தீர்த்தப்ரசாதமும், ஸ்ரீசடகோபபதத்வயமானஸ்ரீமதுரகவி களையும்ப்ரசாதிக்க; ராமாநுசனும் (௩௬௧) "வகுளதவளமாலாவக்ஷஸம் வேதபாஹ்யப்ரவரமதவிவாதச்சேதநம் பூஜநீயம், விபுலகுருகநாயகம் ஸ்ரீநகர்யாஸ் ஸ்வாமிநம் ஶரணமுபகதோஹம் சக்ரஹஸ்தாக்ரசிஷ்டம்"
(వకుళధవళమాలావక్షసం వేదబాహ్య వరసమతియావాదచ్ఛేదనం పూజనీయం, విపులకురుకనాథం శ్రీనూనంకవిశంశరణ ముపగతోహం చక్రహస్తాగ్రశిష్టం) என்று அநுசந்தித்து தண்டஞ்சமர்ப்பித்துப்புறப்பட்டு, திருப்புளியாழ்வாரையும், பொலிந்துநின்ற பிரானையும், திருவடிதொழுது புறப்பட்டு, மற்றுஞ் சுற்றிலுண்டான திருப் பதிகளையுஞ்சேவித்து அங்குள்ள பாஹ்யகுத்ருஷ்டிகளையும் ஜயித்துப்புறப் பட்டு, திருக்குறுங்குடிக் கெழுந்தருளி, சோலைத்திருக்குறுங்குடி நம்பியை சேவித்து, தீர்த்தப்ரசாதமும்ஸ்வீகரித்து நிற்கிறவளவிலே, நம்பியும், அர்ச்சக முகேன, நாம், ராமக்ருஷ்ணதிருபேணசன்மம்பலபலசெய்துவந்து பிறந்து சேதனரைத்திருத்தப் பார்த்தவிடத்தில், அவர்கள்ஆசுரப்ரக்ருதிகளாய் ஒரு வரும் நம்மைவந்துசேர்ந்தார்களில்லை; நீர்இத்தனைபேரையுமெங்ஙனேதிருத் தினீரென்றுகேட்டருள; உடையவரும், தேவரீர்கேட்கும் க்ரமத்திலேகேட் டால், சொல்லுமடைவிலே சொல்லுகிறோமென்ன; குறுங்குடிநம்பியும், தம் திவ்யஸிம்ஹாசனத்தினின்றுமிறங்கியருளி, ரத்னகம்பளத்திலேயிருந்து, இ வர்க்கொரு ஆசனத்தையிட்டுவைக்க ; அதிலேஸ்வாசார்யரான பெரியநம்பி எழுந்தருளியிருக்கிறாராக பாவித்துக்கொண்டு, தாம்நிலத்திலேயிருந்து, கு றுங்குடிநம்பி திருச்செவியிலே (௩௬௨) "ஸர்வேஷாமேவ மந்த்ராணாம் மந்த்ரரத்நம் ஸுகாவஹம், ஸக்ருத்ஸ்மரணமாத்ரேண ஹ்ருதாதிபாபஸம்ஹரம்,

𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌰𑌤𑍍𑌨𑌂 𑌦𑍍𑌵𑌯𑌂 𑌨𑍍𑌯𑌾𑌸𑌶𑌰𑌣𑌾𑌗𑌤𑌿𑌃, 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌾𑌯𑍇𑌤𑌿 𑌹𑌿𑌤𑌂 𑌸𑌰𑍍𑌵𑌫𑌲𑌪𑍍𑌰𑌦𑌂" (సర్వేషామేవ మన్త్రాణాం మన్త్రరత్నం శుభావహం, సకృత్స్మరణమాత్రేణ దదాతి పరమం పదం, మన్త్రరత్నం ద్వయం న్యాస శరణాగతిః, లక్ష్మీనారాయణాయేతి హితం సర్వఫలప్రదం) என்கிற மஹாத்ம்யத்தையுடையத்வயத்தை அநுசந்தித்தருள ; நம்பியும்போரவுகந்து, ராமாநுஜனை யுடையோமென்று நர்த்தனஞ்செய்ய, உடையவரும் அவர்க்கு ஸ்ரீவைஷ்ணவ நம்பியென்று தாஸ்யநாமம் ப்ரசாதித்தருள ; நம்பியும், இவரை ப்ரஹ்மரதமேற்றி யுபலாளித்தருளினார். உடையவரும் நம்பியை ஸேவித்துநின்று (௩௬௩) "𑌆𑌚𑌾𑌰𑌾𑌨𑌿𑌮𑌾𑌨𑍍 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌶𑌿𑌕𑍍𑌷𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌗𑍁𑌰𑍋𑌸𑍍𑌤𑌤𑌃" (ఆచారానిమాన్ సర్వాన్ శిక్షయిత్వా గురోస్తతః) என்றுவிண்ணப்பஞ்செய்து, அங்குநின்றும் புறப்பட்டு திருவண்பரிசாரத்தையும் திருவாட்டாற்றையும் திருவடிதொழுது, திருவநந்தபுரத்திலே யெழுந்தருளி, படமுடையரவில் பள்ளிபயின்ற பத்மநாபப்பெருமாளையும் த்வாரத்ரயத்தாலே பாதாதிகேசபர்யந்தமாக சேவித்தருளி, அங்குள்ள ப்ரதிவாதி வித்வான்களையும் ஜயித்து, ஸ்ரீராமாநுஜ மடத்தையும் உண்டாக்கி, புறப்பட்டு மலையாளதேசத்திலுண்டான திருப்பதிகளையுஞ்சேவித்து அத்தேசத்தில் அந்யசித்தாந்திகளையும் ஜயித்து, மேலைசமுத்ரக் கரைவழியாக உத்தரதேசத்தி லெழுந்தருளி, உத்தரமதுரை, சாளக்ராமாதி வைகுண்டஸ்த்தானத்வாரவதி, அயோத்யை, உத்தரபதரிகாச்ரமம், நைமிசாரண்யம், புஷ்கரமென்று சொல்லப்பட்ட திவ்யதேசங்களையும், மற்றுமுண்டான திருவாய்ப்பாடி ஸ்ரீகோவர்த்தநாதி ஸ்ரீப்ருந்தாவனம் திருப்பதிகளெல்லாத்தையும் சேவித்துக்கொண்டு, அவ்விடங்களிலுள்ள குத்ருஷ்டி வித்வான்களையும்ஜயித்து, பட்டிமண்டபத்தைக்கிட்டி, சரஸ்வதிபண்டாரத்தேற வெழுந்தருளினவளவிலே, சரஸ்வதிதானே வாசலைத்திறந்து கொண்டுவந்து எதிரே புறப்பட்டு நின்றுஉடையவரைப்பார்த்து (௩௬௪) "𑌤𑌸𑍍𑌯 𑌯𑌥𑌾 𑌕𑌪𑍍𑌯𑌾𑌸𑌂 𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌮𑍇𑌵𑌮𑌕𑍍𑌷𑌿𑌣𑍀" (తస్య యథా కప్యాసం పుణ్డరీకమేవమక్షిణీ) என்கிற ச்ருதிக்குப்பொருள்சொல்லிக்காணீரென்ன ; இவரும், (௩௬௫) "𑌕𑌪𑌿𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌃 𑌕𑌂𑌪𑌿𑌬𑌤𑌿𑌕𑌿𑌰𑌣𑍈𑌰𑌿𑌤𑍍𑌯𑌪𑌿 𑌕𑌪𑌿𑌰𑍍𑌹𑍃𑌤𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌕𑌪𑌿𑌰𑌶𑍍𑌮𑌿𑌨𑌾 𑌸𑌂𑌯𑌦𑌿𑌤𑌾𑌖𑌿𑌲𑌂. 𑌤𑌦𑌿𑌦𑌂 𑌕𑌪𑍍𑌯𑌾𑌸𑌂 𑌦𑌿𑌵𑌸𑌕𑌰𑌤𑍇𑌜𑍋𑌵𑌿𑌕𑌸𑌿𑌤𑌂 𑌸𑍁𑌪𑌦𑍍𑌮𑌂 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍍𑌤𑍍𑌵𑌦𑍍𑌭𑌣𑌿𑌤 𑌭𑌗𑌵𑌚𑍍𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑍁𑌪𑌮𑌾" (కపిస్త్వాదిత్యః కంపిబతికిరణైరిత్యపి కపిర్హృతస్తస్య కపిరశ్మినా సంయదితాఖిలం. తదిదం కప్యాసం దివసకరతేజోవికసితం సుపద్మం శ్రీమత్త్వద్భణిత భగవచ్చక్షురుపమా) என்று, கம் என்று ஜலமாய், கிரணங்களாலே அத்தைபானம்பண்ணுகையாலே, கபிசப்தவாச்யனை ஆதித்யனாலே, அஸ-

க்ஷேபனென்று விகாசனாசகமாய், அலர்த்தப்பட்ட தாமரைப்பூப்போலே யிருக்கும் பரமபுருஷன் திருக்கண்களென்று; கப்யாஸத்திற்குப் பொருளருளிச்செய்தருள; ஸரஸ்வதியுங்கேட்டு சந்துஷ்டையாய், இவர் இட்டருளின ஸ்ரீபாஷ்யக்ரந்தத்தையும் சிரசாவஹித்து, தன்கைகளை நீட்டி உடையவர் திருக்கையைப் பிடித்துக்கொண்டு, இதுப்ரக்ஷேபமன்று அந்தமாயிருந்ததென்றங்கீகரித்து, இவர்க்கு ஸ்ரீபாஷ்யகாரரென்று திருநாமஞ்சாத்தி, ஹயக்ரீவனையும் எழுந்தருளவைத்துக்கொடுத்து, மிகவும் உபலாலிக்க; ஸ்ரீபாஷ்யகாரரும், நீ நம்மை இத்தனை ஆதரிக்கைக்கு அடியென்னென்று கேட்டருள; அவளும், முன்பு இங்குவந்த சங்கரனை இஸ்ருதிக்கர்த்தங்கேட்டவளவில், அவனும் குரங்கு ப்ருஷ்டம்போலே யிருக்குமென்று அபஹாஸ்யமான அர்த்தஞ்சொன்னான், நீர் என்கருத்தறிந்து யதார்த்தஞ் சொல்லுகையாலே நானுதரித்தேனென்றாள். இத்தை அத்தேசத்திலுள்ள ப்ரதிபக்ஷசித்தாந்திகள் கேட்டுவந்து, உடையவருடன் தர்க்கிக்க, அவர்களெல்லாரையும் ஜயித்தபடியை அத்தேசத்தில் ராஜா கேட்டு, இதொரு ஆஸ்சர்யமிருந்தபடி யென்னென்றுவந்து உடையவர் ஸ்ரீபாதத்திலே யாஸ்ரயிக்க, அவனையுங் க்ருபைசெய்து எழுந்தருளி யிருக்குமளவிலே, அங்குள்ள அஜ்ஞாநிகளான வித்வான்கள் இவரை யபிசரிக்கத்தேட, உடையவருங் கேட்டருளி, இத்தைக் காணக்கடவோமென்று திருவுள்ளம் பற்றியிருக்க; அவ்வளவிலே வித்வான்கள் பித்தேறி, தங்களைத் தாங்களே மோதிக்கொண்டு பேய்களாயோடித் திரிய; இத்தைக்கண்டு ராஜாவும், உடையவரைத்தண்டனிட்டு, தேவரீரிப்படி செய்தருளலாமோவென்று வேண்டிக்கொண்டு அவர்களையும் ஸ்வஸ்த்தராம்படி பண்ணிவைத்து, அவர்களையும் திருவடிகளிலே ஆஸ்ரயிப்பித்து, தன் ஸர்வபரிகரத்துடன், ஒருகாதம் சேவித்துக்கொண்டுவந்து வழிவிட்டுமீண்டு போக; உடையவரும் வாரணாசீபுரம்வழியாக வெழுந்தருளி, கங்கையைக் கிட்டி, கங்கைகங்கையென்ன வாசகத்தாலே யெழுமையுங்கூடி யீண்டிய பாவமெல்லாம் இறைப்பொழுதளவினிற் கழுவிடும் பெருமையை யுடைய கங்கையில், "திருமால் கழலிணைக்கீழே குளித்" தென்கிறபடியே நீராடி; காபாலிஸ்பர்ஸ தோஷத்தையும் கழித்து, கேசவாதித்வாதசோர்த்வபுண்ட்ரங்களையுந் தரித்துக்கொண்டு, கண்டமென்னுங் கடிநகரிலெம்பெருமானையுங் கைதொழுது கழலிணைபணிந்து புறப்பட்டு, ஸ்ரீபுருஷோத்தமத்தேற வெழுந்தருளி ஸ்ரீஜகந்நாதனையுந் திருவடி தொழுது, அங்குள்ள ப்ரச்சன்ன பௌத்த வித்வான்களையும் ஜயித்து, ராமாநுஜமடமங்கே யுண்டாக்கி, அங்கிலும்புறப்பட்டு, ஸ்ரீகூர்மத்தேறவெழுந்தருளி கூர்மநாதனையுஞ் சேவித்து,

ஸிம்ஹாத்ரியேற வெழுந்தருளி, ஸிம்ஹகிரியப்பனையுஞ் சேவித்து, அவ்விடத்தில் அந்யஸமயங்களையுந் தர்க்கித்து ஜயித்து, அங்கிருந்தும் புறப்பட்டு, அஹோபளத்தைச்சென்று, அஹோபள நரஸிம்ஹனையுஞ் சேவித்துப் புறப்பட்டு, "தெழிகுரலருவித் திருவேங்கடமலையேறி, திருவேங்கட முடையானையுஞ் சேவித்துநிற்க, அவ்வளவிலே "தாழ்சடையும் நீண்முடியும் ஒண்மழுவும் சக்கரமும் சூழரவும் பொன்னாணும் தோன்றுமால்-சூழுந் திரண்டருவி பாயுந் திருமலைமேலெந்தைக் கிரண்டுருவு மொன்றாயிசைந்து" என்றாழ்வார் அநுபவித்த ஹரிஹராகாரமொத் திருக்கையாலே, சைவரித்தைக் கேட்டு எங்கள் நயினாரென்று பிணங்கிவர, உடையவரும் அவர்களுடனே உங்கள் தம்பிரானுக் கஸாதாரண சின்னமான த்ரிசூலடமருகத்தையும், எங்கள் ஸ்வாமிக் கஸாதாரண சின்னமான திருவாழிதிருச்சங்காழ்வார்களையும் பண்ணி, திருவேங்கடமுடையான் திருமுன்னே வைத்தால், அவரத்தை யெடுத்து தரித்துக்கொண் டருள்கிறாரோ, அத்தைவிட்டு அவர் ஸ்வரூப நிரூபணம் பண்ணக்கடவதென்று, அவ்வாயுதங்களை அவர் ஸந்நிதியிலே வைத்து, ஆருமில்லாதபடி, கர்ப்பக்ருஹத்தை சோதித்து திருக்காப்பைச் சேர்த்துக்கொண்டு புறப்பட்டுவந்து, ப்ராதக்காலமானவாறே திருக்காப்பை நீக்கிச் சேவித்தருளினவளவிலே, "கூராழி வெண்சங்கேந்தி" த்ரிசூலடமருகத்தைக் காற்கடைக்கொண் டிருக்கக்கண்டு, ஆநந்தாச்ருக்கள் பனிப்பக் கொந்தளித்துக்கொண்டு அலைத்தடித்து சைவரை யடித்தோட்டிவைத்து, "பின்னை வேங்கடத் துச்சியில்கண்டு" என்கிறபடியே வர்ஷாகவலாஹகம் போலே, அகிலர்க்கும் அகிலபாபத்தையும்போக்கி அகிலாபேக்ஷித ப்ரதான திருவேங்கடத்தெந்தையைத் திருவடிவணங்கி, அப்போதே திருமலையிறங்கி திருத்தாழ்வரையி லாழ்வார்களையுந் திருவடிதொழுது புறப்பட்டு, பெருமாள்கோயிலுக் கெழுந்தருளி, பேரருளாளரையுஞ் சேவித்து, புறப்பட்டு ஸ்ரீபெரும்பூதூர் திருநீர்மலை முதலான கிழக்கில் திருப்பதிகளையுஞ் சேவித்து, மதுராந்தகத்தேற வெழுந்தருளி, ஏரிகாத்தபெருமாளையுஞ் சேவித்து, தம்மை பெரியநம்பி க்ருபைபண்ணியருளின திருமகிழடியை தண்டனிட்டு, திருவயிந்திரபுரத் தெய்வநாயகனையும் திருவடிவணங்கி, தொண்டமண்டலத்திலுண்டான மாயாவித்வான்களையும் ஜயித்துப் புறப்பட்டு, வீரநாராயணபுரத்தேசென்று, நாதமுனிமன்னனையுஞ் சேவித்து, நாதமுனிகள்யோகத்திலே யெழுந்தருளியிருந்த விடத்தையும் சேவித்து, இப்படி ப்ரதக்ஷிணம் பண்ணி, மணங்கித்திருவணையாடி, திருவரங்கம் பெரியகோயிலிலே யெழுந்தருளி, பெரியபெருமாளை, அமலனாதி பிரானிற்படியே அடியைப்பிடித்து

முடியளவாக முடிவில்லதோரெழில் நீலமேனியையும் அனுபவித்து, அநுசுவித்துக்கொண்டு, ஜயஸ்ரீயுடனிற்க, பெருமாளும்பவளவாய்முறுவல் ப்ரகாசிக்க உமக்கொருகுறைகளு மில்லையேயென்ன ; ஸ்ரீ பாஷ்யகாரரும் “ திருமா லுருவோடவன் சின்னமே பிதற்றுநிற்பதோர் திருமால்தலைக்கொண்ட நங்கட்கெங்கேவருந் தீவினையே ” என்கிறபடியே அங்கும் தேவரீரையே சிந்தித்தெங்குந்திரிந்துவந்த அடியேனுக்கும் ஒரு குறையுண்டோவென்று விண்ணப்பஞ்செய்ய, பெருமாளும் உகந்து தீர்த்தப்ரசாதமும் ப்ரசாதிப்பிக்க ஸ்வீகரித்து புறப்பட்டு மடமேயெழுந்தருளி ” அணியரங்கன் திருமுற்றத் தடியார்தங்கள் இன்பமிகுபெருங்குழுவுகண் டுகந்து அவர்களைக்ருபைபண்ணிக்கொண் டெழுந்தருளியிருந்தார்.

இப்படி உடையவரும், ஊரும் நாடும் உலகமும் தம்மைப்போலேயாக்கி வாழ்ந்தருள்கிறகாலத்திலே ; இவரை ஆஶ்ரயித்தமுதலிகளில், கூரத்தாழ்வான் சகலசாஸ்த்ர வித்தமராயிராநிற்க ; ஒருக்கால் வர்ஷாகாலத்திலே மத்யாஹ்ந காலமளவாக வர்ஷம்வர்ஷிக்க, ஸங்கவகாலந்தவறி மத்யாஹ்நகாலமானவாறே, உபாதானகாலந்தவற, அஹன்யஹநிஶிஷ்டா க்ரகண்யஜனக்ருஹங்களிலும் உபாதானம்பண்ணிவந்தே திருமேனியாத்ரை நடவாநிற்க ; அன்றைக்குத் திருமாளிகையிலே சஞ்சிதபதார்த்தம் ஒன்றும் இல்லாமையாலே, நீராடியெழுந்தருளி, திருவடிவிளக்கி, ஒருபலத்தை யமுதுசெய்யப்பண்ணி, தீர்த்தஸ்வீகாரம் பண்ணியிருந்து, சாயங்காலமானவாறே தத்காலீன கர்மத்தைச்செய்து, நம்பெருமாளைச் சேவித்துவந்து, திருவாய்மொழி அனுசந்தானமேதாரகமாகப் பட்டினியே கண்வளர்ந்தருள ; அவ்வளவிலே நம்பெருமாள் பெரியஅவசரம் அமுதுசெய்தருளி, திருச்சின்னம் பரிமாற, ஆண்டாள், காஹளநாதங்கேட்டு, உம்முடைய பத்தர்பட்டினியேயிருக்க, நீரென்ன குலாவிக்குலாவி அமுதுசெய்கிறீரென்ன ; அவ்வாக்யம் பெரியபெருமாள் திருச்செவியிலுற்று, திண்ணையிலே நித்ரைபண்ணியிருந்த உத்தமநம்பிகனவிலே பெருமாள் எழுந்தருளி, ஆழ்வான் இன்றைக்கு உபவசித்திருக்கிறார். நம்பீ; நம்மக்காரவடிசில் தளிகையை உபயசத்ரசாமரசகலவாத்ய ஸஹிதமாக சிரசாவஹித்துக்கொண்டுபோய்க் கொடுமென் றருளிச்செய்ய, உத்தமநம்பியும், ஸ்வப்னந்தெளிந்து கண்களை விழித்துப்பார்த்து, த்வரித்தெழுந்திருந்து, பெருமாளருளிச்செய்தபடியே, தாமே சிரஸாதளிகையை வஹித்துக்கொண்டு, அகிலவாத்யத்துடன் ஆழ்வான்திருமாளிகை

வாசலிலேசெல்ல ! ஆழ்வானும், பதறி யெழுந்திருந்து இதென்னென்று நினைத்து எதிரேசென்றவாறே, நம்பியும், நம்பெருமாள், உமக்கு அக்கார வடிசில் தளிகையை அனுப்பியருளினார். அங்கிகரியுமென்ன ! ஆழ்வானும் தளிகையை மஹாப்ரசாதமென்று சிரஸாவஹித்துக்கொண்டு அடியேனுக்கு அடியிலே சர்வாபீஷ்டமும் தந்தருளினார். இது த்ரயத்தளிகையா யிருக்கு மென்று தமக்கும் ஆண்டானுக்குமாக இரண்டுதிரளை அங்கிகரித்துசேஷத் தை விட்டருளி ! ஆண்டானைப்பார்த்து, என்னினைத்தாய் நீயென்ன ! அவ ரும், அடியேன் ஒன்றும் நினைக்கவில்லை, அவசரம் அமுதுசெய்தருளி திருச்சின்னம்பணிமாறினவாறே உன்பக்தியிப்படி பட்டினியிருக்க நீ[illegible] குலாவி யமுதுசெய்கிறீரென்ற சித்தனையென்று விண்ணப்பஞ்செய்ய! ஆண் டாளை, இப்படி சொல்லலாமோவென்று வெறுத்து, ப்ரசாதத்தை தாமும் ஸ்வீகரித்து அவருக்கும் ப்ரசாதித்தருளினார், பட்டரும், சீராமப்பிள்ளை யும், அவதரிக்கைக்குஹேது இப்பிண்டங்களிறே.

(ஸ்ரீ பட்டர் அவதாரவைபவம்.)

இப்படி நம்பெருமாள் அநுக்ரஹத்தாலே ஆழ்வானுக்கு ஒரு குமாரர், வைகாசியில் அநுராதத்தில் திருவவதரித்தருளினார். திருநாமம் சாத்துகைமுதலான உஜ்ஜீவனம்சத்துக்கு உடையவர் கடவரென்று, ஆழ் வான்தமக்கதில் அந்வயமற்றிருக்க, ஸத்யாபௌஷசநி வ்ருத்தியானவுடனே, எம்பெருமானார் ஆழ்வான் திருமாளிகையேற வெழுந்தருளி, எம்பாரைப் பார்த்து ஆழ்வான் குமாரரை யெடுத்துக்கொண்டு வாருமென்ன, அவரும் உள்ளே ஆண்டாள் பக்கல்சென்று, குலக்கொழுந்தான குமாரரைத்தம்மார் விலே யணைத்துக்கொண்டு, த்ருஷ்டிதோஷாதிகள் ஆகாதபடி பங்களைதிரக் குழந்தைக்கு ரக்ஷணார்த்தமாக, த்வயாநு சந்தாநத்துடனே மங்களா சாசனம்பண்ணிக் கொண்டுவந்து, எம்பெருமானார் தண்டாமரைக் கண்க ளாலே குளிரக்கடாக்ஷித் தருளும்படி திருக்கைத்தலத்தே பிடித்தருள ! உடையவரும்ஹர்ஷப்ரகர்ஷத்துடன் அநுக்ரஹருக்கள்பணிப்பக்கடாக்ஷிக்கு மளவில், சிசுவினுடைய பசுபசுகென்கிற தேஜோவிசேஷத்தையும் திருமுக வொளியையும் கண்டு, எம்பாரே ? த்வயம் பரிமளியாநின்றது, என்செய்தீ ரென்ன ! அவரும் காப்பாக, த்வயாநுசந்தாநம்பண்ணிக்கொண்டு எடுத்துக் கொண்டு விடைகொண்டேனென்ன ! உடையவரும், கர்த்தவ்யாம்சத்துக்கு முற்பட்டீரோவென்று திருமேனிபேணுதலுக்கு உகந்தருளி, உஜ்ஜீவனம்சத் துக்கும் நீரேகடவீரென்று நியமித்தருளி, பசுங்குழந்தைக்குப் பஞ்சாயுதத்

திருவாபரணமும் திருக்கையாலே சாத்தியருளி, நாமகரணத்திலே எம்பார் திருக்கையாலே திருவிலச்சினையும் சாத்துவித்து ஸ்ரீபராசரபகவான் திருநாமமாக ஸ்ரீ பராசரபட்டரென்று திருநாமத்தையும் சாத்தியருளி, ஆளவந்தாருடைய இரண்டாமிழவையுந் தீர்த்தருளினார். (௧௬௬) "புத்ரீக்ருதோ ரங்ககுருஸ்தேந பராசர: ஸூரகுலப்ரதீப:, கோவிந்தஶிஷ்யஸ்ய ச யாமுநார்ய மநோரதம் பூரிதவாந் த்விதீயம்" (పుత్రీకృతో రంగగురుస్తేన పరాశరః సూరకులప్రదీపః, గోవిన్దశిష్యస్య చ యామునార్యమనోరథం పూరితవాన్ ద్వితీయమ్) என்று லக்ஷ்மீகாவ்யத்திலே இவ்வர்த்தம் உத்தமநம்பியாலும் சொல்லப்பட்டதிறே.

அநந்தரம், எம்பார் திருத்தம்பியார் சிறிய கோவிந்தப்பெருமாளுக்கு ஒரு குமாரர் அவதரித்தருள, அத்தைக் கேட்டு உகந்து, உடையவர், ஆளவந்தார் க்ருபிக்கப்பெற்றோமேயென்று, அவர் திருமாளிகையேற வெழுந்தருளி, அக்குமாரனையும் க்ருபையாலே கடாக்ஷித்தருளி, அக்குமாரருக்கு ஸ்ரீபராங்குச நம்பியென்று நம்மாழ்வார் திருநாமம் சாத்தியருளி, பரமாசார்யருடைய த்ருதீயமான இழவையும் தீர்த்தருளினார். (௧௬௭) "கோவிந்தராஜாந்வய ஸோமஸூநு: பராங்குஶோ யாமுநதௌர்மநஸ்யம், அபாசகார ப்ரஸபம் த்ருதீயம் விராஜதே வ்ருத்தமணிப்ரதீப:" (గోవిన్దరాజాన్వయ సోమసూనుః పరాంకుశో యామునదౌర్మనస్యం, అపాచకార ప్రసభం తృతీయం విరాజతే వృత్తమణిప్రదీపః) என்றிதுவும் லக்ஷ்மீகாவ்யத்தில் சொல்லப்பட்டது. பின்பு பட்டரைப் பெருமாள், மஞ்சள்நீர் குடிப்பித்து, புத்ரஸ்வீகாரம் பண்ணியருளி, திருமணத் தூணருகே தொட்டிலிட்டு, நாச்சியார் சீராட்டி வளர்க்க, வளர்ந்தருள்கிறவர், பெருமாள் அமுதுசெய்வதற்கு முன்னே தவழ்ந்து சென்று, படைத்திருந்த தளிகையிலள்ளி அமுதுசெய்யும்படியாயிறே வளர்ந்தருளினது.

பட்டர் ஐந்து திருநக்ஷத்ரத்திலே, "நெடுமாற்கடிமை" அநுஸந்திக்கிற ஆழ்வானை, ஐயா, ஆழ்வார் சிறுமாமனிசரென்று சிறுமை பெருமையாகிற பரஸ்பர விருத்த தர்மத்வயமும் ஒருவஸ்துவில் கிடக்குமோ? இரண்டையும் அருளிச்செய்வானென்னென்று கேட்க; ஆழ்வானும், நல்லீர்; கேட்டபடி யழகிது, நீர் அநுபநீதராகையாலே உமக்கிப்போது சாஸ்த்ரங்கொண்டு இசைவிக்கவொண்ணாதே, ப்ரத்யக்ஷத்திலே உமக்குக் காட்டுகிறோம் கேளீர், திருமேனி சிறுத்து ஜ்ஞானம் பெருத்திருக்கிற சிறியாச்சான் அருளாளப்பெருமாளெம்பெருமானார் போல்வாரைக் காணும் சிறுமாமனிசர் என்கிறதென்று இசைவித்தருளிச்செய்தார்.

பட்டர் ஐந்து திருநக்ஷத்ரத்திலே, திருவீதியிலே புழுதியளைந்து விளையாடாநிற்க, ஒருவன் சர்வஜ்ஞபட்டன் வந்தானென்று அதிசம்ப்ரமத்துடன் காளமூதிவர; இவரும், உடையவரும், ஆழ்வாரும், ஆண்டானும், அருளாளப் பெருமாளெம்பெருமானாரும், எம்பார்முதலான பெரியோர்களிருக்குமிடத்திலே, இவனாரடா! சர்வஜ்ஞபட்டனென்று விருதூதி வருகிறானென்று, இரண்டுதிருக்கையிலும்கிடந்த புழுதியை அள்ளிக்கொண்டு, அவனைப் பார்த்து, நீ சர்வஜ்ஞனன்றோ; இதெத்தனையென்று சொல்லென்ன, அவன், அதுக்கொன்றும் சொல்லமாட்டாதே லஜ்ஜித்து வாயடைத்துக்கவிழ்தலையிட்டு நிற்க; பட்டர் அவனைப்பார்த்து, கெடுவாய், இதொருகைப்புழுதியென்றுசொல்லி சர்வஜ்ஞனென்று விருதூதித் திரியமாட்டாமல், அஜ்ஞனாய் விட்டாயே, இனி உன்னுடைய சர்வஜ்ஞனென்கிற விருதையும், சப்ரமத்தையும் புகடென்று, காளத்தையும் பறியுங்கோளென்கிற மழலைச்சொல்லை அவன்கேட்டு, இவர் ஆருடையபுத்ரரென்ன, ஆழ்வான் குமாரரென்று அங்குள்ளார்சொல்லக்கேட்டு, அவனும், பறப்பதன்குட்டி தவழுமோவென்று ஆச்சர்யப்பட்டு, பட்டரைத்தன்தண்டிகையிலே வைத்துக்கொண்டு ஆழ்வான் திருமாளிகை வாசலிலே சென்றவாறே! பொன்னாச்சியார்கண்டு, இவர்செய்த சிறுச் சேவகத்தைக் கேட்டு, வாரியெடுத்துக்கொண்டு, த்வயாநுசந்தாநத்தாலே ரக்ஷையிட்டு, தம்பரமல்லன வாண்மைகளைத் தனியேநின்று தான் செய்வரோ, எம்பெருமான் உன்னைப்பெற்ற வயிறுடையேன் இனியான் என்னசெய்வேன் என்று முன்றானையாலே யிவரைமூட்டாக்கிட்டு, உள்ளே கொண்டுபுகுந்து, கண்ணெச்சிலாக இவரைத்திருவீதியில் போகவிடுவார்களோவென்று வெறுத்து, ஆண்டாள் திருக்கையிலேகொடுத்து, ஸ்ரீபாத தீர்த்தத்தைத்தெளித்து, இவ்விபூதியில் இவர்நெடுநாள் தங்குமவரோவென்று வயிறுபிடித்தருளினார்.

பட்டரும் உபநீதரானபின்பு, வேதாத்யயநம் பண்ணுவிக்க, இவர் மேதையிருக்கும்படி ஒருசந்தையிட்டுவர, அதன்மற்றைநாள் ஓதுகிறகடைக்கெழுந்தருளி மறித்துச் சந்தையிடப்புக்கவாறே, ஓதுகிறகடையில் நின்றும் போந்து, விளையாடிக்கொண்டு எழுந்தருளியிருக்க; எல்லாரும் ஓதாநிற்க இவர்புறப்பட்டு வந்தாரென்று, ஆழ்வானும் ஆண்டானுங்கேட்டு, அப்பரோ? எல்லாருமோதாநிற்க நீர் ஓதாமல் வருவானேனென்ன; இவரும், அவர்கள் ஓதினவிடத்தையே ஓதாநின்றார்களென்ன; ஆகில் நீர்நேற்றுசந்தையிட்ட ப்ரகரணத்தைச்சொல்லிக் காணீரென்ன, மறித்துச்சந்தையிட்டபடியே உச்சரித்துக்காட்டியருள; ஆழ்வானும் ஆண்டானும் பயப்பட்டு, இன்னம்

சிறிதுநாள் இவரை ஓதவிடவொண்ணாதென்று, தங்களிலே சங்கித்திருந்தார்கள். ஆழ்வானும் எம்பாரும், பட்டருக்கு அர்த்தசிக்ஷைகளுமெல்லாம் பண்ணிவைத்தார்கள்.

பெருமாள், ஒருக்கால் திருத்திரையை வளைத்துக்கொண்டு ஏகாந்தமாகவெழுந்தருளி யிருக்க, பட்டர்திருவடிதொழப்புக, பெருமாள் முனிந்து புறப்படவிட்டத் திருவுள்ளமாக ; அவ்வளவிலே, அவனை யழையுங்கோளென்று நம்பட்டருக்கு அருளப்பாடென்ன : உள்ளேபுகுந்து தண்டனிட்டுநின்றவளவிலே ; பெருமாளும், புறப்படவிட்டபோது என்னினைந்திருந்தாயென்ன, பெருமாளும் நாச்சிமார்களுமாக நினைத்திருந்தேனென்ன! முன்பு நம்மைநினைத்திருந்தபடி யெங்ஙனேயென்ன ; ஆழ்வானும் ஆண்டாளுமாக நினைத்திருப்பேனென்று விண்ணப்பஞ்செய்ய ; பெருமாளும், நம்மை, நம்மானை, முன்புபோலே நினைத்திரு மென்று திருவுள்ளமாயருளினார்.

ஆழ்வானும், பட்டருடைய விவாஹோசிதவயః பரிணாமங்கண்டு, உடையவருடனே, பிள்ளைக்கு விவாஹம் பண்ணிவைக்கும்படி யெங்ஙனே, நம் உறவுமுறையார் ப்ராக்ருதராயிராநின்றார்களென்று விண்ணப்பஞ்செய்ய; உடையவரும், பெரியநம்பி திருமேனிசம்பந்தத்திலே ஸ்ரீவைஷ்ணவ சந்தானிகரிடத்திலே பட்டருக்குப் பெண்கொணர்ந்தால், இது ஸ்வசூத்ரசாகைகளுக்கும் ப்ராஹ்மண்யவைஷ்ணவத்திற்கும் பெரியசரணமென்று தட்டாகாதிறேயென்ன ; ஆழ்வானும் சம்மதித்து, ஆண்டாளுடன் ஆலோசித்து, உடையவரை முன்னிட்டு அவர்களிடத்தே பெண்கேட்க ; ஸ்ரீவைஷ்ணவர்களும், பட்டருடைய ஆபிஜாத்யங்கண்டு கொடுக்கத்தேட, புதுசம்பந்தமென்று ஒருக்கால்இசையாதிருக்க; ஆண்டாள், ஒருநாள்ஆழ்வானைப்பார்த்து, பிள்ளைகள் பெருத்தார்கள், ஒருகார்யஞ்செய்விக்க வேண்டாவோவென்ன; ஆழ்வானும். ஈஶ்வரகுடும்பத்துக்கு என்னையிருந்து கரையச் சொல்லுகிறாயோவென் றருளிச்செய்தருளி, பெரியபெருமாளைத் திருவடிதொழுது, மடங்குகிறபோது, பிள்ளைகள் பெருத்தார்கள்; ஒருகார்யஞ்செய்யவேண்டாவோவென்று சொல்லுகிறார்களென்று விண்ணப்பஞ்செய்ய ; பெருமாளும், திருவுள்ளம்பற்றினீரோ; அதற்குக்கடவீர்நாமன்றோ; தகுதியாகச்செய்விக்கிறோம்; நீர்போமென்று திருவுள்ளமாயருளி, அவர்களுக்குக் கொடுக்கும்படி ஸ்வப்நங் காட்டியருள ; மற்றைநாள் தாங்களே கொடுக்கிறோமென்று வந்து சொல்லி, அக்கைச்சியையு மன்னியையும் பட்டருக்கு தாரைவார்த்துக் கொடுத்துப் பெருபெருத்த கல்யாணஞ்செய்தருளினார்கள்.

(ஸ்ரீ இளையாழ்வார்வைபவம்.)

உடையவர் சந்யஸித்தருளுகிறபோது, சரீரசம்பந்தத்தை விட்டுவிடவேண்டுகிறதேதாவென்ன; நம்முதலியாண்டானையொழிய சந்யஸித்தோமென்றருளிச்செய்ய; இப்படி யருளிச்செய்யலாமோவென்று ஸ்ரீபாதத்தில் முதலிகள் கேட்க; இவரும், கையில்த்ரிதண்டத்தை விடிலன்றோ நம்முதலியாண்டானை விடுவதென்றருளினார். முதலியாண்டான் திருவாய்மொழி ஓதினபடி எம்பெருமானார் திருப்பள்ளிக்கட்டிலிலே ஏறியருளி, ஒருபாட்டு சந்தையிட்டவாறே, பரவசராய்அருளினார். இத்தைக்கண்டு எம்பெருமானாரும் (௧௯௮) ‘வேதவேத்யே பரே பும்ஸி ஜாதே தஶரதாத்மஜே, வேத: ப்ராசேதஸாதாஸீத் ஸாக்ஷாத்ராமாயணாத்மநா’’ (వేదవేద్యే పరే పుంసి జాతే దశరథాత్మజే వేదః ప్రాచేతసాదాసీ త్సాక్షాద్రామాయణాత్మనా) என்னுமா போலேவே தங்களும் ஆழ்வார்முகேந திருவாய்மொழியாய் வந்தவதரித்ததொன்றன்றோ வென்றருளினார்.

பெருமாள் பெரியதிருநாள்கண்டருளி திருக்காவேரியிலே தீர்த்தம் ப்ரசாதிக்க எழுந்தருள்கிறபோது, எம்பெருமானார், முதலியாண்டான் திருக்கைத்தலம்பற்றி யெழுந்தருளி நீராடிமீண்டெழுந் தருளும்போது, பிள்ளையுறங்காவில்லிதாசர் திருக்கைத்தலம்பற்றி யெழுந்தருள, சேவித்திருந்த முதலிகள் இதுக்கடியென்னென்று விண்ணப்பஞ்செய்ய; உடையவரும், ஜன்மம் உயர்ந்திருக்கச்செய்தே தாழநில்லாநின்றோமே என்கிற அபிமானம் உண்டே அல்லாதார்க்கு; அக்கொற்றையும் இல்லாதவரிறேயிவரென்றருளினார்.

பெரியநம்பிதிருமகளார் அத்துழாய் புக்ககத்திலே வாழுங்காலத்திலே, ஒருநாள் தீர்த்தமாடத் துணைவரவேணுமென்று மாமியாரையபேக்ஷிக்க; அவளும், உன்சீதன வெள்ளாட்டியைக் கொண்டுபோவென்று கடுத்துச் சொல்ல; நம்பிபக்கலிலே, ஐயா! என்னையிப்படிசொன்னாளென்ன, நாம் அறியோம், உங்கள்ஜீயருக்குச்சொல்லென்ன; இவரும் அங்கேசென்றுவிண்ணப்பஞ்செய்ய; உடையவரும், அருகிருந்த முதலியாண்டானைப் பார்த்து, உமக்கிந்தாரும் சீதனவெள்ளாட்டியென்று கொடுத்து, போமென்ன; ஆண்டானும், கூடவெழுந்தருளி, நீராட்டப் பண்ணுவித்துக்கொண்டு வந்து, அவருடைய பக்கத்திலேநின்று, தாஸவ்ருத்திகளைச்செய்யத் தொடங்கினார். அவருடைய புக்ககத்தார் இதுவென்ன ஆண்டானென்ன, என்னைவரவிட்ட உடையவரைக் கேளுங்கோள், ஆசார்யர்சொன்னது செய்யவேணுமென்ன; அவர்

களும் நம்பி ஸ்ரீபாதத்தேறப்போய், நம்பி, முதலியாண்டானை வரவிட்டு எங்களைப்படி நசிப்பிக்க வேணுமோவென்ன; நாம் அறிக்கோமோ; உடையவரைக் கேளுங்கோளென்ன, அவர்களும் அங்கேசென்று விண்ணப்பஞ்செய்ய; உடையவரும் ஆண்டானை அத்துழாய்க்கு சீதனவடிமையாகத் தந்தோம், அங்குநிற்க உங்களுக்கு அநிஷ்டமாகில் இங்கிருந்து அடிமை செய்கிறுமென்று அழைப்பித்துக்கொண் டருளினார்.

பெரியநம்பிமாறநேர்நம்பியை ப்ராஹ்மமேதத்தாலே ஸம்ஸ்கரித்துப் பள்ளிபடுத்தருள, இதுகேட்டு, எம்பெருமானார்நம்பி ஸ்ரீபாதத்தேறச்சென்று தண்டஞ்சமர்ப்பித்து, ஜீயர் சம்சாரம் சிலுங்டாகபடி அடியேன் ஒருவழியாலே வரம்புகட்ட, தேவரீர் ஒருவழியாலே பிரிக்கருள நின்றதேயென்று விண்ணப்பஞ்செய்ய; நம்பியும்,வாரீர்உடையவரே; இக்ஷ்வாகுவம்சத்திலே அவதரித்து சாமான்யதர்மத்தை வெளியிட்டருளுகிற பெருமாளைக்காட்டில் நான்பெரியவனோ; பெரிய உடையாரைக் காட்டில் இவர் தண்ணியரோ; சாமான்ய தர்ம நிஷ்டரான தர்மபுத்ரனைக்காட்டில் நான் பெரியவனோ, ஸ்ரீவிதுரனைக்காட்டில் இவர்தண்ணியரோ; "பயிலுஞ்சுடரொளி" "நெடுமாற்கடிமை" கடலோசையோவென் றருளிச்செய்ய; உடையவரும் உகந்து சம்மதித்தருளி யிருக்கச்செய்தே; மாறநேர்நம்பி திருநாட்டுக் கெழுந்தருளும்போது பெரியபெருமாள் திருவடிகளிலே சரணமென்னுதல் ஆளவந்தார் திருவடிகளிலே சரணமென்னுதல் செய்யக்கண்டிலோம்; இதுவென்னென்று உடையவருடனே பெரியநம்பிஅருளிச்செய்தருள; உடையவரும் அவர்க்கப்போது ஸ்லோகத்வயாநுசந்தானமாயிருந்ததாய்க கொள்ளீரென்று விண்ணப்பஞ் செய்ய; நம்பியும் அதுபெண்கண்டிட்ட பிச்சன்வார்த்தையன்றோவென் றருளிச்செய்தருள; உடையவரும், பெண்ணினுடைய நித்யயோகத்தைத் திருவுள்ளம்பற்று தொழிகிற தென்னென்று விண்ணப்பஞ் செய்தார்.

ஒருநாள் உடையவர் ஒரு ஊமையை யழைத்துக்கொண்டு உள்ளே எழுந்தருளியிருந்து, கதவையடைத்துக்கொண்டு, ஏகாந்தத்திலே ஸம்ஜ்ஞையாலே தம்திருமேனியைத் தொட்டுக்காட்டியருள; அவனும் அதுவே தஞ்சமென்று புத்திபண்ணியிருக்க; இத்தைக் கதவுபுரையிலே ஆழ்வான் கண்டு, அய்யோ, கூரத்தாழ்வானாய்ப்பிறந்து பரக்கசாஸ்த்ரங்களைக் கற்றுக்கெட்டேன்; ஒன்றும் அறியாத ஊமையாய்ப்பிறந்தால் அடியேனுக்கும் உடையவர் இத்தையிரங்கியருளுவார் என்று மோஹித்தாரென்று ப்ரசித்தமிறே.

திருக்கோட்டியூர் நம்பி, தாம்திருக்கோட்டியூரிலே மேல்தளத்தின் மேலேபடிக்கதவைவிழவிட்டுக்கொண்டு,த்யாநித்தெழுந்தருளியிருக்க; உடை

யவர் அங்கேற வெழுந்தருளி, நம்பியைக் குறித்து, த்யாகமேது, மந்த்ரமேதென்று கேட்டருள; நம்பியும், த்யாகம், ஆளவந்தார் படைவீட்டிலே நீராடியருளும்போது அகமர்ஷணம்பண்ணி முழுகியிருந்தால், அவர் திருமுதுகிருக்கும்படி வல்லான்கடாரம் கவிழ்த்தாப்போலே யிருக்கும், அதுவே எனக்கு த்யாகம்; யமுனைத்துறைவர் என்கிறவிதுவே மந்த்ரமென்றருளிச்செய்தருளினார். ஆகையாலே, ஆசார்யவிக்ரஹமே சதாத்யேயமென்றும், தந்நாமமே சதாஜபமென்றும் உடையவர்க்கு உபதேசித்தாராய்த்து. (௩௬௯) "[illegible]" ([illegible]) என்கிறபடியே பெண்ணும்பேதையும் எல்லாரும் சம்ஸாரோத்தீர்ணராம்படி சர்வரையும் இப்படி விசேஷகடாக்ஷஞ் செய்துகொண்டு, கூரத்தாழ்வான், முதலியாண்டான், அருளாளப் பெருமாளெம்பெருமானார் முதலான முதலிகளுக்கும், ஸ்ரீபாஷ்யார்த்தம் ப்ரசாதித்தருளிக்கொண்டு சுகமே வாழ்ந்தருள்கிறகாலத்திலே; சோழமண்டலத்திலே, ராஜ்யம்பண்ணிக்கொண்டிருக்கிற சோளராஜா தம் சைவனாகையாலே, வேதவிருத்தமான கல்பிதமாய் நூலென்கிற சைவாகமத்தையே மெய்நூலென்று, த்ருடதர ப்ரமாணமாக அத்யவசித்து, தானும்தன்புரோஹிதனுமாகக் கூடவிருந்து, தன்னுடைய நாட்டிலுள்ள வித்வான்களை யெல்லாரையுந் திரட்டி, (௩௭௦) "சிவாத் பரதரம் நாஸ்தி" ([illegible]) என்று ஓலையிலெழுதியிடச்சொல்லித் தண்டிக்க; சிலர் அவனுடைய ஆஜ்ஞைக்கஞ்சி எழுதியிட்டார்கள். சிலர், அபேக்ஷிதமான அர்த்தக்ஷேத்ராதிகளை ஆசைப்பட்டு எழுதியிட்டார்கள். இதைக் கண்டு, நாலூரான், அந்த ஆபாஸலிகிதத்தைச்சொல்லி, இவர்களிட்டதாலென்ன ப்ரயோஜனமுண்டு, ராமாநுஜன் கூரத்தாழ்வான் இட்டாலன்றோ இட்டதாமென்ன; சோளனும், அப்பொழுதே சில மனுஷ்யரைப்பார்த்து, ராமாநுஜனை அழைத்துக்கொண்டு வாருங்கோளென்று கோயிலுக்குவரக் காட்டினான். அந்த ராஜமனுஷ்யரும், உடையவருடைய மடத்து வாசலிலே வந்து, ராமாநுஜனெங்கேயென்று கேட்க; இச்செய்தியை, உடையவருக்கு நீராட்டத் திருமஞ்சனம் உகந்து கொடுக்கிற கூரத்தாழ்வான் திருச்செவியிலே ஒரு ஸ்ரீவைஷ்ணவர் வந்து ரஹஸ்யமாக விண்ணப்பஞ்செய்ய; ஆழ்வானும், உடையவருடைய த்ரிதண்ட காஷாயாதிகளையும் தரித்துக்கொண்டு, உடையவருக்கும் விண்ணப்பஞ் செய்யாதே புறப்பட்டு, வந்த ராஜமனுஷ்யருடன் போகத்தேட; அவ்விசேஷங்கேட்டு, ஆழ்வானுடனே பெரியநம்பியும் புறப்பட்டெழுந்தருள; இவர்களை அழைத்துக்கொண்டு போனார்கள்.

பின்பு உடையவரும் த்ரிதண்ட காஷாயாதிகளைங்கே தாரும்கோளென்ன; கூரத்தாழ்வான் தரித்துக்கொண்டு ராஜ மனுஷ்யருடனே எழுந்தருளினாரென்று முதலியாண்டான்விண்ணப்பஞ்செய்ய; ஆகில் அவருடைய வெள்ளையைத் தாரும்கோளென்று வாங்கித் தாம் சாத்திக்கொண்டு, ஆழ்வானுக்கும், பெரியநம்பிக்கும், என்ன தீங்கு வரப்போகிறதோவென்று போரக்கலெசித்திராநிற்க; முதலியாண்டான் உள்ளிட்ட முதலிகளெல்லாரும்தேவரீர் இங்கிருக்க வொண்ணாதென்று விண்ணப்பஞ்செய்ய; உடையவரும், இனிச்செய்ய வடுப்பதென்னென்று வ்யாகுலந்த:கரணராய் விசாரித்தருளி, பெரிய பெருமாள் திருமுன்பேசென்று திருவடிகளிலேசரணம்புக்கு, "வெறுப்பொடுசமணர் முண்டர்விதியில் சாக்கியர்கள் நின்பால் பொறுப்பரியனகள்பேசில்" என்றுதொடங்கி "தலையையாங்கேயறுப்பதேகருமங் கண்டாயரங்கமாநகருளானே" என்று பெருமாளை நோக்கி, ப்ரபத்திபண்ணி, இப்போதாழ்வார் அருளிச்செய்தபடி சடக்கென அவன் தலையை யறுக்கக்கூடாது, அவன் பரிகரவானகையாலே முகாந்தரேணசெய்து வாராநின்றேன்; என்று விண்ணப்பஞ் செய்து, வெள்ளைசாத்தி, முதலிகளும் தாமுமாய் மேற்கே எழுந்தருளாநிற்க, பின்னையும் ராஜமனுஷ்யர் பின்தொடர, பின்னேஆள் த்வரித்து வருகிறதென்று முதலிகள் விண்ணப்பஞ்செய்ய; உடையவரும் வழியில் மணலையள்ளி "கொடுமைசெய்யுங் கூற்றமுமென் கோலாடிகுறுகப்பெறா, தடவரைத்தோள் சக்ரபாணி சார்ங்கவிற்சேவகனே" என்று இத்தையோதி அவர்கள் வருகிறவழியிலே யொழுக்கி வாரும்கோளென்ன; முதலிகளும் அப்படியே செய்ய; ராஜமனுஷ்யர் அந்தமணலை மிதித்து அப்பால் அடியிடப்போகாமலிருக்க; போகிறபார்ப்பார் மந்த்ரவாதம் பண்ணிப்போனார்களென்று மீண்டு போனார்கள். உடையவரும், முதலிகளுமாக "அரங்கத்துறையு மின்றுணைவனே" வழித்துணையாக வெழுந்தருளினார்கள்.

திருமலைநல்லான் சிஷ்யரான சிலவேட்முதலிகள் புலம்பாவாநிற்க, அம்மலையடியிலே ஒரு ஸ்ரீவைஷ்ணவர் எம்பெருமானாரைத் தேடியெழுந்தருளாநிற்க; அவர்கள் இவரைத் திருநாமமே குறியாக நீரெங்கிருந்து எழுந்தருளுகிறீரென்றுகேட்க, கோயிலில்நின்றும் வருகிறேனென்ன; அவர்களும், எம்பெருமானார்க் கொருகுறைகளுமில்லையே, பெரியபெருமாள் திருச்செல்வத்திற்கு ஒருகுறைகளுமில்லையேயென்று கேட்க; இவரும், என்னபெரிய பெருமாள், என்னதிருச்செல்வம், எம்பெருமானார்சோள வ்யாஜேநவெண்பரிதாநம் தரித்தெழுந்தருளினார். இன்னவிடத்தேயெழுந்தருளினாரென்று தெரியாது என்று அருளிச்செய்ய; அவர்களும் அவ்வார்த்தைகேட்டு வ்யாகுலப்பட்டு புலம்பாவுகை தவிர்ந்து அன்றுமுதல் ஆறுநாள்பட்டினியேகிடந்

தார்கள். ஆறுநாள்ராத்ரி அம்மலையடியிலே, எம்பெருமானாரும் முதலிகளும் மழையிலே நனைந்து, குளிரிலேயீடுபட்டுஇவர்கள்புனத்திலே நெருப்பொளி கண்டு, உடையவரும், அங்கேற நம்மைக் கொண்டுபோங்கோளென்று அருளிச்செய்ய, முதலிகளும் அங்கேற வெழுந்தருளுவித்துக் கொண்டுபோய் ; வழியெங்கே பிள்ளைகாள் என்றுகேட்க ! அவர்களும், ப்ராஹ்மணர்குரலாயிருந்தது. பெருவிடாயோடே ஒருகுரலாயிராநின்றதென்று ஓடிவந்து வேலியைப்பிரித்து, இங்கேவாருங்கோளென்று அழைத்துக்கொண்டுபோய், சாத்துகைக்குத்திருபரிவட்டங்களும் கொடுத்து, சாத்தியிருந்த திருப்பரிவட்டங்களையும் உலரவிட்டு, குளிர்போகக்காய்ச்சியொற்றி, எங்குநின்றும் எழுந்தருளுகிறதென்று கேட்க ; இவர்களும், கோயிலில்நின்றும் வருகிறோமென்று அருளிச்செய்ய ; எம்பெருமானார் செய்கிறதென்னென்று கேட்க; முதலிகளும், நீங்கள் எம்பெருமானாரை யறிந்தபடி யெங்ஙனேயென்ன ; நாங்கள் நல்லான் அடிமைகள். எங்களுக்குஹிதம் ப்ரசாதிக்கும்போது நமக்கெல்லாம் பரமாசார்யர் எம்பெருமானாராயிருக்கும். ஆசையாலே உடையவர் திருவடிகளே சரணமென்றிருங்கோளென்று நல்லான் அருளிச்செய்தாரென்று விண்ணப்பஞ்செய்தார்கள். முதலிகளும், ஆகில் இவரோ உடையவரென்று காட்டினார்கள் ; அவர்களும் ஸ்ரீபாதத்தைக் கட்டிக்கொண்டுஅழுது வ்யாகுலப்பட்டு, திருவடிகளிலே விழுந்துசேவித்து, தேனும் தினையுமாகக் கொண்டுவந்து சமர்ப்பித்து, இத்தினை வறுத்து இடித்து தேனிற்கலந்து அமுதுசெய்தருள வேணுமென்று விண்ணப்பஞ்செய்ய ; முதலிகளும் அப்படியே செய்து அமுதுசெய்தருளி, அற்றைக்குக்கண்வளர்ந் தருளினார்கள். மற்றைநாள் விடிவோரை வேடமுதலிகளில் ஒருவரையும் தம்ஸ்ரீபாதத்து முதலிகளில் ஒருவரையுமாகக் கோயிலுக்குப்போகவிட, இவர்கள் உடையவருடனே நாற்பத்தஞ்சு திருநாமம் எழுந்தருளினார்கள். அவ்வேடமுதலிகளும், இவர்களைமலைக்குமேற்கே ஆறுகாதவழி கொண்டுபோய், ஒருவேடமுதலியகத்தேவிட ; அவ்வேடமுதலி பகலெல்லாம் வேட்டைக்குப்போய், வந்து உள்ளேபுக்கவாறே, ப்ராஹ்மணர்பட்டினியே யிருக்க, நாம் உண்ணலாகாதென்று, அருகாக ஒருக்ராமத்திலே கட்டளைவாரியென்பா னொருவன் அகத்திலே இவர்களைக் கொண்டுபோய்விட்டு, வேண்டும் கட்டளைகளையும் பண்ணி, இப்போதே அமுதுசெய்யப் பண்ணுவியுங்கோளென்று சொல்லுங்கோளென்று ஆள்கொடுத்துப்போகவிட ; அவர்களும், அங்கேறஉடையவரையும், முதலிகளையுங் கூட்டிக்கொண்டுபோய், அவன் அகத்தேவிட்டு, இவர்களை இப்போதேஅமுதுசெய்யப் பண்ணுவியுங்கோளென்று சொல்லி, வேண்டுங் கட்டளைகளும் பண்ணுவித்து மீண்டுபோனார்கள்.

அவ்வகமுடையானுடைய பத்தியும், உங்களுக்கு அமுது செய்யவேண்டாவோவென்று தண்டஞ்சமர்ப்பித்து விண்ணப்பஞ்செய்ய; முதலிகளும், வேண்டாவென்று அருளிச்செய்தார்கள். அவளும் உங்களுக்கு சந்தேஹிக்கவேண்டா அடியேனும் எம்பெருமானார் ஸ்ரீபாதத்தை யுடையேனென்றாள்; முதலிகளும், எம்பெருமானார் ஸ்ரீபாதத்தை யாச்ரயித்தபடியெங்ஙனேயென்றுகேட்க; அவளும், நாங்கள் இவ்விடம் வர்ஷமின்றியேயிருந்தவாறே அங்கேகோயிலிலே வந்திருந்தோம், அங்கே என்னகமுடையாரும் நானும் ஒருமச்சுமேலே யிருக்கையாயிருக்கும், அப்போதுஎம்பெருமானார் ஏழுதிருமாளிகையிலே மாதுகரம்பண்ணி அமுதுசெய்தருள்வர்; அவர் திருவீதியிலே எழுந்தருளும்போது, அகளங்கநாட்டாழ்வான் உள்ளிட்டமுதலிகள் எல்லோரும் இவர் திருவடிகளிலே சேவிக்கக்கண்டு இவர் மாதுகரத்திற்கு அந்தத்திருமாளிகையேற வெழுந்தருளினார்; அடியேனும், மச்சுமேல் நின்றும் இறங்கிவந்து இடைகழியில் தகைந்துநின்றேன். அவர் இதுஎன்னபெண்ணே என்று கேட்டருளினார், உம்மைராஜாக்களும் உட்பட்டமுதலிகளும் தண்டனிடாநின்றார்கள்; நீர்மாதுகரம்பண்ணாநின்றீர், இதற்கடியென்னென்றவாறே, உடையவரும், நாம் அவர்களுக்கு பகவத்விஷயத்தில் சிலநல்வார்த்தைசொல்லுகையாலே காணென்றருளிச் செய்தருளினார்; அந்தநல்வார்த்தையை அடியேனுக்கும் ப்ரசாதித்தருளலாகாதோவென்ன, அப்போதுஹிதம் அருளிச்செய்து எழுந்தருளினார்; பின்பு எங்கள் நாடு வர்ஷமுண்டாய், நாங்கள் எங்கள்நாட்டேறப் போகும்போது அவர் அருளிச்செய்த நல்வார்த்தையை மறந்தேன்; உடையவரை சேவிக்கப்பெற்றிலேனேயென்ற இழவோடே நினைத்திருக்க, அற்றைக்கும் அங்கேறவெழுந்தருளினார். அடியேனும் மச்சில்நின்றுமிறங்கிவந்துதண்டனிட்டுநின்று, நாங்கள்எங்கள்நாட்டேறப்போகாநின்றோம். தேவரீர் முன்பு அருளிச்செய்தநல்வார்த்தையைமறந்தேனென்ன, அப்போதுஉடையவரும்மீளவும் த்வயத்தை நெஞ்சிலே நிலைநிற்கும்படி குருபரம்பரா பூர்வகமாக உபதேசித்து, மீண்டு எழுந்தருளத்தேட, அடியேனுக்கு ஆத்மரக்ஷையாக ஏதேனும் ஒன்று தந்தருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்தேன்; அப்போது சாத்தியிருந்த ஸ்ரீபாதுகைகளை ப்ரசாதித்தருளினார். அடியோங்களும் அன்றேபோந்தோம், பின்னைசேவிக்கப் பெற்றிலோமென்றவாறே, உடையவரும் தம்திருவுள்ளத்திலேவிசாரித்தருளி, திருப்போனகம் சமைக்கவருளிச்செய்து, இவள்செய்யுமது பார்த்திருமென்று ஒரு ஸ்ரீவைஷ்ணவனைவைக்க, அந்த ஸ்ரீவைஷ்ணவரும் பார்த்திருக்க; அவளும், அடைவாகச்சமைத்து, முன்புஉடுத்த புடவையையும் அவிழ்த்து, சுத்தமான புடைவையும் உடுத்து, உள்ளேபுகுந்து,

எம்பெருமானார் திருவடிகளே சரணமென்று உச்சரித்து, அவர் ஸ்ரீபாது
கைகளை ஏறியருளப்பண்ணி, திருவடி விளக்கி, அமுதுசெய்யப்பண்ணி, புறப்
பட்டு, முதலிகளுக்குத் தண்டஞ்சமர்ப்பித்து, ஸ்ரீபாதம் விளக்கி, அமுதுசெய்ய
வேணுமென்று விண்ணப்பஞ்செய்ய; முன்பு பார்த்திருக்கச்சொன்ன ஸ்ரீ
வைஷ்ணவரை யழைத்து, இவள் செய்தபடியென்னென்று கேட்டருள, அவ
ரும், இவள் திருப்போனகம் அடைவாகச்சமைத்து; முன்பு உடுத்த புடைவை
யையும் விடுத்து, சுத்தமான புடைவையையும் உடுத்து; திருப்போனகத்தை
யெடுத்துக் கொண்டுபோய் உள்ளே புகுந்து, கதவையடைத்து, த்யானம்
பண்ணியிருந்து அமுதுசெய்யப் பண்ணினாள். அதுகேட்டு நீண்டிருந்த
தொன்று! எம்பெருமானாய் இருந்ததில்லையென்றவாறே; அவள் தன்னையே
யழைத்து, நீயுள்ளே செய்ததென்னென்று கேட்டருள; அவளும், முன்பு
அடியேனுக்குத் தஞ்சமாக ப்ரசாதித்தருளின ஸ்ரீபாதுகைகளைத் திருவடி
விளக்கி அமுதுசெய்யப்பண்ணியாய்த்து. ப்ரசாதம் சூடுவது, இப்போதும்
அப்படியே செய்தேனென்று விண்ணப்பஞ்செய்தாள்; ஆகில், அவை தன்னை
யிங்கே கொண்டுவந்து காட்டென்ன; அவளுங் கொண்டுவந்து காட்ட; அவை
அங்குத்தைக்கு "எதித்தலைநாதன் இராமாநுசன் றன்னிணையடி" களுக்கு
ஒத்திருந்தது; ஆகில் இதுக்குள்ளே எம்பெருமானார் உண்டோவென்று
பார்த்துக்காணென்ன; அவளும் திருவிளக்கை யேற்றிக்கொண்டுவந்து
அடைவே பார்த்து, எம்பெருமானார் திருவடிகளைக்கண்டு அங்கே திகைத்து
நின்று, இது எம்பெருமானார் திருவடிகளைப்போலே யிராநின்றது, காஷாய
மில்லாமையாலே தெரிகிறதில்லை யென்றவாறே, நான்காணென் றருளிச்
செய்ய; அவளும் திருவடிகளைப்பிடித்துக்கொண்டு அழப்புக்கவாறே, கண்ணை
த்துடைத்து, எம்பெருமானார் அருளிச்செய்த வார்த்தை; ஒத்ததில்லையாகில்
முதலிகள் அமுதுசெய்யார்கள், அத்தை என்செவியில் சொல்லிக் காணு
என்ன; அவளும் விண்ணப்பஞ்செய்ய; அந்தவார்த்தையும் ஒத்திருந்தது;
(௱௭௧) "[illegible]" ([illegible]) என்கிறபாவநத்வ போக்யத்வங்களையும் உடைத்தா
யிருந்தது, இனி முதலிகள் "அமுதுசெய்யக்குறையில்லையென்றருளிச்செய்து,
நமக்குமாத்திரம் கூடாது "ஒருபாகவத் விக்ரஹம் அமுதுசெய்ய வில்லை
யென்ன; அவளும், ஆகில், பாலும்பழமும் சர்க்கரையுங் கொண்டுவந்து
சமர்ப்பிக்கிறேனென்று சமர்ப்பிக்க; இவரும் தம்முடைய எம்பெருமா
னுக்கு அமுதுசெய்யப் பண்ணி, தாமும் அமுதுசெய்தருளினார்; பின்பு
முதலிகளும் அமுதுசெய்து கண்வளர்ந்தருள; அப்பெண்பிள்ளை முதலி

கள் தளிகை ப்ரசாதத்தையுங் கூட்டிக்கலந்து, மச்சிலேயிருக்கிற தன்பர்த்தாவையெழுப்பி, ப்ரசாதமிட்டு, ப்ரசாதப்படப்பண்ணி, தான் ப்ரசாதப்படாமலிருக்க; அவனும், இதென்னென்று கேட்க; அவளும், கோயிலில் நின்றும், எம்பெருமானாரும் முதலிகளும் எழுந்தருளி அமுதுசெய்யமாட்டோமென்று கண்வளர்ந்தருளினார்க ளென்றவாறே; அவனும், நான் அதற்கென்னசெய்யவேணுமென்ன; நீர் எம்பெருமானாரை யாச்ரயிக்கவாரீரோவென்ன, அவனும் இசைந்து ப்ரத்யயம்பண்ணிக்கொடுக்க; அவளும் உடப்புடனே ப்ரசாதப்பட்டு நித்ரைபண்ணினாள். மற்றைநாள்பொழுது விடிந்தவாறே, எழுந்திருந்துவந்து, உடையவர் திருவடிகளிலே தண்டஞ்சமர்ப்பித்து, இற்றைக்கு எழுந்தருளியிருந்து இவனை க்ருபைசெய்தருள வேணுமென்று விண்ணப்பஞ்செய்ய; எம்பெருமானாரும் அற்றைக்கு அங்கே அவசரித்தருளி, அவளுக்காக இவனுக்கும் ஹிதோபதேசம் பண்ணி, விசேஷகடாக்ஷம் செய்தருளி அங்கே நாலைந்து நாளெழுந்தருளியிருந்து, த்ரிதண்டகாஷாயாதிகளையும் சம்பாதித்து, தம்திருவாராதநமான பேரருளாளர் சந்நிதியில்வைத்து, தண்டஞ்சமர்ப்பித்து, முன்புபோலே அவற்றை உடையவர் தரித்தருளினார்.

மற்றைநாள்மேற்கே வந்ஹிபுஷ்கரிணியாகிற க்ராமத்தேற வெழுந்தருளி, அங்கே சிறிதுகாலம் எழுந்தருளியிருந்து, அங்குநின்றும் மிதுலாபுரி சாளக்ராமத்தேற வெழுந்தருள; ஊரடைய ப்ரச்சந்ந விரோதிகளாகையாலே உடையவரை அநாதரித்திருக்க; உடையவரும், முதலியாண்டானை யழைத்து, இவ்வூரார் நீர் முகக்குந்துறையிலே நீரும் ஸ்ரீபாதத்தைநீட்டிக்கொண்டு இருமென்று நியமித்தருள; ஆண்டானும் அப்படியே செய்தருள; அவ்வூரார் இவர்ஸ்ரீபாததீர்த்த வைபவத்தாலே, நிவ்ருத்த அஹங்காரராய், மற்றைநாளேதெளிந்து வந்து, உடையவர் திருவடிகளிலே யாச்ரயிக்க, அத்தீர்த்தப்ரபாவத்தையிட்டு இன்றுமுதல் இவ்வூர் ஸ்ரீசாளக்ராமமென் றருளிச்செய்தருளினார். அங்கேவடுகநம்பியை ஸ்வபாதச்சாயாபந்நராம்படி விசேஷகடாக்ஷம்செய்து, அவர்க்கு நம்தர்சநார்த்தம் ப்ரசாதித்துக்கொண்டு, சிங்கர்கோயிலிலே சிறிதுநாளெழுந்தருளியிருந்து, விஷ்ணு வைஷ்ணவத்வேஷியானசோளன் க்ருமிகண்டனை நசிக்கும்படி ஆபிசரித்து மந்த்ரவாதம்பண்ணி, அங்குநின்றும்தொண்டனூரேறவெழுந்தருளினார். அங்கே அத்தேசத்திற்கு அதிபதியானவிட்டல் தேவராயன்மகள்பிசாசாவிஷ்டையாயிருக்க; அவனும், மந்த்ரவாதிகள் பலரையுங்கொண்டுதீர்க்கத்தேடினவிடத்திலும் தீராதபடியாலே துக்கிதனா யிருக்க, தத்பத்நியும், நிர்வாணமாய்

ஓடித்திரிகிற பெண்ணைக்கண்டு, மிகவும்வ்யாகுலப்பட்டிருக்குமளவிலே; நம்பியும், உபாதாநார்த்தமாக ராஜக்ருஹத்தேற வெழுந்தருளினவர். துக்கிதையான ராஜபத்நியைக்கண்டு, து:கஹேதுவென்னென்றுகேட்டருள; அவளும் தத்காரணத்தைச் சொல்ல, தொண்டனூர்நம்பியும் கேட்டருளி, நம்மாசார்யர் எம்பெருமானார் எழுந்தருளினார், அவர்கடாக்ஷத்தால் இப்பேய் காடேடியோடுமென்று ப்ரஹ்மராக்ஷஸமோக்ஷ கதையை ஸவிஸ்தாரமாக அவளுக்கு அருளிச்செய்ய; அவளுங்கேட்டு, ஆஸ்சர்யப்பட்டு, தன்பர்த்தாவுக் கறிவிக்க; அவனும், உடையவர், இப்பேயைவிடுவிக்கில், அவரேநமக்காசார்யர், அவர்திருவடிகளில் ஆஸ்ரயிக்கக்கடவோமென்ன; அவ்வளவில் அவன் ஸ்வகுருக்களுக்கு விருந்திடத்தேட, இவளும் தன்பர்த்தாவைக்குறித்து, நீர் அக்ஷரமொன்று, அவர்கள் இங்கேவாரார்கள் சொல்லாதே கொள்ளுமென்ன; அவனும், அவர்கள் வாராதிருப்பார்களோவென்று இவள்வார்த்தையை அதிக்ரமித்துச் சொல்ல; அவர்களும், முன்பு டில்லீஸ்வரனை துலுஷ்கன் இவனை ஆக்ரமித்துப் பிடித்துக்கொண்டுபோய், பட்டார்ஹனன்றிக்கேபோம்படி ஒரு அங்குஷ்டச்சேதம் பண்ணிவிடுகையால் விட்டல்தேவராயனென்று ப்ரஸித்தமாகையாலே, ஹீநாங்கன் அகத்தே உண்ணவொண்ணாதென்று தவிர்ந்து விட்டார்கள், அதுகண்டு அவன் அவர்களிடத்தே அதிகுபிதனாய் அவர்களைத் திரஸ்கரித்திருக்குமளவிலே. அவனுடைய ஸ்த்ரீயும், அவனைக் குறித்து உடையவர் திருவடிகளில் ஆஸ்ரயித்து உஜ்ஜீவிக்கலாகாதோ; இவர்களால் என்ன ப்ரயோஜனம் உண்டென்ன, அவனும் இசைந்து, ஸ்வக்ருஹத்தேற வெழுந்தருளவேணுமென்று உடையவரை ப்ரார்த்திக்க, ராமாநுஜனும், நாம்ராஜதானியை மிதிக்கக்கடவோமல்லோம் என்று அருளிச்செய்ய, அவ்வளவிலே, தொண்டனூர்நம்பி முதலானமுதலிகள், இவனை விசேஷ கடாக்ஷம் செய்தருளினால் தர்ஸநத்திற்கு பஹூபகாரம் உண்டென்று பஹூசாவேண்டிக்கொள்ள, உடையவரும் ஸம்மதித்து, அவன் அகத்தேற வெழுந்தருளினவளவிலே; அவனும் அதிஸந்துஷ்டனாய், திருவடிகளிலே ஸாஷ்டாங்க ப்ரணாமம்பண்ணி ஸவிநயனாய்நிற்க; முதலிகளும், உடையவர் ஸ்ரீபாததீர்த்தத்தை அவன் புத்ரிக்கு ப்ரஸாதித்து, தத்தீர்த்தத்தாலே ப்ரோக்ஷிக்க; அவளுடையசித்த ப்ரமம்போய், தெளிந்துவந்து, சேலையும் உடுத்து, உடையவரை சேவிக்க; இத்தைவிட்டல் தேவராயன் கண்டு, அத்யாஸ்சர்யப்பட்டு தத்க்ஷணமே ஸ்ரீபாதத்திலே யாஸ்ரயிக்க, அவனையும் இரங்கியருளி, திருவடிகட்கு அந்தரங்கனாம்படி கடாக்ஷித்தருளினார்.

இப்படி இவனையும் ஸ்வவைபவத்தாலே ஸிஷ்யனாக்கிக்கொண்டு, அவனுக்கு ஸ்ரீ விஷ்ணுவர்த்தநராயனென்று திருநாமம் ப்ரஸாதித்தருளி, அ

திசக்துஷ்டராய் நிற்க; அவ்வளவிலே, எங்கள் சிஷ்யனை நீர் இங்ஙனே மயக்கி சிஷ்யனாக்கிக் கொள்ளும்போது, எங்களை ஜயித்தன்றோ செய்யலாவ தென்று, பன்னீராயிரம்பேர் சமணர் ஏககாலத்திலே வந்து தர்க்கிக்கத் தொடங்க; உடையவரும், பின்னனுக்கஞ்சுமவர்கள், இடியின்கையிலே அகப்பட்டாற்போலவும், தேருக்கஞ்சிப்பாம்பின்வாயிலே யகப்பட்டாற்போல வும், ஆச்சதேது? இனி என்ன செய்யக்கடவோம், நம்மை வெளியிடாதிருக்கவொண்ணாதென்றுபார்த்து, ஒரு திருமண்டபத்திலே, திரையை வளைத்துக்கொண்டு, உள்ளே யெழுந்தருளியிருந்து, ஸஹஸ்ரபண மண்டலமுடைய திருவநந்தாழ்வானாய், ஒருக்தற்குப்பதினாயிர முகமாகப்ரத்யுத்தரமருளிச்செய்து, அவர்களை வாய்மூடுவித்து ஜயித்துவிட; அவர்களிலே சிலர் அதிவிஸ்மிதராய் வந்து திருவடிகளிலே ஆச்ரயிக்கத் தேட, அவர்களை அடிமைகொண்டு, ஸ்ரீவைஷ்ணவர்களாம்படி பண்ணி. விசேஷ கடாக்ஷஞ் செய்தருளி, தம் திவ்யசக்தியை ப்ரகடிப்பிக்க; இத்தைக்கண்டுபோய் ராஜபாதிபனான ஸ்ரீவிஷ்ணுதேவ ராயனுக்குச் சொல்ல, அத்தைக்கேட்டு, விஷ்ணுவர்த்தனனும் அதிப்ரவணனாயிராநிற்க; அங்குத்தையி லெம்பெருமானை, தொண்டனூர் நம்பி அபிமானித் திருக்கையாலே அவர்க்கு நம்பி தம்பிரானென்று திருநாமஞ்சாத்தியுநந்தருளி, அங்கே வேதாந்த வ்யாக்யானஞ் செய்துகொண்டு சிங்கர் கோயிலிலே எழுந்தருளி யிருக்குங்காலத்திலே; திருக்கையில் திருமண்டாண்டு, சாத்துகைக்கு, திருமண் பெற்றிலோமே யென்று சிந்தித்துக்கொண்டு வளர்ந்தருள; அன்று ராத்ரி, திருநாராயணப் பெருமாளும், அணித்தாக, யதுகிரியிலே, உம்முடையவரவு பார்த்துக்கொண்டு நில்லாநின்றோம், உன் திருவுள்ளம்போன்ற திருமண்ணும் இங்கேயுண்டு, சடக்கெனப் புறப்பட்டு வாரீரென்று ஸ்வப்நங் காட்டியருள; விடிவாறே அதிப்ரீதரா யெழுந்திருந்து, உடையவர், இத்தை முதலிகளுக் கருளிச்செய்து, ஸ்ரீவிஷ்ணுவர்த்தந ராயனையும் அழைப்பித்து, தாம் ஸ்வப்நங் கண்டபடியை அருளிச்செய்ய; அவனுங்கேட்டுப்ரஸந்நனாய்ச்சம்மதித்து, காடு வெட்டுவித்துக்கொண்டு உடையவர் பின்னே சேவித்துக்கொண்டு செல்ல; பஹுதாந்ய ஸம்வத்ஸரம் தைமாசத்திலே, எம்பெருமானாரும், செம்பொன் யதுகிரியேறி, வேதபுஷ்கரிணியிலேசென்று. (ருஎஉ) "பரிதாநஶிலாம் த்ருஷ்ட்வா ப்ரணம்யாதிவ்யயோகிந:" (పరిధానశిలాం దృష్ట్వా ప్రణమ్యాదివ్యయోగినః) என்கிறபடியே. பரிதான சிலையையும் சேவித்து. அங்கே நீராடி (ருஎ௩) "வேதபுஷ்கரிணீதீரே விஶ்ராமஶிலாதலே, பரிதாநம் ஸஜக்ராஹ காஷாயம் பரமம் ஶுபம்" (వేదపుష్కరిణీతీరే విశ్రామశిలాతలే, పరిధానం సజగ్రాహ కాషాయం పరమం శుభమ్) என்கிற தத்

தாத்ரேயனைப்போலே தாமும் மீளவும் காஷாயந் தரித்தருளி, முன்னடந்து. திருநாராயணப் பெருமாள் எழுந்தருளியிருக்கிற விடந் தேடிக்காணாமல், பகவத் ப்ரபாவத்துக்குக் குறைவாக என்செய்தோமென்று, திருவுள்ளங் கலங்கி, கண்வளர்ந்தருள ; அவ்வளவிலே, திருநாராயணப் பெருமாள், இவர் கனவிலே எழுந்தருளி, கல்யாண ஸரஸ்ஸின்றென்மேலை மூலையின் செண்பகச் சோலைக்கருகே, திருமகிழுக்குத் தென்பார்ச்வத்திலே, வளர்ந்த பெரிய திருத்துழாயின் பெரியபுற்றுக்குள்ளே இராநின்றோம் ; திருமண்ணும், அந்தக் கல்யாண ஸரஸ்ஸுக்கு வடமேலை மூலையிலே (௩௭௪) "ச்வேதத்வீபாத் ஸமாநீதம் ஶுத்தம் ம்ருத்ஸ்நாஸமுத்பவம், யாதவாத்ரௌ ப்ரதிஷ்டிதம் ... " (శ్వేతద్వీపాత్సమానీతం శుద్ధం మృత్స్నాసముద్భవం, యాదవాద్రౌ ప్రతిష్ఠితం ... స్వయంభువా) என்கிறபடியே, பெரியதிருவடியாலே, ஸ்வேதத்வீபத்தினின்றுங் கொணர்ந்து, யாதுகிரியிலே நிக்ஷேபிக்கப்பட்டு, மத்ப்ரபாவத்தாலே அக்ஷயமாக சேமிப்பித்திராநின்றது, நீர் க்லேசிப்பானேன், என்று நாம் உமக் கடையாளமாக, இவ்விடந்தொடங்கி நாம் இருக்கும் புற்றளவாக முறித்திட்ட திருத்துழாய்க் கொழுந்தே குறியாக வாரீரென்று, ப்ரத்யக்ஷ சமாகாரமாக ஸ்வப்நமுகேந அருளிச்செய்ய ; உடையவரும், உகந்து, உணர்ந்து, எழுந்திருந்து, முறித்திட்ட திருத்துழாய்க்கொழுந்தே குறியாக, கல்யாண ஸரஸ்தீரத்தேற வெழுந்தருளி திருமுகப்படியே செண்பகவன சமீபத்தில், கப்புங் கவருமாய்ப்பணைத்துக்கொழுந்துவிட்ட திருத்துழாய்மரத்தைக் கண்டு, களித்து, ஆநந்த கோஷத்துடனே பலகாலும் தண்டனிட்டு, அத்திருத்துழாய் மரத்தின் மண் காப்புநீக்கின வளவிலே (௩௭௫) "கலௌவிப ... காஞ்சிவி ... " (కలియుగే ...) என்கிறபடியே, புற்றினுள்ளே பொற்கோயில் தோன்றியபின்பு, மற்றங்கினி தமர்ந்த மாயவனுடைய நீல சிகாமணி நிறத்தோன்ற, சகவர்ஷம் ஆயிரத்திற்கு மேல் பன்னிரண்டு சென்ற வர்த்தமாந பஹுதான்யவர்ஷம், தைமாஸம், சுக்லபக்ஷ சதுர்த்தசியும் வியாழக்கிழமையுங்கூடின புனர்பூசநக்ஷத்ரத்திலே நாராயண னுருவங்கண்டு, நலம் மிகுத்து, கொந்தளித்து, எல்லாருங் குழைலக்கூத்தடித்து, மங்களசங்க ம்ருதங்க படஹாத்ய கிலவாத்ய ஜயசப்த கோஷம்பண்ணி, ராஜாவையும் அழைத்து, காட்டியருளி, பாலாலே திருமஞ்சநம் பண்ணி "பகற்கண்டேன் நாரணனைக்கண்டேன் கனவில் மிக்கண்டேன் மீண்டவனை மெய்யே மிகக்கண்டேன்" என்கிறபடியே, திருநாராயணப்பெருமாளை, அடிக்கும், தலைக்கும் செவ்விதாகக்கண்ணாரக்கண்டு, அநுபவித்து, தம்திருக்கையாலே மூன்றுநாள் திருவாராதநஞ் செய்தருளி, "மா

னடிபணிந் துய்ந்தவனென்று, பரமாசார்யரான, ஸ்ரீ பராங்குசர் தமக்கு, தாம் அத்யந்தாபிமத ஶிஷ்யரானகையாலே பித்ருதநத்தைப் புத்ரன் விநியோகங் கொள்ளுமாப்போலேயும் ' தமிழ்மறைகளாயிரமு மீன்றமுதற்றாய் சடகோபன் மொய்ம்பாலவளர்த்த இதத்தாயிராமானுஜன் " ஆகையாலே ஐஹ்வர்ய கைவல்யங்களாகிற க்ஷுத்ர புருஷார்த்தங்களை யிகழ்ந்து, காற்கடைக்கொண்டு, திருநாராயணனருளே உபாயோபேயமென்று நிஷ்கர்ஷிக்கிற " ஒருநாயகத் திருவாய்மொழியை " திருநாரணர்க்கு சமர்ப்பித் தருளினார். பின்பு கல்யாண ஸரஸ்ஸின் வடமேலைமூலையிலே தம் த்ரிதண்டத்தாலே கிற, பாலாறுபோலே பொங்கிக் கிளம்புகிற திருமண் குவைகளைக் கண்டு, மண்டுகிற ஆநந்தாதிசயத்தாலே, அத்திருமண்கொண்டு, பன்னிரண்டு திருநாமஞ் சாத்தியருளி; த்ரிதண்டமண்டிதகர புண்டரீகராய் விளங்கி யருளி, காடுவெட்டி ஊருங்கோயிலுஞ் சமைப்பித்து, திருநாராயணப் பெருமாளுக்கு ஸ்ரீ பாஞ்சராத்ர ஸாத்விக ஸம்ஹிதையாலே ப்ரோக்ஷணாதி திருவாராதனங்களை ஸ்ரீ ரங்கராஜபட்டர் திருக்கையாலே செய்வித்தருளி, திருநாரணர்க்கு நித்யோத்ஸவ, பக்ஷோத்ஸவ, மாஸோத்ஸவ, ஸம்வத்ஸரோத்ஸவங்களெல்லாம் நடத்தியருளி, மஹோத்ஸவம் நடத்துகைக்கு உத்ஸவ பேர மில்லையேயென்று, சிந்தா வ்யாகுலித சித்தராய்க்கண்வளர்ந்தருள; அப்போது இவர்ஸ்வப்நத்திலே திருநாரணர் எழுந்தருளி, நம்உத்ஸவபேரமான ராமப்ரியர், இப்போ லீலை கொண்டாடி, டில்லியேற வெழுந்தருளி, துலுஷ்கராஜ க்ருஹத்திலே, எழுந்தருளி யிருக்கிறார்; அங்கேறப்போய் எழுந்தருள் வித்துக்கொண்டு வாரீரென்று திருவுள்ளமா யருள, உடையவரும் ப்ராதஃகாலமானவாறே எழுந்திருந்து, ஸ்வப்நத்தை முதலிகளுடன் ஆலோசித்துக்கொண்டு, பயணகதியிலே த்வரித்து, டில்லியேற வெழுந்தருளினவாறே; டில்லீபுரீந்த்ரரான ராஜாவும், இவரைக்கண்டு ப்ரத்யுத்தாந ப்ரணாம பூர்வகமாக பஹு உபசாரத்துடன் எழுந்தருளின கார்யம் அருளிச்செய்யவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய; உடையவரும், எங்கள் குலதெய்வமான ராமப்ரியர் இங்கே யெழுந்தருளி யிருக்கிறார், அவரைத்தரவேணுமென்று அபேக்ஷிக்க; ராஜாவும் அப்படியே செய்கிறோமென்று கொள்ளைகொண்டு சிறைவைத்த எம்பெருமான் சிறைச்சாலையிலே சோதித்துக் கொள்ளீரென்று அப்பணையிட்டுவிட; இவரும் அங்கேற வெழுந்தருளி, சோதித்து, திருநாரணர்வடிவுக்கு ஒத்திராமையாலே இத்தேவர்கள் ஒருவருமன்றென்று, ராமப்ரியரை அவர்களில் காணாமையாலே முசித்துக்கிடக்க, அன்றிரவில், ராமப்ரியர்; ஸ்வப்நத்திலே யெழுந்தருளி, நீர் முசிப்பானேன், நாம், அவன்மகளாலே பூசைகொண்டு

அவள் ஸஜ்ஜாக்ருஹத்திலே யிராநின்றேம், அங்கேயாரீர் கொண்டுபோம் படியாகவென்றருளிச்செய்ய, இச்செய்தியை உடையவரும் ராஜாவுக்கு அறிவிக்க, அவனும்இப்படி உம்முடைய பக்கல் வ்யாமுக்தராயிருப்பவர், தாமே வரக்கடவ தென்ன ; இவரும், அவரைக்கண்டு திருவடிதொழ வாராநின்றாரென்ன, அப்படியே யாகிறதென்று இவரை, அவனும், அவள்ஸஜ்ஜாக்ருஹத்தேற வெழுந் தருளிவித்துக் கொண்டுபோக ; அங்கே ராமப்ரியரும், உடையவரைக்கண்டு, ஆஸ்ரிதவாத்ஸல்யந்தோற்ற, இட்ட சட்டையும், சட்டின சிறுசதங்கையும், இட்ட கஸ்தூரிநாமமும், முடிக்கமைவண்ண நறுங்குஞ்சியும், "தன்றாசத் தாச்சுட்டி தாங்கத்தாங்க" வெறிக்குழலீலய, ஸஜ்ஜையிலும்வசமிலுங் குதி த்து "தன்னியலோசை சலஞ்சலனென்றிட" என்கிறபடியே செம்பொற் சதங்கைகள் சல்சலவென்றொலிக்க, அதிலரும் காணும்படி ஓடிவந்துஉடை யவர் திருமடியிலேயிருக்க ; உடையவரும், ஆநந்தாஸ்ருக்கள் பனிப்ப, ஆநந்தை கார்ணவாந்தர்நி மக்நராய், புளகிதநிகிலாங்கராய், மார்பும் தோ ளும் பூரித்து, என்னுடைய செல்வப்பிள்ளையோ வென்றெடுத்து அணைத் துக்கொண்டருளினார். அன்றுமுதல், ராமப்ரியர்க்குசெல்வப்பிள்ளையென்று திருநாமமுண்டாய்த்து. இத்தைக்கண்டு ராஜாவும், அத்யாஸ்சர்யயுக்தனாய், அவர் திருவடிகளிலே விழுந்துசேவித்து, அநேகவிதமாக ஸத்கரித்து, பஹூபசார ஸஹிதமாக ஸம்பத்குமாரரை, எதிராஜஸம்பத்குமாரரை யதிஸார்வபௌமர்க்கு எழுந் தருளிவித்துக் கொடுத்தனுப்பினான்.

உடையவரும், அங்குநின்றும்புறப்பட்டு, இவரையும் எழுந்தருளிவித் துக்கொண்டு, தவித்துபயனைகதியிலே, யாதவாத்ரிக்கெழுந்தருளி; ஸர்வரும், எதிராஜகுமாரனென்னும்படி விசேஷித்து, புத்ரவாத்ஸல்யம்பண்ணி அபி ஷேகித்தருளி; ப்ரோக்ஷணாதி ப்ரதிஷ்டாபுரஸ்ஸரமாக, திருநாரணருடனே சேர்த்து, திருநாரணப்பெருமானுடைய திவ்யோத்ஸவ சத்தாவஸ்தி; நித்ய, பக்ஷ, மாஸ, அயந, ஸம்வத்ஸரோத்ஸவாதி மஹோத்ஸவத் திருநாள்களும் நடத்தியருளி, தீர்த்தப்ரஸாதமும் பெற்று, எதிராஜமடமும் கட்டிவைத்து, அன்பத்திருவர்கட்கு சன்யான ஊழிய கைங்கர்யத்தையும் கல்பித்தருளி, அவர்க்குத்திருவர் ஸ்ரீவைஷ்ணவர்களென்று ஸமுதாயத்திருநாமமும்; ப்ரத்யேக மாக, தாஸ்யநாமமும் ப்ரஸாதித்து ; அங்கே அவர்களை ப்ரதிஷ்டிப்பித்து, குறைவறத்திருவாராதநமும் நடத்திக்கொண் டிருந்து, ஒருநாள்வரையிலே, ஸ்ரீபாஷ்யகாரர் தம்முடைய ஸ்ரீபாதத்திலுள்ள ஆசார்யர்களுடனேயும், ஜீயர் களுடனேயும், அன்பத்திருவர்களுடனேயும், சாத்தின சாத்தாதமுதலிக ளுடனேயும், கொத்தையம்மைமார்களுடனேயும், திருமேனிக்காவல் திரு

கேளிக்காரர்களுடனேயும், பெருங்கூட்டத் திருவோலக்கமாக இராமாநுஜ னில் எழுந்தருளியிருந்து, திருநாராயணபுரமென்று அக்நகருக்குத் திரு நாமம்சாத்தியருளி, இத்திருநாராயணபுரத்திலே நித்யவாசம்பண்ணு மவர் களுக்கு, பெரியோர்க்கும் நமக்கும் உண்டான பரமபதமும் ; ஆசார்யனைக் கிரமமும் உண்டாமென் றருளிச்செய்தருளினார். ஆகையாலே இத்திருமலைக்கு க்ருதயுகத்திலே, ஸநத்குமாரர் ஸத்யலோகத்தினின்றும் ஆநந்தமய திவ்யவிமானத் தோடே எழுந்தருளுவித்துக் கொண்டுவந்து திருநாரணனை இங்கே ப்ரதிஷ் டிப்பிக்கையாலே, நாராயணாத்ரியென்றும் ; த்ரேதாயுகத்திலே தத்தாத்ரேயர் நாலுவேதபுருஷர்களையும் சிஷ்யராக்கிக் கொண்டுவந்து வேதபுஷ்கரிணிக் கரையிலே ஸதாவேதாத்யயன நிரதராயிருக்கையாலே, வேதாத்ரியென்றும் ; த்வாபரயுகத்திலே, நம்பிமூத்தபிரானாலும் ஸ்ரீக்ருஷ்ணனாலும் ஆராதிக்கப் படுகையாலே யாதவாத்ரியென்றும் ; (௯௭௧) "யாமேகமவலம்ப்யைவ யதிராஜஸ்ஸ்வநாத், யதிமேதாமேதீந்த்ராத் நாமதேய யாதவாசலம்" (யாமேகமவலம்ப்யைவ யதிராஜஸ்ஸ்வநாத், யதிமேதாமேதீந்த்ராத் நாமதேய யாதவாசலம்) என்கையாலே, கலியுகத்திலே, எம்பெருமானார் எழுந்தருளி ஜீர்ணோத்தாரணம் பண்ணி அபிமானிக்கையாலே, எதிசைல மென்று ப்ரஸித்தமாய்த்து.

அநந்தரம், பத்மகிரியிலேசென்று, பௌத்த ஸமயங்களை வென்று, என்றுமென்பிள்ளைக்குத் திருமகள் செய்வாரெனப்பெற்றார்களையென்று இப் படி ஆசார்ய ஸிம்ஹாஸநங்களில் அமைப்பித்து ஸிம்ஹேஶ்வரையாய் நிர்வஹித்து ஸித்தாந்தஸ்தாபகமாக்கியருளி, ஸ்ரீபாஷ்யமும் வ்யாக்யாநித்துக்கொண்டு திருநாரா யணப்பெருமாள் திருவடிகளிலே பன்னிரண்டு ஸம்வத்ஸரம் வாழ்ந்திருந் தருளினார்.

அக்காலத்திலே, ஒருஸ்ரீவைஷ்ணவர் கோயிலில்நின்று மெழுந்தருளி உடையவர் திருவடிகளிலே ஸேவித்திருக்க ; இவரும், பெரியபெருமாளும், பெருந்திருச்செல்வமும் செய்கிறபடியென்னென்று கேட்டருள ; அவரும், தேவரில்லாத குறையொன்றொழிய மற்றொருகுறைசற்று மில்லையென்ன ; இவரும், சோழன்பக்கல் எழுந்தருளின ஆழ்வானும், பெரியநம்பியும் செய்த படியென்னென்று கேட்டருள; ஸ்ரீவைஷ்ணவரும், கோயிலில்நின்றும் கூரத் தாழ்வானையும், பெரியநம்பியையும், ராஜமனுஷ்யர் அழைத்துக்கொண்டுபோய் சோழன் முன்னேவிட, அவனும் இவர்களைப்பார்த்து, (௯௭௨) "ஶிவாத்பர தரம் நாஸ்தி" (ஶிவாத்பரதரம் நாஸ்தி) என்று ஓலையெழுதியிடச்சொல்ல, கூரத் தாழ்வானும், பஹுப்ரகாரேண அநேகம் ஶ்ருதிஸ்ம்ருதிஇதிஹாஸ புரா

ஶ்ருதிகளாலே ஸ்ரீமந் நாராயணனே ஸர்வஸ்மாத்பரன், ஜகத்காரணபூதன், த்யேயனானானுமிவனே, ஸர்க்கஸ்திதிஸம்ஹார கர்த்தாவுமிவனே, ப்ரஹ்மருத்ராதிகள் இவனுக்குப் புத்ரபௌத்ராதிகளாய் இவன் நியமநத்திலேயிருக்குமவர்கள், இவ்வர்த்தமன்றியே, (௩௭௮) "ஸாக்ஷாந்நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்யமயீம் தநும், மக்நாநுத்தரதே லோகாந் காருண்யாச்சாஸ்த்ரபாணிநா" ([illegible]) என்று, திருவடிகளை நீட்டினவன் ஒருவன், சமண லோகநத்தாலே பக்திபரவஶனாகத் திருவடிகளை விளக்கினானொருவன்; தத்தீர்த்த ஜலத்தைச் சிசுவும் பத்நியோடே ஶிரஸாவஹித்தவன் ஒருவன், இவர்களில் பெரியவன் ஆரென்று நீயே விசாரித்துக் காணுமென்ன; அவனும், இசையாதிருக்க; இவரும், இம்மாத்ரமேயோ, த்ரிவிக்ரமபாதஜல சம்பந்தத்தாலே பாபாவிஷ்டத்வங்கள் போய் ஶிவத்வமுண்டானவனன்றோ இவனென்றும்; இதுவுமன்றியே, (௩௭௯) "யச்சௌசநிஸ்ஸ்ருத ஸரித்ப்ரவரோதகேந தீர்த்தேந மூர்த்ந்யதிக்ருதேந ஶிவஶ்ஶிவோபூத்" ([illegible]) என்றருளிச்செய்ய, சோளனும் இதுகேட்டு அதிக்ருத்தனாய், நீ பெரிய ஶிக்ஷாஜ்ஞையாலே உனக்கு வேண்டினபடியெல்லாம் சொல்லவல்லை; அங்ஙனன்று, நான் சொன்னபடியே (௩௮௦) "ஶிவாத்பரதரம் நாஸ்தி" ([illegible]) என்று ஓலைக்கெழுத்திடுகவென்று ஓலையைக் கையிலே கொடுத்து அதிரப்பண்ணிட; கூரத்தாழ்வானும், (௩௮௧) "த்ரோணமஸ்தி தத: பரம்" ([illegible]) என்று ஓலைக்கெழுத்திட்டருளினார். சோழனும் இவர் இப்படி பரிஹஸித்து ஓலைக்கொப்பமிட்டபடி கண்டு, அத்யந்த கோபாக்ராந்த சித்தனாய், இவர்களை நேத்ரோத்பாடனம் பண்ணச்சொல்லிப் போகவிட; அத்ராஜ மநுஷ்யர்களும், இவர்களைப் பிடித்துக்கொண்டுபோய் அவன் சொன்னதுபோலே செய்துவிட்டார்கள். இப்படி ஆழ்வானையும் நம்பியையும் நலிந்து, தன்படைவீட்டில் நின்றும் புறப்படவிட; பெரியநம்பியும், அவ்வேதனை பொறுக்கமாட்டாமல், அங்கே ஒருகொல்லைத் தலையாட்டிலே ஆழ்வான் மடியிலே திருமுடியும் அத்துழாய் மடியிலே திருவடிகளுமாய்த் திளைத்துக் கண்வளர; நம்பியை; ஆபத்தசையிலே ஆழ்வானும் அத்துழாயும் திருக்கோயிலேறப்போனாலோவென்ன; நம்பியும், நாம் அங்கேபோய் பரக்ருதியாயில், ஸ்ரீவைஷ்ணவர்கள் உட்படத் திருவடிசேரும்போது கோயிலேறப்போகவேண்டித் தில்லையோவென்று சங்கிப்பார்களென்று அருளிச்செய்து, ஆளவந்தார் திருவடிகளை த்யானித்துக்கொண்டு அங்கே திருநாட்டுக்கெழுந்தருளினார். ஆகை

யால், ப்ரபந்நனுக்கு அந்திமதேச நியதியில்லையென்றபடி, பின்பு சில ஸ்ரீவைஷ்ணவர்கள், பெரியநம்பியை, அங்கே ஸம்ஸ்கரித்து, பள்ளிபடுத்து, ஒரு கட்டணத்திலே ஆழ்வானை எழுந்தருள்வித்துக்கொண்டு, ராத்ரியிலே ஒருவரையுங்காணாமல் கோயிலிலேவந்துபுகுந்தார்கள். கூரத்தாழ்வானும், பெரியநம்பியைப்போலே அடியேனுக்கும் இச்சரீரம் போய்த் தில்லையேயென்று கொண்டு "ப்ரணைபோவரவணைமேல்பள்ளிகொண்ட முகில்வண்ணனே" என்று போர க்லேசித்தருளினாரென்றார்களென்று விண்ணப்பஞ்செய்ய; உடையவரும், "கேட்பார்செவி சுடுவார்த்தைகேட்டு, ஐயோகண்ணபிரான் அறையோ" என்றுசோகித்துக்கொண்டு, வேரற்றமரம்போலே விழுந்துகிடந்து அடித்து, திருமிடறு தழுதழுப்ப, அத்யந்தமவஸன்னராய்ப்போரக்லேசித்து, திருமுத்துதிர்த்து, கண்ணீர்களைத்து க்லேசிக்கும்படிகண்டு, உருகி, அருகிருந்த முதலிகள் தேற்றத்தேறி, ஆழ்வானுடனும் திருமேனியுடனிருக்கப்பெற்றோமேயென்றருளிச்செய்து; பெரியநம்பிக்கு ஸ்ரீசூர்ணபரிபாலநமுஞ் செய்து, பெருக்கத் திருவத்யயநமும் நடத்தியருளி, ஆழ்வானுக்குத் திருக்கண் போச்சுதேயென்று, வ்யாகுலஹ்ருதயராய், மாறேனில்லாமாருதி சிறியாண்டானை, ஆழ்வானையுமாராய்ந்து; அங்குள்ளவிசேஷமுமறிந்துவாருமென்று கோயிலுக்குப்போகவிட்டு; பூர்வம்போலே வ்யாக்யாநித்துக்கொண் டெழுந்தருளியிருந்தார்.

பெரியநம்பி திருநக்ஷத்ரம், மார்கழியில்கேட்டை. அவர்தனியன், (நசஉ) "கமலாபதிகல்யாண குணாம்ருதநிஷேவயா, பூர்ணகாமாய ஸததம் பூர்ணாய மஹதே நம:; ஆசார்யாத் யாமுநேயாதிகதநிகமார்த்த ஜாத: ப்ரபத்தேர் வைபவம் தர்சயித்வா தததயிதயதீந்த்ராய லக்ஷ்மணார்யம், யோ தேவம் ஸ்ரீரங்கநாதம் ஸமபஜததமேதஸ் ச ஸ்ரீமதே பூர்ணாய நம: ஸ்ரீசைலபூர்ண குரவே ப்ரஹ்ம ஸ்ப்ருஹாதவைராக்ய ஸஹாவஸ்தித வாத்ஸல்யம்" (కమలాపతికల్యాణ గుణామృతనిషేవయా, పూర్ణకామాయ సతతం పూర్ణాయ మహతే నమః, ఆచార్యాద్యామునేయాదధిగతనిగమార్థజాతః ప్రపత్తిస్తస్యాపి బ్రహ్మసంసత్ప్రియతమ పతయేయశ్చ తత్రక్షణార్థం, చోళేంద్రద్రోహాద్వ్యథాయస్య చనిసరవసమాణ, శ్రీపతిహాదయుక్తం పిదాంశారీరకీచార్య సహాతమనవైకత్వ్వాహ ష్ఠాశ్రేష్ఠం) திருக்கோட்டியூர் நம்பியை, அத்ய மதசையில் உன் திருவுள்ளத்திலே நினைத்திருக்கிற தினை வென்னென்று ஸ்ரீபாதத்தில் முதலிகள் கேட்க; நம்பியும், சக்ரவர்த்தித்திருமகன் திருவுள்ளத்தை ஒரு பக்ஷிபுண்படுத்தித்தென்றுசொல்லி நிர்ப்பரராய், ஆளவந்தாரை நினைத்துக்கொண்டு திருநாட்

டுக் கெழுந்தருளினார். அதாவது, சரணாகத பரித்ராணமும் போராதென் றிருக்குமவனிருக்க நமக்கொரு குறையுண்டோவென்று கருத்து. இதுகண்டு ஸ்ரீபாதத்தார் முதலிலே ப்ராயே ப்ராயேண துக்கித்துத்தேற, தெற்காழ்வாரைக் கொண்டு, நம்பிக்குத் தீர்த்தங்கொண்டாடி திருவத்யயநமும் நடத்தி யருளினார்கள். திருக்கோட்டியூர்நம்பி திருநக்ஷத்ரம், வைசாக ரோஹிணி. அவர் தனியன், (௩௮௩) "ஶமதமகுணபூர்ணம் யாமுநார்யப்ரஸாதாத் அதிகதபரமார்த்தம் ஜ்ஞாநபக்த்யாதிஸிந்தும், யதிபதிநதபாதம் ஶ்லோகதத்த்வார்த்தநிஷ்டம் ப்ரகடிதஹ்ருதயந்தம் கோஷ்டிபூர்ணம் நமாமி, ஸ்ரீவல்லபபதாம்போஜ தீபக்த்யம்ருதஸாகரம், ஸ்ரீமத்கோஷ்டீபுரீபூர்ணம் தேஶிகேந்த்ரம் பஜாமஹே" (శమదమగుణపూర్ణం యామునార్యప్రసాదాత్ అధిగతపరమార్థం జ్ఞానభక్త్యాదిసింధుమ్, యతిపతినతపాదం శ్లోకతత్త్వార్థనిష్ఠం ప్రకటితహృదంతం గోష్ఠీపూర్ణం నమామి, శ్రీవల్లభపదాంభోజ ధీభక్త్యమృతసాగరం, శ్రీమద్గోష్ఠీపురీపూర్ణం దేశికేంద్రం భజామహే)

திருமாலையாண்டான் திருநக்ஷத்ரம், மாசிமகம். அவர்தனியன், (௩௮௪) "ராமாநுஜமுநீந்த்ராய த்ராவிடீஸம்ஹிதார்த்ததம், மாலாதரகுரும் வந்தே வாவதூகம் விபஶ்சிதம்" (రామానుజమునీంద్రాయ ద్రామిడీసంహితార్థదం, మాలాధరగురుం వందే వావదూకం విపశ్చితం)

திருவரங்கப் பெருமாளரையர் திருநக்ஷத்ரம் வைகாசியில் கேட்டை. அவர்தனியன், (௩௮௫) "அத்யாபயத்யதீந்த்ரம் யஃ பராங்குஶஸஹஸ்ரிகாம், தந்நாதவம்ஶ்யம் வந்தேஹம் ஸ்ரீரங்காதிபதேஶிகம்" (అధ్యాపయద్యతీంద్రం యః పరాంకుశసహస్రికాం, తన్నాథవంశ్యం వందేహం శ్రీరంగాధిపదేశికం)

பெரியதிருமலைநம்பி திருநக்ஷத்ரம், சித்திரையில் ஸ்வாதி. அவர் தனியன், (௩௮௬) "ஸ்ரீபாஷ்யகாரோத்தம தேஶிகாய ப்ராசேதஸாதேஶ பலப்ரதாய, பிதாமஹஸ்யாபி பிதாமஹாய ஸ்ரீஶைலபூர்ணாய நமோநமஸ்தாத்" (శ్రీభాష్యకారోత్తమదేశికాయ ప్రాచేతసాదేశఫలప్రదాయ. పితామహస్యాపి పితామహాయ శ్రీశైలపూర్ణాయ నమోనమస్తాత్)

திருக்கச்சிநம்பி திருநக்ஷத்ரம், மாசியில் ம்ருகஶீர்ஷம், அவர்தனியன் (௩௮௭) "கருணாகரபாதாப்ஜ ஶரணாய மஹாத்மநே, ஸ்ரீமத்கஜேந்த்ரதாஸாய காஞ்சீபூர்ணாய தே நமஃ" (కరుణాకరపాదాబ్జ శరణాయమహాత్మనే, శ్రీమద్గజేంద్రదాసాయ కాంచీపూర్ణాయ తే నమః)

அநந்தரம், மாறொன்றில்லா மாருதிசிறியாண்டான், த்வரித்துப் பயண கதியிலே கோயிலிலே சென்று கூரத்தாழ்வானைச் சேவித்து நிற்க, ஆழ்வானும்

சிறியாண்டானைக்கண்டு, உடையவரைச்சேவித்தாற்போலே ஸந்துஷ்டராய், உடையவர்செய்த நற்றிறபடியெல்லாவற்றையும் விண்ணப்பஞ்செய்தருள; இக்கதைகளையுமெல்லாம் விஸ்தாரமாக விவரித்துச்சொல்லக்கேட்டு ஆநந்திக்கிறதற்கு; அவ்வளவிலே, ஆண்டானும் உடையவர் ஆசார்ய விஶ்லேஷாஸஹிஷ்ணுவாய், தேவரீர் திருக்கண்மலர் போச்சதேயென்று மிகவும் ஆர்த்தராய் ஆராய்ந்து வாவென்று பணித்தருளியபின்னை; ஆழ்வானும், உலகங்களுக்கெல்லாம் ஓருயிரானதாம் சுகமேயிருக்கப்பெறில், இவ்விபத்து அடியேன் கண்ணழிவுமாத்ரமே கொண்டுபோகப் பெற்றதென்று ஹ்ருஷ்டராயிருக்கிறதென்று விண்ணப்பஞ் செய்யுமென்றுவிட; அவ்வளவிலே சோழனுக்குக் கழுத்திலேபுண்ணாய், புழுத்துப் புரண்டானென்றுகேட்டு, கங்கைகொண்ட சோழபுரத்திலே ஆண்டானும் சென்று, அச்செவிக்கினிய செஞ்சொல்வார்த்தையை நிஶ்சயித்துக்கொண்டு எழுந்தருளுகிறவருடனே அம்மங்கியம்மாளுமெழுந்தருள; அவரையுங் கூட்டிக்கொண்டு த்வரித்தெழுந்தருளி; ஒருநாள் உடையவர் ஶ்ரீபாதத்திலே நம்பிகளுடன் அநுஷ்டாநார்த்தமாக, திருக்கல்யாண ஸரஸ்ஸின்கரையிலே எழுந்தருளியிருக்கச்செய்தே, மாறொன்றில்லா மாருதி சிறியாண்டானும், அம்மங்கியம்மாளும் கோயிலில் நின்றும் எழுந்தருளினவர்கள், உடையவர் திருவடிகளைத் தங்கள் ஆநந்தாஶ்ருக்கள்கொண்டு நனைத்து, தண்டஞ் சமர்ப்பித்து, ஆழ்வானுக்கும் பெரியநம்பிக்கும், அபராதம்பண்ணின சோழனுக்குக் கழுத்திலேபுண்ணாய்ப்புழுத்துப்புரண்டுபோனானென்று விண்ணப்பஞ்செய்ய; உடையவரும், சர்வஜ்ஞரும் அம்ருதமான கட்டளையைக்கேட்டு, மார்புந்தோளும் பூரித்து, ஸந்தோஷாதிஶயத்துடனே, இவர்களை வாரியெடுத்து அணைத்துக்கொண்டு, ஆநந்தாஶ்ருக்கள்கொண்டு அவர்களை வழியவார்த்து, இவ்வளவுதூரம் இவ்விஶேஷங்கொண்டு எழுந்தருளின இவர்களுக்கு, சீர்க்கணக்குக் கொடுக்கலாவது த்வயமல்லதில்லையென்று நிஶ்சயித்து, மீளவும் த்வயத்தையே அவர்களுக்குப் பரிசிலாக இரங்கியருளி, தம் ஸந்நிதியில் முதலிகளைப்பார்த்து, இதுகல்யாண ஸரஸ்ஸு என்னுமது அந்வர்த்தஸித்தமாய்க் கண்டோமே யென்றருளினார். முதலிகள் அனைவரும் அப்படியே யாமென்று அத்தைக்கொண்டாட, அவர்களையுங்கொண்டு ப்ரஹ்லாதவரதர் அழகியசிங்கர் திருமலையேறி, அழகியசிங்கரைத் திருவடி வணங்கிநின்று, முன்பு பகவத்பாகவத விஷயமென்றால் அஸஹ்யமாகுமப் போந்த இரணியனை நிரஸித்தருளினாப்போலே, இப்போது பரத்வமான தேவரை இல்லையென்று ஸாதுநாரூபமாக ப்ரகாரமான ப்ரஹ்லாதாழ்வானுக்கொப்பான கூரத்தாழ்வானுக்கும் பெரியநம்பிக்கும் அபராதம்பண்ணின இவனையும், க்ருமிகண்டனுக்கு நிரஸிப்பித்தருளித்தேயென்று விண்ண

ப்பஞ்செய்து தீர்த்தப்ரசாத ஸ்வீகாரம்பெற்று விடைகொடுக்க, அப்போதே புறப்பட்டு உடையவரும் முதலிகளுமாகப் பெரியபெருமாள் திருநாராயணப்பெருமாள் திருமுன்பேசென்று, திருவடிதொழுது, திருப்பல்லாண்டை யநுசந்தித்து மங்களாசாஸநம்பண்ணி, ந்ஸோநாராயணவென்று க்ருதாஞ்சலிபுடராய், திருவடிகளை நோக்கி நின்று, இனி அடியேன் கோயிலேறப்போய் வருகிறேனென்று விண்ணப்பஞ்செய்ய ; திருநாராயணனும் நெடும்போது வாய்விடமாட்டாதே நிற்க ; உடையவரும், நீருள்ளதனையும் இங்கேயிருமென்று அரங்கன் கோயிலிலே நியமித்தருளினதென்ன ; ஆகில் அப்படியே செய்யலாகாதோவென்று அர்ச்சகமுகேந திருவுள்ளமாயருள ; நம்பெருமாளும், புறப்பட்டருளி, அன்பத்திருவரைப் பார்த்து, திருநாரணனையும் செல்வப்பிள்ளையையும் மங்களாசாஸநத்துடனே, சதா ஸ்மரணம் பண்ணிக் கொண்டு, காலே காலே திருப்பணி திருவாராதநமும் நடத்திக் கொண்டு சேவித்திருங்கோ ளென்று நியமித்தருள ; அன்பத்திருவரும், ஸ்ரீபாதத்திலே விழுந்து சேவித்து, தேவர் திருவடிகளைப் பிரியில் தரிக்கமாட்டோமென்று ஆர்த்தராய் தலைபிராண்டுகிற ; உடையவரும், அப்போதொரு சிந்தைசெய்து, தம்விக்ரஹத்திற்குப் படியெடுத்தாற்போலே விளங்குகிற தம்முடைய அர்ச்சாவதாரரூப விக்ரஹத்தையும் அவதரிப்பித்து, அதிலே தம்சக்தியும் ப்ரதிஷ்டிப்பித்து நின்று, அன்பத்திருவரை அழைத்து, இதோநாம் உங்களுக்காக இங்கேயிராநின்றோமென்று ஸ்வசக்திபரிபூர்ணமான அவ்விக்ரஹத்தை அவர்களுக்குத் திருவாராதநமாக இரங்கியருளி, அவர்களைக் குறித்து, செல்வப்பிள்ளை, நின்றிங்ஙனையில் பிள்ளையாயிருக்கும் பேணிக்கொண்டு போருங்கோ ளென்று நியமித்தருளி ; அவர்கள் கையிலே செல்வப்பிள்ளையை அடைக்கலங்காட்டிக் கொடுத்தருளி திருவிளக்கு திருமாலை அமுதுபடி சாத்துபடி முதலான உபசாரங்களெல்லாம், என்றும் நன்றாகப் பேணிச்செய்துகொண்டு, அநயோக்யம் ஸஹ்ருதயராய், த்ரோஹ புத்தி யொருநாளும் நினையாதே, ஊழிய கைங்கர்யங்களையும் மறவாதே, பக்தி பூர்ணமாகப் பண்ணிப் போருங்கோ ளென்று, திருவடிகளைத் தொட்டுவித்துக் கொண்டு நியமித்தருளி, செல்வப்பிள்ளையைப் பிரியமாட்டாமல் திருவடிகளைப் புகுந்து விழுந்தெழுந்து தொழுவாராய், திருவுள்ளமுருகி; திருக்கண்கள் துளிக்க, புரிந்து புரிந்து, திவ்யவிமானத்தையும், திருப்பதியையும், திருச்சோலையெழில்களையும், திருமண் குழைகளையும் பார்த்து உகந்தருளி, மங்களாசாஸநம் பண்ணி, நின்றுகொண்டு, புத்ரவாத்ஸல்யம் பின்னேதள்ள ; நம்பெருமாள்

அருள்புரிந்து, ஒரு நடையிலே ஒன்பது நடைநடந்து கோயிலேற வெழுந்தருளினார்.

அனந்தரம், பயணகதியிலே எழுந்தருளிப் புகுந்து, திருமுக்கந்துறை யிலே நீராடி, கேசவாதியான த்வாதசோர்த்வ புண்ட்ரதாரராய்க்கொண்டு எழுந்தருள, அங்குள்ளாரெல்லாரும் எதிர்கொண்டு சேவிக்க; அவர்களை யும் க்ருபையுடனே எழுந்தருளிப்புகுந்து, சேனாச்ரமந்தப்பாமல் அடைவே சேவித்து, ஆழிமணவாளன் திருமண்டபத்திலே சென்று, தண்டன் சமர்ப்பித்து, உள்கோயிலுள்ளே புகுந்து, பெரியபெருமாளையும் நம்பெரு மாளையும் திருவடிதொழுது, மனமுருகி, மலர்க்கண்கள் துளிக்க, கண்ணால் பருகி, வாயாரவாழ்த்தி நிற்க; பெருமாளும், திருப்பவளச்சோதி வாய்திறந்து, உடையவரை நோக்கி, நெடுநாள் தேசாந்தரத்திற் சென்றுபோர மெலிந்தீரே யென்று வினவியருள; எம்பெருமானாரும், பெரியபெருமாளைக் குறித்து "ஆகம் திரும்பித் தொண்டர் வாழ அன்பொடு தென்திசைநோக்கி" தேவர்பள்ளி கொண்டருளுகையால், அவன் பெருவானகத்தில் செல்லும்படியே, உபய விபூதியிலுள்ளார்க்கும் என்ன க்லேசமுண்டென்று விண்ணப்பஞ்செய்ய; பெருமாளும், உகந்து, தீர்த்தம், திருமாலை, திருப்பரிவட்டம், தளிகைப்ரசாதங் களும் ப்ரசாதிக்க ஸ்வீகரித்து க்ருதார்த்தராயிருக்க; பெருமாளும், மடமே போமென்று விடைகொடுத்தருள; இவரும் புறப்பட்டு, திவ்யோத்ஸவக்கொண் டாடும்படி திருமண்டபங்கள், திருக்கோபுரங்கள், திருமதிள்கள் தொடக்க மான திவ்யாகார ஸ்ரீவைபவங்களைச் சேவித்து, முதலிகளுந்தாமுமாக ஆழ்வான் திருமாளிகையேற எழுந்தருளினார். ஆழ்வானும் எதிரேயெழுந்தருளி உடை யவர் திருவடிகளிலே விழுந்து சேவித்து, உகப்பின் மிகுதியாலே திருவடி களைப் பூண்டு கிடக்க; உடையவரும், ஆழ்வானை வாரியெடுத்து அணைத் துக்கொண்டு க்லேசாதிசயத்தைப் பொறுக்கமாட்டாதே தாரைதாரையாக வர் ஷிக்க, நெடும்போது ஒருவார்த்தையும் அருளிச்செய்ய மாட்டாதே, நம் மல் பொருமலானது கர்மவசமாகாதே நம்முடைய த்ருஷ்டிதோஷத்தாலேயுடன், ஆழ்வான், இத்தர்சனத்திற்காக உமக்கிப்படி த்ருஷ்டிபோவதே யென்ன; ஆழ்வானும், ஒரு ஸ்ரீவைஷ்ணவர் திருநாமம் கோணிற்றென்று நினைத்தேனாகில் த் திரோதிக்குமென்று விண்ணப்பஞ்செய்ய; உடையவரும், அது உண்டோ? அடியேன் அந்தர்மலமோ உமக்கிப்படி வருகைக்கடியென்று திருவுள் ளம்புண்பட்டு, ஸந்தாபோதகம் பண்ணியருள; ஆழ்வானும் தேறியிருப்பதற் றுறுண்டான ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹத்துடன்கூட மடமேயெழுந்தருளி யிருந்தார்.

பின்பு, நாட்டிலுள்ள ஸ்ரீவைஷ்ணவர்களெல்லாரும், உடையவர் ஸ்ரீபாதத்தேறச்சென்று தண்டன் சமர்ப்பித்து, பெரியநம்பி திருநாட்டுக் கெழுந்தருளினாரே. ஆழ்வானுக்கும் திருக்கண்மலர் போயிற்றதேயென்று, துஃகாப்தோதகம்பண்ணித் தேவரீரைப் பெற்றோமேயென்று சொல்லி யெல்லாரும் ப்ரீதராய் எழுந்தருளி யிருந்தார்கள்.

அக்காலத்திலே திருச்சித்ரகூடம் அழிந்ததென்று, சிலர்வந்து உடையவர்க்கு விண்ணப்பஞ்செய்ய, அதுகேட்டு துஃகாகுலராய், சோகித்துத் திருமுத்துதிர்த்தருளி அக்குறைதீருகைக்கு வைபோம் திருப்பதியிலே யெழுந்தருளினொன்று கேட்டருளி, அங்கேயெல்லாம் ஆநுகூல்ய திருப்பதிக்கெழுந்தருளி ஸ்ரீகோவிந்தராஜனையும், மூலபேரஸஹிதமாக அங்கே திருப்ரதிஷ்டையும்பண்ணிவைத்து, "தெய்வத்தில்லைச்சித்ரகூடத் தென்செல்வனை, மின்னி மழைதவழும் வேங்கடத்தென்வித்தகனை" என்றதுவே பொய்ம்மொழியொன்றில்லாத மெய்ம்மொழியாகையாலே இப்படிப் பலிப்பதேயென்று அருளிச்செய்து இழவுதீர்த்தருளி, திருமலையேறி, திருவேங்கடமாமுடையும், திருவடித்தொழுது, அப்போதேமீண்டு திருமலையிறங்கி, திருத்தாழ்வரையில் ஆழ்வார்களையுஞ்சேவித்து, புறப்பட்டு, பெருமாள்கோயிலே யெழுந்தருளிப் பேரருளாளனையுந் திருவடித்தொழுது, மீண்டும் பயணமாகியிலே கோயிலுக் கெழுந்தருளி புகுந்து நம்பெருமாளைச்சேவித்து, ஸ்வமடத்தே யெழுந்தருளி, ஸ்வாமிமாரக்கர்ப்புகுந்துச் சென்றதும், [illegible] பர்யார்த்தம் அருளிச்செய்யா நின்றுகொண்டு, ஆகமே யெழுந்தருளி யிருந்தார்.

அதின் மற்றைநாள். உடையவர், ஆழ்வானையழைத்து, பேரருளாளர் அர்த்திதார்த்த பரிதாநதீக்ஷிதராயிருப்பார், நீர் அவரைக் கண்தந்தருள வேணுமென்று ஒரு ஸ்தோத்ரம் விண்ணப்பஞ்செய்யுமென் றருளிச்செய்தருள; ஆழ்வானும், அடியேனுக்கு இக்கண் வேண்டாவென்று விண்ணப்பஞ்செய்ய; எம்பெருமானாரும், அப்படியன்று சொல்லவேணுமென்று பலகாலும் நிர்ப்பந்தித் தருளிச்செய்தருள; ஆழ்வானும், கண்ணைக்குறியாமல் வரதராஜஸ்தவத்தை யருளிச்செய்ய உபக்ரமித்து, (கஉஅ) " [illegible] " (స్వస్తి హస్తిగిరిమస్తకశేఖర స్సంతనోతు మయి సంతతం హరిః నిస్సమాభ్యధికమభ్యధత్త యం దేవమౌపనిషదీ సరస్వతీ, నీలమేఘనిభమంజనపుంజశ్యామ కుంతల

ஶ்ரீமந்தஸ்யந்தாம் அப்ஜஹஸ்தீவ யம்புஜநேத்ரம் நேத்ரஸாத்குரு கரிஶைலதாமே) என்று இஸ்லோகத்தாலே ஸாக்ஷாத்காரம்பண்ணி, யோக்யமான அப்ராக்ருத திவ்ய தேஹம் அடியேனுக்குத் தந்தருளவேணுமென்று விஜ்ஞாபிக்க; அங்கிரவே, ஆழ்வானுக்கு, பேரருளாளரும் தந்தோமென்று ஸ்வப்நமுகேந அருளிச்செய்ய; ஆழ்வானும், ப்ரத்யூஷஃகாலத்திலே பெரிய ப்ரீதியோடே எழுந்திருந்து, அநுஷ்டானத்தைச் செய்து வரதராஜ ஸ்தவத்தை நிறைவேற வருளிச்செய்து, உடையவர் ஸந்நிதிக்குச் சென்றுத் தண்டனிட்டு, தேவரீர் நியமனப்படியே வரதராஜ ஸ்தவத்தை விண்ணப்பஞ் செய்தேனென்று வரதராஜ ஸ்தவத்தை முட்ட விண்ணப்பஞ்செய்து காட்ட; உடையவரும் கேட்டு உகந்தருளினவளவிலே, ஆழ்வானும், "மிளிர்மொழிக்கமரர் பெருவிசும்பருளும் பேரருளாளர்" ஆகையாலே அடியேன் கேட்டபடியே (௩அசு) "வைகுண்டகோஷ్ఠపరిపోటిత నిత్యనవ్యదివ్యాఙ్గ భవ్యమహిమ సాక్షాత్కురుష్వ కరిశైలధరం హరే త్వం" (వైకుణ్ఠకోష్ఠపరిపోటిత నిత్యనవ్యదివ్యాఙ్గ భవ్యమహిమం నేత్రసాత్కురుష్వ) என்று சொல்லப்படுகிற ஸ்ரீ வைகுண்டநாதனை ஸாக்ஷாத்காரம் பண்ணுகிற அப்ராக்ருத திவ்ய ஸங்கல்பத்தை ப்ரஸாதித்தருளிற்றென்ன; உடையவரும், அங்ஙனன்று, அங்கேறப்போவோம் வாருமென்று ஆழ்வானைக் கையைப்பிடித்துக்கொண்டு பெருமாள்கோயிலேற வெழுந்தருளி, ஆழ்வான் அருளிச்செய்த வரதராஜ ஸ்தவத்தை, வரதராஜர் ஸந்நிதியிலே விண்ணப்பஞ்செய்து தலைக்கட்டுகிறபோது, ஸாக்ஷாத்காரத்தில் உடையவர் தாழ்க்க, ஸ்வதந்த்ரம், திருச்செவிசாத்தி, பேரருளாளரும் ப்ரஸந்நராய், உடையவர் வருவதற்கு முன்னே, ஆழ்வானுக்கு அபேக்ஷிதமென்னென்று கேட்டருள; ஆழ்வானும், உடையவர் திருவுள்ளம் பற்றினதை வேண்டிக்கொள்ளாதே, நான் பெற்றபேறு, நாலூரானும் பெறவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய; அப்படியே பெறக்கடவனென்று, பெருமாளும் திருவாய் மலர்ந்தருளின வளவிலே, உடையவர் கேட்டு, ஓடிவந்து, பதறி, திருவுள்ளமுசித்து, பெருமாளைக் குறித்து, ஸர்வஜ்ஞானதேவரீர் இப்போது என்னிலுனைக் தலைக்கட்டிக்கிலிரோ; ஆழ்வான், நீ ஸ்வதந்த்ரனாய், என்னிலுனைத் தலைக்கட்டாதே, அதிலம்பித்து, நான் வருவதற்கு முன்னே இப்படிச் செய்தாயேயென்று, இவனையும் வெறுத்து, இனியென்னென்று நினைத்துநிற்க; பேரருளாளப் பெருமாளும், நம்மையும், உம்மையுங்காணுமிடத்து உள்கண்ணாலே காணக்கடவனென்று, வரப்ரதானம் பண்ணியருள; ஆழ்வானும், பெருமாளைத் தன் உள்கண்ணாலே கண்டு ஸேவித்து, சாத்தின திவ்யாபரணம், திவ்யவிக்ரஹாவயவாதிகளை,

இவையிவையென்றுகுறித்துக்காட்டியருளி, உடையவர் விக்ரஹத்தையும், சேவித்துக் காட்டியருள ; இவரும், க்ருதார்த்தராய், ஆழ்வானுடன் மீண்டு கோயிலேறவெழுந்தருளி, பூர்வம்போலே வ்யாக்யாநித்திருக்கச்செய்தே:—

நாச்சியார்திருமொழி வ்யாக்யாநத்தில், "நாறுநறும்பொழில்" என்ற பாட்டுப்ரஸ்துதமாக, ஆண்டாள் ப்ரார்த்தனையை நாம் தலைக்கட்டவேணு மென்று, அப்போதேபுறப்பட்டு, திருமாலிருஞ்சோலைக் கெழுந்தருளி, கோதை ப்ரார்த்தித்தபடியே, நூறுதடாநிறைந்தவெண்ணை, நூறுதடாநிறைந்த அக்காரவடிசில், பரிவுடனே திருமாலிருஞ்சோலைநின்ற நம்பிக்கு, அமுது செய்வித்தருளி, ஸ்ரீவில்லிபுத்தூரேற வெழுந்தருளி, வடபெருங் கோயி லுடையானையும் சேவித்து, நாச்சியார் திருமாளிகைக்கெழுந்தருளி, ஆழ்வார் திருமகளாரை, அடிவணங்கிநிற்க ; கோதையும், குலமுனியைக் குறித்து, தம்ப்ரார்த்தனை தலைக்கட்டினதற்கு மிகவுமுகந்து நங்கோயிலண்ணனென்று அர்ச்சகமுகேந திருநாமம் ப்ரஸாதித்து, தீர்த்தப்ரஸாதங்களும் ப்ரஸாதித்து, விடைகொடுத்தருள ; அங்கிலும் புறப்பட்டு, திருநகரிக்கு எழுந்தருளி ஆழ்வாரையுஞ் சேவித்து, தீர்த்தப்ரஸாதமும்பெற்று, மீண்டு பயணகதியிலே கோயிலுக்கெழுந்தருளி, ஸ்ரீபாதத்து முதலிகளுக்கு, தர்ஸநார்த்தம் ப்ரஸாதித் துக்கொண் டெழுந்தருளியிருந்தார்.

இப்படி எழுந்தருளியிருக்கிற ஸ்ரீபாஷ்யகாரருடைய ஸ்ரீபாதத்தி லாஸ்ரயித்த, முதலிகளுடைய திருமுடியடைவு யெங்ஙனே யென்னில்:—

க. கூரத்தாழ்வான்
உ. மாடபூசையாழ்வான்
ங. செட்டலூர்சிறியாழ்வான்
ச. அநந்தாழ்வான்
ரு. நடாதூராழ்வான்
சு. எங்களாழ்வான்
எ. அரண்புரத்தாழ்வான்
அ. அகலங்கநாட்டாழ்வான்
கூ. நெய்யுண்டாழ்வான்
க0. உக்கலாழ்வான்
கக. கோமடத்தாழ்வான்
கஉ. வேதாந்தியாழ்வான்
கங. கடுவிலாழ்வான்
கச. பிள்ளையாழ்வான்
கரு. மிளகாழ்வான்
கசு. காராஞ்சியாழ்வான்
கஎ. ஈயுண்ணியாழ்வான்
கஅ. கோயிலாழ்வான்
ககூ. திருக்கோவலூராழ்வான்
உ0. திருமோகூராழ்வான்

உக. முதலியாண்டான்
உஉ. பெரியாண்டான்
உங. சிறியாண்டான்
உச. அம்மங்கியாழ்வான்
உரு. மாருதிப்பெரியாண்டான்
உசு. மாறொன்றில்லாமாருதியாண்டான்
உஎ. சோமாஜியாண்டான் [டான்

உ௮. கந்தாடையாண்டான்
உ௯. ஈஶ்வராண்டான்
௩0. ஈயுண்ணியாண்டான்
௩௧. பிள்ளையாண்டான்
௩௨. குரிஞ்சிபூர்சிரியாண்டான்
௩௩. ஆளவந்தாராண்டான்
௩௪. ஐயராண்டான்.

---

௩௫. கிடாம்பியாச்சான்
௩௬. சிரியாச்சான்
௩௭. கலியநூர்சிரியாச்சான்
௩௮. கொங்கிலாச்சான்
௩௯. ஈச்சம்பாடியாச்சான்
௪0. என்ஞச்சான்
௪௧. ஐயாபிள்ளையாச்சான்
௪௨. தூயபிள்ளையாச்சான்
௪௩. ஆச்சியாச்சான்.

---

௪௪. அருளாளப்பெருமாளெம்பெ[ருமானர்
௪௫. தொண்டனூர்நம்பி
௪௬. மருதூர்நம்பி
௪௭. மழுவூர்நம்பி
௪௮. சொட்டைநம்பி
௪௯. குருவநம்பி
௫0. திருக்குருகுடிநம்பி
௫௧. வங்கிபுரத்துநம்பி
௫௨. மூடும்பைநம்பி
௫௩. ஸ்ரீபராங்குசநம்பி
௫௪. ஸ்ரீவில்லிபுத்தூர்நம்பி
௫௫. வடுகநம்பி
௫௬. திருக்குருகூர்நம்பி
௫௭. கோமாண்டூர்பிள்ளைநம்பி

---

௫௮. ஸ்ரீபராசரபட்டர்
௫௯. ஸ்ரீபராங்குசபட்டர் [பட்டர்
௬0. வரந்தரும் பெரியபெருமாள்
௬௧. அழகியமணவாளபட்டர்
௬௨. ஸ்ரீவேதவ்யாஸபட்டர்
௬௩. சிறுப்பள்ளிதேவராஜபட்டர்
௬௪. கோவிந்தபட்டர்
௬௫. திருவரங்கபட்டர்
௬௬. நம்பியாரில்ஸ்ரீரங்கராஜபட்டர்
[பட்டர்
௬௭. உள்ளுநரில் பெரியபெருமாள்

---

௬௮. சட்டம்பிள்ளைஜீயர்
௬௯. ஈச்சம்பாடிஜீயர்.
௭0. ஸ்ரீகுலசேகரஜீயர்
௭௧. திருவெள்ளறைஜீயர்
௭௨. ஆட்கொண்டவல்லிஜீயர்
௭௩. திருமழிசைஜீயர்
௭௪. திருவாய்மொழிஜீயர்
௭௫. திருநாராயணபுரஜீயர்
௭௬. ஸ்ரீசாளக்ராமஜீயர்
௭௭. கோவிந்தஜீயர்
௭௮. திருமாலிருஞ்சோலைஜீயர்
௭௯. திருப்புட்குழிஜீயர்
௮0. திருக்குடந்தைஜீயர்
௮௧. திருமூஷ்டம்ஜீயர்
௮௨. திருநின்றவூர்ஜீயர்

---

௮௩. திருநாராயணபுரத்தரையர்
[ளரையர்
௮௪. பெருமாள்கோயில் பெருமா
[ரையர்
௮௫. ராஜ நாராயணப் பெருமாள

௮௬. திருவரங்கமாளிகையரையர்
௮௭. திருவாய்மொழியரையர்
௮௮. பிள்ளைதிருநறையூரரையர்
௮௯. திருக்குருங்குடியரையர்
௯0. திருநகரியரையர்
௯௧. திருக்கண்ணபுரத்தரையர்
௯௨. திருமாலிருஞ்சோலையரையர்
௯௩. திருவநந்தபுரத்தரையர்
௯௪. ராஜமஹேந்த்ரபுரத்தரையர்
௯௫. பிள்ளைவிழுப்புத்தூரரையர்
௯௬. திருவேங்கடத்தரையர்

---

௯௭. ஆட்கொண்டவம்மாள்
௯௮. அம்மங்கியம்மாள்
௯௯. முடும்பையம்மாள்
௧00. பரித்துக்கொல்லையம்மாள்
௧0௧. உக்கலம்மாள்
௧0௨. சொட்டையம்மாள்

---

௧0௩. ஆசூரிப்பெருமாள்
௧0௪. கிடாம்பிப்பெருமாள்
௧0௫. அம்மங்கிப்பெருமாள்
௧0௬. முனிப்பெருமாள்
௧0௭. பட்டிணிப்பெருமாள்

---

௧0௮. திருமலைநல்லான்

---

௧0௯. எம்பார்

---

௧௧0. கராஞ்சிசோமயாஜியார்
௧௧௧. பெரியகோவில்வள்ளலார்
௧௧௨. அலங்காரவேங்கடவர் [ன்
௧௧௩. திருக்குருகைப்பிரான்பிள்ளா
௧௧௪. ஆர்க்காட்டுப்பெருமாள்
௧௧௫. ராமாநுஜம்பிள்ளான்
௧௧௬. திருக்கச்சிப்பிள்ளான்
௧௧௭. கோமடத்தையர்
௧௧௮. வைத்தமாநிதிசிறியாழ்வார்
௧௧௯. பெருஜீயர்
௧௨0. அணியரங்கத்தமுதனார்
௧௨௧. திருவரங்கத்தமுதனார்
௧௨௨. கோமாண்டூரிளையவல்லி
௧௨௩. கருந்தேவர்

ஐம்பத்திருவர்.

[பிள்ளை
௧௨௪. எம் பெருமானார் செல்வப்
௧௨௫. ஸ்ரீகுலசேகரப்பெருமாள்
௧௨௬. பட்டர்பிரான்தாஸர்
௧௨௭. பகைவல்லிதாஸர்
௧௨௮. ஸ்ரீவில்லிபுத்தூர்தாஸர்
௧௨௯. ஸ்ரீநாராயணதாஸர்
௧௩0. ஸ்ரீகோவர்த்தனதாஸர்
௧௩௧. திருவழுதிவளநாடுதாஸர்
௧௩௨. ஸ்ரீராமாநுஜதாஸர்
௧௩௩. பிள்ளையுரங்காவல்லிதாஸர்
௧௩௪. வண்டர்
௧௩௫. சுண்டர்
௧௩௬. ராமாநுஜவேளைக்காரர்

நத்தத்து முதலிகள்.

௧௩௭. திருவரங்கதாஸர்
௧௩௮. திருமாலிருஞ்சோலைதாஸர்
௧௩௯. வானமாமலைதாஸர்

கோங்கின் முதலிகள்.

௧௪0. அழகியமணவாளதாஸர்
௧௪௧. திருவேங்கடதாஸர்
௧௪௨. பேரருளாளதாஸர்

திருமழிசைக்கூர்நத்தத்தில்
முதலிகள்.

௧௪௩. எதிவாசூடாமணிதாஸர்
௧௪௪. எதிராஜதாஸர்
௧௪௫. இளையாழ்வார்தாஸர்

பாண்டியநாட்டுமுதலிகள்.

௧௪௬. ஸ்ரீஅலங்காரதாஸர்
௧௪௭. ஸ்ரீசடகோபதாஸர்
௧௪௮. பிள்ளைதிருவாய்மொழிதாஸர்
௧௪௯. ஸ்தாநத்தாரில் சேநாநாதப்ர
[ஹ்மராயர்
௧௫௦. வீரசுந்தரப்ரஹ்மராயர்
௧௫௧. ஜகந்நாதப்ரஹ்மராயர்
௧௫௨. வீரராகவப்ரஹ்மராயர்
௧௫௩. பிள்ளைபுரக்கையுடையார்
௧௫௪. திருமஞ்சனமெடுக்கும் தூய
[முனிவேழம்
௧௫௫. ஸ்ரீபண்டாரங்காவல்திருவரங்
[கமாளிகையார்
௧௫௬. ஆண்டவர் அரியவர்

அம்மைமார்கள்.

௧௫௭. திருவநந்தபுரத்தம்மை
௧௫௮. திருவாட்டாத்தம்மை
௧௫௯. திருவண்பரிசாரத்தம்மை
௧௬௦. மன்னனார்கோவில் பேரேத்
௧௬௧. திருநறையூரம்மை [தம்மை
௧௬௨. திருக்கண்ணபுரத்தம்மை
௧௬௩. திருப்பதிஸ்ரீகார்யஞ்செய்யு
௧௬௪. ஆண்டாளம்மை [மம்மை
௧௬௫. நாயகத்தேவியார்
௧௬௬. தூயபெருந்தேவியார்
௧௬௭. பெரியபெருந்தேவியார்
௧௬௮. சிரியபெருந்தேவியார்
௧௬௯. பெரும்பூதூர்திருவரங்கம்
௧௭௦. திருக்குடந்தை தூயவாயிரம்
௧௭௧. கொங்கில்பிராட்டியார்
௧௭௨. அத்துழாயம்மை
௧௭௩. அம்மங்கியம்மை
௧௭௪. கூரத்தாண்டாள்
௧௭௫. தேவகப்பிராட்டியார்
௧௭௬. யதிராஜவல்லியார்
௧௭௭. பங்கயச்செல்வியார்
௧௭௮. பொன்னாச்சியார்
௧௭௯. இன்னிழவஞ்சியார்
௧௮௦. சூடிக்கொடுத்தாள்
௧௮௧. திருப்பாவைபாடினாள்

எம்பெருமானார்திருவடிகளிலே ஆஸ்
ரயித்த முதலிகளெழுபத்து நாலா
சார்யர்களாவொன்னில்:—[நம்பி
௧. ஆளவந்தார்குமாரர்சொட்டை
அவர் குமாரர். என்னாச்சான்.
அவர் குமாரர். பிள்ளையப்பன்.[ர்
௨. பெரியநம்பிகுமாரர் புண்டரீக
௩. திருக்கோட்டியூர்நம்பிகுமாரர்
[தெக்காழ்வான்
௪. திருமாலையாண்டான் குமாரர்
[சுந்தரத்தோளுடையார்
௫. பெரியதிருமலைநம்பி குமாரர்
[கந்தாடையாண்டான்
௬. கூரத்தாழ்வான்குமாரர்பட்டர்
சீராமப்பிள்ளை.
௭. முதலியாண்டான்குமாரர் கந்
[தாடையாண்டான்
௮. நடுவிலாழ்வான்

௯. கோமடத்தாழ்வான்
௧௦. திருக்கோவலூராழ்வான்
௧௧. திருமோகூராழ்வான்
௧௨. பிள்ளைப்பிள்ளையாழ்வான்
௧௩. நடாதூராழ்வான்
௧௪. எங்களாழ்வான்
௧௫. அநந்தாழ்வான்
௧௬. மிளகாழ்வான்
௧௭. நெய்யுண்டாழ்வான்
௧௮. செட்டலூர்சிறியாழ்வான்
௧௯. வேதாந்தியாழ்வான்
௨௦. கோயிலாழ்வான்
௨௧. உக்கலாழ்வான்
௨௨. அரணபுரத்தாழ்வான்
௨௩. எம்பார்
௨௪. கிடாம்பியாச்சான்
௨௫. கணியனூர்சிறியாச்சான்
௨௬. ஈச்சம்பாடியாச்சான்
௨௭. கொங்கிலாச்சான்
௨௮. ஈச்சம்பாடிஜீயர்
௨௯. திருமலைநல்லான்
௩௦. சட்டம்பிள்ளைஜீயர்
௩௧. திருவெள்ளறைஜீயர்
௩௨. ஆட்கொண்டவல்லிஜீயர்
௩௩. திருநகரிப்பிள்ளை
௩௪. காஞ்ஜிசோமயாஜியார்
௩௫. அலங்காரவேங்கடவர்
௩௬. நம்பிகருத்தேவர்
௩௭. சிறுப்பள்ளி தேவராஜபட்டர்
௩௮. பிள்ளையுரைந்தையுடையார்
௩௯. திருக்குருகைப்பிரான்பிள்ளா
௪௦. பெரியகோயில்வள்ளலார் [ன்
௪௧. ஆசூரிப்பெருமாள்
௪௨. திருக்கண்ணபுரத்தாச்சான்
௪௩. முனிப்பெருமாள்
௪௪. அம்மங்கிப்பெருமாள்
௪௫. மாருதியாண்டான்
௪௬. மாறொன்றில்லா மாருதியாண்
௪௭. சோமாஜியாண்டான் [டான்
௪௮. ஜீயராண்டான்
௪௯. ஈஸ்வராண்டான்
௫௦. ஈயுண்ணிப் பிள்ளையாண்டான்
௫௧. பெரியாண்டான்
௫௨. சிறியாண்டான்
௫௩. குறிஞ்சிபுரம்சிறியாண்டான்
௫௪. அம்மங்கியாண்டான்
௫௫. ஆளவந்தாராண்டான்
௫௬. அருளாளப்பெருமானெம்பெ
௫௭. தொண்டனூர்நம்பி [ருமானார்
௫௮. மருதூர்நம்பி
௫௯. மழுவூர்நம்பி
௬௦. திருக்குருக்குடிநம்பி
௬௧. குருவைநம்பி
௬௨. முடும்பைநம்பி
௬௩. வடுகநம்பி
௬௪. வங்கிபுரத்துநம்பி
௬௫. ஸ்ரீபராங்குசநம்பி
௬௬. அம்மங்கியம்மாள்
௬௭. பரித்திக்கொல்லையம்மாள்
௬௮. உக்கலம்மாள்
௬௯. சொட்டையம்மாள்
௭௦. முடும்பையம்மாள்
௭௧. கோமாண்டூர்பிள்ளை
௭௨. கோமாண்டூரிளையவல்லி
௭௩. கிடாம்பிப்பெருமாள்
௭௪. ஆர்க்காட்டுப்பிள்ளான்.

(௬௰) "ஸம்ஸேவிதஸ்ஸம்யமிஸப்தஶத்யா பீடைஶ்சதுஸ்ஸப்ததிபிஸ்ஸமேதை: அந்யைரநந்தைர்ஜகதீஶமுக்யை: ராமாநுஜோயம் யதிஸார்வபௌம:" (సంసేవితస్సంయమిసప్తశత్యా పీఠైశ్చతుస్సప్తతిభిస్సమేతైః, అన్యైరనన్తైర్జగతీశముఖ్యైః రామానుజోయం యతిసార్వభౌమః) என்கிறபடியே, எழுநூறு உத்தமாஸ்ரமிகளாலும், எழுபத்துநாலு ஸிம்ஹாஸநஸ்தரான ஆசார்யபுருஷர்களாலும், அஸங்க்யாதரான சாத்தாத முதலிகளாலும், பன்னிராயிரம் ஏகாங்கிகளாலும், முந்நூறு கொத்தியம்மை மார்களாலும், எண்ணிறந்த ராஜாக்களாலும், இப்படி அகிலராலும்சேவ்யமானராய் இவ்வைஸ்வர்யத்துடனே (௬௧) "ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீஶ்ச வர்த்ததாம்" (శ్రీరంగనాథో జయతు శ్రీరంగశ్రీశ్చ వర్ధతామ్) என்று நம்பெருமாளை மங்களாஸாஸநம்பண்ணிக்கொண்டு சேவித்திருந்தார்.

இப்படியிருக்கிற உடையவர் திருவடிகளிலே நித்ய கைங்கர்யம் பண்ணும் முதலிகள்:—கூரத்தாழ்வானும், முதலியாண்டானும், நடாதூராழ்வானும், பட்டவர்க்கமும், ஸ்ரீபாஷ்யத்திற்கு உசாத்துணையாயிருப்பார்கள். அருளாளப்பெருமா னெம்பெருமானார், ஜ்ஞாநஸாரம், ப்ரமேயஸாரம் என்கிற ப்ரபந்தங்களை யிட்டருளி, எழுதி உடையவர் ஸந்நிதியிலேவைத்து ஸேவித்துநிற்க, உடையவரும், ஆத்யந்தமாகத் திருக்கண்சாத்தியருளிஉகந்து, அன்றுமுதல் தம்முடைய திருவாராதநமான பேரருளாளரைத் திருவாராதநம் பண்ணிக்கொண்டிருமென்று நியமித்தருளினார்; அன்றுமுதல் திருவாராதநம் செய்தருள்வர். கிடாம்பிப்பெருமாளும், கிடாம்பியாச்சானும், திருமடைப்பள்ளிக்குக் கடவராயிருப்பார்கள். வடுகநம்பி, எண்ணெய்க்காப்பு சாத்தியருள்வர். கோமடத்து சிறியாழ்வான் கலசப்பானையையும், ஸ்ரீபாதரக்ஷையையு மெடுப்பர். பிள்ளை யுறங்காவல்லிதாஸர், கருகூலம்நோக்குவர். அம்மங்கி பாலமுது காய்ச்சுவர். உக்கலாழ்வான் ப்ரஸாதகலமெடுப்பர். உக்கலம்மாள் திருவாலவட்டம் பணிமாறுவர். மாருதிப்பெரியாண்டான் திருக்கைச்செம்புபிடிப்பர். மாறொன்றில்லா மாருதிச்சிறியாண்டான் மடத்திற்கு அமுதுபடி, கறியமுது, பாலமுது, நெய்யமுது முதலானவை நடத்திப்போருவர். தூயமுனி வேழம் திருமஞ்சநமெடுப்பர். திருவரங்க மாளிகையார் ஸ்ரீபண்டாரம்நோக்குவர். வண்டரும், சுண்டரும், கைக்காயிரம்பொன்னுக்கு ராஜசேவைபண்ணி மடத்திற்குத் திருக்கைவழக்காக்கி யருள்வர்கள்; ராமாநுஜவேளைக்காரர் திருமேனிக்காவலாய்ப் போருவர். அகளங்க நாட்டாழ்வான் ப்ரதிபக்ஷநிரஸநம் பண்ணிப்போருவர்.

ஸ்ரீவடுகநம்பிவைபவம்.

இவர்களில் வடுகநம்பி, எம்பெருமானார் திருவடிகளே உபாயோ
பேயமென்று விஸ்வசித்து அவர் திருவடி நிலைகளையே திருவாராதனம் பண்
ணிப் போருவர். ஒரு பயணத்திலே வடுகநம்பி, உடையவர் திருவாராதனத்
தையும், தம்முடைய திருவாராதனத்தையும் சேர வொருமுடியாக வைத்துக்
கொண்டுவர; உடையவருங்கண்டு, வடுகா இதென்ன செய்தாய்? என்ன;
இவரும், உங்கள் தேவரில் எங்கள் தேவருக்கு வந்தகுறையென்னென்று விண்
ணப்பஞ்செய்தார். வடுகநம்பி உடையவருடன் பெருமாளை சேவிக்கப் போ
னாலும், உடையவர் விக்ரஹத்தையே சேவித்துக்கொண்டுபோருவர். ஒருநா
ளித்தைக்கண்டு எம்பெருமானார், பெரியபெருமாளுடைய திருக்கண்ணழ
கைப் பாராயென்ன; இவரும், பெருமாள் திருக்கண்ணழகையும் உடைய
வர் திருக்கண்ணழகையும் பார்த்து "என்னமுதினைக் கண்டகண்கள் மற்றொ
ன்றினைக் காணாவே" என்ன; உடையவரும், இதொருபடி யிருந்தபடி என்னெ
ன்று உகந்து, வடுகநம்பியை பூர்ணகடாக்ஷஞ் செய்தருளினார். வடுகநம்பி,
எம்பெருமானார் அமுதுசெய்தருளின தளிகை ப்ரசாதம் ப்ரசாதிக்கால், இர
ண்டு திருக்கைகளாலும் ஏற்றுக்கொண்டு ப்ரசாதஸ்வீகாரம்பண்ணி, தம
திருமுடியிலே திருக்கைகளைத் தடவிக்கொண்டு போருவர். இத்தைக்கண்ட
உடையவர்கண்டு, கனக்ககோபித்து, வடுகா! கைகளைக்கழுவிக்கொள்ளென்ன,
கழுவிக்கொண்டு, மற்றைநாள், நம்பெருமாள் அமுதுசெய் தருளின காலத்
தில் உடையவருடன் சென்றவளவில், உடையவரும், தமக்கு ப்ரசாதித்த
பெருமாள் ப்ரசாதத்தைத் தாமும் ஸ்வீகரித்தருளி, இவருக்கும், வடுகா! இ
தோவென்று ப்ரசாதிக்க, இரண்டுதிருக்கைகளாலு மேற்றுக்கொண்டு ப்ரசா
தப்பட்டு, தம் திருவடிகளில், ஸ்ரீவைஷ்ணவர் திருக்கைவிளக்க ப்ரசாதிக்க,
திருக்கை விளக்கிக்கொண்டார். உடையவர், இதுகண்டு, இதென்செய்தாய்
வடுகா வென்ன, நேற்று அருளிச்செய்தபடி செய்தேனென்றார். இதுகேட்டு
உடையவரும், உமக்குத் தோற்றோமென் றருளினார். வடுகநம்பி ஒருநாள்
உடையவர்க்குப் பாங்காக பாலமுது காய்ச்சாநிற்க, பெருமாள் பெரியதிருநா
ளில் உடுத்து, முடித்து, பூண்டு புறப்பட்டருள, உடையவரும் பெருமாளை
சேவிக்கப் புறப்பட்டு, வடுகா பெருமாளை சேவிக்கவாவென்ன; நம்பியும், உம்
முடைய பெருமாளை சேவிக்கவந்தால், என்னுடைய பெருமாளுக்கு காயா
நிற்கிற பாலமுது பொங்கிப்போம், வரக்கூடாதென்றருளினார். வடுகநம்பி
யகத்தே பூர்வசம்பந்திகளா யிருப்பார் சிலர்வந்து தங்கிப்போக, அகத்தை
யெல்லாம் சுற்றி சோதித்து பூசி தத்ஸ்ப்ருஷ்ட பாண்டங்களையுமுடைத்துப்

போகட்டு, இதற்கு ப்ராயஶ்சித்தம் என்னென்று விசாரித்து, முதலியாண்டான் புறக்கடையில் கழித்துக்கிடந்த பாண்டங்களைக் கொண்டுபோய் விநியோகங்கொண்டார். ஆகையால்ஆசார்யசம்பந்தமுள்ளார் எல்லைக்குள்பட்டதில் அபாகவதத்வபுத்தியின்றியே பாகவதத்வபுத்தி முத்தினபடி. வடுகநம்பி உடையவர் ஸ்ரீபாததீர்த்தமல்லது மற்றொருவர் ஸ்ரீபாததீர்த்தங் கொள்ளார். தீர்த்தநியதியும்அவர்க்கேயுள்ளதிறே. இப்படியேதீர்த்தநியதியையுடையராய், அவர் ஸ்ரீபாததீர்த்தத்தை ஸ்ரீஸாளக்ராமத்திலே தாம்சேர்த்து தநமாகச் சேமித்து வைத்துப் பேணிக்கொண்டு, உடையவர் திருவடிநிலைகளையே திருவாராதனமாகவுடையராய், அவை தன்னையே அங்கே ப்ரதிஷ்டித்து நோக்கிக் கொண்டு போந்து, தம் சரமதசையிலும் தமக் கந்தரங்கரான ஸமாஶ்ரிதர்க்கும் தஞ்சமாகக் காட்டிக்கொடுத்து, ஸித்ததநமிது, வருந்தியும் பேணிக்கொண்டு போருங்கோளென்று அடைக்கலங்காட்டிக்கொடுத்தருளினார்

ஸ்ரீ அநந்தாழ்வான் வைபவம்.

பின்னையும், அநந்தாழ்வான் ராமாநுஜ புஷ்கரிணி கட்டிவைக்கும்போது, மண்சுமவாநிற்க, பிள்ளைகளிலே யொருவர் சென்று கூடையை வாங்கப்புக, நான் அத்தைவிட இளைப்பன், நீ இத்தைத்தொடில் இளைப்புதீயென்றருளிச்செய்ய ; இளைப்பாகாதென்று பிள்ளை பின்னையுங்கூடையை வாங்கப்புக ; ஆகில், நான் ஜீவிக்கிற ஜீவனத்தை வாங்கவேணுமோ, நீயும் வேணுமாகில் ஒருகூடையை வாங்கிக்கொண்டு சுமக்கமாட்டாயோவென்றருளினார். பின்னையுமொருநாள் கர்ப்பவதியான தம் தேவிகள்மேலே மண்சுமத்தாநிற்க ; இதுகண்டு திருவேங்கடமுடையான் ஒரு பிள்ளையாய் எதிரேவந்து வாங்கிக்கொண்டுபோக ; தேவிகள் மிக வருமதுகண்டு, இதுவென் கடுக வருகிறாயென்ன ; அவரும், ஒருபிள்ளை எதிரேசென்று கூடையை வாங்கிக்கொண்டு போகிறானென்று சொல்லக்கேட்டு, உடனேசென்று கண்டு, கைங்கர்ய விக்னகாரி, கூடையைத் தொடாதே கொள்ளென்று கொட்டெடுத் தடிக்கப்புக ; திருவேங்கடச்செல்வன் ஓடிச்சென்று கோவிலிலே புகுந்தானென்பர்கள். அநந்தாழ்வான், திருநந்தவனத்திலே திருப்பளித்தாமமெடாநிற்க, திருக்கையிலே பாம்புசந்தஷ்டமாக, பின்னையும் போய் நீராடி கைங்கர்யத்திலேபோர ; ஸ்ரீபாதத்துக்குப் பரிவராயிருப்பார் விஷந்தீர்க்கப் பார்க்கவேண்டாவோவென்ன, அத்தை நிவர்த்திப்பித் தருளினார், பின்பு கோவிலேற வெழுந்தருளினவாறே, திருவேங்கடமுடையான் திருவாய்மலர்ந்து விஷந்தீர்க்க வேண்டாவென்று என்ன நினைத்துச்சொன்னீரென்று கேட்டருள, இவரும், கடியுண்டபாம்புவலிதாகில்திருக்கோனேரியிலே தீர்த்தமாடி திருவேங்

கடமுடையானைசேவிக்கிறேன்; கடிக்கபாம்பு வலியதாகில்விரஜையிலேதீர்த்த மாடி ஸ்ரீவைகுண்டநாதனை சேவிக்கிறேனென் றிருந்தேனென்று விண்ணப் பஞ்செய்தார். அநந்தாழ்வான் கோவலராயப்பத்தில் பெருந்திருநாளுறபோது, கட்டுத்திருப்போனகம் கட்டிக்கொண்டுபோய் அமுதுசெய்யப் புக்கவாறே, பட்டையடங்கலும் எற்றெறும்பாய்க்கிடக்க, அத்தைக்கண்டு நீரென்று "எம்பெருமான் திருமலைமேலே தேனுமாவேனே" என்று அவர்களிலே சில ராய்த் திரிவர்கள், இப்படியே கொண்டுபோய் திருமலையிலே வைத்துவாரும் கோளென்று அருளினார். அநந்தாழ்வான், திருமாலைசேர்க்கும் மண்டபத்தி லேயிருந்து திருமாலை கட்டாநிற்க, திருவேங்கடமுடையார் வருகிறபடி, பேசாதேயிருந்து, திருமாலைகட்டி சேர்த்துக்கொண்டு வந்து புக்கவாறே; திருவேங்கடமுடையாரும், நா மழைக்க, அநந்தாழ்வான் நீர் வாராதிருந்த தென்னென்று திருவுள்ளமாக ; இவரும், தேவரீரைப் போலன்றி காரியமென், இளைக்குருமாகொட்டு வெடியாநிற்க, வென்றார்; திருவேங்கடமுடையாரும், ஆகில், நாம் உம்மை யிங்குநின்றும் போகச்சொன்னோமாகில் செய்வதென் னென்று திருவுள்ளமாக ; இவரும், "பரன்சென்று சேர் திருவேங்கடம்" அன்றோ, தேவரீரன்றோ வந்தேறி ; இவ்விடம் தேவரீரை யாஸ்ரயிக்கவா ருதன்றோ, தேவரீர் ஒருநிறமையும்பட்டிருக்கிறீரோ ; இருவரும் திருமலையாழ் வாரை யாஸ்ரயித்தோமித்தனையன்றோ வென்று விண்ணப்பஞ் செய்தார்.

ஸ்ரீகூரத்தாழ்வான்வைபவம்.

இப்படிப்பட்ட வித்யாவைபவத்தையுடையவர் வாழ்ந்தருளுங் காலத்திலே, எம்பெருமானுக்கு விண்ணப்பஞ்செய்யாநிற்க ஆழ்வான், நம்பெருமாள் ஸந்நிதியிலேசென்றுசேவித்து நிற்க ; பெருமாளும், ஆழ்வான், நீ யொன்று சொல்லுவான்போலே யிருக்காயென்று திருவுள்ளமாயருள ; இவரும், ஒருஶ்லோகத்தை விண்ணப்பஞ்செய்து உபந்யஸிக்க ; பெருமாளும், உமக்கு வேண்டினதெல்லாம் தருகிறோம், வேண்டிக்கொள்ளுமென்று உகப்பின்மிகுதியாலே திருவாய்மலர்ந்தருளிச்செய்ய ; ஆழ்வாரும், நாயிந்தே, அடியேனுக்குப் பண்டேயெல்லாம் தந்தருளிற்றேயென்ன ; பெருமாளும், அப்படியன்று இப்போதும் வேண்டிக்கொள்ளும், பெண்டுகளையோ, நம்பி ராமாநுசனையே தருகிறோமென்று திருவுள்ளமாக ; ஆழ்வானும், ஸ்வத் பலவிரோதியான இஶ்ஶரீரத்தை விடுவித்து, ஸ்வஸாயுஜ்யத்தை தந்தருளவேணுமென்று அபேக்ஷிக்க ; அத்தையொழியச் சொல்லென்றருள ; இவரும், "தாழ்வென்றும் காமமோட்டுங்கடிது" என்கிறபடியே, அடியேன் அபேக்ஷி

தார்த்தத்தையே ப்ரஸாதிக்க வேணுமென்று விண்ணப்பஞ்செய்ய ; ஆகில்,
உமக்கும், உம்முடைய சம்பந்தமுடையார்க்கெல்லார்க்கும்பரமபதந்தந்தோ
மென்றருளிச்செய்தருளி, திருப்பரிவட்டமும், தளிகை ப்ரசாதமும், பூந்த
ண்டுழாய் மாலைத்தண்டுழாயும், திருக்கைச்சிறப்பும் ப்ரசாதித்துவிடைகொடு
த்தருளினார். பின்பு, ஆழ்வான், அர்ச்சராதி மார்க்கத்திற்கு ப்ரதமாலங்காரம்
போலே யிருக்கப்புறப்பட்டு, தம்திருமாளிகையிலும் புகுராதே, ஆழ்வார்
திருமாளிகையிலே புறவீடு விட்டெழுந்தருளி யிருந்தார். உடையவரும் இத்
தைக்கேட்டு, உடுத்தகாஷாயத்தைவாங்கி ஆகாசத்தேரவெறிந்து யேற்றுக்
கொள்ள; ஸ்ரீபாதத்து முதலிகள் இதுவென்ஜீயாவென்றுகேழ்க்க ; உடைய
வரும், நமக்காழ்வான் சம்பந்தமுண்டேல் பரமபதம்பெறலாமென் றருளிச்
செய்தருளினார். ஆகையால் ஸதாசார்யஸந்நிதியோடு ஸச்சிஷ்யஸந்நிதியோடு
வாசியில்லையிறே. உடையவரும், ஶோகாவிஷ்டராய், ஸ்ரீபாதத்து முதலிகளை
யெல்லாரையுங் கூட்டிக்கொண்டு, ஆழ்வானிருந்த விடத்தேறச்சென்று, ஆழ்
வான், நீரிப்படி செய்தருளலாமோவென்ன; ஆழ்வானும் பேசாதேயிருந்தார்.
உடையவரும், ஆழ்வான் உமக்கு முற்படவேண்டுமபிப்ராயமென், பேசாதிரு
க்கிறதென்னென்றுகேட்டருள; ஆழ்வானும், பரமபதத்தில்நடக்கும் அடை
கேட்டுக் கஞ்சியென்ன ; உடையவரும் அதுசொல்லிக் காணீரென்ன ; ஆழ்
வானும், "முடியுடைவானவர் முறைமுறை யெதிர்கொள்ள" வென்று நித்ய
ஸூரிகளுடன் முற்பட்டவர்கள்பிற்பட்டவர்களை யெதிர்கொள்ளவருவர்கள்
அது, அடியேன் பிற்படில் அடைவுகேடாமென்ன ; உடையவ ரிதுகேட்டு
(௧௩௨) "நஸாஹஸ்ரம் ஜெநவக்ஷ்யதி" (நஸாஹஸ்ரம் ந ஜெபக்ரமை:) என்றடை
கெட்டிருக்கும் போகவிபூதியிலே நீர் அடைவுதேடுவதே, இதொருஶேஷத்
மிருந்தபடி யென்னென்று போரவித்தராய் திருமுத்துதிர்த்து, உடைய
இவர் கொடுகிற நினைவையறிந்து, இவர்செவியிலே த்வயத்தை யருளி
செய்ய ; முதலிகளும் இப்போதாக விதுவென்னென்ன ; நீங்களறிவீர்கே
ளோ, ராஜகுமாரனுக்கு கர்ப்பூர நிகரமில்லாதபோது நாக்குவரளுமா
போலே இவர்க்குந் த்வயமில்லாதபோது நாக்குவரளுமென்றருளிச்செய்து
ஆழ்வானையணைத்துக்கொண்டு விம்மல்பூரம்பி, திருவுள்ளமுடைகுலைப்பட்டு
ஆழ்வான், என்னுயிர்நிலையான உம்மையிழந்து எங்ஙனே தரிப்பேன், எ
னையுமுடன்கொண்டுபோகத் திருவுள்ளம் பெற்றிலீர், நம்மை விட்டுப்போ
உமக்குருசிப்பதே, (௧௩௩) "வம்ஸாம்ஸுஷ்டிர் வித்ராவஹாரி" (ஸம்ஸ
ருஷ்டிர்......) யானபெருமாள்பக்கல் ஸங்கமற்று, பரமபத நிலயனானவ
பக்கல்ஸங்கம் உம்மை இப்படிமுந்தாபண்ணுவதே, பரமபதநாதனும், அ

குள்ளநித்யஸூரிகளும் என்னபாக்யம்பண்ணினார்களோ; இங்குறாங்குகிறபெருமாளும் இங்குள்ளாரங்களும் என்னபாபம் பண்ணினோமோ; உன்றிருவுள்ளங் கலங்கச்சொல்லி என்ன ப்ரயோஜனமுண்டு, உம்பேற்றுக்கு நாம் விலக்கடி யாகலாமோ, சுகமேநித்ய விபூதியேற வெழுந்தருளீ ரென்று ஆழ்வான்றிருமுதுகைத் தடவி அஞ்ஜலித்து விடைகொடுத்தருள; ஆழ்வானும், உடையவர் திருவடிகளிலே வேரற்றமரம்போலே விழுந்துகிடக்க; உடையவரும், இரண்டுதிருக்கைகளாலும் வாரியெடுக்க எழுந்திருந்து, உடையவர் திருவடிகளை தம்திருக்கண்களிலும், திருமார்பிலும் ஒத்திக்கொண்டு ஸ்வஸிரோபூஷண மாக்கிக்கொண்டு தீர்த்தங்கொள்ள, உடையவரும் திருக்கைகளாலேப்ரசாதிக்க, நிறையப்ரசாதப்பட்டு, (௩௯௪) "யோநித்யமச்யுத பதாம்புஜயுக்மருக்ம வ்யாமோஹதஸ்ததிதராணி த்ருணாய மேநே, அஸ்மத்குரோர்பகவதோஸ்ய தயைகஸிந்தோ: ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே" (యోనిత్యమచ్యుత పదాంబుజయుగ్మరుక్మ వ్యామోహతస్తదితరాణి తృణాయమేనే, అస్మద్గురోర్భగవతో౽స్య దయైకసిన్ధో రామానుజస్యచరణౌ శరణంప్రపద్యే) என்று அனுசந்தியா நின்றுகொண்டு க்ருதாஞ்சலிபுடராய், இனி மட்டமே எழுந்தருள வேணுமென்று விண்ணப்பஞ்செய்து, வடவாற்றங்கரையளவாக உடையவர் பின்னேசெல்ல; இனி யாழ்வான், நில்லுமென்ன, தெண்டஞ்சமர்ப்பித்து மீண்டு ஆழ்வார் திருமாளிகைக்கு அருகிலிட்ட திருக்காவணத்தின்னடுவே எழுந்தருளியிருந்து; ஆண்டாளைப்பார்த்து என்னினைத்திருக்கிறுயென்ன; ஆண்டாளும், அடியேனுக்கு வேறொரு நினைவுண்டோ? தேவரீர்திருவுள்ளத்தைப் பின்செல்லுகையொழிய வென்றுதிருவடிகளிலே தெண்டனிட்டு அஞ்சலித்து நிற்க; ஆழ்வானும், பட்டரையும், சீராமப்பிள்ளையையும் அழைத்தருளி, பெருமாளும் நாச்சியாருமெழுந்தருளியிருக்க உங்களுக்கொருதாழ்வில்லை, நம்பெருமாள்பெற்று வளர்த்தாரென்று அதுவே தஞ்சமென்றிராதே, எம்பெருமானர் திருவடிகளே தஞ்சமென்றிருங்கோள்; ஆண்டாள் சொன்னபடியே வர்த்தியுங்கோள், பாகவதவிஷயத்திலே த்ரிவிதகரணங்களாலும் அபராதம்பண்ணுதே அவர்களை யனுவர்த்தித்துக் கொண்டு போருங்கோளென்று அருளிச்செய்து, திருவடிகளிலே விழுந்துகிடக்கிற பட்டரையும் சீராமப்பிள்ளையும் எடுத்து, திருக்கையாலே கண்ணில் நீரைத்துடைத்து, நீங்கள் ப்ராக்ருதசம்பந்தத்தை நினைத்து க்லேஸித்தீர்களாகிலும், உடையவர் திருவடிகளில் ஸம்பந்தத்தை தூஷித்தவர்களாவுதிகோள்; ஆத்ம ஸம்பந்தத்தை நினைத்து க்லேஸித்தீர்கோளாகில் நம்முடைய ஒழிக்க வொழியாத உறவை யறிந்திலீர்கோளாவுதிகோள் என்று

அவர்களை தேற்றி, கோயிலுக்கு நேரே பிள்ளைப்பிள்ளை யாழ்வான் மடியிலே திருமுடியையும், ஆண்டாள்மடியிலே திருவடிகளையும் வைத்து, உடையவர் திருவடிகளை த்யானித்துக்கொண்டு அன்றே திருநாட்டுக் கெழுந்தருளினார். உடையவர் இதுகேட்டு, அங்கேற வெழுந்தருளி, ஆழ்வான்குமாரரான பட்டரைப்பார்த்து, க்லேசியாதேயென் றருளிச்செய்தருளி, ஆழ்வானுக்கு சரம கைங்கர்யத்தைச் செய்யுமென்ன; பட்டரும் பெருமாள் பரிகரத்தையும், அங்குள்ள ஸ்ரீவைஷ்ணவர்களையுங்கூட்டிக்கொண்டு (௩௱௫) "ஸர்வகர்மாணி ஸூத்ரேண காயத்ர்யா வைஷ்ணவேந ச நாராயணாநுவாகேந ஸ்நாபயேத்தம் ஸுஸம்யுத:" (సర్వకర్మాణిసూత్రేణ గాయత్ర్యావైష్ణవేనచ నారాయణానువాకేన స్నాపయేత్తం సుసంయుతః) என்கிறபடியே, ஆழ்வானை நீராட்டப்பண்ணி, கேசவாதி திருநாமங்களையுஞ் சாத்தி அலங்கரித்து, ஸ்ரீசூர்ண பரிபாலனமும்பண்ணி, எழுந்தருள வைத்துக்கொண்டுபோய் (௩௱௬) "கேசவார்ப்பித ஸர்வாங்கம் சரீரம் மங்களாவஹம் நஸ்ப்ருச்யாத்தாஹயேத்விப்ரோ ப்ரஹ்மமேதவிதாநத:" (కేశవార్పితసర్వాంగం శరీరంమంగళావహం నస్పృశ్యాద్దాహయేద్విప్రో బ్రహ్మమేధ విధానతః) என்கையாலே, கேசவன்றமரானமுமுக்ஷுக்கள் திருமேனிவிட்டால், அத்திருமேனியை ப்ரஹ்மமேத ஸம்ஸ்காரமொழிய வேறொன்றில் ஸம்ஸ்கரிக்க வொண்ணா தென்கையாலும் (௩௱௭) "ப்ரஹ்மமேதவ்ரதம் ப்ரோக்தம் முநிபிர் ப்ரஹ்மதத்பரை: மஹாபாகவதாநாம் ஹி கர்த்தவ்யமிதமுத்தமம்" (బ్రహ్మమేధవ్రతంప్రోక్తం మునిభిఃబ్రహ్మతత్పరైః మహాభాగవతానాంహి కర్తవ్యమిదముత్తమం) என்று ஹாரீதஸ்ம்ருதியிலே சொல்லுகையாலும் மஹாபாகவதோத்தமமான கூரத்தாழ்வானை, பட்டர், ஸம்ஸ்கரித்து பள்ளி படுத்தருளினார். பின்பு, பத்து பன்னிரண்டுநாளும் செய்யுங்க்ருத்யங்களை, சாஸ்த்ரோக்த ப்ரகாரத்திலே செய்தருளி, பட்டர், உடையவரையும், முதலிகளையும், எழுந்தருள வைத்துக்கொண்டுபோய் (௩௱௮) "நாத: பரதரம் தீர்த்தம் வைஷ்ணவாங்க்ரிஜலாச்சுபம் தேஷாம் பாதோதகம் புண்யம் கங்காதபி புநாதி ஹி" (నాతఃపరతరంతీర్థం వైష్ణవాంఘ్రిజలాచ్ఛుభం తేషాంపాదోదకంపుణ్యం గాంగాదపిపునాతిహి) என்னுமவைபவமுடைய பாகவத ஸ்ரீபாததீர்த்தத்தையும்பிடித்து ஸ்வீகரித்தருளி (௩௱௯) "சாலக்ராமசிலாத்வாரா ஸர்வஸம்பச்சுபாவஹம் ஸஹஸ்ரசாகாயேதிகோக்தை: சாலக்ராமசிலாதீர்த்தம் ஸம்ஹிதா ஸத்யசாலிபிர்த்விஜவரைர்" (ఇత్యాదిద్విజవర్యైశ్చ సర్వసంపచ్ఛుభావహం సహస్రశాఖా

వ్యాఖ్యానం కార యద్ద్వేదికోక్తైః అశుభాం తేవిశేషేణ ద్రామిడీబ్రహ్మసంహితా అద్వైతవ్యాద్విజవరై రాశ్చాఘువినాశని) என்றும், (௨00) "வ்யாக்யாதா த்ருக்ஷணக்ஷேயஸ்யாம் தே த்ராவிடீ ப்ரஹ்மஸம்ஹிதா ஶ்ரோதவ்யா த்விஜஶ்ரேஷ்டை: ஶ்ராவ்யா ஶூத்ரைஸ் ஸஹஸ்ரஶ:" (వృదావాదౌ కుయే చాంతే ద్రామిడీబ్రహ్మసంహితా అద్వైతవ్యాద్విజశ్రేష్ఠై రాజ్ఞాస్యేత సహస్రశః) என்று ப்ரஹ்மாண்ட புராணத்திலே சொல்லுகிறபடியே, திருவாய்மொழி ப்ரபந்தத்தையும் அநுஸந்தித்து, அநந்தரம் புஷ்பாஞ்ஜலி பண்ணு சாற்றியருளி, (௨0௧) "யதா துஷ்யதி தேவேஶோ மஹாபாகவதார்சநாத் ததா ந துஷ்யதே விஷ்ணு: ப்ரீயதே ஸ்வார்சநாதபி" (యథా తుష్యతి దేవేశో మహాభాగవతార్చనాత్ తదానతుష్యతే విష్ణు ర్వదివత్ స్వార్చనాదపి) என்றுசொல்லுகையாலே, ஸ்ரீவைஷ்ணவர்களையும் அமுது செய்யப்பண்ணி, சாத்தித்தருளினார்.

கூரத்தாழ்வான் திருநக்ஷத்ரம், தையில் அஸ்தம், அவர் தனியன், (௨0௨) "ஸ்ரீவத்ஸசிஹ்நமிஶ்ரேப்யோ நம உக்திமதீமஹே யதுக்தயஸ்த்ரயீகண்டே யாந்தி மங்கலஸூத்ரதாம் ஸ்ரீமத்கூரகுலாதீஶம் ஸ்ரீவத்ஸாங்கமுபாஸ்மஹே அக்ர்யம் யதீந்த்ரஶிஷ்யாணாம் ஆத்யம் வேதாந்தவேதிநாம்" (శ్రీవత్సచిహ్నమిశ్రేభ్యో నమ ఉక్తిమధీమహే యదుక్తయస్త్రయీకంఠే యాంతిమంగళసూత్రతాం శ్రీమత్కూరకులాధీశం శ్రీవత్సాంకముపాస్మహే అగ్ర్యంయతీంద్రశిష్యాణాం ఆద్యంవేదాంతవేదినాం)

அதன்மற்றைநாள், உடையவர், பட்டரை அழைத்துக்கொண்டு, நம்பெருமாளை சேவிக்கவெழுந்தருளி அழகியமணவாளன் திருமண்டபத்திலே தெண்டஞ்சமர்ப்பித்து, பட்டரை கையைப்பிடித்துக்கொண்டுபோய் பெரியபெருமாள் திருவடிகளிலே காட்டிக்கொடுக்க; பெருமாளும் மீளவும் பட்டரை மஞ்சள்நீர் குடிப்பித்து விசேஷித்து, புத்ரஸ்வீகாரம்பண்ணியருளி அர்ச்சகமுகேன திருவாய்மலர்ந்தருளி ஆழ்வானையிழந்தோமேயென்று வ்யாகுலப்படாதே; நம்மை ஆழ்வானாக நினைத்திருமென்று அருளிச்செய்தருள; இத்தைக்கண்டு சந்தோஷித்து, உடையவரும், பெருமாளைக்குறித்து, தேவரீர், இவர்க்கு ஆயுஸ்ஸை ப்ரஸாதித்தருள; அடியேன் ஷிக்ஷையை அப்யஸிக்குறேனென்று விண்ணப்பஞ்செய்ய; பெருமாளும், வாய்கிரவாதே தீர்த்தப்ரஸாதமும் ப்ரஸாதித்து விடைகொடுத்தருள; உடையவரும் பட்டரையழைத்துக்கொண்டு மீண்டு தம்மடமேயெழுந்தருளி, எம்பாரைப்பார்த்து, இவரை நம்தர்ஶன ப்ரவர்த்தகராம்படி ஶாஸ்த்ராப்யாஸம்பண்ணிவையுமென்று அவர்கையிலே காட்டிக்கொடுத்து, முதலிகளுக்கு பகவத்விஷய வைபவம் அருளிச்செய்யாநின்றுகொண்டு எழுந்தருளியிருந்தார்.

இப்படி யிருக்கிற உடையவர் ப்ரபாவத்தை பெரியபெருமாளும், திருவேங்கடமுடையானும், பேரருளாளரும், திருநாராயணப்பெருமாளும், அழகரும், திருக்குறுங்குடி நம்பியும், நம்மாழ்வாரும், நாதமுனிகளும், ஆளவந்தாரும், பெரியநம்பியும், திருக்கோட்டியூர் நம்பியும், திருமலைநம்பியும், திருமாலையாண்டானும், ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையரும், மற்றும் ஸ்ரீபாதத்தில் முதலிகளும், ப்ரஹ்மரக்ஷஸ்ஸும், ஊமையும் வெளியிட்டார்கள்.

பெரியபெருமாள் வெளியிட்டபடி யெங்ஙனே யென்னில்:—திருப்பவளச்சோதி வாய்திறந்து, உபயவிபூத்யைஸ்வர்யத்தையும், உமக்கும் உம்முடையார்க்குந் தந்தோமென் றருளிச்செய்கையாலும்:

அப்பன் வெளியிட்டபடி யெங்ஙனேயென்னில்:—உமக்கும் உம்முடையார்க்கும் உபயவிபூத்யை ஸ்வர்யத்தையும் தந்தோமென்று நம்தெற்கு வீட்டிலே சொன்னோமேயென்று திருப்பவளவாய்திறந்து அருளிச்செய்கையாலும்: உடையவர் திருமலைக்கெழுந்தருளும்போது, தும்பையூர்கொண்டி யென்பாளொரு கோபாங்கனை, ஊமி (தயிர்) விக்ரயம் பண்ணித்தந்தவள், க்ரய த்ரவ்யார்த்தமாகவந்து, உடையவரையும், முதலிகளையும் சேவித்துநிற்க; அப்போது, உடையவர் அவளுக்குத் தளிகை ப்ரசாதம் ப்ரசாதிக்கச் சொல்லி கிடாம்பியாச்சானை நியமித்தருள; அவரும் அப்படியே செய்தருள; பின்பு கிடாம்பியாச்சான் ப்ரசாதித்த ஸ்ரீபாததீர்த்தம் தளிகை ப்ரசாதத்தாலே ஸம்யக்ஜ்ஞாநோதயமுண்டாய் அடியேனுக்கு ஊமி மூல்யம் தரவேண்டாம் மோக்ஷம் தரவேணுமென்று ப்ரார்த்திக்க; அதற்குத்திருவேங்கடவனென்ன அவளும், அதற்கு தேவரீர் ஒருசிறுமுறி தரவேணுமென்ன; உடையவரும் உகந்து, தரப்பெற்று, திருமலையேறி, த்வாரத்துவரக்கண்டு, திருவேங்கடவர் எதிரேசென்று, சிறுமுறியை வாசித்துக்கொண்டு திருநாடுதந் தருளுகை யாலும்:

பேரருளாளர் வெளியிட்டபடியெங்ஙனேயென்னில்:—அருளாளப் பெருமா ளெம்பெருமானாருடன் தர்க்கித்தபோது, உத்தரம்சொல்லமாட்டாமல் பேரருளாளர்க்கு விண்ணப்பஞ்செய்ய, அப்போது, இன்னபடி உத்தரம் சொல்லுமென்று செங்கனிவாய் முறுவல்தோன்ற வருளிச்செய்கையாலும்; யாதவப்ரகாசனுக்கு, ஸ்வப்னமுகேந நம் மிராமாநுஜனை யொருப்ரதக்ஷிணம் பண்ணி த்ரிதண்டத்தில் ஸன்யஸியாயென் றருளிச்செய்கையாலும்:

திருநாராயணப்பெருமாள் வெளியிட்டபடியெங்ஙனேயென்னில்:—தொண்டனூரிலே ஸ்வப்னங்கீட்டியருளி யழைத்துக்கொண்டுபோய், அவருக்கு ப்ரஸன்னராய் ப்ரகாஸிக்கையாலும்; என்னுடைய செல்வப்பிள்ளை

யன்றோவென்று எடுத்தணைக்கும்படி எதிராஜகுமாரரான ஸௌஶீல்யத்தாலும் :

அழகர்வெளியிட்டபடி யெங்ஙனேயென்னில் :—ஒருநாள் திருவோலக்கத்திலே, நம்மிராமாநுஜ னடியார்க்கருளப் பாடென்று திருவுள்ளமாயருள ; நாயிந்தேயென்று ஆசார்யர்களெல்லாரு மெழுந்தருளி திருவடிகளிலே சேவித்துநிற்க, பெரியநம்பிவழியில் சிலர்வாராமலிருக்க ; நம்பியும், அதுவேன், நீங்கள் நாமழைக்க வாராதிருப்பானேனென்றுகேட்டருள, அவர்களும், ராமாநுஜனடியார்க் கருளப்பாடென்று தேவரீர் திருவுள்ளமாயருளுகையாலே, அவரெங்களுக்கு ஶிஷ்யரென்று வாராதிருந்தோமென்று விண்ணப்பஞ்செய்ய; அழகரும் தஶரதவஸு தேவாதிகள், நம்மை,புத்ரப்ரதிபத்திபண்ணினப்போலே யிருந்தது, நீங்கள் ராமாநுஜனை ஶிஷ்யப்ரதிபத்திபண்ணினது, என்றும், பின்பு ஒருநாள் கிடாம்பியாச்சானை யருளப்பாடிட்டு, ஒன்று சொல்லென்று திருவுள்ளமாயருள ; அவரும், (௪௦௩) "𑌅𑌪𑌰𑌾𑌧𑌸𑌹𑌸𑍍𑌰𑌭𑌾𑌜𑌨𑌂" (అపరాధసహస్రభాజనం) என்று தொடங்கி (௪௦௪) "𑌅𑌗𑌤𑌿𑌂" (అగతిం) என்று சொல்ல ; அழகரும், நம்மிராமாநுஜனை யுடையராயிருந்தும், (௪௦௫) "𑌅𑌗𑌤𑌿𑌂" (అగతిం) என்றுசொல்லப் பெறுமென்று திருவுள்ளமா யருளுகையாலும் :

திருக்குறுங்குடிநம்பி வெளியிட்டபடி யெங்ஙனே யென்னில் :— உடையவரும் முதலிகளும், நம்பியைசேவிக்க வெழுந்தருளின வளவிலே, திருக்குறுங்குடி நம்பியும் திருவோலக்கமாக வெழுந்தருளியிருந்து, உடையவனை யருளப்பாடிட்டு (௪௦௬) "𑌬𑌹𑍂𑌨𑌿𑌮𑍇𑌵𑍍𑌯𑌤𑍀𑌤𑌾𑌨𑌿𑌜𑌨𑍍𑌮𑌾𑌨𑌿𑌤𑌵𑌚𑌾𑌰𑍍𑌜𑍁𑌨" (బహూని మే వ్యతీతాని జన్మాని తవ చార్జున) என்றுஎத்தனைஜந்மம்பிறந்தோமென்றுதெரியாது அஜ்ஜந்மங்களிலே ஒருவரும் நமக்ககப்படாமல் (௪௦௭) "𑌆𑌸𑍁𑌰𑍀𑌂𑌯𑍋𑌨𑌿𑌮𑌾𑌪𑌨𑍍𑌨𑌾 𑌮𑍂𑌢𑌾𑌜𑌨𑍍𑌮𑌨𑌿𑌜𑌨𑍍𑌮𑌨𑌿, 𑌮𑌾𑌮𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑍈𑌵𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌤𑌤𑍋𑌯𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑌧𑌮𑌾𑌂𑌗𑌤𑌿𑌂" (ఆసురీం యోనిమాపన్నా మూఢా జన్మని జన్మని మామప్రాప్యైవ కౌన్తేయ తతో యాన్త్యధమాం గతిం) என்கிறபடியே; ஆஸுர ப்ரக்ருதிகளாய்ப் பிறந்த ஜந்மங்கள்தோறும் மூடராய் நம்மைவந்து கிட்டாதே ; அதமமான கதியை யடைந்தார்கள் ; உமக்கிவ்வாத்மாக்கள் எல்லாரும், அகப்படுகிற விரகை நமக்குச் சொல்லவேணுமென்று திருவுள்ளமாக ; உடையவரும், தேவரீர்கேட்கும் க்ரமமேகேட்கில் சொல்லுகிறேனென்ன; நம்பியும், தம்ஸிம்ஹாஸநத்தினின்றுமிறங்கி யருளி, நிலத்திலே யொருதிருக்கைத்தோளியிலே படுத்தி அதிலே யெழுந்தருளி யிருந்து, இவருக்கு ஒருரத்நகம்பளம் ஆஸநமாகவிட்டு, இனிச்சொல்லுமென்ன; உடையவரும் அவ்வாஸநத்திலே, பெரி

யநம்பி ஆளவந்தாரொழுந்தருளியிருக்கிறார்களாக பாவித்துக்கொண்டு, அவர் திருச்செவியிலே ஹிதத்தை விண்ணப்பஞ்செய்ய, அன்று தொடங்கி நம்பியும், நம்மிராமாநுஜ முடையோமென் றருளிச்செய்கையாலும் :

இனி நம்மாழ்வார் வெளியிட்டபடி யெங்ஙனேயென்னில் :—லோகத்தைத் திருத்துவதாக எம்பெருமானோடே மார்தட்டி "நின்னைவேழ்க்கை யெழுவிப்பனே" என்று எதிர்தட்டிக் கொண்டவர்தாமே "ஏபாவம்பரமே" என்று க்லேசித்து, அகவிடத்தே ஆராய்ந்தது ; திருத்தலாவதேயென்று, ஈச்வரன் அவதரித்துத் திருத்தவொண்ணாதலோகத்தை நாமோ திருத்தக்கடவோமென்றுகைவாங்கி "யானுமென்னெஞ்சு மிசைந்தொழிந்தோம்" என்று தாமும் தம்திருவுள்ளமுமேயாய், த்ரிகாலஜ்ஞராகையாலே, "கலியுங்கெடுங் கண்டுகொண்மின்" என்று உடையவர் திருவவதாரத்தைக் குறித்து அருளிச் செய்கையாலும் :

ஸ்ரீமந்நாதமுநிகள் வெளியிட்டபடி யெங்ஙனேயென்னில் :—குளப்படியிலேதேங்கினால் குருவி குடித்துப்போம், வீரநாராயணபுரத் தேரியிலே தேங்கினால் நாடுவிளையுமென் றருளிச்செய்தது. உடையவர் திருவவதாரத்தைக் குறித்தென்னு மிடம் :—பெரியபெருமாளாகிற பெருங்கடலிலே ஆழ்வாராகிற காளமேகம்படிந்து, தத்கல்யாணகுணாம்ருதௌகத்தைப் பருகி வந்து, நாதமுநிகளாகிற மஹாமேருவிலே வர்ஷித்து, உய்யக்கொண்டார் மணக்கால்நம்பியாகிற அருவிகளாலேயிறங்கி, ஆளவந்தாராகிற பேராற்றிலே கூடி, எம்பெருமானாராகிற பெரியஏரியிலேவந்துதேங்கி, நம்மாசார்யர்களாகிற மதகுகளாலே புறப்பட்டு, இச்சம்ஸாரமாகிற கழனிக்கேறிப்பாய்கிறதென் றருளிச்செய்தவிடத்திலும் ஓத்திருக்கையாலும் :

பெரியநம்பி வெளியிட்டபடி யெங்ஙனேயென்னில் :—அத்துழாயும் தாமுமாக வெழுந்தருளியிருக்கச் செய்தே ; உடையவரும் முதலிகளுமாக வெழுந்தருள ; பெரியநம்பி யெழுந்திருந்து தெண்டனிட ; இதுவென் உடையவர் உமக்கு சிஷ்யரன்றோ ? இப்படி செய்யலாமோவென்று, அத்துழாய் விண்ணப்பஞ்செய்ய ; நம்பியும், அத்தாளுக்குத்தக்க தலைகளை இதுவென்றும் : ஒருநாள் உடையவரும் முதலிகளுமாக நீராடி எழுந்தருளும்போது, பெரியநம்பிஎதிரேகண்டு தானுந்தடக்கையுங்கூப்பித் தெண்டனிட, உடையவரும், அஞ்சலித்து க்ருபைசெய்தெழுந்தருள ; இத்தை முதலிகள் கண்டு, இதுவென் ! ஜீயாவென்ன ; உடையவரும், இப்போது அவரிஷ்டம் அநுவர்த்திக்கையன்றோ ? நமக்குள்ளதென்ன ; முதலிகளும் பெரிய நம்பி சந்நிதியில் சென்று உடையவரை நீர் சாஷ்டாங்க ப்ரணாமம் பண்

னுகைக்கடி யென்னென்று கேட்க ; நம்பியும், ஆளவந்தாரும் முதலிகளு மென் றிருந்தேனென்ன ; இவர்களும், அதுநிதானமன்றென்ன ; நம்பியும் ஆளவந்தாருக்குப்பின்பு அகிலார்த்த ஸத்திதிபூர்த்தியுள்ளவிவர்க்கே யாகையாலே சதாசார்ய சந்நிதியோடு ஸச்சிஷ்ய சந்நிதியோ டொருவாசியில்லாமையாலே சேவித்தேனென் றருளிச்செய்து, தம்குமாரர் புண்டரீகாக்ஷனையும் உடையவர் திருவடிகளிலே யாஶ்ரயிப்பிக்கையாலும் :

திருக்கோட்டியூர்நம்பி வெளியிட்டபடி யெங்ஙனே யென்னில் :—நாம் திருமந்த்ரார்த்தம் ப்ரசாதிக்கும்போது ஆருக்கும் சொல்லாதேயிருக்கவேணுமென்று ஆஜ்ஞாபித்தருளிச்செய்ய ; இவரும், அத்தை ஸர்வாதிகாரமாகத் தெற்காழ்வான் திருவோலக்கத்திலே சர்வர்க்கு மருளிச்செய்ய ; நம்பியுமித்தைக்கேட்டுக்குபிதராய். உடையவரையழைத்துவிட்டு, ஆசார்யாஜ்ஞாதிலங்கநத்தில் பலமேதென்ன ; உடையவரும், நரகமேபலமென்ன ; நம்பியும்; ஆகில்; அறிந்திருந்துசெய்வானேனென்ன ; இவரு மடியேனொருவனுமன்றோ நரகம்புகுவது ; தேவரீர் சம்பந்தத்தாலே இவ்வாத்மாக்களெல்லாம் உஜ்ஜீவிக்குமென்று சொன்னேனென்று விண்ணப்பஞ்செய்ய ; நம்பியும் ப்ரப்ரீதராய்எம்பெருமானாரோவாருமென்றுஎடுத்தணைத்துக்கொண்டு, இப்பாவஶுத்தி நமக்கில்லையாய் விட்டதேயென்று, இது எம்பெருமானார் தர்ஶனமென்று சொல்லுங்கோளென்றுசொல்லி, அவரோ நீயென்றருளிச்செய்து, தம்குமாரர் தெற்காழ்வானையும் உடையவர் திருவடிகளிலே யாஶ்ரயிப்பிக்கையாலும் :

திருமலைநம்பி வெளியிட்டபடி யெங்ஙனே யென்னில் :—உடையவர் திருமலைக்கெழுந்தருளும்போது, திருப்பரிவட்டப்பாறை யளவாக எதிரே சென்று தீர்த்தப்ரசாதம் ப்ரசாதிக்க ; உடையவரும் ஸ்வீகரித்தருளி, நம்பியைப்பார்த்து, தேவரீ ரெழுந்தருளவேணுமோ ? வேறேயொரு சிறியவர்களில்லையோவென்ன ; நம்பியும், நாலுதிருவீதியிலு மாராய்ந்த விடத்திலும் என்னிலும் சிறியாரைக் கண்டிலேனென்கையாலும் : எம்பாரை உதகபூர்வகமாகக்கொடுக்கையாலும் : தம்குமாரர் இராமாநுஜனையும், பிள்ளைதிருமலைநம்பியையும் உடையவர் திருவடிகளிலே யாஶ்ரயிப்பிக்கையாலும் :

திருமாலையாண்டான் வெளியிட்டபடி யெங்ஙனேயென்னில் :—தம்பக்கல்இவர்திருவாய்மொழிக்கர்த்தங்கேளாநிற்க ; "அறியாக்காலத்துள்ளே" என்றபாட்டுக்கு இவர் உபகார ஸ்ம்ருதியாக விஶேஷார்த்த மருளிச்செய்ய ; ஆண்டானும், இதுவிஶ்வாமித்ரஸ்ருஷ்டியென்று அருளிச்செய்கை தவிர்ந்திருக்க ; பின்பு திருக்கோட்டியூர் நம்பி எழுந்தருளி, ஆண்டானை

யழைத்து, சாந்திபன்பக்கலிலே க்ருஷ்ணன் அத்யயநம்பண்ணினாப்போலே இவரும் உம்முடையபக்கல் திருவாய்மொழி கேட்கிறது. இவ்விரண்டர்த்தமும் ஆளவந்தா ரருளிச்செய்தார் காணுமென்ன ; உடையவரும், பின்னையுமொரு அர்த்தப்ரஸ்தாவத்திலே ஆளவந்தாரிப்படி யருளிச்செய்தா ரென்ன; ஆண்டானும், நீர் ஆளவந்தாரைக்கண்ணாலும் காணாதிருக்க; இப்படியருளிச்செய்தாரென்கைக்கு வேறதுவென்னென்ன ; இவரும், நான் ஆளவந்தார்க்கு ஏகலவ்யனன்றோவென்ன; ஆண்டான்தெண்டனிட்டு, இதுவுமொருதிருவவதாரமோவென் றருளிச்செய்து, தம்குமாரர் சுந்தரத்தோளினையாரை உடையவர் திருவடிகளிலே யாஶ்ரயிப்பிக்கையாலும் :

திருவரங்கப் பெருமாளரையர் வெளியிட்டபடி யெங்ஙனே யென்னில் :—தம்பக்கல் உடையவர், ஆறுமாசம் சேவித்திருந்து, பாங்காக மஞ்சட்காப்பும் அரைத்துச் சாத்தி நீராடப் பண்ணுவித்தருள ; திருவரங்கப் பெருமா ளரையரும் ப்ரீதராய், என்னுடைய ஸர்வஸ்வத்தையும் கொள்ளை கொள்ளவோ நீரிப்படிசெய்ததென்று அருளிச்செய்து, பஞ்சமோபாயநிஷ்டையை அருளிச்செய்து, தம்குமாரர் திருவாய்மொழி யரையரையும் உடையவர் திருவடிகளிலே யாஶ்ரயிப்பிக்கையாலும் :

வடுகநம்பி ஆசார்யபதமென்று தனியேயொருபதம், அது உள்ளது எம்பெருமானார்க்கே ; ஆகையாலே எல்லார்க்கும் எம்பெருமானார் திருவடிகளொழிய வேறுஉபாயோபேயமில்லை; அவர்திருவடிகளே தஞ்சமென்றிருங்கோளென் றருளிச்செய்தருள்வர்.

கணியனூர் சிறியாச்சான் ஸசேலஸ்நாந பூர்வகமாக ஆர்த்தியோடே உபஸந்நராய் திவ்யாஜ்ஞையிட்டு எம்பெருமானார் திருவடிகளொழிய வேறு தஞ்சமில்லையென் றருளினார்.

அருளாளப்பெருமா ளெம்பெருமானார் ; தம்திருவடிகளிலே யாஶ்ரயித்த, எச்சான், அநந்தாழ்வான், தொண்டனூர் நம்பி, மருதூர்நம்பி இவர்களுக்கு ஹிதோபதேசம்பண்ணி, உடையவர் குருவியின் கழுத்திலே குண்டுக்கல்லைக் கட்டினாப்போலே செய்தருளினார் ; நீங்கள் எம்பெருமானார் திருவடிகளே தஞ்சமென் றிருங்கோளென் றருளிச் செய்தருளினார்.

பிள்ளைப்பிள்ளை யாழ்வான், ஆழ்வான் திருவடிகளிலே யாஶ்ரயித்தவளவில், ஆழ்வான், ஆசார்ய தக்ஷிணையாக த்ரிவிதகரணங்களையும் பரிஹரித்துக்கொண்டு பாகவதர்களிடத்தே அநுகூல்யைகரஸராய்ப் போருமென் றருளிச்செய்ய, அவரும் இது பரிஹரித்து முடியாதென்று பயப்பட்டு முசித்துக்கிடக்க, ஆழ்வான் இவரையழைத்து, எதிரிகூடக்குத்தும் ராஜதண்டமும்

வருமாகையாலே, காயிகாபராதம் பண்ணக்கூடாது (௬0அ) "யதீச்சஸி வசீகர்த்தும் ஜகதேகேந கர்மணா பராபவாதஸஸ்யேப்யோ காம் சரந்தீம் நிவாரய" (యదీచ్ఛసి వశీకర్తుం జగదేకేన కర్మణా పరాపవాదసస్యేభ్యో గాం చరంతీం నివారయ) என்கிறபடி பராபவாதஞ் சொல்லுகிற வாக்கு ஒன்றையும் பரிஹரித்துக்கொள்ளுமென் றருளிச்செய்து, இனி மநஸ்ஸாலே நினைத்திராகில் இது எம்பெருமான் திருவுள்ளத்தே படாதபடி எம்பெருமானார் திருவடிகளே தஞ்சமென் றிருமென் றருளிச்செய்தருளினார்.

மிளகாழ்வான், முதலியாண்டானை என்னோடேதர்க்கிக்கவாருமென்ன, முதலியாண்டானும், நீர் தோற்றீராகில் செய்வதென்னென்ன ; மிளகாழ்வானும், நான் தோற்றேனாகில் உம்மை என்றோளிலே சுமந்துகொண்டு போகிறேனென்ன ; அநந்தரம், உபயரும் தர்க்கிக்க, மிளகாழ்வான் தோற்று, முதலியாண்டானை ஸ்ரீபாதம் தாங்கிக்கொண்டு சற்றிடம்போய், இனி யடியேனை இரங்கி யருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய ; ஆண்டானும், உடையவர் திருவடிகளிலே காட்டிக்கொடுத்து ஆஸ்ரயிப்பித்தருளி, எம்பெருமானார் திருவடிகளே தஞ்சமென் றிருமென் றருளிச்செய் தருளினார்.

எம்பார், பட்டரைப்பார்த்து, நம்பெருமாள் நம்மை புத்ரஸ்வீகாரம் பண்ணியருளினார். ஆழ்வானுடைய பிள்ளை, அகிலசாஸ்த்ரங்களையும் அதிகரித்தோம் என்கிறமேன்மையை நினைத்து இறுமாந்திராதே எம்பெருமானார் திருவடிகளே தஞ்சமென் றிருமென் றருளிச்செய் தருளினார்.

பட்டர்நஞ்சீயரைப்பார்த்து,வேதாந்தியென்கிற பேரையுடையோம், நம்முடைய பக்கல் ஆஸ்ரயித்தோம், நமக்கு பஹு த்ரவ்யத்தை ஆசார்ய தக்ஷிணையாகத் தந்தோம், திருவாய்மொழிக்கு நூறு நிர்வஹித்து சதாபிஷேகம் பண்ணினோமென் றிறுமாந்திராதே எம்பெருமானார் திருவடிகளே தஞ்சமென் றிருமென் றருளிச்செய் தருளினார்.

நஞ்சீயர், நம்பிள்ளையைப்பார்த்து, லோகாசார்ய ரென்கிற பேரையுடையோம், திருவாய்மொழிக்குப் பொருள் சொல்லவல்லோம் என்றிறுமாந்திராதேஎம்பெருமானார்திருவடிகளேதஞ்சமென்றிருமென்றருளிச் செய் தருளினார்.

நம்பிள்ளை, சிவிக்கைப்பிள்ளையைத்திருக்கையைப் பிடித்துக்கொண்டெழுந்தருளாநிற்க,ஒருஸ்ரீவைஷ்ணவர்நம்பிள்ளைதிருமாளிகைத்திருவிடைக்கழியிலே கண்வளராநிற்க, சிவிக்கைப்பிள்ளை அவரைக் காலை முட்டக்குமென்ன ; நம்பிள்ளையும், "மயர்வறமதிநலமருளப்பெற்ற ஆழ்வார் திருத்தாளென் றருளிச்செய்ய; நீ ரோகாலென்பீர் என்று அவர் கையைவிட்டருள, அ

வரும் சிஷிக்கரையிலே போயிருந்து, பின்புசோகார்த்தராய், இரண்டாற்றுக் குறுக்கே நின்று, கவணிலே [illegible] விட்டரு ளிந்து. இனி அடியேனுக்கு [illegible] பண்ணைப்பஞ் செய்துவரக் காட்டியருள, [illegible] எம்பெருமானார் திருவடிகளே [illegible] அருளிச்செய்து போக விட்டழைத்து க்ருபைசெய்தருளினார்.

திருக்குருகைப்பிரான் பிள்ளான், திருப்புத்தூரிலே எழுந்தருளி யிருக்கச்செய்தே, சோமாசியாண்டான் தம ஸ்ரீபாதத்திலே மூன்றுரு ஸ்ரீபாஷ்யம் வாசித்தருளி, பிள்ளான் மீண்டெழுந்தருளும்போது, சோமாசி யாண்டான் அநுவர்த்தித்து, அடியேனிருக்கிற தேசமிதுவாயிருந்தது; அடியே னுக்குத் தஞ்சமாயிருப்பதொன் றருளிச்செய்ய வேணுமென்ன; பிள்ளா னும், ஆண்டானைக்குறித்து, நீர் பாட்ட ப்ரபாகர மீமாம்சை இவை யித் தனைக்கும் பொருள் சொல்லவல்ல கர்த்தா, ஸ்ரீபாஷ்ய ப்ரவர்த்தகரென்று மேன்மையாயிராதே, எம்பெருமானார் திருவடிகளே சரணமென் றிருமென் றருளினார்.

கோமடத்துப்பிள்ளான், தம் ஸ்ரீபாதத்தில், காக்கையாடி யாச்சான் பிள்ளை மூன்றுரு ஸ்ரீபாஷ்யம் வாசிக்க, அவரும் மிகவும் மேன்மையையுடை யரா யிருக்குமதுகண்டு, இவர்க்குஇம் மூகத்தாலேஅபசாரம்வருமென்றஞ்சி, எம்பெருமானார் திருவடிகளே தஞ்சமென்றிருமென்றருளிச்செய்தருளினார்.

எங்களாழ்வான், காக்கையாடியாச்சான் பிள்ளையைப்பார்த்து, உம் மைப்பெருமாள் முனிந்தருளினபோது என் னினைத்திரென்று கேட்டருள: அவரும், எம்பெருமானார் திருவடிகளே தஞ்சமென் றிருந்தேனென்றுவிண் ணப்பஞ்செய்தார்.

நடாதூரம்மாள் ஸ்ரீபாதத்திலே பத்துப் பன்னிரண்டு திருநாமம் ஸ்ரீ பாஷ்யம் வாசிக்கிறபோது, அம்மாள், அவர்களுக்கு ஸ்ரீபாஷ்யத்தை உபந்ய ஸித்துக் காட்டியருள, அவர்களும் பக்த்யுபாயமா யிருந்ததென்ன, பின்பு, அவரும் ப்ரபத்த்யுபாயத்தை யருளிச்செய்து காட்டியருள, பக்தியிலும் ப்ரப த்தி தான் அரிதாயிருந்த தென்றவர்கள் விண்ணப்பஞ் செய்ய, ஆகில்; எம் பெருமானார் திருவடிகளே தஞ்சமென்று விஸ்வஸித்து உஜ்ஜீவியுங்கோ ளெ ன்றருளினார்.

நடுவிலாழ்வான், திருநாராயண புரத்திலே யிருந்து ஸ்ரீபாஷ்யம் வா சிப்பிக்கிற காலத்திலே,வங்கிபுரத்தாய்ச்சி, சொட்டையம்மாள் உள்ளிட்டார் ஸ்ரீபாஷ்யத்தைக்கேட்டு அது அரிதா யிருந்ததென்ன, ஆகில் இதை அறு

ளிச் செய்தருளின எம்பெருமானார் திருவடிகளே தஞ்சமென் றிருங்கோளென் றருளினார்.

ஸ்ரீ வேதவ்யாஸபட்டர், திருநாராயணபுரத்தே, எம்பெருமானார் திருமுன்பே கோஷ்டிபண்ணி, ஸ்ரீ பாஷ்யத்தை உபந்யஸிக்க, இது கங்காப்ரவாஹமாயிருந்தது, எங்களால் அவகாஹிக்கவொண்ணாதாயிருந்ததென்று ஐம்பத்திருவர் விண்ணப்பஞ்செய்ய; பட்டரும், ஆகில்; உங்கள் குலதெய்வமான எம்பெருமானார் திருவடிகளே தஞ்சமென்று உஜ்ஜீவியுங்கோளென் றருளினார்.

நடுவில் திருவீதிப்பிள்ளை, வெள்ளைக்குலத்தானை காத்த சிங்கர் முன்னே கோஷ்டிபண்ணி ஸ்ரீபாஷ்யம் உபன்யஸிக்க, தன்சிஷ்யரான இளையவழகியார் எழுந்திருந்து, இது கங்காப்ரவாஹமாயிருந்தது. என்னால் அவகாஹிக்கப்போகாதென்று விண்ணப்பஞ்செய்ய, ஆகில்; எம்பெருமானார்திருவடிகளேசரணமென் றிருமென் றருளிச்செய் தருளினார்.

வங்கிநம்பி; எம்பெருமானார் திருவடிகளேசரணம், நம்பெருமாள் திருவடிகளேசரணம் என்று இரண்டையும்சேர அநுசந்திக்கும் ஆழ்வானையும், ஆண்டானையும் இருகரையரென்பர். வங்கிநம்பி, எம்பெருமானார் திருவடிகளே ஶரணமென்னுமாப்போலேயும்; பட்டர் அழகியமணவாளப்பெருமாள் திருவடிகளே ஶரணமென்னுமாப்போலேயும், அநந்தாழ்வான், திருவேங்கடமுடையான் திருவடிகளே ஶரணமென்னுமாப்போலேயும், திருக்கச்சிநம்பி, பேரருளாளர் திருவடிகளேஶரணமென்னுமாப்போலேயும், எம்பெருமானார், செல்வப்பிள்ளை திருவடிகளேஶரணமென்னுமாப்போலேயும் ஒருவர்க்கு மிசைந்திராது.

ப்ரஹ்மரக்ஷஸ்ஸை வெளியிட்டபடி எங்ஙனேயென்னில்:—யாதவப்ரகாசனுக்கு உடையவரைக்காட்டி இவர் நித்யஸூரிகளில் தலைவரென்றுசொல்லுகையாலும்.

ஊமை வெளியிட்டபடி எங்ஙனேயென்னில்:—பெருமாள் கோயிலிலே பாகவதஜந்மத்தில்பிறந்தா னொருபிள்ளை ஐந்தாறு வயஸ்ஸளவாக ஊமையாயிருந்து, பின்பு, இரண்டுசம்வத்ஸரம் காணாதிருக்க, பின்பெல்லாருங்காணவந்து வார்த்தைசொல்ல வல்லவனாக, இவ் வாஶ்சர்யத்தைக்கண்டு எல்லாருந் திரளாகவிருந்து ஊமையைப்பார்த்து, நீ இத்தனைநாளும் எங்கேறப்போனாயென்று கேட்க, அவனும் நான் க்ஷீராப்திக்குப் போனேனென்ன; அங்குவிஶேஷ மென்னென்றுகேட்க, ஸ்ரீ சேநாபதியாழ்வான் உடையவராய்வந் தவதரித்தருளினாரென்ற பெருவிசேஷம்என்ற வநந்தரம் அவனைக் கண்டதில்லையென்று ஸ்ரீசேநாபதி ஜீயரருளிச் செய்கையாலும்:

இப்படி இவர்களெல்லாரும் ப்ரகாசிப்பிக்கும்போது, நாதமுனிகள் தொடக்கமான ஆசார்யர்களிற் காட்டில் இவர்க்கு ப்ராதாந்யங்கொள்ளும்படி எங்ஙனேயென்னில்; பகவதவதாரங்கள் எல்லா மொத்திருக்கச்செய்தே, ஸ்ரீராமக்ருஷ்ணாத் யவதாரங்களுக்கு ப்ராதாந்ய முண்டானாப்போலேயும்; ருஷிகளெல்லாரையும் வைத்துக்கொண்டு, வ்யாஸ, பராஶர, ஶுக, ஶௌநக, நாரதாதிகளுக்கு ப்ராதாந்ய முண்டாகிருப்போலேயும், திவ்யதேசங்களெல்லாம் ஒத்திருக்கச்செய்தேயும், கோயில், திருமலை, பெருமாள்கோயில், திருநாராயணபுரங்களுக்கு ப்ராதாந்யமுண்டாகிருப்போலேயும்; ஆசார்யர்களெல்லாரிலும் வைத்துக்கொண்டு உடையவருக்கு ப்ராதாந்யங்கொள்ளத் தட்டில்லையிறே.

ஸ்ரீராமாவதாரத்திற்கு ப்ராதாந்ய மெத்தாலேயென்னில்; பெருமாள், அபயப்ரதாந மருளிச்செய்தும்; குஹப்பெருமாளுடன் சீரணிந்த தோழமைகொண்டும்; பெரிய உடையாரை ப்ரஹ்மமேதத்தாலே ஸம்ஸ்கரித்துப் பள்ளிபடுத்தியும், ஸ்ரீஶபரிகையாலே ஸம்யக் போஜநஞ்செய்தும், திருவடியுடன் "உண்பனுனென்ற வொண்பொரு" ளென்னும்படி ஸஹபோஜநம் பண்ணிப்போருகையாலும்.

ஸ்ரீக்ருஷ்ணனுக்கு ப்ராதாந்ய மெத்தாலேயென்னில்:—கீதோபநிஷத்தை வெளியிட்டு சரமஶ்லோகமருளிச்செய்கையாலும், பீஷ்மத்ரோணாதிக்ருஹங்களைவிட்டு, ஸ்ரீவிதுரர் திருமாளிகையிலே (௪௦௯) "ஶுசீநிமணவஞ்சி" ([illegible]) என்கிறபாவநத்வ போக்யத்வங்களையுடைத்தா யிருந்ததென்று அமுதுசெய்து (௪௧௦) "த்விஷதந்நம் நபோக்தவ்யம்" ([illegible]) என்று முறைகூறுகிற சோற்றை நிராகரித்து இதுன்தனையே சத்ருகோஷ்டியிலும் ப்ரசித்த மாக்குகையாலும்:

கோயிலுக்கு ப்ராதாந்ய மெத்தாலேயென்னில்:— திருப்பாணாழ்வாரோடுகலந்து பரிமாறுகையாலும்:

திருமலைக்கு ப்ராதாந்யமெத்தாலேயென்னில்:—குறும்பறுத்தநம்பிக்கும், தொண்டமான் சக்ரவர்த்திக்கும் வார்த்தை யருளிச்செய்து கலந்து பரிமாறுகையாலும்:

பெருமாள்கோயிலுக்கு ப்ராதாந்ய மெத்தாலேயென்னில் :— திருக்கச்சிநம்பியோடு ஸ்மித பூர்வாநுபாஷணம்பண்ணி மிகவுங்கலந்து பரிமாறுகையாலும்.

திருநாராயணபுரத்திற்கு ப்ராதாந்ய மெத்தாலேயென்னில்;- ஸச்சரித தநயன்பக்கல் ஆதராதிசயத்தாலே தந் நிவேதி தாந்நத்தை ஸம்யக்போஜநம்பண்ணி அவனை வாழ்விக்கையாலும், எதிராஜ புத்ரரான ஸௌஶீல்யத்தாலும்.

ஸ்ரீவேதவ்யாஸபகவான், வேதங்களைவிஸ்தரித்து, அதில் கர்மகாண்டத்தைவிட்டு, ப்ரஹ்மபாதத்திலே புருஷஸூக்த, சாந்தோக்ய, வாஜஸநேயகதைத்திரிய ச்வேதாச்வதர, மஹோபநிஷ தாதிகளிலும், தத்பப்ரஹ்மணங்களான, புராணேதிஹாஸாதிகளிலும், ஸத்யம் ஸத்யமென்றுதொடங்கி நதைவம்கேசவாத்பரமென்று ஸத்யபூர்வ்வமாக பரத்வநிர்ணயம் பண்ணுகையாலும் ப்ராதாந்யம்.

ஸ்ரீபராசர ப்ரஹ்மரிஷி, (௬௧௧) "ப்ராணேஷ்வபிவைஷ்ணவம்" (ప్రాణేష్వపి వైష్ణవం) என்னும்படியான ஸ்ரீவிஷ்ணுபுராண ரத்நத்திலே, சிதசித் தீச்வர தத்வங்களை விசதமாகப்ரதிபாதித்த உதாரனென்று ஆளவந்தார் நமஸ்கரித்தருளுகையாலே ப்ராதாந்யம் :

ஸ்ரீசுக ப்ரஹ்மரிஷி, பரீக்ஷித்துராஜாவுக்கு ஸ்ரீபாகவதத்திலே தத்வ நிர்ணயத்தைப்பண்ணி, சுகோமுக்த: என்னும்படியான வைபவத்தையுடையராகையாலே ப்ராதாந்யம் :

ஸ்ரீசௌநகபகவான், ஸ்ரீவிஷ்ணு தர்மத்திலே பலவிடங்களிலும் தத்வ நிர்ணயம்பண்ணுகையாலே ப்ராதாந்யம் :

ஸ்ரீநாரதபகவான் (௬௧௨) "புஜயுகமபிசிஹ்நை ரங்கிதம்யஸ்ய விஷ்ணோ: பரமபுருஷநாம்நா கீர்த்தநம்யஸ்யவாசி, ருஜுதரமபி புண்ட்ரம் மஸ்தகே யஸ்ய கண்டே ஸரஸிஜமணிமாலா யஸ்ய தஸ்யாஸ்மி தாஸ:," (భుజయుగమపి చిహ్నైరంకితం యస్య విష్ణోః పరమపురుషనామ్నా కీర్తనం యస్య వాచి, ఋజుతరమపి పుండ్రం మస్తకే యస్య కంఠే సరసిజమణిమాలా యస్య తస్యాస్మి దాసః) என்றிப்படிப்பட்ட ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு தாஸனென்று சொல்லுகையாலே, பெரியாழ்வாரும், "சேமமுடைநாரதனார்" என்னும்படியான வைபவத்தினால் வந்த ப்ராதாந்யம் :

ஆழ்வார்களில், நம்மாழ்வாருக்கு ப்ராதாந்யமெத்தாலே யென்னில் :—ஸஹஸ்ரசாகையான நான்குவேதத்தினுடையபொருளையும், நான்கு ப்ரபந்தமுகத்தாலே ஸர்வாதிகாரமாக்குகையாலும், நாதமுனிகளுக்கு ப்ரஸன்னராய் அருளிச்செயல் நாலாயிரத்தையும் ப்ரகாசிப்பித்து, மற்றுமுண்டான தர்சந தாத்பர்யங்களெல்லாம் அருளிச்செய்து தர்சநத்தை நிலைநிறுத்துகையாலும், "பயிலுஞ்சுடரொளி," "நெடுமாற்கடிமை" முதலானவிடங்களில் வர்ணத்யுத்கர்ஷங்களை நிராகரித்து, வேதப்ரமாண முக்யதாத்பர்யமான ஸ்ரீவைஷ்ணவலக்ஷண மெல்லாருக்கும்தெரியும்படி அருளிச்செய்கையாலும் :

உடையவர், கீழ்ச்சொன்னவர்களைப்போலன்றிக்கே, பெரு ளிச்செய்த அபயப்ரதாநத்தை விசதமாக்குகையாலும்; கீதாசார்ய ளிச்செய்த சரமஶ்லோகார்த்தத்தை ப்ரகாசிப்பிக்கையாலும்; ருஷி மான ப்ரமாணங்களுக்கு அர்த்தமருளிச்செய்கையாலும்; மற்றையாழ் ளருளிச்செய்ததிவ்யப்ரபந்தங்களையும், அங்கோபாங்கமாகவுடையதிரு மொழி ப்ரபந்தத்தை அர்த்தவத்தாக விசதமாக ப்ரகாசிப்பிக்கையாலு நாதமுனிக ளருளிச்செய்த திவ்ய ப்ரபந்தங்களையும், ஆளவந்தா ரருளி செய்த திவ்ய ப்ரபந்தங்களையுங்கொண்டு ஸூத்ரவாக்யங்க ளொருங்கவிட்டு ஸ்ரீபாஷ்யம், கத்யத்ரயம் முதலான ப்ரபந்தங்களையும் அருளிச்செய்து. லகுமதிஸங்கத்தையும்நிராகரித்து, ஸ்வமதஸ்தாபநம்பண்ணி, எமபெ னார் தர்ஶநமென்னும்படி பண்ணுகையாலே, இவரெல்லாரிலும் ப்ரதாந மிறே. இனி ஶிஷ்யர்களான கூரத்தாழ்வான், முதலியாண்டான் தொடக்க மானவர்களில் ப்ரதாநரொன்று மிடஞ்சொல்லவேண்டாவிறே.—ஆக ப்ரா தாந்யஞ் சொல்லித்தாய்த்து.

இனிப்ரபாவ மேதென்னில்:—

(௨௧௩) "𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌵𑌾𑌨𑍍 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌵𑍇𑌦 𑌪𑌾𑌪𑌿𑌷𑍍𑌠𑌃𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌬𑌨𑍍𑌧𑍁𑌶𑍍𑌚 𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌶𑍍𑌚𑌪𑍁𑌣𑍍𑌯𑌕𑍃𑌤𑍍 𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌵𑌤𑍍𑌤𑌯𑌾𑌮𑍁𑌕𑍍𑌤𑍌 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌵𑌾𑌨𑍍 𑌭𑌵𑍇𑌤𑍍" (ఆచార్యవాన్ పురుషోవేద పాపిష్ఠఃక్షత్రబంధుశ్చ పుండరీకశ్చపుణ్యకృత్ ఆచార్యవత్తయాముక్తౌ తస్మాదాచార్యవాన్ భవేత్) என்றும்; (௨௧௪) "𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌸𑍍𑌸𑌹𑌰𑌿𑌸𑍍𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌚𑍍𑌚𑌰𑌰𑍂𑌪𑍀 𑌨𑌸𑌂𑌶𑌯𑌃" (ఆచార్యస్సహరిస్సాక్షాచ్చరరూపీ నసంశయః) என்றும்; (௨௧௫) 𑌆𑌚𑌿𑌨𑍋𑌤𑌿𑌹𑌿𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑌾𑌚𑌾𑌰𑍇𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑌤𑍍𑌯𑌪𑌿 𑌸𑍍𑌵𑌯𑌮𑌾𑌚𑌰𑌤𑍇𑌯𑌸𑍍𑌤𑍁 𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌸𑍍𑌸𑍋𑌽𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇" (ఆచినోతిహిశాస్త్రార్థా నాచారేస్థాపయత్యపి స్వయమాచరతేయస్తు ఆచార్యస్సో౽భిధీయతే) என்றும்; (௨௧௬) "𑌗𑍁𑌶𑌬𑍍𑌦𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑍍𑌧𑌕𑌾𑌰𑌸𑍍𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌰𑍁𑌶𑌬𑍍𑌦𑌸𑍍𑌤𑌨𑍍𑌨𑌿𑌰𑍋𑌧𑌕𑌃 𑌅𑌨𑍍𑌧𑌕𑌾𑌰𑌨𑌿𑌰𑍋𑌧𑌿𑌤𑍍𑌵𑌾𑌦𑍍𑌗𑍁𑌰𑍁𑌰𑌿𑌤𑍍𑌯𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇" (గుశబ్దస్త్వంధకారస్స్యాత్ రుశబ్దస్తన్నిరోధకః అంధకారనిరోధిత్వాద్గురురిత్యభిధీయతే) என்றும்; (௨௧௭) "𑌗𑍁𑌰𑍁𑌰𑍇𑌵 𑌪𑌰𑌂𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌗𑍁𑌰𑍁𑌰𑍇𑌵 𑌪𑌰𑌾𑌗𑌤𑌿𑌃 𑌗𑍁𑌰𑍁𑌰𑍇𑌵 𑌪𑌰𑌾𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌗𑍁𑌰𑍁𑌰𑍇𑌵 𑌪𑌰𑌂𑌧𑌨𑌂 𑌗𑍁𑌰𑍁𑌰𑍇𑌵 𑌪𑌰𑌃𑌕𑌾𑌮𑍋 𑌗𑍁𑌰𑍁𑌰𑍇𑌵 𑌪𑌰𑌾𑌯𑌣𑌂 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑌦𑍁𑌪𑌦𑍇𑌷𑍍𑌟𑌾𑌸𑍌 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌗𑍁𑌰𑍁𑌤𑌰𑍋𑌗𑍁𑌰𑍁𑌃" (గురురేవపరంబ్రహ్మ గురురేవపరాగతిః గురురేవపరావిద్యా గురురేవపరంధనం గురురేవపరఃకామో గురురేవపరాయణం యస్మాత్తదుపదేష్టాసౌ తస్మాద్గురుతరోగురుః) என்றும் "ஸீதகவாடைப் பிரா

வார், அவ்வாசிரியன்" என்றும், "தேனார்கமலத் திருமாமகள்கொழுநன் யாழ்வார், அவரன்றும், ஈஶ்வரன் தானாகச்சொல்லப்பட்ட ஆசார்யனே ஶிஷ்

இனி கஅ) "[illegible]" கில், திவ்யதே[illegible]) என்றும், திருநாடு, திருப்பாற்கடல் நனே யென்றெட்டுத் திருப்பதிகளும், "அன்னையாயத்தனாய்" என்னும்படி யென்னும்வ விதோத்தாரக பந்துவும், "மாடும்மனையும் தேடும்பொருளும் திருப்பிடமெல்லாம்" ஆசார்யனே யாகக்கடவன்.

கொண்டு விழுந்துகிடந்து துடித்து, திருமிடறுதழுதழுப்ப, திருமூக்கு வேர்ப்பிடிக்க, அவசராய்க்கிடந்து, இட்டகால் இட்டகைகளாய்ச் சிந்தித்துத்திகைத்து, இணைமலர்க் கண்ணீர்ததும்பி, தாராவர்ஷமாகத் திருமுத்துதிர்த்து ப்ரலாபிக்க; அவ்வளவிலே, பெரிய பெருமாளும், நம்முடையவரை யிழந்தோமேயென்று திருவுள்ளம்நொந்து நமக்குச் செவ்வாய் வக்ரமாய்த்ததுஎன்று சுருளமுதும் அமுதுசெய்யாமல், நாய்ச்சிமாருடனே புறப்பட்டருள; அவ்வளவில், பராங்குசபரகாலன் முதலான ஆழ்வார்கள் பதின்மர்களும் சேவித்துச்செல்ல; ஆயிரக்கால் திருமண்டபத்திலே எழுந்தருளியிருந்து, திருமுசத்தின்பணி, காளாஞ்சி, திரு வெண்சாமரம் திரு வாலவட்டம், திருவெண் கொற்றக்கொடை, வெண்முத்தின் கலசம், திருமேல்கட்டு, முத்துத்தாமம் தொடக்கமானவையும்; உடுத்துக்களைந்த பீதகவாடை, சூடிக்களைந்த தொடுத்த தூய்மலர், எண்ணெய்சுண்ணமெல்லாம் பொற்றளிகையிலே கொண்டு போம்படி, உத்தம நம்பிக்கு விடைகொடுத்தருள; நம்பியும், அப்படியேதரித்துக்கொண்டு. பெருமாள்பரிகரம்அனைத்துக்கொத்தோடும், சகலவாத்யத்துடனே, மடத்துவாசலிலேசெல்ல; அதுகண்டு, முதலிகளெல்லாரும் தேறிநின்று, இனிச்செய்யவேண்டுங் க்ருத்யத்தைச்செய்யவேண்டுமென்று, எம்பெருமானாருடையவிமலசரமவிக்ரஹத்தை, தூய்தாகநீராடப்பண்ணுவித்து, அலங்கரித்து, கேசவாதி த்வாதசோர்த்வ புண்ட்ரங்களையும் சார்த்தி; பெருமாள்சார்த்திக்களைந்து வரவிட்டபெருமாளரையில் பீதகவண்ணவாடையுங் கொண்டுதிருமுடியிலே சார்த்தி, அவன்மாரணிந்த வநமாலையும் சார்த்தி அலங்கரித்து, உடையவர்திருவடிகளை, தம்கண்ணிலும், மார்பிலும்நெஞ்சிலும் ஒத்திக்கொண்டு, ஆசார்யவிஶ்லேஷாஸஹிஷ்ணுக்களாய், "அய்யோ கண்ணபிரானறையோ முறையோ வரவணைமேல் பள்ளிகொண்டமுகில்வண்ணனே"என்றுகையெடுத்து, போரப்பெருமிடறுசெய்து, கூப்பிட்டு, மூர்ச்சித்துக்கிடக்க; அருகிருந்தமுதலிகள் வந்து, எடுத்துத்தேற்ற தேறிநின்று; உடையவர், சாத்திக்களைந்து தச்சேஷமாயிருந்துள்ள எண்ணெ, சுண்ணம், திருமண், ஸ்ரீசூர்ணம் எல்லாம்ப்ரசாதப்பட்டு, தீர்த்தங்கொண்டு, திருக்குருகைப்பிரான்பிள்ளான் திருக்கையாலே, ஆளவந்தாரைப்போலே, உடையவர்க்கு ப்ரஹ்மமேதத்தாலே ஸம்ஸ்கரித்து, ப்ரணவாகாரமாய், பீடயாநமான திவ்யவிமாநத்திலே யேறியருளப்பண்ணி, பேரி, சங்க, ம்ருதங்க, பணவதூர்யம்முதலானவாத்யங்கள்எங்குமுழங்க, பெருமாள் பரிகரமடைய, சத்ர சாமர தாலவ்ருந்தாதிகளை தரித்துசேவிக்க; அவ்வளவில், ஆட்கொண்ட வல்லி ஜீயர்யதிவரஜீயர் உள்ளிட்டஎழுநூறுஜீயாளும்ப்ரஹ்மவல்லிப்ருகுவல்லி நாராயணநுவாகம் முதலான உபநிஷத்துகளோதி; பட்டர் கந்தாடை

யாண்டான்நடாதூராழ்வான் உள்ளிட்ட எழுபத்துநாலுமுதலிகளும் தந்
தத்பரிசர்யாஸாதநங்களை தரித்துக் கொண்டு பரிவுடன் பரிவ்ருதராய்
சேவித்துக்கொண்டுவர; மற்றுமுண்டான ஸ்ரீவைஷ்ணவர்கள் ஒன்பதி
னாயிரம்பேரும்தத்பாவரான ஸ்ரீவைஷ்ணவர்கள் பன்னீ ராயிரம்பேரும்
அருளிச்செயல்மூவாயிரமும்முன்னடிபின்னடியாகச்சேவிக்க;திருவரங்க
ப்பெருமாளரையர்பரிகரமான திருவாய்மொழியரையர்ஆப்பான்திருவழு
ந்தூரரையர் திருநறையூரரையர் அழகியமணவாளரையர் முதலான எழு
நூறு திருவாய்மொழிவிண்ணப்பஞ்செய்யும் தம்பிரான்மார் பண்ணிசைத்
தாளத்துடன்திருவாய்மொழிபாட;திருவரங்கத்தமுதனார்பெரியகோயில்
வள்ளலார் தொடக்கமானவர்கள் உடையவர் நூற்றந்தாதிசேவிக்க; எம்
பார்பிள்ளான்உள்ளிட்டவர்கள் ததிகப்ரீதி ஹேதுவான ஸ்தோத்ர கத்
யங்களைஸேவிக்க; வடுகநம்பியும்ராமாநுஜதாஸரான்கோமடத்துச்சிறியா
ழ்வானும் உடையவர்ப்ரபத்தியை அநுசந்தித்துக்கொண்டுவர; திருவீதி
யெங்கும்கோடித்துபொரியும்புஷ்பமும்சிதற,நடைபாவாடையிட, கரும்
புங்குடமும் ஏந்த, திருப்பதியில்சுமங்கலிகள்மங்கலகூபமேந்திமுன்னே
செல்ல,இருபக்கமும்சாமரம்இரட்டிக்க,வெள்ளைவட்டமிட,தர்ஸநத்தில்
எம்பெருமானார் திருநாட்டுக்கெழுந்தருளினார் என்று ஒற்றைத்திருச்சின்
னம் பணிமாற, திருவீதிகள்தோறும் எழுந்தருள்வித்துக்கொண்டுவர,
பெரியபெருமாளும் அந்தத்திருமேனியை அபிமதவிஷயத்தில் அழுக்கு
கக்குமாப்போலே தேஹசபலராய், "மங்கவொட்டு" என்னும்படிஇவர்
விக்ரஹத்தை ஆதரித்துப்புறம்பேகொண்டு போகவொட்டாமல் அந்தஃ
புரமஹிஷிகளை தத்பரிசரத்திலே ஆராமத்திலே அட்டிக்குவைக்குமா
போலேயும் நிதியைஉள்ளே யிட்டு வைக்குமாபோலேயும் லக்ஷ்மீகூல்
யாம்படியான லக்ஷணங்களையுடையராய், விலக்ஷணமான நிதிபோலே
"ராமாநுஜனென்றன் மாநிதி" "ராமாநுஜனென்றன் சேமவைப்பு" என்
னும்படியான இவர்திருமேனியையும்ஆழ்வார்திருமேனியைஆவரணத்து
க்குள்ளே பள்ளிப்படுத்தாற்போலே ஆவரணத்துள்ளில்உட்கோப்பிலே
அந்தரங்கமாக கௌந்தேயனை அர்ஜ்ஜுநனைப்போலே அந்தரங்கரான
கந்தாடையாண்டான் திருமுடிகாத்து நோக்க, ததநுகுணமாகத் திருப்
பள்ளி படுப்பித்தருளி பரிபாலித்தருளினார். இப்படி நிதியைநிக்ஷேபித்த
வநந்தரம்பெருமாளும்நாய்ச்சிமாருடனேகூடத்திருமஞ்சநங்கண்டருளி,
திருமுத்துதிர்த்து,திருமுகம்கன்றி, சுருளமுதும் அமுதுசெய்யாமல் அலை
ப்புப்படவிட்டதிருவுள்ளமாய், கந்தாடையாண்டான்பட்டர்முதலானோரை
ப்பார்த்து, நம்முடைய அவப்ருதோத்ஸவம் கொண்டாடினாற்போலே
நம்முடையவர்க்கும் அவப்ருதோத்ஸவங் கொண்டாடுங்கோள் என்று

திருவுள்ளம்பற்றி, சேர்த்தியிலேயேறியருளி, உடையவர்க்கு அக்காரவடிசில்களிகையனுப்பியருளினார்.

அநந்தரம், கந்தாடையாண்டான் தொடக்கமான அனைவரும்புத்ரர் சிஷ்யர் செய்யுங்கார்யங்களை யெல்லாஞ்செய்துகொண்டு, அவப்ருதஸ்நாநமாக எல்லாரும் நீராடியருளி, தத்விஸ்லேஷாஸஹராய் பரிதபித்துக்கொண்டிருக்க; பின்பு ஆண்டான் நம்பெருமாள் அநுமதியுடனே எம்பெருமானாரை எல்லாரும்சேவித்து உஜ்ஜீவிக்கும்படி மீளவும் அவ்விடத்திலே ஆவிர்ப்பவித்தாற்போலேயிருக்க அர்ச்சாவதாரமாக ஏறியருளப்பண்ணி, ப்ரதிஷ்டிப்பித்தருளினார். (௪௮௫) “𑌸𑍍𑌵𑌾𑌵𑌤𑌾𑌰𑌸𑍍𑌥𑌲𑍇𑌚𑌾𑌭𑍂𑌤𑍍 𑌶𑍍𑌰𑍀𑌰𑌙𑍍𑌗𑍇𑌚𑌯𑌤𑍀𑌶𑍍𑌵𑌰𑌃 - 𑌯𑌸𑍍𑌯𑍋𑌦𑌿𑌤𑌂𑌸𑍁𑌕𑌾𑌵𑌾𑌸𑌂 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌗𑍁𑌰𑍁𑌂𑌭𑌜𑍇” (స్వావతారస్థలేచాభూత్ శ్రీరంగేచయతీశ్వరః యస్సూదితం సుకావాసం రామానుజగురుంభజే.) என்றார்கள்.

அநந்தரம் சாஸ்த்ரார்த்தமான கைங்கர்யங்களையும், ஆப்தரான தாங்கள் ஸமாப்தமாக நடத்தி, பட்டரும்கந்தாடையாண்டானும்மிகவும் ஸௌப்ராத்ரத்தையுடையராய் உடையவர்காலத்தில் அர்த்தவிசேஷங்களையும் ஒருவர்க்கொருவர் உசாவிக்கொண்டு ராமக்ருஷ்ணாதிகளுடைய புநர்வஸ்வாதி திருநக்ஷத்ரங்களோ பாதியும் ஆழ்வார்களுடைய ச்ரவணாதிதிருநக்ஷத்ரங்களோபாதியும் இவருடைய சித்திரையில் செய்ய திருவாதிரையும் மற்றும் மாசந்தோறும் வருவதான அந்தத்திருநக்ஷத்ரத்தையும் மஹோத்ஸவமாக நடத்திக்கொண்டுபோருகிறதாங்கள்; ஸம்ஸாரஸ்தித்யருசி நிவேதநமும் தத்நுகுணமான பகவதுக்தாந்திகத்தின் நிஸ்சயமும் குருபரம்பராஹாரநாயகரத்நமான இவர்க்கேயுள்ள தொன்றிறேயென்றுதத்காலோசிதமானவைபவத்தையநுஸந்தித்து, மற்றும் வாசாமகோசரமான தத்வைபவங்களையும் ப்ரகாசிப்பித்துக் கொண்டு, கிடாம்பியாச்சான் தொடக்கமானவரோடேபாடாற்றிக்கொண்டு, இருந்தார்கள்.

அநந்தரம், திருவேங்கடநாட்டில்நின்றும் அநந்தாழ்வான்ஸ்ரீகுஹதாஸர்முதலான முதலிகளையுங் கூட்டிக்கொண்டு அநந்தாம்ஸமான இவர் அவதாரஸமாதியை ஆராய்ந்தறியும்படி எழுந்தருளி, திருக்காவேரி அருகே பரந்திருக்கிற தத்ஸூசகங்களைக் கண்டு எழுந்தருளினபடி யறிந்துசோகாவிஷ்டராய்; அநந்தரம்பட்டரையும் ஆண்டானையுங்கண்டு ஆஸ்வாஸித்து, உடனே ஊரேற மீண்டெழுந்தருளினார்.

அநந்தரம், அப்படியே கீழைத்திக்கில்சோழவளநாடுதிருக்கண்ணபுரம் முதலானதிருப்பதிகளிலும் எச்சான் முதலானவர்களும் தெற்குத்திக்கான பாண்டிநாட்டுத் திருக்கோட்டியூர்நம்பி குமாரரான யாமுனாசார்யர் சொக்கத்தேவர்; திருமாலையாண்டான்குமாரரானசுந்தரத்தோ

ளுடையார் முதலானாரும்; மேல்நாட்டிலும் சோமாசியாண்டான் மருதூர் நம்பி தொண்டனூர்நம்பி முதலானாரும்; மற்றும் அங்கே எம்பெருமானாராலே திருத்தப்பட்ட திருநாராயணபுரம் முதலானஸ்த்தலங்களில் ஸ்ரீவைஷ்ணவர்களும்; மற்றுமுண்டானதேசாந்தரஸ்த்தரெல்லாரும் திரண்டு பெருங்கூட்டமாகக் கோயிலிலேவந்து, எம்பெருமானாருடைய விஸ்லேஷத்தாலே மிகவும்க்லேஸித்து, அநந்தரம்பட்டரைசேவித்து, தங்கள்வ்யஸனமெல்லாந்தீர்ந்து, பட்டரை இஷ்டதேவதையான எம்பெருமானாரைக் கண்டு தந்தாமுக்கு வேண்டும் இஷ்டார்த்தங்களையும்கேட்டுக்கொண்டு தல்லாபத்தாலே (௪௮௬) "ஸ்ரீபராசரபட்டார்ய சரணௌ ஸம்ச்ரயேமஹி- யத்வக்த்ர ரங்கே ரங்கேச ஸூக்திஸாம்ராஜ்ஞீ ப்ரந்ருத்யதி." (శ్రీపరాశరభట్టార్య చరణౌ సంశ్రయేమహి । యద్వక్త్రరంగే రంగేశ సూక్తిసామ్రాజ్ఞీ ప్రనృత్యతి) (௪௮௭) "ப்ரமாணநகநிர்ப்பிந்ந வாதிமத்தேபமஸ்தக: - ராஜதே நிகமாந் கர்ஜந் ஸ்ரீபராசரகேஸரீ" (ప్రమాణనఖనిర్భిన్న వాదిమత్తేభమస్తకః । రాజతే నిగమాన్ గర్జన్ శ్రీపరాశరకేసరీ) (௪௮௮) "ஸ்ரீபராசரபட்டார்யம் பாவயே பாவநாமஹம் - யத்பாத்ராநாஸ்த்யயம் ரங்கிபுஜே ராஜேச்வரோத்ஸவ: - ராஜேச்வரசுத..." (శ్రీపరాశరభట్టార్యం భావయే భావనామహం । యద్భాత్యానాస్త్యయం రంగిభుజే రాజేశ్వరోత్తమం) (௪௮௯) "ஸ்ரீபராசரபட்டார்ய: ஸ்ரீரங்கேசபுரோஹித: - ஸ்ரீவத்ஸாங்கஸுத: ஸ்ரீமாந் ச்ரேயஸே மேஸ்து பூயஸே" (శ్రీపరాశరభట్టార్యః శ్రీరంగేశపురోహితః । శ్రీవత్సాంకసుతశ్శ్రీమాన్ శ్రేయసే మేస్తు భూయసే) ஏவமாதி ஸூக்திகளையும் தத்விஷயத்திலே அநுஸந்தித்துக்கொண்டு ததநுஜ்ஞையோடே தந்தாமூர்களிலே சேர்ந்தார்கள்.

ஜ்ஞாநாநுஷ்டாநமாசரித்துள்ள பரமாசார்யரான ஆளவந்தார்க்கேயுள்ள தொன்றிறே.

ஸம்ஸார ஸ்த்திதியருசிநிவேதநமும் தததநுகுணமானபகவதுக்தாந்திமநிநிச்சயமும் சரமகாலத்தளவும் ஸ்வாபிமாநாந்தர்ப்பூதரான வர்களுக்கு உபகாராநுகுணமாக வ்ருத்திவிசேஷோபதேசமும் பரிஹரணீய வ்ருத்திவிசேஷோபதேசமும் சரமகாலத்தில் ஸ்வாபிமதசரமாதிகாரி ஸ்பர்ஸவிசேஷமும் திருமுடியைப்பற்றி பூர்வாசார்யர்கள் விளங்க திருவடிகளைப்பற்றி அபராசார்யர்கள் விளங்கபூர்வாபராசார்யருபஹாரநாயகரத்நமான உடையவர்க்கேயுள்ளதொன்றிறே. இத்தால்ஸ்ரீராமக்ருஷ்ண சரிதங்கள்போலே ஸ்ரீராமாநுஜாசார்யசரிதமும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸதாநுஸந்தேயமென்றதாய்த்து.

எம்பெருமானார் திருநக்ஷத்ரம் சித்திரையில் திருவாதிரை.

அவர்தனியன் ப்ரஸித்தமிறே "யோநித்யமச்யுத" இத்யாதி.

ப்ராப்யதேசத்திலும் ஆசார்யவிசேஷத்வ முறைதவற வொண்ணாதென்று சொன்னத்வனையும் சரமதசையிலும் ப்ராணப்ரயாண பாதேயமாக ஸ்வாசார்யன்தானே த்வயத்தைவிடாய்கெட உபதேசிக்கப் பெற்றதன்னேற்றமும் பகவதபிமாநஸ்த்தலத்திலும் ததியாபிமாநஸ்த்தலமே சரமதேசமாகப்பெற்ற தன்னேற்றமும் சரமாதிகாரபாக விசேஷமும் ஆழ்வான்பக்கலிலே அநுஷ்டாநசேஷமாகக் கண்டதிறே.

ஸ்ரீஎம்பெருமானார் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

(உடையவர் ஸ்ரீபாதத்து முதலிகளின் திருநக்ஷத்ர வைபவப்ரகரணம்)

முதலியாண்டான் திருநக்ஷத்ரம் சித்திரையில் - புநர்வசு, அவர் தனியன், (௬௦) "𑌪𑌾𑌦𑍁𑌕𑍇 𑌯𑌤𑌿𑌰𑌾𑌜𑌸𑍍𑌯 𑌕𑌥𑌯𑌨𑍍𑌤𑌿 𑌯𑌦𑌾𑌖𑍍𑌯𑌯𑌾 - 𑌤𑌸𑍍𑌯 𑌦𑌾𑌶𑌰𑌥𑍇𑌃 𑌪𑌾𑌦𑍌 𑌶𑌿𑌰𑌸𑌾 𑌧𑌾𑌰𑌯𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍" (పాదుకే యతిరాజస్య కథయంతి యదాఖ్యయా। తస్య దాశరథేః పాదౌ శిరసా ధారయామ్యహం) (௬௧) "𑌅𑌜𑌹𑌦𑍍𑌭𑌾𑌗𑌿𑌨𑍇𑌯𑌤𑍍𑌵𑌂 𑌪𑌾𑌦𑍁𑌕𑌾𑌤𑍍𑌵𑌂 𑌤𑍍𑌰𑌿𑌦𑌣𑍍𑌡𑌤𑌾𑌮𑍍 - 𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍋 𑌯𑌤𑌿𑌰𑌾𑌜𑌸𑍍𑌯 𑌗𑍁𑌣𑍈𑌸𑍍𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌹𑍇𑌤𑍁𑌭𑌿𑌃" (అజహద్భాగినేయత్వం పాదుకాత్వం త్రిదండతాం। సంప్రాప్తో యతిరాజస్య గుణైస్తత్ప్రీతిహేతుభిః) (௬௨) "𑌶𑍍𑌰𑍀𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌾𑌨𑌾𑌂 𑌦𑌾𑌸𑌤𑍍𑌵𑌂 𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌭𑍁𑌤𑌾𑌂 𑌸𑍍𑌵𑌯𑌮𑍍 - 𑌵𑌾𑌧𑍂𑌲𑌕𑍁𑌲𑌧𑍌𑌰𑍇𑌯𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌦𑌾𑌶𑌰𑌥𑌿𑌂 𑌗𑍁𑌰𑍁𑌮𑍍" (శ్రీవైష్ణవానాం దాసత్వం స్వామిత్వం ప్రభుతాం స్వయం। వాధూలకులధౌరేయం వందే దాశరథిం గురుం.)

திருக்குருகைப்பிரான் பிள்ளான் தனியன், (௬௩) "𑌯𑌃 𑌪𑌰𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌕𑌲𑌃 𑌖𑍍𑌯𑌾𑌤𑍋 𑌯𑌤𑌿𑌰𑌾𑌜𑌾𑌬𑍍𑌧𑌿𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌾𑌃 - 𑌕𑍁𑌶𑌲𑌂 𑌦𑌿𑌶𑌤𑌾𑌨𑍍𑌮𑌹𑍍𑌯𑌂 𑌸 𑌕𑍁𑌰𑍁𑌕𑍇𑌶𑍍𑌵𑌰𑌦𑍇𑌶𑌿𑌕𑌃" (యః పర్యాప్తకలః ఖ్యాతో యతిరాజాబ్ధిచంద్రమాః। కుశలం దిశతాన్మహ్యం స కురుకేశ్వరదేశికః) (௬௪) "𑌵𑌿𑌖𑍍𑌯𑌾𑌤𑍋 𑌯𑌤𑌿𑌸𑌾𑌰𑍍𑌵𑌭𑌾𑌮𑌜𑌲𑌧𑍇𑌶𑍍𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑍋𑌪𑌮𑌤𑍍𑌵𑍇𑌨 𑌯𑌃 - 𑌶𑍍𑌰𑍀𑌭𑌾𑌷𑍍𑌯𑍇 𑌚 𑌦𑌯𑌾𑌵𑌦𑌨𑍍𑌵𑌯𑌾𑌨𑍍𑌸𑍍𑌵𑌵𑌿𑌦𑌿𑌤𑌾 𑌶𑍍𑌰𑍀𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌦𑌯𑌃 - 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌂 𑌭𑌾𑌷𑍍𑌯𑌕𑍃𑌦𑌾𑌜𑍍𑌞𑌯𑍋𑌪𑌨𑌿𑌷𑌦𑌾𑌂 𑌦𑍍𑌰𑌾𑌮𑌿𑌡𑍀𑌨𑌾𑌂 𑌵𑍍𑌯𑌧𑌾𑌤𑍍 𑌤𑌂 𑌤𑌤𑍍𑌕𑍁𑌰𑍁𑌕𑍇𑌶𑍍𑌵𑌰𑌂 𑌗𑍁𑌰𑍁𑌵𑌰𑌂 𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑌪𑍂𑌰𑍍𑌣𑌂 𑌭𑌜𑍇" (విఖ్యాతో యతిసార్వభౌమజలధేశ్చంద్రోపమత్వేనయః। శ్రీభాష్యేచ దయావదన్వయాన్స్వవిదితా శ్రీవిష్ణుచిత్తాదయః। వ్యాఖ్యాం భాష్యకృదాజ్ఞయోపనిషదాం ద్రామిడీనాం వ్యధాత్ త్వం తత్కురుకేశ్వరం గురువరం కారుణ్యపూర్ణం భజే.)

கிடாம்பியாச்சான் தனியன், (௪௯௫) "[illegible]" (రామానుజపదాంభోజ యుగళీయస్యధీమతః । ప్రాప్యంచప్రాపకంవన్దే ప్రణతార్తిహరంగురుం) (௪௯௬) "[illegible]" (ఆస్తికాగ్రేసరంవన్దే పవిత్రాద్గురుపావకం । యాచితంకురుకేశేన ప్రణతార్తిహరంగురుం) (௪௯௭) "[illegible]" (శ్రీభాష్యందర్శనత్వాయతిపతిరచితంశారదాపీఠనివృత్తేనత్వాశ్రీవేంకటేశంపథిపరమపదంతత్త్వవాద్గోపికాస్యా ఆఖ్యాంవేదోక్తమూంగోదయన ఇతిదధద్భాష్యకారేణదత్తాం । ఆత్రేయాచార్యవిష్ణుం రసుజమనుదినం సాదరంతన్నమామి.)

எங்களாழ்வான் தனியன், (௪௯௮) "[illegible]" (శ్రీవిష్ణుచిత్త చరణాంబుజసంశ్రయాయ చేతోమమస్పృహయతే కిమతఃపరేణ । నోచేన్మమాపియతిశేఖరభారతీనాం భావఃకథంభవితుమర్హతివాగ్విధేయః.)

நடாதூராழ்வான் தனியன், (௪௯௯) "[illegible]" (యస్మిన్పదం యతివరస్యముఖాత్ప్రణేతుం । నిష్ణ్యాతమప్యవనిదక్షిణమాంతభాష్యం । తస్మైవతంభగవతఃప్రియభాగినేయం । వందేగురుంవరదవిష్ణుపదాభిధానం) (௫௦௦) "[illegible]" (జ్ఞానోత్తమోద్ధతినిరాకరణప్రవృత్తస్య । రామానుజార్యకరుణాపరిణామపాత్రం । వత్సాన్వవాయతిలకవచపతింగురూణాం। వందామహేవరదవిష్ణుగురుంపరేణ్యం.)

சோமாசியாண்டான் தனியன், (௫௦௧) "[illegible]" (నౌమిలక్ష్మణయోగీంద్రపాదసేవైకధారకం । శ్రీరామంక్రతునాథార్యం శ్రీభాష్యామృతసాగరం,)

நடுவிலாழ்வான்தனியன், (௫0௨) "𑌯𑍇𑌨 𑌪𑍍𑌰𑍋𑌲𑍍𑌲𑌸𑌤𑍇 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌗𑌾𑌰𑍍𑌗𑍍𑌯𑌵𑌂𑌶𑌮𑌹𑌾𑌮𑍍𑌬𑍁𑌧𑌿𑌃 - 𑌮𑌨𑍍𑌮𑌹𑍇 𑌤𑌂 𑌸𑌦𑌾 𑌚𑌿𑌤𑍍𑌤𑍇 𑌮𑌧𑍍𑌯𑌵𑍀𑌥𑍍𑌯𑌕𑌲𑌾𑌨𑌿𑌧𑌿𑌮𑍍" (యేనప్రోల్లసతేనిత్యం గార్గ్యవంశమహాంబుధిః । మన్మహేతంసదాచిత్తే మధ్యవీథ్యకలానిధిం)

அருளாளப்பெருமாளெம்பெருமானார்தனியன், (௫0௩) "𑌦𑌯𑌾𑌪𑌾𑌲𑌨𑌦𑍇𑌵𑌾𑌯 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌾𑌰𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑌚 - 𑌪𑍍𑌰𑌮𑍇𑌯𑌸𑌾𑌰𑌂 𑌦𑌦𑌤𑍇 𑌨𑌮𑍋𑌸𑍍𑌤𑍁 𑌪𑍍𑌰𑍇𑌮𑌶𑌾𑌲𑌿𑌨𑍇" (దయాపాలనదేవాయ జ్ఞానసారప్రదాయచ। ప్రమేయసారందదతే నమోస్తుప్రేమశాలినే) (௫0௪) "𑌯𑌤𑌿𑌰𑌾𑌜𑌦𑌯𑌾𑌪𑌾𑌤𑍍𑌰𑌂 𑌯𑌤𑌿𑌪𑌕𑍍𑌷𑌵𑌿𑌭𑍂𑌷𑌣𑌂 - 𑌦𑌯𑌾𑌪𑌾𑌲𑌮𑍁𑌨𑌿𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌗𑍍𑌰𑍇𑌸𑌰𑌂 𑌸𑌦𑌾" (యతిరాజదయాపాత్రం యతిపక్షవిభూషణం। దయాపాలమునింవందే దేశికాగ్రేసరంసదా.)

அநந்தாழ்வான் திருநக்ஷத்ரம் சித்திரையில்சித்திரை, அவர்தனியன் (௫0௫) "𑌅𑌖𑌿𑌲𑌾𑌤𑍍𑌮𑌗𑍁𑌣𑌾𑌵𑌾𑌸𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌤𑌿𑌮𑌿𑌰𑌾𑌪𑌹𑌮𑍍 - 𑌆𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌨𑌾𑌂 𑌸𑍁𑌶𑌰𑌣𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇𑌨𑌨𑍍𑌤𑌾𑌰𑍍𑌯𑌦𑍇𑌶𑌿𑌕𑌮𑍍" (అఖిలాత్మగుణావాస మజ్ఞానతిమిరాపహం। ఆశ్రితానాంసుశరణం వందేనంతార్యదేశికం) (௫0௬) "𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌶𑍍𑌰𑍀𑌪𑌾𑌦𑌾𑌮𑍍𑌭𑍋𑌰𑍁𑌹𑌦𑍍𑌵𑌯𑌮𑍍 - 𑌸𑌦𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑌨𑌨𑍍𑌤𑌾𑌰𑍍𑌯𑌂 𑌅𑌨𑌨𑍍𑌤𑌾𑌰𑍍𑌯𑌗𑍁𑌰𑍁𑌂 𑌭𑌜𑍇" (శ్రీమద్రామానుజాచార్యశ్రీపాదాంభోరుహద్వయం। సదుత్తమమనంతార్యం అనంతార్యగురుంభజే) (௫0௭) "𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌪𑌾𑌦𑌾𑌮𑍍𑌬𑍁𑌜𑌚𑌞𑍍𑌚𑌰𑍀𑌕𑌂 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌦𑌯𑌾𑌪𑌾𑌲𑌪𑌦𑍈𑌕𑌪𑌾𑌤𑍍𑌰𑌮𑍍 - 𑌶𑍍𑌰𑍀𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑍇𑌶𑌾𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌯𑍁𑌗𑌾𑌨𑍍𑌤𑌰𑌙𑍍𑌗𑌂 𑌨𑌮𑌾𑌮𑍍𑌯𑌨𑌨𑍍𑌤𑌾𑌰𑍍𑌯𑌮𑌨𑌨𑍍𑌤𑌕𑍃𑌤𑍍𑌯𑌮𑍍" (యతీంద్రపాదాంబుజచంచరీకం శ్రీమద్దయాపాలపదైకపాత్రం। శ్రీవెంకటేశాంఘ్రియుగాంతరంగం నమామ్యనంతార్యమనంతకృత్యం.)

எச்சான்தனியன், (௫0௮) "𑌯𑍇𑌨 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌶𑍇𑌷𑌤𑍍𑌵𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 - 𑌶𑍇𑌷𑌤𑍍𑌵𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑍋 𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌯𑌜𑍍𑌞𑍇𑌶𑌂 𑌤𑌮𑍁𑌪𑌾𑌸𑍍𑌮𑌹𑍇" (యేన వైష్ణవశేషత్వ పర్యంతంపరమాత్మనః। శేషత్వమాత్మనోజ్ఞేయం యజ్ఞేశంతముపాస్మహే.)

வடுகநம்பிதனியன், (௫0௯) "𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌰𑍍𑌯𑌚𑌰𑌣𑌪𑍍𑌰𑌵𑌣𑌂 𑌪𑌰𑌦𑍇𑌵𑌵𑌤𑍍 - 𑌵𑌟𑍁𑌪𑍂𑌰𑍍𑌣𑌮𑌹𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌪𑌰𑌜𑍍𑌞𑌾𑌨𑌪𑌯𑍋𑌨𑌿𑌧𑌿𑌮𑍍" (రామానుజార్యచరణప్రవణంపరదేవవత్। వటుపూర్ణమహంవందే పరజ్ఞానపయోనిధిం)

எழுபத்துநான்கு ஆசார்யர்களுக்கும்சமுதாயத்தனியன், (௫௧0) "𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌰𑍍𑌯𑌾𑌚𑍍𑌛𑍍𑌰𑍁𑌤𑌿𑌶𑍇𑌖𑌰𑌾𑌰𑍍𑌥𑌂 𑌸𑌭𑌾𑌷𑍍𑌯𑌮𑌰𑍍𑌥𑌂 𑌚 𑌰𑌹𑌸𑍍𑌯𑌮𑌰𑍍𑌥𑌂 - 𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌤𑍇 𑌦𑍈𑌵𑌗𑍁𑌰𑍂𑌨𑍍 𑌕𑍃𑌤𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑍍 𑌭𑌜𑍇 𑌚𑌤𑍁𑌸𑍍𑌸𑌪𑍍𑌤𑌤𑌿𑌪𑍀𑌠𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨𑍍" (రామానుజార్యాచ్ఛ్రుతిశేఖరార్థం సభాష్యమర్థం చ రహస్యమర్థం। సంప్రాప్యతే దైవగురూన్ కృతార్థాన్ భజే చతుస్సప్తతిపీఠసంస్థాన్)

சிறியாண்டான், தம்முடைய அந்த்யமதசையிலே பணித்தவார்த்தை:—திருவேங்கடமுடையான், தன்ஸ்வரூபத்தைமறந்து என்ஸ்வரூபத்தைநினைத்தானாகில், பழையநரகங்களொழியவேறேஎனக்கென்று சிலநரகங்களை ஸ்ருஷ்டிக்கவேணுமிறே. அன்றிக்கே, என்ஸ்வரூபத்தை மறந்து தன்ஸ்வரூபத்தைஉணர்ந்தானாகில், பழையதிருநாடுபோராது, எனக்கென்று வேறேயொருதிருநாடு ஸ்ருஷ்டிக்கவேணுமிறே. அதாவது— ஸ்வக்ருததோஷஸ்மரணம் அநந்தது:கப்ரதாநஹேது; ஈஶ்வரவாத்ஸல்யஸ்மரணம் அநந்தாஸ்சர்யசுகப்ரதாநஹேதுவென்றபடி.

இவர்தனியன், (௩௧௧) "ஜ்ஞாதும் கூரகுலாதிபம் க்ரிமிகளாத் ப்ராப்தாபதம் ப்ரேஷித: - ஸ்ரீராமாவரஜேந கோஸஹபதிம் த்ருஷ்ட்வா ததீயாம் ஸ்திதிம் - ஸம்ப்ராப்தஸ் த்வரயா புராந்தகபுராத் கல்யாணவாபீதடே யோஸௌ மாருதிரித்யஶம்ஸத் அவயம் தஸ்மை நம: ஸூரயே" (జ్ఞాతుంకూరకులాధిపంక్రిమిగళాత్ప్రాప్తాపదంప్రేషితః। శ్రీరామావరజేనకోసహపతిందృష్ట్వాతదీయాంస్థితిం॥ సంప్రాప్తస్త్వరయాపురాంతకపురాత్కల్యాణవాపీతటే । యోసౌమారుతిరిత్యశంసత్తవయం తస్మైనమఃసూరయే.)

மருதூர்நம்பி தம்முடைய அந்த்யமதசையில்பணித்தவார்த்தை:— மூன்றுஜந்மம் தம்திருவடிகளிலே அபராதம்பண்ணின சிசுபாலன் திருவடிகளை யடைந்தான். அநந்தஜந்மம் திருவடிகளிலே அபராதம்பண்ணின நான் இழந்திருக்கை வழக்கோவென்ன, சிங்கர் அன்றேதிருவடிகளைத் தந்தருளினர். அதாவது இத்தலையில் அபராதமே அவன் அங்கீகாரத்திற்குப்பச்சையென்று உணருகைசரமஜ்ஞாநபரிபாகமென்றபடி.

(பிள்ளையுறங்காவில்லிதாஸர் திருநாடடைந்தப்ரகரணம்.)

பிள்ளையுறங்காவில்லிதாஸர் தம்முடைய அந்த்யமதசையில் முதலிகளெல்லாரையும், அழைப்பித்து, தீர்த்தங்கொண்டு, க்ஷமைகொண்டு, பொன்னாய்ச்சியாரைப்பார்த்து; நம்முடையவிஶ்லேஷத்தில் நீபிழைநினையாதேகொள்ளென்று ஆணையிட்டு ஆஜ்ஞாபித்து, உடையவர்திருவடிநிலைகளைத் தம்முடியிலேவைத்துக்கொண்டு திருநாட்டுக்கெழுந்தருளினார்.

அநந்தரம், பொன்னாய்ச்சியாரும், க்லேசியாமல்தரித்திருந்து, திருவாசலைத்திருவலகிட்டு, தெளிநீர்தெளித்து, திருப்பிண்டியிட்டு, திருக்காவணமிட்டுவித்துநிற்க; ஸ்ரீவைஷ்ணவர்கள், உடையவர் நீராடுந்துறையிலே திருமஞ்சநமெடுத்துக்கொண்டுவந்து, த்வயாநுசந்தாநத்துடன் நீரா

ட்டி, திருநாமம் திருசூர்ணம்முதலாக ஸ்ரீவைஷ்ணவர்கள் அலங்காரங்களெல்லாம்செய்து, பெருமாள் சாத்திக்களைந்துவரவிட்டருளினதிருமாலை திருப்பரிவட்டமும் சாத்தி யலங்கரித்து ; தாமும் ஸர்வாபரணபூஷிதையாய்கஸ்தூரிம்ருகம்போலே யுலாவிநின்று, ஸ்ரீவைஷ்ணவர்களைத் தீர்த்தங்கொண்டு, சுருளமுதுதிருத்தி, திருமாளிகையிலுள்ள த்ரவ்யங்களடங்கலும்ஸமர்ப்பித்து, கரும்புகளுமெடுத்து, நூற்றந்தாதி இயலாக வநுஸந்தித்துவர பின்புதிருச்சூர்ணமிடித்து எல்லாருமெண்ணைசுண்ணம்கொண்டாடி, பிள்ளையுறங்காவில்லிதாஸருடைய விமலசரமவிக்ரஹத்தை திவ்ய விமாநத்திலே யெழுந்தருளப்பண்ணுவித்துக்கொண்டு, ஏகாங்கிகள் ஸ்ரீவைஷ்ணவர்கள் மற்றுமுள்ள முதலிகளும் மாறிமாறி ஸ்ரீபாதந்தாங்க எழுந்தருளுகிற விமாநமும் தூரமறைந்த வளவிலே ; பொன்னாச்சியாரும், சோகார்த்தையாய், "மாறிமாக்கடல்வளை வணர்க்கிளையவன் வரைபுரைதிருமார்வில் தாரினுசையில் போயினநெஞ்சமும் தாழ்ந்ததோர் துணைகாணேன் "ஊரும்துஞ்சியதுலகமும் துயின்றதுவொளியவன் விசும்பூரும், தேரும்போயிற்றுத் திசைகளுமறைந்தன செய்வதொன்றறியேனே" என்றுகையையெடுத்துக்கூப்பிட்டு, அழுதுகொண்டுவிழுந்து, பாகவதாவிஶ்லேஷாஸஹிஷ்ணுவாய் மூர்ச்சித்துக்கிடந்து, அப்போதே அங்கே திருநாட்டுக்கெழுந்தருள; முதலிகளும் அங்கே அவர்க்குத்திருச்சூர்ணமிடித்து, பிள்ளையுறங்காவில்லிதாஸருடன் திருப்பள்ளிபடுத்தார்களென்பர்கள். இவருக்குத்ததீயவிஶ்லேஷத்தில் அப்போதேஶரீரவிஶ்லேஷம்வரும்படியான ததீயப்ரேமசரமபாகம் முற்றிவளர்ந்தபடியிறேயிது.

இவர்தனியன், (ருகஉ) "ஜாகரூகதநுஷ்பாணிம் பாணௌகட்கஸமந்விதம் - ராமாநுஜஸ்பர்ஶவேதீமாஶ்ரிதார்த்தப்ரகாஶகம் - பாகிநேயத்வயயுதம் பாஷ்யகாரபரம்வஹம் - ரங்கேஶமங்களக்ருதம் தநுர்தாஸமஹம்பஜே" (జాగరూకధనుష్పాణిం పాణౌఖడ్గసమన్వితం। రామానుజస్పర్శవేదీమాశ్రితార్థప్రకాశకం। భాగినేయంద్వయయుతం భాష్యకారభరంవహం। రంగేశమంగళకృతం ధనుర్దాసమహంభజే.)

நம்பிதிருவழுதிவளநாடுதாஸர், திருநாட்டுக்கெழுந்தருளுகிற சமயத்திலே, தம்ஸ்ரீபாதத்திலே சேவித்திருந்தவர் ஒருவைஷ்ணவர் அழ, அதற்கு நம்பி கெடுவாய் செத்துப்போகிறநான் போகாநின்றேன், ஸ்ரீபராசரபட்டர்வாசிக்கக் கேட்கவிருக்கிற நீயோ அழுகிறுயென்றருளிச்செய்தாரிறே. அதாவது சதாசார்யவ்யாக்யானவசனத்வநிஸ்வராஸ்யம் அபவர்க்கபலப்ராப்தியிலும் அருசிபிறப்பிக்குமென்றபடி.

பிள்ளைதிருவழுதி வளநாடுதாஸர் தம் அந்த்யமதசையிலேக்லேசிக்க, சுற்றிலுமிருந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் அந்யோந்யம் முகம்பார்த்தார்

கள், இவர்கள் அபிப்ராயத்தைத் தம்திருவுள்ளத்திலே கோலியருளி, வாரீர்கோள் முதலிகாள்; சம்சாரிகள் இழவுக்கு நொந்தோம் காணுங்கோள்; அவர்களுக்கும் நமக்கும் அல்பமாய்த்து வாசியுள்ளது: எங்ஙனே யென்னில்; நாமிடுவதொரு தண்டம், பண்ணுவதொரு ப்ரபத்தி, இழப்பதொரு ஹேயமான இஸ்ஸம்ஸாரத்தை, பெறுவதொரு விலக்ஷணமான பரமபதத்தை. இத்தையறியாதே அதஃபதிக்கிறார்களே யென்றுக்லேசமாய்த்துக் காணுங்கோளென்ன; முதலிகளும் க்ருதார்த்தரானார்கள். அதாவது பரதுஃகா ஸஹிஷ்ணுத்வமும் பரஸம்ருத்யைகப்ரயோஜநத்வமும் ஸ்ரீவைஷ்ணவனுக்கு உண்டாக வேணுமென்று கருத்து.

ஜீயர் திருவடிகளே சரணம்.

———:o:———

(எ)

ஸ்ரீ எம்பார் ப்ரபாவம்.

எம்பார், உடையவர் திருநாட்டுக்கெழுந்தருளும்போது திருவடிகளைப்பிடித்துக்கொண்டு, நாயிந்தே பெரியதிருமலை நம்பி சுத்திகையிலே ரஜதபுத்தி பண்ணுவாரைப் போலே அபரமாத்மவிஷயே ப்ரமாத்மபுத்தி பண்ணி விபரீதஜ்ஞாநநிஷ்டனாய் காளஹஸ்த்தியாகிற கடுங்காட்டிலே யிருந்த என்னைப் 'போதரேயென்று சொல்லி புந்தியில்புகுந்து தன்பால ... தரம்பெருகும்படி' திருத்தி, மாயப்பற்றறுத்து, அடியேனுடைய துர்வா... சநாச்சேதநத்தைப்பண்ணியருளி, பொருளல்லாத வென்னைப்பொருளா... க்கி அடிமை கொண்டருளி, "தாயாய் தந்தையாய் மக்களாய்மற்றுமாய் முற்றுமாய்" என்கிறபடியே சர்வ விதபந்துவும் த்ருஷ்டாத்ருஷ்டங்... ளிரண்டும் தேவரீர் திருவடிகளென்று காட்டிக்கொடுத்தருளினார். தேவரீரும் அப்படியே அடியேன் நம்பி திருவடிகளை யகன்ற இழவெல்லா... தீர சர்வவிதோத் காரக பந்துவு மாய்நிற்க; தேவரீர் திருவடிகளே ப்ராப்யமும் ப்ராபகமுமென்றத்யவஸித்திருந்த அடியேன் (ருகரு) "நச ஸீதாத்வயாஹீநா நசாஹமபிராகவ - முஹூர்த்தமபிஜீவாவோ ஜலாந்மத்ஸ்யாவிவோத்த்ருதௌ" (న చ సీతా త్వయా హీనా న చాహమపి రాఘవ । ము హూర్తమపి జీవావో జలాన్మత్స్యావివోద్ధృతౌ) என்கிறபடியே என்னுயிர்நிலையா... தேவரீர் திருவடிகளை அகன்று ஒருக்ஷணமாத்திரம் தரிக்கமாட்டேன் தேஹி விட்டுப்போனால் தேஹம் நிற்குமோ; "நிழலுமடிதாருமானோ... என்கிறபடியே ஸ்ரீபாதச்சாயாபந்நனை அடியேன் எங்ஙனே தரிக்...

ஸ்ரீ எம்பார்.

ருப்பேன் என்று திருவடிகளிலே போர ஆர்த்தியோடே விழுந்தெழுந்திராமல்கிடக்க; உடையவரும் எம்பாரைக் குளிரநோக்கியருளி, நாம் நம்பி திருக்கையாலே உம்மை உதகபூர்வகமாக பரிக்ரஹித்த பின்பு நமக்கும்உம்மைப்பிரியக்கூடுமோ; நம்முடைய வைகுண்டநாதனும்அப்படியே செய்தருளுகிறான் பதறாதேகொள்ளுமென்று எம்பாரைவாரியெடுத்தணைத்துக்கொண்டு, தம்பொன்னங்கழற்றாமரைப் பூக்களாலே அவரைமுடிசூட்டிக்கவித்தருளி, திருநாட்டுக்கெழுந்தருள; எம்பாரும்தாயைப்பிரிந்த ஸ்தநந்ஜயப்ரஜையைப்போலே சிதிலாந்தக்கரணராய், பெரியவார்த்தியோடே உடையவர் ப்ரசாதித்தருளின அர்த்தவிசேஷங்களை பட்டர் முதலான முதலிகளுக்கும் ப்ரசாதித்துக்கொண்டு எழுந்தருளியிராநிற்க; ஒருநாளாக உடையவர்திருவடிகளைத்திருவுள்ளத்தே "நினைந்துநைந்துள் கரைந்துருகி, தாய்நாடுகன்றேபோல் எப்போது காணப்பெறுவேனென்கிறத்வரைவிஞ்சி, ஆசார்ய விஶ்லேஷம்பொறுக்கமாட்டாமல் "அவனை விட்டகன்றுயிராற்றகில்லா" என்கிறபடியே உடையவரையகன்றுஇருக்கமாட்டாத ஆற்றாமைகரைபுரண்டு மிகவும் விஞ்சி, பெரியபெருமாள் சந்நிதியிற்சென்று, நாயிந்தே அடியேன் உடையவர் திருவடிகளைறப்போக நினையாநின்றேன், தேவரீர் விடைப்ரசாதித்தருள வேணுமென்று விண்ணப்பஞ்செய்ய; பெருமாளும் அப்படியே செய்யுமென்று திருவுள்ளம் பற்றியருளி, எம்பார்க்குத் தீர்த்தப்ரசாதமும் ஸ்ரீசடகோபனையுமிரங்கி ப்ரசாதித்தருள; இவரும் "திருப்பொலிந்த சேவடியென்சென்னியின் மேல்பொறித்தாய்" என்று அங்கீகரித்தருளி, அமலனாதிப்பிரானிற்படியே பாதாதிகேசாந்தமாகஅநுபவித்தருளி "என்னமுதனைக்கண்டகண்கள் மற்றொன்றினைக்காணாவே" என்றுகொண்டு, அணியார்பொழில்சூழரங்கநகரப்பனைத் தம்கண்ணுள்ளும் நெஞ்சுள்ளும்நின்று நீங்காதபடி நிறைத்துக்கொண்டுபுறப்பட்டருளிஉடையவர்மடத்தேறவெழுந்தருளி 'யோநித்ய' (యోనిత్య) மென்றுதொடங்கி 'ததிதராணி த்ருணாய மேநே' (రామానుజస్యచరణౌశరణంప్రపద్యే) என்று அநுசந்தித்துக்கொண்டு தெண்டஞ்சமர்ப்பித்து மடமே எழுந்தருளி, தம்திருவாராதநமான அரங்கநகரப்பனைத் திருவடிவிளக்கி, பட்டரையழைத்தருளி, வாரீர் பட்டரே; ஆழ்வான்குமாரர்அகிலசாஸ்த்ரங்களையும் அதிகரித்தோம், நம்பெருமாள் நம்மைபுத்ரஸ்வீகாரம் பண்ணியருளினாரென்னும் மேன்மைகளைநினைத்து இறுமாந்திராதே, நம்மாணைஎம்பெருமானார்திருவடிகளே உபாயோபேயமென்று அத்யவஸிக்கிருமென்று அருளிச்செய்து; கணியனூர்சிறியாச்சான் சட்டம்பிள்ளைஜீயர் ஈச்சம்பாடி ஜீயர் முதலானார்க்கும் மற்றுமுள்ளமுதலிகளுக்கும் உடையவர் ப்ரசாதித்தருளின அர்த்தவிசேஷங்களையும் ப்ரசாதித்துக்கொண்டு தர்ஶனம் நிர்வஹித்துவாழ்ந்தருள வே

ளுமென்று தண்டஞ்சமர்ப்பித்து, பட்டர் முதலான முதலிகளைத்தீர்த்தங் கொண்டு, அமுதுசெய்யப்பண்ணி, அரங்கத்துறையுமின்றுணைவனே வழித்துணையாக நினைத்துக்கொண்டு, உடையவர் திருவடிகளை த்யாநித்துக் கொண்டு திருநாட்டுக்கெழுந்தருளினார். பட்டரும் ஆசார்யவிஶ்லேஷம் பொறுக்கமாட்டாதேமிகவும்சோகார்த்தராய்க்லேசிக்க; அங்கிருந்த முதலிகளும் வாரீர்பட்டரே; தேவரீர் இப்படிக்லேசிக்கலாமோவென்று தேற்றமிட, பட்டரும் தம்மிலும் தெளிந்துகொண்டு கோயில் பரிகரங்களுடனே பெருமாள் திருமாலை திருப்பரிவட்டம் முதலானவற்றையுங் கொண்டு, அனைத்துக்கொத்திலவர்களும்வர சிறியகோவிந்தப்பெருமாள் திருக்கையாலே ப்ரஹ்மமேதவிதியடங்கச்செய்வித்து, எம்பாருடைய விமலசரம விக்ரஹத்தைப்பீடயானத்திலே யெழுந்தருள்வித்துக்கொண்டுபோய், யதிஸம்ஸ்கார விதயுக்தப்ரகாரேண ஸம்ஸ்கரித்துக்கநித்துப் பள்ளிபடுத்தி, அவப்ருதங்கொண்டாடி, பெருக்கத் திருவத்யயநமும்நடத்தியருளினார்.

ஆசார்ய கைங்கர்யமே பரமப்ரயோஜநமாய்த்தன்னைப் பேணாமையும் ஆசார்யவிஷயத்தில் க்ரயவிக்ரயார்ஹராய் ஸ்வவ்யாபார மற்றிருந்தபடியும் ஆசார்யன்றிறத்தில் சாயாவத்பாரதந்த்ர்யமும் ஆசார்யனை யகன்றுதரியாத அநுஷ்டாநமும் இவர்க்கேயுள்ளதொன்றிறே.

இவர்தனியன் (௫௧௪) "ராமாநுஜபதச்சாயா கோவிந்தாஹ்வாநபாயிநீ - ததாயத்தஸ்வரூபா ஸா ஜீயாந்மத்விச்ரமஸ்தலீ" (రామానుజపదచ్ఛాయా గోవిందాహ్వానపాయినీ । తదాయత్తస్వరూపా సా జీయాన్మద్విశ్రమస్థలీ) 'வம்பார்மலர்க்கணைகளைந்தாலுமேவுண்டு மாதர்விழியும் வாளிடமின்றிலவென்றுருகாலு மரிவையர்க்குத் தம்மோடொருசிறிது மேகாந்தமில்லையென்று தாமுறைத்த வெம்பாரடிசரணென்பாரடி சரணமெங்களுக்கே.'

(௫௧௫) "பட்டார்யாய ப்ரபத்திம் வ்யபதிசதி வரம் த்ராவிடாம்நாயமாலேரர்த்தம் - ஸ்ரீபாஷ்யமப்யாநபி ச யதிவராதேசதோ ந்யாஸ்ய ஹாஸ்யாத் - யச்சோக்தோ தேசிகேந்த்ரோ யதிபதிசரணச்சாயநாமார்யவர்யஸ்தம் - கோவிந்தார்யம் [illegible]" (భట్టార్యాయ ప్రపత్తిం వ్యపదిశతి వరం ద్రావిడామ్నాయమాలేరర్థం । శ్రీభాష్యమప్యానపి చ యతివరాదేశతో న్యాస్య హాస్యాత్ । యచ్చోక్తో దేశికేంద్రో యతిపతిచరణచ్ఛాయనామార్యవర్యస్తం

గోవిందార్య మస్మత్కులగురుమమితజ్ఞానవైరాగ్యమీడే) (௫௧௬) "ஹ்ருதி நாராயணம் பச்யந் நாப்யகச்சத்ரஹஸ்ஸதா - யஸ்ஸதாரரதோபி ஸந்தம் தமுபாஸ்மஹே" (హృదినారాయణం పశ్యన్ నాప్యగచ్ఛద్రహస్సదా । యస్సదారరతో చాపి గోష్ఠం దంతముపాస్మహే.)

ஸ்ரீஎம்பார் திருவடிகளே சரணம்.

ஜீயர்திருவடிகளே சரணம்.

ஆழ்வார்க்கும் உடையவர்க்கும் தீர்த்ததிவசநிர்ணயம் சொல்லாதொழிவானென்னென்னில்; இத்யாபி அகிலாத்மோத்தாரணார்த்தமாக அர்ச்சாவிக்ரஹங்களை அங்கீகரித்து இங்கே யெழுந்தருளி யிருக்கிறார்களாகையாலே, அன்றிக்கே அவர்கள் இங்கிலும் கால்வாங்கிப்போகில் ஆத்மகோடிகளுக்கு ஈடேறவழியில்லையிறே இத்தைநினைத்திறே நம்பூர்வாசார்யகள்தீர்த்தங்கொண்டாடித்திருவிபாலநம்பண்ணுதொழிகிறதும (௫௧௭) "ஆர்த்ராயாமுதிதோ மஹாபூரிகதோ ஹஸ்த்யத்ரிமஸ்த்ராச்ரய: - ஸ்ரீரங்கச்ரியமாத்யசிஷ்யமஹிதோ வேதாந்தபாஷ்யம் வதந் - ஆதிச்ய திக்விஜயம் விதாய ஸஹிதைர் த்விஸ்ஸப்தபஞ்சாசதை: - பாதி ஸ்ரீயதுபூதரே யதிவரஸ்ஸம்பத்குமாரம் பஜந்" (ఆర్ద్రాయాముదితో మహాభూరిగతో హస్త్యద్రిమస్త్రాశ్రయః । శ్రీరంగశ్రియమాత్యశిష్యమహితో వేదాంతభాష్యం వదన్ । ప్రాదిగ్విజయం విధాయసహితైర్ద్విస్సప్తపంచాశతైః । భాతిశ్రీయదుభూధరే యతివరస్సంపత్కుమారం భజన్) என்று சித்திரையில்செய்ய திருவாதிரையிலே ஸ்ரீபெரும்பூதூரிலே அகிலாத்மோத் தாரணார்த்தமாக வந்தவதரித்து அகிலசாஸ்தரங்களையும் அப்யஸித்து பெருமாள்கோயிலிலே பேரருளாளராலே பெரியநம்பியை சேவித்து பஞ்சசம்ஸ்காரங்களையும்பெற்று 'மாற்பால்மனஞ்சுழிப்ப மங்கையர் தோள்கைவிட்டு' என்கிறபடியே ஸர்வஸங்கபரித்யாக பூர்வகமாக வரதர் ஆச்ரமப்ராப்திபண்ணியருளி ஸ்ரீரங்கைச்வர்யத்தைப்பெற்று ஸ்ரீபாஷ்யம அருளிச்செய்து திக்விஜயம் பண்ணி திருவரங்கர் பரத்வத்தை நிலைநிறுத்தியருளி புழுவின்வ்யாஜேந எழுந்தருளி திருநாராயணர்க்கு அனைத்தழகும் கண்டருளப்பண்ணி செல்வப்பிள்ளையைப் பெற்றெடுத்து வந்துப்ரதிஷ்டிப்பதித்தருளி அன்பத்திருவர்க்காக அர்ச்சாவதாரரூபவிக்ரஹத்தை யங்கீகரித்து அதிலே

தம்ஸர்வஸக்தியையும் ப்ரதிஷ்டிப்பித்துக்கொண்டு அவர்களாலே சேவ்யமாநராய் செம்பொற்கழலடி திருவுருச்செல்வப்பிள்ளையை மங்களாசாஸநஞ்செய்துகொண்டு காலதத்வமுள்ளதனையும இங்கே சுப்ரதிஷ்டிதராய் விளங்காநின்று கொண்டுவாழ்ந்தருளினாராய்த்து.

ஜீயர்திருவடிகளே சரணம்.

:o:

(அ)

ஸ்ரீ பட்டர்ப்ரபாவம்.

அநந்தரம் பட்டர்ஸ்ரீபாதத்துமுதலிகளுடன்கூடப்பெருங்கூட்டத்திருவோலக்கமாக வெழுந்தருளியிருந்து தர்ஸநம் நிர்வஹித்தருளுகிற காலத்திலே ஒருதீர்த்தவாரிப்ராஹ்மணன்வந்துபட்டரை சேவித்து இவருடைய வேதாந்தார்த்த நிர்ணயசாதுர்யத்தையும் கோஷ்டியில்வைபவத்தையும்கண்டு நின்றுபட்டரே; மேல்நாட்டிலேவேதாந்தியென்றொரு பெரிய வித்வான் இருக்கிறான் அவனுடையவித்யையும்கோஷ்டியும்போலே உமக்குமிருந்ததென்ன; பட்டரும்ப்ராஹ்மணன்சொன்னவார்த்தையைக் கேட்டருளி ஆமோ; அப்படியுமொரு வித்வானுண்டோவென்ன; உண்டென்று சொல்லி அந்தப்பிராஹ்மணன் இங்குநின்றும்புறப்பட்டு மேல்நாட்டுக்குப்போய் வேதாந்திகள் கோஷ்டியிலே நின்றுவேதாந்திகளே; உம்முடைய வித்யைக்கும்கோஷ்டிக்கும் ஸத்ருஸராயிருப்பாரொருவர் இரண்டாற்றுக்கு நடுவே பட்டரென்றெழுந்தருளி யிருக்கிறாரென்ன; வேதாந்திகளும் ப்ராஹ்மணனைப்பார்த்து; ஆமோ; பட்டர்நமக்கொத்த வித்வானோவென்ன; அவனும், பட்டர்உம்மிலும்அதிகரென்ன; அவனும் அவருக்கெந்த சாஸ்த்ரம்போருமென்ன; ப்ராஹ்மணனும், சப்த, தர்க்க பூர்வோத்தர மீமாம்ஸை தொடக்கமான சகலசாஸ்த்ரங்களும் பட்டருக்குப்போருமென்ன; வேதாந்திகளும், இந்தப்ராஹ்மணன் சொன்னதைக் கேட்டு, இவ்விபூதியிலே நமக்கொருவரும் எதிரில்லையென்று, ஷட்தர்ஸநத்திற்கும் ஆஸநமிட்டு, அதன்மேலே உயரவிருந்தோம், பட்டர் நம்மிலும் அதிகரென்று ப்ராஹ்மணன் சொன்னானென்று அன்று தொடங்கி வேதாந்தியும் திடுக்கிட்டிருந்தான்.

ஸ்ரீபட்டர்

அவ்வளவில் அந்தப்ராஹ்மணன் அங்குநின்றும்புறப்பட்டுக் கோயிலுக்குவந்து, பட்டர்சந்நிதியிலேநின்று, பட்டரே; உம்முடையவைபவமெல்லாம் வேதாந்திக்குச்சொன்னேனென்ன ; பட்டரும் அந்தப்ராஹ்மணனைக்குறித்து, அவரதற்கு என்னசொன்னாரென்ன ; அவரும், பட்டருக்கு எந்தசாஸ்த்ரம் போருமென்றாரென்ன ; பட்டரும் ப்ராஹ்மணா, அதற்கு நீ வேதாந்திகளுக்கு யென்னசொன்னாயென்ன; அதற்கு ப்ராஹ்மணனும், பட்டருக்கு ஷட்த தர்க்கங்களும் பூர்வோத்தர மீமாம்ஸைகளும் நன்றாகப்போருமென்று வேதாந்தியுடனே சொன்னேனென்ன ; பட்டரும், அந்தப்ராஹ்மணனைக்குறித்து, நீதீர்த்தவாஸியாய், தேசங்களெங்கும் நடையாடி எல்லாருடைய வித்யாமாஹாத்ம்யங்களெல்லாம் அறிந்து நாகரீகனாயிருக்கிற நீ, நமக்குப்போந்ததெல்லாமறிந்து, வேதாந்திக்குச் சொல்லாமல், கேவலம் வேதசாஸ்த்ரங்களே போருமென்று சொல்லிவிட்டாயே, தப்பச்சொன்னாயேயென்ன; ப்ராஹ்மணனும், பட்டரைக்குறித்து, இந்த லோகத்திலே நடையாடுகிற சாஸ்த்ரமொழிய உமக்கு மற்ற எதுபோருமென்று வேதாந்திக்குச் சொல்லுவதென்ன ; கெடுவாய், பட்டருக்கு, திருநெடுந்தாண்டகம்போருமென்று வேதாந்திக்குச் சொல்லாதிருந்தாயே யென்று வெறுத்து அருளிச்செய்துவிட : அவனும் பின்னையும் மேல்நாட்டுக்குப்போய், வேதாந்தியுடனே இச்செய்திகளைச்சொல்ல! வேதாந்தியும், திருநெடுந்தாண்டகமென்கிற சப்தத்திற்குத்தானே அர்த்தமாகிறதில்லை, அவரெப்படிப்பட்டவித்வானோவென்றுவிஸ்மயப்பட்டிருக்கச்செய்தே: பட்டரும், வேதாந்தியை, நம்முடைய தர்ஶனத்திலே அந்தர்ப்பூதராம்படி திருத்து மென்றுஉடையவர் நியமித்தருளினது அவஶ்யம் கர்த்தவ்யமென்று, தம் திருவுள்ளத்திலே கொண்டு, பெருமாள் சந்நிதியிலே சென்று, சேவித்து நின்று; நாயிந்தே, மேல்நாட்டிலேவேதாந்தியென்றொருபெரியவித்வானிருக்கிறான், அவனைத்திருத்தி, நம்தர்ஶநப்ரவர்த்தகனாம்படி பண்ணவேண்டுமென்று அங்கேற விடைகொள்வதாக இராநின்றேன், தேவரீர் அவனை நன்றாகத்திருத்தி ஸ்ரீராமாநுஜ சித்தாந்தத்திற்கு நிர்வாஹகனாம்படி திருவுள்ளம்பற்றியருளவேணுமென்று, பட்டர், பெருமாளுக்கு விண்ணப்பஞ்செய்ய ; பெருமாளும், அப்படியே யாகக்கடவன், த்வரித்துப்போய் வாருமென்று, திருவுள்ளமுகந்து, தீர்த்தம், திருமாலை, திருப்பரிவட்டத்துடனே தம்குமார

ரான வாசிதோன்ற அநேகம் திருவாபரணம் திருப்பரிவட்டம், ந்ருத்த கீதவாத்யங்களையும், தமக்குண்டான சகல பரிஜந பரிச்சதங்களையும் கூட்டிப்போமென்று விடைகொடுத்தருள; பட்டரும், புறப்பட்டு மேல் நாட்டிலே யெழுந்தருளி, காவேரிக்கரையிலே சிறுப்பத்தூர் அண்டை நின்றருள; அநந்தாழ்வானும், ஆழ்வான்குமாரர் பட்டர் எழுந்தருளினு ரென்று கேட்டு, சடக்கெனப் புறப்பட்டெழுந்தருளி, திருக்காவேரிக் கரையிலே பட்டரைக்கண்டுசேவித்து, அய்யோ, சுகுமாரமான நீர், காடு மலையுங்கடந்து இத்தனைதூரமெழுந்தருளலாமோ வென்ன; பட்டரும் திருவடிகளிலே விழுந்து அநந்தாழ்வானைச்சேவித்து, அநந்தாழ்வானைப் பார்த்து, உடையவர் அடியேனை மேல் நாட்டிலேபோய், வேதாந்தியைத் திருத்தி, நம்தர்சநப்ரவர்த்தகராம்படி பண்ணென்றுநியமித்தருளினுரே. நம்பெருமாளும் விடைப்ரசாதித்து அனுப்பியருளினுரென்று விண்ணப் பஞ்செய்ய; அநந்தாழ்வானும், எங்கள்குடிக்கரசே வாருமென்று பட்டரை எடுத்தணைத்துக்கொண்டுபோய் (ருகஅ) "யாவந்தோ ஜந்தவஸ்ஸந்தி யேஷாம் தேஷாம் ச வம்ஶஜே - தேஷாம் தேஷாம் யமபடா: ந கச்சந்தி கதாசந" (యావంతోజంతవస్సంతి యేషాంతేషాంచవంశజే। తేషాంతేషాంయమభటాః న గచ్ఛంతికదాచన) என்றுயதுஶைலயிலாசையாவர் சிலர்க்குண்டாயிருக்கும் அவர்கள் வசிக்கும்திசை, யமபடர்மறந்தும் வந்துபுகுரார்களென்றும் (ருககூ) "ஸஹஸ்ரஶிரஸோயம் ஸாக்ஷாச்சேஷாத்ரிர்கிரி: வைகுண்டாதபி யத்ராஹம் ரமயா ஸஹிதோ ரமே" (సహస్రశిరసోయంసాక్షాచ్ఛేషాద్రిర్గిరిః। వైకుంఠాదపియత్రాహంరమయాసహితోరమే) (ருஉ0) "வைகுண்டவாஸிநஸ்ஸர்வே ஶேஷஶேஷாஶநாதய: திர்யக்ஸ்தாவரரூபேண ஶ்ரயந்தே யதுபூதரே" (వైకుంఠవాసినస్సర్వే శేషశేషాశనాదయః। తిర్యక్స్థావరరూపేణాశ్రయంతేయదుభూధరే) என்று ஸஹஸ்ரபணுமண்டலமுடைய திருவநந்தாழ்வான் அவதாரமான யதுகிரிசிகரத்திலே சமஸ்தகல்யாண குணங்களும், குன்றத்திட்டவிளக்காய்க்கொண்டு, ப்ரகாசிக்கும்படி, பரமபதத்தையும் திருப்பாற்கடலையும் உபேக்ஷித்து "அரவிந்தப்பாவையுந் தானுமாய்," அல்லிமலர்மகள் போகமயக்குக்களாய் நிற்க, வைகுந்தநாட்டில் வாழும் சேனைமுதலியார், திருவநந்தாழ்வான், நித்யமுக்தரெல்லாரும் திருநாடு புல்லெழுந்துபோம்படி குடிவாங்கிவந்து, இஸ்ஸௌலப்யாநுபவார்த்தமாக, திர்யக்ஸ்தாவர ஜந்மங்களைபரிக்ரஹித்து, சுப்ரதிஷ்டி

காய் இங்கேவர்த்திக்கிறார்களென்னும்படி வைபவத்தையுடைய யாதவாத்ரியைக்கிட்டி, சேதநன் பாதபீடத்திலே ஏறும்பாவனைகொண்டு, செம்பொன்யதுகிரியேறி, திருக்கல்யாணஸரஸ்ஸைக்கிட்டி. (௫உக) "[illegible]" (కాలే కాలే చ సేవంతాం కల్యాణీతీర్థముద్భుతం । యత్రతీర్థే నిమజ్జంతః యతయస్సంశితవ్రతాః । న్యజ్జంతి భవాంభోధికల్లోలకలహాంతరాత్) (௫உஉ) "[illegible]" (పుష్కరేణ తథా ప్రీతిర్న గంగాయాం న యామునే) (యథా కల్యాణితీర్థస్వతీర్థే కల్యాణచేతసాం) (௫உ௩) "[illegible]" (తీర్థే తత్రామలే స్నాత్వా ముచ్యంతే సర్వకిల్బిషైః) (నాస్తికశ్చ కృతఘ్నశ్చ పరివాదపరోపిచ । పరప్రశంసానిష్ఠశ్చ స్వప్రశంసాపరాయణః । యజ్ఞవిఘ్నకరశ్చైవ వేదాధ్యయనదూషకః) (௫உ௪) "[illegible]" (పరదారానురక్తాశ్చ పాకభేదకరోపిచ । పరద్రవ్యాపహారీచ పాషండాగమతత్పరః । శూద్రాన్నభక్షకశ్చైవ శ్వాదీనాముపలాలకః) (௫உ௫) "[illegible]" (ధర్మవిక్రయశీలశ్చ శ్రౌతఘ్నో గ్రామయాజకః । దేవతాద్రవ్యహారీచ దర్పడంభసమన్వితః । గవాం క్లేశకరశ్చాపి బ్రాహ్మణానాం చ నిందకః । విష్ణుభక్తివిహీనశ్చ వృషలీపతిరేవచ) என்றிப்படிப்பட்டிருக்கிறவர்களுடைய பாபங்களைப்போக்கவல்ல, திருக்கல்யாணியிலே, நீராடி கேசவாதியான பன்னிருதிருநாமம் சாத்தியருளியெழுந்தருள ; அங்கிருந்த ஜம்பத்திருவர் முதலான அனைவரும் சடகோபன் முன்னிலையாய்வந் தெதிர்கொள்ள; பட்டரும், ஸாஷ்டாங்கமாகச் சேவித்து, திவ்யநகரிக்குள்ளே யெழுந்தருளி, சதுரான கோபுரத்தை அஞ்சலித்து, உள்ளேபுகுந்து, ஸ்ரீபலிபீடத்தருகே தாளுந்தடக்கையுங்கூப்பித் தண்டஞ்சமர்ப்பித்து, உடையவர் சந்நிதிக்கெழுந்தருளி, "யோநித்யம்" என்றுதொடங்கி, "ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்யே" என்றுசேவித்து ராமாநுஜ திவாகரரையுந் திருவடிதொழுது, வாழ்த்தி, தீர்த்தப்ரஸாதங்களும்பெற்று, அவர்புருஷகாரமாக ப்ரதக்ஷிணமாகவெழுந்தருளி, (௫உ௬) "[illegible]" (పశ్చాదపి విమానస్య ప్రాకారాంతరమధ్యతః । సుదర్శనం చ లక్ష్మీశ్చ వర్తేతే సర్వకామదా)

என்றுசொல்லப்பட்டதிருவாழியாழ்வானையும், யதுகிரி நாயகியாரையும்
ஸேவித்து, ஆநந்தமயமானதிவ்யவிமாநத்தையுந்தொழுது, உள்ளே எழு
ந்தருளி, சாஷ்டாங்கமாகச்சேவித்து, நம்மாழ்வார்திருமங்கையாழ்வாரை
யுஞ்சேவித்து, செல்வப்பிள்ளையையுந் திருவடிதொழுது, அவ்விக்ரஹ
ஸௌந்தர்யத்திலே ஆழ்ந்தங்கால்பட்டுநிற்க ; செல்வப்பிள்ளையும் உகந்து,
தீர்த்தம்,திருமாலை,சடகோபன், ப்ரசாதித்தருளப்பெற்று,புறப்பட்டு,சே
னைமுதலியாரையுந் திருவடிதொழுது,சண்டப்ரசண்டர்களானத்வாரபால
கர்களநுமதிகொண்டு உள்ளேசென்று, திருப்பல்லாண்டை யநுசந்தித்து,
திருநாராயணப்பெருமாளைபாதாதிகேசாந்தமாகச்சேவித்து அஞ்சலித்து
நிற்க ; திருநாரணரும், மிகவும் உகப்போடே, பட்டருக்குத் திருமாலை,
திருப்பரிவட்டம், தீர்த்தம், சடகோபனும் ப்ரஸாதித்து விடைகொடுத்
தருள; அநந்தாழ்வானுடனே புறப்பட்டு எழுந்தருளி, வேதாந்திகளிருக்
கிறவூர் ஆஸந்நமானவாறே, ஆழ்வான்குமாரர் பட்டர் வந்தார், அணிய
ரங்கன் குமாரர்பட்டர்வந்தார், வேதாந்தாசார்ய பட்டர்வந்தார், வேதி
யர்கள் தனித்தலைவர்வந்தார், ஸ்ரீபராஸர பட்டர் வந்தார், பரவாதிமத
ஹஸ்தி பஞ்சாநநர்வந்தார், என்று பலதிருச்சின்னம் பணிமாறுகை முத
லானபஹுசதுர்யகோஷத்துடனே, பெருந்திரளாக,மஹாஸம்ப்ரமத்துட
னேஸர்வாபரணபூஷிதராய், சத்ர, சாமர, தால வ்ருந்தாதிகள்சேவிக்க,
மணிப்பல்லக்கிலே எழுந்தருளாநிற்க ; அவ்வளவிலே, இரண்டு ப்ராஹ்
மணர்கள் எதிரேவந்து, பட்டரைப்பார்த்து, பட்டரே, நீர், அநேகம்ஸம்
ப்ரமத்துடனே வந்தீர், எங்கேற வெழுந்தருளுகிறீரென்று கேட்க, பட்
டரும்; நாம் ஸ்ரீரங்கபட்டர், வேதாந்திகளுடனே தர்க்கிக்கப போகி
றோமென்ன; அந்தப்ராஹ்மணர் சொன்னபடி :—நீர் இப்படி சம்ப்ரமத்
துடனே யெழுந்தருளினால், வேதாந்திகளை உமக்குக்காணப் போகாது
காணும், அவர்க்ருஹத்துக்குள்ளேயிருந்து விடுவர்; அவருடைய சிஷ்ய
ப்ரசிஷ்யர்கள்தலைவாசலிலேயிருந்து, நாலாறுமாசம், வந்தவித்வான்களு
டனே தர்க்கித்து, அவர்களைஉள்ளே புகுரவொட்டாதே புறம்பேதள்ளி
விடுவர்களென்ன; பட்டரும், அந்தப்ராஹ்மணரைப்பார்த்து, ஆனால்நாம்
நேரே சென்று அவன்க்ருஹத்திலேபுகுந்து, வேதாந்திகளைக்காணும்விர
கென்னென்றுகேட்டருள ; அவர்கள் சொன்னபடி :—வேதாந்திகள் த
லைவனுகையாலே, அவரநேக ப்ராஹ்மணர்க்கு ஸத்ர போஜந மிடு
வார், அந்தஸத்ரபுக்; ப்ராஹ்மணரோடேகலசி, அவர்கள் வேஷத்தையு
தரித்துக்கொண்டு, உள்ளே சென்றால் புஜிக்கவருகிற ப்ராஹ்மணரை நிரீ
க்ஷித்திருப்பர், அங்கே வேதாந்திகளைக்காணலாம்; ஆகையாலே உம்மு
டைய ஸம்ப்ரமங்களையெல்லாம் இங்கே நிறுத்தி, நீரொருவருமேஸத்ராசி
களுடனே கூட உள்ளே எழுந்தருளுமென்று சொல்லிப்போனார்கள்.

அநந்தரம், பட்டரும், இவர்கள் சொன்னது கார்யமாமென்று திருவுள்ளம்பற்றி, தம்முடைய அனைத்துப் பரிசரத்தையும் ஊருக்கு தூரத்திலே நிறுத்தி, தாம்சாத்தியிருந்த ஸர்வாபரணங்களையும் களைந்து வைத்து, ஒருஅரசிலைக்கல்லையும் குத்தியிடுக்கிக் கொண்டு, காவிவேஷ்டியுந்தரித்து, ஒருகமண்டலமும் கையில்தூக்கிக் கொண்டு, அநந்தரம் வாளும் தாமுமாய் ஸத்ராசிகளுடனேகூட, கார்ப்பண்ய வேஷத்துடனே உள்ளே எழுந்தருள; வேதாந்திகளும் ப்ராஹ்மணர்; புஜிக்கையைப் பார்த்துக்கொண்டு ஒருமண்டபத்திலே ஆசநமிட்டு, அதின்மேலே பெரியமதிப்புடனே யிராநிற்க; ப்ராஹ்மணர் எல்லாரும் ஸத்ரசாலையிலே புகுர, பட்டர் அங்கே யெழுந்தருளாமல், வேதாந்திகளைநோக்கி யெழுந்தருள; வேதாந்திகளும், பிள்ளாய், எங்கே வருகிறீரென்ன; பட்டரும, பிக்ஷைக்கு வருகிறேனென்ன; எல்லாரும் புஜிக்கிறவிடத்திலே ஸத்ரத்திலே போகீர்பிக்ஷைக்கென்ன; பட்டரும், எனக்குச்சோற்றுப்பிக்ஷையன்றென்ன; வேதாந்திகளும், இவர்சத்ராவஸி யானாலும் கிஞ்சித்வித்வானாகக்கூடுமென்று விசாரித்து "காபிக்ஷா" என்ன; பட்டரும், "தர்க்கபிக்ஷா" என்ன, வேதாந்திகள் இத்தைக்கேட்டு, திடுக்கிட்டு, தீர்த்தவாஸி ப்ராஹ்மணன்வந்து முன்னாள் நமக்குச் சொன்னபட்டர் அல்லது, நம்முடைய முன்னேவந்துநின்று, கூசாமல் தர்க்கபிக்ஷையென்று கேட்க வல்லவர்கள் இந்தலோகத்திலில்லை; ஆகையாலே யிந்தவேஷம் கார்ப்பண்யமாயிருந்ததேயாகிலும், இவர்பட்டராகவேணுமென்று நிஸ்சயித்து, நம்மைதர்க்கபிக்ஷை கேட்டீர், பட்டரோவென்ன; இவரும், ஆம் என்று கமண்டலம், கல்லை, காவிவேஷ்டி இவற்றையெல்லாம் சுருட்டியெறிந்து எழுந்தருளியிருந்து, மஹாவேகத்திலே உபந்யஸிக்க, அவ்வளவிலே, வேதாந்திகளும், பட்டர்வைபவம் கேட்டிருந்தும், இவர்வித்யாமாஹாத்ம்யங் காணவேணுமென்று இவருடனேதர்க்கிக்க; இப்படியொருவர்க்கொருவர் மத்தவாரணங்கள் பிணங்குமாபோலே தர்க்கிக்க; இங்ஙன் ஒன்பதுநாள் சென்றபின்பு, பத்தாம்நாள், பட்டர்பகுமுகமாக, மாயிஸித்தாந்தத்தை, ஶததாவாகக் கண்டித்து விஶிஷ்டாத்வைத பரமாகஉபந்யஸிக்க; இத்தைக்கண்டு, வேதாந்திகள் எழுந்திருந்து நின்று, நடுங்கி,வேறொன்றும்சொல்லாதே, மநுஷ்யமாத்ரமோவென்றிருந்தேன், நம்பெருமாளென்ன, நீரென்ன, பேதமில்லாமையாலே உறங்கும் பெருமாள் அவர், உலாவும்பெருமாள் நீரானபின்பு வாய்திறந்துஒருவார்த்தை சொல்லக்கூடாதென்று, அரைகுலையத்தலைகுலையவந்து பட்டர் திருவடிகளிலே அடைவுகெடவிழுந்துசேவித்து, அடியேனையிரங்கியருளவேணுமென்று மிகவும் அநுவர்த்திக்க; பட்டரும், தாமெழுந்தருளின கார்யம் அதிஶீக்ரமாகப் பலித்தவாறே, மிகவுந்திருவுள்ள முகந்தருளி, வேதாந்தி

களை அங்கீகரித்தருளி, அவருக்கு, (ருஉஎ) "அர்த்தபஞ்சகதத்த்வஜ்ஞா: பஞ்சஸம்ஸ்காரஸம்ஸ்க்ருதா: - ஆகாரத்ரயஸம்பந்நா மஹாபாகவதா: ஸ்ம்ருதா:" (అథ పంచకతత్త్వజ్ఞాః పంచసంస్కారసంస్కృతాః । ఆకారత్రయసంపన్నా మహాభాగవతాస్మృతాః) என்றுசொல்லப்பட்ட தாபஃபுண்ட்ராதி பஞ்சஸம்ஸ்காரங்களையும் ப்ரஸாதித்து, அர்த்தபஞ்சக ஜ்ஞாநத்தையுமுண்டாக்கி, ஆகாரத்ரய ஸம்பந்நரான மஹாபாகவதோத்தமராக்கி, விசேஷகடாக்ஷஞ்செய்தருளி; வேதாந்திகளே, நீர் ஸர்வஜ்ஞராயிருந்தீர், ஆகையாலே உமக்கு நாம் பரக்கச்சொல்லலாவதொன்றுமில்லை, விஶிஷ்டாத்வைதமே பொருள், நீர் மாயாவாதரீதியை ஸவாஸநமாகத்யஜித்து, ஶ்ரிய:பதியைப்பற்றி ஸ்ரீராமாநுஜஸித்தாந்தத்தையே நிர்வஹித்துப்போருமென்று அருளிச்செய்து, ஆழ்வார்களருளிச்செயல் நாலாயிரமும் ஓதும்படி நியமித்தருளி, இனி நாம்பெருமாளை சேவிக்கப்போகிறோமென்று உத்யோகித்துப் புறப்பட்டவளவிலே, ஊருக்குப்புறம்பேநிறுத்தின அனைத்துப்பரிகரமும் ஊரிலேவந்து அவர்கள் மஹாஸம்ப்ரமத்துடனே பட்டரைச்சூழ்ந்துசேவித்து, பூர்வம்போலே ஸர்வாபரண பூஷிதராக்கி, மணிப்பல்லக்கிலே யேற்றி, உபயசாமர, தால வ்ருந்தாதிகள் பணிமாற, மற்ற சகல வாத்யத்வநிமுழங்க, திருச்சின்னம் பணிமாறப் புறப்படக்கண்டு, வேதாந்திகள் பட்டருடைய பெருமையையும் ஸம்பத்தையும் நன்றாகக் கண்குளிர நோக்கி, இந்த ஸ்ரீமான் இத்தனை தூரம் காடும் மலையும் கட்டமுங்கடந்து எழுந்தருளி நித்ய ஸம்ஸாரிகளிலும் கடைகெட்டு, ம்ருஷாவாதியாயிருந்த அடியேனுடைய துர்க்கதியே பற்றாசாக அங்கீகரித்தருளுவதே என்று மிகவும் வித்தராய், கண்ணும் கண்ணீருமாய்க் கொண்டு பட்டர் திருவடிகளிலே விழுந்து கலேசித்து பெரியபெருமாள் தாமானதன்மையான ஸௌந்தர்யஸௌகுமார்யாதிகளை யுடையராய் எழுந்தருளின தேவரீர் அநாதிகாலம் தப்பித்திரிந்து அலம்புரிந்த நெடுந் தடக்கைக்கும் எட்டாதபடி கைகழிந்துபோன இவ்வாத்மா இன்றும் தப்பிப்போமென்று திருவுள்ளம் பற்றியருளி, இப்படி அதிகார்ப்பண்யமா யிருப்பதொரு வேஷத்தையும் தரித்துக் கொண்டு ஸத்ராசிகளுடனேகூட வெழுந்தருளி, அதி துர்மாநியான அடியேனை அங்கீகரித்தருளின அந்தவேஷத்தை நினைத்து, அடியேனுக்குப் பொறுக்கப்போகிறதில்லை யென்றுசொல்லி, வாய்விட்டழுதுகொண்டு, திருவடிகளிலேவிழுந்துகிடக்க; பட்டரும் வேதாந்திகளை முடிபிடித்தெடுத்து, நிறுத்தித்தேற்றி, நீர்இங்கேததீயாராதநைகபரராய் சுகமேயிருமென் றருளிச்செய்து, கோயிலைநோக்கி புறப்பட்டெழுந்தருளாநிற்க "மின்னுமாமுகில் மேவுதண்டிருவேங்கடம்" என்கிறபடியே, அம்புதா அம்பாயது ஶைலஶ்ருங்க நிலயனை நரஸிம்ஹ திவ்யவிமாநம் தூர

மே தோன்றக்கண்டு, அஞ்சலித்து, பின்னையும் திருநாராயணபுரம்வழியாக வெழுந்தருளி அநந்தாழ்வான் முன்னிலையாக நயனம், நாரஸிம்ஹம், சிட்டி, ஹரிப்ரஹ்மமஹாஸ்த்தாநம் ஸீதாரண்யம், ஜ்ஞாநாஸ்வர்த்தம் பஞ்ச பாகவதஸ்த்தலம், ஸ்வேதம் ருத்பரிதாந சிலைகளாகிற ஸத்த க்ஷேத்ரங்களையும், வேதபுஷ்கரிணி, தர்ப்பதீர்த்தம், பலாஸதீர்த்தம், பத்மதீர்த்தம், யாதவமஹாநதி, வைகுண்டகங்காதீர்த்தம், நாராயணதீர்த்தம், மைத்ரேயகிண்டதீர்த்தங்களையும் ஸேவித்து அவகாஹித்தது இவைதன் மத்யகதமான திருக்கல்யாணியிலே நீராடி, கேஸவாதி த்வாதசோர்த்வ புண்ட்ரதாராய், முன்புபோலே ஸேவாக்ரமம்தப்பாமல் சேவித்து, தீர்த்தப்ரசாதங்களும் பெற்று, புறப்பட்டு திருமலையிறங்கி யெழுந்தருளி, சிறுப்புத்தூரிலே அநந்தாழ்வானை நிறுத்தி, பயணகதியிலே த்வரித்து, கோயிலுக்கெழுந்தருளி, திருக்காவேரியிலே நீராடி, த்வாதசோர்த்வபுண்ட்ரராய் சகலபரிஜந பரிஸ்சதங்களோடே வேதாந்தாசார்ய பட்டர்வந்தார், வேதாந்திகளை வெல்லும் விரகர்வந்தாரென்று திருச்சின்னம்பணிமாற, அணியரங்கன்திருமுற்றத்தடியார் எதிர்கொள்ள எழுந்தருளி ஸேவாக்ரமம் தப்பாமல் ஸேவித்துக்கொண்டு உள்ளேபுகுந்து "மாயோனை மணத்தூணைப்பற்றிநின்று வாயாரவாழ்த்தி" நிற்க, பெருமாளும், பெரியப்ரீதியோடே திருமாலை திருப்பரிவட்டம் தீர்த்தம் சடகோபனும்ப்ரசாதித்து திருமாளிகையிலேபோகவிட்டருளினார். அநந்தரம், பட்டரும் தம்திருமாளிகையிலேயெழுந்தருளி, அங்கே ஆண்டாளை சேவித்திருந்து ஸ்ரீபாதத்து முதலிகளுக்கு தர்ஸநம்நிர்வஹித்துக்கொண் டெழுந்தருளியிருந்தார்.

அநந்தரம், இங்கே தென்கரையிலே, வேதாந்திகள் திருமாலடியார்களைப் பூசித்துக கொண்டிருக்கும் நாளிலே, இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் இளைத்து, வேதாந்திகள் திருமாளிகைக் கெழுந்தருளி க்ஷுத்து நலியாநின்றதென்று அமுதுசெய்யத்தேட; வேதாந்திகள்தேவிகள் இருவரும் உங்கள் வேதாந்திகள் தீர்த்தமாடப் போனார் இங்கொன்றுமில்லை நீங்களங்கேறப் போங்களென்று சொல்லி உதாசினம் பண்ணிவிட ; அந்தஸ்ரீவைஷ்ணவர்களும், வேதாந்திகள் பக்கல்சென்று இத்தை அறிவிக்க; அவருமதுகேட்டு, அநுதபித்து, தம்திருமாளிகையிலே எழுந்தருளி, தேவிகளிருவரையுஞ்சீறி, அப்போதேபுறப்பட்டுக் கோயிலுக் கெழுந்தருளத் தேட; அங்குள்ளவர்கள் வேதாந்திகளைப் போகவொண்ணாதென்று தகைய; இவரும் தமக்குநிரவதிக தநமுண்டா கையாலே அத்தைமூன்றம்ஸமாகப்பிரித்து, இரண்டு தேவிகளுக்கும் இரண்டம்ஸம்கொடுத்து மற்றையம்ஸத்தை ஸ்வாசார்யர்க்காக எடுப்பித்துக் கொண்டு, அத்தேசத்தையும் ஸவாஸநமாகவிட்டு, இல்லறமில்லேலல் துறவறமில்லென்று அதி ஸத்காரயோக்யை யில்லாதபார்யை த்யஜித்து ஸன்யஸிக்கக் கட

வனென்று ஶாஸ்த்ரம் உண்டாகையாலே ஸர்வஸங்கபரித்யாக பூர்வகமாக அங்கே ஸன்யஸித்தருளி, கோயிலே நோக்கியெழுந்தருளாநிற்கச்செய்தே, திருக்காவேரிக்கரையிலே அநந்தாழ்வானைக்கண்டு ஸேவித்துநிற்க; அநந்தாழ்வானும் வாரீர் வேதாந்திகளே, ஸுகுமாரமான நீர் இங்ஙனேசெய்யலாமோ, வேர்த்தபோதுநீராடி, பசித்தபோது அமுதுசெய்து, பட்டர் திருவடிகளே சரணமென்றிருந்தால் உம்மை பரமபதத்திலும்தள்ளிவிடுவாருண்டோ, இனியென்; திருமந்த்ரத்திலே பிறந்து, த்வயத்திலேவளர்ந்து த்வயைகநிஷ்டராவீரென்று ஆஶீர்வதித்துப்போமென்றுவிட்டார். திருமந்த்ரத்திலே பிறக்கையாவது— திருமந்த்ரம் ஆத்மஸ்வரூப ப்ரதிபாதநபரமாகையாலே ஶேஷத்வ ஜ்ஞாநோத்பத்தியாகிற வாபிஜாத்யமுண்டாய் அதிலேஜநித்து; த்வயத்திலும்— ஶ்ரீமச் ஶப்தோக்தமான பெரியபிராட்டியார் புருஷகாரத்தாலே வர்த்தமாநார்த்தத்திலே வர்த்தித்து; உத்தரவாக்யோக்தங்களைப்பற்ற கைங்கர்யைக நிஷ்டராவீரென்று சொன்னபடி.

வேதாந்திகளும் பயணகதியிலேபோய் கோயிலிலே யெழுந்தருளி பட்டர் திருவடிகளிலே ஸேவித்து, தாம் கொண்டுவந்த தநத்தையும் தம்மதென்கிற வபிமாநத்தையும் விட்டு, பட்டருக்கு இஷ்ட விநியோகார்ஹமாம்படி அவர்திருவடிகளிலே ஸமர்ப்பித்து நிர்மலராய்நிற்க; அவ்வளவிலே, பட்டரும்மிகவும்உகந்தருளி நம்முடையஜீயர்வந்தாரென்று வாரியெடுத்துக் கட்டிக்கொண்டருளி ஒருக்ஷணமும் பிரியாமல் தம்முடைய ஸந்நிதியிலே வைத்துக்கொண்டு ஸர்வார்த்தங்களையும் ப்ரஸாதித்தருள; ஜீயரும்பட்டரையல்லது மற்றொருதெய்வமறியாதிருந்தார். பட்டரும் நம்முடைய ஜீயரென்றுசொல்லி அணைத்துக்கொண்ட வன்றுதொடங்கி வேதாந்திகளுக்கு நஞ்ஜீயரென்று திருநாமமுண்டாய்த்து.

நஞ்ஜீயர், பட்டரைப்பார்த்து சந்த்ரபுஷ்கரணிக்கரையிலே கண்வளர்ந்தருளுகிற இதற்கு திருவுள்ளக்கருத்து என்னென்று விண்ணப்பஞ்செய்ய; பட்டரும், "நாராயணா வோமணிவண்ணா நாகணையா" என்று கூப்பிட்டபின்பிறே அந்த மடுவின்கரையிலே எழுந்தருளினது; இங்கு கண்வளர்ந்தருளுகிறது நான் கூப்பிடுகிறதற்குமுன்னே என்னை எடுக்கைக்காக, நான் அகப்பட்ட பொய்கையிலே யொக்கவேவந்து கண்வளர்ந்தருளுகிறுநித்தனே; நீர் இவ்வர்த்தம்கேட்டது உம்முடையவுசத்தாலேயன்றுகாணும், உம்மைக்கொண்டு யெம்பெருமான் என்னினைவை வெளியிட்டருளினார்; அதாவது பகவதவதாரங்களடங்க ஸ்வார்த்தமாகவென்றிறே ஜ்ஞாநிகள் அநுஸந்திப்பதென்றபடி.

பட்டரை ஶ்ரீபாதந்தாங்குவதாக தோளிலே தண்டைவைக்கப்புக பட்டரும், உம்முடைய வேஷத்திற்கு இதுவிருத்தங்காணுமென்று அரு

ளிச்செய்ய; ஜீயரும், அக்குற்றைக்கடிமைக்கு ஏகாந்தமென்று இவ்வேஷத்தை பரிக்ரஹம்பண்ணினேன், அதுதானே இதற்கு விரோதமாகில் பழைய வெள்ளையை யுடுக்கிறேனென்று விண்ணப்பஞ்செய்தார்; அதாவது; ஆசார்யகைங்கர்யத்திற்கு அநுரூபமாகாத வர்ணாஶ்ரமதர்மமும் பரித்யாஜ்யமென்றபடி.

பட்டர் குடும்பஸஹிதமாக கூரகுலோத்தமனிலே எழுந்தருளியிருக்கிறவளவிலே, திருந்தவத்திலே அல்பமுபஹதியுண்டாக, திருநந்தவனம்செய்கிற வேகாங்கிகள் சிலவார்த்தைகள் சொன்னார்களென்று நஞ்ஜீயர் கேட்டருளி, ஏகாங்கிகளையழைத்து, நான் நம்பெருமாள் திருக்குழல் கற்றை சிக்குநாறுகிறதென்றோ, திருநந்தவனம்செய்கிறது, பட்டருடைய குடும்பத்திற்கு இஷ்டவினியோகார்ஹமாகவேணுமென்று திருநந்தவ்யாஜேனகோலினேனித்தனையன்றோவென்று, அவர்களை சீறிவிட்டருளினார்; இத்தால் ஆசார்யபரதந்த்ரன் பகவத்கைங்கர்யம் பண்ணக்கோறுவது ஆசார்யகைங்கர்யார்த்தமாக வித்தனையென்று கருத்து.

அநந்தரம், பட்டர் திருவணையாடவெழுந்தருளுகிறபோது, பகலெல்லாம் வழிநடந்தருளின ஆயாசத்தாலே,விட்டதொருதூற்றடியிலே, நஞ்ஜீயர்மடியிலே திருமுடியை வைத்துக்கண்வளர்ந்தருள; ஓரிராவெல்லாம் துடைமாறுடுதல், அசக்குதல் செய்யாதேயிருந்தருளினார். ஆகையாலே ஆசார்யவிஷயத்தில் சைதந்யமூசசற்றுப்பநிக்கையாயடிமைசெய்கை ஶிஷ்யஸ்வரூபஸித்தியென்கிறது.

திருவணையாடி மீண்டெழுந்தருளுகிறபோது, சாயங்காலமானவாரோ; பாதரியென்கிற க்ராமத்திலே போய் ஒருவேடன் அகத்தே எழுந்தருளிப்புக்கவாரோ; அவனும், தானிருந்த ஆசனத்தையும் வாங்கிப்பொகட்டு, இவர்க்கொருகட்டிலே அமைத்துக்கொடுக்க, அதின்மேலேயெழுந்தருளியிருந்து, இவன் நம்முடைய வைபவமறிந்து செய்தானல்லன், க்யாதிபரனாய்ச் செய்தானல்லன், நம்மால் உபக்ருதனாய்ச்செய்தானல்லன், தன்னுடைய க்ருஹத்திலே புகுந்தோமென்று அபிமானமிறே இவனிவ்வளவு செய்யவேண்டித்து. ஈஶ்வரன் தந்நபிமானத்திலே யொதுங்கினாரை என்னினைத்திருக்கிறானோ என்றனுசந்தித்தருளி; பின்பு, அந்தக்ருஹமுடையவனைக்குறித்து, இங்குவிஶேஷமேதென்று கேட்டருள; அவனும், நாய்ந்தே, நான் காட்டிலே வேட்டைக்குப்போனேன், அங்கே ஒரு முசல் குட்டியைக்கண்டுபிடித்தேன், அதனுடையதாயானது என் முன்னே வந்து வழியிலே எதிரோ கும்பிட்டுக்கொண்டு கிடந்தது; அத்தைக்கண்டு எனக்கு தயைபிறந்து அதின்குட்டியை விட்டுப்போந்தேனென்றான்; அத்தைக்கேட்டு, இவரும் ஒருசேதனனுக்கில்லாததொன்று பா

மசேதனனுக்குள்ளதன்று, (௫உ௮) "மாமேகம் ஶரணம் வ்ரஜ" ([illegible]) என்றும் முசலுக் குபதேசித்தாரில்லை, (௫உ௯) "அபிப்ராணாநுபரித்யஜ்ய ரக்ஷிதவ்யஃ க்ருதாத்மநா" ([illegible]) என்றிவ்வேடனுக்கு உபதேசித்தாரில்லையிறே. அவ்பவைதானே சரணாகதிபலிப்பதே, இதொருப்ரமாணஸித்தியென்று, நஞ்ஜீயர்க்கருளிச்செய்துகோயிலுக்கெழுந்தருளி பூர்வம்போலே வ்யாக்யாநித்துக்கொண்டு எழுந்தருளியிருந்தார்.

அக்காலத்திலே, வீரஸுந்தரப்ரஹ்மராயன், பெருமாளுக்குத்திருமதிள் கட்டிவைக்கிற நேரிலே, பிள்ளைப்பிள்ளையாழ்வான்றிருமாளிகையகப்பட, அவர் திருமாளிகையையிடித்து திருமதிள்கட்டவேணுமென்று வீரஸுந்தரன் சொல்ல; பட்டரும், உன்றிருமதிளோ பெருமாளுக்கு ரக்ஷகம். அவர்மங்களாஶாஸநமிறே ரக்ஷகம்; ஆகையாலே உன்முன் திருமங்கையாழ்வார் தொண்டரடிப்பொடியாழ்வார் திருமாலைகட்டிவைக்கிற ஸ்தலத்தைத் தப்பவொதுங்க திருமதிள்கட்டவில்லையோ, இப்போதும் அப்படியே நீரும் அவர்திருமாளிகையைவிட்டு ஒதுங்க திருமதிள் கட்டிவையுமென்று சொல்ல; வீரஸுந்தரனும், ஆசார்யபுத்ரனென்று அஞ்சாதே, அவ்வார்த்தையை அதிக்ரமித்து, அவர்திருமாளிகையை யிடித்து, திருமதிள் கட்டிவைத்து, பட்டரை, தந்மூலமாகக் கோயிலிலேயிருக்கவு மொட்டாதே மிகவும் உபத்ரவிக்க; பட்டர்கோயில்நின்றும் புறப்பட்டு, திருக்கோட்டியூருக்கெழுந்தருளும்போது, வழியிலேயிளைத்தருளி, நஞ்ஜீயரிப்போது வருவதும் காணேனென்ன; நஞ்ஜீயரும் பின்னேவர; பட்டரும், ஜீய்யா ஜீய்யாவென்று வழைத்துக்கொண்டுவர; நஞ்ஜீயரும் கட்டித்திருப்போனகமும் தண்ணீரமுதும்கொண்டோடிவந்து. சடக்கென அமுது செய்யப்பண்ணிவைத்து, இளைப்பாற்றிக்கைவைக்க; பட்டரும், நஞ்ஜீயருக்கப்போதுமொரு விஶேஷகடாக்ஷம் செய்தருளினார். ஆகையாலே, அநுவர்த்தநவிஶேஷங்களாலே ஆசார்யாநுக்ரஹத்திற்கு பாத்ரமாகவேணுமிறே.

அநந்தரம், திருக்கோட்டியூரிலே யெழுந்தருளியிருந்து (௫௩௰) "[illegible]" ([illegible]) என்று சொல்லிக்கொண்டு, கோயிலையும், பெருமாளையும், விட்டுப்பிரிந்திருக்கையாலே மிகவும்க்லேசப்பட்டு "என்

றுகொலோகண்குளிரக்காணுநாளே” என்றுகொண்டு எழுந்தருளியிருக்கிறகாலத்திலே :

ஒரு ஸ்ரீவைஷ்ணவர், பட்டரைசேவித்து அடியேனுக்குத்திருவிருத்தத்திற்கு அர்த்தம் ஒருருப்ரசாதித் தருளவேணுமென்று மிகவும் அநுவர்த்திக்க . பட்டரும், நஞ்ஜீயரைப்பார்த்து ஜீயா, எனக்குக் கோயிலையும் பெருமாளையும் விட்டுப்பிரிந்த க்லேஶாதிஶயேந செவிகள் சீபாயாநின்றது, ஆகையாலே எனக்கு வாய்திறந்து ஒருவார்த்தைசொல்லப்போகிறதில்லை, நீர் திருவிருத்தத்திற்கு அர்த்தம் ஒருரு இந்த ஸ்ரீவைஷ்ணவர்க்குச்சொல்லென்று அவரை ஜீயர் ஸ்ரீபாதத்திலே காட்டிக்கொடுத்து இங்ஙனே நடத்தச்சொல்லுகிறநாளிலே; கடலைக் கலக்கினாற்போலே பட்டர் திருவுள்ளத்தைக் கலக்கி விரோதித்த வீரசுந்தரன் மரித்துப்போக; அவ்வளவிலே,பட்டர்திருத்தாயார்ஆண்டாளைசேவித்திருந்த ஸ்ரீவைஷ்ணவர், பட்டருடைய விரோதிபோனானென்று தங்கள் திருப்பரிவட்டங்களை முடித்து ஆகாஶத்திலே யெறிந்து, நின்றார் நின்றதிக்கே ஸந்தோஷித்துக் கூத்தாடி யாண்டாளுக்கறிவிக்க; அதுகேட்டு ஆண்டாள்செய்தபடி; திருமாளிகைக்குள்ளேபுகுந்து, திருக்காப்பைச்சாத்திச் சிக்கெனத்தாளிட்டு, வயிறுபிடித்து மிகவும் க்லேசித்து, வாய்விட்டு சைஸ்வரமாக அழத்தொடங்கினார்; அதுகேட்டு, ஸந்தோஷாதிஶயேந “தடுகுட்டகும்பிடுநட்டமிட்டுக் கூத்தாடுகிற முதலிகள், ஆண்டாளைக்குறித்து, பட்டரை யிங்கிருக்கவும் கூடவொட்டாமல் விரோதித்த பாபிஷ்டன் போனானென்று சந்தோஷியாதே க்லேசிப்பானேன்; பட்டருடையவிரோதிபோகவும், பட்டரும் முதலிகளும் இங்கேயெழுந்தருளவும் நாமெல்லோரும் கூடிவாழவும், உமக்கு அஸஹ்யமாயிருந்ததோவென்ன ; ஆண்டாளும் ஸ்ரீவைஷ்ணவர்களைக்குறித்து அருளிச்செய்தபடி; பிள்ளைகாள் நீங்களொன்றுமறிகிறிகோளில்லை, வீரசுந்தரன் நேரே ஆழ்வானுடைய ஶிஷ்யனாயிருந்து, ஆசார்ய புத்ரரான பட்டரை திண்டாட்டங்கண்டு அவர்திறத்திலே, மஹாபாரதத்தை தீரக்கழியப்பண்ணி, அறியாமல்செய்தே னித்தனை, பொறுத்தருளவேணும் என்று பட்டர்திருவடிகளிலே தலைசாய்ப்பதுஞ்செய்யாதே, இப்படிசெய்தோமே என்கிற அநுதாபமுமின்றியே செத்துப்போனான் ஆகையாலே அவன் ஶரீரம்விட்டபோதே யமபடர்கையிலே யகப்பட்டுக்கலங்க அடியுண்டு, மலங்கவிழுக்குமாகையாலே அத்ருஷ்டத்தை யிழந்தான். சிலநாளைக்கிருந்தானாகிலும் த்ருஷ்டஸுகத்தை யநுபவிக்கிறா னென்றிருந்தேன், அதுவுங்கூட விழந்தானாகாதே; ஆழ்வான்திருவடிகளில் சம்பந்தமுடையதொரு ஆத்மா இப்படிதட்டுப்பட்டுப்போவதே யென்றித்தைநினைத்து என்வயிறெரிகிறபடி உங்களொருவர்க்கும் தெரிகிறதில்லை யென்று ஆண்டாளருளிச்செய்தாள். குற்றம்

செய்தவர்கள்பக்கலிலும் அகப்பட ஹிதபரராய், தயாயுக்தசித்தராய்ப் போருவது ஆழ்வான் சம்பந்தமுடையவர்க்கே யுள்ளதொன்றிறே.

கோயிலிலும், பிள்ளைப்பிள்ளையாழ்வான் இவ்விசேஷங்கொண்டு திருக்கோட்டியூர்க்கெழுந்தருளியருளிச்செய்ய, பட்டரும்; கேட்டு, சந்துஷ்டராய் "நுங்கால்களென்றலை மேற்கெழுமீரோநுமரோடே" என்கிறபடியே, அவர்கழல்களை அடிக்கடி வணங்கி அவருடனேகூட, தக்ஷணமே ஸ்ரீகோஷ்டீபுறத்திலும் புறப்பட்டுக் கோயிலேற வெழுந்தருளி. பண்டுபோலே தர்ஸநநிர்வஹித்துக்கொண்டிருந்தார்.

அம்மணியாழ்வான், இருநூற்றுக்காதவழிநடந்து வந்து, பட்ட ஸ்ரீபாதத்திலே தெண்டன்சமர்ப்பித்து, அடியேனுக்குத்தஞ்சமாயிருப்பதொரு அர்த்தம் ப்ரசாதித்தருளவேணுமென்று ப்ரார்த்திக்க; பட்டரும், "நெடுமாற்கடிமைக்கு அர்த்தம் ப்ரஸாதித்தருளி, எம்பெருமானையறிகையாவது, அவனை அனைவயிறுபட்டிருக்கை, ததீயரையறிகையாவது அவரை முழுக்கவறிகையென்றருளிச்செய்தருள; அவரும்,பலபடி சொல்லியென், மறப்பேன், இவ்வளவேயமையுமென்று அவர் அது தன்னையே தாரகமாகப் பண்ணிக்கொண்டு எழுந்தருளினார்.

(௫௩௧) "ந்யக்ரோதபீஜவடவத் ப்ரணவே சப்தஜாலவத் | ஸ்திதே ததீயசேஷத்வே ஸர்வார்த்தாஸ் ஸம்பவந்தி ஹி" (న్యగ్రోధబీజవటవత్ప్రణవే శబ్దజాలవత్ । స్థితే తదీయశేషత్వే సర్వార్థాస్సమ్భవన్తిహి) என்கையாலே, ஸச்சிஷ்யன்; ஸதாசார்யனருளிச் செய்ததொரு தாத்பர்ய சரமார்த்தத்தையே தஞ்சமென்று விஸ்வஸிக்கவேணுமென்றபடி.

வீரசிகாமணிப் பல்லவராயன், பட்டரைக்குறித்து, பட்டரே, ராஜகார்யம்செய்கையாலே அடியேனுக்குபகவத்விஷய வைபவங்கேட்க விரகில்லை, எனக்குத் தஞ்சமாயிருப்பதொரு அர்த்தம் ப்ரஸாதித்தருளவேணுமென்று அபேக்ஷிக்க; பட்டரும், கடற்கரை வெளியைநினைத்திருமென்று அருளிச்செய்தார். அது தெரியாமையாலே, அவர் கையைப்பிசைந்துநிற்க; இவரும், கடற்கரையிலே ஒரு அமிர்தக்கடல்போலே பெருமாள் பெரிய வாநரஸேனையோடே விட்டிருக்க, அக்கரையிலே பிணம்தின்றிப் பையல் இராவணனிருக்க, எழுபதுகோடி மஹா கபிஸேனை யுணர்ந்து பெருமாளைக் குறித்துக்கொண்டு நோக்கிக்கொண்டு போர, அவர்கள் ப்ரக்ருதிமான்க ளாகையாலே கண்ணுறங்கி காலோய்ந்து கைசோர்ந்தவளவிலே, தாமும் தம் திருத்தம்பியாருமாக திருவரையில் கட்டினகச்சும்,சுருக்கியசீராவும் நாணியும்,முதுகிலே அம்பறுத்தூணியைக்கட்டி, கையிலே தரித்துப்பிடித்தும் பெருக்கின திருச்சார்ழும், தரித்த திருவில்லும் தாமுமாய், சில வண்டஜங்கள் முட்டையிட்டு, தன்

சிறகின்கீழே நோக்கியிட்டு வைக்குமாப்போலே எழுபதுவெள்ளம் ஸ்ரீப்லவங்ககுலபதி மஹாசேனையையும், நடையாடுமதிள்கள்போலே ரக்ஷித்துக்கொண்டு ஓரிராவெல்லாம் சாரிகையாய்வந்த சக்ரவர்த்தித்திருமகனுடைய கையும் வில்லுமே தஞ்சமென்று சுகமாயிருமென்றருளினார்.

தர்மஜ ரஹஸ்யமாவது, உறங்குகிறபோது நம்மை ரக்ஷிக்குமவன், உணர்ந்தால் நம்மை நோக்குமென்றிருக்கச் சொல்லவேண்டாவிறே என்றபடி,

ஒருநாள் த்ரிபுவன வீரதேவராயன், பட்டருடைய வைபவங்கண்டு, பட்டரே நீர் நம்பக்கல் ஒருநாள் வந்துபோகிரென்ன; பட்டரும், பெருமாள் அஞ்சலென்றகை மறுத்தாலும்அவ் வாசலொழிய வேறொருபோக்குண்டோ வென்றருளினார். அதாவது, (௫௩௨) "ஸக்ருதேவ" (யுத்த. ௧௮-௩௩) என்று ஸ்வாச்ரித ரக்ஷணதீக்ஷிதனை எம்பெருமானிருக்க, கதிபயக்ராமேசஸ கஸ்சித் புருஷாதமன் வாசலிலே துவளக் கடவோமல்லோமென்றபடி.

ஒருநாள் பட்டர், பெருமாள் திருக்கைத்தலத்திலே எழுந்தருளியிருக்கச்செய்தே திருவடித்தொழப்புக, திருமுன்னடிக்கிற வேத்ரபாணி, பட்டரைப்பாராமல் பருஷோக்திகளைச்சொல்ல; ஸ்ரீபாதத்தில் ஸ்ரீவைஷ்ணவர் அவரோடே எதிருத்தரம் சொல்லப்புக; பட்டரும், வாரீர் பிள்ளாய் கேளும், பெருமாளுக்கு ஏகாந்தத்திலே என்குற்றம் விண்ணப்பஞ்செய்ய, ஒருகாலம் பற்றுதாய் பெரியபெருமாளும் திருச்செவிசாத்தாமல் போந்தவித்தை, பெருமாளுக்கு அந்தரங்கபரிகரமாயிருப்பாரொருவர் நம் தோஷங்களை பெருமாளுக்கு ஏகாந்தத்திலே விண்ணப்பஞ்செய்ய, பெருமாளும் திருச்செவி சாத்தினதுகண்டால், நம்மைப்பார்க்கில் அத்தை விலக்கிறவித்தால் நீர்பெற்ற பேறென்னென்று அருளினார். இத்தால், பகவதேகாந்த ஸந்நிதியில் பரக்ருத ஸ்வதோஷாக்யாபநம் தத்வாத்ஸல்ய கார்யமாய், ததங்கீகார ஹேதுவாமென்று நினைக்கக்கடவனென்றபடி.

பட்டர் ஸ்ரீபாதத்திலே சம்பந்தமுடையராய் ஸோமாசியாயிருப்பாரொரு ஸ்ரீவைஷ்ணவர், பட்டரை, அடியேனுக்குத் திருவாராதநக்ரமம் ப்ரசாதித்தருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய; பட்டரும், உடையவர் நித்யத்தை ஒருசாமப்போது திருவாராதநம் பண்ணவேண்டும் க்ரமத்தை ப்ரசாதித்தருள; அவரும், அதுகொண்டு நெடுநாள் திருவாராதநம்பண்ணிப் போரச்செய்தே, ஒன்றிரண்டுநாள் பட்டர் திருவாராதநத்தைச் சேவித்திருந்தார்; அங்கு தமக்கு அருளிச்செய்தக்ரமம் ஒன்றும் கண்டிலர்; பட்டர் திருவாராதநம் செய்தருளினபடி; - நீராடி தூய

திருப்பரிவட்டம் சாத்தியருளி, திருமண்காப்புச் சாத்தியருளி, உள்ளே அமுதுசெய்யத் தளிகையை அமர்த்தினவளவிலே, தளிகை முன்னே எழுந்தருளியிருந்து, தெற்காழ்வாரை எழுந்தருள வைத்துக்கொண்டு வாருங்கோளென்ன, அவர்களும் அப்படியே எழுந்தருளவைத்துக்கொண்டுவந்து கைத்தலத்திலே பிடித்தவளவிலே, தமக்குப்படைத்த திருப்போனகத்தையும் சேர்த்து, தண்ணீரமுதையும் அமுதுசெய்வித் தருளி ப்ரஸாதப்பட்டாருளினார். அத்தைக்கண்டு ஸ்ரீவைஷ்ணவரும், பட்டரை தெண்டனிட்டு ஸவிநயராய் ஒரு விண்ணப்பமுண்டு சொல்லபயமாயிருக்கிறதென்றுசொல்ல; பட்டரும், அஞ்சாதே சொல்லுமென்ன; அந்த ஸ்ரீவைஷ்ணவரும், திருவாராதநப்படியை அடியேனுக்கிப்படி யருளிச்செய்தருளிற்று, தேவரீரிப்படிசெய் தருளுகிற இதற்கடி யென்னென்று விண்ணப்பஞ்செய்ய; பட்டரும், சகலஶாஸ்த்ரங்களையும் ஆராய்ந்து பார்த்தவிடத்து உமக்கு இப்படி யொழியச்சொல்லுகைக்கு ஒருவார்த்தை கண்டிலேன், என்னை நிரூபித்தவிடத்தில் அப்படி யொழியச்செய்கைக்கொருசொல்கண்டிலேன் என்றருளிச்செய்தருளினார். இத்தால் ஹிதைஷியான வாசார்யன், ஶிஷ்யனுக்கு ஞானபரிபாகாநுகுணமாகக் கொண்டிப்பசுவுக்குத் தடிகட்டி விடுவாரைப்போலே, சப்தாதிவிஷயங்களிலே மண்டித்திரிகிற கரணங்களை பகவத்விஷயப்ரவணமாம்படி திருத்துமென்னு மதுவும், ஆசார்யனுடைய யத்நமாய் பகவத்விஷயைக பரமான வநுஷ்டாநவிஶேஷத்திற்குக் கருத்து அவிசேஷஜ்ஞர்க்குத்தோற்றாதென்னு மதுவும் தோன்றாநின்றதிறே.

பட்டரை ஒருவன், தேவதாந்தரங்களை ஸ்ரீவைஷ்ணவர்கள் அநுவர்த்தியா தொழிவானென்னென்னில்; ப்ரமாண விரோதமுண்டாகிலன்றோ ஸந்தேஹமுள்ளது, இங்கே ஸந்தேஹமில்லை யென்றருளிச்செய்தார். அதெங்ஙனேயென்னில்;—ஸத்வப்ரசுரரை, ரஜஸ்தமஃப்ரசுரர் அநுவர்த்திக்குமதுபோக்கி, ஸத்வப்ரசுரர், ரஜஸ்தமஃப்ரசுரரை அநுவர்த்திக்கக்கடவதோ வென்றருளிச்செய்தார்; ஆகையாலே தேவதாலயதேவதாந்தரங்கள் குணதோஷங்க ளிரண்டாலும் ஒருகாலும் அநுவர்த்தநீயரல்லவென்றபடி.

பட்டர் அறியில் சம்மதியாரென்று, பட்டர் ஸ்ரீபாதத்தை வேறொரு ஸ்ரீவைஷ்ணவர் திருக்கையாலே விளக்குவித்து ஆண்டாள் ஸ்வீகரித்தாள்; இத்தை யொருநாள் ஒரு ஸ்ரீவைஷ்ணவர் கண்டு, நீ தாயாரயிருந்து இப்படி செய்யலாமோவென்ன; ஆண்டாளும், அதுவென்! பிற திருவாராதநத்தில், தீர்த்தமே ஸ்வீகார்யமாய், தானே ஏறியருளப்பண்ணிக்கொண்ட விக்ரஹத்தில் தீர்த்தம் ஸ்வீகார்யமன்றோவென்ன; அவரும் அதற்கடி யென்னென்று கேட்க; ஆண்டாளும் "கண்ணபுர

கைதொழும்பிள்ளையைப் பிள்ளையென்றெண்ணுவரோ, " என்றருளிச்செ
ய்தார். இத்தால் ஶிஷ்யபுத்ரர்களேயாகிலும் ஜ்ஞாநாதிகர் ததீயத்வேந
அநுவர்த்தநீயரென்றபடி.

பட்டர், தம்ஸ்ரீபாதத்திலே ஸேவித்திருப்பாரொரு ஸ்ரீவைஷ்ணவ
ரைப்பார்த்து, நீர்போய், அநந்தாழ்வான ஸ்ரீபாதத்திலேசென்று ஸ்ரீவை
ஷ்ணவலக்ஷண மிருக்கும்படி யெங்ஙனேயென்று கேட்டுவாருமென்று
அருளிச்செய்ய; அவரும் அநந்தாழ்வான்ஸந்நிதிக்கு எழுந்தருள, அன்று
ஸ்ரீவைஷ்ணவர்களுமங்கே அமுதுசெய்தருள; இவரும் இடம்போரா
மையாலே அமுது செய்தருளி எல்லாரு மெழுந்திருக்குமளவும் பேசா
திருக்க; பின்பு அநந்தாழ்வானும் இவரைக்கண்டு அமுதுசெய்தருளப்பெ
ற்றதில்லையே, நெடும்போதுண்டே, இளைப்போடே யிருக்கிறதேயென்று
போரநொந்து, சடக்கென அமுதுசெய்தருளப்பண்ணி, தாமும் தேவிக
ளுமாக ஸேவித்திருந்துள்ள திருப் போனகத்தை அமுதுசெய்தருளி எ
ழுந்தருளியிருந்து, ஸ்ரீவைஷ்ணவரைக்குறித்து, எங்குநின்றுமெழுந்தருளி
ற்றென்றுகேட்டருள; அவரும், பட்டர், அநந்தாழ்வான் ஸ்ரீபாதத்திலே
சென்று ஸ்ரீவைஷ்ணவலக்ஷணமிருக்கும்படி எங்ஙனென்று கேட்டு வரச்
சொல்லி வரவிட்டருளினாரென்று விண்ணப்பஞ்செய்ய; அநந்தாழ்வானு
ம், ஆகில் உம்மைப்போலே யிருக்குமென்றருளினார். இத்தால், தன்
ஜ்ஞாநாநுஷ்டாநாபிமாநாதி நிமித்தமாக ஸ்ரீவைஷ்ணவர்கள் திரளிலே
முற்பாட்டுக் காசைப்படாதே, பிற்பாட்டுக்கேயாசைப்பட்டு ததீயஶேஷ
த்வத்தைப் பேணுகை ஸ்ரீவைஷ்ணவலக்ஷணமென்று உத்தர மருளிச்செ
ய்துவிட்டாராய்த்து.

பின்பு, பட்டர் ஸ்ரீபாதத்திலே ஸேவித்திருப்பார் ஒரு ஸ்ரீவைஷ்
ணவர் ஸஹவாஸதோஷத்தாலே கலங்கி விஷயப்ராவண்யந் தலையெடுத்
து, பட்டர் ஸந்நிதியிற்சென்று, பட்டரைப்பார்த்து, வாரீர் பட்டரே, உம
க்கும் நமக்கும் பணியில்லை யென்றுசொல்ல, பட்டரும், வாராய் பிள்
ளாய், அது உன் நினைவாலேயன்றோ துர்ப்புத்திவந்தது, நீவிட்டாலும்
நாம்விடுவோமோ வென்றருளிச்செய்தருள, அவனும் அகன்றுபோகத்
தேட, இவரும் அவனை பலாத்கரித்துப்பிடித்து, உபாயேநஜ்ஞாநோப
தேச முகத்தாலே வருந்தித்திருத்தி ஸ்ரீபாதத்திற்கு அந்தரங்கராக்கிக்
கொண்டருள; அவரும், மஹாவிரக்தராய் நிலையிலே நின்றருளினார்.
ஆகையாலே, ஜ்ஞாநம் தலையெடுத்து அகன்றுபோவாரையுமுட்படவி
டாதே யத்நேநதிருத்திச் சேர்த்துக்கொள்ளுகையே ஸதாசார்யலக்ஷண
மென்கின்றது.

ஒருநாள், பட்டரும் ஸ்ரீவைஷ்ணவர்களுமாகப் பெருங்கூட்டத்
திருவோலக்கமாக வெழுந்தருளியிருந்து, பகவத்கல்யாணகுணாநு ஸந்தா

நடந்தவாஸிக்க; ஒருஸ்ரீவைஷ்ணவர், நாம்பண்ணின சுக்ருதபலமிருந்தபடியிப்படியிருக்கப்பெற்றதே என்ன; அவ்வளவில் சிறியாச்சான் எழுந்திருந்து நின்று, இது நெடுங்காலம் பெருமாள் ரக்ஷகரென்று ரக்ஷித்து வைத்து, இப்போதாக ஒரு சுக்ருத தேவருண்டாவதே யென்றருளினார். இத்தால் உஜ்ஜீவயிஷுவான ஈஶ்வரனிருக்க, ஆநுகூல்யங்களுக்கு ஸ்வக்ருதமடியென்கை ஸ்வரூபநாசமென்றபடி.

பட்டரோடே அமுதனார் வெறுத்தருளி, தாம் ஆழ்வானுடைய வயற்றிலே பிறந்தவர்; நானாழ்வானுடைய ஜ்ஞானச்செருக்கிலே பிறந்தவனன்றோ வென்றுசொல்லிவிட; அத்தைப் பட்டர் கேட்டருளி பாசுரம் அழகிது, ஆகிலும் இத்தைத் தாமேசொன்னாரோ வென்றருளிச்செய்தார். ஆகையாலே ஆசார்யாபிமாந ஜநிதஸ்வோத்கர்ஷ ரூபஸ்வவாக்யவ்யவஹ்ருதவசநம் ஸ்வரூபாநுசிதமென்றபடி.

பட்டர் ஒருநாள் பெருமாள்புறப்பட்டருளி ஒரு திருமண்டபத்திலே யெழுந்தருளியிருக்கச்செய்தே, திருவாலவட்டம் ஸேவித்திராநிற்க, ஸ்ரீபாதத்துமுதலிகள் ஸந்த்யாவந்தநத்திற்கு காலம் தப்புகிறதுஎன்று விண்ணப்பஞ்செய்ய, பட்டரும், "பகவத்கைங்கர்ய நிரதற்கு ஸந்த்யாவந்தந வைகல்யதோஷம் வாராது" என்றருளிச்செய்தருளினார். இதற்கு கருத்து, (ஞாந) "[illegible]" (என்று திருமுகப்பாசுர மிருக்கையாலே; ஆகையால் பகவத்கைங்கர்யத்தை யிழந்து நித்யகர்மாநுஷ்டாநார்த்தமாகப் போகை ஸ்வரூபவிருத்தமென்றபடி.

ஒருக்கால் பட்டருடனே அநேகம் வித்வான்கள் திரண்டுவந்து தர்க்கிக்க, பட்டர் அவர்களெல்லாரையும் வாய்மூடிவைத்து ஜயித்தருள, பின்னையும் அவர்கள் இவருடைய ஸர்வஜ்ஞதையை பரீக்ஷிப்போமென்று ஒருகுடத்திலே ஒருபாம்பையடக்கிக்கட்டி, இக்குடத்திலேயிருக்கும் வஸ்து வென்னென்றுகேட்க; பட்டரும், திருவெண்கொற்றக் குடையிருக்கிறதென்ன; அவர்களும்சிரித்து, குடத்துக்கட்டை விட்டவளவிலேபோகி புறப்பட, அவர்களும், இது கொற்றக்குடையோவென்ன; பட்டரும் அன்றோ, "சென்றாற்குடையாம்" என்றன்றோ ஆழ்வார்கள் அருளிச்செய்ததென்ன; அவர்களும் இவருடைய ஸர்வஜ்ஞதைக்குவிஸ்மயப்பட்டு க்ருதார்த்தராய்ப்போனார்கள்.

முன்பு உடையவர்காலத்திலே, ஆசார்யர்களெல்லாரும் உடையவர்க்கு மாநஸபுத்ரரான திருக்குருகைப் பிரான்பிள்ளானை அநுவர்த்தி

த்து, ஆழ்வார்களருளிச்செயல்களின் அரும்பொருள் தெரியும்படிக்கு தேவரீர் வ்யாக்யாநம் செய்தருளவேணுமென்று உடையவரை வேண்டிக்கொள்ளவேணுமென்று பிள்ளானுக்கு விண்ணப்பஞ்செய்ய; பிள்ளானும், உடையவர் பெருங்கூட்டத் திருவோலக்கமாக வெழுந்தருளியிருக்கச்செய்தே, ஸாஷ்டாங்கப்ரணாமம்பண்ணி, ஸவிநயராய் இரப்புடனே ஒரு விண்ணப்பம் உண்டென்றுசொல்ல; உடையவரும் என்னென்று கேட்டருள; பிள்ளானும், தேவரீர் ஸ்ரீபாஷ்யமருளிச்செய்து, திக்விஜயம்பண்ணி, தர்ஶநத்தை நிலைநிறுத்தியருளிற்று, இனி, திருவாய்மொழிமுதலான ஆழ்வார்ப்ரபந்தங்களுக்கும் வ்யாக்யாநம்செய்து ரக்ஷித்தருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய; உடையவரும், திருவுள்ளத்திலே விசாரித்தருளி, அப்படி யாம் அருளிச்செயல்களுக்கு வ்யாக்யாநம்பண்ணினால், மந்தமதிகளுக்கு இவ்வளவே இதற்கர்த்தமுள்ளதென்று தோற்றுமாகில் அபசாரமாம்; ஆழ்வார்கள் பாசுரங்களுக்கு அவ்வவருடைய புத்திக்கீடாக பஹுவாய்ச் சுரக்குமாகையாலே நாம் அருளிச்செயல்களுக்கு வரம்புகட்டினாற்போலேயாம். நீர் ஒருபடி திருவாய்மொழிக்குவ்யாக்யாநம்பண்ணும் என்று நியமித்தருளினார். திருக்குருகைப்பிரான் பிள்ளானும், எதிராஜர் அநுமதிகொண்டு ஸ்ரீவிஷ்ணுபுராண ப்ரக்ரியையாலே திருவாய்மொழிக்கு முந்துறமுன்னம் இனிதாக ஆறாயிரப்படி யுரைத்தருளினார்.

பட்டரும் நஞ்ஜீயருக்குப் பிள்ளான்படி ஆறாயிரமும் நன்றாக ப்ரஸாதித்தருளினார். நஞ்ஜீயரும் அத்தை நன்றாக அதிகரித்து, பட்டரை அநேகமாக வநுவர்த்தித்து, அவருடைய அநுமதிகொண்டு, திருவாய்மொழிக்கு ஒன்பதினாயிரப்படியாக ஒருவ்யாக்யாநம் பண்ணா நிற்கச்செய்தே; பட்டருக்கு இருபத்தெட்டாம் திருநக்ஷத்திரத்திலே கைசிக த்வாதஶியினன்று, பெருமாள்சந்நிதியிலே நின்று கைசிகபுராணம் வாசித்தருளாநிற்கச்செய்தே; என்றையும்போலன்றியே, ஒருபதத்திலேநின்று பஹுமுகமாக பாவார்த்தங்களை யருளிச்செய்கிறபடிகளைக்கண்டு, பெருமாள் திருவுள்ளம்பற்றியுகந்து; இவருக்குத் தாம் சாத்தியிருந்த திருமாலை திருப்பரிவட்டம் திருவாபரணமுதலானவைற்றையும், தாம் எழுந்தருளியிருக்கும் திவ்ய ஸிம்ஹாஸனத்தையும், பின்னையும் சிலபரிசிலாக விரங்கியருளி, மாரும் தோளும் பூரித்து திருமேனி தெரியாமல் த்வரை விஞ்சிமாறி இவர்க்கு மற்றெது கொடுப்போமென்று ஸந்தோஷாதிசயத்தாலே, பட்டரே, உமக்கு மேல்வீடு தந்தோம் என்றுபெருமாள் திருவுள்ளமாக; இவரும்மஹாப்ரஸாதமென்றங்கீகரித்தருள; திருவோலக்கமடைய கடல் குழம்பினாற்போலே, இப்படி திருவுள்ள மாவானேனென்று கலங்கி வயிறுபிடிக்க, பட்டரும், ஹர்ஷப்ரகர்ஷத்துடனே பெருமாள்

திருவடிகளிலே தண்டன் ஸமர்ப்பித்து, க்ருதாஞ்சலி புடராய்க்கொண்டு நின்று, நாயந்தே, தேவரீர் அர்ஜுநனைக்குறித்து (நுஉச) "மொக்ஷயிஷ்யாமி" (மோக்ஷயிஷ்யாமி) என்றருளிச்செய் தருளிற்றே, என்று, "கேட்பார் வார்த்தை கேட்டிருக்கையன்றிக்கே, தேவரீர் தாமே இப்படி திருவாய் மலர்ந்தருளப்பெற்ற விப்பேற்றுக்கடி; - உடையவர் தேவரீர் திருவடிகளிலே காட்டிக்கொடுத்த வுரமும், ஆழ்வானோ டுண்டானகுடல் துடக்கும், எம்பாருளுமிறே என்று விண்ணப்பஞ்செய்ய, திருவோலக்கத்திருந்த ஸ்ரீரங்கமறையோர், பட்டரைப்பார்த்து, பெருமாள் உகப்புத் தலைமன்னையிட்டு விசாரியாமல் ஒருவார்த்தை யருளிச் செய்தருளிறொன்று நீர் இங்ஙனுகந்து அங்கீகரிக்கிறதென்; உம்மைக்கொண்டு இவ்விபூதியைத் திருத்தவேணுமென்றன்றோ பெருமாள் திருவுள்ளம்பற்றி யிருக்கிறதென்ன; பட்டரும், ஆனால் இவ்விபூதியும், இவ்விபூதிமான்களும், பாக்யஹீநரானால் அடியேன் செய்வதென்; நாயுடலுக்கு நறுநெய்தொங்குமோ; என்னை இவ்விபூதி பொறுக்குமோ, இன்னம் சிறிது நாள் இங்கே அடிமைகொண்டருளில், பரமபதத்திற்கும் இங்கும்சுருளும்படியுங்கட்டேனோ. பெருமாள் தம்மை விஶேஷித்தங்கீகரித் தருளின ராஜகுலமாஹாத்மயத்தாலுண்டான செருக்குத்தலைமண்டையிட்டு,ஹ்ருஷ்டோக்தியைப்பண்ணி, நாயந்தே, ஆஸநபத்மத்திலே பொருந்தியிட்ட திருவடித்தாமரைகளும், அஞ்சலென்றகையும், கவித்தமுடியும், முறுவல்பூரித்த சிவந்த திருமுகமண்டலமும், திருநுதலில் கஸ்தூரி திருநாமமும் பரமபதத்தில் கண்டிலேனாகில் ஒருமூலை யடியே முறித்துக்கொண்டு குதித்து மீண்டுவருவேனென்று விண்ணப்பஞ்செய்து நம்பெருமாளையும், பெருமாளையும் ஆபாதசூடமநுபவித்து, கோயிலாழ்வாரையும் ஆழ்வாரையும்கண்ணாரஸேவித்துநிற்க; பெருமாள்தம்வரிசைகளெல்லாவற்றுடன் ப்ரஹ்மரதம்பண்ணுவித்து, கோயில் அனைத்துக்கொத்தும், அகில ஸ்ரீவைஷ்ணவர்களும், எல்லா வாசார்யர்களும், மற்றுமுள்ள விப்ரவர்க்கமும் சூழ்ந்து ஸேவித்துவர, திருமாளிகையிலே எழுந்தருளி ஆண்டாளை சேவித்துநிற்க; அவரும், "நலமந்தமில்லதோர் நாடுபுகுவீர்" என்று ஆசீர்வதிக்க; பட்டரும், "அம்மாவடியேன்வேண்டுவதீதே" என்றுஉகந்தருளி, திருப்பதியிலுள்ளவர்க ளடங்கத் திருமாளிகையிலே அமுதுசெய்தருளினபின்பு, பெருங்கூட்டமாக வெழுந்தருளியிருந்து, என்றையும்போலெ திருநெடுந்தாண்டகத்திற்கு அர்த்தமருளிச்செய்யாநிற்கச்செய்தே "அலம்புரிந்த நெடுந்தடக்கை" என்கிறபாட்டுக்கு அர்த்தமருளிச்செய்கிறபோது "அஞ்சிறைப்புள்தனிப்பாகன்" என்கிறவிடத்திலே "பறவையேறுபரம்புருடா நீயென்னைக்கைக்கொண்ட பின் பிறவியென்னும்கடலும்வற்றிப் பெரும்பதமாகின்றதால்" என்று இத்தை

யிட்டித் தநுசந்தித்தருளி, திருக்கண்களை மலரவிழித்து, திருமேனியைச் சிலிர்ப்பி, புன்முறுவல்செய்து, திருமுடியிலே அஞ்சலிசெய்துகொண்டு, அணையிலேசாய்ந்து நிற்கச்செய்தே, ப்ரஹ்மகபாலம்வெடித்துத்திருநாட்டுக்கெழுந்தருள; முதலிகளும், பட்டர் இளைத்து எழுந்தருளி யிருக்கிறு ரென்று உள்ளேசென்று ஆண்டாளுக்கறிவிக்க; ஆண்டாளும், சடக்கென வெழுந்தருளி, பட்டரை வாரியெடுத்து மார்பிலே அணைத்துக்கொண்டு, திருநாட்டுக் கெழுந்தருளின விஸ்மயத்தைக்கண்டு, திருவுள்ளங்கலங்குதல், திருமுகங்கன்றுதல், கண்ணீர்மல்குதல், செய்யாதே; பூவின் பரிமளமறிந்து ஆக்ராணித்து வண்டுக்ரஹிக்குமாபோலே பட்டருடைய ஸௌகுமார்யமறிந்து நலக்காமல் இவர் ஹ்ருத்கமலத்தை யலர்த்தி இவரைத் தான் தெய்வவாண்டான் தன்மைதோன்ற, ஸ்ரீவைகுண்டநாதன் கைக்கொண்டருள்வதே என்று, பெருமாளுக்கும் நாய்ச்சிமாருக்கும் பேரிழவும்பெரும் க்லேசமும் பெருவயிற் றெரிச்சலுமாய்ச்செல்லாநிற்க, பரமபதநிலயனுக்கும், அங்குள்ள நாய்ச்சிமாருக்கும் பெருவாழ்வும், பெருஞ்செல்வமும், பெருங்களிப்புமாய்ச் செல்லுகிறதே என்று, புத்ரஸோகலேஸ்பர்ஸமுமற்று, உடைமையையுடையவன் உடைமையைக் கைக்கொண்டால் நாம் வெறுக்கலாமோ என்று ஆண்டாளிருக்க; கடல் கலங்கினாற்போலே கோயிலிலுள்ளாரெல்லாரும் அடங்க ஸோகார்த்தராய்க்கிடந்து துடிக்க; வேதாந்திகளும் வேரற்றமரம்போலே கோஷித்துக்கொண்டுவிழுந்து ஸோகார்த்தராய் பஹுவாய் ப்ரலாபித்து, மழைக்கண்ணீர் மல்காநிற்க; பெருமாளும் நாய்ச்சிமாரும், திருமுகத்தின்பணி, காளாஞ்சி, திருவெண்சாமரம், திருவாலவட்டம், திருவெண்கொற்றக்குடை, வெண்முத்தின்கலசம், மேல்க்கட்டு, முத்துத்தாமம் தொடக்கமான தம்முடைய ஸர்வபரிகரபரிச்சதங்களடங்கக் கொடுத்துவிட்டு, நம்முடைய அவப்ருதோத்ஸவங் கொண்டாடுமாபோலே, பட்டருக்கும் அவப்ருதோத்ஸவங் கொண்டாடுங்கோளென்று திருவுள்ளமாய், திருமுகம்கன்றி, திருமுத்துதிர்த்து, பெருமாளும் நாய்ச்சிமாருங்கூட திருமஞ்சனமாடியருளி, இப்போது நமக்குச்செவ்வாய்வக்ரமாய்த்தென்று திருவுள்ளம்நொந்து, சுருளமுதும் அமுதுசெய்யாமல், நாம் புத்ரனையிழந்தோமேயென்று முசித்தெழுந்தருளியிருக்க; வேதாந்திமுதலான முதலிகளும், சீராமப்பிள்ளையைக்கொண்டு பட்டரை ப்ரஹ்மமேதத்தாலே ஸம்ஸ்கரித்துப் பள்ளிபடுத்தி, அவப்ருதங்கொண்டாடி, மீண்டு வரும்போது, நஞ்சீயர் முட்டாக்கிட்டு மூடிக்கொண்டு புறக்கடைவழியாலே தம்மடமேயெழுந்தருள; ஸ்ரீபாதத்துமுதலிகள் இதற்கடியென்னென்று விண்ணப்பஞ்செய்ய; நஞ்சீயரும், புதுக்க அறுத்தவிதவை தெருவிலே வெளிப்படவருமோ வென்றருளிச்செய்தருளினர். அதாவது, சதாசார்யன்பிறத்து ஸச்சிஷ்யன்,

பார்யாசமாநமாயிருக்கையே ஸ்வரூபசித்தியென்றுகருத்து. பின்னை ஆண்டாளும்முதலிகளும் திருமாளிகையிலே எழுந்தருளிப் புக்கவளவிலே, வெறுச்சான திருமாளிகையைக்கண்டு, பட்டர் திருத்தம்பியாரான சீராமப்பிள்ளை "நல்லதோர்தாமரைப்பொய்கைநாண்மலர்மேற்பனிசோர அல்லியும் தாதுமுதிர்ந்திட்டழ கழிந்தாலொத்ததாலோ இல்லம் வெறியோடித்தாலோ" என்று பாடிக்கொண்டு விழுந்து பெருமிடறுசெய்து ஆர்த்தராய்க் கூப்பிட்டு சோகிக்க; ஆண்டாளும், அவ்வார்த்தியைக்கண்டு, இவர் ஆழ்வான்றிருவயற்றிலே பிறக்கத்தக்கவரல்லரென்று முசித்து, முதலிகளைப் பார்த்தருளிச்செய்தது;—பிள்ளாய், பட்டர் பெற்றபேற்றுக்குப் பொறாமல் ஜ்ஞாதித்வங் கொண்டாடுகிறீரோ, நீர்இப்படி செய்கையில் நான் ஒருகைப்பிடியிலே யிருக்கிறேனென்ன; சீராமப்பிள்ளையும் சோகத்தைவிட்டு துணுக்கென வெழுந்திருந்து, ஆண்டாள் திருவடிகளிலே தெண்டன்ஸமர்ப்பித்து, அபசாரஞ்செய்தேன் பொறுத்தருளவேணுமென்று க்ஷமைபண்ணிக்கொண்டு, பட்டருக்குத் தீர்த்த திருவத்யயநம்செய்தருளி நிறைவேற்றினபின்பு, பெருமாளைத் திருவடித்தொழச்சென்றவளவிலே; பெருமாள் சீராமப்பிள்ளையை அருளப்பாடிட்டருளி, பட்டரையிழந்தோம் நாம்;உமக்கு நாமிருக்கிறோம்,முசியாதே கொள்ளுமென்று பட்டருடைய வரிசைகளடங்கக் கொடுத்தருளி, ப்ரஹ்மரதம் பண்ணுவித்துத்திருமாளிகையிலே போகவிட; சீராமப்பிள்ளையும் முசிப்பற்றுஹ்ருஷ்டராயிருந்து, தர்ஶநம் நிர்வஹித்துக்கொண் டெழுந்தருளியிருந்தார். இத்தால் மஞ்சள்நீர் குடிப்பித்துப் பெற்றுவளர்த்தவரோ தம் பெருவிலை கொடுக்கும்படியான தன்னேற்றமும், அர்த்தாநுஸந்தாநவேளையிலே ஹார்த்தன் சாக்ஷாத்கரித்து வழிநடக்கும்படியான தன்னேற்றமும்,பேரிழவிரண்டுக்கும் பெருமாள் தாமாய் அதில் கலக்கமற்ற தன்னேற்றமும்,ஆழ்வான் குடல்துடக்குடைய பட்டர்க்கேயுள்ளதொன்றிறே. பட்டர்வைபவம் முற்றச்சொல்லி முடியாதிறே. யதாமதியதாஶ்ருதமாகச்சொன்னதித்தனை.

பட்டர் திருநக்ஷத்ரம் வைகாசியில் அநூராதம். அவர்தனியன் (௫௩௫) "ஸ்ரீபராசரபட்டார்ய: ஸ்ரீரங்கேசபுரோஹித: - ஸ்ரீவத்ஸாங்கஸுத: ஸ்ரீமாந் ஸ்ரேயஸே மேஸ்து பூயஸே" (శ్రీపరాశరభట్టార్య శ్శ్రీరఙ్గేశపురోహితః । శ్రీవత్సాంకసుతశ్శ్రీమాన్ శ్రేయసే మేస్తు భూయసే.)

ஸ்ரீபட்டர் திருவடிகளேசரணம்.

ஜீயர்திருவடிகளேசரணம்.

ஸ்ரீ நஞ்சீயர்.

(௬)

ஸ்ரீ நஞ்சீயர்ப்ரபாவம்.

அநந்தரம் வேதாந்திகளான நஞ்சீயர், பட்டர் நல்லருள்சீர்கொண்டு திருவாய்மொழிக்கு ஒன்பதினாயிரமாக ஸ்ரீபாஷ்ய ப்ரக்ரியையாலே ஒருவ்யாக்யாநஞ்செய்து, முற்றப்பட்டோலைகொண்டு இத்தையொருஸம்புடத்திலே நன்றாகவெழுதித்தர வல்லாருண்டோவென்று ஜீயர் தம் ஸ்ரீபாதத்துமுதலிகளைக்கேட்க; அவர்களும், தென்கரையில்நின்றும் நம்பூர் வரதராஜனென்பாரொருவர் பலகாலுமிங்கேவருவர், அவர் நன்றாகவெழுதுவரென்று நஞ்சீயருக்கு விண்ணப்பஞ்செய்ய, ஜீயரும் வரதராஜனையழைத்து ஒரு க்ரந்தமெழுதிக்காட்டிக் காணீரென்ன; வரதராஜரும் எழுதிக்காட்ட; ஜீயருமத்தைத் திருக்கண்சாத்தியருளி எழுத்து முத்துப்போலே நன்றாயிருந்தது, ஆகிலும்இது திருவாய்மொழி வ்யாக்யாநமாகையாலே ஒரு விலக்ஷணனைக்கொண் டெழுதுவிக்கவேண்டுகையாலே திருவிலச்சினை திருநாமமாத்ரமுண்டான இவனைக்கொண்டு எப்படிஎழுதுவிப்பது, விசேஷஜ்ஞனைக்கொண்டே எழுதுவிக்கவேணுமிறேஎன்று ஸந்தேஹிக்க; வரதராஜரும், ஜீயர்திருவுள்ளத்தையறிந்து, அடியேனையும் தேவரீர் திருவுள்ளத்துக் குவரும்படியே திருத்திப் பணிகொள்ளலாகாதோவென்ன; அவ்வளவிலே ஜீயரும் திருவுள்ளமுகந்து அப்போதே வரதராஜனை யங்கீகரித்தருளி, (ருஙக) "ஸர்வா ஸம்பத: ஸர்வஸம்ஸாரபயத்ராதா: ஸர்வஜ்ஞா: ஸர்வமோக்ஷோபாயநிஷ்டா: - தேவர்ணானாம் ஸர்வஸ்த்ரீணாம் விஷ்ணுபக்தா: ஸர்வகாலப்ரபந்நா:" (సర్వా స్త్రీణాః సర్వసంసారభయత్రాతారః సర్వజ్ఞాః సర్వమోక్షోపాయనిష్ఠాః । తేవర్ణానాం సర్వస్త్రీణాం విష్ణుభక్తాః సర్వకాలప్రపన్నాః) என்றஸ்லோகத்தில்சொன்ன ப்ரபந்நநிஷ்டைகளெல்லாம் பூர்த்தியாம்படி விசேஷ கடாக்ஷம் செய்தருளி, பட்டோலையிலே எழுதினஒன்பதினாயிரமும் முற்றவோருரு வரதராஜனுக்கருளிச்செய்து காட்டியருளி, இப்படி தப்பாமல் எழுதித் தாருமென்று பட்டோலையை வரதராஜர்கையிலேகொடுத்தருள; அவருமத்தை வாங்கிக்கொண்டு அடியேன் ஊரிலேபோய்எழுதிக்கொண்டு வருகிறேனென்று விண்ணப்பஞ்செய்ய, ஜீயரும் அப்படியேசெய்யுமென்றுவிட; அநந்தரம், வரதராஜன் திருக்காவேரிக்குள்ளே எழுந்தருளின வளவிலே சிற்றிடம் நீஞ்சிப்போகவேண்டுகையாலே பட்டோலையைத் திருமுடியிலே கட்டிக்கொண்டு நீஞ்சிவரச்செய்தே, ஒருஅலைவந்தடித்து க்ரந்தம் ஆற்றுக்குள்ளேவிழுந்துபோக, வரதராஜரும் அக்கரையிலேயேறி பட்டோலை போய்

விட்டதே இனிநாம் என்செய்யக்கடவோமென்றுவிசாரித்து, ஒரு அலேகத்தையுண்டாக்கிக்கொண்டு நஞ்சீயர்ப்ரசாதித்தருளின வர்த்தமொன்றும் தப்பாமல் ஒன்பதிணாயிரமும் நன்றாகவெழுதியருளி. தாம் தமிழுக்குமிகவும் உத்தமவிரகராகையாலே ஒவ்வொருபாட்டுக்களிலே (ருஙஎ) "உக்தா ஸ-ந்விஶதீகாரயுக்தஸ-ாம்ப்ரஹாயநம் - உசிதம்விவரணம்க்ருதம் ஹிதாநாம் உநீஷிணாம்" (ఉక్తార్థవిశదీకారయుక్తార్థాన్తరబోధనం । మతంవివరణంతద్విద్ మహితానాంమనీషిణాం) என்கிறபடியே உசிதமானஸ்த்தலங்களுக்கு ப்ரஸங்நகம்பீர பதங்களுக்கு அர்த்தவிசேஷங்களும் எழுதிக் கொண்டுபோய் ஜீயர்திருக்கையிலேகொடுக்க, ஜீயரும் ஸ்ரீகோஶத்தை யவிழ்த்துப்பார்க்குமளவில் தாமருளிச்செய்த கட்டளையாயிருக்கச்செய்தேயும், ஶப்தங்களுக்கு மிகவும் அநுகுணமாக அநேகவிஶேஷார்த்தங்கள் பல விடங்களிலு மெழுதியிருக்கையாலே அத்தைக்கண்டு மிகவும் திருவுள்ளமுகந்தருளி வரதராஜனைப்பார்த்தருளி இது மிகவும்நன்றாயிராநின்றது, இதென்னென்றுகேட்க; அவரும்பயப்பட்டு ஒன்றும் விண்ணப்பஞ்செய்யாதிருக்க, ஜீயரும் நீர்பயப்படவேண்டாம் உண்மைசொல்லுமென்ன. வரதராஜரும், ஜீயா திருக்காவேரி நீச்சாகையாலே பட்டோலையை அடியேன் தலையிலேகட்டிக்கொண்டு நீந்தப்புக்கவாறே ஒரு அலைவந்தடிக்கையாலே அது ஆற்றிலேவிழுந்து அமிழ்ந்துபோயிற்று, இது தேவரீர் ஒருகுற்ற ப்ரசாதித்தருளின கட்டளையிலே எழுதினேனென்று விண்ணப்பஞ்செய்ய; நஞ்ஜீயரும் இவருடையவொரு புத்திவிஶேஷமிருந்தபடி என்றான் இவர்மஹாஸமர்த்தராயிருந்தார், நன்றாகவெழுதினொன்றுமிகவும் திருவுள்ளமுகந்தருளி வரதராஜனைவாரியெடுத்து அழுந்தக் கட்டிக்கொண்டு இவர் நம்முடையபிள்ளை திருக்கலிகன்றிதாஸரொன்று திருநாமஞ்சாற்றி, தம்முடைய ஸந்நிதியிலே அரைக்ஷணமும்பிரியாமல் கரதலாமலகமாகவைத்துக்கொண்டு, பிள்ளைக்கு சகலார்த்தங்களும் ப்ரஸாதித்தருளினார். அவரும்ஜீயரையல்லது தேவுமற்றறியேனென் றெழுந்தருளியிருந்தார். ஆகையால் ஜீயர்நம்முடையபிள்ளையென்றருளிச்செய்தவன்று துடங்கி வரதராஜர்க்கு "நம்பிள்ளை" என்று திருநாமமுண்டாயிற்று.

நஞ்சீயரை, நம்பிள்ளை இதரோபாயங்களுக்குப்ரமாணமும் பஹுளமாயநுஷ்டாதாக்களும் பஹுளமாயிருக்கஇதுக்குப்ரமாணமும்சுருங்கி, அநுஷ்டாதாக்களும்சுருங்கி ருசிசந்தோதேவதைகளும் அநுஸந்தேயங்களன்றியேயிருப்பானென்னென்றுகேட்க; ஜீயாருளிச்செய்தபடி;—இருவர்கூடியோராற்றிலே யிறங்கிப்போகாநின்றால், ஆற்றிலமிழ்ந்தவனை அமிழாதவன், கையைப்பிடித்துக் கரையேற்றுகைக்கொரு ப்ரமாணாபேக்ஷை வேணுமோ; ப்ரமாணாபேக்ஷையுண்டென்று நினைத்தீராகிலும் (ருஙஅ)

"𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑍁𑌰𑍍𑌵𑍈 𑌶𑌰𑌣𑌮𑌹𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 𑌤𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌨𑍍𑌯𑌾𑌸𑌮𑍇𑌷𑌾𑌂 𑌤𑌪𑌸𑌾𑌮𑌤𑌿𑌰𑌿𑌕𑍍𑌤𑌮𑌾𑌹𑍁𑌃" "𑌨𑍍𑌯𑌾𑌸 𑌇𑌤𑍍𑌯𑌾𑌹𑍁𑌰𑍍𑌮𑌨𑍀𑌷𑌿𑌣𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑌂 𑌨𑌿𑌕𑍍𑌷𑍇𑌪𑌾𑌪𑌰𑌪𑌰𑍍𑌯𑌾𑌯𑍋 𑌨𑍍𑌯𑌾𑌸𑌃 𑌪𑌞𑍍𑌚𑌾𑌙𑍍𑌗𑌸𑌂𑌯𑍁𑌤𑌃 𑌸𑌨𑍍𑌨𑍍𑌯𑌾𑌸𑌸𑍍𑌤𑍍𑌯𑌾𑌗 𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌶𑍍𑌶𑌰𑌣𑌾𑌗𑌤𑌿𑌰𑌿𑌤𑍍𑌯𑌪𑌿" (ముముక్షుర్వై శరణమహం ప్రపద్యే తస్మాన్న్యాసమేషాం తపసామతిరిక్తమాహుః) (న్యాస ఇత్యాహుర్మనీషిణో బ్రహ్మాణమ్ నిక్షేపాపరపర్యాయో న్యాసః పంచాంగసంయుతః। సన్న్యాసస్త్యాగ ఇత్యుక్తశ్శరణాగతిరిత్యపి) என்று ஏவமாதிப்ரமாணங்கள்பலவற்றையுமருளிச்செய்து ப்ரமாணங்களில் அக்குறையில்லை, நான், இவ்வர்த்தத்தில் ப்ரமாணந்தான்வேண்டுவதில்லையென்றிருப்பன், அதற்கடி ஒருகுள்ளனும் ஒருநெடியனுமாக ஆற்றிலேயிழிந்தால் குறளனமிழாநின்றால் நெடியனவன்கையைப்பிடிக்கும்போது கரையிலேயிருந்துஒருவன்சொல்லவேண்டுவதில்லையிறே, இவருடையதர்மக்ராஹக ப்ரமாணந்தானே அமையுமிறே, அவன்கையை யவன்பிடிக்கைக்கு ஒருவிதிவேணுமோ வென்றருளிச்செய்து, பின்பு (௫௱௧) "𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌯𑌜𑍇𑌤" (బ్రాహ్మణోయజేత) என்று ஜாதிநிபந்தநமாக ஶாஸ்த்ரங்கள்சொன்னாலும் க்வசித்கொண்டேயன்றிப்பார்அல்பமாயிறே யிருக்கிறது, ஆகையாலே அதிகாரிகள் சுருங்கியிருக்குங்காணும். (௫௰) "𑌋𑌷𑍍𑌯𑌾𑌦𑌿𑌶𑍍𑌚𑌕𑌰𑌨𑍍𑌯𑌾𑌸𑌮𑌙𑍍𑌗𑌨𑍍𑌯𑌾𑌸𑌞𑍍𑌚 𑌵𑌰𑍍𑌜𑌯𑍇𑌤𑍍" (ఋష్యాదిశ్చకరన్యాస మఙ్గన్యాసఞ్చవర్జయేత్) என்கையாலே ருஷ்யாத்யபேக்ஷையில்லை. இதிலர்த்தத்துக்குக் கூட்டுவேண்டிவிறே இதற்குக்கூட்டு வேண்டுவதென்று எனக்குக்கருத்தென்று திருவுள்ளமாக பிள்ளையும் க்ருதார்த்தராயருளினர்.

நம்பிள்ளை, நஞ்சீயரைக்குறித்து, தான் தனக்கு ஸ்ரீவைஷ்ணவத்வமுண்டென்றறியலாவது எவ்வவஸ்தைபிறந்தாலென்ன; ஜீயரும், அர்ச்சாவதாரத்துக்கு பரத்வமுண்டென்றறிவதும், ஒரு ஸ்ரீவைஷ்ணவன் பக்கல் புத்ரதாராதிகள்பக்கலுள்ள ஸ்நேஹத்தளவாகிலும், ஸ்நேஹம்பிறந்தவளவாகிலும், ஒருஸ்ரீவைஷ்ணவர் கடுத்து வார்த்தையருளிச்செய்தால் தன்னெஞ்சில் சிவட்குத்தட்டாதே போகரூபமாயிருந்ததாகில் ஸ்ரீவைஷ்ணவத்வமுண்டென்றறியலாம்; ஆகையால் அர்ச்சாவதாரபரத்வபுத்தி பாகவதப்ரேமம், தத்கடிநோக்திபோக்யதாபுத்தியுண்டானபோது ஸ்ரீவைஷ்ணவத்வம் ஸித்தமென்கிறது.

நம்பிள்ளை, நஞ்சீயர்ஸ்ரீபாதத்திலே ஸ்ரீபாஷ்யம் வாசித்தருளாநிற்கச்செய்தே, திருப்போனகம் சமைந்ததென்றவாறே சொக்கத்தேவரைத் திருவாராதநம்பண்ணுமென்றருளிச்செய்ய; அடியேன் திருவாராதநத்தை யறிந்தேனோவென்று விண்ணப்பஞ்செய்ய; ஜீயரும், நானோ சாலக்ராமமறிந்திருக்கிறேன், த்வயத்தில்உத்தரவாக்யத்தை யநுஸந்தித்து திருவடிவிளக்கி யமுதுசெய்தருளப்பண்ணமாட்டீரோ வென்றருளிச்செ

ய்தார். உகந்தருளினவிடங்கள் பலவிடமாய், திருப்போனகம் படைப்ப தொன்றிலேயாகில் அமுதுசெய்தருளப்பண்ணும்படி எங்ஙனென்று, பி ள்ளை,நஞ்ஜீயரைக்கேட்க, ஜீயரும் த்வயத்தில் பூர்வோத்தரகண்டங்கள் இரண்டுக்கும் நடுவே ஸர்வமங்களவிக்ரஹாய வென்கிற விசேஷணஸஹி தமாகவுச்சரித்து அமுதுசெய்யப் பண்ணுவதென் றருளிச்செய்தார். இத்தால்-உபயகண்டமத்யே இத்தை உச்சரிக்கவருளிச்செய்து கைங்கர்ய வாசகசதுர்த்தியுடன் சதுர்த்திசேர்ந்திருக்கைக்காகவும், உபயநாராயண பதஸித்திவிக்ரஹ ஸமர்ப்பகமாகைக்காகவும் அநந்யப்ரயோஜநத்வத்யோ தநார்த்தமாகவுமிறே; ஆகையால் நம் பூர்வாசார்யர்கள் த்வயமொழிந்த மந்த்ராந்தரம்கொண்டு திருவடிவிளக்கார்களென்று கருத்து,

நஞ்சீயரை, நம்பிள்ளை, "அவதாரங்களெதுக்காக" என்றுகேட்க, ஜீயரும் ஒரோரவதாரங்களால்பண்ணின ஆனைத் தொழில்களெல்லாம் பாகவதாபசாரம் பண்ணினவனுடைய பலம்அநுபவிக்கைக்காக வென்ற ருளினார். பிள்ளையும் பாகவதாபசாரம்தானேதென்று விண்ணப்பஞ்செ ய்ய, ஜீயரும் ஸ்ரீவைஷ்ணவர்களைக்கண்டக்கால் தங்களோபாதி ப்ராக்ருதி மான்களாகநினைத்திருக்கும் புல்விமை; எங்ஙனேஎன்னில்,ஸ்ரீவைஷ்ணவ ர்கள் "திருவுடைமன்னர்" "செழுமாமணிகள்" "நிலத்தேவர்" "பெருமக்கள்" "தெள்ளியார்" "பெருந்தவத்தர்" "உருவுடையார் இளையார் கணல்லார் ஓத்துவல்லார்" "செய்தவேள்வியர்தக்கார்" "மிக்கார் வேதவிமலர்" "சிறுமாமனிசர்" "எம்பிரான் தன் சின்னங்கள்" "பேராளன்பேரோதும்பெரியோர்" "இளையார்" என்று இப்படி பலப டியாக மிகவும் விரும்பி, நம்குலநாதராய் மயர்வற மதிநலமருளப் பெ ற்ற வாழ்வார்கள் பஹுமதிபண்ணி திருநாமங்கள்சாற்றி வாய்ப்புலத்தி யருளிச்செய்கையாலே, தங்களோடொக்க ப்ராக்ருதி மான்களென்று ஸ்ரீவைஷ்ணவர்களை நினைத்திருக்கை நேரே பாகவதாபசாரமென் றரு ளினார். ஆகையால் ஆழ்வார்களு முட்பட "கொண்டாடும் நெஞ்சுடை யா ரவரெங்கள் குலதெய்வமே" என்று பஹுமதிபண்ணி விரும்புகை யே ஸ்ரீவைஷ்ணவத்வப்ரதாந லக்ஷணமிறே. இப்படியிருக்கும் ஸ்ரீவை ஷ்ணவ விஷயத்தில் ஸ்வஸாம்யபுத்தியே அநர்த்தஹேதுவிறே. நஞ்ஜீ யர் நம்பிள்ளையைக்குறித்து பகவதநுபவம் பண்ணுமவனுக்கு விஷயா நுபவத்தி லங்வயமில்லை; இவ்வர்த்தத்தை ஆழ்வார்கள் பலவிடங்களி லும் அருளிச்செய்தார்களிறே. எங்ஙனேஎன்னில்,வாசுதேவன்வலையுள கப்படுதல் மாதரார்க்கயல்கணென்னும் வலையுட்படுதல், மதுரக்கொ ழுஞ்சாறுகொண்ட சுந்தரத்தோளிலே அகப்படுதல். சாந்தேந்துமென் முலையார் தடந்தோளிலேயகப்படுதல், வானவர்க்கு வன்துணையான அ ரங்கத்துறையு மின்துணைவனைத் துணையென்றிருத்தல், ஆவியே யமுதே

யெனநினைந்துருகியவரவர் பணைமுலை துணையென்றிருத்தல், அப்பொழுதைக்கப்பொழுதென் னாராவமுதத்தைப் பாநம்பண்ணுதல், பாவையர் வாயமுதத்தைப்பாநம்பண்ணுதல், நான்குவேதப்பயனைப்பேணுதல், மாதரார்வனமுலைப்பயனையே பேணுதல், ஒன்றிலிதுவாதல், ஒன்றிலதுவாதலென்று ஏவமாதிகளாலே பஹுமுகமாக வருளிச்செய்தார்களிறே. ஆகையாலே "அன்னமென்னடையினார் கலவியையருவருத்தஞ்சி" என்றும் "முந்துறவுரைக்கேன் விரைக்குழல்மடவார்கலவியைவிடு" என்றும் ஸ்ரீபரகாலரான திருமங்கையாழ்வார் ப்ரதமம் விஷயருசியைக் காறியுமிழ்ந்தே பகவத்ஸமாஶ்ரயணம்பண்ணவேணுமென்று நிஷ்கர்ஷித்தருளிச்செய்கையாலே, க்ஷுத்ரவிஷயத்தைஸவாஸநமாகப்பரித்யஜித்தே ப்ராப்தவிஷயத்தைப் பற்றவேணுமென்று அருளிச்செய்தார். பிள்ளையும் க்ருதார்த்தராய் பெரியஜீயரை க்ஷணமும்பிரியா வடிமைசெய்து கொண்டு வாழ்ந்தருளும் காலத்திலே, நஞ்சீயரும், நூறுரு திருவாய்மொழிக்கு அர்த்தம் நிர்வஹித்தருளுகையாலேபிள்ளைஜீயருக்குஶதாபிஷேகம்பண்ணியருளினாரென்று ப்ரஸித்தமிறே.

நஞ்ஜீயர்திருவடிகளேசரணம்.

———:o:———

(௰)

ஸ்ரீ நம்பிள்ளை ப்ரபாவம்.

நஞ்சீயர் பக்கலிலும், நம்பிள்ளைபக்கலிலும், விஶேஷார்த்தங்களும்வந்து கூடுபூரிக்கையால் பிள்ளையும் தீபாதுத்பந்ந ப்ரதீபம் போலே தர்ஶநம்நிர்வஹிக்கக்கண்டு, ஜீயரும் க்ருதக்ருத்யராயிருக்கும் நாளிலே, நம்பிள்ளை ஸ்ரீபாதத்திலே பெரியவாச்சான்பிள்ளை, வடக்குத்திருவீதிப்பிள்ளை, பின்பழகியபெருமாள்சீயர், ஈயுண்ணிமாதவப்பெருமாள்முதலான அநேகம் ஸ்ரீவைஷ்ணவர்களாஶ்ரயித்து க்ருதார்த்தராயிருந்தார்கள். இவர்களில் பின்பழகிய பெருமாள்ஜீயர் பிள்ளைதிருவடிகளில் கைங்கர்யமே யாத்ரையாய், ஊணுமுறக்கமுமின்றியே வழுவிலாவடிமைசெய்து வாழ்ந்தருளும்காலத்திலே, ஒருக்கால் திருமேனிபாங்கின்றியே கண்வளர்ந்தருளுகிறபோது, தமக்கந்தரங்கரான ஸ்ரீவைஷ்ணவர்களையழைத்து அடியேன் இப்போது திருவடிச்சாராமல்ஆலஸ்யம்பொறுத்து இன்னம் இங்கே சிறிது நாளிருக்கும்படி "ஏழையேதலன்" "ஆழியெழச்சங்கும்" பெருமாள்சந்நிதியிலேசென்று விண்ணப்பஞ்செய்து ப்ரபத்திபண்ணிவேண்டிக்கொள்ளுங்கோளென்ன, அவர்களும் அப்படியேசெய்துநிற்க, ஜீயர்க்

குத் திருமேனிபண்டுபோலே பாங்காயிற்று. இத்தைக்கேட்ட ஸ்ரீவைஷ்ணவர்கள் நம்பிள்ளை சந்நிதியிலே சென்று தண்டம்ஸமர்ப்பித்து, ஜ்ஞாநவ்ருத்தருமாய் வயோவ்ருத்தருமாயிருக்கும் பின்பழகியபெருமாள்ஜீயர் இப்படிசெய்தார், இது இவர்ஸ்வரூபத்துக்குச்சேருமோவென்று விண்ணப்பஞ்செய்ய, பிள்ளையும்அவருடையவபிப்ராயமறிகிலோம், ஸகலஶாஸ்த்ரங்களும்போருவது பிள்ளையெங்களாழ்வானுக்காயிற்று; அவர்பக்கல்சென்று கேளுங்கோளென்ன; ஸ்ரீவைஷ்ணவர்களும் எங்களாழ்வானைக்கேட்க; அவரும்ஸ்ரீரங்கைஶ்வர்யத்திலஸங்கம்போலேகாணுமென்ன; பிள்ளையும் இத்தைக்கேட்டு, அழகியதிருநாராயணபுரத்தரையரைச்சென்று கேளுங்கோளென்ன; அவர்களுமவரைக்கிட்டிக் கேட்டவிடத்தில் அவரும் துவக்கினகைங்கர்யந் தலைக்கட்டாமையாலே காணுமென்ன; பிள்ளையித்தையுங்கேட்டு ஆகிறதென்று அம்மங்கியம்மாளைக் கேளுங்கோளென்ன; அவரும், பிள்ளைகோஷ்டியிலிருந்தவர்களுக்கும்பகவத்விஷயங்கேட்டவர்களுக்குமொரு தேஶவிஶேஷம்ருசிக்குமோவென்ன; இத்தையும் பிள்ளை கேட்டு நல்லதென்றுவிட்டு அம்மங்கிப்பெரியமுதலியாரைக் கேளுங்கோளென்ன, அவரும் நம்பெருமாள்சிவந்த திருமுகமண்டலமும் கஸ்தூரிதிருநாமமும்பரமபதத்திலேகண்டிலேனாகில், மூலையடியேமுறித்துக்கொண்டுவருவனென்றன்றோ பட்டருளிச்செய்தது. அப்படியேயிவரும் நம்பெருமாள் சிவந்ததிருமுகமண்டலத்தையும் திருநுதலில்கஸ்தூரி திருநாமத்தையும் விட்டுப்போகமாட்டாராக வேணுமென்றார்; பிள்ளை, யிவையெல்லாவற்றையும் திருவுள்ளம்பற்றியருளி, ஜீயர் திருமுகமண்டலத்தைப்பார்த்துச்சிரித்து இவை உம்முடையநினைவுக் கொக்குமோவென்ன; இவை யித்தனையுமன்றென்று விண்ணப்பஞ்செய்தார். ஆகில் உம்முடைய வபிப்ராயத்தைநாமறிந்தோமென்று பிள்ளையருளிச்செய்ய, பிள்ளை தேவரீர் ஸர்வஜ்ஞராகையாலே அறிந்தருளாததில்லை; அடியேனைக்கொண்டு வெளியிடத்திருவுள்ளமாகில் விண்ணப்பஞ்செய்கிறேன். தேவரீர் திருமஞ்சனமுறைகளிலே திருமஞ்சனச்சாலைக் கெழுந்தருளி திருமஞ்சனங்கொண்டருளி தூயவுடையாடை திருவுத்தரீயம் சாத்தியருளி புலாவியருளும்போது குறுவியர்ப்போடேகூடின திருமுகமண்டலச்செவ்வியும், அடியேன் சுற்றிச்சுழற்றிப் பணிமாறுகிற கைங்கர்யத்தைவிட்டு அடியேனுக்கு பரமபதத்துக்குப்போக விச்சையாயிருந்ததில்லை, பெருமுசோல்லாஸமு மின்னம்சிறுதுகால மிங்கேயிருந்து பெறவேணுமென்றுநினைத்துச் செய்தேனென்று விண்ணப்பஞ்செய்தார். இத்தைக் கேட்டருளி பிள்ளையும் முதலிகளுமிவ்வுடம்போடே இவ்வைஶ்வர்யம் கூடுவதேயென்று மிகவும் திருவுள்ளமுகந்தருளினார்கள்.

ஒருநாள் நம்பிள்ளை பகவத்விஷயமருளிச்செய்து கோஷ்டிகலேந்தவளவிலே பின்பழகியபெருமாள்ஜீயர் பிள்ளைதிருவடிகளிலே தண்டன் சமர்ப்பித்து, இவ்வாத்மாவுக்கு ஸ்வரூபோபாயபுருஷார்த்தங்க ளிவை யென்றருளிச் செய்யவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய; பிள்ளையும் இச்சைஸ்வரூபம் இரக்கமுபாயம் இநிமை உபேயமென் றருளிச்செய்ய; அப்படியன்று அடியேன் நினைத்திருப்பதென்று விண்ணப்பஞ்செய்ய; பிள்ளையும் ஆகில் உமக்கென்ன சிலபிள்ளைக்கிணறுகளுண்டோ நீரெங்ங னினைத்திருப்பீர், அத்தைச்சொல்லிக்காணீரென்ன; தேவரீர்திருவடிக ளேதஞ்சமென்றிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அடிமையாயிருக்கை யே அடியேனுக்குஸ்வரூபம், அவர்களுடைய அபிமானமே அடியேனு க்குபாயம், அவர்களுடைய முகமலர்த்தியே யடியேனுக்கு உபேயமென் று நினைத்திருப்பேனென்று விண்ணப்பஞ்செய்ய; ஜீயரையும், பிள்ளை போரப்ரியப்பட்டருளினார்.

ஒருகால் பிள்ளை, பகவத்விஷயம் அருளிச்செய்து கோஷ்டி குலைந்து போகாநிற்கச்செய்தே, வைஷ்ணவனொ யிருப்பா னொருராஜா, வருகிற பெருந்திரளைக்கண்டு பெருமாள் திருவோலக்கம்குலைந்ததோ, நம்பிள்ளை கோஷ்டிகுலைந்ததோவென்று கேட்டானென்பர்கள்.

இப்படி மஹாஸம்ருத்தியான ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயோடே நம்பிள் ளைவாழ்ந்தருளும்காலத்திலே, முதலியாண்டான் திருப்பேரனாய், கந்தா டையாண்டான்குமாரரான, கந்தாடைத்தோழப்பர், நம்பிள்ளையுடைய பெருமதிப்பையும், வைபவத்தையுங்கண்டு, அசூயையால், வாய்பொறுக் கமாட்டாமலிருக்குமவர் ஒருநாள் பெருமாள்ஸந்நிதியில் பெருமாளைசே வித்துக்கொண்டு தோழப்பர் எழுந்தருளியிருக்கிறவளவிலே, பிள்ளையும் முதலிகளுமாகப் பெருமாளைஸேவிக்கவென்று கோயிலுக்குள்ளேயெழுந் தருள; தோழப்பர், பிள்ளையுடைய பெருமையைக்கண்டு பொறுக்கமாட் டாமல்சீறி பகவத்ஸந்நிதியிலே நம்பிள்ளையை பஹு பருஷோக்திகளைச் சொல்லிஅநேகமாகநிந்திக்க, பிள்ளையும், அத்தைக்கேட்டு நடுங்கிக்கொ ண்டு பெருமாளைசேவித்து புறப்பட்டெழுந்தருள; இச்சேதியை ஜ்ஞாநா திகையாயிருக்கிறதோழப்பர்தேவிகள்கேட்டுப் பெருக்கவ்யாகூலப்பட்டு, திருமாளிகைக்குள்செய்கிற கைங்கர்யங்களையும்விட்டு வெறுத்து எழுந்த ருளியிருக்க; அவ்வளவிலே தோழப்பரும் பெருமாளைஸேவித்து மீண்டு தம்திருமாளிகையிலே எழுந்தருள; தேவிகளும் முன்புபோலே எதிரே புறப்பட்டு ப்ரீதியுடனே தமக்கொரு கைங்கர்யமும் பண்ணாமையாலே தோழப்பர், தேவியாரைப்பார்த்து உன்னைநாம் அங்கீகரித்த வன்றுதுட ங்கி இன்றளவாக நம்மைக்கண்டால் ஆசார்யப்ரதிபத்தி பண்ணிக்கொண் டுபோந்தாய்; இன்று உதாஸீநம்பண்ணியிருந்தாய், இதற்கடி யென்னெ

ன்றுகேட்டருள! தேவிகளும், தோழப்பரைக்குறித்து வாரீர் ஆழ்வார்தம்
முடைய திருவவதாரமென்னலாம்படி ஒரு அவதாரவிஶேஷமாய், பெரு
மாளுக்கு ப்ராணபூதராயிருந்துள்ள நம்பிள்ளையை, பெருமாள் சந்நிதியி
லே கூசாமல் அநேகமாக பருஷோக்திசொல்லி தூஷித்து இப்படிசெய்
தோமேஎன்கிற அநுதாபமுமற்று உஜ்ஜீவிக்கவந்திருக்கிற உம்மோடு
எனக்கென்னஸம்பந்தமுண்டு, நீர் என்னைவெறுத்திராகில், என்னுடைய
மாதாபிதாக்கள் பெற்றுவளர்த்து உம்முடையகையிலே காட்டித்தந்த
ஶரீரத்தை உமக்குவேண்டினபடிசெய்துகொள்ளும், என்னுடைய ஆத்மா
வை எங்கள் ஆசார்யர், அடியிலே அங்கீகரித்தருளின அன்றேநான் உஜ்ஜீ
வித்தேன்; ஆகையாலே (நிசக) "வ்ஷகொடிஸதெநாபி நக்ஷமாமி கதா
சந" (వర్షకోటిశతేనాపి నక్షమామి కదాచన) என்று பாகவதநிந்தனைபண்ணின
வர்களை ஒருகாலும் க்ஷமிப்பதில்லையென்று பெருமாள் தாமேயருளிச்
செய்த திருமுகப்பாசுரமறிந்தும் அறியாதவர்போலேயிருக்கிற உம்மோடு
எனக்கு ஸஹவாஸங்கூடாது; ஆகையாலே நிலம்பிளந்தால் இழையிட
வொண்ணாதாப்போலவும், கடலுடைந்தால் கட்டவொண்ணாதாப்போல
வும், மலைமுறிந்தால் தாங்கவொண்ணாதாப்போலவும் அநுதாபம் பிறவா
தபாகவதாபசாரம் தீர்த்துக்கொள்ளக்கூடாதிறே; ஆனபின்பு நான் என்
னிஷ்டத்திலேயிருந்து ஈடேறிப்போகிறேனென்ன; தோழப்பரும், தேவி
கள்சொல்லுகிற வார்த்தைகளைக்கேட்டு, சற்றுபோது திகைத்தெழுந்தரு
ளியிருந்து, பெரியவித்வானுகையாலும், திருவம்ஶப்ரபாவத்தாலும் அ
னுஜ்ஞையால்வந்த திருவுள்ளத்தில் கலக்கந்தீர்ந்து தெளிந்து தேவிகளைப்
பார்த்துநீசொன்னதெல்லாம் ஒக்கும், நாம்தப்புச்செய்தோம்.இனிமேல்
செய்யவடுக்குமதேதென்ன, தேவிகளும்,ஆற்றிலேகெடுத்து,குளத்திலே
தேடாதேகொள்ளீர், கெடுத்தவிடத்தே தேடிக்கொள்ளீரென்ன; தோழப்
பரும் ஆவதென்னென்ன; தேவிகளும், பரமதயாளுவான நம்பிள்ளைதி
ருவடிகளிலே சென்று ஸேவித்து அபராதக்ஷாமணம் பண்ணிக்கொண்டு
அவர்க்ருபைபண்ணியருள ஈடேறீரென்ன; தோழப்பரும், அவரை,பெரு
மாளுடைய பெருந்திருவோலக்கத்திலே பரிபவித்து, இப்போது அவர்
சந்நிதியிலேபோய்நிற்கவென்றால் எனக்கு லஜ்ஜாபயங்கள் அநுவர்த்தியா
நின்றது. நீ கூடவந்துக்ஷமிப்பிக்கவேணுமென்ன; தேவிகளும், தோழப்
பர்சொல்லும் வார்த்தையைக்கேட்டு அப்படியேசெய்கிறேனென்றுகடுக
வெழுந்திருந்து அவரையுங்கூட்டிக்கொண்டு, நம்பிள்ளை திருமாளிகைக்
கெழுந்தருளுவதாகப் புறப்படுகிற வளவிலே, நம்பிள்ளை செய்தபடி;--
கோயிலிலும் எழுந்தருளினபின்புமுதலிகளெல்லாரையும் அநுப்பியருளி
பகலெல்லாம் அமுதுசெய்தருளாமல் தம்திருமாளிகைக்குள்ளே யெழுந்
தருளியிருந்து ஸாயங்காலமானவாறே ஆவஶ்யகத்தைச் செய்தருளி ஒர்

னைத் திருப்பரிவட்டத்துடனே மூடிமுட்டாக்கிட்டுத் தாமொருவருமே எழுந்தருளி, தோழப்பர்திருமாளிகைவாசலிலே கைப்புடையிலே வந்து கண்வளர்ந்தருள; தோழப்பரும் தேவிகளும், திருவிளக்கையேற்றிகொண்டு, பிள்ளை திருமாளிகைக்கெழுந்தருளுவதாகத் திருமாளிகை வாசலிலே புறப்பட்டவளவிலே திருவிளக்கொளியாலே, ஒருவெள்ளை, கைப்புடையிலே கிடக்கிறதைக்கண்டு, தோழப்பர், இங்கார்கிடக்கிறாரென்று கேட்க; பிள்ளை அடியேன் திருக்கலிகன்றிதாஸனென்ன; அவ்வளவிலே தோழப்பர் இதென்னென்று நினைத்து, பிள்ளையைப்பார்த்து, நாம் மஹா தேஜஸ்வீ, நம்மை நம்பெருமாள் திருவோலக்கத்திலே பரிபவிக்கலாவதேனென்கிற கோபாதிஶயத்தாலே நம்முடைய வாசலிலேவந்து மௌர்க்யம்செய்வதாகவந்து கிடக்கிறீரோவென்ன; பிள்ளையும், தோழப்பரைக்குறித்து அடியேன் அப்படிசெய்யபவரவில்லையென்ன; ஆகில்இங்குவந்துகிடப்பானேனென்று தோழப்பர்கேட்க; பிள்ளையருளிச்செய்தபடி;- பெரியபெருமாள் ஸந்நிதியிலே முதலியாண்டான் திருப்பேரனான தேவரீர் திருவுள்ளங்கலங்கும்படி வர்த்தித்த மஹாபாபியான அடியேனுக்கு தேவரீர்திருமாளிகை வாசலல்லது புகுவாசல்மாண்டு வந்துகிடக்கிறேனென்ன; இவரை அநுவர்த்திப்பதாகப் புறப்பட்டுவந்து நிற்கிற தோழப்பர், பிள்ளை கண்வளர்ந்தருளுகிற தைந்யத்தையும், அவருடையநைச்யமான வார்த்தைகளையுங்கேட்டு இதொரு அதிகாரமிருந்தபடி யென்னென்று போரவித்தராய், பிள்ளையைவாரியெடுத்து அரவணைத்துக்கொண்டு, இத்தனைநாளும் சிறிதுபேருக்கு ஆசார்யனென்று இருந்தேன், இப்போது லோகத்தார்க்கெல்லாம்நீரே ஆசார்யராகைக்கு ப்ராப்தரென்றிருந்தேன் என்று, தோழப்பர் உகந்து "லோகாசார்யர்" என்று பிள்ளைக்குத்திருநாமம்சாற்றியருளி, தம்முடைய திருமாளிகையிலே கொண்டுபுக்கு. தாமும்தேவிகளுமாகப் பிள்ளையை அநேகமாக அநுவர்த்தித்து அவர்திருவுள்ளத்தை நன்றாகமிகவும் உகப்பித்து, தமக்குவேண்டும் அர்த்தவிஶேஷங்களெல்லாம் கேட்டுக்கொண்டு, தோழப்பர், பிள்ளை திருவடிகளிலே மிகவும்ப்ரவணராய், க்ருதார்த்தராயருளினார்.

——:o:——

(ஸ்ரீநஞ்சீயர் பரமபதத்திற்கெழுந்தருளும் ப்ரகரணம்.)

இப்படி, பிள்ளை மஹாவைபவமுடையராய் வாழ்ந்தருளுமது கண்டு, நஞ்சீயர்செய்ததிதுவாய்த்து;—

ஸ்ரீமானாய், நூறு திருநக்ஷத்ரமெழுந்தருளியிருந்து, அந்திமதஶையில் திருமேனியிலேநோவுசாத்தி கண்வளர்ந்தருள; ஜீயர்ஶிஷ்யரான குட்டிக்குறி பிள்ளையாழ்வார், ஜீயரைப்பார்த்து த்வயத்தை அநுஸந்தித்